ஸ்ரீ குருகிருபா விலாஸம்



ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின்

திவ்ய மஹிமைகளை எடுத்துக்காட்டும்

கட்டுரைகளின் தொகுப்பு

இரண்டாம் பாகம்

எழுதியவர்

ஸ்ரீ ஞானாநந்த பாரதீ ஸ்வாமிகள்

(பூர்வாசிரமத்தில் ஸ்ரீ. ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர்

திருநெல்வேலி)

வெளியிடுவோர்

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் பக்தர்கள்

புதிய பதிப்பு

2004

Sri Gurukripa Vilasam (Vol. II)
Essays on the greatness of
H.H. Sri Chandrasekhara Bharathi Mahaswamigal
(in Tamil)
By : Sri Gnanananda Bharathi Swamigal

Published by :
Sri. K. Narayanaswami
'Srikanta Vilas'
5, Brindavan Street,
Mylapore, Chennai - 600 004.
Phone : 2498 5946
(Also, Vidyaranyapuram,
Sringeri - 577139)

Kind Courtesy : © Sri K. Ramachandran

Price : Rs. 60/-

On behalf of
The Devotees of Dakshinamnaya
Sri Sharada Peetam,
Sringeri - 577 139.

Computer Composing :
Sri Vignesh Prints
Chennai - 600 033.
Phone : 2489 6628

Supervision & Coordination :
Sri. E. R. Ravikumar

Offset printing :
Sri. K. Narasimhan
Aaral Graphics
Phone : 2361 5979

ஸமர்ப்பணம்



சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளின் ஸன்னிதியில்
இந்தப் பதிப்பு பக்தியுடன் ஸமர்ப்பணம் செய்யப்படுகிறது

பதிப்புரை

''ஸ்ரீ குருகிருபா விலாஸம்'' என்ற தலைப்பில் இது இரண்டாவது புத்தகம். சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 34 வது பீடாதிபதியான ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் மஹிமைகளைப் பற்றி ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் எழுதியவைகளெல்லாம் முதல் தொகுதியாக வெளிவந்தாயிற்று. அதற்கு நல்ல வரவேற்பு உள்ளது.

ஸ்ரீ ஞானநந்த பாரதீ ஸ்வாமிகள் (பூர்வாசிரமத்தில் திருநெல்வேலி ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர்) ஸ்ரீமத் ஆசார்யாளைப்பற்றி சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னால் சிறு சிறு நூல்களை வெளியிட்டிருந்தார். அவை ''ஸ்ரீ குருராஜ வைபவம்'', ''ஞானப் பிரஸூனங்கள்'', ''ஸ்ரீ குருராஜ ஸ்மரணம்'' போன்ற தலைப்புக்களில் வெளியிடப்பட்டன. ஸ்ரீமத் ஆசார்யாளைப்பற்றி பின்னால் பல மொழிகளில் வெளிவந்த புத்தகங்களுக்கு ஸ்ரீ ஞானநந்த பாரதீ ஸ்வாமிகளும், ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகளும் எழுதியிருந்த நூல்களே முக்கிய ஆதாரமாக அமைந்தன. காலக்கிரமத்தில் அச்சிறு புத்தகங்கள் அச்சிடப்படாமலேயே போய் இந்தத் தலைமுறையினருக்கு அவற்றைப் படிக்கும் வாய்ப்பில்லாமல் போயிற்று. இந்தக் காரணத்திற்காக ஸ்ரீ ஞானநந்த பாரதீ ஸ்வாமிகள் ஸ்ரீமத் ஆசார்யாளைப் பற்றி எழுதியவைகளை யெல்லாம் திரட்டி ஒரே தொகுப்பாக வெளியிட உத்தேசித்தோம். அதுவே இப்போது ''ஸ்ரீ குருகிருபா விலாஸம்- இரண்டாம் பாகம்'' என்ற உருவில் உங்கள் கரங்களில் இருக்கிறது.

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதியாக இருந்தபோது நான்கு விதமான பக்தர்களும் (ஆர்த்த, அர்த்தார்த்த, ஜிக்ஞாஸு, ஞானி) அவரைத் தரிசனம் செய்து பயனடைந்திருக்கிறார்கள். அப்படி தரிசனம் செய்தவர்கள், அவருடைய அருகில் சிறிது காலமாவது இருந்தவர்கள், அவருடன் சம்பாஷித்தவர்கள், அவரிடமிருந்து உபதேசத்தைப் பெற்றவர்கள்- இவர்களில் சிலர் தங்கள் அனுபவத்தைப் பற்றி கூறியவைகளையும், எழுதி வைத்தவைகளையும் கொண்டுதான் இந்தக் காலத்தில் வசிக்கும் நாம் அவருடைய மஹிமைகளிலிருந்து ஒரு திவலையையாவது தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அதுவே நம்மை ''ஆஹா! இப்பேற்பட்ட மஹான் அண்மையில் நம்மிடையே வாழ்ந்திருக்கிறாரா ? '' என்று வியக்க வைக்கிறது.

ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள், ஸ்ரீ ஞானநந்த பாரதீ ஸ்வாமிகள் இருவரும் பழுத்த வேதாந்திகளான அறிஞர்கள். அவர்களுடைய திருஷ்டியே அலாதி.

அதனுல் அவர்கள் எழுதி வைத்தவைகளும் மிகவும் உயர்ந்த முறையில் உள்ளன. அவர்கள் இருவருக்கும் நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிருேம்.

பூர்வ புண்ணிய விசேஷத்திஞல் ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர் ஒரு மஹானின் மூத்த புதல்வராக ஜனித்தார். சாஸ்திரீயமான வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்து வந்த குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தார். சிறு வயதிலேயே தர்ம சாஸ்திரங்களில் ஆழ்ந்த நம்பிக்கையும் விவேக வைராக்ய ஸம்பத்திகளையும் பெற்றிருந்தார். குருவிடம் இயற்கையாகவே பக்தி உண்டாகி அது பெருகவும் செய்தது.

அவருடைய சம வயதினர் ஆங்கிலப் படிப்பையும் சட்டப் படிப்பையும் பெற்று அவற்றை பொருள் ஈட்டவும் லௌகிக அந்தஸ்தில் முன்னேற்றம் அடையவும் பயன்படுத்தினர். ஆனுல் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரோ M.A.,B.L படிப்பை முடித்துவிட்டு, ஆங்கிலத்தில் சரளமாக எழுதுவதற்கு தான் பெற்ற ஆற்றலை ஸநாதன தர்மத்தின் மேன்மையைப் பற்றி எழுத்து மூலம் பிரசாரம் செய்வதற்கும், சட்ட அறிவினுல் பெற்ற வாதத் திறனை நாஸ்திகத்தையும், அதர்மத்தையும் தகுந்த வாதங்களை முன் வைத்து தாட்சிண்யம் இல்லாமல் கண்டிப்பதற்குமே பெரிதும் உபயோகித்தார். அது அவருடைய சிறப்பு.

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிகளான ஜகத்குருக்கள் ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள், ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள், ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள் ஆகிய மூவரும் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரின் ஆத்ம குணங்களையும் எளிய ஆசாரமான வாழ்க்கையையும் ஆன்மீகப் பாதையில் அவருடைய படிப்படியான முன்னேற்றத்தையும் மேதாவிலாஸத்தையும் கண்டு ஸந்தோஷித்து அவரிடம் தனிப் பிரியம் வைத்திருந்தார்கள். பின்னுல் அவர் வயோதிகத்தை அடைந்தபோது ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர், அவர் தகுந்த பாத்திரமாக இருப்பதைக் கண்டு திருப்தியடைந்து தாம் வடக்கே மதுரா பிருந்தாவனத்தில் முகாம் செய்திருந்தபோது அங்கே ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யரை வரவழைத்து, தம் ஸந்நிதியிலேயே அவருக்கு ஸந்யாஸ ஆசிரமத்தை (3-11-1966) முறைப்படி அளிக்கச் செய்தார். அப்போதுதான் அவருக்கு ''ஸ்ரீ ஞானநந்த பாரதீ'' என்ற பட்டப்பெயர் கொடுக்கப்பட்டது.

ஸ்ரீ ஞானநந்தர் தன் அந்திம காலத்தில் மிகவும் பலம் குன்றியவராக ஆன போதிலும் மன்னுடி மங்கலம் என்ற சிறு கிராமத்தில் தங்கியிருந்து தன் ஆசிரம தர்மங்களை நன்கு கடைப்பிடித்து வந்தார். அந்தக் காலத்தில் அவர் பெரும்பாலும் மௌனத்தை அவலம்பித்து அரிய வேதாந்த நூல்களையும், ப்ரஹ்மஸூத்ர பாஷ்யம், பிரகரண கிரந்தங்கள் போன்ற நூல்களுக்கு மொழி பெயர்ப்பையும் விளக்கவுரைகளையும் எழுதிக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ ஞானநந்தர் கைவல்யபதத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் ராமேச்வர யாத்திரையை மேற்கொண்டிருந்த ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளும், இப்போது பீடாதிபதியாக மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்து வரும் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகளும் அச்சிறு கிராமத்திற்கு விஜயம் செய்து ஸ்ரீ ஞானநந்தருக்கு ஒருங்கே தரிசனம் கொடுத்து அனுக்ரஹம் செய்தார்கள். அதற்கு சிறிது காலத்திற்குப் பின்னால் 9-4-1975 அன்று ஸ்ரீ ஞானநந்த பாரதீ ஸ்வாமிகள் கைவல்யமடைந்தார். அவர் எழுதிய நூல்கள் அவருடைய மேதாவிலாஸத்தையும் மனப் பக்குவத்தையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்தப் புதிய வெளியீட்டிற்கு வேண்டிய அனுமதியையும், நூல்களையும் அன்னாருடைய பூர்வாசிரம புதல்வர் ஸ்ரீ கே.ராமச்சந்திரன் அவர்கள் தந்து உதவினார். அவருக்கு எங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களுக்குத் தேவையாக இருந்த தைரியத்தையும் வழிகாட்டுதலையும் தந்தவர் எங்கள் மதிப்பிற்குரிய ஸ்ரீ ஆர். எம். உமேஷ் அவர்கள். அவருக்கு எங்கள் வணக்கங்கள்.

நல்ல ஆலோசனைகளை அவ்வப்போது எங்களுக்கு வழங்கிய ஸ்ரீ ஜி. இராமசுப்ரமணியன் அவர்களுக்கும், ஆழ்ந்த குருபக்தியால் உந்தப்பட்டு இந்தப் புத்தகம் அழகிய முறையில் அச்சிடப்பட்டு வெளிவர வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தன்னலமற்று அயராது உழைத்த என்ஜினியர் ஸ்ரீ.இ.ஆர்.இரவிக்குமார் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

இந்தப் புத்தகத்தின் அமைப்பு (Get-up) நன்கு அமைய விசேஷ சிரத்தையுடன் செயல்பட்ட Aaral Graphics அச்சகத்தின் உரிமையாளரான ஸ்ரீ.கே.நரஸிம்மன் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லாம் ஸ்ரீமத் ஆசார்யாளின் அருள்.

15-01-2004
ஸ்வபானு ஆண்டு, மகர மாஸம்
சங்கராந்தி புண்ய தினம்
வித்யாரண்யபுரம்
சிருங்கேரி

கே.நாராயணஸ்வாமி



ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

பொருளடக்கம்

ஸ்ரீ குருராஜ வைபவம்

பக்கம்

பதிப்புரை

1. பீடாரோஹணம் 1
2. தக்ஷிணதேச யாத்திரை 6
3. ஸூக்ஷ்ம திருஷ்டி 10
4. கருணை வள்ளல் 16
5. உபதேச முறை 22
6. அதீத நிலை 28
7. ஆத்ம நிஷ்டை 33
8. ப்ரஹ்மானுபவம் 40
9. ப்ரஹ்மீபாவம் 46

ஞானப் பிரஸூனங்கள்

1. பற்றின்மை 55
2. குருபக்தி 62
3. வாழ்க்கை நீதிகள் 74
4. உண்மையான பக்தி 84
5. நியமம் அவசியம் 98
6. சிரத்தை 110
7. உண்மையான அஹிம்ஸை 125
8. எல்லோரிடத்தும் அன்பு 134

ஸ்ரீ குருராஜ ஸ்மரணம்

1. பீடாதிபத்யம் 149
2. தனிப் பெருமை 160
3. குருவே தெய்வம் 176
4. வீண் சர்ச்சை வேண்டாம் 184
5. சாந்த நிலை 195
6. மந்திர ப்ரபாவம் 216
7. நன்மொழிகள் 227
8. சில உபதேசங்கள் 238
9. பக்த பராதீனர் 248
10. குருஸேவா ப்ரவீணர் 257
11. பிரயத்தினம் அவசியம் 268
12. சாந்த ஸ்வபாவம் 281
13. திவ்ய திருஷ்டி 287
14. தைவ பக்தி 293
15. கருணாநிதி 301
16. அனுக்ரஹமூர்த்தி 307

ஸ்ரீ R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்

ஸ்ரீ குருராஜ வைபவம்



ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்

1. பீடாரோஹணம்

ஸ்ரீ சிருங்ககிரி க்ஷேத்திரத்தில் ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்யாரவர்களால் ஏற்படுத்தியிருக்கும் தக்ஷிணாம்னாய வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் 34 வது பட்டத்திலமர்ந்து ஸ்ரீ ஜகத்குரு பீடாதிபத்யத்தை வஹித்து விளங்கி வந்த ஸ்ரீ சந்திர சேகர பாரதீ ஸ்வாமிகள் அவர்கள் நந்தன வருஷம் ஆச்வயுஜ மாஸம் கிருஷ்ண ஏகாதசியும் மகாநக்ஷத்திரமும் கூடிய ஞாயிற்றுக் கிழமை (1892 அக்டோபர் 16) காலையில் அவதரித்தார்கள். அவர்களுக்கு ஜந்மபூமியே சிருங்ககிரிதான். அவர்கள் தகப்பனார் கோபால சாஸ்திரிகள். தாயார் லக்ஷ்மியம்மாள். பிதாமஹரான ஸுப்பா சாஸ்திரிகள் பால்யத்திலேயே நன்கு வித்யாப்யாஸம் செய்து விரக்தராக ஹிமாசலப்பிராந்த்யம் புறப்பட்டுப் போயிருந்த தாகவும் அவரை அக்காலம் பீடாதிபத்யம் வஹித்து வந்த ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் திருப்பி வரவழைத்து விசேஷமாக அநுக்ரஹித்து ஸ்ரீ மடத்திலேயே ஆஸ்தான வித்வானாக வைத்துக்கொண்டதாகவும் தெரிகிறது.

அவருடைய ஒரே புத்திரரான கோபால சாஸ்திரிகளும் நல்ல பாண்டித்யத்துடன் விளங்கிக்கொண்டு கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டித்து வருகையில் பதிநான்கு குழந்தைகள் ஜனித்ததில் தைவ கதியால் பதிமூன்று குழந்தைகள் தவறி, ஆசார்ய பீடத்திற்கு ஏற்படவிருக்கும் நரஸிம்ஹன் என்கிற இந்த புத்திரர் மாத்திரம் ஆயுர்யோகத்துடனிருந்தார். ஏதோ பாபத்தினால் தனக்கு குழந்தைகள் தக்கவில்லையென்று உணர்ந்த பெற்றோர்கள் இக்குழந்தையாவது ஜீவித்து இருக்க வேண்டுமானால் தங்களை விட்டுப் பிரிந்திருப்பதே நலமென்று நினைத்து அப்பொழுது ஸ்ரீமடம் ஸர்வாதிகாரியாயிருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் தெரிவித்ததன் பேரில், அவர் இப்பையனைத் தன் ஸம்ரக்ஷணையிலேயே வைத்துக்கொண்டு அநேகமாய் தன்

வீட்டிலேயே இருக்கும்படி செய்தார். சிருங்கேரியில் கன்னடமும் இங்கிலீஷும் கற்றுக் கொடுக்கிற பள்ளிக்கூடத்தில் இப்பாலகரைச் சேர்த்துவிட்டதில் தன்னுடைய புத்தி சக்தியினாலும் நன்னடத்தையாலும் உபாத்தியாயர்களுக்கு விசேஷ அபிமான பாத்திரராக இருந்துவந்தார்.

பூர்வ ஜந்ம புண்யத்தினால் இவருடைய பன்னிரண்டாவது வயதில் பூர்வாசார்யாரான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளுடைய கடாக்ஷம் ஏற்பட்டது. இப்பாலகருடைய யோக்கியதையையும் பின் அடையக்கூடிய உன்னத ஸ்தானத்தையும் அவர்கள் நன்கு உணர்ந்தபடியால் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு இவரை ஸ்ரீ மடத்தைச் சேர்ந்த ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலையில் சேரும்படி செய்தார்கள். பின்னால் இவருடைய ஸ்வச்சமான புத்தியைப் பற்றிப் பலவிதத்தில் தெரிந்து கொண்டு தர்க்க சாஸ்திரத்தில் விசேஷப் பயிற்சி ஏற்படும்படி வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் காலடியில் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாரின் ஆலயத்தை பிரதிஷ்டை செய்து திரும்பி வரும் வழியில் பெங்களூரில் பாரதீய கீர்வாண ப்ரௌட வித்யா வர்த்தினீ என்ற பாடசாலை ஏற்படுத்தினார்கள். அப்படியே சிருங்கேரிக்கு வந்து சேர்ந்ததும் நரஸிம்ஹ சாஸ்திரிகளுடைய சாந்த ஸ்வபாவத்தையும், வித்யையை க்ரஹிப்பதில் உள்ள ஆர்வத்தையும், நித்ய கர்மானுஷ்டானத்தில் உள்ள சிரத்தையையும், குருவிடமும் தேவதையிடமும் உள்ள விசேஷமான பக்தியையும் நேரில் கண்டு ஸந்தோஷமடைந்து,

संसारनामकसरिन्नाथोत्तरणे तवास्ति यदि वाञ्छा ।
बालक शृणु मद्वचनं श्रुतिमस्तकसंमतं हितोदर्कम् ॥

प्रविधाय सशिखवपनं छित्त्वा यज्ञार्थमाहृतं सूत्रम् ।
स्वीकृतपारमहंस्यः स्थिरतरसाधनचतुष्टयोपेतः ॥

श्रद्धाभक्तियुतात्मा प्रविचारय तत्त्वमात्मनः सुचिरम् ।
सद्गुरुमुखाम्बुजातस्रवदागमशीर्षवाक्यपीयूषैः ॥

என்ற மூன்று சுலோகங்களால் விசேஷமாக அநுக்ரஹித்து வேதாந்த சாஸ்திரத்திற்கு மிகவும் உபயோகமான பூர்வமீமாம்ஸா

சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்வதற்காக அந்த பெங்களூர் பாடசாலைக்கே நரஸிம்ஹ சாஸ்திரிகளை அனுப்பி வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுத்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் இவர்களுக்கு ஸர்வ சாஸ்திரங்களிலும் பாண்டித்யம் ஏற்படுத்த வேண்டுமென்று ஸ்ரீ சாரதாம்பாளின் ஸன்னிதியில்,

सर्वज्ञं श्रीनृसिंहं कुरु शिवदयिते सत्वरं मद्विनम्रम् ॥

என்று நான்கு சுலோகங்களால் பிரார்த்தித்திருப்பதிலுைம் மற்றும் பல காரணங்களாலும் தனக்குப் பின் இவர்களையே பீடத்தில் நியமனம் செய்வார்களென்று தோன்றும்படியிருந்தது.

ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் 1911 ல் சிருங்கேரிக்குத் திரும்பிவந்து கொஞ்ச நாளைக்குள் தன் அவதாரப் பிரயோஜனம் பூர்த்தியாய் விட்டபடியால் விதேஹ கைவல்யத்தையடைய வேண்டுமென்று தீர்மானித்துத் தனக்குப்பின் பீடாதிபத்யத்திற்கு நரஸிம்ஹ சாஸ்திரிகளை அழைத்துவரும்படி தன் அத்யந்த சிஷ்யரான கிருஷ்ண சாஸ்திரிகள் என்ற குனிகல் ராம சாஸ்திரிகளை பெங்களூருக்கு அனுப்பினார்கள். அப்படியே தன் உத்தேசத்தை மைஸூர் மஹாராஜா அவர்களுக்கும் தெரிவிக்கும்படி சொல்லியனுப்பினார்கள். அவ்விதமே அவர் பெங்களூர் போய் மஹாராஜாவிடம் தெரிவித்துவிட்டு நரஸிம்ஹ சாஸ்திரிகள் ஜாகைக்கு வந்து அவர் பெற்றோர்களிடத்தில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களின் ஆக்ஞையை தெரியப்படுத்தியதில் தகப்பனார் அரை மனதுடன் ஸம்மதித்தார். தாயார் மாத்திரம் தனக்கு பதிநான்கு குழந்தைகள் பிறந்தும் இவர் மாத்திரம் மீதமிருக்க இவரையும் விட்டுப் பிரியவாவென்று கண்டிப்பாய் மறுத்து விட்டாள். அதன்பேரில் நரஸிம்ஹ சாஸ்திரிகளே தன் தாயாரிடம், அவள் எதிர்பார்க்கிறபடி தான் ஒருநாளும் கிருஹஸ்தனாயிருந்து குடித்தனம் செய்கிற உத்தேசம் தனக்கு கொஞ்சமேனும் இல்லையென்றும், சிருங்கேரியில் இருந்து வந்தால் தன்னுடைய யோக க்ஷேமத்தைப் பற்றி அடிக்கடி தெரிந்து கொள்ளவும், ஸமயங்களில் நேரில் பார்த்துக் கொள்ளவும் ஸௌகர்யமிருக்குமென்றும், மற்ற ஸந்யாஸிகள் மாதிரி ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்தால் இவ்வித ஸௌகர்யம் ஏற்படாதென்றும், ஆகையால் ஆசார்யாரவர்களுடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டு நடப்பதுதான் அவளுக்கும் ஹிதமென்றும், வெகுவாக எடுத்துச்

சொன்னதின் பேரில் தாயார் ஸம்மதித்தாள். பிறகு நரஸிம்ஹ சாஸ்திரிகளை அழைத்துக்கொண்டு ராமசாஸ்திரிகள் சிருங்கேரிக்குப் புறப்பட்டார். ஆனால் அவர்கள் சிருங்கேரிக்கு வந்து சேருவதற்கு முந்தின நாளே அதாவது பரீதாவி சைத்திர சுத்த துவிதீயை (1912 மார்ச்சு 12) தினம் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் விதேஹ கைவல்யம் அடைந்துவிட்டார்கள். மேல் செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாம் முடிந்த பிற்பாடு சைத்திர கிருஷ்ண ஷஷ்டி (1912 ஏப்ரல் 7) யில் நரஸிம்ஹ சாஸ்திரிகளுக்கு விதிவத்தாக ஸந்யாஸம் கொடுத்து ஸ்ரீ சந்திரசேகர பாரதீ என்கிற யோகப்பட்டத்துடன் மறுநாள் ஸ்ரீ சிருங்கேரி வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் அதிவிமரிசையாக பட்டாபிஷேகம் நடந்தது.

இவ்விதம் புதிதாக பட்டத்திற்கு வந்த ஸ்ரீமத் ஆசார்யாருக்கு பூர்வாசார்யாரவர்களுடைய அனுக்ரஹம் பூர்ணமாயிருக்கிற தென்று உணர்ந்தும்கூட இன்னும் கொஞ்ச நாள் அவர்கள் இருந்து தனக்கு வழிகாட்டியாக இல்லாமல் போய்விட்டதை உத்தேசித்து மிகவும் துக்கப்பட்டார்கள். தம் ஆசார்யாளுடைய வழியிலேயே தாமும் செல்ல வேண்டும் என்றும், தம்மை அப்பீடத்தில் அமர்த்தியதற்குத் தக்கவாறு யோக்கியதையை ஸம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்றும் அவா மிகவும் மேலிட்டிருந்தது. அதிப்பிரஸித்தரான வித்வானும் ஸதாசார ஸம்பன்னரும் உபசாந்தி ஸ்வரூபராயும் இருந்து பின்னால் கூடலி மடம் ஆசார்யாராக ஏற்பட்டவருமான மஹா மஹோபாத்யாய வித்யாநிதி விரூபாக்ஷ சாஸ்திரிகள் அவர்களிடம் மூன்று வருஷங்களுக்குள் வேதாந்த சாஸ்திரத்தை அப்யஸித்தார்கள். இதர சாஸ்திரங்களிலும் விசேஷமான பாண்டித்யம் ஏற்பட்டது. அவர்கள் அப்யஸித்த காலத்தையும் அவர்கள் அடைந்த வித்யா வைபவத்தையும் கவனிக்கும் போது பூர்வாசார்யார் அவர்களுடையவும் ஸ்ரீ சாரதாம்பாளுடையவும் பரிபூர்ணமான அனுக்ரஹம் பெற்றவர்கள் என்றே சொல்ல வேண்டும்.

பூர்வாசார்யாரால் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகாமலிருந்த ஸ்ரீ சாரதாம்பாள் தேவாலயத்தை பூர்த்தி செய்ய வேண்டு மென்றும் தன் ஆசார்யாருடைய ஸமாதிஸ்தலத்தில் ஓர் அழகான ஆலயம் கட்ட வேண்டுமென்றும் தீர்மானித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வந்தார்கள். இவ்வாலயங்கள் கட்டி முடிக்க மூன்று வருஷங்கள் ஆயின.

1916 ல் இரண்டு ஆலயங்களிலும் கும்பாபிஷேகம் அதிவிமரிசையாக நடந்தது. அந்த ஸமயம் மைசூர் மஹாராஜா கிருஷ்ணராஜ உடையாரவர்கள் நேரில் வந்து இருந்தார்கள். பரோடா கெய்க்வார் முதலான மத்திய இந்திய மஹாராஜாக்கள் தங்கள் பிரதிநிதிகளை காணிக்கைகளுடன் அனுப்பியிருந்தார்கள். மற்றும் பரதகண்டத்திலுள்ள அநேகப் பிரதேசங்களிலிருந்து ஏராளமாக பிரபுக்களும்,வித்வான்களும், மற்றும் சிஷ்யர்களும் வந்திருந்தார்கள். அதிகோலாஹலத்துடன் கும்பாபிஷேக உத்ஸவம் நடந்தது. ஆசார்யாருடைய வைதுஷ்யத்தையும் உபசாந்தியையும் மந்தஹாஸத்தையும் கண்டு மகிழாதவர் யாரும் இல்லை. ஆதிசங்கரபகவத்பாதாசார்யாரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அத்வைத வித்யாபீடத்தில் இம்மஹான் இருந்து வருவது மிகவும் உசிதமென்று யாவரும் உணர்ந்தார்கள்.

கும்பாபிஷேகம் முடிந்த பிற்பாடு ஸ்ரீமத் ஆசார்யார் தாம் அறிந்துகொண்டிருந்த விஷயங்களை அனுபவ ஸித்தமாகச் செய்துகொள்ள வேண்டும் என்ற ஊக்கத்துடன் இருந்து வந்தார். வேதாந்த சிரவணத்தில் அதிகாரம் பெற்ற சிலருக்கு பாஷ்யாதிகிரந்தங்களை பாடம் சொல்லிவந்த போதிலும் தியானத்திலும் தபஸ்ஸிலுமே ஜாஸ்தி காலம் செலவழிக்க ஆரம்பித்தார். அவருடைய குருபக்தி விசேஷத்தாலும் ஸ்ரீ சாரதாம்பாள் அநுக்ரஹத்தினுலும் அவருடைய பிரயத்தினம் ஸபலமாகி ஸ்வாநுபூதி நிலையை அடைந்தார். ஸாதாரணமாக இந்த ஸ்திதியை அடைய எவ்வளவோ தீவிரமாகப் பிரயத்தினம் செய்தாலும் அநேக ஜன்மாக்கள் வேண்டியிருக்கும். இவர் சாஸ்திர ஞானத்திலும் ஆத்மானுபவத்திலும் அத்விதீயர் என்ற நிலைமையை அதிசீக்கிரம் அடைந்துவிட்டார். தங்கள் புத்திரன் இம்மேலான பதவியை அடைந்ததைப் பார்த்து ஸந்தோஷிக்கும் பாக்கியம் அவர் பெற்றோர்களுக்கும் கிடைத்தது. அவர் பிதா கோபால சாஸ்திரிகள் 1919 ஏப்ரல் மாதத்திலும், தாயார் லக்ஷ்மியம்மாள் 1922 டிசம்பர் மாதத்திலும், தேக வியோகம் அடைந்தார்கள்.

2. தக்ஷிணதேச யாத்திரை

1923 ல் மைசூர் மஹாராஜா அவர்கள் தன்னையும் தன் குடும்பத்தார்களையும் நேரில் வந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஸ்ரீமத் ஆசார்யாரைப் பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டதின் பேரில் 1924 ஜனவரியில் சிருங்கேரியை விட்டுப் புறப்பட்டு யாத்திராக்கிரமமாய் மைசூர் போய்ச் சேர்ந்தார்கள். மைசூரில் விசேஷமாக மஹாராஜா அவர்களாலும் மற்றும் யாவராலும் ஸத்காரம் செய்யப்பட்டார்கள். மைசூர் பழைய அக்கிரஹாரத்தில் தான் தம் பூர்வாசார்யாரின் ஜந்ம கிருஹம். அந்த கிருஹமும் அதன்பக்கத்திலுள்ள ஸ்தலமும் மைசூர் மஹாராஜா அவர்களின் ஸஹாயத்தினுலும் குனிகல் ராமசாஸ்திரிகள் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் இவர்களுடைய விசேஷ பிரயத்தினத்தினுலும் ஸ்ரீ மடத்திற்கு ஸ்வாதீனம் செய்து கொள்ளப்பட்டது. அவ்விடத்தில் ஓர் அழகான கல் கட்டிடம் கட்டி அதில் பூர்வாசார்யாருடைய ஒரு மூர்த்தியும் அமிருத சிலையில் தயாரித்து கும்பாபிஷேகம் செய்து பிரதிஷ்டையானதும் ஸ்ரீமத் ஆசார்யார் குரு பக்தி மேலிட்டு ஆனந்த பரவசராயிருந்தார்கள். அவர்களுடைய ஆக்ஞையை அனுஸரித்து பிரதி தினமும் அவ்விடத்தில் வேதாந்த பாடப் பிரவசனம் நடந்து வருகிறது.

மைசூரிலிருக்கும்போது கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களிலுள்ள சிஷ்யர்கள் மிகவும் பக்தியுடன் வேண்டிக் கொண்டதற்கு இசைந்து கன்யாகுமாரிவரை யாத்திரையாக விஜயம் செய்வதாக ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அதிகருணையுடன் ஸம்மதித்தார்கள். மைசூர் ஸம்ஸ்தானத்தில் நடந்த விசேஷ ஸத்காரத்தைப் பெற்றுக்கொண்டு அங்குள்ள ஆஸ்திக ஜனங்களை அனுக்ரஹித்துவிட்டு கணவாய் வழியாய்

ஸத்யமங்கலம் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாருக்கு தாய் பாஷை தெலுங்கு, தேச பாஷை கன்னடம். சிருங்கேரிக்கு தரிசனத்திற்காக வந்திருந்த சில தமிழ்நாட்டு சிஷ்யர்களின் பழக்கத்தால் கொஞ்சம் தமிழ் கற்றுக் கொண்டிருந்தார். தமிழ் நாட்டுடன் நேரில் ஸம்பந்தம் ஏற்பட்டது ஸத்யமங்கலத்தில்தான். அவ்வூரிலுள்ள சிஷ்யர்கள் தங்களுக்கு உபதேசமாக சில வார்த்தைகள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் தமிழிலேயே உபந்யாஸம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களுடன் நெருங்கிப் பழகியிருந்தவர்களுக்குக் கூட ஆச்சரியத்தையும் தமிழ் தேசத்திலேயே பிறந்தவர்களுக்குக் கூட வியப்பையும் கொடுக்கக்கூடிய ரீதியில் சுத்தமான ஸரளமான தமிழில் உபந்யாஸம் செய்தார்கள். அதுமுதல் தமிழ் ஜில்லாக்கள் பூராவிலும் அநேகமாய்த் தமிழிலேயே உபந்யாஸம் செய்து வந்தார்கள். பண்டித கோஷ்டிகள் சேரும் ஸமயத்தில் மாத்திரம் தமக்கு அஸாதாரணமாயுள்ள அத்புதமான மாதிரியில் ஸம்ஸ்கிருத பாஷையில் பேசுவார்கள். அவர்களுடைய உபதேச மொழிகள் லோக க்ஷேமத்தை உத்தேசித்து அதிபரிசுத்தமான கருணை நிரம்பியஅந்தக்கரணத்துடன் சொல்லப்பட்டபடியால் அநேகம் நாஸ்திகர்களை ஆஸ்திகர்களாகவும் ஆஸ்திகர்களை விசேஷ சிரத்தையுள்ளவர்களாகவும் செய்வதில் நிகரற்றதாகவிருந்தன. மனம் போன போக்கில் நடந்து வருவதிலிருந்து திருப்பப்பட்டு தர்ம மார்க்கத்தில் ஈடுபடும்படி செய்யப்பட்ட மனுஷ்யர்கள் கணக்கற்றவர்கள். அவ்வொவ்வொரு சிஷ்யர்களும் எப்படி நல்லவழிக்கு வந்தார்களென்பதைத் தெரிந்துகொண்டாலே வெகு ஆச்சர்யமாகவும் உபகாரமாகவும் இருக்கும்.

கோபிசெட்டிப்பாளையம், ஈரோடு, கரூர், திருச்சி, செட்டிநாடு மார்க்கமாக ராமேசுவரம் போய்விட்டு, மதுரை, ஸ்ரீவில்லிப்புத்தூர், குற்றாலம், பாபவிநாசம், திருநெல்வேலி, திருச்செந்தூர், நாங்குநேரி, கன்யாகுமாரி, திருவனந்தபுரம், கொல்லம், வைக்கம் வழியாக ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாரின் ஜன்ம பூமியான காலடி க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள். அந்த ஸ்தலத்தில் பூர்வாசார்யார்களால் 1910ல் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாருக்கும் ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் ஆலயங்கள் கட்டி கும்பாபிஷேகம் அதிக விமரிசையாக நடந்திருந்தபடியால் அந்த ஸ்தலத்தை மேல்மேல்

விருத்திக்குக் கொண்டுவந்து அதை ஒரு வித்யாஸ்தானமாக ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் 1927 ல் ஸ்ரீமத் ஆசார்யார் நேரில் போயிருந்த ஸமயம் வேதாந்த சாஸ்திர பாடசாலையொன்று ஆரம்பித்து வைத்தார்கள். ஒரு வேத பாடசாலையும் ஏற்படுத்த வேண்டுமென்றும் உபாத்யாயர்களுக்கும் வேதாந்த வித்யார்த்திகளுக்கும் ஆலயங்களில் கைங்கர்யம் செய்கிறவர்களுக்கும் மற்றும் தர்சனார்த்தம் வருகிற பிராஹ்மணர்களுக்கும் வஸிப்பதற்கு ஸௌகர்யமாய் வீடுகள் கட்டி ஓர் அக்ரஹாரம் நிர்மாணம் செய்ய வேண்டுமென்றும் ஆக்ஞை செய்தார்கள். அப்படியே அவர்கள் ஸங்கல்பம் போல் எல்லாம் நிறைவேற்றப்பட்டது.

காலடியிலிருந்து புறப்பட்டு பாலக்காடு, கோயம்புத்தூர் வழியாக நஞ்சன்கூடு வந்து அங்கேயும் ஒரு பாடசாலை ஏற்படுத்திவிட்டு மைசூர் போய் கிரமமாக 1927 முடிவில் சிருங்கேரிக்குத் திரும்பிவந்து சேர்ந்தார்கள். யாத்திரை மத்தியில் கோபிசெட்டிப்பாளையம், குன்னக்குடி, பாபவிநாசம், நஞ்சன்கூடு ஆகிய நான்கு இடங்களில் சாதுர்மாஸ்யத்திற்காக தங்கினார்கள். இவ்விதமாக யாத்திரை நான்கு வருஷம் நடந்தது.

யாத்திரை காலத்திலும் மற்ற ஸமயங்களிலும் இவர்களை தரிசனம் செய்து பலவிதமாக நன்மை பெற்று கிருதார்த்தர்களான ஜனங்கள் கணக்கில் அகப்படா. கர்ம,உபாஸநா, ஞானமார்க்க சாஸ்திரங்களிலோ தர்க்க வியாகரண மீமாம்ஸாதி சாஸ்திரங்களிலோ யாரும் நெருங்குவதற்கில்லாமல் விசேஷமான ஞானத்தினால் ஸகலவிதமான வித்வான்களாலும் போற்றப் பட்டார்கள். ஸாமான்யமான பாமர ஜனங்கள் உள்பட யாவராலும் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களே தனக்கு மிகவும் ஆப்தரென்றும் வழிகாட்டியென்றும் பாவிக்கப்பட்டார்கள். எல்லாரிடத்திலும் அவருடைய அன்பு ஏகரூபமாக இருந்துவந்தது. லௌகிக பதவியில் மேல் அந்தஸ்துள்ளவர்களும், கீழ்ப்பட்டவர்களும், தனவான்களும், எளியவர்களும், வித்வான்களும், பாமரர்களும், கிருஸ்துவர்களும், மஹமதியர்களும், ஆஸ்திகர்களும், நாஸ்திகர்களும், ஸ்திரீபால விருத்தர்களும் யாவருமே ஒரே ரீதியாக ஆசார்யாரவர்களுடைய அன்புக்கு பாத்திரமானார்கள்.அவருடன் சில நிமிஷங்களாவது கூடவிருக்கும் படியான பாக்கியமடைந்த

யாவரும் தன்னிடத்தில தன்னைத் தெரியாமலே ஒரு தெளிவும் அறிவும் ஸந்தோஷமும் ஏற்படுவதை உணர்ந்தார்கள். லோகத்தில் மிகவும் பிரஸித்தி பெற்றிருந்த வித்வான்களும் இவர் முன்புக்குத் தங்கள் அறிவு மிகவும் ஸ்வல்பமென்று உணர்ந்தார்கள். லௌகிக அந்தஸ்திலோ தனத்திலோ பெருமை கொண்டவர்கள் இவர் முன்னிலையில் தங்கள் சிறுமையை உணர்ந்தார்கள். மந்திர சாஸ்திரங்களிலும் ஆகமங்களிலும் இவர்களுக்கிருந்த விசேஷ ஞானத்தினுல் கிருஹங்களிலோ ஆலயங்களிலோ பூஜாவிஷயத்தில் இவர்கள் செய்திருக்கும் சீர்திருத்தங்களும் உபதேசங்களும் கணக்கற்றவை.

தம்முடைய தபஸ்ஸிற்கு எவ்வித பாதகமுமன்னியில் தம் யோக சக்தியையும் மந்திர சக்தியையும் விளையாட்டாகக் காட்டி சிஷ்யர்களை அனுக்ரஹித்த ஸந்தர்ப்பங்கள் அநேகம்.

3. ஸூக்ஷ்ம திருஷ்டி

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய பார்வை நம் கண்ணுக்குப் புலப்படக்கூடாத விஷயங்களையும் அறியக்கூடிய வன்மை வாய்ந்ததென்பதில் ஸந்தேஹமில்லை.

இதுவரை ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தரிசனம் செய்திராத ஒரு பக்தர் ஒரு நாள் வந்து வந்தனம் செய்தார். உடனே ஆசார்யார் ''ஸுப்ரஹ்மண்யமா?'' என்று கேட்டார்கள். ''ஆமாம்'' என்று அவர் விடையளித்தார். பக்கத்திலிருப்பவர்கள் அந்தப் பக்தர் ஏற்கெனவே ஆசார்யாருக்கு பரிச்சயமுள்ளவரென்றும் அவர் பெயர் ஸுப்ரஹ்மண்யம் என்றும் நினைப்பார்கள். வாஸ்தவம் அப்படியல்ல. அவருடைய உபாஸ்ய தேவதை ஸுப்ரஹ்மண்யர். உபாஸ்ய தேவதையை அறியும் பார்வை படிப்பினால் வரக்கூடியதா?

ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யார் தீர்த்தப் பிரஸாதம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். கூட்டம் மிகவும் ஜாஸ்தியாக இருந்தது. அந்த ஸமயம் என் நண்பர் ஒருவர் என்னிடம் வந்து தன்னை ஆசார்யாருக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு நான் ''இது சரியான ஸந்தர்ப்பமில்லை. இப்பொழுது கூட்டத்தில் கலந்துகொண்டு தீர்த்தத்தை வாங்கிக் கொள்ளுங்கள். ஸாயங்காலம் நான்கு மணி சுமாருக்கு ஸாவகாசமாய் ஆசார்யாரை தரிசிக்கலாம்'' என்று சொன்னேன். நான் சொன்னதில் அவர் அவ்வளவு திருப்திப்படாமலிருந்தாலும் நான் சொன்னபடியே கூட்டத்தில் கலந்துகொண்டு தீர்த்தம் பெற்றுக் கொள்வதற்காக வலது கையை நீட்டினார். உடனே ஆசார்யார் ''ஆந்திரரா?'' என்றார்கள். இவர் ''ஆம்'' என்றார். ஆசார்யார் ''..... கிராமமா?'' என்றார்கள். மறுபடியும்

''ஆம்'' என்று நண்பர் சொன்னார். ''வக்கீலா?'' என்று ஆசார்யார் மேல் கேள்வி கேட்டார்கள். அதற்கும் இவர் ''ஆம்'' என்றார். பிறகு ஆசார்யார் ''ஸாயங்காலம் நான்கு மணிக்குப் பார்க்கலாம்'' என்றார்கள். என் நண்பருக்கும் சரீரத்தில் மிகவும் பதட்டமேற்பட்டு என் ஸமீபம் வந்தவுடன் என்னைப் பார்த்து ''நான் ஆந்திரர் என்றும், இந்த ஊர் ஆந்திரர் என்றும், என் நெற்றியில் எழுதியாயிருக்கிறது?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டார். ''அப்படித்தானிருக்கும். ஆசார்யார் அதை வாசித்திருக்கிறார்களே'' என்று பதில் சொன்னேன். அந்த ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் அந்த கிராமத்திற்கு விஜயம் செய்ததில்லை யென்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விதம் அறிவது வைதுஷ்யத்தில் சேருமா, ஸாமான்ய புத்தி சக்தியில் சேருமா?

◦•◦

சிருங்கேரியில் தென் கரையில் இருந்துவந்த ஸ்ரீமத் ஆசார்யார் ஒரு நாள் ஸாயங்காலம் வடகரைக்குப் புறப்படும் ஸமயம் என்னை தென்கரையிலேயே இருக்க உத்தரவிட்டார்கள். அப்படியே அன்று ராத்திரி அங்கே தங்கிவிட்டு மறுநாள் காலையில் துங்கையில் ஸ்நாநம் செய்து ஆஹ்நிகங்களை முடித்துக்கொண்டு பூர்வாசார்யாருடைய அதிஷ்டானத்தில் பிரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்துவிட்டு வடகரைக்கு வந்து ஸ்ரீமத் ஆசார்யாரின் பாதாரவிந்தங்களில் நமஸ்கரித்தேன். அவர்கள் ''அக்கரை நல்ல சாந்தியுடனிருந்திருக்கும். நாங்கள்கூட இக்கரைக்கு வந்து விட்டோம்'' என்றார்கள். நான் பதில் சொல்லாமலிருந்தேன். நான் ஏதோ பதில் சொல்லிவிட்ட மாதிரி ஆசார்யார் ''அதற்காக சொல்லவில்லை. அந்தப் பக்கம் யாரும் இல்லாததினால் அதிஷ்டானத்தில் நமஸ்காரம் செய்யும்போது தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரத்தை இரைந்து சொல்லியிருக்கலாமே என்று சொன்னேன்'' என்றார்கள். எனக்கு திடுக்கிட்டது. நான் அதிஷ்டானத்தில் நமஸ்காரம் செய்திருப்பேன் என்பதை ஊகித்திருக்கலாம். நான் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் சொன்னேன் என்பதும், அதுவும் மானஸிகமாக சொன்னேன் என்பதும், எப்படி அவர்களுக்குத் தெரிந்தது?

◦•◦

ஒரு ஸமயம் பகவத் கீதா பாஷ்யம் உபதேசம் செய்ய வேண்டுமென்று நான் பிரார்த்தித்தபோது ''பெரியவாளிடத்தில்

உனக்கு பஞ்சாக்ஷர உபதேசம் ஆகியிருக்கிறதல்லவா?'' என்றார்கள். ''ஆம்'' என்றேன். ''திருச்செந்தூரில்தானே?'' என்றார்கள். ''ஆம்'' என்றேன். ''அன்றுதானே ஆசார்யாள் ஸமுத்திர ஸ்நாநம்?'' என்றார்கள். நான் மிகவும் ஆச்சர்யத்துடன் ''ஆம்'' என்று சொன்னேன். இவ்விஷயம் இந்த ஸம்பாஷணைக்கு பதினைந்து வருஷங்களுக்கு முன்னும் ஆசார்யார் பீடத்திற்கு வருவதற்கு நான்கு வருஷங்களுக்கு முன்னும் நடந்த ஸம்பவம்.

சிருங்கேரியிலிருந்து ஒருவர் அவஸரமாக சென்னைப் பட்டணம் போக வேண்டியிருக்கிறதென்று ஆசார்யாரிடம் அனுமதி கேட்டார். ''ஏன்?'' என்று ஆசார்யார் கேட்க, ''சென்னையில் அவஸரமான கார்யம் இருக்கிறது'' என்று சொன்னார். ஸ்ரீமத் ஆசார்யார் சற்று தயங்கிவிட்டு ''ஆமாம், அவஸரம்தான். ஆனால் சென்னையில் இல்லை. போய்வரலாம்'' என்றார்கள். அவர் உத்தேசித்தபடி சென்னைக்குப் புறப்பட்டுப் போகும் வழியில் அரக்கோணம் ஸ்டேஷனில் ரயில் நின்ற ஸமயம் கீழே இறங்கினவர் கால் தவறி தண்டவாளத்திற்கு ஸமீபத்தில் விழுந்துவிட்டார். பக்கத்திலிருந்தவர்கள் தூக்கியெடுத்து விட்டார்கள். அப்பொழுதுதான் ஆசார்யாரின் வாக்கு ஞாபகத்திற்கு வந்தது. சென்னைக்குப் போனாலும் ஒரு கார்யமும் செய்ய மனது இடம் கொடுக்காமல் உடனே சிருங்கேரி திரும்பிவந்து ஆசார்யாரின் பாதகமலங்களில் நமஸ்கரித்தார். ''*அன்று* அதிக அஸௌகரியமேற்பட்டிராது'' என்று ஆசார்யார் மிகக் கருணையுடன் சொன்னார்கள்.

மிகவும் ஆசாரசீலரான ஒரு பிராஹ்மணர் தன் பூஜையை ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடம் கொடுத்து அவர்களுடைய அனுக்ரஹத்துடன் திரும்ப வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நினைத்து பூஜைப் பெட்டியைக் கொண்டுவந்து ஸமர்ப்பித்தார். அப்பெட்டியைத் திறந்து அதிலுள்ள மூர்த்திகளை எடுத்து ஸ்ரீமத் ஆசார்யார் கவனித்து வருகையில் ஒரு ஸாலக்கிராமத்தைக் கையில் எடுத்துப் பார்த்தவுடன் ''ஸ்வாமி ஏழு வருஷமாக பட்டினி போலிருக்கிறதே!'' என்று சொன்னார்கள். அந்த சிஷ்யர் திடுக்கிட்டு

''எனக்குத் தெரிந்து அப்படி ஓர் அபசாரமும் செய்யவில்லையே!'' என்றார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் ''நீங்கள் பூஜை சரியாய்ப் பண்ணவில்லையென்று தெரிகிறது. இந்த மூர்த்திக்கு நித்தியம் பால் அபிஷேகமும் பால் பாயஸம் நிவேதனமும் செய்ய வேண்டும். ஏழு வருஷ காலமாக நடக்கவில்லையென்று தெரிகிறது'' என்று சொன்னார்கள். அதன்பேரில் சிஷ்யர் ''இப்பொழுது ஞாபகம் வருகிறது. என் தகப்பனார் இருக்கும்போது அப்படியேதான் அபிஷேகமும் நிவேதனமும் செய்து வந்தார். அவர் இருக்கும்போதே நான் தனியாக பூஜை ஆரம்பித்துக்கொண்டு விட்டபடியால் அவர் காலம் சென்ற பிறகு அவருடைய பூஜையையும் என் பூஜையுடன் சேர்த்துக்கொண்டு எல்லா மூர்த்திகளையும் வித்யாஸமன்னியில் ஒரே விதமாக அபிஷேகம் நிவேதனம் செய்து ஆராதனம் செய்துவருகிறேன்'' என்றார்.

அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார், ''அப்படியானல் உங்கள் பிதா இறந்து இப்பொழுது ஏழு வருஷங்கள் ஆயினவா?'' என்று கேட்டார்கள். சிஷ்யர் ''ஆம்'' என்று ஒப்புக்கொண்டார்.

அதன்பேரில் ஸ்ரீமத் ஆசார்யார் ''எல்லா மூர்த்திகளையும் ஒன்றாக வைத்து ஒரே மாதிரியாக ஆராதனம் செய்வது உசிதமில்லை. இனியாவது இந்த மூர்த்திக்கு நான் சொன்னபடி தனியாக பூஜை செய்யுங்கள்'' என்று ஆக்ஞாபித்தார்கள். மூர்த்தி பூஜையில் நம்பிக்கையில்லாதவர்களுக்கு இந்த ஸம்பவம் பொய் அல்லது நம்பத்தக்கதில்லை என்று தோன்றும். ஜகத் பூராவும் வியாபகராயிருக்கிற ஈசுவரன் சில பதார்த்தங்களில் விசேஷமாக ஸாந்நித்யம் அடைந்திருக்கிற விஷயம் ஞானிகளின் திருஷ்டிக்கு நன்கு புலப்படும் என்று நம்புகிற ஆஸ்திகர்களுக்கு இந்த ஸம்பவம் ஒரு விசேஷமான உபதேசமாகவே ஏற்படும்.

ஓர் ஊரில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் சிஷ்யர்களுக்கு தீர்த்தப் பிரஸாதம் கொடுத்துக் கொண்டிருந்த ஸமயத்தில், ஒரு பெண் தன்னுடன் அழைத்துவந்த தன் குழந்தையின் கழுத்தில் போட்டிருந்த சங்கிலியைக் காணமல் கூக்குரலிட்டாள். அங்கே சப்தம் செய்யக்கூடாதென்று அவளுடன் இருந்தவர்கள் சொல்லி அவளை தீர்த்தம் வாங்கிக்கொள்ளும்படி சொன்னார்கள். அவள்

அப்படியே தன் துக்கத்தை அடக்கிக்கொண்டு ஸ்ரீமத் ஆசார்யார் ஸமீபம் போய் தீர்த்தத்திற்காக வலக்கையை நீட்டினுள். ஆனுல் அவர்கள் அவளே விலகி நிற்கும்படி ஜாடை செய்தார்கள். அவளுக்குத் துக்கம் அதிகரித்து பக்கத்திலே போய் பிரமித்து நின்ருள். மற்றவர்களுக்கு கிரமப்படி தீர்த்தம் கொடுத்து வருகையில் ஒரு கிழவி கையை நீட்டியவுடன் மிகவும் தாழ்ந்த குரலில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் ''கொடுத்துவிடுங்கள்'' என்று சொன்ஞர்கள். அவள் ''எதை?'' என்று கேட்டாள். ''எடுத்ததை'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் சொன்னதும், ''நான் ஒன்றையும் எடுக்கவில்லை'' என்று அவள் சொல்ல, ''ஜாஸ்திபாபம் வேண்டாம்'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் சொன்ஞர்கள். உடனே பக்கத்திலுள்ள சில ஸ்திரீகள் அவளேப் பிடித்துக்கொண்டு அவளுடைய மடியிலிருந்து சங்கிலியை எடுத்து ஆசார்யார் முன்பு வைத்தார்கள். பிறகு அந்தப் பெண்ணேக் கூப்பிட்டு தீர்த்தம் கொடுத்துவிட்டு ''சங்கிலியை எடுத்துக்கொள். இனிமேல் வேண்டாமென்கிற கார்யத்தை செய்யாதே'' என்று சொன்ஞர்கள். அவள் மிகவும் பச்சாத்தாபத்துடன் ''இனிமேல் செய்யவில்லை'' என்று சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டாள். பின்னுல் விசாரிக்கையில் அவளுடைய பர்த்தாவுக்கு குமாஸ்தா உத்தியோகம் என்றும் தனக்கு ஆஹாரம் செய்வித்துவிட்டு பூஜைக்குப் போகலாமென்று அவர் சொல்லியிருந்தும் ஆஹாரத்தைத் தயாரித்து மாத்திரம் வைத்துவிட்டு பர்த்தாவையே எடுத்துப் போட்டுக்கொள்ளும்படி சொல்லிவிட்டு இவள் பூஜை பார்க்க வந்துவிட்டதாகத் தெரிந்தது. தன் கடமையைச் செய்யாமல் பகவானிடத்தில் பக்தி காட்டுவதாகச் சொல்வது நியாயமில்லையென்பதை இந்த ஸம்பவத்தினுல் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் காட்டியிருக்கிருர்கள்.

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு முன் பரிச்சயமில்லாத ஒருவர் ஒரு நாள் அவர்களிடம் வந்து நமஸ்காரம் செய்து, ''ஏதோ புண்ணியவசத்தால் இவ்வூருக்கு வரும்படி ஏற்பட்டுத் தங்களே தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது'' என்று சொல்லி, ''அத்துடன் ஓர் உபதேசமும் தாங்கள் அனுக்ரஹம் செய்தால் மிகவும் கிருதார்த்தனுவேன்'' என்று வேண்டிக்கொண்டார். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் நிமிர்ந்து அவரை உற்று நோக்கிக் கொஞ்சம் கடுமையான குரலில்,

''மாத்ருதேவோ பவ-என்பது கேள்விப்பட்டிருக்கிறீரா?'' என்று கேட்டார்கள். அவர் ''ஆம்'' என்று பதில் சொன்னதும்,

''பித்ருதேவோ பவ-என்பதும் கேள்விப்பட்டிருக்கிறீரா?'' என்று கேட்டார்கள். அதற்கும் அவர் ''ஆம்'' என்று சொன்னதும்,

''ஆசார்யதேவோ பவ-என்பதும் கேள்விப்பட்டிருக்கிறீரா?'' என்று கேட்டார்கள். அதற்கும் அவர் ''ஆம்'' என்று பதில் சொன்னவுடன்,

''முதல் இரண்டும் ஆகட்டும், அப்புறம் இங்கு வாரும்'' என்று மிகவும் கண்டிப்பாய்ச் சொன்னார்கள். இதைக் கேட்ட அவர் நடுங்கிக்கொண்டு கீழே விழுந்து நமஸ்காரம் செய்து நீர் ததும்பிய கண்களுடன்,

''என்னால் முடிந்த வரையில் பெற்றோர்களை ஸேவித்து வருகிறேன். அவர்கள்தான் என்னிடம் பிரியமாயில்லை'' என்றார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார்,

''இந்த விதிகள் உமக்குத்தான். அவர்கள் பிரியமாய் இருந்தால்தான் இந்த வாக்கியங்களுக்கு பிராமாண்யமென்பது கிடையாது. உங்கள் கடமையை நீங்கள் செய்ய வேண்டும். செய்துவந்தால் அவர்களுடைய பிரீதிக்குப் பாத்திரமாவீர். இதை நன்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்'' என்றார்கள். ''அப்படியே ஆகட்டும்'' என்று சிஷ்யர் ஏற்றுக்கொண்டார்.

இவ்வுபதேசம்தான் இவருக்கு மிகவும் உசிதமும் அவசியமும் என்று ஸ்ரீமத் ஆசார்யார் எவ்விதம் தெரிந்து கொண்டார்கள் என்பதைப்பற்றி வாசகர்கள் அவரவர்கள் மனப்போக்குப் பிரகாரம் ஊகித்துக் கொள்ளலாம்.

4. கருணை வள்ளல்

ஸ்ரீகிருஷ்ண பகவான் கீதையில் தன்னை ஸர்வ பிராணிகளுக்கும் ஸுஹ்ருத் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் (V, 29). ஞானியும் அப்படியேதான். நாம் அந்தரங்க சுத்தியுடன் பகவானிடம் பிரார்த்திக்கும் விஷயத்தில் நம் பிரார்த்தனை எவ்வளவு அல்பமாயிருந்தாலும் அசட்டுத்தனமாயிருந்தாலும் அதையும் பகவான் பூர்த்தி செய்து கொடுக்கிறார். தன்னிடம் பக்தி செய்கிறவர்கள் ஆர்த்தர்கள், ஜிஜ்ஞாஸுக்கள், அர்த்தார்த்திகள், ஞானிகள் என்று நான்கு விதமுண்டென்றும் சொல்லுகிறார். ஞானத்தை அபேக்ஷிக்கிறவர்கள் மிகவும் ஸ்வல்பமே; ஞானிகள் அதிலும் மிக ஸ்வல்பமே. ஆர்த்தர்கள் அதாவது துக்க நிவிருத்தியை அபேக்ஷிக்கிறவர்களும், அர்த்தார்த்திகள் அதாவது விசேஷமான விஷய ஸுகத்தை அபேக்ஷிக்கிறவர்களும்தான் உலகத்தில் ஜாஸ்தி. இவர்கள்தான் பகவானை அண்டுவதைப்போல ஆசார்யாரிடமும் நெருங்கி வருவார்கள். துக்கங்களில் பலவித முண்டு; அப்படியே ஆசைகளும் பலவிதப்படும். இவைகளுக் கெல்லாம் பரிஹாரம் செய்வதென்றால் ஸர்வக்ஞராகத்தான் இருக்க வேண்டும். ஆனால் நம் ஆசார்யார் தன்னிடத்தில் யோக்கியதை இருப்பதாக கொஞ்சமேனும் எண்ணமன்னியில் பக்தர்களின் பிரார்த்தனைகளை பூர்த்தி செய்து கொடுக்கும்படி ஸர்வக்ஞரான பகவானிடத்திலேயே பொறுப்புக்கட்டி விடுவார்கள். பகவானுடைய சக்தியிலும் கருணையிலும் ஆசார்யாருக்கு தீவிரமான விசுவாஸமிருந்தபடியால், பகவானை நினைத்துக் கொண்டு பக்தர்களுக்குக் கொடுக்கும் விபூதியோ, குங்குமமோ, மந்திரமோ ஸகலவித ஆதி வியாதிகளையும் நிவிருத்தி செய்ய வல்லமையுடன் இருந்தன. அவர்கள் அனுக்ரஹத்தினால் நன்மையடைந்தவர்கள் கணக்கில் அடங்கா.

ஒரு பக்தருக்கு விசித்திரமான சிரமம் ஏற்பட்டது. அவர் பெண்ணுக்கு கல்யாணமாகியிருந்தது. ஆனல் வயது இருபதாகியும் பெரிய மனுஷியாகவில்லை. இவள் தன் வீட்டுக்கு வருவது ஸந்தேஹம் என்று அவள் புருஷன் வீட்டுக்காரர்கள் அவனுக்கு வேறு கல்யாணம் செய்துவிட உத்தேசித்தார்கள். பெண்ணின் தகப்பனருக்கு இது மிக்க துக்கத்தைக் கொடுத்தது. அவர் எளியவர். இன்னும் விவாஹத்திற்குப் பெண்கள் இருந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து தன் துயரத்தைத் தெரிவித்துக் கொண்டார். மிகக்கருணையுடன் கேட்டுவிட்டு அபிமந்த்ரணம் செய்யப்பட்ட வெண்ணையை அவரிடம் கொடுத்து, அன்று இரவே பெண்ணுக்கு அருந்தும்படி கொடுக்கச் சொன்னர்கள். அவர் அப்படியே செய்தார். மறுநாள் ஸூர்யோதயத்திற்கு முன்னல் பெண் ருதுவானள்!

ஒரு பெண்ணுக்கு அடிக்கடி கர்ப்ப ஸ்ராவம் (குறைப்பிரசவம்) ஏற்பட்டுக்கொண்டே இருந்தது. இது விஷயமாய் அவளுடைய மாமன் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சொன்னதும் கொஞ்சம் விபூதி கொடுத்தார்கள். ''இதை நித்தியம் தவருமல் ஞாபகமாய் நெற்றியில் இட்டுக் கொள்ளச் சொல்லுங்கள். ஜாக்கிரதையாக இருக்கட்டும்'' என்றும் சொன்னர். அப்படியே அந்தப் பெண் உபயோகித்து வரும் மத்தியில் ஒருநாள் அவள் மாமியாருக்கு ஏதோ புருஷனை ஸ்வாதீனப்படுத்த மாமன் விபூதி கொண்டு வந்து கொடுத்திருப்பதாக துர்புத்தியேற்பட்டு கோபங்கொண்டு பூஜையிலிருந்த விபூதியை எடுத்து குப்பைத்தொட்டியில் விட்டெறிந்து விட்டாள். அன்று ராத்திரி உயிருக்கே அபாயமென்று பயப்படக் கூடிய ரீதியில் கர்ப்பஸ்ராவம் ஏற்பட்டது. ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரியப் படுத்தினதில் இனி இதுமாதிரி ஏற்படாதென்றும் இனி பிறக்கும் குழந்தைகளுடன் அப்பெண் ஸௌக்கியமாயிருப்பாள் என்றும் அனுக்ரஹித்தார்கள். அப்படியே அவளும் இருந்து வருகிருள்.

ஒரு சிறுவன் 20 வது வயதில் விவாஹம் செய்துகொண்டான். மறுவருஷத்திலேயே பெண்சாதியுடன் சண்டையிட்டுக்கொண்டு

அவளை பிறந்தகத்திற்கு அனுப்பிவிட்டான். பிறகு வேறு ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொண்டான். அவளையும் அப்படியே விரட்டிவிட்டான். இந்த ஸம்பவங்களால் அவனுடைய மனது மிகவும் உடைந்துபோய் இனி தான் கிருஹஸ்தனுயிருக்க லாயக்கில்லை என்று தீர்மானித்துக் கொண்டான். ஸந்யாஸத்திற்கு கொஞ்சமேனும் அர்ஹனில்லை யென்பதையும் நன்கு உணர்ந்தான். ஆத்மஹத்தி செய்ய நினைத்ததில் பரலோக பயம் குறுக்கே நின்றது. எங்கேயாவது தெரியாத இடங்களுக்கு ஓடிப்போய் விடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும் ஸமயம், ஸ்ரீமத் ஆசார்யார் எல்லோருக்கும் மிகவும் ஆப்தராயிருந்து அவரவர்களுக்கு ஏற்பட்ட சிரமங்களை நிவிருத்தி செய்து கொடுக்கக்கூடிய சக்தியும் கருணையும் உடையவர்கள் என்று கேள்விப்பட்டு அவர்களிடம் சென்று தன் துக்கங்களைத் தெரிவித்தான். ஸ்ரீமத் ஆசார்யார் அன்புடன் அவன் வரலாற்றைக் கேட்டுப் பிற்பாடு அவனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்து இதை நித்தியம் இத்தனை தடவை வீதம் தொண்ணூறு நாள் ஜபித்து வர வேண்டுமென்றும் அதன்பிறகு தன்னை வந்து பார்க்கும்படியாகவும் சொன்னார்கள். அவர்கள் சொன்ன கெடு முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக அவனுடைய மூத்த ஸம்ஸாரத்தின் தகப்பனர் தன் பெண்ணைத் தானே அழைத்துக்கொண்டு வந்து ஒரு நாள் காலையில் இருட்டு வேளையில் இவன் வீட்டு வாசல் திண்ணையில் உட்காரவைத்துவிட்டுத் தான் வந்தது தெரியாமலே திரும்பி விட்டார். இப்பெண் நடுங்கிக் கொண்டு அங்கேயே உட்கார்ந்துக் கொண்டிருக்கும் பொழுது காலை ஐந்து மணி சுமாருக்கு இவன் வாசற்கதவைத் திறந்து வெளியில் வரும் ஸமயம் ஒரு சிறு பெண் இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டான். கவனித்துப் பார்த்ததில் அவள் தான் விரட்டிய முதல் ஸம்ஸாரம் என்று தெரிந்துகொண்டான். தன்னுடைய கௌரவத்திற்கும் மானத்திற்கும் ஒருவித குறைவுமன்னியில் அவளாகவே திரும்பி வந்ததில் உள்ளூர ஸந்தோஷமிருந்தபோதிலும் அவளைப் பார்த்து ''நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று அதட்டினுற்போல் கேட்டான். அதற்கு அவள் தன் தகப்பனர் செய்த காரியத்தைச் சொன்னாள். அவளை உள்ளே போகச் சொன்னான். கொஞ்ச நேரத்தில் அவர்கள் ஸமாதானத்தை அடைந்து விட்டார்கள் என்று

சொல்லவும் வேண்டுமா? இது நடந்த சில நாட்களுக்குப் பிறகு இரண்டாவது ஸம்ஸாரத்தின் தகப்பனுர் இதைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரும் இதேமாதிரி செய்துவிட்டார். அவளேயும் ஸ்வீகரிக்கும்படி ஏற்பட்டது. இப்பொழுது இரண்டு மனைவிகளும் வீட்டுக்கு வந்துவிட்டபடியால் என்ன செய்வது என்ற யோசனை மறுபடியும் இவனுக்கு ஏற்பட்டு ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தரிசித்து அவர்களிடம் ஸதுபதேசம் பெற்று நன்கு இல்லறம் நடத்தி வந்தான்.

ஒருவர் ஒரு முனிஸீப் கோர்ட்டில் குமாஸ்தாவாக இருந்தார். அவர் மிகவும் யோக்யர். தன் கடமைகளை ஒருவித குறைவுமின்றிச் சரிவரச் செய்து வந்தார். ஆனுல் அவர் தன் நாக்கை அடக்கிப் பேச சக்தியற்றவர். மேல் உத்யோகஸ்தர் ஏதேனும் கட்டளேயிட்டால் அதை நன்கு நிறைவேற்றும்போதே, ''நியாயமான விஷயமாய் இருந்தால் குழந்தை சொன்னுலும் கிளி சொன்னுலும் கேட்க வேண்டியதுதானே'' என்று அவ்வதிகாரியிடமே சொல்லி விடுவார். இது அவ்வதிகாரிக்குக் கோபத்தை உண்டு பண்ணிவிடும். அதனுல் அநேகம் தடவை அவர் உத்யோகத்திற்கு இடையூறு ஏற்பட்டு ஒரு ஸமயம் தாற்காலிகமாக வேலேயிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டார். இவருடைய ஸம்ஸாரம் இவரைப் பார்த்து, ''ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அநேகர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பலவிதமான சிரமங்களை நிவிருத்தி செய்து கொடுப்பதாகக் கேள்விப்படுகிறேன். நீங்களும் அவரிடம் போய் அனுக்ரஹம் பெறலாகாதா?'' என்று கேட்டாள். அதற்கு அவர் ''எனக்கு ஆசார்யார் என்ன செய்ய முடியும்? என் நாக்கில் சனி இருக்கிறது. அதற்கு அவர் என்ன செய்வார்?'' என்று சொன்னுர். அவள் ''கேட்டுப் பாருங்களேன்'' என்று சொன்னுள். அவள் இவ்வளவு வற்புறுத்தியதன் பேரில் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்று ஸமாசாரங்களைத் தெரிவித்து, ''என் நாக்கில் சனி இருக்கிறது. இருந்தாலும் தங்களைக் கேட்கும்படி என் ஸம்ஸாரம் வற்புறுத்தியதினுல் வந்தேன். எனக்கு ஏதேனும் அநுகூலம் செய்ய முடியுமானுல் செய்ய வேண்டுகிறேன்'' என்று சொன்னுர். இப்பிரார்த்தனையை ஸ்ரீமத் ஆசார்யார் புன்சிரிப்புடன் கேட்டுக் கொண்டு மறுநாள் காலேயில் வரும்படி உத்தரவிட்டார்கள்.

மறுநாள் அவருக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து ஒரு நாளைக்கு இத்தனை ஜபம் ஆகவேண்டும் என்றும் இரண்டு வாரம் கழித்து தம்மை வந்து பார்க்கும்படியும் சொல்லியனுப்பினார்கள். அப்படியே அவர் சிரத்தையுடன் ஜபம் செய்துவந்தார். இதற்கு ஒரு வாரம் கழித்து இவர் வேலை பார்த்துவந்த கச்சேரியை (கோர்ட்) மேல்பார்ப்பதற்காக ஜில்லா ஜட்ஜ் வந்த ஸமயம் சில பதிவு புஸ்தகங்கள் வெகு தெளிவாகவும், நன்றாகவும் எழுதப் பட்டிருந்ததைக் கண்டு ஸந்தோஷித்து அதை எழுதின குமாஸ்தா யார் என்று கேட்டார். முனிஸீபின் சிபார்சின்பேரில் தானே அந்த குமாஸ்தாவை வேலையிலிருந்து தாற்காலிகமாக விலக்கி வைத்திருப்பதாகத் தெரிந்துகொண்டார். இந்த குமாஸ்தாவின் யோக்கியதையை யறிந்து வேலை வாங்க முனிஸீபுக்கு சக்தியில்லையென்பதை உணர்ந்தார். உடனே தன் முன் உத்தரவை ரத்து செய்து தன்னிடமே மேலந்தஸ்துள்ள ஓர் உத்யோகம் கொடுத்து மாற்றிக்கொண்டார். குமாஸ்தாவும் மிகுந்த ஸந்தோஷத்துடன் புதிய வேலையை ஒப்புக்கொண்டார். இதற்குள் ஸ்ரீமத் ஆசார்யார் குறிப்பிட்ட இரண்டு வாரம் ஆகிவிட்டபடியால் அவர்களைக் கண்டு நமஸ்காரம் செய்து நடந்தவைகளையெல்லாம் மிக்க நன்றியுடன் தெரிவித்தார். பிறகு ''எனக்கு உத்யோகம் மறுபடியும் கிடைத்துவிட்டபடியால், இனி மந்திர ஜபத்தை நிறுத்திவிடலாமா?'' என்று கேட்டார். ஸ்ரீமத் ஆசார்யார் புன்சிரிப்புடன் ''உங்கள் நாக்கில் சனி இருக்கும்வரை ஜபிக்க வேண்டியதுதான்'' என்று சொன்னார்கள். அதன்பிறகு ஒருவித சிரமமுமின்றி அவர் வேலை பார்த்துவிட்டு சில வருஷங்கள் கழித்து கௌரவமாக உபகாரச் சம்பளத்துடன் வேலையிலிருந்து விலகி ஸௌகர்யமாயிருந்தார்.

மந்திரங்களின் பிரபாவம் தெரியாதவர்கள் இந்த ஸம்பவங்கள் எல்லாம் அகஸ்மாத்தாய் ஏற்பட்டதாகச் சொல்வார்கள். இது ஒரு ஸமாதானமாகாது. நம் மதரீதியாக மந்திரங்கள் சக்திவாய்ந்தவைகள் என்றும், மந்திரஜபம் செய்கிறவர்களுக்கும் சுற்றியிருப்பவர்களுக்கும் விசேஷமான அநுகூலங்களை அளிக்கக்கூடியவை என்றும் நம்புகிறோம். ஆனால் விசேஷ ஆத்ம சக்தி வாயந்த பெரியோர்களிடமிருந்து கிடைத்தால்தான் மந்திரங்களுக்கு அவ்வித மதிப்பு உண்டு. இல்லையானால்

அவைகள் வெறும் சப்தமேயாகும். அவைகள் மின்சார விளக்குக் கண்ணுடிக் கூடு மாதிரி. மின்சார சக்தியுடன் ஸம்பந்தமிருந்தால்தான் அக்கூடு பிரகாசம் கொடுக்கும். இக்காலத்தில் அநேக ரஹஸ்யமான மந்திரங்கள்கூட ஸுலபமாக அச்சிடப்பட்டு யாவராலும் தெரிந்து கொள்ளக்கூடிய ஸ்திதியிலிருப்பதால் பிரயோஜனமற்றுப் போகின்றன. நன்கு சக்திவாய்ந்த குருவினுல் தகுந்த அதிகாரிக்கு உபதேசம் செய்யப்படும் விஷயத்தில் நன்கு ஸபலமாகும். மின்சார சக்தியின் ஸம்பந்தத்தை எடுத்துவிட்டுக் கண்ணுடிக்கூடு எரியவில்லையென்று அதன் பேரில் குற்றம் சொல்வதில் பிரயோஜனமில்லை.

மேலே கண்ட ஸம்பவங்களை உதாஹரிப்பதினுல் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய மஹிமை எள்ளளவேனும் சொன்னதாக ஆகாது என்பதை நன்கு உணர்கிறேன்.

5. உபதேச முறை

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய உபதேசக் கிரமம் விசித்திரமானது. அநேகம் சிஷ்யர்கள் தங்களுடைய ஸந்தேஹங்களை நிவிருத்தி செய்துகொள்ளக் கருதி அவர்களிடம் செல்வார்கள். தங்கள் ஸந்தேஹம் இன்னதென்று எடுத்துச் சொல்வதற்குக்கூட அவசியமில்லாமல் நிவிருத்தியாகிவிடும். சிஷ்யர்கள் பலர் சேர்ந்துவந்தாலும் அவரவர்கள் மனதில் கேட்க வேண்டுமென்ற விஷயங்களுக்கு பதில் தானுகவே வந்துவிடும். வெகுநாளாக சிரமப்பட்டும் தீராத ஸந்தேஹங்கள் அவர்கள் வாக்கிலிருந்து வரும் ஒரு சிறிய வார்த்தையினுல் நிவிருத்தியாவதுமுண்டு. ஏதேனும் ஒரு கிரந்தத்தில் ஒரு வாக்கியம் அர்த்தமாகாமல் ஒரு சிஷ்யர் அவர்களிடம் கேட்டால் அவ்வாக்கியத்தை அவரையே மறுபடியும் வாசிக்கச் சொல்வார்கள். அப்பொழுதே அர்த்தம் நன்கு புலப்பட்டுவிடும். சில ஸமயம் தானே அந்த பங்க்தியை வாசித்துவிட்டு ''அர்த்தமாய் விட்டதா?'' என்று கேட்பார்கள். ''ஆம்'' என்றே சிஷ்யர் சொல்லும்படி ஏற்படும். சில ஸமயங்களில் தாம் வாசிக்கும்பொழுதே ஸ்வர விசேஷத்தினுலும் உசிதமான ஸம்ஞைகளாலும் அவ்வாக்கியத்திலுள்ள விசேஷார்த்தம் விளங்கும்படி செய்வார்கள். எப்படியும் அதிகமாக வார்த்தைகள் சொல்லி அர்த்தத்தை வெளியிட வேண்டிய அவசியம் இராது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு புஸ்தகத்தை முடித்தாக வேண்டு மென்ற எண்ணம் கிடையாது. அநேக வருஷங்கள் ஆனுலும் ஆகும். எல்லா வேதங்களுடைய பரம தாத்பர்யங்களையும் சிற்சில வாக்கியங்களிலோ, சுருக்கமாக சில சுலோகங்களிலோ ஒரு சின்ன சுலோகத்திலோ அல்லது அரை சுலோகத்திலோ நம் பெரியோர்கள் அடக்கி எழுதியிருப்பதால் அதில் அடங்கிய தத்துவங்களை நன்கு கிரஹித்து உணர்ந்து அநுபவத்திற்குக் கொண்டுவந்தால் அதுவே சிலாக்கியமென்பதும்,

கண்டபடி அநேக புஸ்தகங்களை வாசிப்பது கொஞ்சமேனும் அவசியமில்லாத கார்யமென்பதும் அவர்களுடைய தீர்மானம். ''தத்துவம் இன்னதென்று ஸந்தேஹமிருந்தாலும், அதற்கு யுக்திபிரமாணங்களால் பக்கபலம் கட்ட வேண்டுமென்று தோன்றினாலும், அநேகம் கிரந்தங்களை வாசியுங்கள். தத்துவத்தில் ஸந்தேஹமில்லாமல் அதை அநுபவத்திற்குக் கொண்டு வருவதில் மாத்திரம் நோக்கமிருக்குமேயானால் இந்த சிரமம் அநாவசியம். இன்னொருவருக்கு ருசியாக போஜனம் தயாரிக்க வேண்டுமென்று உத்தேசிக்கிற பரிசாரகனுக்கு என்ன என்ன ஸாமான்கள் வேண்டும், ஒவ்வொரு ஸாமானிலும் எவ்வளவு எவ்வளவு எடுத்துக் கொள்ள வேண்டும், அவைகளை எப்படி பக்குவப் படுத்துகிறது, இது முதலான விஷயங்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும். சாப்பிட மாத்திரம் வேண்டியவனுக்கு இவ்விஷயங்கள் தெரிய வேண்டிய அவசியமில்லை. அதேமாதிரி மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமிருக்கிற வித்வான்கள் சாஸ்திர வாக்யார்த்த விசாரங்கள் செய்து கொள்ளட்டும். நீங்கள் அந்த சிரமத்தை வஹிக்க வேண்டாம். அநுபவத்திற்குக் கொண்டுவர மாத்திரம் பிரயத்தினம் செய்யுங்கள். ஸாதாரணமாக ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாரவர்களுடைய பாஷ்யங்களை நன்கு தெரிந்து கொள்வது தற்காலத்திலுள்ள அத்வைதிகளுக்கு மிகவும் அவசியமென்று எண்ணப்படுகிறது. ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்யாரவர்கள் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்ற ஞானிதானே? அவர்கள் ஞானியானது, தான் எழுதின பாஷ்யங்களைப் பார்த்தா? அவர்கள் பாஷ்யங்களை எழுதியான பிறகு அதிலுள்ள தத்துவங்களைப் பற்றி மனனம் செய்து பிறபாடே ஞானி யானார்கள் என்று வைத்துக் கொள்வோம்; அவர்களுடைய முன் ஆசார்யார்களான கோவிந்த பகவத்பாதாசார்யார், கௌடபாதாசார்யார், சுகாசார்யார், வியாஸ பகவான் இவர்கள் எல்லோரும் ஞானிகளாயிருந்தார்களே, அவர்கள் ஞானியாவதற்கு ஸ்ரீ சங்கர பாஷ்யத்தையா வாசித்தார்கள்? ஆகையால் ஆத்ம ஞானத்தில் மாத்திரம் நோக்கமுள்ள ஒரு மனிதனுக்கு பாஷ்யங்களை நன்கு தெரிந்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. மேலும், பாஷ்யங்களையும் மேல் கிரந்தங்களையும் நன்கு வாசித்துப் பிரவசனம் செய்யக்கூடிய அநேக வித்வான்களைப் பார்க்கிறோம்; அவர்களுக்காவது கொஞ்சமேனும் ஆத்ம ஞானம் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல

முடியுமா? ஆகையினுல் வேதங்களில் சொல்லியதும் நம் முன்னேர்கள் வற்புறுத்தியதுமான ஒரு தத்வோபதேசத்தை உறுதியாகப் பிடித்துக்கொண்டு அதை அநுபவத்திற்குக் கொண்டுவர விசேஷமான பிரயத்தினம் செய்யுங்கள். நீங்கள் மனப்பூர்வமாக பிரயத்தினம் செய்யும் விஷயத்தில் பகவானே வழிகாட்டியாகவிருந்து உங்கள் பிரயத்தினத்தை ஸபலமாக்குவார்'' என்று சொல்வார்கள்.

தர்ம விஷயமாகவும் வீண் சர்ச்சை செய்வதில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு திருப்தி கிடையாது. ஏதாவது ஒரு விஷயத்தில் அது எப்படி இது எப்படி என்று பொதுவாகக் கேட்டால் அவர்கள் பதில் சொல்வது கிடையாது. அப்படியல்லாமல் ஒரு குறிப்பிட்ட ஸந்தர்ப்பத்தில், தான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று ஒரு சிஷ்யன் கேட்டால், தம்முடைய உபதேசப்படி அவன் நடப்பானென்று அவர்களுக்குத் தோன்றினுல் மாத்திரம் அவனுக்குத் தக்கபடி உபதேசம் செய்வார்கள். ஆனுல் அவ்வுபதேசம் அவனுக்கு மாத்திரம்தான். இன்னெரு சிஷ்யன் அதே ஸந்தர்ப்பங்களோ அதே யோக்கியதையோ தனக்கு இருப்பதாக நினைத்துக்கொண்டு அதேமாதிரி தானும் நடக்கலாமாவென்று கேட்டுவிட்டால், அநேகமாய் கூடாது என்றே பதில் வரும். இவனுக்குத் தக்கபடி வேறு உபதேசம் கிடைக்கும். சிஷ்யர்கள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த உபதேசங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு சரிபார்த்துக் கொள்வது சரியில்லையென்றும் சொல்வார்கள். ஆகையால் ஒவ்வொருவனுக்கும் அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற உபதேசமே பிரயோஜனமுள்ளதென்றும் எல்லோருக்கும் பொதுவாக உபயோகப்படக் கூடிய உபதேசம் யாதொன்றும் கிடையாதென்றும் அவர்களின் அபிப்பிராயம். இதே காரணத்தினுல் மத விஷயமாக பொதுஜனங்களை உத்தேசித்து உபந்யாஸம் செய்வது என்பதில் அவர்களுக்கு ஒருநாளும் திருப்தி கிடையாது. அதிலிருந்து சொல்லுகிறவருக்காவது கேட்கிறவர்களுக்காவது எவ்வித பிரயோஜனமும் கிடையாது என்பதே அவர்களின் தீர்மானம்.

''பொய் சொல்லக் கூடாது என்று யாருக்கும் தெரியும், ஆனுல் பொய் சொல்வதை நிறுத்தத் தயாரில்லை. அவரவர்களுக்கு ஏற்பட்ட ஸுலபமான ஸந்தியாவந்தனுதிகளான நித்ய கர்மாக்களைக்கூட அநுஷ்டிக்க ஜனங்கள் தயாரில்லை. அப்படியிருக்க பிரஹ்மத்தைப்

பற்றி விசாரம் எதற்கு? பகவானுடைய பாதஸேவையாகிய கர்ம மார்க்கத்தை நாம் கொஞ்சமேனும் அநுஷ்டிக்காமலே இருந்து கொண்டு அவர் நெற்றியில் விபூதியா நாமமா என்ற விசாரணை நமக்கு எதற்கு? அவர் பெயர் சிவனு நாராயணனு என்பதைப் பற்றி நாம் எதற்கு வியவஹாரம் செய்துகொள்ள வேண்டும்? தர்ம மார்க்கம் விசாலமாயிருக்கிறது. அனைவர்களும் குலாசாரப்படி ஸம்பிரதாயப்படி தர்மங்களை அனுஷ்டித்து பகவானை ஆராதிப்போம். அவரவர்கள் அதிகாரத்திற்குத் தக்கபடி கொஞ்சம் கொஞ்சமாக மேலான படிக்குப் போய்ச் சேருவோம். அந்நிலையிலிருந்து பகவானுடைய முகாரவிந்தத்தை நேரில் தரிசனம் செய்யும்படிக்கான பாக்கியத்தை அடைவோம். அப்பொழுது நன்ருய் உற்றுப்பார்த்து அவர் நெற்றியில் விபூதியா நாமமா என்று தீர்மானித்துக் கொள்ளலாமே? இப்பொழுது நாம் இருக்கும் ஸ்திதியில் இந்த வியவஹாரம் எதற்கு?'' என்பார்கள்.

யாரோ ஒருவர் அத்வைத ஸித்தாந்தத்தை தூஷித்துவிட்டாரென்று ரோஷம் கொண்டு ஒரு சிஷ்யர் அந்த தூஷணைகளைக் கண்டித்து ஒரு கிரந்தம் எழுதிக்கொண்டு வந்து ஸ்ரீமத் ஆசார்யாரவர்களிடம் காட்டிப் பிரசுரம் செய்ய அனுமதி பெறுவதற்காக வந்தார். அவர்கள் ''இதுமாதிரி கிரந்த ரசனையினுல் ஏதேனும் புருஷார்த்தம் கிட்டுமா? ஏன் வீணுக உங்கள் சக்தியையும் காலத்தையும் செலவிடுகிறீர்கள்? எல்லா விஷயங்களிலும் ராகத்வேஷத்தை விடும்படியல்லவா நம் ஸித்தாந்தம் கூறுகிறது. அப்படியிருக்க நம் ஸித்தாந்தத்தையே ராகத்திற்கும் த்வேஷத்திற்கும் விஷயமாக்கிக் கொள்ளலாமா?'' என்று கேட்டார்கள். அவர்கள் தர்க்க வேதாந்த சாஸ்திரங்களிலுள்ள நுட்பங்களை நன்கு அறிந்து, தாமே சாஸ்திரார்த்த வியவஹாரங்களில் நிகரற்றவராயிருந்த போதிலும், தத்துவ நிச்சயத்திற்குப் பிரயோஜனப்படாமல் வீண் வியவஹாரம் செய்வது நிஷ்பிரயோஜனம் என்பதும், மேலும் த்வேஷத்திற்கே காரணமாகுமென்பதும், அவர்களின் அபிப்பிராயம். ஆகையால் அவர்களுடைய உபதேசங்கள் எல்லாம் ஸாமான்ய ரீதியிலேயே இருக்கும்.

''ஈசுவரன் ஒருவன் உண்டென்பதை மறவாதீர்கள். இதைப்பற்றி எங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமா? எங்களுக்கு இதுகூடத் தெரியாதா? என்று உங்களுக்குத் தோன்றலாம். ஆனுல் வாஸ்தவத்தில் ஈசுவரன் ஒருவர்

இருக்கிருரென்பதை நீங்கள் உணர்ந்திருக்கும் விஷயத்தில் ஊர் ஊராக நியாய ஸ்தலங்கள் எதற்கு? ஒவ்வொரு லௌகிக நடவடிக்கைகளுக்கும் இவ்வளவு காகிதச் செலவு எதற்கு? பத்திரங்கள் பதிவு செய்வதற்கு இத்தனே அதிகாரிகள் எதற்கு? பத்திரங்களில் சாக்ஷிகளின் கையெழுத்து எதற்கு? இவ்விதமாக ஒவ்வொரு கார்யத்தையும் கவனிக்கும்போது ஈசுவரன் ஒருவர் இருக்கிருரென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களென்று நினைக்க இடமேயில்லை. ஈசுவரன் ஒருவர் ஸர்வ ஸாக்ஷியாக இருக்கிருரென்பதை சுத்தமாக மறந்தேயிருக்கிறீர்கள். ஈசுவரன் ஒருவர் இல்லையென்று தீர்மானித்துக்கொண்டே நடந்து வருகிறீர்களென்றே சொல்லலாம். ஆகையால் இவ்விஷயம் உங்களுக்கு சிறியதாகத் தோன்றினுலும் அவசியம் எடுத்துச் சொல்லவேண்டிய விஷயமே.''

''இப்பொழுது அநுபவிக்கும் ஸுக துக்கங்கள் முன் செய்த கர்மவசத்தினுல்தான் ஏற்படுகின்றன என்கிற நம் ஸித்தாந்தத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்ம பலனுன துக்கமானது உங்களுடைய பிரயத்தினத்தையாவது விருப்பத்தையாவது கொஞ்சமேனும் எதிர்பாராமல் தானுகவே ஏற்படவில்லையா? அப்படியிருக்க, அதேமாதிரி கர்ம பலனுயிருக்கிற ஸுகமும் உங்களுடைய பிரயத்தினத்தையும் விருப்பத்தையும் எதிர்பாராமல் வந்துதானே தீரும்? ஸுகத்திற்காக ஏன் வீணுக ஆசையை ஏற்படுத்திக் கொள்கிறீர்கள்? அதற்காக ஏன் வீணுகப் பிரயத்தினம் செய்கிறீர்கள்? பூர்வ கர்மாவினுல் நீங்கள் ஸுகம் ஸம்பாதித்திருக்கும் விஷயத்தில் அது தானுகவே வந்துதானே தீரும்? அவ்விதம் ஸம்பாதிக்காமலிருக்கும் விஷயத்தில் நீங்கள் என்ன ஆசைப்பட்டாலும் பிரயத்தினப்பட்டாலும்கூட உங்களுக்கு அந்த ஸுகம் கிடைக்குமா? அப்படியிருக்க வீணுக ஏன் உங்கள் காலத்தையும் பலத்தையும் செலவழிக்கிறீர்கள்? புண்யத்தை ஸம்பாதிப்பதில் செலவழியுங்கள்; ஸுகம் தானுகவே வரும். விஷய ஸுகம் சாசுவதமில்லை. துக்கத்திலும் கொண்டுபோய் விடும். ஆகையால் சாசுவதமானஆத்ம ஸுகத்தையே அடைய பிரயத்தினம் செய்யுங்கள். இப்பொழுது இருக்கிற ஸ்திதியில் நீங்கள் இன்னொரு ஜன்மம் எடுக்கும்படி ஏற்பட்டால், இப்பொழுது ஸத்கதிக்கு ஸாதகமாக உங்களுக்குக் கிடைத்திருக்கிற ஸௌகர்யங்கள் அப்பொழுது கிடைக்குமென்பது என்ன நிச்சயம்? வீணுக

காலத்தைக் கழிக்காதீர்கள். நல்ல விஷயத்தில் உபயோகப் படுத்துங்கள். அர்த்தபரராகவிருந்து ஸந்தோஷத்தையும் திருப்தியையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள். கூடிய மட்டும் மனதை சுத்தமாகவும் பற்றற்றதாகவும் வைத்துக்கொள்ள அப்யாஸம் செய்யுங்கள். மனது பரிசுத்தமாவதற்கு ஈசுவராராதன ரூபமாய் நித்ய கர்மாக்களைச் சிரத்தையுடன் செய்துவாருங்கள்'' என்றிவ்வாறு சிரத்தையையும் கர்மானுஷ்டானத்தையுமே வற்புறுத்துவார்கள்.

ஒரு நாள் ஒரு பண்டிதரைப் பார்த்து, ''வழக்கம்போல் பாஷ்யப் பிரவசனம் செய்து வருகிறீர்களா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர் ''தங்கள் அநுக்ரஹத்தினால் தெரிந்தமட்டில் சொல்லி வருகிறேன்'' என்றார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய அடுத்த வார்த்தை ''நித்தியம் அக்நிகார்யங்கள் செய்து வருகிறீர்களென்று நம்புகிறேன்'' என்பது பண்டிதரை நடுங்கச் செய்தது. அவர் கொஞ்சம் தயங்கி ''செய்யவில்லை'' என்று சொல்லிவிட்டு, அதற்கு ஸமாதானம் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்துடன் ''நான் ஒரு பெரிய பட்டணத்திலிருப்பதால் அங்கு முட்டானுக்கு (வறட்டி) வேண்டிய கோமயம் கிடைப்பதில்லை'' என்று சேர்த்துச் சொன்னார். உடனே ஆசார்யாரவர்கள் கொஞ்சம் கடுமையுடன், ''உங்கள் ஊரில் பசுமாடுகள் காப்பிக்குப் பால் மாத்திரம் கொடுக்கின்றன, ஔபாஸனத்திற்கு வேண்டிய முட்டான் தயாரிக்க கோமயம் (சாணம்) மாத்திரம் கொடுப்பதில்லையோ?'' என்றார்கள்.

அவர்களுடன் கொஞ்சநேரம் இருந்தாலே கர்மானுஷ்டானத்தில் சிரத்தையும் பகவானிடத்தில் பக்தியும் தானாகவே ஏற்படும். அவர்களுடன் ஸல்லாபம் செய்வதும், அவர்களுடன் மற்றவர்கள் ஸல்லாபம் செய்யும்போது கூடவிருந்து கவனிப்பதுமே, விசேஷமான ஆனந்தத்தையும் நன்மையையும் தரும். ஸாமான்ய விஷயங்களிலிருந்து மேலான தத்துவங்களை அவர்கள் போதிக்கும் முறை நிகரற்றது. அவர்களுடைய ஸம்பாஷணை ரீதியைக் காட்டக்கூடிய சில உதாஹரணங்கள் ''தேன் மொழிகள்'' (English : "Dialogues with the Guru") என்ற புஸ்தகத்தில் காணலாம். அவர்கள் இயற்றியிருக்கும் ஸ்தோத்திரங்களில் குருபக்தி, ஈசுவர பக்தி, ஸ்வானுபவம் எல்லாம் ததும்பி நிற்கும்.

6. அதீத நிலை

ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் ஸ்வபாவமாகவே ஏகாந்த வாஸத்தில் ருசியுள்ளவர்கள். தக்ஷிண தேசத்தில் நான்கு வருஷம் ஸஞ்சாரம் செய்து விட்டு சிருங்கேரிக்குத் திரும்பி வந்ததுமுதல் தபஸ்ஸிலேயே அதிககாலம் செலவழிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஸாதாரண ஜனங்களுடன் ஸல்லாபம் செய்வதைக் குறைத்துக் கொண்டார்கள். ஸ்ரீமடம் கார்யங்களில் முன் எடுத்துக் கொண்டிருந்த ஸ்வல்ப அக்கறையைக்கூட எடுத்துக் கொள்வதை நிறுத்திவிட்டார்கள். பற்றற்ற நிலை நாளுக்கு நாள் விருத்தியாய்க் கொண்டு வந்தது. உலக வியாபாரங்களை மறந்திருக்கும் காலம் அதிகமாகிக் கொண்டிருந்தது. இப்படியே இவர் இருந்துவிடும் பக்ஷத்தில் அதனால் ஸ்ரீமடம் கார்யங்களில் இடையூறு ஏற்படக்கூடும் என்று அநேகர் நினைக்க இடம் கொடுத்தது. தனக்குப் பின் இந்த ஸ்தானத்தை வஹிக்க ஒருவரை ஏற்படுத்துவது உசிதமென்று ஆசார்யாரவர்கள் நினைத்து, பெங்களூர் ஸ்ரீராமசாஸ்திரிகளுடைய ஜ்யேஷ்ட குமாரரான ஸ்ரீ. ஸ்ரீநிவாஸன் என்ற பாலகருக்குக் கிரமப்படி 1931 மே 22 ல் ஸந்யாஸம் கொடுத்து ''ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்'' என்ற யோகப்பட்டத்துடன் அபிஷேகம் செய்து வைத்தார்கள். அதற்கு முன் நாற்பது வருஷங்களுக்கு மேலாக மிகவும் ஊக்கத்துடனும் வல்லமையுடனும் பக்தியுடனும் ஸ்ரீமடத்தில் ஸர்வாதிகாரி ஸ்தானம் வஹித்துவந்த ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் தன் வயதை உத்தேசித்து இந்த ஸமயத்தில் உத்யோகத்திலிருந்து விலகிக் கொண்டார். ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் சின்ன ஸ்வாமிகளுடைய தினசர்யையிலும் (நித்திய கார்யம்) வித்யாப்யாஸத்திலும் மிகவும் அக்கறை யெடுத்துக் கொண்டு தகப்பனார் மாதிரி கவனித்துக்கொண்டு வந்தார்கள். அநேகம் ஸமயங்களில் தாமே பாடம் சொல்லியும் வந்தார்கள். காலக்கிரமத்தில் இதுவும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது.

அவசியமான நித்யாஹ்நிகம், பூஜை இவைகளுக்கு உபயோகப்படுகிற காலங்களைத் தவிர மற்ற ஸமயங்களில் தனித்திருக்கவே பிரியப்பட்டார்கள். பூஜாதிகளும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து அநேகமாய் ஏகாந்தத்திலிருந்து ஆத்ம நிஷ்டையிலேயே இருக்க ஆரம்பித்தார்கள். இந்த ஸமயத்தில் ஸ்ரீமடம் நிர்வாகப் பொறுப்பை மைசூர் மஹாராஜாவின் ஸர்க்காரே தாற்காலிகமாக ஏற்று நடத்த ஆரம்பித்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் பேசுவதையும் மிகவும் குறைத்துக் கொண்டார்கள். தரிசனம் கொடுப்பதும் குறைந்தது. தரிசனம் கொடுத்தாலும் ஒரு வார்த்தை அல்லது ஒரு ஜாடை அல்லது ஒரு புன்சிரிப்பு இவைகளைத் தவிர வேறு ஸல்லாபத்திற்கு இடமில்லாமலே மறைந்துவிடுவார்கள். உலகப் பார்வையிலிருந்து உள்ளம் அடங்கி அவர்கள் அனுபவிக்கும் நிலைமையைப் பற்றி மற்றவர்கள் அறிவதாவது வர்ணிப்பதாவது ஸாத்தியமில்லை. சில பக்தர்கள் இவர்களுக்கு ஏதோ அவஸ்தையிருப்பதாக நினைத்து 'ஸ்வஸ்தம்' பண்ணப் (சரிப்படுத்த) பிரயத்தினப்பட்டிருக்கிறார்கள். அப்படியே சிலர் 'இவர்கள் ஒருநாளும் ஸ்வஸ்தராக மாட்டார்கள்' என்று சொல்லி முடித்தவுடனேயே பஹிர்முகமாகி விட்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய விலக்ஷணமான அநுபவ நிலையில் அவர்கள் தேசகாலங்களுக்கு அதீதமாகவே இருந்ததாகத் தெரிகிறது. ஒன்று இரண்டு ஸம்பவங்களை மாத்திரம் இங்கு உதாஹரிக்கிறேன்.

ஓர் ஊரில் இரண்டு ஸஹோதரர்கள் இருந்தார்கள். பெயர் பிரகிருதமில்லாததினால் ராமன் லக்ஷ்மணன் என்று வைத்துக் கொள்வோம். தம்பியாகிய லக்ஷ்மணன் மிகவும் ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்டிருந்த ஸமயத்தில், அவனுக்கு சீக்கிரம் குணமாக ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய அநுக்ரஹத்தை வேண்டிக்கொண்டு தமையனாரான ராமன் ஸ்ரீமடத்திற்குத் தந்தி கொடுத்தார். அந்தத் தந்தியை வாங்கின அதிகாரி ''இதுமாதிரி விஷயங்களில் ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அக்கறை எடுத்துக் கொள்ளவா போகிறார்கள்? அவர்தான் உலகத்தை மறந்திருக்கிறாரே!'' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். கொஞ்சநேரம் கழித்து அவர் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்யப் போகும் ஸமயத்தில் ஸந்தர்ப்பம் கிடைத்தால் சொல்லலாமென்று நினைத்து இத்தந்தியையும் எடுத்துக்கொண்டு போனார். அவ்விடம் போய்ச் சேர்ந்ததும் ஆசார்யாரவர்கள்,

''கையில் என்ன?'' என்று கேட்டார்கள்.

''தன் தமையன் ராமன் ஜ்வரத்தினுல் சிரமப்படுவதாக லக்ஷ்மணன் தந்தி கொடுத்திருக்கிருன்'' என்று அதிகாரி சொன்னுர். உடனே ஆசார்யாரவர்கள்,

''தம்பி லக்ஷ்மணனுக்கு உடம்பு சரியில்லையென்று ராமன் தந்தி கொடுத்திருக்கிருன் என்று சொல்லுங்கள்'' என்ருர்கள். உடனே அதிகாரி தந்தியை எடுத்துப் பார்க்க ஆசார்யார் சொன்னதே சரியாகவிருக்கக் கண்டு,

''மன்னிக்க வேண்டும். நான்தான் தவறுதலாய்ச் சொல்லியிருக்கிறேன். சரியானபடி ஞாபகம் வைத்துக் கொள்ளாமல் மறந்துவிட்டேன்'' என்ருர். ஆசார்யார் புன்சிரிப்புடன்,

''உலகத்தை நான் மறக்கலாம். நீங்கள் மறக்கலாமா?'' என்று கேட்டார்கள். அவ்வதிகாரி காலையில் தன் மனதிற்குள் சொல்லிக்கொண்ட வார்த்தைகளையே ஆசார்யார் பிரயோகம் பண்ணினதைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தார்.

ஆசார்யாரவர்கள் ஸாதாரணமாக துங்கா நதிக்குத் தென்புறமுள்ள நரஸிம்ஹவனம் ஆசிரமத்திலேயே வாஸம் செய்வது வழக்கம். வடகரையில் பழைய மடத்துக் கட்டிடங்களும், ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயமும், சிருங்கேரி ஊரும் இருந்து வருகின்றன. ஊர் மத்தியில் அக்கிரஹாரத்தில் ஸ்ரீமடம் அதிகாரிகள் வாஸம் செய்வார்கள். அதற்கும் ஆசார்யார் இருப்பிடத்திற்கும் சுமார் அரை மைல் இருக்கும். மத்தியில் நதியுமுண்டு. ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் அந்தர்முகமாக இருந்த ஸமயம் ஒரு நாள் நடுராத்திரியில் தன்னிடமிருந்த வேலைக்காரனைக் கூப்பிட்டு ''அக்கரையில் அக்ரஹாரத்தில் இன்ஞர் கீழே விழுந்து விட்டார், உடனே போய்ப் பார்த்துவா''என்று சொன்ஞர்கள். அர்த்தராத்திரியில் இவ்விதம் ஆக்ஞை கொடுத்ததினுல் வேலைக்காரன் கொஞ்சம் தயங்கி நகர்ந்து நின்றுகொண்டான். சில க்ஷணங்கள் கழித்து அறையிலிருந்த படியே ஆசார்யாரவர்கள் ''போஞயா?'' என்று கேட்டார்கள். இனிமேல் அவர்களுடைய அதிருப்தியேற் படுமென்று பயந்த வேலைக்காரன் அவர்கள் குறிப்பிட்ட

அதிகாரியின் வீடு வந்து சேர்ந்தான். வீட்டு வாசற்கதவு உள்தாழ்ப்பாளிடப்பட்டிருந்தது. எல்லாம் நிச்சப்தமாக இருக்கக் கண்டான். ஆனுல் திரும்பிப்போனுல் அவ்வதிகாரியைப் பார்த்தாயாவென்று கேட்டால் என்ன பதில் சொல்லுகிறதென்று பயந்து கதவைத் தட்டினுன். அவ்வதிகாரியே கதவைத் திறந்துகொண்டு வெளியில் வந்து பார்க்க ஆசார்யாரின் வேலைக்காரன் நிற்பதைக் கண்டார். நிசிவேளையில் வந்ததால் ஆசார்யாருக்கு ஏதேனும் அஸௌகர்யமோவென்று கவலையுற்று வினவினுர். அவன் நடந்ததைச் சொன்னுன். அதன்பேரில் அவ்வதிகாரி ''வாஸ்தவம். சில நிமிஷங்களுக்கு முன் ஜலமோசனத்திற்காக வாசல் பக்கம் வந்து கைகால் அலம்பிவிட்டுத் திரும்பும்போது கல் படியில் வழுக்கிக் கீழே விழுந்துவிட்டேன். இரண்டு நிமிஷம் பிரக்ஞையில்லாமலிருந்து மறுபடியும் தன் நினைவு வந்தவுடன் தெருவிலாவது வீட்டிலாவது யாருக்கும் தெரியவிடமின்றி ஓசைப்படாமல் வீட்டிற்குள் வந்து படுத்துக்கொண்டு விட்டேன். இதை ஆசார்யார் எப்படி அறிந்தார்களோ தெரியவில்லை. எப்படியும் அவர்கள் என் விஷயத்தில் வைத்திருக்கும் கருணைக்கு மிகவும் நன்றியுள்ளவனுக இருப்பேன். நான் ஸ்வஸ்தமாக இருப்பதாக அவர்களிடம் சொல்லிவிடு'' என்று சொன்னுர். இந்த ஸம்பவத்தைப் பற்றி அவ்வதிகாரி பின்னுல் சொல்லும்போது ''இந்தக் கடைசி வாக்கியம் நான் சொன்னவுடன் என் அசட்டுத்தனத்தை நானே உணர்ந்து கொண்டேன். நான் விழுந்ததை அறிந்த ஆசார்யாரவர்களுக்கு நான் எழுந்திருந்து ஸ்வஸ்தமாயிருக்கிறேனென்பது நான் சொல்லியா தெரிய வேண்டும்? '' என்ருர்.

1938 ல் சில பக்தர்கள் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை பெங்களூருக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அவர்களும் கருணையுடன் ஸம்மதித்தார்கள். ஆனுல் வழக்கமாயுள்ள ஆடம்பரத்துடன் வரப் பிரியப்படாமல் ஸ்வல்ப பரிவாரத்துடன் புறப்பட்டு பெங்களூர் வந்து சில மாஸங்கள் தாமதித்தார்கள். பூர்வாசார்யாரவர்கள் காலடி யாத்திரை ஸமயம் பெங்களூரில் ஸ்ரீ சங்கர மடம் கட்டுவித்து அதன் முன் பக்கம் வலப் பக்கத்தில் ஆதிசங்கரபகவத்பாதாசார்யார் அவர்களுக்கு ஓர் ஆலயம் ஏற்படுத்திக் கும்பாபிஷேகம்

செய்திருந்தார்கள். இப்பொழுது அவ்வாலயத்திற்கு நேர் எதிரில் அதாவது ஸ்ரீ சங்கரமடத்தின் முன் பக்கம் இடதுபக்கத்தில் ஸ்ரீ சாரதாம்பாளுக்கு அதே மாதிரி ஓர் ஆலயம் நிர்மாணம் செய்து ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள். பெங்களூரிலிருந்து கோயமுத்தூர் மார்க்கமாய் காலடிக்குப் போய் அங்கு சுமார் பத்து மாஸ காலம் தாமதித்தார்கள். தென்தேசத்திய சிஷ்யர்களுக்கு அவர்களை மறுபடியும் ஸுலபமாய் தரிசிக்கும்படியான பாக்கியம் கிடைத்தது. காலடியில் தாமதிக்கும்வரை வேண்டிய ஸௌகர்யங்களை திருவனந்தபுரம் மஹாராஜா அவர்களே செய்து கொடுத்தார்கள். முன் யாத்திரை மாதிரி ஏராளமான ஜனங்கள் தரிசனத்திற்கு வந்தார்கள். மறுபடியும் ஏகாந்த வாஸத்திலேயே நோக்கம் இருந்தபடியாலும், சிருங்கேரியில் சின்ன ஸ்வாமிகள் (ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்தர்) அவர்கள் ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபடியாலும் 1940ம் வருஷ ஆரம்பத்தில் சிருங்கேரிக்கே திரும்பிவிட்டார்கள்.

7. ஆத்ம நிஷ்டை

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுக்கு ஸ்வபாவமாகவும் பால்யம் முதல் பழக்கத்தினுலும் ஆடம்பரத்திலாவது வீண் பேச்சிலாவது எப்பொழுதும் ருசி கிடையாது. அனுவசியமாய் ஒரு கார்யமுமில்லாமல் வெறும் குதூஹலத்துடன் வருபவர்களிடம் ஸல்லாபம் செய்வதை விரும்புவதில்லை. ஆனுல் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமென்ற தீவிரமான எண்ணத்துடன் அதற்குத் தகுந்த ஸாதனம் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற சிரத்தையுடன் தம்மை அண்டுபவர்களுக்கு எப்பொழுதும் கருணையுடன் இடம் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய உபதேசாதிகளைச் செய்து வழிகாட்டியாயிருந்து அவர்களை கிருதார்த்தர்களாகச் செய்ய எப்பொழுதும் ஸித்தமாயிருந்தார்கள். அப்படியிருந்தும் அத்யாத்ம சிரேயஸ்ஸை கருதி அவர்களிடம் நெருங்குபவர்கள் அநேகமாய் இல்லை என்றே சொல்ல வேண்டும். தங்களுக்கு ஏதேனும் வியாதி முதலான தொந்தரவுகள் இருந்தால் சிருங்கேரி போவார்கள். இல்லையானுல் வேடிக்கையாய் அங்குள்ள விசித்திர அழகுகளைப் பார்க்கப் போவார்கள். அந்தக் காக்ஷிகளின் மத்தியில் ஆசார்யாரையும் சேர்த்துப் பார்ப்பார்கள். அப்பேர்ப்பட்டவர்களிடம் பேசிக் கொண்டிருப்பது வீண் ஆயுஸ்க்ஷயம் என்றே ஆசார்யாரின் எண்ணம்.

ஒரு நாள் கொஞ்சம் சிரமப்பட்டு ஆசார்யாரவர்களை தனித்து தரிசனம் செய்ய அனுமதி பெற்று பேசிக் கொண்டிருக்கையில், ''சிருங்கேரிக்கு வரும் அநேக சிஷ்யர்களுக்கு தங்களை நேரில் தரிசித்து உபதேசமோ ஆசீர்வாதமோ தைர்யமோ பெற்றுப் போக இடமில்லாமல் போவதில் அவர்கள் வருத்தமடைகிருர்கள். அவர்களுக்கு கொஞ்சம் இடம் கொடுத்து அனுக்ரஹித்தால் நல்லது'' என்று நான் சொல்லும்படி ஏற்பட்டது. ஸ்ரீமத்

ஆசார்யார் ''அது ஸரியல்ல. என்னுடன் பேச வருகிறவர்களுக்கு எவ்விஷயங்களில் ருசியோ அவைகளில் எனக்கு ருசி இல்லை. எனக்கு ருசியிருக்கும் விஷயத்தில் அவர்களுக்கு ருசி இல்லை. அவர்களுக்கு பேட்டி கொடுப்பதில் யாருக்கு என்ன பிரயோஜனம்?'' என்ருர்கள். அதற்கு நான் ''அது வாஸ்தவமாயிருக்கலாம். இருந்தாலும் சிலர்களாவது தங்களுடைய ஸத்கதிக்கு தங்கள் ஸஹாயத்தைத் தேடி வருவார்கள்'' என்றேன். ''என் ஸஹாயத்தையா தேடி வருகிருர்கள்? இருக்கலாம். ஆனுல் அவர்களுடைய வியாதிகளையும் மனக்கவலையையும் நிவர்த்தி செய்து கொடுக்கவல்லவா என்னிடம் வருகிருர்கள். என்னை வைத்தியராகவும் மாந்திரிகராகவும் அல்லவா நினைத்து என் ஸஹாயத்தைத் தேடுகிருர்கள்? இதற்காகவா ஸ்ரீமத் பகவத்பாதாள் இந்தப் பீடத்தை ஏற்படுத்தினுர்கள்?'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் கேட்க, நான் ''அத்யாத்ம சிரேயஸ்ஸை உத்தேசித்தும் சிலர்கள் வருவதுண்டு. அவர்களுக்கும் தங்களை தரிசிக்க அவகாசமில்லாமல் போய் விடுகிறது'' என்றேன்.அதற்கும் அவர்கள் ''அப்படி வாஸ்தவமாக தீவிரமாக அத்யாத்ம விஷயமாக என் ஸஹாயத்தை அபேக்ஷிக்கிறதாயிருந்தால் நான் இடம் கொடுக்கவில்லை யென்றிருந்தாலும் முண்டிக்கொண்டு என்னிடம் வந்து விடுவார்கள்'' என்று சொல்லிவிட்டுப் புன்சிரிப்புடன் ''நீ இப்பொழுது செய்திருக்கிற மாதிரி'' என்று சேர்த்தார்கள். இதற்குமேல் நான் சொல்வது உசிதமில்லையென்று நிறுத்திக் கொண்டேன். அவர்களுடைய மனுேபாவத்திற்கும் ஸாமான்ய ஜனங்களின் மனுேபாவத்திற்கும் வித்யாஸம் வெகு ஜாஸ்தியாயிருப்பதால் அவர்களுடைய நிலையைக் கலைக்க யத்தனிப்பதே அபசாரமாகும்.

ஒரு ஸமயம் அவர்கள் தனித்து ஏகாந்தமாய் உட்கார்ந்திருந்த ஸமயம் நான் அவர்களிடம் போகும்படி ஸம்பவித்தது. என்னை உட்காரும்படி ஸம்ஞை காட்டிவிட்டு மௌனமாகவே சுமார் இருபது நிமிஷம்வரை இருந்துவிட்டார்கள். அந்த ஸமயம் நான் அடைந்த மனஸ் சாந்தியையும் ஆனந்தத்தையும் வர்ணிக்க முடியாது. பிறகு அவர்கள் முகத்தில் லேசாக புன்சிரிப்பு உலாவுவதுபோல் தோன்றினதினுல் நிமிர்ந்து பார்த்தேன். அவர்கள் ''சொல்லட்டுமா?'' என்று கேட்டார்கள். ''யுக்தம்போல் செய்கிறது'' என்றேன். பிறகு அவர்கள்,

''நான் ஆனந்தமாய் இருந்துவரும்போது ஒரு மனோவிருத்தி ஏற்பட்டு அதைக் கலைத்தது. நீ ஸமீபத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பதால் என்னை பேச வேண்டுமென்று எதிர்பார்க்கிறாயோ என்று தோன்றிற்று. நீ எதிர்ப்பார்ப்பதை நிறைவேற்றுவதானால் பேசவேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்தேன். ஆனால் பேசுகிறது என்ற வினைச்சொல் ஒரு விஷயத்தை அபேக்ஷிக்குமே என்ற ஞாபகம் வந்தது. ஆகையால் பேசவேண்டுமானால் விஷயத்தையல்லவா முதலில் தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றிற்று. ஜகத்திலுள்ள விஷயங்கள் எல்லாம் இரண்டு பிரிவுகளுக்குள் அடங்கிவிடும் என்பது ஞாபகத்திற்கு வந்தது. ஒன்று ஸத், மற்றொன்று அஸத். ஸத் என்பது பிரஹ்மம். அஸத் என்பது நாமரூப பிரபஞ்சம். இவ்விரண்டிற்குள் ஒன்றைப்பற்றித்தான் பேசவேண்டும். ஆனால் ஸத்தான பிரஹ்மம் என்பது வாக்குக்கும் மனதுக்கும் எட்டக்கூடியதில்லையென்று வேதாந்தம் ஸந்தேஹத்திற்கு இடமன்னியில் சொல்வதால் பிரஹ்மத்தைப் பற்றிப் பேசுவது ஸாத்தியமில்லை. மற்றொன்றாகிய அஸத்தான பிரபஞ்சத்தைப் பற்றித்தான் பேசவேண்டும். ஆனால் பிரபஞ்ச விஷயமாகவும் வேதாந்தம் சொல்லும்போது அது அநிர்வசநீயம், அதாவது எப்படியென்று வாக்கினால் எடுத்துச் சொல்லக்கூடியதில்லை என்பதையும் வற்புறுத்தியிருப்பதால் அதுவும் பேச்சுக்கு விஷயமாகாதல்லவா. பேச்சுக்கு விஷயமாகக் கூடியதாக மூன்றாவது பதார்த்தமோ இல்லை. ஆகையால் பேச்சுக்கு யாதொன்றும் விஷயமே இல்லை என்று ஏற்பட்டது. விஷயமில்லாததால் பேச்சுக்கு இடமில்லை என்ற முடிவுக்கு வந்தவுடன் இந்த முடிவுக்கு வர இவ்வளவு மனோவிருத்திகளுக்கு இடம் கொடுத்திருப்பது அனாவசியமில்லையா என்று தோன்றிற்று. ஒரு வண்டிக்காரன் சுங்கான் (வரி) கொடுக்காமலிருக்கக் கருதி ராத்திரி பூராவும் வண்டியை மூலை முடுக்குகள் வழியாய் ஓட்டிக் கொண்டுபோய் பொழுது விடிகிற சமயத்தில் சுங்கான் கட்டிடத்தின் வாசலில் வந்துசேர்ந்தான் என்று சொல்வார்கள். இது ஞாபகத்திற்கு வர கொஞ்சம் சிரிப்பு வந்திருக்கும். நீ நிமிர்ந்து பார்த்தாய்'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் மௌன நிலையில் இருந்துவிட்டார்கள். கிரந்தங்களின் மூலமாய் அறியக்கூடியவைகளைவிட ஜாஸ்தியான விஷயங்கள் இவ்வார்த்தையில் அடங்கி இருக்கவில்லையா?

இதைக் கேட்டவுடன் எனக்கே தன்னைத் தெரியாமல் ஸ்ரீமத் ஆசார்யார் பேசினால் நல்லதென்றுஎண்ணியிருப்பேனோ என்று ஸந்தேகம் ஏற்பட்டது. ஆத்ம நிஷ்டையில் ஆனந்தமாயிருந்த அவர்களை நான் போய் உட்கார்ந்தபடியால் அல்லவா பஹிர்முகமாகச் செய்தேன். அது அபசாரம் இல்லையா? என்று தோன்றி உடனே நமஸ்கரித்து விடைபெற்றுச் சென்றேன்.

ஆசார்யாரிடம் நாம் வைத்திருக்கும் பக்தியால் அவர்களை நம் நிலைக்கு இறக்குவதில் பிரவிருத்திக்கக் கூடாதென்பதை நாம் அநேகமாக உணர்கிறதில்லை. அவர்கள் வாயைத் திறந்து பேசி அனுக்ரஹமோ உபதேசமோ செய்ய வேண்டுமென்பதில்லை. அவர்களுடைய ஸந்நிதி விசேஷத்தினாலேயே ஆனந்தமும் சாந்தியும் ஏற்படுமென்பதில் ஸந்தேகமில்லை.

கீதையில் ஞானியைப் பற்றி பகவான் சொல்லும்போது ''இதர பிராணிகளுக்கெல்லாம் எது இரவோ அதில் ஞானி விழித்துக் கொண்டிருக்கிறான்; அவர்கள் எதில் விழித்துக் கொண்டிருக் கிறார்களோ அது அவனுக்கு இரவு ஆகும்'' (II.69) என்று கூறியிருப்பதால் நம் நிலையைக்கொண்டு ஸ்ரீமத் ஆசார்யாரின் அனுபவத்தைத் தீர்மானிப்பது அர்த்தமற்ற கார்யமாகும். நம்முடைய கீழ்ப்பட்ட லௌகிக திருஷ்டியில் பார்த்தால் அவருடைய சர்யை (கார்யம்) விலக்ஷணமாகத் தோன்றும். புத்திப்ரமம் இருக்குமோ என்றுகூடத் தோன்றும். ஸ்ரீ ஹஸ்தாமலகாசார்யார் வெளிப் பார்வைக்கு வெறும் ஜடர் போலவே தோன்றவில்லையா? ஸ்ரீமத் பகவத்பாதாள் ''நீ யார்?'' என்று கேள்வி கேட்டபிறகல்லவா அவர் ஆத்ம நிஷ்டர் என்பது வெளியாகியது? அவரை சிஷ்யராக அங்கீகரித்த பிற்பாடுகூட அவருடைய யோக்கியதையை மற்ற சிஷ்யர்கள் அறியாமலிருந்தார்கள். ஆசார்யாரவர்களின் பிரஹ்மஸூத்ர பாஷ்யத்திற்குக் காரிகை எழுதவேண்டுமென்று பிரஸ்தாபம் வந்த ஸமயத்தில், ''ஹஸ்தாமலகர் எழுதினால் அற்புதமாகத் தானிருக்கும். ஆனால் அவருடைய ஆத்மானுபவ நிலையிலிருந்து கிரந்தம் எழுதக்கூடியபடிக்கு அவரை இறக்குவது சிரமப்படுமே'' என்று ஆசார்யார் சொன்னதிலிருந்து அவர் தன்னைவிட மேல் படியிலிருப்பதாக ஸூசிப்பித்தார். ஸ்ரீ ஸதாசிவபிரஹ்மேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் ஜகத்தை மறந்து பித்துப்பிடித்தவர்போல் காவேரிக் கரையில் ஸஞ்சரிப்பதைப் பார்த்த சில ஜனங்கள்

அவருடைய குருவான ஸ்ரீ பரமசிவேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகளிடம் சென்று தெரிவித்தார்கள். அதற்கு அவர்கள் ''அந்த மாதிரி பைத்தியம் எனக்கு ஏற்படவில்லையே!'' என்று துக்கப்பட்டார்கள். இவ்விதம் முன்னுள்ள அறிஞர்களால் விரும்பப்படும் சர்யை (கார்யம்) ஸாமான்ய ஜனங்களுக்கு விலக்ஷணமாகத் தான் தோன்றும். அதே மார்க்கத்தில் சென்று அவ்வித அனுபவமடைந்தவர்கள்தான் ஸ்ரீமத் ஆசார்யாருடைய தன்மையையும் கார்யங்களையும் வார்த்தைகளையும் சரியாய்ப் புரிந்துகொள்ள முடியும்.

ஸ்ரீமத் ஆசார்யாரின் சர்யை சில ஸமயங்களில் லோக விலக்ஷணமாயிருக்கிறதென்று கேள்விப்பட்ட ஒரு சிஷ்யர் அவர்களுக்கு அந்தக்காலத்தில் சிலர் கல்பிக்கிறபடி புத்திப்ரமம்தானா அல்லது வேறுவிதமான அனுபவமா என்று தெரிந்துகொள்ள ஆவல்கொண்டு ஸ்ரீமத் ஆசார்யாரிடமே கேட்டுவிடலாமென்று தீர்மானித்துக்கொண்டு அவர்களிடம் போய்ச்சேர்ந்தார். நமஸ்கரித்து உட்கார்ந்தவுடன் ஸ்ரீமத் ஆசார்யாரே கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள். ''ஒரு அறையில் பத்துபேர்கள் இருக்கும் ஸமயம் அவர்களில் ஒன்பது பேர்களுக்கு தட்டுப்படாத ஒரு விஷயம் பத்தாவது நபரின் திருஷ்டிக்கு விஷயமானால் அவனை பைத்தியம் என்றுதானே உலகத்தில் சொல்வார்கள்?'' என்றார்கள்.

சிஷ்யர்: அவர் கண்ணுக்கு மாத்திரம் எப்படி தெரியும்?

ஸ்ரீமத் ஆசார்யார்: தெரிகிறதென்று வைத்துக்கொண்டு பதில் சொல்லுங்கள்.

சிஷ்யர்: அப்படியானால் அவர் பைத்தியம்தான். இல்லையானால் அவர் எப்படி பார்க்க முடியும்? பார்ப்பதாக நினைத்துக் கொள்கிறார். அவ்வளவுதான்.

ஸ்ரீமத் ஆசார்யார்: அதாவது தான் பார்த்திருந்தும் மற்றவர்களால் பார்க்க முடியவில்லையென்பதற்காக இவன் பைத்தியம் என்று கூறப்படுகிறான்.

சிஷ்யர்: அப்படியல்ல. வாஸ்தவத்தில் இல்லாத பதார்த்தத்தைப் பார்ப்பதினால் பைத்தியம் என்று சொல்லப்படுகிறான்.

ஸ்ரீமத் ஆசார்யார்: மற்ற ஒன்பது பேர்களின் ரீதியாக இல்லாத பதார்த்தம்?

சிஷ்யர்: அப்படியல்ல. இல்லவே இல்லை என்கிற பதார்த்தம்.

ஸ்ரீமத் ஆசார்யார்: அவனுக்கு இருக்கிறதே?

சிஷ்யர்: அது பைத்தியத்தினுல் அல்லவா இருப்பதாகத் தோன்றுகிறது.

ஸ்ரீமத் ஆசார்யார்: அதாவது அந்த ஒன்பது பேர்களும் தங்கள் திருஷ்டிக்கு தட்டுப்படாத காரணத்தினுல் இல்லையென்று தீர்மானித்திருக்கிற பதார்த்தத்தை இவனுல் பார்க்க முடிகிறது என்பதற்காக இவனுக்கு பைத்தியம் என்று பெயர்?

சிஷ்யர்: அப்படித்தான் ஆகிறது.

ஸ்ரீமத் ஆசார்யார்: அதாவது அவனுடைய பைத்தியம் அல்லது பைத்தியமில்லாத தன்மை அவனுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டு தீர்மானிக்கப்படாமல் அந்த அனுபவமில்லாத மற்றவர்கள் ஜாஸ்தியாயிருக்கும் நிலைமையை வைத்து தீர்மானிக்கப்படுகிறது.

சிஷ்யர்: அப்படியே.

ஸ்ரீமத் ஆசார்யார்: இவ்விதம் அந்த ஜாஸ்தி ஜனங்கள் தங்கள் அனுபவத்திற்கு வராத பதார்த்தம் வாஸ்தவத்தில் கிடையாது என்ற தீர்மானத்திற்கு வந்த பிற்பாடாவது அப்பதார்த்தம் அந்தப் பத்தாவது மனுஷ்யனுடைய திருஷ்டிக்கு விஷய மில்லாமல் போகுமா?

சிஷ்யர்: அதெப்படி? அவனுக்குப் புலப்படத்தான் புலப்படும்.

ஸ்ரீமத் ஆசார்யார்: அப்படியானுல் அத்தனை பேர்களுடைய அபிப்பிராயத்திற்கும் என்ன மதிப்பு? அவ்வபிப்பிராயம் பார்க்கிறவனுடைய

அனுபவத்தை பொறுத்துமில்லை, அவன் பார்ப்பதை தடுக்கவும் யோக்கியதையில்லை. ஆகையால் பைத்தியம் என்பதே ஸாபேக்ஷிகம் (விரும்பப்படுவது) என்று தெரிகிறது. அதாவது தனக்கில்லாத ஓர் அனுபவம் இன்னொருவனுக்கு இருந்தால் அவன் பைத்தியம் என்று ஆகிருன் என்று தெரிகிறது.

தான் கேள்வி கேட்க அவசியமன்னியிலேயே பதில் கிடைத்துவிட்டபடியால் சிஷ்யர் கேட்க வந்த ஸந்தேஹத்தை தெரிவிக்கவேயில்லை.

பகவான் இவ்வுலகத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக அவதரித்த ஸமயம் அவருடைய மஹிமையை அறிந்தவர்கள் வெகு சிலர்களே. அறியாமலிருந்தவர்கள்தான் பெரும்பாலோர். சிலர்கள் தூஷிக்கவும் தலைப் பட்டார்கள். அதேமாதிரி ஸ்ரீமத் ஆசார்யாரின் மஹிமையை நன்கு உணர்ந்து ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலையடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் எல்லா ஜனங்களும் ஸ்ரீமத் ஆசார்யாரை அண்டுவார்கள் என்பது எதிர்ப்பார்க்கக் கூடியதில்லை.

8. ப்ரஹ்மானுபவம்

ஆத்மக்ஞானியும்கூட லோக ஸங்கிரஹத்திற்காகவாவது கர்மாவை அனுஷ்டிக்கவே வேண்டும் என்று கீதாசார்யன் சொல்லியிருப்பதை நமது ஆசார்யார் நன்கு அனுஷ்டித்துக் காட்டிவந்தார். அவர் பஹிர்முகமாயிருக்கும் ஸமயம் நித்ய ஆஹ்நிக கர்மாக்களையும் மூர்த்திகளின் ஆராதனையையும் அவர் வெகு சிரத்தையுடன் நடத்துவார்கள்.

இவருடைய மஹிமையையும் ஆத்ம நிஷ்டையையும் பற்றிக் கேள்விப்பட்டிருந்த ஒரு வங்காள தேசத்திய பிரபு சிருங்கேரி வந்திருந்த ஸமயம் ஆசார்யார் இவ்வளவு தீவிரமாய் ஈடுபடுவதைக் கவனித்து வந்தார். ஆஹ்நிகங்களிலும் ஸ்ரீசக்ர பூஜையிலும் இவர் காட்டிவரும் சிரத்தையை கவனித்தார். ஆசார்யார் எப்பொழுதும் ஸமாதிநிலையிலிருந்து உலகத்தை மறந்து இருப்பாரென்று நினைத்தார் போலும். நிர்குண பரப்ரஹ்மத்தில் லயித்திருப்பார் ஞானி என்று தான் நினைத்ததற்கு விரோதமாக ஆசார்யார் வெளிக்கர்மாவிலும் உபாஸனையிலும் அக்கறை காட்டுவது நியாயமாவென்று ஸந்தேஹித்தார். இதற்குத் தகுந்த ஸமாதானம் தேடியறிய வேண்டுமென்றிருக்கையில் ஸ்ரீமத் ஆசார்யாரிடமே பிரஸ்தாபிக்க ஸந்தர்ப்பம் கிடைத்தது.

பிரபு: வேதாந்தத்தில் சொல்லியபடி ஒருவனுக்கு ஆத்ம ஞானம் ஏற்படுமானால், அவர் கர்மாவிலாவது உபாஸனையிலாவது ஈடுபடுவது நியாயமாகுமா?

ஸ்ரீ.ஆ: அவர் வேறு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறீர்கள்?

இக்கேள்விக்கு எப்படி பதில் சொன்னாலும் தவறுதலாக ஏற்படுமென்று உணர்ந்துகொண்ட அப்பிரபு: அவர் ஏதேனும்

செய்ய வேண்டுமென்று நான் சொல்லவில்லை. என் ஸந்தேஹம் இவ்விதம் ஏற்பட்டது. கர்மாவோ, ஈசுவராராதனமோ, வேதாந்த விசாரமோ எதுவாயிருந்தாலும் கர்த்ருத்வம் அதாவது ''நான் செய்கிறேன்'' என்ற எண்ணம் இருக்க வேண்டுமல்லவா? ஆத்மஞானமென்பதில் ''நான் செய்கிறேன்'' என்ற எண்ணத்திற்கு இடமன்னியில் ''நான் செய்யாதவன்'' அகர்த்தா என்பதல்லவா வேண்டும். இவ்விரண்டு பாவனைகளும் பரஸ்பர விரோதமாய் இருப்பதால் ஸமகாலத்தில் ஒருவரிடம் எப்படி இருக்க முடியும்?

ஸ்ரீஆ: வாஸ்தவம். பரஸ்பர விரோதமாயிருக்கும் இரண்டு அம்சங்கள் ஒரே ஆஸாமியிடத்தில் ஒரே ஸமயத்தில் இருக்க முடியாதுதான். இப்பொழுது, அகர்த்தா என்பது யார்?

பிரபு: ஆத்மாதான் அகர்த்தா.

ஸ்ரீ.ஆ.: ஸரி. நம் ஸித்தாந்தத்தை நன்கு தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது கர்த்தா என்பது யார் என்று சொல்லுங்கள்.

பிரபு: சரீரம், இந்திரியங்கள், மனஸ், புத்தி, இவைகள்தான் கர்த்தாவாகும்.

ஸ்ரீ.ஆ.: ஆத்மா அகர்த்தா, கர்த்தா அனாத்மா, என்றல்லவா ஆகிறது?

பிரபு: ஆம்.

ஸ்ரீ.ஆ.: இப்பொழுது கவனித்துப் பாருங்கள். நியாய விரோதம் எங்கே வருகிறது? கர்த்ருத்வமும் அகர்த்ருத்வமும் பரஸ்பர விரோதமாயிருந்தாலும் ஒரே இடத்தில் இல்லையே?

இவ்வளவு ஸுலபமாக தன் ஸந்தேஹத்தை தெளிய வைத்த ஆசார்யாரிடம் விசேஷ கிருதக்ஞதையும் பக்தியும் இப்பிரபுவுக்கு மேலிட்டது.

ஸ்ரீமத் ஆசார்யார் ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாசார்யாரவர்களுடைய பாஷ்யங்களை பிரவசனம் செய்துகொண்டிருந்த நாட்களில் ஒரு நாள் காலையில் சிஷ்யர்கள் பாஷ்ய பாடத்திற்குக்

காத்துக்கொண்டிருக்கிருர்களென்பதை மறந்து ஸ்ரீசக்ர பூஜையில் ஈடுபட்டிருந்தபடியால் சிஷ்யர்கள் அன்று பாடமில்லாமல் திரும்பிப்போக நேரிட்டது. பூஜையை தரிசித்துக் கொண்டிருந்த நான் இதை கவனித்தவுடன் எனக்குள் ''மூர்த்தியை வைத்துக்கொண்டு புஷ்பங்களை வைத்துக்கொண்டு அர்ச்சனை செய்துவருகிருரே, பாஷ்யத்தில் ஒரு வரியை எடுத்து அதனுடைய அர்த்தபுஷ்டி ஸ்வாரஸ்யத்தை அனுபவித்து பிரவசனம் செய்வதிலுள்ள ஆனந்தத்திற்கு இது எவ்வளவு கீழ்ப்பட்டது?'' என்று எண்ணினேன். பூஜை முடிந்து ஸ்ரீமத் ஆசார்யார் வெளியில் வந்து என்னிடம் பிரஸாதம் கொடுக்கும்போது புன்சிரிப்புடன் ''மித்யா ஜகத் அதிஷ்டாநா (தோற்றமான ஜகத்திற்கு அடிப்படையான தத்துவம்) என்பது அம்பிகையின் நாமாக்களில் ஒன்ருகும். இதைவிடவா பாஷ்யத்தில் இருக்கிறது?'' என்று சொல்லிக்கொண்டே நகர்ந்துவிட்டார்கள். அதாவது, பாஷ்யாதிகளில் சொல்லியிருப்பதெல்லாம் பரோக்ஷ ஞானம்தானே; பக்தி தியானம் மூலமாய்த்தானே அபரோக்ஷஞானம் அடைய வேண்டுமென்று குறிப்பிட்டார் போலும். லலிதா ஸஹஸ்ர நாமத்திலுள்ள ஒவ்வொரு பெயருக்கும், பகவத் தத்துவத்தின் எந்தப் பெயருக்கும், ஏற்பட்ட உள் அர்த்தத்தை நன்கு அனுஸந்தானம் செய்துகொண்டே பூஜை செய்வதால், இதைவிட ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு வேறு ஸாதனம் எதற்கு? ஆசார்யாரின் திருஷ்டியில், பூஜை என்பது வெறும் பாஹ்ய கர்மாவல்ல, அதுவே அபரிமிதமான ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடிய ஆத்மானுபவமாகும்.

ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யார் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்திற்கு தரிசனத்திற்காக புறப்பட்டு தென்புறம் வாசல் ஸமீபம் வரும்போது அவ்வாசலுக்கு ஏறவேண்டிய படிக்குக் கீழே ஒரு பசுமாடு படுத்திருந்தது. அது நகராத விஷயத்தில் வாசற்படிக்கு போக முடியாதபடியால் வேலைக்காரர்கள் அதை விரட்ட உத்தேசித்து நெருங்கினர்கள். உடனே ஆசார்யார் அவர்களை ஸம்ஜ்ஞையினுல் தடுத்து, பூஜா திரவியங்களை கீழே வைக்கச் சொல்லி தாமும் அப்பசுவின் முன்புறத்தில் தரையில் உட்கார்ந்துகொண்டு கோபூஜைக்கு ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்ரீ சாரதாம்பா பூஜைக்கு கொண்டு வந்த திரவியங்களெல்லாம் இங்கேயே

உபயோகிக்கப்பட்டன. பூஜை முடிந்து தீபாராதனையானவுடன் அப்பசு எழுந்திருந்து நின்றது. ஸ்ரீமத் ஆசார்யார் பிரதக்ஷிணம் வந்து கைகூப்பி நின்றார்கள். அந்த கோவும் நிமிர்ந்து பார்த்து விட்டு ஆலயத்திற்குப் போக அனுமதி கொடுப்பதுபோல் நகர்ந்தது. ஆலயத்தில் போய் அம்பாளை தரிசிக்கப் புறப்படும் வழியில் அந்த அம்பாளே காமதேனு ரூபமாய் முன்னால் தென்பட இங்கே பூஜை செய்யாமல் எப்படி இருக்க முடியுமென்று ஸ்ரீமத் ஆசார்யார் நினைத்ததாகத் தோன்றுகிறது.

ஒரு ஸமயம் ஸ்ரீசந்திரமௌலீசுவர லிங்கத்திற்கு ஆசார்யார் அபிஷேகம் செய்து கொண்டிருக்கையில் நான் உள்பட சில சிஷ்யர்கள் முன் மண்டபத்திலிருந்து தரிசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தோம். திடீரென்று தென்பக்கத்திலிருந்து ஒரு பெரிய கிருஷ்ண ஸர்ப்பம் வருவதைக் கண்டு திடுக்கிட்டு எழுந்திருந்தோம். இதை கவனித்த ஆசார்யார் எங்களை உட்காரும்படி ஸம்ஜ்ஞை காட்டினார்கள். உடனே எங்களுக்கிருந்த பயம் போனவிடம் தெரியாமல் நாங்கள் நிர்பயமாய் உட்கார்ந்துவிட்டோம். அந்த ஸர்ப்பம் நகர்ந்து நகர்ந்து ஆசார்யார் உட்கார்ந்திருந்த கர்ப்பகிருஹத்தின் வாசற்படியில் ஏறி உள்ளேயும் நுழைய ஆரம்பித்தது. மறுபடியும் எங்களுக்கு பயம் ஏற்பட்டது. ஆசார்யார் மாத்திரம் மிகவும் உபசாந்தராயிருந்துகொண்டு ஒரு சின்னக் கிண்ணம் எடுத்து அதில் பாலைவிட்டு நிரப்பி அப்பால் கிண்ணத்தை தம் உள்ளங்கையில் ஏந்தி நாக்குகளை நீட்டிக் கொண்டிருக்கும் அந்த ஸர்ப்பத்தின் முகத்திற்கு அடியில்நீட்டினார்கள். எங்களுக்கிருந்த பதட்டத்திற்கு அளவேயில்லை. ஸ்தம்பித்திருந்தோம். அந்த ஸர்ப்பம் ஸாவகாசமாக அக்கிண்ணத்திலுள்ள பால் பூராவையும் நக்கிவிட்டு, நிமிர்ந்து ஸ்ரீ சந்திரமௌலீசுவர லிங்கத்தைப் பார்த்துவிட்டு, ஸ்ரீமத் ஆசார்யாரையும் விடைபெற்றுக் கொள்வதுபோல் நிமிர்ந்து பார்த்துவிட்டு, வந்த வழியே மெதுவாகத் திரும்பிவிட்டது. ஆத்ம ஞானிக்கு எதனிடத்திலும் பயம் கிடையாது. ஆத்ம ஞானியிடத்திலிருந்தும் யாருக்கும் பயம் கிடையாது, என்று பகவான் கீதையில் (XII, 15) சொல்லியிருக்கிறார் அல்லவா?

இவ்விதம் மிருகங்கள்கூட ஆசார்யாரிடத்தில் நடந்து கொள்ளும்பொழுது எல்லா மனுஷ்யர்களும் அவரிடத்தில்

அன்புடனும் பக்தியுடனும் நடந்து கொள்வதில் என்ன ஆச்சர்யம்? ஆஸ்திகர்-நாஸ்திகர், வித்வான்-பாமரன், தனிகர்-தரித்திரர், பாலர்-விருத்தர் முதலான யாவர்களும் அவருடைய திருஷ்டியில் பகவதம்சமேயாகும். மேலே கண்ட சில உதாஹரணங்களிலிருந்தே அவருடைய திருஷ்டியானது சென்ற காலம், நிகழ்காலம், வரும்காலம் எல்லாவற்றையும் விஷயீகரித்ததுடன் ஸாதாரண கண்ணுக்குப் புலப்படாத விஷயங்களையும் கிரஹிக்கக்கூடிய தன்மையுள்ளதென்பது வியக்தமாகும். அவருடைய மஹிமை தேசகால வரம்புக்கு உட்பட்டதல்ல.

பெங்களூர் காலடி விஜயம் செய்து 1940 ல் சிருங்கேரிக்கு ஸ்ரீமத் ஆசார்யார் திரும்பி வந்ததுமுதல் அந்தர்முகமாயிருக்கும் ஸமயங்கள் அடிக்கடியும் நீடித்தும் ஏற்பட்டன. அவரை நேரில் தர்சித்து அனுக்ரஹம் பெற்றுக் கொள்வது மிகவும் துர்லபமாகி விட்டது. சிருங்கேரி வித்யாபீடத்தில் இருந்து வருகிற மஹான்களை நாடி லௌகிகமாயும் வைதிகமாயும் வேண்டும் உதவியையும் உபதேசத்தையும் வழக்கமாய் பெற்றுவரும் சிஷ்யர்களுக்கும் ஸாதாரண ஜனங்களுக்கும் இது ஒரு பெரிய நஷ்டமாகவே தோன்றக்கூடியது. ஆனால் இப்பீடத்தை ஏற்படுத்திய ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதாசார்யாரவர்களுடைய உத்தேசம் இக்கலிகாலத்திலும் பிரஹ்மாத்மைக்ய ரூபமான அத்வைத அனுபவநிலை ஸாதிக்கக்கூடியதுதான் என்பதைக் காட்டுவதற்காக என்பதை உணர்ந்தோமேயானால் அவ்வுத்தேசமானது இவ்வாசார்யாரவர்களால் நன்கு நிறைவேற்றப்பட்டு வந்தது என்பதையும் நன்கு உணர்வோம். அவருடைய பெருமையை நாம் நன்கு உணராததினால் அப்பெருமை குன்றாது.

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யார் எப்படி தம்முடைய ஆத்மானுபவத்திற்கு குறைவின்றி உலகத்தில் கலந்துகொண்டு தர்ம மோக்ஷ மார்க்கங்களை நிலைநிறுத்தினார்களோ, அப்படியே இவ்வாசார்யாரும் கருணை கூர்ந்து பஹிர்முகமாயிருந்து அனுக்ரஹித்திருக்கிறார்கள். ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி முதற்கொண்டு நம் புண்ணிய பூமியில் தோன்றின மஹான்களைப்போல் இவரும் மௌனமாகவே இருந்துகொண்டு தம் ஆத்ம சக்தியை

ஜகத்பூராவிலும் பரவும்படி செய்து லோக க்ஷேமத்தை செய்திருக்கிறார்கள். இந்தமாதிரி பெரியோர்கள் அவதரித்திருக்கும் காலத்தில் நாமும் ஜன்மமடையும்படி இருந்த மஹத்தான புண்ணியம் அவர்களை நெருங்கி அவர்களுடைய கருணைகடாக்ஷம் பெற்று கடைத்தேற வேண்டிய வழியில் நம்மைக் கொண்டுபோய் விட வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திப்போமாக. ஒரு க்ஷணம்கூட சாந்தியில்லாமல் ஜனங்கள் அலைந்து கொண்டிருக்கிற இக்காலத்தில் சாஸ்திரத்தில் கண்ட அத்வைத நிலையை நமக்கு ஸாத்தியமென்று காட்டி ஆத்மானந்தத்தைத் தேடும் ஸாதகர்களுக்கு வழிகாட்டியாயிருந்து வந்த இம்மஹானின் பெருமையை என்னவென்று சொல்ல?

9. ப்ரஹ்மீபாவம்

மேலே கண்டிருக்கும் ஸம்பவங்கள் ஸ்ரீமத் ஆசார்யாரின் மஹிமையின் லேச லேசத்தை ஒருவாறு உதாஹரணமாகக் காட்டலாமே தவிர அவருடைய திவ்ய மஹிமையை எடுத்துக்காட்ட போதுமானவை அல்லவென்பதை நன்கு உணர்வேன். இதேமாதிரி இன்னும் பல ஸம்பவங்களை எடுத்துச் சொல்லலாம். அவருடன் நெருங்கிப் பழக பாக்கியம் கிடைத்த பக்தர்கள் இன்னும் விசித்திரமான ஸம்பவங்களைப் பற்றிச் சொல்லக்கூடும். இவைகளிலிருந்து ஸ்ரீமத் ஆசார்யார் ஸாமான்ய மனுஷ்யராயிருந்து படிப்படியாய் ஆத்ம நிலையை ஸாதித்த மஹான் என்று நினைப்பதற்கில்லை. மாயையில் அகப்பட்டு கஷ்டப்பட்டு தவிக்கும் ஜனங்களை உத்தாரணம் செய்வதற்காகவே கருணையுடன் அவதரித்த பகவதம்சம் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவர் உத்தாரணம் செய்யும் விதம் வெறும் உபதேசத்தினால் அல்ல, தாமே அனுஷ்டித்தும் காட்டினார். சிரத்தையுடன் தம்மிடம் வந்து அபேக்ஷிக்கிறவர்களுக்கு அவர்களின் யோக்கியதையை அனுஸரித்து ஸதுபதேசமோ மந்திர உபதேசமோ செய்து அனுக்ரஹித்தார் என்பது வாஸ்தவம். ஆனால் அவருடைய சர்யையை கவனிக்கும்போது அவரிடம் ஸ்வாதீனமாய் யாரும் நெருங்க அச்சப்படுவார்கள்.

''வாஸ்தவத்தில் தர்மப் பிரசாரத்திற்கு அவசியம் ஏதேனும் உண்டா? பாமரர்களுக்குக்கூட பொய் சொல்லக்கூடாது, வஞ்சகம் செய்யக்கூடாது, ஹிம்ஸிக்கக்கூடாது என்பது நன்றாகத் தெரியும். இதை அவர்களுக்கு உபதேசிக்க அவசியமேயில்லை. இந்த ஸ்வல்ப விஷயங்களையாவது அவர்கள் தங்கள் நடத்தையில் அனுஷ்டிக்கிறார்களா? அவர்களுக்கு நியாயம் என்று தெரிந்ததை

அனுஷ்டிக்கட்டுமே? மேலான அப்பியாஸங்களைப் பற்றி பின்னல் பார்த்துக் கொள்ளலாம்'' என்பார்கள். வாஸ்தவத்தில் சிரத்தையோடு ஊக்கத்துடன் ஒருவன் பிரயத்தினம் செய்ய ஆரம்பித்தால் பகவானே அவனிடம் கருணை கூர்ந்து மேல்மேலும் கைதூக்கிவிடுவார் என்ற நம்பிக்கை ஸ்ரீமத் ஆசார்யாருக்கு த்ருடமாயிருந்தது. ''சிருங்கேரிக்கு வெகுதூரத்திலிருந்து கொண்டு அடிக்கடி வரமுடியாத சிஷ்யர்களை அனுக்ரஹிக்க ஸ்ரீசந்திரமௌலீசுவரரும் ஸ்ரீ சாரதாம்பாளும் சக்தியற்ற வர்களென்று நினைத்தீர்களா?'' என்பார்கள். இதே நியாயம் அவர் விஷயத்திலும் உண்டு. சிருங்கேரிக்குப் போகாமல் இருந்த இடத்தில் இருந்துகொண்டே அவருடைய திவ்ய மூர்த்தியையும், கருணகடாக்ஷத்தையும், மந்தஹாஸத்தையும், மானஸிகமாக நன்கு அனுஸந்தானம் செய்து உருக்கத்துடன் பிரார்த்தித்து தன் சிரமங்களையும் ஸந்தேஹங்களையும் நிவர்த்தி செய்து கொண்டிருப்பவர்கள் பலர். இந்த தியானமே அவர்களுடைய ஸகலமான இஷ்டத்தையும் பூர்த்தி செய்து கொடுக்க வல்லமையுள்ளது.

ஸ்ரீமத் ஆசார்யார் அவதரித்து அறுபதாவது வயது வந்தவுடன் இதை விசேஷமாக கொண்டாட வேண்டுமென்று சில பக்தர்கள் உத்தேசித்ததற்கு அவர் இடம் கொடுக்கவில்லை. கொண்டாட்டம் வெறும் லௌகிக ரீதியில் இல்லாமல் அதிருத்ர யாகம் ஸஹஸ்ர சண்டீ ஹோமம் முதலானது நடத்த உத்தேசிப்பதாகத் தெரிந்ததும், லோக க்ஷேமார்த்தம் அவைகளை நடத்தலாமென்றும் தம்முடைய ஷஷ்டி அப்த பூர்த்திக்கு ஸம்பந்தமில்லாமல் நடத்த வேண்டு மென்றும் அவர் உத்தரவு செய்ததை அனுஸரித்து 60 வது வயது பூர்த்தியாய் சில மாஸங்களுக்குப் பின் 1953 ஏப்ரலில் இவைகள் அதிவிமரிசையாக நடத்தப்பட்டன. மைஸூர் ஸம்ஸ்தானத்தை திப்புஸுல்தான் ஆண்ட காலத்தில் அவருடைய வேண்டுகோளின்படி ஸ்ரீமடத்தில் இந்த ஸஹஸ்ரசண்டீ ஹோமம் நடந்தது. இப்பால் 150 வருஷங்களுக்கு மேலாக நடந்ததில்லை. இவ்வபூர்வமான யாகங்களை தரிசிக்க பரதகண்டத்திலுள்ள எல்லா பாகங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் ஸாமான்யமாய் வெளியில் வந்து தரிசனம் கொடுப்பதில்லையென்ற பிரஸித்தி

இருந்து வந்த காரணத்தினுலேயே இந்த ஸமயத்திலாவது தரிசனம் கிடைக்குமென்று ஜனங்கள் மிக ஆவலுடன் எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் யாக விஷயமாய் செய்திருக்கும் ஏற்பாடு விவரங்களை விசாரித்து விட்டு பரிபூர்ணமாக அனுக்ரஹம் செய்ததுடன் பகவான் இவ்வாராதனத்தை அங்கீகரிப்பார் என்றும் அதற்கு அறிகுறியாக ஹோமகுண்டத்தில் முக்கிய ஆஹுதி செய்யும் காலம் மழை பெய்யும் என்றும் சொன்னுர்கள். ஆனுல் அங்கு கூடியிருக்கும் லக்ஷக்கணக்கான ஜனங்களை தாம் பார்க்கவாவது அவர்களுக்குத் தாம் தரிசனம் கொடுக்கவாவது ஸம்மதிக்கவில்லை. அவருடைய திவ்ய மூர்த்தியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் அக்கூட்டத்திலுள்ள யாவரும் அம்மூர்த்தியை தீவிரமாக தியானித்திருப்பார்களென்பதில் ஸந்தேஹமில்லை. அவர் வெளியில் வந்து தரிசனம் கொடுத்திருந்தால் உடனே மறந்திருக்கக்கூடும். இந்த அபரிமிதமான தியானத்தினுல் அவர் மூர்த்தியை மறக்கமுடியாமல் மனதில் ஊன்றி வைத்த பாக்கியம் ஏற்பட்டிராது.

இவ்வுத்ஸவம் நடந்து சில வாரங்கள் சென்ற பின் ஸ்ரீமத் ஆசார்யார் பஹிர்முகமாகி வழக்கம்போல் கார்யங்களை நடத்தி வந்ததுடன் முன்போலவே சிஷ்யர்களுக்கு தரிசனமும் அனுக்ரஹமும் அளித்துவந்தார். இந்த ஸமயத்தில்தான் பாரததேச அத்யக்ஷராயிருந்த (முதல் ஜனுதிபதி) டாக்டர் ராஜேந்திர பிரஸாத் அவர்கள் சிருங்கேரிக்கு வந்து ஆசார்யாரை தரிசித்து ஏகாந்தமாக வெகுகாலம் ஸம்ஸ்கிருதத்திலேயே ஸல்லாபம் செய்து ஸ்ரீமத் ஆசார்யாருடைய விசேஷ அனுக்ரஹத்திற்கு பாத்திரமானுர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு சிலநாள் சென்றபின் தமக்கு இந்த ஜன்மாவைக் கொடுத்த பிராரப்த கர்மா முடிந்துவிட்டபடியால் இனி இச்சரீரத்தை உதறிவிட வேண்டுமென்று தீர்மானித்து முன் காலத்து யோகிகள் செய்திருக்கும் ரீதியை அனுஸரிப்பதென்று உறுதி கொண்டு 1954 ஸெப்டம்பர் 26ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இருட்டாயிருக்கும்பொழுதே எழுந்து துங்கா நதிக்குச் சென்றுர்கள். ஜலத்தில் இறங்கினுர்கள். கூடவந்த வேலைக்காரர் ''அங்கே அகழம் ஜாஸ்தி'' என்று சொன்னதற்கு

''தெரியும்'' என்று பதில் சொல்லிவிடடு ஜலத்தில் இறங்கி, மூழ்கி எழுந்திருந்து பிராணுயாமம் செய்து ஸங்கல்பம் செய்துவிட்டு மறுபடியும் ஜலத்தில் அமிழ்ந்தார்கள். அவ்வளவுதான். அவருடைய சரீரம் பிரவாஹத்தில் மிதந்தது. அதைக்கண்ட வேலைக்காரர் உடனே ஜலத்தில் குதித்துப் பிடித்தார். ஆனால் அவருக்கு இருந்த பதட்டத்தில் தன் நினைவு தப்பிற்று. அவ்வேலைக்காரர் ஜலத்தில் இறங்குமுன் போட்ட சப்தத்தைக் கேட்டு ஓடிவந்த ஒருவர், இரண்டு சரீரங்களையும் கரைக்கு கொண்டுவந்து சேர்த்தார். சிகித்ஸை செய்ததில் வேலைக்காரருக்கு மூச்சு வந்தது. ஆசார்யார் விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவருடைய சரீரம் தியான நிலையில்போல பத்மாஸனத்திலிருந்ததாகவும் பின்னால் மூச்சு உண்டுபண்ணச் செய்த பிரயத்தின காலத்தில்தான் கை கால்கள் நீட்டிவிடப்பட்டதென்றும் ஒரு பிரஸ்தாபம் உண்டு. ஆனால் ஜலத்தில் மூழ்கினதினால் பிராணன் போய்விட்டதென்று காட்டக்கூடிய யாதொரு அடையாளமும் இல்லையென்பது மாத்திரம் நிச்சயம். ஸ்ரீமத் ஆசார்யாருக்கு சரீரத்தில் எப்பொழுதும் பூர்ண ஆரோக்கியமுண்டு. அவர் ஜீவித்திருக்கும்போதும் எப்படி வைத்தியர்களின் கட்டுப்பாட்டில் இல்லையோ அப்படியேதான் ஸித்தியடைந்த மாதிரியும் அவர்களுக்குப் புலப்படவில்லை. அப்பிராகிருதமான ஸம்பவங்களுக்கு பிராகிருத ரீதியில் ஸமாதானம் எப்படி கிடைக்கும்? இவ்விதமாக ஸ்ரீமத் ஆசார்யார் ஆஸேது ஹிமாசலமுள்ள ஸகல சிஷ்யவர்க்கங்களையும் துக்கத்தில் அமிழ்த்திவிட்டு இனி நம் கண்ணுக்குப் புலப்பட முடியாமல் மறைந்தார்கள். அவர்களுடைய பூர்வாசார்யாரவர்களுடைய ஸமாதிக்கு வடப்புறமாக இவர்களுக்கும் ஸமாதி ஏற்படுத்தப்பட்டது. இவர்கள் மறைந்த தினம் மஹாளய அமாவாஸ்யை தினம். அன்றைக்கு ஸ்ரீ சாரதாம்பாளுக்கு நவராத்திரி பூஜாரம்பத்திற்காக விசேஷமான அபிஷேகாதிகள் உண்டு. இவர்களுடைய பிரதிவருஷ ஆராதனையும் ஸ்ரீ சாரதாம்பாள் அபிஷேகமும் சேர்ந்தே வரக்கூடியதினால் ஸ்ரீமத் ஆசார்யாருக்கும் ஸ்ரீ சாரதாம்பாளுக்கும் உள்ள அபேதத்தை விளக்கிக் காட்டுவது போலும்.

மஹா பூஜை ஆராதனை எல்லாம் கிரமப்படி நடந்த பிற்பாடு, ஏற்கெனவே 1931 முதல் சின்னப் பட்டம் வஹித்து ஸ்ரீமத்

ஆசார்யாரிடமே கூடவேயிருந்து விசேஷ அனுக்ரஹ பாத்திரமாயிருந்துவந்த ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்த ஸ்வாமிகளவர்கள் இவ்வியாகயான ஸிம்ஹாஸனத்தில் பீடாபிஷிக்தர்களாக பீடாரோஹணம் செய்தார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யார் சரீரபந்தம் விட்டு தேச கால ரூபாதீதமான பிரஹ்மத்தோடு கலந்து விட்டபடியால் இனி அவர்களுடைய அநுக்ரஹத்தை யாரும் எங்கேயும் எப்பொழுதும் நாடலாம். அவர்கள் மனுஷ்ய சரீரத்துடன் நம் மத்தியில் அறுபது வருஷங்களுக்கு மேலாக இருந்தும் நாம் கிருதார்த்தர்களாகாமல் இன்னும் அவித்யையில் உழலுகிறவர்களாக இருந்தால் அதற்கு அவர்கள் என்ன செய்ய முடியும்? நாமல்லவா அவர்களுடைய திவ்ய ஸந்நிதியைத் தேடிப்போய், அனுக்ரஹம் பெற்று, அவர்களுடைய ஞான வைபவத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும்? இப்பொழுதாவது நம் கைக்கு கிட்டினுல் போலிருந்த இப்பெரும் விலேயற்ற நிதியை அடிக்கடி ஞாபகத்தில் வைத்து அனுஸந்தானம் செய்தாலும் மிக சிரேயஸ்ஸேயாகும்.

சிருங்கேரியிலுள்ள நதியின் அழகையும், மலேவனங்களுடைய ராமணீயகத்தையும் ஸ்ரீ சிருங்கேரி மடத்தின் லௌகிக ஸம்பத்தையும் கண்டு களிக்க வெகு பேர்கள் சிருங்கேரிக்கு வருகிருர்கள். அங்குள்ள இயற்கையின் சோபையையும் ஸ்ரீமடத்தின் உபசாரத்தையும் நன்கு அனுபவிக்கிருர்கள். ஆனுல் இவைகளெல்லாவற்றையும்விட ஸ்ரீமத் ஆசார்யாரின் திவ்ய மூர்த்தியே மேலானதென்பதை மறந்து விடுகிருர்கள். ஆசார்யாரிடம் ஸமீபத்தில் போகிறவர்கள்கூட அவர்களுடைய உண்மையான மஹிமையைத் தெரிந்து கொள்வதில்லே. அவர்களிடம் ஆடம்பரமின்மை, அபாரமான வைதுஷ்யம், த்ருடமான சிரத்தை, ஸர்வபூததயை முதலான குணங்கள் இருப்பதாகக் காண்கிருர்கள்; ஆசார்யாருடைய மஹிமையைப் பற்றி வாயாற மனதினுலும் வாக்கினுலும் ஸ்தோத்திரம் செய்கிருர்கள். இந்த ஸ்தோத்திரங்கள் அவர்களுக்கு எதற்கு? அவர்களுடைய ஸம்பர்க்கத்தினுல் எவ்வளவு மட்டும் நாம் பிரயோஜனம் அடைந்தோம், என்பதையல்லவா பார்க்க வேண்டும்? நம் மனஸ் பரிசுத்தமாகி வருகிறதா என்று பார்க்க

வேண்டும். இம்மஹான் நமக்கு ஆசார்யாரென்பதில் நாம் கர்வம் கொள்ளலாம். ஆனால் அவருடைய சிஷ்யர் என்று சொல்லிக்கொள்ளக்கூடிய யோக்கியதையை நாம் ஸம்பாதித்துக் கொள்ளாமலிருக்கும் வரை இந்த கர்வம் நியாயமாகுமா? சில நவீனர்கள் நன்ருக சில்பவேலை செய்யப்பட்டிருக்கும் விக்நேசுவர மூர்த்திகளை, மேஜையின் மேல் வைத்திருக்கும் காகிதம் காற்றில் பறக்காமலிருப்பதற்காக மேலே வைக்கிருர்கள்! அதுபோலல்லவா ஆகிவிடும், நாம் ஆசார்யாரை ஸ்துதி செய்துவிட்டு ஆத்மலாபத்திற்காக அவர்களை நாடாத விஷயத்தில்? அவ்விதம் நாடுவதற்கும் அவருடைய பரிபூர்ண அனுக்ரஹம் வேண்டும். ஞான நிதியாயும் கருணநிதியாயுமிருந்துவந்த ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் அனுக்ரஹம் நமக்கு கிடைக்க வேண்டுமென்ற பேரவாவையும் சிரத்தையையும் அளிக்க வேண்டுமென்று பகவானைப் பிரார்த்திப்போம். இம்மஹான் ஊக்கமுள்ள பக்தருக்கு இன்னமும் அனுக்ரஹம் செய்ய ஸித்தமாயிருக்கிருர்.

ஞானப் பிரஸூனங்கள்



ஸ்ரீமத் ஆசார்யாளின் ஏகாந்த பூஜை

1. பற்றின்மை

நம் மதத்தில் ஞான மார்க்கத்தில் உயர்நிலேயேற விரும்புகிறவர்கள் துறவு பூண வேண்டுமென்று சொல்லி யிருப்பதை இக்காலத்திய விமர்சகர்கள் ஒரு குறையாக பாவிக்கிறது வழக்கமாயிருக்கிறது. தன்னே அடக்கியாள முயன்று வருகிற ஸாதகனுக்கு ஆரம்ப தசைகளில் விக்ஷேபத்தை உண்டாக்கக்கூடிய ஸந்தர்ப்பங்களிலிருந்து விலகியிருப்பதற்காக தனிமையானதோர் இடத்தை நாடுவதே அனுகூலம் என்பதில் ஸந்தேஹமில்லே. ஆனால் ஞானம் பரிபாகமடைந்த பிறகு ஞானி உலகின் நடுவிலே இருந்து வரலாம், அதில் சிறிதும் ஒட்டாமலும் இருக்கலாம் என்ற தத்துவத்தை ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்யார் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஜீவன்முக்த ஆனந்தலஹரீ என்ற சிறிய பிரகரணத்தில் இதை விசேஷமாக விளக்கியிருக்கிறார். இந்த தத்துவத்தை சிருங்கேரியிலுள்ள பிரதான அத்வைத மடத்தை அலங்கரித்து வந்த ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளவர்கள் நன்கு நடத்திக் காட்டியிருக்கிறார்.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் மடத்து லௌகிக விஷயங்கள் எவற்றிலும், எவ்வளவு பாதக மன்னியில் இருந்தாலும், அக்கறை எடுத்துக் கொள்வது கிடையாது. மடத்து அதிகாரி ஒருவர், மடத்தைச்சேர்ந்த பல கோவில்களில் நடக்க வேண்டிய பூஜைக்குப் போதுமான புஷ்பங்கள் வேணடுமென்று தான் அமைத்துள்ள பூந்தோட்டத்திலாவது ஆசார்யாரின் கவனத்தை இழுக்கலாம் என்று எண்ணி, ஒரு நாள் மாலேயில் அவர்களிடம் சென்று, ''அருகாமையில் சில நாட்களுக்கு முன் ஒரு நந்தவனம் அமைத்தேன். இப்பொழுது நன்ருக வளர்ந்திருக்கிறது. அதை தாங்கள் நேரில் வந்து பார்வையிட வேண்டுமென்று எனக்குப்

பேரவா'' என்ருர். உடனே ஸ்ரீமத் ஆசார்யாள் அதற்கு இசைந்து, அவருடன் சென்று, பூப்பாத்திகளேயும் செடிகளேயும் பார்த்துவிட்டுத் திரும்பினுர்கள். ஆனுல் ஒரு வார்த்தைகூட சொல்லாமலிருந்ததால் கொஞ்சம் மனது நொந்த அவ்வதிகாரி ''தோட்டம் நேர்த்தியாய் இருக்கிறதா, இல்லேயாஎன்பதைப் பற்றி தங்கள் அபிப்பிராயத்தை தெரிந்து கொள்வதற்காகவே தங்களே இங்கே வரும்படி சிரமப்படுத்தினேன்'' என்ருர். உடனே ஆசார்யாள், ''ஏன், வெகு நேர்த்தியாக இருக்கிறதே'' என்ருர்கள். இதைக்கேட்ட அதிகாரி விடாமல் ''நான் கேட்ட பிறகு இவ்விதம் சொல்லும் அபிப்ராயம் எனக்கு ஸமாதானமாயில்லே. இன்னும் எந்த எந்த விதமாக இத்தோட்டத்தை அபிவிருத்தி செய்யலாம், எப்படி இன்னும் சோபிக்கச் செய்யலாம், என்று உத்தரவாக வேண்டும்'' என்ருர். அதற்கு ஆசார்யாள்,''இன்னும் என்ன என்ன செடிகளே வைத்துப் பயிரிடலாம் என்று நிஜேக்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள். அவ்வதிகாரி உடனே ''இன்ன இன்ன செடிகள் பயிரிடலாம் என்ற யோசனே இருக்கிறது'' என்று பதில் சொன்ஞர். ஆசார்யாளும் ''நல்லது, அப்படியே செய்யலாமே'' என்று சொன்ஞர்கள். இந்த பதில் வந்தபிறகுதான் அவ்வதிகாரி ''இது செய்யலாம், அது செய்யலாம், என்று நான்தானே சொல்லியிருக்கிறேன். ஆசார்யாளாக ஒருவித யோசனேயும் சொல்லவில்லேயே'' என்பதை உணர்ந்தார். ஆசார்யாளே இத்தகைய வியவஹாரங்களில் அக்கறை யெடுக்கச் செய்ய முயல்வது பிரயோஜனமில்லேயென்றும் அறிந்துகொண்டார்.

சில ஸமயங்களில் ஸ்ரீமத் ஆசார்யாளின் பற்றின்மை வெகு தீவிரமாகத் தெரிந்தபோது, மடம் ஸம்பந்தமான லௌகிக விஷயங்களில் அக்கறையில்லேயாஞல் அவர்கள் பீடாதிபத்யத்தில் இருந்து விலகிவிடலாமே யென்றுகூட சிலர்களுக்கு யோசனே தோன்றியிருப்பதுண்டு. அவர்கள் தைர்யமாக ஆசார்யாரிடம் இவ்வெண்ணத்தை தெரியப்படுத்தியிருந்தால் ஸந்நிதானம் ஸந்தோஷமாய் ஏற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனுல் அவ்விதம் நடந்திருந்தால் பலவிதத்தில் உலகத்திற்கு பாக்கியக் குறைவே ஏற்பட்டிருக்கும். முக்கியமாக, அத்வைத பீடத்திலிருக்கிற ஒரு மஹான் ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடைந்து உலகப்பற்று இல்லாமலிருந்தால், அந்த ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட காரணத்திஞலேயே மடத்தின் தலேவராக இருந்துவர தகுதி யுள்ளவரல்ல என்ற அபாயமான ஒரு புதிய நியாயத்தை ஏற்றுக்கொண்டதாக ஆகிவிடும்.

ஏகாந்தமாயிருப்பதில் அவர்களுக்கு ஸ்வபாவஸித்தமான மனோபாவம் 1953 ல் நடந்த ஸஹஸ்ரசண்டீ ஹோம ஸமயத்தில் வெகு வெளிப்படையாகத் தெரிந்தது. இந்த அபூர்வமான யாகத்தை தரிசிப்பதற்காக நம் தேசத்திலுள்ள பல பிரதேசங்களிலிருந்து ஆயிரம் பதினாயிரம் கணக்கான பக்தர்கள் வந்து குழுமியிருந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரை நேரில் தரிசிக்க வேண்டுமென்றும், அவர்களை ஒரு தடவையாவது நேரில் வந்தனம் செய்ய வேண்டுமென்றும் மிக்க அவாவுடன் அவர்கள் வெளியில் வருவதை எதிர்ப்பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் அங்கு செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகளைப் பற்றி விவரமாகக் கேட்டுக் கொண்டார்களே தவிர, எத்தனையோ சிஷ்யர்கள் வற்புறுத்திப் பிரார்த்தித்தும், வெளியில் வரவேயில்லை. எல்லாவற்றையும் சின்ன ஸ்வாமிகளையே கவனித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு, தம் அறையிலேயே தங்கிவிட்டார்கள். கொஞ்சமேனும் அஹந்தையாவது கியாதியில் (புகழில்) ருசியாவது இருந்திருந்தால், வெளியில் வந்து சில நிமிஷங்களாவது அங்கு கூடியிருந்த சிஷ்யர்களுக்கு தரிசனம் கொடுத்து அந்த ஏராளமான சிஷ்ய ஸங்கத்தினால் செய்யப்படும் வந்தனாதிகளாகிய மரியாதைகளைப் பெறுவதில் ஸந்தோஷித்திருக்கலாம். அவர் நிலை வேறு. உத்ஸவத்திற்கு வந்திருந்த கூட்டமெல்லாம் கலைந்தபிறகு அவர்கள் வெளியில் வந்தார்கள். அப்பொழுது ஒரு நெருங்கிய பக்தர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ''தங்களுடைய தரிசனத்திற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். அந்த உத்ஸவகாலம் பூராவும் தங்களையே நினைத்துக் கொண்டிருந்தார்கள். தூரத்திலிருந்துகூட தங்களை தரிசிக்க முடியவில்லையே என்ற தாபம் அவர்களுக்கு வெகுவாக இருந்தது. பார்க்க முடியவில்லையே என்ற வருத்தம் அவர்கள் மனதில் உறுத்திக்கொண்டே எல்லாரும் திரும்பிப்போனார்கள்'' என்று சொன்னார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் தமக்கு அஸாதாரணமான புன்சிரிப்புடன் தமக்கு அஸாதாரணமான ரீதியில், ''அதுவே நல்லது.நான் வெளியில் வந்திருந்தேனேயானால், ஜனங்களுடைய குதூஹலமோ ஆவலோ அப்பொழுதே தீர்ந்திருக்கும். அடுத்த க்ஷணம் முதற்கொண்டு அவர்கள் என்னைப்பற்றி நினைப்பதை நிறுத்திவிடுவார்கள் என்பதும் நியாயம்தானே?'' என்றார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யார் உலக மத்தியிலிருந்து பின்வாங்கவோ விலகிக்கொள்ளவோ அவசியமில்லையென்பதை உணர்ந்தவர்கள். சில ஸமயங்களில் உலகத்தையே மறந்து ஆத்ம நிஷ்டராக இருக்கவும், மற்ற ஸமயங்களில் உலகத்தை தூரநின்று ஸாக்ஷியாக பார்த்துக் கொண்டிருக்கவும் நன்கு கற்றுக் கொண்டிருந்தார்கள். ஆகையால், உலகம் அவர்களை எந்தவிதத்திலும் பாதிக்கக் கூடியதில்லை. ஜலத்தின் மத்தியில் இருந்தாலும் ஜலத்தினுல் கொஞ்சம்கூட நனைக்க முடியாமலிருக்கிற தாமரை இலையை கீதையில் திருஷ்டாந்தமாக சொல்லியிருப்பது இவர்களுக்கே நன்கு பொருத்தமாகும். வெளி திருஷ்டியோடு இருக்கும் காலத்தில் தம் ஆசிரமத்திற்கேற்பட்ட ஆஹ்நிகங்களையும் ஸ்ரீமடம் ஸம்பந்தமான நித்திய பூஜாதிகளையும் ஒன்றுவிடாமல் நிதானமாக செய்து வருவார்கள். நெருங்கி வந்து அபேக்ஷிக்கும் சிஷ்யர்களுக்கு அவரவர்களுக்குத் தக்கபடி உபதேசம் செய்வார்கள். தம்மிடத்தில் ஏதேனும் புத்திமதியையோ, ஸஹாயத்தையோ அபேக்ஷித்து, அல்லது குதூஹலத்தினுலோ தம்மிடம் வரும் பலவிதமான ஜனங்களுக்கும் பேட்டி கொடுப்பார்கள். என்ன செய்தாலும் தம்முடைய பற்றற்ற நிலையிலேயே இருந்து வருவார்கள்.

ஸாமான்யமாக, அதுவும் உத்ஸவ காலங்களிலும் யாத்திரா ஸமயங்களிலும் விசேஷமாக, ஜனங்கள் ஏராளமாக கூடிக்கொண்டு சப்தமும் இரைச்சலும் போட்டுக் கொண்டிருக்கிற ஸமயத்திலும் அதனுல் கொஞ்சமேனும் பாதிக்கப்படாமல் நிதானமாய், பரபரப்பில்லாமல் கிரமப்படி ஸ்ரீமத் ஆசார்யார் பூஜை செய்துவரும் வைபவத்தைப் பார்த்தாலே ஏகாக்ர சித்தத்துடன் மனஸை நடுநிலையில் நிறுத்துவது எப்படியென்று நமக்கு கற்றுக் கொடுக்கிற மாதிரி இருக்கும். ஒருபக்கம் வேதகோஷம் நடக்கும்; இன்னெரு பக்கம் ஸங்கீதம் பரிச்சயமுள்ளவர்களோ இல்லாதவர்களோ தங்களுடைய கைங்கர்யமென்று பூஜா சமயத்தில் பலவித வாத்தியங்களை வாசிப்பார்கள்; இன்னெரு பக்கம் ஜால்ரா கொட்டிக்கொண்டு பஜனை கோஷ்டியார் பகவந்நாம ஸங்கீர்த்தனப் பாடல்களை இரைந்து சொல்வார்கள்; எந்தக் கூட்டத்திற்கும் ஸஹஜமான சிறுவர்களுடையவும் கைக் குழந்தைகளுடையவும் கூக்குரல் ஒருபக்கம்; எல்லாவற்றிற்கும் மேலாக, ஸ்திரீகளும் புருஷர்களும் பாலர் விருத்தர் யாவரும்

ஒருவருக்கொருவர் யோகக்ஷேமம் கேட்டுக்கொண்டு ஊர் ஸமாசாரங்கள் பேசுவதற்கும் இதையே ஸந்தர்ப்பமாக வைத்துக் கொண்டு வருவார்கள். எப்படியும் அமைதியாயிருந்து பகவானை ஆராதனம் செய்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்களுக்கு நேர்விரோதமான அம்சங்களே நிறைந்திருக்கும். ஆனால் இவ்வித சூழ்நிலையினால் ஸ்ரீமத் ஆசார்யார் கொஞ்சமேனும் பாதிக்கப்படுவதில்லை. அவைகள் எவ்வளவு மனோ நிலையைக் கெடுத்து விக்ஷேபத்தைக் கொடுக்கக்கூடிய தன்மை யுடையனவானாலும் அவைகளிலிருந்து பாதிக்கப்படாமல் விலகி நிற்கும் தன்மையை ஸ்ரீமத் ஆசார்யார் அடைந்திருந்தார்; ஆகையால் அவர்களை பாதிக்கக்கூடிய சக்தியையே பிரகிருதிக்குக் கட்டுப்பட்ட உலகம் இழந்துவிட்டதாகவே தோன்றுகிறது.

ஸ்ரீமத் ஆசார்யாருடைய ஜன்ம தினத்தில் சிருங்கேரி ஊர் மத்தியிலுள்ள மலையின் உச்சியிலிருக்கும் ஸ்ரீமலஹாநிகரேசுவரர் ஆலயத்திற்குப் போய் அன்று அந்த பகவானுக்கு மத்தியாஹ்ந பூஜையை ஸ்ரீமத் ஆசார்யாரே தம் கையால் பண்ணுகிறதென்ற ஸம்பிரதாயம் ஸ்ரீமடத்தில் வெகு நாளாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவ்வாலயத்திலுள்ள கர்ப்பக்கிரஹம் ஆறு அடி சதுரம் கூட இராது. அங்கே பூஜைக்காக ஸந்நிதானம் உட்காரலாம்; அவர்களுக்கு பூஜா திரவியங்கள் எடுத்துக் கொடுக்கும் ஒரு வேலைக்காரர் நடமாடுவதற்கும் கொஞ்சம் இடம் உண்டு. ஒரு வருஷம் இந்த வைபவத்தைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அன்று ஸ்ரீமத் ஆசார்யார் ஆலயப் பிராகாரத்திலேயே மாத்யாஹ்நிக ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டு சுமார் 12 மணிக்கு கர்ப்பக்ருஹத்திற்குள் சென்று பூஜையில் அமர்ந்தார்கள். நடுமத்யாஹ்நவேளை, வெய்யிலும் அதிகமாயிருந்தது. அந்த நெருங்கிய அறையிலிருந்து அங்குள்ள வேலைக்காரர் அடிக்கடி வெளியில் வந்து தன் சரீரத்திலிருந்தும் நெற்றியிலிருந்தும் வழிந்து கொண்டிருந்த வியர்வையை துடைத்துக்கொண்டு போனார். ஸ்ரீமத் ஆசார்யார் மட்டும் கொஞ்சமேனும் கவலையற்று யதாவத்தாக பூஜையை நடத்தி தீபாராதனை செய்து ஸாயங்காலம் சுமார் 4 மணிக்கு வெளியில் வந்தார்கள் வழக்கம் போலுள்ள புன்சிரிப்புடன் பிரகாசித்துக் கொண்டு. அவர்களிடத்தில் ஒருவிதமான சிரமக்களையாவது வாட்டமாவது காணப்படவில்லை. அத்துடன்

அவர்கள் நெற்றியில் தரித்துக் கொண்டிருந்த விபூதி கொஞ்சமேனும் வியர்வையினால் பாதிக்கப்படாமலிருந்ததுடன் அப்பொழுதே தரித்துக்கொண்ட மாதிரி பிரகாசமாயிருந்தது. வேலைக்காரர் அடிக்கடி வெளியில் வருவதை கவனித்திருந்த எனக்கு, இப்பொழுதுதான் ஸ்நாநம் செய்து விபூதி தாரணம் செய்துகொண்ட மாதிரி ஸந்நிதானம் தென்பட்டது மிகவும் ஆச்சர்யத்தை உண்டுபண்ணிற்று. அந்த ஸமயம் என்னுடன் நின்று கொண்டிருந்த ஒரு சிருங்கேரிவாஸியான விருத்தரிடம் என் ஆச்சர்யத்தைச் சொன்னேன். அதற்கு அவர் ''இதைவிட ஆச்சர்யமான ஸம்பவங்களை நான் பார்த்திருக்கிறேன். சென்ற வருஷமோ அதற்கு முந்தின வருஷமோ, இதே மாதிரி பூஜைக்காக ஸந்நிதானம் வந்திருந்தார்கள். ஸந்நிதானத்தின் வரவை உத்தேசித்து கோவில் அதிகாரிகள் கோவில் கர்ப்பக்ருஹத்தின் தளத்தில் இருக்கும் பொந்துகளிலுள்ள எண்ணைப்பிசுக்கு, மண் முதலிய அழுக்குகள் யாவற்றையும் சுரண்டி எடுத்துவிட்டார்கள். ஸந்நிதானம் உள்ளே போய் பூஜைக்கு ஆஸனத்தில் அமர்ந்தவுடன், அந்த இடுக்குகள் வழியாக ஏராளமான சிவப்பு எறும்புகள் குப்குப்பென்று வெளிக்கிளம்ப ஆரம்பித்து விட்டன. அந்த வேலைக்காரர் அங்கே நிற்க முடியவில்லை. குதிக்க வேண்டியிருந்தது. காட்டு எறும்புகளுக்கு ஏற்பட்ட உக்கிர ஸ்வபாவத்துடன் கடிக்க ஆரம்பித்த அந்த எறும்புகளை எடுத்து உதறியெறிவதற்காக ஒவ்வொரு நிமிஷமும் அவர் வெளியில் வரவேண்டியிருந்தது. அன்றைய தினமும் கொஞ்சமேனும் கலங்காமல் ஸாயங்காலம் வரை நிதானமாக பூஜையை செய்து முடித்து ஸ்ரீமத் ஆசார்யார் உல்லாஸமாக வெளியே வந்தார்கள். இவர்கள் தங்களுக்கு ஸுஹ்ருத் என்பதை அந்த எறும்புகளும் உணர்ந்து இவர்களை கொஞ்சமேனும் சிரமப்படுத்தவில்லை போலும்'' என்றார்.

துங்கா நதிக்கரையில் நல்ல வெய்யிலில் கொதிக்கிற கற்படிகளில் ஸ்ரீமத் ஆசார்யார் மணிக்கணக்காக உட்கார்ந்திருந்ததை பார்த்திருக்கிறேன்; அவர்களுடைய கைங்கர்யத்திற்காக ஏற்பட்டவர்கள் மேலேயுள்ள சூர்ய வெப்பத்தையாவது கீழேயுள்ள கல்தள வரிசையின் சூட்டையாவது

பொறுக்க முடியாமல் பக்கத்தில் நிழலுள்ள இடம் தேடி நகர்ந்து விடுவார்கள். ஆகையால் ஸ்ரீமத் ஆசார்யாருடைய மனஸ் மாத்திரம் உலகத்திலிருந்து பற்றற்று விலகியிருந்ததென்று சொன்னால் போதாது, அவர்களுடைய சரீரமே பஞ்ச பூதங்களினால் பீடிக்கக் கூடாத்தன்மையை அடைந்திருந்ததென்று தெரிகிறது. பகவத்கீதையில் ''ஸாம்ய நிலையடைந்த மனஸ் உள்ளவர்களால் இங்கேயே பிரபஞ்சமானது ஜெயிக்கப்பட்டது'' (V.19) என்று பகவான் சொல்லியிருக்கும் வாக்கியத்தை ஸ்ரீமத் ஆசார்யார் நன்கு ருசுப்படுத்திக் காட்டினார்கள் என்பதில் ஸந்தேஹமில்லை.

2. குருபக்தி

ஸ்ரீமத் ஆசார்யார் ஸாதாரண மனிதர்களுடைய மனோநிலைக்கு வெகுதூரம் உயர்ந்த நிலையில் ஆனந்தமாக ரமித்துக் கொண்டிருந்தபடியால், தம்மைக் காணவந்தவர்களோடு ஸாமான்யமான லௌகிக விஷயத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், அதன் தரத்தை உயர்த்தி அதிலிருந்தும் ஒரு தத்துவம் அறிவதற்கான வழியைக் காட்டுவார்கள். மிகவும் ஸாதாரணமான ஸம்பவத்திலிருந்துகூட அதிக அருமையானதும் உபயோகமுள்ளதுமான விஷயங்களை தெரிந்து கொள்ளுமாறு செய்வார்கள். அதை விளக்கும் உதாஹரணங்களைக் கூறும் முன்னர், அவர்களுக்கு ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யாரிடமும் தமக்கு குருநாதரான மஹாஸந்நிதானத்தினிடமும் (ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளிடமும்) இருந்த பக்தியைப் பற்றி சிறிது கூறுவது உசிதமென்று தோன்றுகிறது. அப்பெரியோர்களை ஞானிகள் என்று மாத்திரம் ஸ்ரீமத் ஆசார்யார் பாவிக்கவில்லை. ஈசுவரனே அவ்வுருவங்களில் தோன்றியதாகக் கருதினார். ஸாதாரணமாக யாவரும் அடிக்கடி சொல்லும்

> गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
> गुरुः साक्षात् परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

என்ற பிரஸித்தமான சுலோகத்திற்கு குருவை பிரஹ்மா, விஷ்ணு, மஹேசுவரர், பரப்ரஹ்மம் இவர்களுக்கு ஸமானமென்று ஸ்தோத்திரம் செய்யவில்லை, இவர்களுக்கும் குருவிற்கும் பேதம் கிடையாது, குருவே அவர்கள், என்றுதான் தாத்பர்யம் என்பது ஸ்ரீமத் ஆசார்யாரின் அபிப்பிராயம். இந்த தத்துவத்தை யாரும் ஒருக்காலும் மறந்துவிட இடம் கொடுக்க மாட்டார்கள்.

ஒரு ஸமயம், மேலான உத்தியோகத்திலிருந்த ஒரு கனவான் சிருங்கேரிக்கு வந்து அங்குள்ள நிலைமைகளை பார்த்துவிட்டு தனக்கேற்பட்ட ஸந்தோஷத்தை ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்தார்.

கனவான்: என்ன அற்புதமான காட்சி! காடுகளுக்கும் மலைகளுக்கும் நடுவில் இவ்விடம் வெகு அழகாக அமைந்திருக்கிறது. துங்காநதியின் ஜலம்தான் எவ்வளவு பரிசுத்தமாகவும் பளிங்குபோல் தெளிவாகவும் இருக்கின்றது? இக்காலத்தில் புகை வண்டிகளும் மோட்டார் வண்டிகளும் இருப்பதால் இம்மனோஹரமான ஸ்தலத்தின் அழகைக்காண இங்கு எளிதாக வந்துவிட முடிகின்றது. நமது ஆதி ஆசார்யார் காலத்தில் இத்தகைய ஸௌகர்யங்கள் யாதொன்றும் இல்லை. கால்நடையாகவே நமது நாடு முழுவதும் ஸஞ்சாரம் செய்திருக்கிறார். இவவளவு மனோஹரமான இடம் இங்கு இருக்கிறதென்று எவ்வாறு கண்டுபிடித்தாரென்பதைப் பற்றி நினைக்கும் போது அவரை மெச்சி மகிழ்ந்து ஆச்சர்யத்தால் மெய்மறந்து விடுகிறேன்.

மஹாஸந்நிதானம்: உலகத்தை ஸ்ருஷ்டி செய்த பகவானுக்கு, தாம் ஸ்ருஷ்டி செய்திருக்கிற பதார்த்தங்கள் எங்கே இருக்கின்றனவென்று கண்டு பிடிப்பதற்குத் தேடி அலைய வேண்டிய அவசியமுண்டா? எது எங்கே உள்ளது என்பதை இயல்பாகவே அவர் அறியாரா? அவர்தானே அதை அங்கே வைத்தது? ஆகையால் ஸ்ரீமத் பகவத் பாதாசார்யார் இதை தகுந்த உத்தமமான ஸ்தல மென்று குறிப்பிட்டு எடுத்துக்

கொண்டதில் ஆச்சர்யப்படுவதற்கு ஒன்று மில்லேயே. ஈசுவரன்தான் ஆசார்யாராக அவதரித்திருக்கிருர் என்பதை மறந்தோ, அவரும் நம்மைப்போல் ஸாதாரண மனிதன் என்று நினைத்தோ இருந்தாலொழிய, அவர் செய்திருக்கும் அரும்பெரும் செயல்களில் ஆச்சர்யப்படுவதற்கோ, வியப்புறுவதற்கோ இடமில்லை.

ஒரு வருஷம் ஸ்ரீசங்கர ஜயந்தீ மஹோத்ஸவ ஸமயத்தில் வித்வான்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். அப்போது ஸ்ரீமத் ஆசார்யார் ஒரு பண்டிதரைப் பார்த்து, பிரஹ்மஸூத்திரத்தில் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி வாக்கியார்த்தம் சொல்லும்படி ஏவினுர்கள். அப்பண்டிதரும் அழகாகவே பிரவசனம் செய்யும் போது, அந்த ஸந்தர்ப்பத்தில் பிரதிபாதனம் செய்வதற்காக எடுத்துக்கொண்ட விஷயத்தை ஸமர்த்தனம் செய்வதற்காக தானுக புதிதாக ஒரு ஹேதுவை சேர்த்துக் கூறினுர்.

மஹா: இந்த ஹேது நம் ஆசார்யார் பாஷ்யத்தில் இருக்கிறதோ?

பண்டிதர்: இல்லை.

மஹா: இல்லையானுல், அதை நீங்கள் சொன்னதற்கு தாத்பர்யம்?

பண்டி: எடுத்துக்கொண்ட விஷயத்திற்கு பக்கபலமாயிருந்து உதவுமென்று சொன்னேன்.

மஹா: நமது ஆசார்யார் இந்த ஹேதுவை சொல்லத் தவறிவிட்டார் என்று உங்கள் எண்ணமா?

பண்டி: அவர்கள் இதையும் சேர்த்திருக்கலாமென்று தோன்றிற்று.

மஹா: சேர்த்திருக்கலாம் மாத்திரம் இல்லை, சேர்த்திருக்க வேண்டியதுண்டு என்றே உங்கள் அபிப்பிராயம்.

பண்டி: நான் அவ்விதம் சொல்லவில்லை.

மஹா: வியக்தமாக அவ்விதம் சொல்லவில்லை யென்பது வாஸ்தவம். ஆனால் இந்த ஹேதுவையும் ஆசார்யார் சேர்த்திருந்தால் அவர்களுடைய பாஷ்யம் இன்னும் அழகாகவும் பூர்ணமாகவுமிருக்கும் என்பதே உங்கள் எண்ணம்.

பண்டி: நான் அப்படி நினைத்ததுண்டு.

மஹா: அதாவது, இந்த ஹேதுவையும் சேர்த்து பாஷ்யத்தை பரிஷ்காரம் செய்ய முயன்றீர்கள்.

பண்டி: இல்லை, இல்லை. அவ்விதம் நான் முயன்றால் அது பெரிய அபசாரமேயாகும்.

மஹா: எப்படியும் இவ்வித எணணம் தங்கள் மனஸில் உள்ளூர உங்களுக்குத் தெரியாமலேயே இருந்திருக்க வேண்டும். இல்லையானால் புதியதான ஒரு ஹேதுவை சொல்லியிருக்க மாட்டீர்கள்.

பண்டி: நான் செய்தது இவ்வித அபிப்பிராயத்திற்கு இடம் கொடுக்குமானால், நான் அவ்விதம் செய்ததற்கு வருந்துகிறேன்.

மஹா: அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். புதிதாக ஒரு ஹேதுவை சொல்லிவிட்டீர்கள். அது எவ்வளவு தூரம் எடுத்துக்கொண்ட விஷயத்திற்குப் பொருத்தமாயிருக்கிறது என்று பார்ப்போம்.

இவ்விதம் சொல்லிவிட்டு ஸ்ரீமத் ஆசார்யார் அந்த ஹேதுவை அலசியெடுத்து, அது கொஞ்சமேனும் பொருத்தமில்லையென்பதை எடுத்துக்காட்டினதுடன், எடுத்துக்கொண்ட விஷயத்தை ஸமர்த்தனம் செய்வதற்குப் பதிலாக நேர் விரோதமாகவும் இருக்கிறதென்பதை சில நிமிஷங்களில் நிரூபித்துக் காட்டினார்கள். அந்தப் பண்டிதரும் தன் தவறை உணர்ந்தார்.

பண்டி: நான் மிகவும் வருந்துகிறேன். நான் சொன்ன ஹேது பொருத்தமில்லை யென்பதை நன்கு உணர்கிறேன்.

மஹா: நீங்கள் வருத்தத்தை தெரிவிக்க வேண்டு மென்பதிலாவது, என்னுடைய வாத சக்தியை விளம்பரப்படுத்துவதிலாவது, நான் எடுத்துக்

காட்டியதற்கு தாத்பர்யம் இல்லை. ஸர்வக்ஞன பகவானுடைய அவதாரமாகிய ஆசார்யார் ஏதேனும் ஒரு விஷயத்தில் தவறக்கூடும் என்ருவது, அல்லது அவசியமாய் சொல்ல வேண்டிய ஏதேனும் அம்சத்தை சொல்லவிட்டிருக்கக்கூடும் என்ருவது மனதில் எள்ளளவு சந்தேகம் இருப்பினும், அதை நீக்கிவிட வேண்டுமென்பதில் தான் என் கருத்து. உண்மையில் அவர் யார் என்பதை மறந்தால்தான் அவர் சொல்லியிருப்பதை பரிஷ்காரம் செய்யலாம் என்ற எண்ணம் எழக்கூடும். அவரும் நம்மைப்போல் ஒரு வித்வான்தானே என்று நினைக்கத் தோன்றிவிடுகிறது. அவ்வித எண்ணத்தை அறவே விட்டுவிட வேண்டும்.

சிரத்தையுள்ள சிஷ்யர் ஒருவர் பிரதிதினம் செய்யும் ஜப விஷயமாக ஏற்படும் ஒரு ஸந்தேஹத்தை நிவிருத்தி செய்து கொள்ளக் கருதி ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்தார்.

சிஷ்யர்: எனக்கு வெவ்வேறு தேவதைகளுக்குரிய மந்திரங்கள் உபதேசமாயிருக்கின்றன. அந்தந்த தேவதைக்கு தனித்தனியாக தியான சுலோகங்கள் இருக்கின்றன. அந்த சுலோகங்களில் வர்ணிக்கப்படும் சில தேவதைகளின் உருவம் ரம்யமாகவுமில்லை, மனதினல் கற்பிக்க முடியாமலுமிருக்கிறது. மிகவும் சிரமப்பட்டு அவ்வுருவத்தை தியான சுலோகத்தில் சொல்லியபடி கல்பித்து விட்டாலும், அது விலக்ஷணமாகவும், விகாரமாகவும் தோன்றுகிறது. ஐந்து தலைகளும் பத்து கைகளும் உள்ள உருவம் எப்படி இருக்கும்? மேலும் இவ்விதம் சிரமப்பட்டு கல்பிக்கப்பட்ட மூர்த்தியை மனக்கண் முன்னல் ஒரு க்ஷணத்திற்குமேல் நிறுத்தி வைக்கவும் முடியவில்லை. ஒரு ஜபத்தை முடித்துக் கொண்டு மற்ருெரு ஜபத்தை ஆரம்பிக்கும்போது, முன் ஜபகாலத்தில் கல்பித்த உருவத்தை மாற்றி வேறு உருவத்தை கல்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்வதில் மிக்க சிரமம் ஏற்படுகிறது. நான்

எவ்வளவு சிரத்தையோடு ஜபத்தை செய்ய நினைத்தாலும் இவ்வித சிரமங்கள் ஏற்படுவதால் ஜபமே சிரமமாகத் தோன்றிவிடுகிறது.

மஹா: ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு ஒரு குறிப்பிட்ட பலனை உத்தேசித்து ஒரு குறிப்பிட்ட தேவதா விஷயமான ஜபத்தை செய்கிறீரா? அப்படியானால் அந்த சிரமத்தை எடுத்துக்கொண்டுதான் தீரவேண்டும். தியான சுலோகத்தில் வர்ணித்திருக்கிறபடியே தான் அந்த தேவதையின் ரூபத்தை தியானம் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

சிஷ்யர்: அப்படி விசேஷமான நோக்கம் எனக்கு ஒன்றுமில்லை.

மஹா: அதாவது, சித்தம் சுத்தமாக வேண்டும், ஈசுவரனுடைய பிரஸாதம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கங்களைத் தவிர வேறு நோக்கம் இல்லை.

சிஷ்யர்: அவ்விதம்தான்.

மஹா: அப்படியானால், ஒவ்வொரு மந்திரத்திற்குமுரிய தேவதையின் ரூபத்தை மனதில் கல்பித்துக் கொள்ளவேண்டிய சிரமம் உங்களுக்கு வேண்டாம்.

சிஷ்யர்: தியான சுலோகங்களைச் சொல்லவே வேண்டாமென்று தாத்பர்யமா?

மஹா: அப்படியல்ல, தியான சுலோகங்களை சொல்லத்தான் வேண்டும்.

சிஷ்யர்: தேவதையின் உருவத்தை மனக்கண் முன்னால் நிறுத்திக்கொள்ளாமல் தியான சுலோகத்தை மட்டும் உச்சரிப்பதில் என்ன பயன்?

மஹா: தியானத்திற்கு மூர்த்தி வேண்டாமென்று நான் சொல்லவில்லையே?

சிஷ்யர்: தியானத்திற்கு மூர்த்தி அவசியம், ஆனால் தியான சுலோகத்தில் சொன்னபடி இருக்க வேண்டாம் என்றால் மந்திரத்திற்கும் மூர்த்திக்கும் மாறுபாடோ, முரண்பாடோ ஏற்படாதா?

மஹா: நீங்கள் மனக்கண் முன் நிறுத்திக் கொள்ளும் மூர்த்திக்குள் அந்த தேவதையும் அடங்கியிருந்தால் அவ்விதம் ஏற்படாது.

சிஷ்யர்: எல்லா தேவதைகளேயும் தம்மிடம் அடக்கியுள்ள பகவானுடைய விசுவரூபத்தை தியானமூர்த்தியாக வைத்துக்கொள்ளலாமென்று அபிப்பிராயமாயிருந்தால், அவ்வுருவத்தை கல்பிப்பது இன்னும் அதிக கடினமாகவல்லவா இருக்கும்? மேலும் அத்தகைய உருவம், அர்ஜுனன் கண்ட மாதிரி, பிரமிக்கத் தக்கதாகவும் பயங்கரமாகவும் இருக்குமாதலால், பக்தனின் மனதில் கொஞ்ச நேரமாவது நிலேத்துநிற்கக் கூடியதாக ரம்யமாக இருக்காது.

மஹா: வாஸ்தவம். விசுவரூப மூர்த்தியை கல்பித்துக் கொள்வதும் கஷ்டம்; கல்பித்தாலும் மனோஹரமாக இராது. அவ்விதமான மானஸிக மூர்த்தியை நான் சொல்லவில்லே.

சிஷ்யர்: அப்படியானுல் எவ்வித தியான ரூபத்தை சொன்னதாக நான் அறிந்து கொள்ள வேண்டும்?

மஹா: சிறிது நேரமாவது மனதில் நிற்கக்கூடியதாக மூர்த்தி இருக்க வேண்டுமானுல், அம்மூர்த்தி கல்பிப்பதற்கு ஸுலபமாயிருக்க வேண்டும், மனதிற்கு ரம்யமாகவும் இருக்க வேண்டுமென்று சொன்னீர்களல்லவா?

சிஷ்யர்: ஆம்.

மஹா: புதிதாக கல்பிக்கப்பட வேண்டிய சிரமமேயில்லாமல், ஏற்கெனவே இருப்பதாயிருந்தால், இன்னும் அனுகூலமல்லவா?

சிஷ்யர்: அதற்கென்ன ஸந்தேஹம்?

மஹா: மேலும் அவ்வுருவத்தை நாமாக ரம்யமாகச் செய்வதற்கு அவசியமில்லாமல், அதுவே இயற்கையிலேயே ரம்யமாக அமைந்து விட்டால், இன்னும் நல்லதுதானே?

சிஷ்யர்: ஆமாம்.

மஹா: நீங்கள் சொன்ன சிரமங்கள் எல்லாம் வெகு காலத்திற்கு முன் ஜீவித்திருந்தவர்களுக்கு இருந்திருக்கலாம். நமக்கு அவ்வித சிரமங்கள் வேண்டியதில்லே.

சிஷ்யர்: எப்படி?

மஹா: நமக்கு முன் இருந்த மஹாஸந்நிதானத்தை தரிசித்திருப்பீர்கள் இல்லேயா?

சிஷ்யர்: ஆம், தரிசித்திருக்கிறேன்.

மஹா: அவர்களே ஒரே ஒரு தடவை தரிசித்திருந்த போதிலும் அவர்கள் ரூபம் உங்கள் மனதில் நன்கு பதிந்திருக்கும். நினேத்துப் பார்த்தால் ஸுலபமாக உங்கள் மனக்கண் முன் நிற்கக்கூடிய முறையில் பதிந்திருக்கும்.

சிஷ்யர்: வாஸ்தவம்.

மஹா: அவர்களுடைய ரூபம் மிகவும் கவர்ச்சிகரமான தென்பதை நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள். இப்பொழுதும் அம்மூர்த்தியை நம் மனக்கண் முன் நிறுத்துவதில் உண்மையான தனி ஆனந்தம் ஏற்படுகிறதென்பதையும் ஒப்புக் கொள்வீர்கள்.

சிஷ்யர்: அப்படியேதான்.

மஹா: மனதில் வருத்திக் கொள்வதில் சிரமமில்லாமை, மனோஹரத்தன்மை என்ற இரண்டு அம்சங்களும் நீங்கள் வேண்டுமென்று சொன்னீர்கள். அவ்விரண்டும் இம்மூர்த்தியில் இருக்கின்றன. மனதை சிரமப்படுத்தி புதிதாக ஓர் உருவத்தை கல்பித்துக்கொண்டு, அதை ரம்யமாகச் செய்துகொள்ளவேண்டிய கார்யமேயில்லே. நீங்களே நேரில் தரிசித்திருக்கிற மூர்த்தி, ஒருவர் மற்றொருவருக்கு எவ்விதங்களிலெல்லாம் ரம்யமாக இருக்கலாமோ அத்தனே விதங்களிலும் கவரக்கூடிய மூர்த்தி; இவ்விதமாக அம்மஹானுடைய மூர்த்தியானது உங்களுக்கு ஸித்தமாகவே இருக்கிறது.

சிஷ்யர்: சிவனேக் குறித்தோ விஷ்ணுவைக் குறித்தோ ஜபம் செய்யும்போது, முன் மஹாஸந்நிதானத்தின் உருவத்தை மனதில் நிறுத்திக் கொண்டால், முரண்படாதா?

மஹா: ஏன் முரண்பட வேண்டும்?

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुर्गुरुर्देवो महेश्वरः ।
गुरुः साक्षात् परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

என்ற சுலோகத்தில் குருதான் பிரஹ்மா, குருதான் விஷ்ணு, குருதான் மஹேசுவரர். குருதான் ஸாக்ஷாத் பரப்ரஹ்மம் என்று சொல்லப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். பரப்ரஹ்மமே குருதான் என்று இருக்கும்போது அந்த பரப்பிரஹ்மத்தில் தோன்றிய எல்லாவித பரிச்சின்னமான வியக்திகளும் குருவினிடத்தில் அடக்கமென்பது அவசியம்தானே? ஆகையால் ஒரு குறிப்பிட்ட தேவதையின் தியான சுலோகத்தையோ மந்திரத்தையோ சொல்லும்போது குருமூர்த்தியை உங்கள் முன் நிறுத்திக் கொள்வதில் எவ்வித முரண்பாடும் கிடையாது. அந்த தேவதையும் குருவின் ஸ்வரூபத்தில் சேர்ந்து அடங்கியுள்ளது தானே?

சிஷ்யர்: எந்த மந்திரத்தை ஜபித்தாலும் குருமூர்த்தியை தியானம் செய்யலாமென்றுதானே நான் அறிந்து கொள்ள வேண்டும்?

மஹா: அப்படியேதான். ஏன் அப்படிச் செய்யக்கூடாது? அடுத்த மந்திரத்தின் தேவதையும் அந்த குருமூர்த்தியில் அடக்கமாயிருக்கும்போது, தியான மூர்த்தியை மாற்றுவதற்கு என்ன அவசியம்? பசுவினிடத்திலும் பிராஹ்மணரிடத்திலும் எல்லா தேவதைகளும் அடங்கியுள்ளார்கள் என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. நம் குருநாதர்,ஸாதாரண ரீதியில் கவனித்தாலும்கூட, பிராஹ்மணர்களுக்குள் உத்தமர், உத்தமமான ஆசிரமத்தில் இருந்தவர், உத்தமமான ஆசார்ய பீடத்தில் இருந்தவர், ஆத்ம ஸாக்ஷாத்காரத்திலும் உத்தமமான நிலையை அடைந்தவர். அப்பேர்ப்பட்ட குருநாதரிடத்தில் ஸகல தேவதைகளும் உள்ளடங்கியே இருக்கிறார்கள் என்பது ஏற்படவில்லையா? எந்த தேவதைக்குப் பதிலாகத்தான் அவர்களை வைத்துக் கொள்ளக் கூடாது?

மேலே குறிப்பிட்ட முந்தின ஆசார்யாரான ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதானந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்று பால்யம் முதலே ஸ்ரீமடத்தின் ஸேவையில் ஈடுபட்டிருந்த பிரஹ்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் அம்மஹானுடைய சரித்திரத்தை கன்னட பாஷையில் எழுதியிருக்கிறுர். அதன் தமிழ் பதிப்பை ஸ்ரீமத் ஆசார்யார் வாசிக்கச் சொல்லி கேட்டுவரும்போது ஒரு நாள் ஸாயங்காலம் வாசிக்கையில், முந்தின ஆசார்யார் யோகாப்பியாஸத்தில் ஒரு நிலேவரை நன்கு தேர்ச்சி பெற்றிருந்ததாகவும் அந்த மார்க்கத்தில் அந்நிலேக்குமேல் போனதாகத் தெரியவில்லேயென்றும் எழுதியிருந்த கட்டம் வாசிக்கப்பட்டது. அதை வாசித்தவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் ''மிகவும் வாஸ்தவம். மேல்போனதாகத் தெரியவில்லே. புஸ்தகம் எழுதினவருக்கு, மேல்போனதாகத் தெரியவில்லே'' என்று அழுத்திச் சொன்ஞர்கள். எழுதியிருப்பது சரியில்லேயென்று சொல்வதில் ஆசார்யாருக்கு இஷ்டமில்லே. ஆனுல் அதுவே முடிவான வார்த்தையென்று விட்டுவிடவும் இஷ்டமில்லே. இவ்வாக்கியத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மஹாஸந்நிதானம் யோகத்தில் அதற்குமேல் போகவில்லேயென்ற தீர்மானத்திற்கு வந்துவிடுவதிலும் இஷ்டமில்லே. ஆகையால், இச்சிறு வார்த்தையிஞல் புஸ்தகம் எழுதினவருக்கு இவ்விஷயமாக பூர்ணமான ஞானமில்லே யென்பதையே சுட்டிக் காட்டிஞர்கள். குருநாதருடைய யோகஸித்திகளில் ஏதேனும் குறையிருக்கலாம் என்ற ஸந்தேஹத்தைக்கூட ஸஹிக்காதவர் ஸ்ரீமத் ஆசார்யார்.

ஒரு நாள் மாலே ஸ்ரீமத் ஆசார்யார் பகவானுடைய அவதாரங்களேப்பற்றி பிரஸ்தாபிக்க ஏற்பட்டபோது ஸ்ரீ கிருஷ்ணரைப்பற்றிச் சொல்லிக்கொண்டு மேலால் சொன்னதாவது -

''ஸ்ரீ ராமர் தர்மத்தை அனுஷ்டித்துக் காட்டுவதோடு நின்றுகொண்டு, வித்தியார்த்தி போல் நடந்து கொண்டாரே தவிர, ஆசார்ய ஸ்தானம் வஹிக்கவில்லே. ஸ்ரீ கிருஷ்ணர் ஆசார்யாராகவும் இருந்தார். பிரவிருத்தி தர்மம் என்ற தர்ம

மார்க்கத்தையும், நிவிருத்தி தர்மம்என்ற ஞான மார்க்கத்தையும் உபதேசித்தார். நிவிருத்தி மார்க்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, எந்த ஸம்பவம் ஏற்பட்டாலும் தந்நிலே வழுவாமல் மனதை ஸமநிலையில் நிறுத்துவதின் அவசியத்தை வற்புறுத்தினுர். ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடைந்த மஹானே அவ்வித ஸமபுத்தியுள்ளவர் என்று வர்ணித்திருக்கிறுர். தம்மையும் அப்படியே ஸமபுத்தியுள்ளவராக வர்ணித்துக் கொண்டிருக்கிறுர்''.

समोऽहं सर्वभूतेषु न मे द्वेप्योऽस्ति न प्रियः ॥

''நான் எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸமமானவன். எனக்கு துவேஷிக்கத்தக்கவன் யாரும் கிடையாது. எனக்குப் பிரியமானவனும் யாரும் கிடையாது''. ஆனுல் க்ஷத்திரிய ஜாதியில் பிறந்து, கிருஹஸ்தாசிரமத்தில் இருந்துகொண்டு, வெறுப்பு விருப்பங்களுக்குரிய விஷயங்கள் அடங்கிய உலகத்தின் மத்தியில் இருக்கும்போது, தாம் சொன்ன உத்தம நிலேயை தம்மாலேயே அனுஷ்டித்துக் காட்ட முடியவில்லே. கீதையிலேயே அடிக்கடி பக்தன் எனக்குப் பிரியமானவன் என்று சொல்லும்படி ஏற்பட்டது.அர்ஜுனனேப் பார்த்தும், ''நீ எனக்கு இஷ்டன்'', ''நீ எனக்குப் பிரியன்'' என்றெல்லாம் சொல்லும்படி இருந்தது. பகவானுல் உபதேசிக்கப்பட்ட லக்ஷ்யநிலே அனுஷ்டானத்திற்கு கொண்டு வரக்கூடியதே இல்லேயென்று எண்ணம் ஏற்பட்டுவிடக் கூடாதென்று நினேத்து, பிராஹ்மணராகப் பிறந்து ஸந்யாஸ ஆசிரமத்தை ஸ்வீகரிப்பதென்று தீர்மானித்துக் கொண்டார். அப்படி செய்தால்தான் கீதையில் கண்ட லக்ஷ்யத்தை தாமே அனுஷ்டித்துக் காட்ட முடியும் என்ற தீர்மானத்துடன் இவ்வுலகில் ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யாராக அவதரித்தார். ஆனுலும் அப்பொழுதும் அநேக அவைதிக மதங்களேக் கண்டிக்கவும், அம்மதவாதிகளே தம் வாதத்தினுல் ஜெயிக்கவும், ஸுதன்வா என்ற ராஜனின் ஸஹாயத்தைக் கொண்டு அவர்களே சிக்ஷிக்கவும் அவசியம் ஏற்பட்டது. இதன் விளேவாக அநேகம் பக்தர்களும் அநேகம் பகைவர்களும் ஏற்பட்டார்கள். ஆகையால், அப்பொழுதும்கூட சாஸ்திரத்தில் சொல்லிய லக்ஷ்ய நிலே ஸாதிக்கத் தகுந்ததுதான் என்று பூர்ணமாக அனுஷ்டானத்தில் காட்டமுடியாமல் போய்விட்டது.''

''அந்நிலை அனுஷ்டானத்தில் ஸாத்தியம்தான் என்று உலகுக்கு தெரிவிப்பதற்காகவே அப்பகவான் மறுபடி நம் குருநாதர் ரூபத்தில் மனுஷ்யனாக அவதரித்தார். அவர் சாந்தியும் ஆனந்தமும் மூர்த்திகரித்தவர். அவர் மனிதர் மிருகம் யாவரையும் கவர்ந்தார். அனைவருக்கும் பிரியமாயிருந்தார். அவர் எல்லாரிடமும் ஒரே மாதிரி ஸ்நேஹபாவம் வைத்திருந்தபடியால், அவருக்கு சத்ரு என்பதும் கிடையாது, நண்பர் என்றும் இருந்ததில்லை. அவரை தரிசிக்க நேர்ந்த எவரும் தானே அந்த மஹானுடைய விசேஷமான பிரீதிக்குப் பாத்திரம் என்று எண்ணிக் கொள்வார்கள். எத்தரத்தாரும் இப்படியே அவரைப் பற்றி நினைத்து வந்ததால், அவர் எல்லா பிராணி வர்க்கங்களிலும் தம்மையே பேதமன்னியில் பார்க்கும் ஸர்வாத்ம பாவம் என்ற நிலையடைந்திருந்தார் என்றே சொல்ல வேண்டும். அவர் எப்பொழுதும் எல்லாவற்றுடன் ஒன்றாகவே இருந்துவந்தவர். தம்முடைய பெருக்கெடுத்துப் பிரவஹிக்கும் அன்பினாலும் அனுக்ரஹத்தினாலும் அந்த ஐக்யத்தை உலகுக்கு காட்டினார் என்பதே நன்கு பொருத்தமாயிருக்கும். இவ்வம்சத்தை கவனிக்கும்போது, முன் அவதாரங்களைவிட நம்மிடையே இவர் செய்த அவதாரம் மிகவும் உபகாரமுள்ளதென்றும், தத்துவத்தை போதிக்கக் கூடியதென்றும், ஊக்கமளிக்கக் கூடியதென்றும் சொல்லலாம்''.

3.வாழ்க்கை நீதிகள்

மற்றொரு ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் அவதாரங்களைப்பற்றி சொல்லும்போது சில அரிய விஷயங்களைக் குறிப்பிட்டார்கள் :

தேவர்களும் அஸுரர்களும் ஒரே தந்தைக்கு வெவ்வேறு தாய்கள் மூலம் பிறந்தவர்கள். கல்பத்தின் ஆரம்பம் முதலே அவர்களுடைய ஸ்வபாவமும் மனப்பான்மையும் வேறுபட்டிருந்ததை உணர்ந்து தனித்தனியே நெடுந்தூரத்தில் அமைந்துள்ள பிரதேசங்களில் வஸிப்பதே நியாயமும் புத்திசாலித்தனமுமாகும் என்று நிச்சயித்து, தேவர்கள் தேவலோகங்களிலும், அஸுரர்கள் அஸுர லோகங்களிலும் வாழ்ந்து வந்தனர். எவனாவது ஓர் அஸுரன் பேராசையினால் தூண்டப்பட்டு தேவலோகத்தின் பேரில் படையெடுத்து அதை தன் வசமாக்கிக் கொள்ள பிரயத்தினப்பட்டாலொழிய, ஸாமான்யமாக இருதரத்தாருக்கும் சண்டை ஏற்பட வழியில்லாமலிருந்தது. ஆதலால், ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்படாத அவரவர்கள் தனிப் பிரதேசங்களில் இருவரும் அநேகமாய் ஒதுங்கியே வாழ்ந்து வந்தனர்.

பிறகு திரேதா யுகத்தில் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி தர்ம ஸ்தாபனத்தின் பொருட்டு அவதாரம் செய்தபோது, தேவர்கள் அயோத்யையிலும் கிஷ்கிந்தையிலுமாகவும், அஸுரர்கள் தண்டகாரண்யத்திலும் லங்கையிலுமாகவும் வஸித்தனர். அதாவது, வெவ்வேறு லோகங்களில் வஸிக்காமல், இந்த பூலோகமென்ற ஒரே லோகத்தில் வெவ்வேறு பாகங்களில் வஸித்து வந்தனர். இங்கேயும் அஸுரர்கள் பலத்திமிரினால் உலகமனைத்தும் ஜெயிக்க வேண்டுமென்று கிளம்பினால், அல்லது அஸுரர்களின் பலத்தை லக்ஷ்யம் செய்யாமல் அவர்களிருக்கும்

தண்டகாரண்யத்தில் தவம் செய்வதற்காக தேவர்கள் புகுந்தால், சச்சரவு நேரலாமே தவிர ஸாதாரணமாக போர் ஏற்படுவது அபூர்வம்.

துவாபர யுகத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனாக அவதரித்தபோது இவ்விதம் ஒரே உலகத்தில் தனித்தனி பிரதேசங்களில் இருப்பதென்று போதாதென்று தேவர்களும் அஸுரர்களும் ஒரே குடும்பத்தில் தோன்றினர். ஸ்ரீ கிருஷ்ணனுடைய நேர் மாமன் கம்ஸனும், அத்தை மகன் சிசுபாலனும் அஸுரர்கள். ஸ்ரீ கிருஷ்ணனுடைய இன்னொரு அத்தை மக்களாகிய பாண்டவர்கள் தேவர்கள். ஆனால் அப்பாண்டவர்களுடைய ஞாதிகளான கௌரவர்கள் அஸுரர்கள். ஆதலால், இவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் ஏற்பட ஸந்தர்ப்பங்கள் பல இருந்தன. அவர்கள் பிறந்த தினம் முதலே அவர்கள் சண்டையும் தொடங்கியது என்பது உண்மை.அவர்களுக்குள் சிற்சில சமயங்களில் ஸமாதானமும் அமைதியும் ஏற்பட்டபோதிலும், அவர்களுடைய ஸ்வபாவ குணங்களால் இடைவிடாமல் சண்டையிடும்படி தூண்டப்பட்டு கடைசியில் மிகப் பெரியதான பாரத யுத்தம் ஏற்பட்டு அநேகமாய் குடும்பம் முழுவதும் அழிந்துபோக நேர்ந்தது.

இக்கலி காலத்திலோ, ஒரு குடும்பத்தில் பந்துக்களாக இணைக்கப்பட்டு ஓரிடத்திலேயே வாழ்வது போதாதென்று ஆகிவிட்டது. தேவர்களும் அஸுரர்களும் வெவ்வேறு லோகங்களில் வஸிப்பதில் திருப்தி கொள்ளவில்லை; ஒரே லோகத்தில் வெவ்வேறு பாகங்களில் வஸிப்பதிலும் திருப்தி கொள்ளவில்லை. ஒரே குடும்பத்தினராய் பிறந்திருப்பதிலும் திருப்தி கொள்ளவில்லை. இப்போது இரு கோஷ்டியாரும் ஒரே சரீரத்தில் இருந்து விடுவதையே விரும்புகின்றனர். ஆதலால், இக்காலத்தில் ஒரு குறிப்பிட்ட மனிதன் தைவீ ஸம்பத் உள்ளவனா, ஆஸுரீஸம்பத் உள்ளவனா என்று சொல்ல முடிகிறதில்லை. ஒரு ஸமயம் தேவனாய் தோன்றுகிறான்; மறுக்ஷணம் ஸாக்ஷாத் அஸுரனாகவே இருக்கிறான். சில அம்சங்களை வைத்து ஒருவனை கெட்டவன் என்று எண்ணினால் மற்ற நடவடிக்கைகளில் அவன் தேவனாகவே காணப்படுகிறான்.

இக்காலத்தில் மனிதனின் அமைப்பில் தைவ ஆஸுர குணங்கள் இரண்டும் கலந்திருப்பதால், அவனுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு க்ஷணமும் இடைவிடாது ஓயாது சண்டை நிகழ்ந்த வண்ணமாய் இருந்து கொண்டிருக்கிறது. நல்ல கார்யமென்று தோன்றக்கூடிய அவனுடைய செய்கைகளிலும் விஷமமான அம்சங்கள் இல்லாமலிருப்பதில்லை. மிகவும் கெடுதலாக அவன் செய்யும் கார்யத்திலும் சிறிதாகவாவது ஏதேனும் நல்ல அம்சமும் இருக்கும்.

தேவர்களும் அஸுரர்களும் வெவ்வேறு லோகங்களில் இருந்தபோது, தேவர்களை காக்கவேண்டி, பகவான் அநேகமாய் தம் பொறுப்பிலேயே தனித்து அஸுரர்களோடு போர் புரிந்திருக்கிறார். பூமியில் வெவ்வேறு பிரதேசங்களில் இருந்தபொழுது, அஸுரர்களின் முக்கிய வாஸஸ்தானமான தண்டகாரண்ய ஜனஸ்தானத்திலும் லங்கையிலும், கிஷ்கிந்தையிலிருந்த தேவாம்சர்களான வானராதிகளின் உதவியைக் கொண்டு போரிட்டார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக தோன்றியபோது, இருதரத்தாரும் பகவானின் உதவியை நாடின ஸந்தர்ப்பத்தில் அவர்களுடைய வேண்டு கோளுக்கு இணங்கி, தம் ஸைன்யத்தை யெல்லாம் கௌரவர் பக்கம் நின்று போரிட அனுப்பிவிட்டு, தாம் மாத்திரம் பாண்டவர் பக்கத்தில் நின்று மிகவும் அனுகூலமாக யோசனைகள் சொல்லிக்கொண்டு ஸாக்ஷியாகவே நின்றுவிட இசைந்தார். இக்காலத்திலோ வெனில், மனிதரின் உள்ளத்திலேயே தேவர்களும் அஸுரர்களும் குடிகொண்டு பலமாக போரிட்டுக் கொண்டிருக்கையில், பகவானைப் பற்றி நினைப்பார் யாரும் இல்லை. ஆகையால், அவர் வெறும் ஸாக்ஷியாகவே இருந்துவிடுகிறார். ஆனாலும் போரின் முடிவை நிச்சயித்து பலனைக் கொடுக்கும் அதிகாரம் அவரையே சேர்ந்திருப்பதால், அவரும் அவ்வுள்ளத்திலேயே இருந்து கொண்டு, அங்கு நடக்கும் போரில் சிறிதும் தலையிடாமல் அங்கு நடப்பதை பார்த்துக் கொண்டு, அதையொன்றும் கவனிக்காத உதாஸீனன் போலவே இருந்துவிட விரும்புகிறார்.

ஜ•ஐ

தென்னிந்தியாவில் பலவிடங்களில் வேலை பார்த்த உத்தியோகஸ்தர் ஒருவர் தன் வாழ்நாளில் முதல் தடவையாக சிருங்கேரிக்குச் சென்ருர். மஹாஸந்நிதானத்தை தரிசிக்கவும் ஸந்தர்ப்பம் கிடைத்தது.

மஹா: சிருங்கேரிக்கு வருவது இதுதான் முதல் தடவையோ?

உத்: ஆம். ஆனல் இங்கே வர வேண்டுமென்ற ஆசை மாத்திரம் வெகு வருஷங்களாக இருந்து வந்தது.

மஹா: இதற்கு முன் இங்கே வருவதற்கு தடை என்ன?

உத்: என் சிறு வயதில் கடப்பை ஜில்லாவில் வேலை பார்த்தேன். அங்கிருந்து சிருங்கேரி வெகு தூரமில்லையென்று ஜனங்கள் சொன்னதால், உடனேயே இங்கு வர ஆவல் கொண்டேன். ஆனல் என் சில நண்பர்களும் பந்துக்களும் ''சிருங்கேரி இங்கிருந்து தூரமில்லை யென்பது வாஸ்தவம். ஆனல் போக்கு வரவுக்கு ஸரியான ஸாதனங்கள் இல்லாததினல் பிரயாணம் மிகவும் அபாயகரம். பல அடர்ந்த காடுகளைக் கடந்து செல்ல வேண்டும்; பல செங்குத்தான குன்றுகளின் மீது ஏற வேண்டும்; வழியில் கொடிய துஷ்ட மிருகங்களும் திருடர்களும் ஏராளமாக இருக்கக் கூடியது; நவீன வாழ்க்கைக்கு உரிய ஸௌகர்யங்கள் ஒன்றுமில்லாமல், மலைகளுக்கு இடையே உள்ள குக்கிராமம் சிருங்கேரி. மேலும் அங்குள்ள துங்கா நதியின் ஜலத்தில் ஒருதரம் அமுங்கினலே, முறைக் காய்ச்சல் பிடித்துக் கொள்வது நிச்சயம்'' என்றிவ்வாறு சொன்னர்கள். இந்த வர்ணனை என்னை ஒரேயடியாய் அசத்தி விட்டது. என் ஆர்வம் குன்றி கடைசியில் இங்கு சிருங்கேரிக்கு வரும் எண்ணத்தையே கைவிடச் செய்து விட்டது. பிறகு கடப்பையிலிருந்து வெகு தூரத்திலுள்ள இடத்திற்கு மாற்றப்பட்டு அங்கிருந்து தொடர்ந்து பல்வேறு இடங்களுக்கும் போக வேண்டியதாய் ஏற்பட்டு விட்டது. பல வருஷங்கள் கடந்து விட்டன. இடையில் எப்போதாவது சிருங்கேரிக்கு புறப்படலாமென்று முயற்சி செய்தால் ஏதாவது அதைர்யமோ அஸௌகர்யமோ

தலேகாட்டி என்னே இங்கே வரவிடாமல் செய்துவிடும். ஆனுலும் இங்கே வந்து தரிசனம் செய்ய வேண்டுமென்ற ஆவல் மாத்திரம் என் உள்ளத்தில் இருந்துகொண்டே வந்தது.

மஹா: இப்பொழுது எப்படி வர முடிந்தது?

உத்: அதுவா? இத்தனே காலத்தை வீணுக்கி விட்டேன். இனி எவ்வித தடை ஏற்பட்டாலும் அதை லக்ஷ்யம் செய்யாமல் வந்துவிடுகிறது என்று தீவிரமான எண்ணம் மனதில் எழுந்தது. அப்படியே வந்துவிடுவதாகத் தீர்மானித்துக் கொண்டேன். இங்கு வந்தும் விட்டேன்.

மஹா: உங்களேக் காண மிகவும் ஸந்தோஷம். இங்கே வந்த பிற்பாடு உங்கள் அனுபவம் எப்படியிருக்கிறது?

உத்: வெகு அத்புதம். இங்கு வருவதாக நிச்சயித்த க்ஷணமே, எத்தகைய இடைஞ்சல்களேயும் ஸுலபமாய் தாண்டி விடலாமென்ற தைர்ய உணர்ச்சியும் குதூஹலமும் எனக்கு ஏற்பட்டன. என்ன ஆச்சர்யம்? இங்கே வருகையில் புகை வண்டியிலோ மோட்டாரிலோ ஒருவித அல்ப அஸௌகர்யங்களும் கூட ஏற்படவில்லே. எதிர்ப்பார்த்ததற்கு மாருக, நான் ஸந்தித்த ஒவ்வொருவரும், நான் சிருங்கேரிக்குப் போகிறேனென்பதைக் கேள்விப்பட்டதும், என்னிடம் விசேஷ அன்பையும் மரியாதையையும் காண்பித்து, வழி முழுவதும் எனக்கு வேண்டிய ஸௌகர்யங்களே செய்து கொடுக்க தாமே முன் வந்தனர். கொடிய மிருகங்களும் திருடர்களும் நிறைந்துள்ளதாகச் சொல்லப்பட்ட காடுகளும் குன்றுகளும், நான் இதுவரை எங்கும் கண்டிராதபடி மஞேஹரமாயும் இன்பம் தருவதாயும் ஊக்கமூட்டுவதாயுள்ள இயற்கை காட்சிகளாகவும் விளங்கின. இங்கு வந்தபின் துங்கா நதியின் தீர்த்தம் மிகவும் தெளிவாயும் ஆரோக்கியத்தைக் கொடுக்கக் கூடியதாகவும், முறைக் காய்ச்சலே உண்டாக்கக்கூடிய தன்மையற்றதாயும் இருப்பதை அனுபவத்தில் தெரிந்து கொண்டேன். சிருங்கேரி நகரமும் வெகு நேர்த்தியாக அமைந்திருக்கிறது; பெரிய

பட்டணங்களிலுள்ள அஸௌகர்யங்கள் எவையும் இங்கு இல்லை. அங்குள்ள ஸகல ஸௌகர்யங்களும் இங்கே விளங்குகின்றன. ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயமும் ஸ்ரீமடமும் அழகும் பொலிவும் நிறைந்து ஓங்கி நின்று காண்போர் உள்ளங்களை உயர்ந்த நோக்கங்களால் நிரப்புகின்றன. இவ்விடத்தில் எனக்குப் பரம நிம்மதியும் பேரானந்தமும் ஏற்படுவதால், என் விடுமுறை நாட்கள் சீக்கிரம் முடிந்து விடுமே, மீண்டும் திரும்பிச் சென்று தொழில் முறையில் மாட்டிக் கொண்டு உழல வேண்டுமே என்றுதான் வருந்துகிறேன்.

மஹா: உங்கள் அனுபவத்தைப் பற்றி நீங்கள் எடுத்துச் சொல்வது மிகவும் ருசிகரமாயிருக்கிறது. அதில் உள்ள பொருத்தத்தை கவனித்தீர்களா?

உத்: எதோடு பொருத்தம்?

மஹா: ஏன், நம் வாழ்க்கையோடுதான். நம் சிறு பிராயத்திலேயே வஸ்துக்களின் உண்மையை அறிய வேண்டுமென்று, நம்மால் விவரித்துச் சொல்ல முடியாத பேரவா நம் உள்ளத்தில் எழுகின்றது. உடனே வேதாந்த சாஸ்திரத்தை மும்முரமாக படித்துவிட வேண்டுமென்று எண்ணுகிறோம். ஆனால் அப்பொழுது நம் சுற்றத்தார், ஆப்த நண்பர்கள், நம் நன்மையைக் கோரும் மற்றவர்கள், எல்லோரும் ஒருங்கே சேர்ந்து, நம் புராதனமான வேதாந்த சாஸ்திரத்தை ஆராய்ந்து அறிய முற்படும் நம்மைக் கண்டு பதறி, ''அடே பைத்தியமே! இந்த இளம் வயதில் இவ்வறிவீனமான முயற்சி மிகவும் அபாயகரமானது. உன்னைவிட வயதிலும் படிப்பிலும் அறிவிலும் முதிர்ந்த எத்தனையோ பெரியோர்கள் அதை ஆராயப் புகுந்து என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்; நீ அத்தகைய விஷயங்களில் ஈடுபட நினைப்பது அறிவின்மையே யாகும். அதனால் விளையும் கெடுதல்கள் சொல்லி முடியாது. இன்னின்னார்கள் அதில் நுழைந்து தங்கள் அறிவின்மையால் நாசமடைந்து உலகத்திற்கு உதவாமல் தொலைந்து விட்டிருக்கிறார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்'' என்றெல்லாம் சொல்லி

அதட்டி எச்சரித்து பயமுறுத்துவார்கள். இவ்விதம் தன் நலம் கருதாது நம் நலத்தையே கருதி சொல்லப்படும் புத்திமதிகளைக் கேட்டு, மனம் தளர்ந்து, உறுதியிழந்து, நாம் ஆரம்பித்த நன் முயற்சியையே கைவிட்டு விடுவோம், ஆனால் இந்த அவா நமது உள்ளத்தில் திருடமாயும் இடைவிடாமல் நம்மைத் தூண்டிக் கொண்டும் இருக்குமேயானால், நம் வாழ்க்கையில் ஒருநாள் நல்ல காலம் வந்தே தீரும். அப்போது, எந்த ஆபத்து வேண்டுமானாலும் வரட்டும், அதில் இறங்கியே விடுகிறது, என்ற உறுதியை கைக்கொள்வோம். இவ்வித திருடமான நிச்சயத்தோடு நமது முயற்சியைத் தொடங்கிவிட்டோமே யானால், வெகு சீக்கிரத்தில் நாம் நடக்கும் வழி, கல்லும் முள்ளும் இல்லாமல், நல்ல ஸமப்பிரதேசமாய், நடப்பதற்கு மிகவும் ஸுகமாக இருக்கும். எங்கெங்கு அபாயமான படுகுழிகளை எதிர்ப்பார்த்தோமோ, அங்கங்கு மேலே அடிவைத்து முன்னேறுவதற்கு அனுகூலமான கற்படிகள் தென்படும். கொடிய மிருகங்களுக்கும் திருடர்களுக்கும் பதிலாக, மிகுந்த அன்போடு நமக்கு உதவ முற்படுவோர்கள் அகப்படுவார்கள். இந்த வழியில் நடந்து செல்லச் செல்ல, உலகத்திலுள்ள எந்த வஸ்துவினின்றும் ஏற்பட முடியாத ஸந்தோஷத்தையும் குதூஹலத்தையும் உணர்வோம். வேதாந்தத்தின் முடிவான பரம தத்துவத்தை கிரஹிக்கும்போது அது அதிபரிசுத்தமாயும் நிர்மலமாயும் ஸுகமாயும் இருந்து நமக்கு ஒப்புயர்வற்ற பரமானந்தத்தைக் கொடுப்பதைக் காண்போம். நீர் வர்ணித்த வரலாற்றிற்கும் வேதாந்த விசாரத்திற்கும் ஓர் அம்சத்தில் மாத்திரம் பொருத்தமில்லை. விடுமுறை நாட்கள் முடிந்ததும் திருப்தியில்லாமலே உங்கள் வேலைக்குத் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறதென்று சொன்னீர்கள். வேதாந்த மார்க்கத்தில் சென்று தத்துவத்தை அறிந்துவிட்ட ஸாதகனுக்குள்ள விடுமுறை முடிவற்றது. ஆதலால் மீண்டும் தன் பழைய கட்டுள்ள நிலைக்குத் திரும்ப வேண்டிய அவசியம் அவனுக்கில்லை.

CR • ED

கோடைகாலத்தில் ஒரு நாள் மாலை ஸ்ரீமத் ஆசார்யார் விசாலமான ஓரறையில் இருந்துகொண்டு சிஷ்யர்களுக்கு தரிசனம் அளித்தார்கள். அங்கு வந்தவர்களில் ஒருவர் அருகில் வைத்திருந்த மின்சார விசிறியைக் கண்டு அதிலுள்ள திருகை திருகினார்; ஆனால் மின்சார சக்தி தடைப்பட்டிருந்ததால் அவ்விசிறி ஓடவில்லை. இதைப் பார்த்த ஸ்ரீமத் ஆசார்யார் புன்னகையுடன் சொல்லவாரம்பித்தார்:

தினந்தோறும் காலையில் தூங்கி எழுந்து பூமியில் காலை வைக்கும்போது நம்மை மன்னிக்க வேண்டுமென்று பூமிதேவியைப் பிரார்த்தித்துக் கொள்வது நம் பரம்பரையாக வந்த பழக்கம்; பூமியைத் தோண்டின ஸகர மஹாராஜாவின் அறுபதினாயிரம் புத்திரர்களும் எரிந்து சாம்பலாயினரென்ற கதை யாவரும் அறிந்ததே; எனினும் நாம் பூமியை தேவதையாக நினைப்பது இல்லை; மேலும் நம் விளக்குகளுக்கு தினந்தோறும் தேவையான எண்ணெயை பூமியை ஆழமாகத் தோண்டி எடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஜலங்களுக்கெல்லாம் அதிபதியான வருண பகவானை, இக்காலத்து இயந்திரங்களை இயக்கவும், நம் வீட்டிற்கு வேண்டிய தண்ணீரை குழாய்களின் மூலம் கொடுக்கவும் உபயோகப்படுத்திக் கொள்கிறோம். எந்த முக்கியமான அக்னி பகவான் மூலமாக ஸகல தேவர்களையும் பித்ருக்களையும் வழிபடுகிறோமோ, அவரை வேலையாள் போல நாம் ஏவும் கார்யங்களை செய்துகொண்டு, ஒரு பொத்தானை அழுத்தினால் உடனே உஷ்ணத்தையும் பிரகாசத்தையும் கொடுக்கும்படிச் செய்திருக்கிறோம். ஸர்வ பிராணிகளுக்கும் தேவதையாயிருக்கிற வாயு பகவானையும் அப்படியே ஒரு பொத்தானை அழுத்தினால் வேலையாள் போலவே நம்முடைய தேவைகளுக்கு உதவும்படி செய்திருக்கிறோம். பரமஸூக்ஷ்மமான ஆகாசத்தையும் எத்தனையோ தொலைவில் ஏற்படும் சப்தங்களை நம்மிடம் கொண்டுவந்து நம்மை ஸுகப்படுத்தும்படி செய்திருக்கிறோம். இவ்விதமாக நாமும் ஐந்து பூதங்களையும், ராவணன் செய்ததுபோல, அடக்கியாள ஆரம்பித்து விட்டோம்; அவனுடைய கதி நமக்கு வரவேண்டியதுதான் பாக்கி. அவனுக்கு ஏற்பட்ட முடிவிலிருந்து, அவனுக்கு இருந்தது போன்ற ஸகலவிதமான மேன்மையாலும் பயன் இல்லையென்ற நீதியை நாம் கற்றுக் கொள்ள வேண்டாமா? ஜீவாதார தத்துவமான தர்மத்தைக் கைவிட்டுவிட்டால், கட்டமைந்த தேஹத்தினால் என்ன பயன்? சுறுசுறுப்புடன் தங்கள் வேலைகளைச் செய்யக்கூடிய இந்திரியங்களினால்தான் என்ன பயன்? கூர்மையான அறிவு

இருந்துதான் என்ன பயன்? பணப் பெருக்கும் பேரதிகாரமுமா பயனளிக்கும்? ஒரு பயனேயும் அளிக்காது. மின்சார சக்தி தடைப்பட்டுவிட்டால், திருகை திருகி என்ன பிரயோஜனம்? எது இருந்தால் இத்தகைய மேன்மையெல்லாம் ஏற்படக் கூடுமோ, அந்த ஈசுவர பிரஸாதத்தை மறந்து கவனிக்காமல் போனுல் என்ன பிரயோஜனம்?

ஸந்யாஸி ஒருவர் வெகு நாட்களாக ஸ்ரீ மடத்திலேயே இருந்துகொண்டு தன்னுடைய சாந்த ஸ்வபாவத்தினுல் ஸ்ரீமத் ஆசார்யாரின் பரிபூர்ணமான ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்தார். அங்கே வெகுநாள் இருந்து பழகிவிட்டபடியால் ஸ்ரீமடம் சிப்பந்திகள் அவரிடம் தங்களுக்குத் தெரியாமலே அதிஸஹஜமாக பழகி வந்தார்கள். ஒரு நாள் அவருக்கு இட்ட ஆஹாரத்தில் உப்பு போதுமான அளவு இல்லை. அதை அவர் உடனே சமையல்காரனிடம் சொன்னுர். அதற்கு அச்சமையல்காரன், அவரைப் புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சமேனும் இல்லாமல் ஸஹஜமாக விளையாட்டாக ''என்ன ஸ்வாமிகளே! உங்கள் நாக்கை இன்னும் கட்டுப்படுத்தவில்லை போல தெரிகிறதே. ருசிகரமான ஆஹாரத்தைத் தேடுகிறதே'' என்று சொல்லிவிட்டான். இவ்வார்த்தை ஸ்வாமிகளை கொஞ்சம் துன்புறுத்தியது; ஆனுலும் பதில் ஒன்றும் சொல்லாமலே அன்று பிக்ஷையை முடித்துக் கொண்டார். அடுத்த நாளும் அதற்கு மறுநாளும் ஸ்வாமிகள் போஜனசாலைக்கே போகவில்லை. சிப்பந்திகளும் பல வேலைகளில் ஈடுபட்டிருந்தபடியால் இவர் வராததை கவனிக்கவில்லை. மூன்ரும் நாள் இவர் ஸ்ரீமத் ஆசார்யாரை வந்தனம் செய்தபோது அவரை நோக்கி ஸ்ரீமத் ஆசார்யார் ''மிகவும் களைப்பாய் தெரிகிறதே. என்ன காரணம்? ஏதேனும் மனதிற்கு சிரமமேற்பட்டிருக்கிறதா?'' என்று கேட்டதற்கு, ''ஒன்றுமில்லை'' என்று இவர் பதில் சொன்னதின் பேரில் ஸ்ரீமத் ஆசார்யார் ''அப்படியானுல் ஆஹாரம் சரியாக கிரஹித்துக் கொள்ளவில்லையா?'' என்று கேட்டுவிட்டார்கள். அப்போது இந்த ஸ்வாமிகள் தான் இரண்டு நாட்களாக ஆஹாரம் எடுத்துக் கொள்ளாததைச் சொல்ல வேண்டியிருந்தது. மேலும் கேள்வி கேட்டதில், சமையல்காரன் சொன்ன வார்த்தையால் தான் வருத்தமடைந்ததையும் ஒப்புக்கொள்ளும்படி ஏற்பட்டது. அதன்பின் ஸ்ரீமத் ஆசார்யார் சொல்லவாரம்பித்தார் : -

''தாங்கள் இங்கே இருந்துவரும் நோக்கம் ஆஹாரத்தின் பொருட்டு அன்று. பசியைத் தணிக்க எது கிடைக்கிறதோ அது போதும். அது போதியதே என்று இருக்க வேண்டும். தங்களிடம் அந்த சமையல்காரன் அவ்விதம் பேசியது உசிதமில்லை யென்பதில் ஸந்தேஹமில்லை. ஆனாலும் அவன் சொன்னதை, ஆஹாரம் பசியைத் தணிக்கப் போதுமானதாக இருந்தால் அதன் ருசியை கவனிக்கக் கூடாது, என்று ஒரு நல்ல உபதேசமாக தாங்கள் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதா? உண்மையில் தாங்கள் 'உப்பு சரியாகப் போடவில்லை' என்று சொன்ன சொல்தானே அவனை அப்படி பதில் சொல்லும்படி தூண்டிற்று. நீங்கள் உங்களை அடக்கிக் கொண்டு, கொடுத்த ஆஹாரத்தை சாப்பிட்டிருப்பீர்களேயானால், பின்னால் அவன் சாப்பிடும்போது உப்பு சரியாய் போடவில்லையென்பதை அவனே உணர்ந்து, உங்களிடம் ஓடிவந்து உப்பில்லாத உணவை உங்களுக்கு இட்ட அபசாரத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு, அன்று முதல் ஆஹாரத்தை வெகு ஜாக்கிரதையாக ஸித்தம் செய்திருப்பான். நீங்கள் பேசாமல் மாத்திரம் இருந்திருந்தால், இப்படியே எல்லாம் நடந்திருக்கும். அவ்விதம் இருந்துவிடாமல் நீங்கள் ஆத்திரப்பட்டு சொன்ன சொல் அவனை அப்படி பதில் சொல்லச் செய்தது. அவன் பதில் தங்கள் ரோஷத்தைக் கிளப்பி மன அமைதியைக் குலைத்து கலக்கிவிட்டது. இரண்டு நாள் பட்டினியும் ஏற்பட்டது'' என்றார்கள். அந்த ஸ்வாமிகளும் ''என் தவறை உணர்கிறேன்'' என்று சொன்னவுடன், ஸ்ரீமத் ஆசார்யார் ''ஞானத்தின் பொருட்டு நீங்கள் செய்யும் முயற்சிகளுக்கு உதவி புரியவே இந்த ஸம்பவம் ஏற்பட்டது. அப்படி பாவிக்கவும்'' என்றார்கள். இவ்வுபதேசத்தை அப்படியே சிறிதும் தவறாமல் ஏற்றுக்கொண்டு தன் நடத்தையில் காட்டி வந்தார் அந்த ஸ்வாமிகள். அன்றுமுதல் உலகப் பேச்சுக்களில் அதிகமாக ஈடுபடுவதில்லை. தன்னோடு முன்னால் ஸஹஜமாய் பழகிவந்தவர்களும்கூட அவரிடத்தில் மிக்க மரியாதையுடன் நடந்துவரும் நிலைமை ஏற்பட்டது.

4. உண்மையான பக்தி

ஒரு சிஷ்யர் தன்னுடைய பூஜைப்பெட்டியை எடுத்துக் கொண்டுபோய் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் காட்டினர். அவர்கள் அதிலுள்ள மஹாலிங்கங்களையும் ஸாலக்கிராமங்களையும் நன்கு கவனித்து அவைகளிலிருந்து ஒரு ஸாலக்கிராமத்தை மாத்திரம் எடுத்துத் தனியாய் வைத்துவிட்டார்கள். அது பின்னப்பட்டு (உடைந்து) பூஜைக்குரியதில்லையென்று பின்னல் தெரிய வந்தது. அந்த சிஷ்யருக்கு பெட்டியை திருப்பிக் கொடுக்கும்போது,

மஹாஸந்நிதானம்: நீங்களேதான் நித்திய பூஜையை செய்து வருகிறீர்களென்று நம்புகிறேன்.

சிஷ்யர்: ஆம், ஆனல் எனக்கு வேத மந்திரங்கள் அதிகமாகத் தெரியாது. புருஷ ஸூக்தமும் ஸ்ரீ ருத்ரமும் ஒருவாறு தெரியும். இந்த அல்ப யோக்கியதையுடன், சாஸ்திரங்களில் கண்ட நியமங்களை பூராவும் அனுஷ்டித்து செய்வதற்கில்லாமல் போனலும், ஏதோ அப்படிக்கு இப்படிக்கு பூஜையை நானே செய்து வருகிறேன்.

மஹா: இதைக் கேட்க மிகவும் ஸந்தோஷம். நமக்கு பசித்ததேயானல், நன்ருக சாப்பிடக்கூடியவனைக் கூப்பிட்டு சாப்பிடச் சொன்னல் நமக்கு வயிறு நிரம்பாது. போஜன விதிகளை யெல்லாம் நாம் தெரிந்து கொண்டிராவிட்டாலும், நாமேதான் சாப்பிட வேண்டும். சில தனிகர்கள் தாங்கள்

செய்ய வேண்டிய நித்திய பூஜையை தாங்களே செய்வது கௌரவக் குறைவு என்று நினைத்து ஏதேனும் ஒரு வைதிக சாஸ்திரிக்கு பிரதிமாஸம் ஏதோ அல்பமாக தக்ஷிணை கொடுத்து அவரையே பூஜை செய்யும்படி நியமித்துக் கொள்கிறார்களென்பதை அறிவேன். அந்த சாஸ்திரி அந்த தக்ஷிணைக்காகவே பூஜை செய்கிறபடியால், அப்பூஜையிலிருந்து அவருக்குப் புண்ணியம் ஏற்பட இடமில்லை. அந்த தனிகர் பூஜையையே செய்யாததினால், அவருக்கும் புண்ணியம் ஏற்படாது. ஏதோ எளியவர்களுக்கு பணத்தை விநியோகம் செய்வதற்கு இது ஒரு தோஷமில்லாத வழி என்று வேண்டுமானால் ஆகும். சில விஸ்தாரமான வைதிக கர்மாக்களுக்கு மற்றவர்களுடைய ஸஹாயத்தைக் கோரவும், தனக்குப் பதிலாக இன்னொருவரைக் கொண்டு செய்யவும் அவசியமுண்டு என்பது வாஸ்தவம். ஆனால் நித்தியம் செய்ய வேண்டிய பூஜை அவை மாதிரியல்ல. இதன் பிரயோஜனத்தை அடைய வேண்டுமென்று நினைப்பவர் அப்பூஜையை தானே தான் செய்ய வேண்டும். தனக்குள்ள யோக்கியதை கொஞ்சமாயிருந்தாலும் தானேதான் அப்படிக்கு இப்படிக்கு என்றாவது செய்தே தீரவேண்டும்.

ஒரு நாள் ஸாயங்காலம் இன்னொரு சிஷ்யர் ஒரு பெரிய பச்சை மஹாலிங்கத்தை எடுத்துக்கொண்டு வந்து ஸ்ரீமத் ஆசார்யார் முன்னால் வைத்தார்.

மஹா: என்ன விசேஷம்?

சிஷ்யர்: இம் மஹாலிங்கம் என் குடும்பத்தில் வெகு தலை முறையாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது எங்களுக்கு ஸௌகர்யம் மிகவும் குறைந்து விட்டபடியால், அதை சரிவர ஆராதனம் செய்வதற்கு முடியாமல் இருக்கிறோம். ஆகையால் இவ்விடத்தில் ஸமர்ப்பித்து விடலாமென்று இங்கே கொண்டு வந்திருக்கிறேன்.

மஹா: சரிவர ஆராதனம் செய்ய முடியவில்லையென்றால் என்ன அர்த்தம்? வீட்டில் எல்லாரும் சாப்பிடுவதையே நிறுத்தி விட்டீர்களா?

சிஷ்யர்: இல்லையே.

மஹா: அப்படியானால், இம் மஹாலிங்கத்தை ஆராதனம் செய்வதில் என்ன கஷ்டம்? பகவான் எப்பொழுதும் எதையும் சாப்பிடுவது கிடையாது; அவருக்கு ஒருக்காலும் பசியும் கிடையாது. உங்கள் அன்னம் ஸித்தமான பிறகு, நீங்கள் அதை உபயோகித்துக் கொள்வதற்கு முன்னால், பகவானுடைய கருணையோடு கூடிய அனுக்ரஹத்தை நன்றியுடன் மனதில் நினைத்துக் கொண்டு, பகவானுக்கு நிவேதனம் செய்துவிட்டு, அவ்விதம் நிவேதனம் செய்வதினாலேயே மிகவும் பரிசுத்தமாக்கப்பட்ட அவ்வன்னத்தை நீங்கள் கிரஹிக்கிறீர்கள். பகவானுக்கு உங்களிடமிருந்து யாதொன்றும் தேவையில்லை. சில விசேஷமான மூர்த்திகளை ஆராதனை செய்வதில் பல நிபந்தனைகள் இருக்கும். ஸாமான்யமாய், சாஸ்திரங்களில் நிஷேதிக்கப் படாததாக எந்த ஆஹாரம் நீங்கள் சாப்பிட்டாலும், அதையேதான் பகவானுக்கு நிவேதனம் செய்ய வேண்டும். இதற்காக தனிசிரமம் கிடையாது. இதற்காக தனியாக கொஞ்சமேனும் பணச்செலவும் கிடையாது. அப்படியிருக்கையில் ''ஆராதனை செய்ய சக்தியில்லை'' என்று ஏன் நினைக்கிறீர்கள்? எவ்வளவு எளிமை ஏற்பட்டாலும், ஒன்றுமே சாப்பிடுவதில்லை யென்று நிறுத்திவிட்டாலொழிய ''சக்தியில்லை'' என்று உங்களைச்

சொல்லிக்கொள்ள இடமில்லை. ஒரு பழம், ஒரு கிண்ணம் பால், அதுவுமில்லையானால் ஒரு கிண்ணம் தீர்த்தம், எதுவாயிருந்தாலும் நீங்கள் கிரஹிப்பதாயிருந்தால் அதுவே நீங்கள் ஆராதிக்கும் பகவானுக்கும் போதுமானது. ஆகையால் இதைத்தவிர வேறு காரணங்கள் இல்லாத விஷயத்தில், இந்த மஹாலிங்கத்தை நீங்கள் திரும்ப உங்கள் வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டியதுதான்.

சிஷ்யர்: இந்த மஹாலிங்கம் என் கிருஹத்தில் இருப்பதால் என்னுடைய சிரமங்கள் அதிகப்பட்டுக் கொண்டு வருகின்றன என்று கொஞ்சகாலமாக எனக்குத் தோன்றி வருகிறது.

மஹா: அதுவும் அப்படியா? உங்கள் தகப்பனார், அவர் முன்னோர்கள் மிகவும் செழிப்பான தசையில் இருந்துவந்த போதும், இந்த மஹாலிங்கம் உங்கள் கிருஹத்தில் இருந்தது என்றே நினைக்கிறேன்.

சிஷ்யர்: ஆமாம்.

மஹா: அப்பொழுது தங்கள் கிருஹத்தில் இந்த பவித்திரமான மூர்த்தி இருப்பதினாலேயே தாங்கள் செழிப்பாக இருந்து வருவதாக அவர்கள் நினைத்து வந்தார்களல்லவா?

சிஷ்யர்: வாஸ்தவம்.

மஹா: இப்பொழுது அதே மூர்த்தி உங்கள் சிரமங்களுக்கு காரணம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்.

சிஷ்யர்: ஆம்.

மஹா: இம் மஹாலிங்கம் எப்பொழுதும் ஒரே மாதிரிதான் இருந்து வருகிறது. அனுக்ரஹ மூர்த்தியாக நினைத்திருந்த காலத்தில் அனுக்ரஹங்களே ஏற்பட்டுக் கொண்டிருந்தன. நிக்ரஹ மூர்த்தியாக நினைக்கும்போது நிக்ரஹமே ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ஆகையால், அம்மூர்த்தியின் பேரில் தோஷம் கல்பிக்க இடமேயில்லை. எப்படியும் உங்கள் சிரமங்களுக்கெல்லாம் இம்மூர்த்தியே

தான் காரணம் என்ற அசட்டு எண்ணம் உங்கள் மனதில் குடிகொண்டு விட்டபடியால், இனி அதை உங்கள் கிருஹத்தில் வைத்துக் கொண்டிருக்கிற ஒவ்வொரு க்ஷணமும் நீங்கள் அபசாரம் செய்வதாகவே யாகும். ஆகையால், இதை இங்கேயே வைத்துவிடுங்கள். ஆனல் வீட்டில் வேறு ஏதேனும் மூர்த்தி இருக்கிறதா?

சிஷ்யர்: ஆம், இருக்கிறது.

மஹா: நீங்கள் சாப்பிட உட்காருவதற்கு முன், உங்கள் நித்ய ஆஹாரத்தை அந்த மூர்த்திக்காவது நிவேதனம் செய்யுங்கள். இந்த மஹாலிங்கத்தை கொடுத்துவிட்ட படியால், இனி பகவானை நினைப்பதற்கு அவசியமே யில்லாமல், சமையலானவுடன் இனிமேல் சாப்பிட்டு விடலாமென்று நினைத்து விடாதீர்கள். நீங்கள் எவ்வளவு தரித்திரராக இருந்தாலும், இந்த நித்தியமான கடமையை கைவிடக் கூடாது. வாஸ்தவத்தில், நாம் பகவானுக்கு ஒன்றும் கொடுப்பதில்லை. ஏற்கெனவே அவருக்கு பாத்தியப்பட்டதைத்தான் (சொந்தமானதைத்தான்) நாம் அவருக்கு அர்ப்பணம் செய்கிறோம். அர்ப்பணம் செய்த பிறகு, பகவானுடைய அனுக்ரஹத்துடன் பிரஸாத ரூபமாக கொஞ்சமேனும் குறைவன்னியில் நமக்கேதான் திரும்ப வந்துவிடுகிறது.

மற்றெருரு சிஷ்யர் சிருங்கேரிக்குப் போய் ஸ்ரீமத் ஆசார்யாரை வணங்கினர்.

மஹா: நீங்கள் உங்கள் ஊரிலிருந்து நேரே இங்கு வருகிறீர்களா? வழியில் எங்கேனும் இறங்கிவிட்டு வருகிறீர்களா?

சிஷ்யர்: நேரேதான் வருகிறேன்.

மஹா: அப்படியானல் நீங்கள் நேற்றைக்கு முந்தின நாள் காலை போஜனத்தை முடித்துக் கொண்டு உங்கள் வீட்டிலிருந்து புறப்பட்டிருக்க வேண்டுமே? அன்று ராத்திரி மாத்திரம் ஆஹாரம் வேண்டாமென்று இருந்திருக்கலாம். நேற்று என்ன செய்தீர்கள்?

சிஷ்யர்: ஜோலார்பேட்டை ரயில் ஸந்திப்பில் நேற்று காலேயில் இரண்டு மணி அவகாசம் இருந்தது. ஸ்டேஷனில் இருந்த குழாய் ஜலத்தில் அவஸரமவஸரமாக ஸ்நாநம் செய்துவிட்டு, நித்திய ஜபங்களே ஸங்கிரஹமாக செய்து கொண்டேன். இரண்டு மூன்று வாழைப் பழங்களே சாப்பிடுவதற்கு மாத்திரம் அவகாசம் இருந்தது.

மஹா: ஆஹ்நிகங்களே விட்டுவிட அவசியமில்லாமல் ஏற்பட்டதைப் பற்றி சந்தோஷம். ஆனுல் பூஜைக்கு என்ன செய்தீர்கள்?

சிஷ்யர்: பூஜை கொஞ்சம் விஸ்தாரமான கார்யம். பூஜையை செய்வதற்கு ரயில்வே ஸ்டேஷன் உசிதமான இடமில்லேயே? ஆகையால் பூஜை செய்யவில்லே. அதற்கு வருந்துகிறேன்.

மஹா: நீங்கள் சொல்வது மிகவும் நியாயம். ஆனுலும் பூஜையை ஸங்கிரஹமாகவாவது செய்தீர்களா?

சிஷ்யர்: அதற்கு அவகாசம் ஏது?

மஹா: ஏன், வாழைப் பழம் சாப்பிட அவகாசம் இருந்திருக்கிறதே?

சிஷ்யர்: பூஜையை அவ்வளவு ஸுலபமாகச் செய்ய முடியுமா?

மஹா: ஏன் செய்யக்கூடாது? வாய்க்குள் போட்டுக் கொள்வதற்காக கையில் வாழைப் பழத்தை எடுக்கும் போதே, வாய்க்குள் போட்டுக் கொள்வதற்கு முன், தங்கள் பூஜையிலுள்ள பகவானுக்கு நிவேதனம் செய்திருக்கலாமே? அவ்விதம் செய்தீர்களா?

சிஷ்யர்: செய்யவில்லே. பகவான் ஸம்புடத்தில் இருந்தார். ஸம்புடம் என் மூட்டையில் இருந்தது. அப்படியிருக்க, எப்படி நிவேதனம் செய்ய முடியும்? அம்மூர்த்திக்கு நிவேதனம் செய்ய வேண்டுமானுல், அதை வெளியில் எடுத்துத்தானே ஆகவேண்டும்.

மஹா: அதாவது, பகவானுடைய மூர்த்தி ஸம்புடத்திலும் மூட்டையிலும் அகப்பட்டுக்கொண்டு கட்டுப்பட்டு விட்டபடியால், நீங்கள் நிவேதனம் செய்யும்போது உச்சரிக்கும் சப்தத்தை அவர் கேட்க முடியாது. ஆகையால்

நிவேதனத்தையும் அங்கீகரிக்க முடியாத நிலையில் இருக்கிறார். இப்படியா உங்கள் ஆராதன தேவதையை பாவித்திருக்கிறீர்கள்?

சிஷ்யர்: மூட்டையிலுள்ள மூர்த்தியை நான் பார்க்க முடியாததினால், அம் மூட்டைக்கு வெளியில் அதிலுள்ள பகவானும் பார்க்க முடியாதென்று நினைத்தது அசட்டுத்தனம்தான் என்பதை நன்கு இப்பொழுது உணர்கிறேன்.

மஹா: உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த நினைப்பது இவ்வளவுதான். அக்கம்பக்கம் சூழ்நிலை எவ்வளவு விபரீதமாக இருந்தாலும், நாம் பகவானைப் பற்றி நினைத்துக் கொள்ளவும் எங்கும் நிறைந்த அவரை வணங்கவும் அவகாசம் இருக்கவே இருக்கிறது. அவருடைய அபரிமிதமான அனுக்ரஹமும் கருணையும் எப்பொழுதும் நம் கூடவே இருந்து வருவதால் நன்றி ததும்பிய உள்ளத்துடன் நினைத்து வணங்கினால் போதும்; விஸ்தாரமாக பூஜை செய்ய முடியவில்லை என்று ஒன்றும் செய்யாமல் இருந்துவிடக் கூடாது.

ஒரு கிழவர் ஒரு ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து அனுக்ரஹத்தைக் கோரினார்.

மஹா: நீங்கள் ஜீவனம் எப்படி நடத்துகிறீர்கள்?

கிழவர்: எனக்கு லௌகிக ஸம்பத்துமில்லை, வைதிக ஸம்பத்துமில்லை. பக்தி நிறைந்த சில பாடல்கள் கற்றுக் கொண்டிருக்கிறபடியால், பஜனை கோஷ்டிகளில் நானும் சேர்ந்து கொள்ள முடிகிறது. இக்காலத்தில் அநேகமாய் எல்லாக் கிராமங்களிலும் பஜனை கோஷ்டியார் இருந்து வருவதால், நான் போகும் இடங்களில் எல்லாரும் உபசாரமாக என்னை வரவேற்கிறார்கள். இவ்விதமாக பஜனை மூலமாக என் ஜீவனத்தை நடத்திக் கொள்ள முடிகிறது.

மஹா: நீங்கள் இவ்வளவு ஸாத்விகமான ஜீவனோபாயத்தை கைப்பிடித்து அதில் திருப்தி யடைந்திருக்கிறீர்களென்று

தெரிய ஸந்தோஷம். ஆனுல் உங்கள் மனேபாவத்தை கொஞ்சம் திருத்திக் கொண்டால் உங்களுக்கு க்ஷேமம் உண்டு.

கிழவர்: எப்படி திருத்திக் கொள்ள வேண்டும்?

மஹா: பகவானுடைய நாமாவை உரக்க உச்சரித்துக் கொண்டு தெரு வழியே ஒருவர் சென்ருல், குழந்தைகளும் ஸ்திரீகளும் கைநிறைய அரிசியை எடுத்துக் கொண்டு வந்து சீக்கிரமாகவே அவருடைய பாத்திரத்தை நிறைத்து விடுகிருர்கள். அன்று அவருக்கு சாப்பாட்டுக்கு வேண்டியதற்கு மேலேயே கிடைத்து விடுகிறது. இது உங்களுக்கே தெரிந்த விஷயம். ஈசுவரனுடைய பெயரைச் சொல்வது நல்ல புண்ணிய கர்மாதான். ஆனுல் பிடி அரிசியை உத்தேசித்துச் சொன்னுல் புண்ணிய கர்மாவாக ஆகாது. அரிசி கொண்டு வந்து போட தாமதமானபோது, தெருவின் வீடுகளிலுள்ளே இருக்கும் ஜனங்களின் காதில் விழ வேண்டுமென்ற எண்ணத்துடன், முன்னிலும் உரக்க அவர் ஈசுவரனுடைய நாமத்தைச் சொன்னுல், ஈசுவரன் காதில் விழுவதற்காக அவ்விதம் உரக்கச் சொல்லவில்லை. ''எனக்கு அரிசி கொண்டு வாருங்கள்'' என்ற வாக்கியத்திற்கு பதிலாகவோ விரிவுரையாகவோ தான் அந்த நாமா சொல்லப்பட்டது என்பது நன்கு விளங்கி விடுகிறதல்லவா? ஈசுவரனை உத்தேசித்து இந்த நாமா உச்சரிக்கப்படாததினுல், அச்சொல்லை ஈசுவரன் காது கொடுத்துக் கேட்க மாட்டார். இந்த உத்தமமான ஈசுவர நாமாவை இந்த மாதிரி அல்பமான பிரயோஜனத்தைக் கருதி உபயோகிப்பது நியாயமேயில்லை. இவ்விதம் உபயோகித்தால் ஈசுவரனுடைய நாமாவை துஷ்பிரயோகம் செய்ததாகவே ஆகும் என்றுகூடச் சொல்லலாம். ஆதலால், பகவானைப் பஜிப்பதையும், தன் பிழைப்பையும் கார்ய காரணங்களாக ஆக்காமல், அதாவது பஜனையினுல் பிழைப்பு நடக்கிறது என்ற எண்ணத்தை ஒழித்து, அதற்குப் பதிலாக ''நான் பஜனை செய்து வருகிறேன். ஈசுவரன் என்னைக் காப்பாற்றி வருகிருர்'' என்று மாத்திரம் நினையுங்கள் என்றுதான் சொல்லுகிறேன். இவ்விதம் நினைக்காவிட்டால்,

பிழைப்புக்கு ஸாதனமாகக் கருதப்படும் பஜனை யினுடைய பலன், பிழைப்பு நடந்ததும் தீர்ந்துவிடும்; பிறகு அதிலிருந்து புண்ணியம் ஒன்றும் ஏற்படுவதற்கில்லை. மேலும் இக்கார்ய காரண ஸம்பந்த விஷயமான எண்ணம், நீங்கள் விரும்பும் வகையில் ஸுகமாய் பிழைப்புநடக்காவிடில், இப்போது உங்களுக்கு பஜனையில் இருந்து வரும் நம்பிக்கையைக் கூட அழித்துவிடும். ஈசுவரனை நீங்கள் வழிபடுவதற்காக அவர் உங்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு அந் நன்றியைக் காட்டுவதற்காக உங்களுடைய தேவைகளை அளிக்க வேண்டும் என்ற எண்ணம்கூட, நீங்கள் அறியாமலேயே, உங்கள் மனதிற்குள் எழலாம். நீங்கள் பாடிய ஸ்துதிபாடல்களுக்குத் தக்கபடி ஈசுவரன் உங்களிடம் தம் நன்றியைக் காட்டவில்லையே என்றும் சிற்சில ஸமயங்களில் தோன்றலாம். இவ்வித எண்ணங்கள் ஆத்மஞான மார்க்கத்தில் மேல்மேலும் போக வேண்டிய உங்களை கீழேயே இறக்கிவிடும். ஆதலால் யாதொரு பலனையும் கோராமல், எது நேர்ந்தாலும் அதுவே ஈசுவரனுடைய அபிப்பிராயத்தில் உங்களுக்கு நல்லது என்ற திருடமான நம்பிக்கையோடு பஜனை செய்து வாருங்கள். பகவானை பஜிப்பதை ஒரு வியாபாரமாகச் செய்து விடாதீர்கள். பகவானையோ பஜனையையோ உங்கள் வயிற்றுப்பிழைப்பைத் தேடித்தரும் ஸாதனம் என்ற நிலைமைக்குக் கொண்டு வந்து விடாதீர்கள்.

சிருங்கேரியையோ ஸ்ரீமத் ஆசார்யாரையோ முன் தரிசனம் செய்திராத ஒரு சிஷ்யர் சிருங்கேரிக்கு வந்து அவர்களை வந்தனம் செய்தார்.

மஹா: உங்கள் பெயர்?

சிஷ்யர்: புஜங்கன்.

மஹா: புஜங்க பூஷணரா (பாம்புகளை ஆபரணங்களாக அணிந்திருக்கிற மஹேசுவரரா) அல்லது புஜங்க சயனரா (பாம்பைப் படுக்கையாகக் கொண்ட மஹாவிஷ்ணுவா)?

சிஷ்யர்: இரண்டுமல்ல. புஜங்கன் என்றுதான் பெயர்.

மஹா: அப்படியா? சிவன், விஷ்ணு இவர்களுடையவோ, இவர்களுடைய அவதாரங்களினுடையவோ, பெயர்களைத் தான் வெகுவாக பெயரிடுவது வழக்கம். உங்கள் தாய் தந்தையர் சிவன், விஷ்ணு என்ற பக்ஷபாதத்திற்கு இடம் கொடுக்காமல், புஜங்கன் என்றே உங்களுக்கு பெயர் வைப்பது உத்தமம் என்று எண்ணினார்கள் போலும். உங்களுக்கு இப் பெயரிட்டதற்கு வேறொரு பலமான காரணமும் இருக்கலாம்.

சிஷ்யர்: அது என்ன?

மஹா: பணக்காரருடைய வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்து, தாக்கி அவரைப் பிடித்துக் கட்டி, நியாயம் அநியாயம் என்று பாராமல் எல்லா வழிகளையும் உபயோகித்து, அவர் விலையுயர்ந்த வஸ்துக்களைப் பதுக்கி வைத்திருக்கும் இடத்தைக் காட்டச் சொல்லிப் பயமுறுத்துவார்கள். அப்போது அந்தப் பணக்காரர் தன் சொத்துக்களின்மீது உண்மையில் பற்றுள்ளவராக இருந்தால், அவைகளை இழந்துவிட இசையாமல், தன் தேகத்திற்கும் மனத்திற்கும் அத்திருடர்களால் ஏற்படக்கூடிய தொந்தரவுகள் எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டே யிருந்து விடுவார் அல்லவா? ''காயம் பட்டால் ஆற்றிக் கொள்ளலாம், விலையுயர்ந்த சாமான்கள் போனது போனதுதான். திரும்பி வாரா'' என்பதை நன்கு அறிவார். ஆதலால், அவ்வுயர்ந்த சாமான்களை இழக்காமல், தன் தேகத்தை காயப்படுத்திக் கொள்ளக்கூட இசைந்து விடுகிறார். ஜகத் முழுவதற்கும் ஈசுவரனாயிருக்கிற பகவான் எல்லாரையும் விட பணக்காரரல்லவா? அவருக்கும் இத்தகைய மனப்பான்மை இருந்து வருவதாக நினைப்பது நியாயமேயாகும். தனக்கு நேரும் எவ்வித கஷ்ட நஷ்டங்களையும் பொறுத்துக் கொள்வார், தன் உடைமைகளையோ சொத்துக்களையோ கஷ்ட நஷ்டங்களுக்கு உட்படும்படி விட்டுவிட மாட்டார். உங்களை பகவான் நன்கு விசேஷ அக்கறையுடன் காப்பாற்றி வரவேண்டும் என்ற உத்தேசத்துடன், உங்களுக்கு பகவானுடைய பெயரை இடுவதை விட

அவர் அணியும் அல்லது உபயோகிக்கும் வஸ்துவின் பெயரை இடுவதே அதிக நன்மை பயக்கும் என்று உங்கள் தாய் தந்தையர் எண்ணினர் போலும்! தமக்கு வரக்கூடிய சிரமத்தை கவனிக்காமல், தம் அருமையான ஆபரணங்களில் ஒன்றின் பெயரை உடைய உங்களைக் காப்பதற்கு பகவான் ஸித்தமாயிருப்பார். இப்போதுதான் உங்கள் தாய் தந்தையரின் புத்திசாலித்தனத்தை அறிந்தேன்.

சிஷ்யர்: எனக்கு இப்பெயரை வைத்தபோது, என் தாய் தந்தையருக்கு இவ்வளவு தூரம் எண்ணம் இருந்ததோ என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் ஈசுவரனுடைய விசேஷமான ரக்ஷைக்குப் பாத்திரமாக இப்பெயர் என்னைச் செய்கிறதென்ற உறுதியை தங்கள் வாக்கிலிருந்து கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

மஹா: ஈசுவரன் தம்முடையது என்று உயர்வாக மதித்திருக்கிற பவித்திரமான வஸ்துவின் பெயரை தாங்கி வருவதாக எப்பொழுதும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பீர்களேயாகில், அப்பெயர் உங்களுக்கு வாஸ்தவமாகவே தனி ரக்ஷையாகவே அமையும். இவ்வெண்ணம் எப்போதும் இடைவிடாமல் உங்கள் உள்ளத்தில் இருந்து வந்தால், வெகு சீக்கிரத்தில் நீங்களும் அவருடைய உடமைதான் என்று உணர்ந்து விடுவீர்கள்.

ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் மிகவும் பக்தி வாய்ந்த ஸ்வாமிகள் ஒருவருக்கு துங்கா நதியின் வடகரையில், ஜபம், தியானம், பூஜை, படிப்பு எல்லாம் அமைதியாக நடப்பதற்காகவென்று தனியாக ஒரு அறை கொடுக்கப்பட்டிருந்தது. அவர் பிரதி தினமும் ஸ்நாந ஜபாதிகளை முடித்துக் கொண்டு, நதியைத் தாண்டி அக்கரைக்குப் போய், அங்குள்ள முன் ஆசார்யாரவர்களுடைய ஆலயத்தில் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்துவிட்டு, ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்று வந்தனம் செய்துகொண்டு வந்தார். ஒரு நாள் அவரைப் பார்த்து ஸ்ரீமத் ஆசார்யார் கேட்டார்.

மஹா: பிரதிதினம் இங்கே வந்து கொண்டிருக்கிறீர்களே, என்ன உத்தேசம்?

ஸ்வாமிகள்: வந்தனம் செய்வதற்காகத் தான் வருகிறேன்.

மஹா: உங்கள் அறையில் உங்களிடம் ஆசார்ய பாதுகைகள் உண்டே?

ஸ்வா: ஆம், இருக்கின்றன.

மஹா: அவைகளுக்குத் தினந்தோறும் காலையில் வந்தனம் செய்து வருகிறீர்கள் அல்லவா?

ஸ்வா: ஆம், செய்து வருகிறேன்.

மஹா: அப்படியானல் நீங்கள் அங்கே செய்யும் வந்தனம் இக்கரையிலுள்ள ஆசார்யாருக்கு வந்து சேராது என்ற பயமா?

ஸ்வா: அப்படியல்ல, ஆசார்யாரவர்கள் பாதங்களிலேயே நேரில் நமஸ்காரம் செய்ய அவகாசம் இருக்கும் போது, அதை நான் ஏன் தவற விட வேண்டும் என்றுதான்.

மஹா: அப்படியானல், பாதுகைகளின் முன் செய்யப்படும் நமஸ்காரங்கள் ஆசார்யாருக்கு நமஸ்காரமாகாது போலும்?

ஸ்வா: பாதுகைகள் எப்படியும் பிரதிநிதிகள்தானே? ஸாக்ஷாத்தாக பாதங்களிலேயே நமஸ்காரம் செய்வதினல் ஏற்படக்கூடிய புண்ணியத்தை இழப்பானேன் என்றுதான் சொன்னேன்.

மஹா: அப்படியானல் ஆற்றின் இக்கரைக்கு வர உத்தேசிக்கும்போதெல்லாம், உங்கள் அறையிலுள்ள பாதுகைகளுக்கு வந்தனம் செய்வதில்லை போலிருக்கிறது.

ஸ்வா: அப்படியல்ல, அப்படியல்ல. அந்தப் பாதுகைகளுக்கும் நமஸ்காரம் செய்யவே செய்கிறேன்.

மஹா: ஏன் செய்ய வேண்டும்? அவைகள் பிரதிநிதிகள் தானே?

ஸ்வா: அத்யாத்ம சிரேயஸ்ஸைக் கொடுக்கும் தன்மை அவைகளுக்கும் உண்டு.

மஹா: ஆசார்யாருக்கு ஸமானமாகவா?

ஸ்வா: ஆமாம், நிச்சயமாக உண்டு.

மஹா: ஆனால் அந்தத் தன்மை ஆசார்யார் ஸமீபத்தில் இருந்தால் குறைந்து விடுகிறதோ?

ஸ்வா: அதெப்படி குறைய முடியும்? அவைகள் எப்பொழுதுமே சக்தி வாய்ந்தவைகள்தான்.

மஹா: அப்படியானால் நீங்கள் உங்கள் அறையிலேயே இருந்து விடலாமே. நதியைக் கடந்து இக்கரைக்கு வரும் சிரமம் வேண்டாமே?

ஸ்வா: தங்கள் வார்த்தைகளில் விளங்கும் நியாயத்தை தெரிந்து கொண்டேன். ஆனால் ஆசார்யாருக்கும் அவர்களுடைய பாதுகைகளுக்கும் வித்தியாஸம் இருக்கிறதென்ற எண்ணம் ஏற்படுகிற மனோ நிலைக்கு மேல் நான் இன்னும் ஏறவில்லை.

மஹா: இந்நிலைக்கு மேலுள்ள உத்தம நிலையை நீங்கள் இன்னும் அடையவில்லையென்று சொல்வதில் இருந்தே, ஞான மார்க்கத்தில் முன்னேறி அந்த உத்தம நிலையை, இன்றோ நாளையோ இல்லாமல் போனாலும், என்றைக்காவது ஒரு நாள் அடைந்துதான் தீரவேண்டும் என்பதை நீங்களே ஒப்புக் கொண்டதாகத் தோன்றுகிறது.

ஸ்வா: ஆமாம். ஸமீபத்திலோ வெகு நாள் சென்றோ எப்படியும் ஒரு நாள் அந்த உயர்ந்த நிலையை அடைந்தே ஆக வேண்டும்.

மஹா: எந்த விஷயத்திலும் இடைவிடாமல் முயற்சி செய்தாலொழிய ஒருவித முன்னேற்றமும் ஸாத்தியமில்லை. ஆகையால் அந்த உயர்ந்த நிலையை அடையலாமென்று எப்படி நினைக்கிறீர்கள்? அதை அடைவதற்கு என்ன முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள்?

ஸ்வா: அதையடைவதற்கு நான் எவ்வித முயற்சியும் செய்வதாகச் சொல்வதற்கில்லை.

மஹா: அப்படியானல் முயற்சி செய்ய ஏன் ஆரம்பிக்கக் கூடாது?

ஸ்வா: அதற்கு என்ன செய்ய வேண்டும்?

மஹா: உங்கள் அறையிலேயே இருந்துகொண்டு, பாதுகைகளுக்கு முன் உட்கார்ந்து கொண்டு, அவைகளின் மீது ஆசார்யார் நின்று கொண்டிருப்பதைப் பார்ப்பதாக எண்ணிப் பாருங்கள். இவ்விதம் இடைவிடாது தியானம் செய்து வந்தால், நீங்கள் எங்கிருந்தாலும் ஆசார்யாரை ஸாக்ஷாத்கரிக்க முடியும். பாதுகைகள் அவர்களுடைய மூர்த்தியுடன் ஒருமைப்பட்டு மறைந்துவிடும்; இவைகள் அவர்களைத் தவிர வேருக இருக்கின்றன வென்ற பாவனையையும் அறவே மறந்துவிடும்படி ஏற்பட்டு விடும். இவ்வப்பியாஸத்தை நாளை முதலே ஆரம்பியுங்கள்.

அன்றுமுதல் சில நாட்கள் வரை, இந்த ஸ்வாமிகளுக்கு நதியைக் கடந்து அக்கரைக்குப் போகாமல் தன்னை தடுத்துக் கொள்வது மிகவும் சிரமமாகவே இருந்தது. ஆனலும் ஸ்ரீமத் ஆசார்யாரின் அனுக்ரஹ விசேஷத்தால், தான் இருந்தவிடத்திலேயே சில நாட்களுக்குள் ஆசார்யாரவர்களின் திவ்ய மூர்த்தியை தன் கண்முன் தரிசித்து அனுபவிக்கத் தொடங்கி விட்டார்.

5. நியமம் அவசியம்

கடுமையான சர்ம ரோகத்தினல் பீடிக்கப்பட்டிருந்த சிஷ்யர் ஒருவர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து தன் ரோகத்திற்கு பரிஹாரம் வேண்டினர். அதற்கு அவர்கள் ''திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த திருச்செந்தூர் க்ஷேத்திரத்திலுள்ள ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமி கோயிலுக்கு ஒவ்வொரு ஷஷ்டியும் சென்று,ஸௌகர்யப்பட்டால் பகவானுக்கு அர்ச்சனை செய்வித்து, எப்படியும் ஸன்னிதியில் குறிப்பிட்ட கணக்கில் நமஸ்காரங்களை ஸாஷ்டாங்கமாக செய்துகொண்டு ஒரு வருஷம் முழுவதும் தவருமல் ஸேவை செய்து வாருங்கள்'' என்று அனுக்ரஹித்தார்கள். அப்படியே அந்த சிஷ்யரும் சில ஷஷ்டிகள் தொடர்ந்து அக்கோயிலுக்குச் சென்று வந்தார். அதன்பின் ஓர் அவசியமான கார்யமாக சென்னை போக வேண்டியிருந்ததால், அந்த ஸமயம் வரும் ஷஷ்டியன்று திருச்செந்தூர் செல்ல முடியாமல் போய்விடுமே என்று அஞ்சி, இந்த ஸங்கடமான நிலைமையில் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் மறுபடியும் வந்து சேர்ந்தார்.

சிஷ்யர்: தங்கள் உத்தரவுப்படி இத்தனை மாதங்களாக திருச்செந்தூர் போய்க் கொண்டிருந்தேன். இப்பொழுது சென்னை போகவேண்டி யிருக்கிறது. அடுத்த ஷஷ்டிக்குள் திரும்பிவர முடியாதென்று தோன்றுகிறது. நான் என்ன செய்ய வேண்டுமென்று உத்தரவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மஹா: சென்னை போக வேண்டிய விஷயம் அவ்வளவு அவசியம்தானு? தவிர்க்க முடியாததா?

சிஷ்யர்: அப்படித்தான் இருக்கிறது.

மஹா: அப்படியானுல் ஷஷ்டியன்று திருச்செந்தூரில் தரிசனம் செய்துவிட்டு அன்று ராத்திரியே புறப்பட்டு சென்னை போய்விட்டு மறு ஷஷ்டிக்குள் திருச்செந்தூருக்குத் திரும்பிப் போய்விடவும். சென்னையிலுள்ள கார்யத்தை கவனிக்க பதினைந்து நாள் அவகாசமிருக்கிறதே, போதாதா?

சிஷ்யர்: சென்னையிலுள்ள வேலை அதற்குள் முடியாது. அதிக நாள் அங்கே இருக்கும்படி வருமென்றுதான் நினைக்கிறேன்.

மஹா: அப்படியா? அப்படியானுல், அடுத்த ஷஷ்டிக்கு முன் திருச்செந்தூருக்கு வந்துவிட்டு அன்றிரவே அங்கிருந்து புறப்பட்டு மறுபடியும் சென்னை சென்று கார்யத்தை முடித்துக் கொண்டு, அதற்கடுத்த ஷஷ்டிக்குள் திரும்பி வந்து விடுங்கள்.

சிஷ்யர்: சென்னையில் நான் தொடர்ந்து இருக்கவேண்டியிருக்கும். மத்தியில் அங்கிருந்து திருச்செந்தூர் வந்துவிட்டுப் போவது ஸாத்தியமில்லை என்று தோன்றுகிறது.

மஹா: அதற்கு நான் செய்யக்கூடியது என்ன?

சிஷ்யர்: நான் சென்னையில் தங்கும்படி ஏற்பட்டு திருச்செந்தூருக்கு போய்வர முடியாமலிருக்கிற ஒரு ஷஷ்டிக்குப் பதிலாக பிரார்த்தனை வருஷம் முடிந்தபின் வரும் ஷஷ்டியன்று போய் வந்தால் மொத்தம் அனுஷ்டிக்க வேண்டிய ஷஷ்டிகள் இருபத்து நான்கும் அனுஷ்டிக்கப்பட்டதாக ஆகிவிடுமே? அவ்விதம் செய்யலாமா என்று தெரிய விரும்புகிறேன்.

மஹா: பிரார்த்தனை வருஷம் முடிந்தபின் அதிகமாக ஒரு ஷஷ்டியை அனுஷ்டிப்பதனுல் எவ்வித பாதகமும் இல்லை. ஆனுல் அந்த ஷஷ்டியை விரத வருஷத்திற்குள் அனுஷ்டிக்கப்பட்டதாக கணக்கிட முடியாது.

சிஷ்யர்: இருபத்து நான்கு ஷஷ்டிகளும், இவ்வருஷத்திற்குள்ளேயே அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்பதா தங்கள் ஆக்ஞை?

மஹா: உங்கள் ஸங்கல்பம் அப்படித்தானே? இல்லையா?

சிஷ்யர்: ஆம்.

மஹா: அப்படியிருக்க என்ன ஸந்தேகம்?

சிஷ்யர்: இருபத்து நான்கு ஷஷ்டிகளையும் ஒரு வருஷத்திற்குள்ளேயே அனுஷ்டித்தாக வேண்டு மென்பது நியமமானுல் எனக்கு அவஸர வேலையை முன்னிட்டு சென்னை போக நேரிட்டு ஒரு ஷஷ்டியை நியமப்படி அனுஷ்டிக்க முடியாமல் போகும்போது என் நிலை சிரமமாகி விடுகிறதே? அதை ஸமாளிக்கும் வழியை தாங்கள் தான் அனுக்ரஹிக்க வேண்டும்.

மஹா: அதுதான் சொன்னேனே? இருமுறை சென்னைக்கு போய்விட்டு வாருங்கள் என்று.

சிஷ்யர்: அது முடியாது போலிருக்கிறதே?

மஹா: அதற்கு என்னுல் செய்யக்கூடியது என்ன?

சிஷ்யர்: சென்னைக்கு ஸமீபத்தில் திருத்தணி (தணிகாசலம்) என்ற பிரஸித்தமான ஸுப்ரஹ்மண்ய க்ஷேத்திரம் இருக்கிறது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். நான் ஷஷ்டி தினத்தில் சென்னையில் இருக்க நேர்ந்தால் அந்த கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து வரலாமா?

மஹா: அப்படியே செய்யலாம். ஆனுல் என்ன உத்தேசம்?

சிஷ்யர்: அன்று திருச்செந்தூருக்குப் போக முடியாமல் ஏற்பட்டதற்குப் பதிலாகத்தான்.

மஹா: திருத்தணியிலும் திருச்செந்தூரிலும் உள்ள திவ்ய மூர்த்திகளுடைய பிரபாவத்தின் தாரதம்யத்தைப் பற்றி சர்ச்சை செய்வதற்கு வேண்டிய யோக்கியதை நமக்கு இல்லை. அவ்விஷயத்தில் தீர்மானம் செய்யக்கூடிய யோக்கியதை அதைவிடக் குறைவு. உங்கள் ஸங்கல்பத்தில் திருத்தணி சேரவில்லையென்ற ஒன்றே நம் விஷயத்திற்குப் போதுமானது. குறிப்பிட்ட பலனை எதிர்ப்பார்த்து அனுஷ்டிக்கப்படும் விரதங்கள் ஸம்பந்தப்

பட்டவரையில் மாற்றிக் கொள்ளலாம், பதிலாக வேறு செய்து கொள்ளலாம், என்பது அனுமதிக்கப்பட மாட்டாது.

சிஷ்யர்: திருச்செந்தூர் செல்வதற்குப் பதிலாக திருத்தணி போய்வருவது ஏற்படாதென்றால், அந்த ஷஷ்டியன்று நான் என்ன செய்ய வேண்டுமென்று தெரியவில்லையே?

மஹா: அதை நீங்கள்தான் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

சிஷ்யர்: இவ்வருஷத்திற்குப் பின்னால் வரும் ஒரு ஷஷ்டியை சேர்த்துக் கொள்ளவும் தாங்கள் அனுமதிக்கவில்லை. வேறொரு ஸுப்ரஹ்மண்யக்ஷேத்திரத்திற்குப் போய் வரவும் அனுமதிக்கவில்லை. நான் என்னதான் செய்வது?

மஹா: எனக்கும் வருத்தமாய்த்தான் இருக்கிறது. ஆனால் நீங்கள் உத்தேசிக்கும் கார்யங்களுக்கு இடம் கொடுக்காதது நான் இல்லை யென்பதை ஞாபகப்படுத்துகிறேன். நீங்கள் முதலில் ஸங்கல்பம் செய்து கொள்ளும்போதே ஏற்பட்ட நியமங்கள்தான் தங்களை தடுக்கின்றன.

சிஷ்யர்: அந்த நிபந்தனைகள் மீற முடியாதவைகளாகவும் இருந்து என் சக்திக்கு மீறின ஸந்தர்ப்பங்களினால் அவைகளை மீற வேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிட்டால், என் கதிதான் என்ன?

மஹா: நீங்கள் சொல்வது சரியே. உங்கள் சக்திக்கு மீறி ஸந்தர்ப்பங்கள் இருக்குமேயானால், நீங்கள் ஒன்றும் செய்ய முடியாதுதான். அந்த ஸ்திதியில், விலக்க முடியாத இடையூறுகளைத் தோற்றுவித்த தலைவிதிக்கு உட்பட்டு கீழ்ப்படிய வேண்டியதுதான்.

சிஷ்யர்: தடுக்க முடியாத விதிக்குக் கீழ்ப்படிந்தால், என் ஸங்கல்பம் என்ன ஆகும்?

மஹா: ஸங்கல்பப்படி நடக்கவில்லையென்று ஆகும். அவ்வளவுதான்.

சிஷ்யர்: அப்படியானால் என் வியாதி எப்படி போகும்?

மஹா: அதன் கொடுமையை தடுப்பதற்கு ஒன்றும் இல்லாததினுல், அது ஏற்பட்ட முறைப்படி பூராவும் இருந்து தீரும்.

சிஷ்யர்: நியமங்களில், சிறு அம்சங்களில்கூட தவறின்றி ஸங்கல்பப்படி நடத்த முடியாவிட்டால், செய்ததெல்லாம் கூட பிரயோஜனமற்றதாகும் என்ரு தங்கள் உத்தரவு?

மஹா: எல்லா காம்ய கர்மாக்களிலும் இதுதான் முறை.

சிஷ்யர்: அப்படியாஞல், தங்கள் முதல் உத்தரவுப்படியே, திருச்செந்தூர் சென்று அனுஷ்டிக்க வேண்டிய ஷஷ்டிக்கு குறைவு ஏற்படாமல், சென்னேக்கு இருமுறை வேண்டுமாஞலும் போய் விட்டு வருகிறேன்.

மஹா: அப்படியே செய்யுங்கள்.

அவ்வருஷம் பூராவும் கிரமப்படி அனுஷ்டித்து முடித்து கூடிய சீக்கிரத்தில் அந்த சிஷ்யருக்கு இருந்த சர்ம ரோகம் முற்றிலும் குணமாகி விட்டது. ஸ்ரீமத் ஆசார்யார் இவ்விதம் பரிஹாரம் சொன்னது அவர்கள் திருச்செந்தூர் கோயிலுக்குப் போவதற்கு வெகுநாள் முன்னதாக என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீமத் ஆசார்யாரின் தரிசனத்திற்காக வந்திருந்த சிஷ்யர் ஒருவர் ஒரு வெள்ளிக்கிழமை மத்தியானத்திற்கு மேலேயே தன் ஊருக்குத் திரும்பிப் போக விரும்பிஞர். ஸ்ரீமத் ஆசார்யார் வெள்ளிக்கிழமைதோறும் ஸ்ரீசக்ரத்தில் ஸ்ரீராஜராஜேசுவரிக்கு விசேஷமாக பூஜைகள் செய்வது வழக்கம். அன்று பூஜை செய்த குங்குமப் பிரஸாதம் சிறிது பெற்றுக்கொண்டு புறப்பட நினேத்த அந்த சிஷ்யர் பூஜாகைங்கர்யம் செய்துவரும் ஸ்ரீமடம் சிப்பந்தியிடம் கொஞ்சம் குங்குமம் எடுத்துக் கொடுக்கச் சொன்ஞர். ஆஞல், அவர் அதற்கு ''இப்பொழுது கொடுக்க முடியாது. ராத்திரி பூஜையும் முடிந்த பிறகுதான் பிரஸாதம் கிடைக்கும்'' என்று சொன்ஞர். சிஷ்யர் ''ஸ்ரீசக்ரத்தைத் தொட்டு எடுத்துக் கொடுக்கும்படி நான் சொல்லவில்லே. ஸ்ரீசக்ரத்தின் நாலாபக்கங்களிலும் பூமியில் சிதறிக் கிடக்கும் குங்குமத்திலிருந்து எடுத்துக் கொடுத்தால் போதும்'' என்ருர். சிப்பந்தி கண்டிப்பாய் ''இப்பொழுது கொடுப்பது

ஸாத்தியமில்லை. ராத்திரி பூஜை முடிவதற்கு முன் ஒன்றையும் கலைக்க முடியாது. தரையிலுள்ள குங்குமத்தை எடுத்தாலும் ஆசார்யாருக்குத் தெரிந்துவிடும்'' என்று சொல்லிவிட்டார். அதற்கு சிஷ்யர் ''ஆசார்யாரவர்களிடமே நான் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் எடுத்துக் கொடுக்கும்படி ஆக்ஞாபித்தால் நீங்கள் கொடுப்பீர்களென்று நம்புகிறேன்'' என்றார். ''அதற்கென்ன ஆக்ஷேபணை? ஆனால் ஒருபோதும் அவர்கள் என்னை அப்படிச் செய்யும்படி சொல்லமாட்டார்கள்'' என்றார் அந்த சிப்பந்தி. ஸ்ரீசக்ரத்தின் மேலுள்ள குங்குமத்தைக் கேட்காமல் பீடத்திற்கு அடியில் சிந்தியிருக்கும் குங்குமத்தை எடுத்துக் கொடுக்க, கொஞ்சமேனும் நியாயமில்லாமல் இவர் மறுக்கிறாரே என்று எண்ணி சிஷ்யர் வருந்திக் கொண்டு ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்றார்.

சிஷ்யர்: இன்று சுக்கிரவாரமாயிருப்பதால் கொஞ்சம் ஸ்ரீசக்ரப் பிரஸாதம் கொடுக்கும்படி உத்தரவாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்விதம் செய்தால் நான் மிகவும் கிருதார்த்தனாவேன்.

மஹா: இன்று மத்தியானத்திற்கு மேலேயே நீங்கள் புறப்பட உத்தேசிப்பதாக சொன்னதாக ஞாபகம். அவ்விதம்தானே?

சிஷ்யர்: ஆமாம். அதனால்தான் இப்பொழுது தனித்து இவ்விதம் கேட்டுக் கொண்டேன்.

மஹா: அப்படியே புறப்படுகிறது. நாளை தபாலில் தங்களுக்கு குங்குமப் பிரஸாதத்தை அனுப்பிவிடச் செய்கிறேன்.

சிஷ்யர்: நானே நேரில் வந்திருப்பதால், நானே நேரில் பிரஸாதம் வாங்கிக் கொண்டு போவது சிலாக்கியம் என்று நினைக்கிறேன்.

மஹா: நேரில் வாங்கிக் கொள்வது மிகவும் சிலாக்கியம். ராத்திரி பூஜைக்கும் இருந்துவிட்டுப் போகலாம்.

அக்குங்குமப் பிரஸாதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அந்த சிஷ்யர் அன்றிரவும் அவசியம் தங்கிவிட்டே போகும்படி ஏற்பட்டது.

வக்கீல் உத்தியோகம் செய்துவந்த ஒரு சிஷ்யர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து தனக்கு ஸ்ரீசிவபஞ்சாக்ஷரீ மந்திரம் உபதேசிக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

மஹா: நீங்கள் வக்கீல் அல்லவா?

சிஷ்யர்: ஆம்.

மஹா: நித்தியப்படி செய்யவேண்டிய ஸந்தியாவந்தனத்தைச் செய்யக்கூட வக்கீல்களுக்கு அவகாசம் இருப்பதில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியிருக்கும் போது, எதற்காக வேறு மந்திரம் கேட்கிறீர்கள்?

சிஷ்யர்: அது சரியல்ல. ஸ்நாநம், ஸந்தியாவந்தனம், ஜபம் முதலியவைகளுக்கு தாராளமாக அவகாசம் இருக்கிறது.

மஹா: அவகாசமில்லாததினால் ஸந்தியாவந்தனம் செய்ய முடியவில்லை யென்று ஸமாதானம் சொல்கிற வக்கீல்களும் உண்டல்லவா?

சிஷ்யர்: இது வீண் ஸமாதானம்.

மஹா: அது எப்படியேனும் இருக்கட்டும். உங்கள் தொழிலில் அவசியம் செய்ய வேண்டிய வைதிக கார்யங்களுக்கே அவகாசமில்லையென்று சொல்லிக் கொள்ளக்கூடிய நிலைமை இருக்கும்போது, எதற்காக இன்னும் அதிகமான கர்மாக்களை பெருக்கிக் கொள்ள வேண்டும்? அதிகப் பொறுப்பை இழுத்துவிட்டுக் கொண்டால் எல்லாக் கர்மாக்களையுமே செய்யாமல் விட்டுவிடத்தான் இடமாகும்.

சிஷ்யர்: எனக்கு தாங்கள் இந்த மந்திரோபதேசத்தை கருணையுடன் அருளினால், நான் அதை ஜபம் செய்யாமல் உதாஸீனமாய் இருந்துவிட மாட்டேன் என்று உறுதியாய்ச் சொல்கிறேன்.

மஹா: உறுதி சொல்லி விடலாம். ஓய்வே யில்லாத உங்கள் தொழிலில் அதைக் காப்பாற்றி வருவது ஸாத்தியமா?

சிஷ்யர்: தவறாமல் நித்தியம் மந்திரஜபத்தை ஜாக்கிரதையாக செய்து வருவேன்.

மஹா: வாஸ்தவம். இது உங்கள் இப்போதைய தீர்மானம். அதை சரிவர நிறைவேற்ற முடியுமா என்பதுதான் கேள்வி?

சிஷ்யர்: முடியும். தாங்கள் சொல்கிறபடி செய்வேன் என்று முழுமனதுடன் உறுதியாய்ச் சொல்லுகிறேன்.

மஹா: நான் இவ்வளவு அழுத்திக் கேட்பதினுல், உங்களுக்கு உபதேசம் செய்வதற்கு ஒரு நிபந்தனை போன்று உங்களை நிர்ப்பந்தம் செய்து உங்களிடமிருந்து உறுதிமொழி வாங்குகிறேன் என்று நினைக்க வேண்டாம். குருவினிடமிருந்து ஒரு மந்திரத்தை உபதேசம் பெற்ற சிஷ்யன் அதை ஜபம் செய்யாமல் அலக்ஷ்யமாயிருந்து விட்டால், அதனுல் ஏற்படும் தோஷம் அந்த மந்திரத்தை மதித்து வழிபடத் தெரியாத சிஷ்யனுக்கு உபதேசித்த அந்த குருவையே சேரும் என்று சாஸ்திரங்கள் ஸந்தேகத்திற்கு இடமன்னியில் தெளிவாய் கூறியிருக்கின்றன. ஆகையினுல்தான், யாருக்காவது மந்திரத்தை உபதேசம் செய்யும் முன் இவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது.

சிஷ்யர்: நான் பொறுப்பை நன்கு உணர்கிறேன். அத்தகைய நிலைமை ஏற்படாதபடிக்கு நன்கு ஜாக்கிரதையாக நடந்து கொள்கிறேன்.

மற்றொரு ஸமயம் இன்னொரு சிஷ்யர் தனக்கு தேவீ மந்திரோபதேசம் வேண்டுமென்று ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து வணங்கி தன் எண்ணத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

மஹா: தேவீ மந்திரமா? எதற்காக? தினந்தோறும் ஸந்தியாவந்தனத்தை சரிவரச் செய்து வருகிறீர்களா, இல்லையா?

சிஷ்யர்: செய்து வருகிறேன்.

மஹா: அதற்குப்போக, இன்னும் அதிகமான மந்திரங்களை ஜபிப்பதற்கு வேண்டிய அவகாசம் உங்களுக்கு இருக்கிறது போல் தெரிகிறது.

சிஷ்யர்: ஆம், இருக்கிறது.

மஹா: அப்படியானுல், அந்த நேரத்தை காயத்ரீ மந்திரத்தையே ஆயிரம் தடவை ஜபிக்க ஏன் உபயோகிக்கக் கூடாது?

சிஷ்யர்: சில நாட்களில் அப்படியும் செய்து வருகிறேன்.

மஹா: ஆச்சர்யமாக இருக்கிறதே? ஸந்தியாவந்தனத்தை சரிவர செய்து வருகிறீர்கள். சிற்சில ஸமயங்களில் ஸஹஸ்ர ஆவிருத்தி காயத்ரீ ஜபமும் செய்கிறீர்கள். இவ்விதம் செய்து வந்தும்கூட வேறு மந்திரம் வேண்டு மென்கிறீர்களே? காயத்ரீயே தேவிதான் என்பது உங்களுக்குத் தெரியாதா?

சிஷ்யர்: தெரியும்.

மஹா: அப்படியானுல், வேருெரு தேவீ மந்திரம் எதற்காக?

சிஷ்யர்: அதையும் உபதேசம் பெறுவது நல்லது என்று நினைத்தேன்.

மஹா: காயத்ரீ மிகவும் பழகின மந்திரமாகி விட்டபடியால், அது போதாது, வேறு புதிதாய் ஒன்று இருந்தால் தேவலை யென்று தோன்றிற்ரு? காயத்ரீதான் எல்லா மந்திரங்களுக்கும் தாயார். பலன் கொடுப்பதிலும் அதற்கு நிகராக வேறு ஒரு மந்திரமும் கிடையாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிஷ்யர்: எங்கள் வீட்டில் ஒரு பாலாதேவீ யந்திரம் இருந்து வருகிறது. என் தகப்பனுர் இருக்கும்போது அதற்கு தினந்தோறும் ஏதோ தேவீ மந்திரத்தால் பூஜை செய்து கொண்டிருந்தார். அந்தப் பூஜையை இப்பொழுது நான் விதிப்படி நடத்தி வருவதற்கு எனக்கும் ஒரு தேவீ மந்திரம் அவசியம் என்று எண்ணினேன்.

மஹா: காயத்ரீ மந்திரத்தையே உபயோகித்தும் அப்பூஜையை குறைவின்றி நடத்தி வரலாம். ஆனுலும் வேருெரு மந்திரம் தேவை என்ற எண்ணம் உங்கள் மனதில் எழுந்துவிட்டதால், அப்படியே உங்களுக்கு உபதேசிப்பதில் தடையொன்றும் இல்லை.

சிஷ்யர்: மிகவும் கிருதார்த்தனுனேன்.

மஹா: நாளைய தினம் பௌர்ணமி, மறுநாள் பிரதமை, அதற்கடுத்த நாள் நக்ஷத்திரம் நல்லதாக இல்லை. இன்று முதல் பத்து நாட்களுக்கு நல்ல நாளையே காணோம். அதுவரை உங்களை இங்கே நிறுத்தி வைப்பதும் நியாயமாகாது. நாளைக்கு ஊருக்குத் திரும்ப உத்தேசித்திருந்தபடியே புறப்பட்டு விடுங்கள். பிற்பாடு அடுத்த தடவை வரும்போது ஸாவகாசமாய் உபதேசத்தை வைத்துக் கொள்ளலாம்.

சிஷ்யர்: இங்கு தாமதமாவதால் ஒன்றும் பாதகமில்லை. உபதேசம் செய்ய தங்களுக்கு எப்பொழுது ஸௌகர்யப்படுகிறதோ அதுவரை இங்கு இருந்து விடுகிறேன்.

மஹா: பத்து தினங்களுக்கு மேல் ஆனாலுமா?

சிஷ்யர்: அதனால் என்ன? இங்கே தங்கிவிட ஸித்தமாயிருக்கிறேன்.

மஹா: அப்படியா? எத்தனைநாள் ஆனாலும் தங்கிவிடுவதாகத் தீர்மானமா?

சிஷ்யர்: தங்கள் அனுக்ரஹத்தைப் பெறக்கூடிய ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதை நழுவவிட எனக்கு இஷ்டமில்லை.

மஹா: அப்படியானால், நாளைக் காலையிலேயே உபதேசத்திற்கு எப்படியாவது அவகாசம் ஏற்படுத்திக் கொள்ளலாம். உபதேசத்திற்கு சில நிமிஷங்களுக்கு மேல் வேண்டியிராது. நாளைக் காலையிலேயே வாருங்கள். உபதேசம் செய்து விடலாம். நீங்கள் நாளை ஊருக்குப் புறப்படுவதாகப் போட்டிருந்த திட்டத்திற்கும் எவ்வித இடைஞ்சலும் வேண்டாம்.

நம் சாஸ்திரங்களில் கொஞ்சம் பரிச்சயமுள்ள ஒரு சிஷ்யர் தனக்கு ஏற்பட்ட ஒரு ஸந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளக் கருதி ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்தார்.

சிஷ்யர்: ஸந்தியாவந்தனம் பிரதிதினம் செய்யவேண்டிய நித்திய கர்மா; அவசியம் செய்தே தீரவேண்டும். செய்யத் தவறினால் தோஷமும் உண்டு. ஸ்ரீமத் ராமாயண

பாராயணம் முதலியது பிரதி தினம் செய்து வந்தாலும் நித்திய கர்மா இல்லையே? அவசியம் செய்தாக வேண்டியது என்று ஆகாதே? காம்ய கர்மாவில்தானே சேரும்? ஒரு நாள் அகஸ்மாத்தாக பாராயணம் செய்யத் தவறிவிட்டால் தோஷம் ஏற்பட நியாயமில்லையே?

மஹா: நீங்கள் சொல்வது மிகவும் சரி. அவசியம் செய்ய வேண்டிய நித்திய கர்மாக்களில் சேராததினுல், செய்துதான் தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் கிடையாது. அகஸ்மாத்தாக தவறி விட்டது என்றுகூட வைத்துக் கொள்ள வேண்டாம்; புத்திபூர்வகமாகவே அதைச் செய்யாமலிருந்து விடலாம். அதில் தோஷம் ஏற்படாது. காம்ய கர்மாதானே?

சிஷ்யர்: ஏதோ மறதியினுலோ வேறு அலுவல்களின் தொந்தரவினுலோ எதிர்ப்பாராமல் ஏற்படக்கூடிய தவறுகளைப் பற்றித்தான் நான் கேட்டது. புத்தி பூர்வகமாகவே விட்டுவிடலாம், தோஷமில்லை என்று தாங்கள் இப்போது உத்தரவு செய்கிறீர்கள். அப்படியும் கூட செய்யலாமா?

மஹா: செய்யலாம். அது ஒரு காம்ய கர்மாதானே? உபதேசம் செய்து கொள்ளும்போதே ஸ்ரீராமச்சந்திரனுடைய பிரஸாதத்தை அடைய வேண்டுமென்ற காமனையுடன்தானே ஸ்ரீமத் ராமாயண பாராய்ணம் பிரதிதினம் செய்வதாக ஏற்றுக்கொண்டு, பிரதி தினமும் பாராயணம் செய்யும்போது ஸ்ரீராமச்சந்திரனுடைய பிரஸாதத்தை யுத்தேசித்து என்று ஸங்கல்பம் செய்து வருகிறீர்கள் அல்லவா? அவர் பிரஸாதத்தை அடைவதுதானே உங்கள் பாராயணத்தின் நோக்கம்? பலனைக் கருதி செய்யப்படுவதால் காம்ய கர்மாதான் என்று தெளிவாய் விளங்குகிறது. ஆகையால் அவசியம் செய்தே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாதுதானே?

சிஷ்யர்: அப்படியா?

மஹா: அப்படித்தான். ஸ்ரீராமச்சந்திரனுடைய பிரஸாதம் என்றைக்கெல்லாம் உங்களுக்கு வேண்டியதில்லை

யென்றும், அதில்லாமலேயே வாழ்க்கையை நன்ருக நடத்திக் கொள்ளலாமென்றும் தோன்றுகிறதோ, அன்றைய தினம் ஸ்ரீமத் ராமாயண பாராயணம் செய்யாமல் விட்டுவிடலாம்.

சிஷ்யர்: அவருடைய பிரஸாதம் என்றைக்காவது வேண்டாமென்று சொல்லத் துணிவு ஏற்படுமா?

மஹா: அப்படிச் சொல்லக்கூடிய தைர்யமில்லாவிட்டால், ஸ்ரீமத் ராமாயண பாராயணத்தை ஒருநாளும் விடக்கூடாதுதான்.

சிஷ்யர்: தினந்தோறும் செய்யவேண்டிய ஸந்தியா வந்தனம் போலவே, இதுவும் ஒவ்வொரு நாளும் அவசியம் செய்யவேண்டிய கர்மாதான் என்று இப்போது தெரிகிறது.

மஹா: ஸ்ரீராமச்சந்திர பிரஸாதம் வேண்டாமென்று விட்டுவிட ஸித்தமாயிருந்தால் ஒழிய, இதுவும் கட்டாயமான கர்மாதான்.

சிஷ்யர்: அந்தப் பிரஸாதம் வேண்டாமென்று என்றுதான் என்னுல் சொல்ல முடியும்?

மஹா: அதை நீங்கள்தான் தீர்மானம் செய்துகொள்ள வேண்டும். அவர் பிரஸாதம் அவசியம் வேண்டும், அதில்லாமல் ஒருநாள் கூட இருக்க முடியாது என்ற எண்ணமிருந்தால், உபதேசத்தின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு ஸ்ரீமத் ராமாயணத்தை தினந்தோறும் பாராயணம் செய்துதான் வரவேண்டும்.

6. சிரத்தை

ஸ்ரீமத் ஆசார்யாருக்கு வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் தீவிரமான விசுவாஸம். அப்படியேதான் தம் சிஷ்யர்களும் இருக்க வேண்டுமென்று எதிர்ப்பார்த்தார்கள். எப்பொழுதாவது இவ்விஷயத்தில் சிஷ்யர்களுக்குள் சிரத்தைக் குறைவு இருப்பதாகத் தெரிந்தால் உடனே சிரத்தையை நன்கு புகுத்த முயல்வார்கள்.

ஒரு நாள் ஸாயங்காலம் ஒரு சிஷ்யர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து, தன் மனைவிக்கு அடிக்கடி சரீரத்தில் உபத்திரவம் ஏற்பட்டுக் கொண்டே யிருப்பதால் ஒரு ரக்ஷை அனுக்ரஹித்துக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

மஹா: நீங்கள் பிராஹ்மணர்தானே?

சிஷ்யர்: ஆம்.

மஹா: உங்கள் காயத்ரீயை சரிவர ஜபித்து வருகிறீர்களா?

சிஷ்யர்: ஆம்.

மஹா: அப்படியிருக்க, இன்னொருவர் உதவியை ஏன் தேடுகிறீர்?

சிஷ்யர்: எனக்கு மந்திர சக்தி இருப்பதாகச் சொல்லிக் கொள்ள முடியாது.

மஹா: நீங்கள் சொல்லிக் கொள்வது கேள்வி இல்லை. மந்திரத்தின் சக்தியல்லவா வேலை செய்கிறது?

சிஷ்யர்: எப்படியும் என் விஷயத்தில் அந்த சக்தி இருப்பதாகத் தெரியவில்லை.

மஹா: அவ்விதம் சொல்லாதீர்கள். அந்த சக்திக்கு எப்போதும் வீர்யமுண்டு. நீங்கள் அதைச் சரியான முறையில் வெளிப்படுத்தவில்லை என்பதுதான் வாஸ்தவம்.

சிஷ்யர்: அப்படியே இருக்கலாம்.

மஹா: உங்களுக்கு ஸ்ரீருத்ராத்யாயம் மனப் பாடமாகத் தெரியுமா?

சிஷ்யர்: தெரியும்.

மஹா: என்ன! காயத்ரீ ஜபத்தை தவருமல் நியமப்படி செய்து வருகிறீர்கள். ஸ்ரீருத்ரமும் நன்ருகத் தெரியும். இப்பெரிய சக்தி வாய்ந்த ஸாதனங்களை கையில் வைத்துக் கொண்டிருந்தும் கூட, நீங்கள் இன்னெருவரிடம் போய் ரக்ஷை வேண்டுமென்று கேட்க உண்மையில் லஜ்ஜை யல்லவா படவேண்டும்?

சிஷ்யர்: தாங்கள் சொல்லியபடி அவைகளை உபயோகிக்க எனக்குத் தெரியவில்லைதான்.

மஹா: பிரகிருதத்தை (நடப்பதை) கவனிப்போம். தினந்தோறும் ஸ்ரீருத்ரத்தை மூன்று தரம் ஜபியுங்கள். அப்படி ஜபம் செய்யும்போது, ஒரு சிறிய பாத்திரத்தில் தீர்த்தம் எடுத்து உங்கள் முன்ஞல் வைத்துக் கொள்ளுங்கள். மூன்ரும் தடவை ஸ்ரீருத்ர பாராயணம் முடிந்தவுடன், அம்மந்திரத்திஞல் அபிமந்த்ரணம் செய்யப்பட்ட அத்தீர்த்தத்தை உங்கள் மனைவிக்கு அருந்தக் கொடுங்கள். சீக்கிரத்தில் அவள் வியாதியிலிருந்து விடுபட்டு ஸௌக்கியமாகி விடுவாள். இன்று ஸோமவாரம். பரமசிவனுக்குரிய புண்ணிய தினம். துங்கா நதியில் ஸ்நாநம் செய்துவிட்டு இன்று ஸாயங்காலமே ஜபம் செய்ய ஆரம்பித்து விடுங்கள்.

சிஷ்யர்: என் மனைவியை என்னுடன் இங்கே அழைத்து வரவில்லையே?

மஹா: பாதகமில்லை. ஈசுவரனிடத்தில் நம்பிக்கை கொண்டு, உங்கள் மனைவியின் வியாதி நீங்க வேண்டுமென்ற மனப்பூர்வமான ஆவலோடு, ஸ்ரீருத்ர ஜபத்தை பக்தி சிரத்தையுடன் ஜபம் செய்யுங்கள். உங்கள் மனைவி எங்கே யிருந்தாலும், உங்கள் ஜபத்தின் பயன் அவளை அடையும்.

அவள் உங்கள் ஸமீபத்தில் இருந்தால், மந்திர பூதமான தீர்த்தத்தை சாப்பிடச் சொல்லுங்கள். அவள் ஸமீபத்தில் இல்லாவிட்டாலும், தினந்தோறும் குறித்த காலத்தில் தவருமல் ஜபத்தை அவசியம் செய்து வரவேண்டும்.

வியாதியால் பீடிக்கப்பட்ட ஒரு கனவான் வைத்திய முறைகளால் பயன் ஒன்றும் ஏற்படவில்லையென்று தெரிந்து கொண்டபின் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து பரிஹாரம் வேண்டினுர். அவருக்கு ஒரு மந்திரத்தையும் உபதேசித்து அருளினுர்கள். உபதேசமான பிறகு அக்கனவான் ''சில நாட்களாக ஒரு மருந்து சாப்பிட்டுக்கொண்டு வருகிறேன். அதை இனியும் தொடர்ந்து சாப்பிட்டு வரலாமா?'' என்று கேட்டார். ஸ்ரீமத் ஆசார்யார் உடனே ''செய்யலாமே? இது போதாது என்று நினைத்தால்'' என்ருர்கள். இப்பதில் அந்த சிஷ்யருக்கு மந்திரத்தில் உள்ள நம்பிக்கையை பரீக்ஷித்ததேயாகும்.

குஷ்டரோகத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஒரு வியாபாரி ஒரு நாள் மாலையில் ஸ்ரீமடம் அதிகாரியிடம் வந்து, தன் விஷயத்தை ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்து தன் கடோரமான வியாதி நிவிருத்தியாகும்படிக்கான சக்தி வாய்ந்த பரிஹாரங்களைக் கேட்டுச் சொல்ல வேண்டுமென்றும், இது ஸம்பந்தமாக ஆயிரக்கணக்காக செலவானுலும் செலவைப்பற்றி கவனிக்கவில்லையென்றும சொன்னுர். அவ்வதிகாரியும் அப்படியே ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் விக்ஞாபனம் செய்தார்.

மஹா: வியாதிகளில் மூன்றுவிதங்கள் உண்டு. ஒன்று, என்ன பரிஹாரம் செய்தாலும் நிவிருத்தியாகாமல் அனுபவித்தே தீரவேண்டியதாக இருக்கும். மற்ருென்று, சரியானபடி பரிஹாரம் செய்தால் நிவிருத்தியாகக் கூடியது. மூன்ருவது, வியாதி நிவிருத்தியாகாமல் போனுலும் வேகத்தைக் குறைத்து வெகுநாள் நீடிக்கும்படிச் செய்யவோ, அல்லது கொஞ்சநாள் வராமல் தள்ளி வைக்கக் கூடியதாகவோ இருக்கும். இவைகளை முறையே, அஸாத்தியம்

(தீராதது), ஸாத்தியம் (தீரக்கூடியது), யாப்யம் (கடத்தக்கூடியது) என்று சொல்வார்கள். இப்பொழுது வந்திருக்கும் வியாபாரியின் வியாதி இம்மூன்றில் எந்த விதத்தைச் சேர்ந்ததென்று தீர்மானித்துக் கொள்ளாமல் பரிஹாரம் சொல்ல முடியாது.

அதிகாரி: அதை இப்பொழுது எப்படி தீர்மானிக்க முடியும்? பரிஹாரத்தைச் செய்து பார்த்து பயனை கவனிக்கும்போது தானே தீர்மானிக்க முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது.

மஹா: அப்படித்தான் தீர்மானிக்க வேண்டுமென்பது அவசியமில்லை. இப்பொழுதே தீர்மானித்து விடலாம்.

அதிகாரி: அது எப்படி?

ஸ்ரீமத் ஆசார்யார் பக்கத்திலிருந்த ஒருவரை ஸமீபத்திற்கு கூப்பிட்டார்.

மஹா: சற்று வெளியில் போய் பாருங்கள். அங்கே ஒரு வியாபாரி வந்திருக்கிறார். அவருக்குள்ள வியாதியை நிவிருத்தி செய்து கொள்வதற்காக சாஸ்திரீயமான பரிஹாரங்களை அபேக்ஷிக்கிறார். ''வியாதியை நிவிருத்தி செய்யக்கூடிய மிகவும் சக்தி வாய்ந்த பரிஹாரங்கள் இருக்கின்றன; ஆனால் சில நாட்கள் தொடர்ந்து ஹோமம் செய்ய வேண்டும்; அதற்காக நன்கு அறிந்த மாந்திரிகர்களை சிருங்கேரியிலிருந்தும் பெங்களூரிலிருந்தும் தருவிக்க வேண்டும்; எல்லாமாக மூன்று முதல் நான்கு ஆயிரம் ரூபாய் வரை செலவாகக் கூடியதாக இருக்கும்'' என்று அவரிடம் சொல்லுங்கள். சாஸ்திரங்களில் விதித்துள்ளபடி நன்கு பலிக்கும் முறையில் பரிஹாரங்கள் கிரமப்படி நடக்க வேண்டியதற்குள்ள ஏற்பாடுகளை ஸ்ரீமடத்திலேயே செய்யலாமென்றும், நிச்சயமாக குணமேற்படும் என்றும் உறுதி சொல்லுங்கள். அத்துடன், பரிஹாரங்கள் செய்யப்பட்டு கொஞ்ச காலத்திற்குள் எதிர்ப்பார்த்த குணம் ஏற்படாமலிருந்தால், இந்த பிராஹ்மணர்கள் தன்னை ஏமாற்றி பணம் பறித்துக் கொண்டு விட்டார்கள் என்ற எண்ணம் வராமல்,

இப்பொழுது இவ்வியாதியைக் கொடுத்த முன் செய்த பாபங்கள் இந்த பரிஹாரங்களினுல் போக்கக்கூடாத முறையில் வெகுபலமாக இருக்கின்றனவென்பதை உணர்ந்து, அப்பாப பலன்களை மாற்றக்கூடிய வேறு இன்னமும் சக்தி வாய்ந்த பரிஹாரங்களை செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணமே அவருக்கு வரவேண்டும். அந்த மேலான பரிஹாரங்களைச் செய்வதாஞல் இன்னும் அதிகமாகவே பணச்செலவு ஏற்படும்; அவைகளை அவர் செய்துகொள்ள ஸித்தமாயிராவிட்டாலும், இதுவரை செலவழிந்து போனதற்கு ஒரு க்ஷணமேனும் அவர் வருத்தப்படக் கூடாது.நல்ல கார்யம் செய்துவிட்டு வருத்தப்பட்டால் பாபம்தான் வந்து சேரும். அவரிடம் இவ்வளவையும் சொல்லிவிட்டு அவர் சொல்லும் பதிலைத் தெரிந்துகொண்டு வாருங்கள்.

உடனே அவர் போய் ஸ்ரீமத் ஆசார்யார் சொன்ன வார்த்தைகளை அப்படியே வியாபாரியிடம் திருப்பிச் சொன்ஞர். அதற்கு அவ்வியாபாரி ''மிகவும் வாஸ்தவம், மிகவும் வாஸ்தவம். ஸ்ரீமத் ஆசார்யார் எனக்கு இந்த எச்சரிக்கை கொடுத்தது மிகவும் நியாயம். இது ஆலோசிக்க வேண்டிய விஷயம்தான் என்பது வாஸ்தவம். இது விஷயமாக நன்கு யோசித்து தீர்மானித்துச்சொல்ல நாளை காலை வரையில் எனக்கு அவகாசம் தயவு செய்து கொடுப்பீர்களா?'' என்ருர். அவர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் திரும்பிவந்து வியாபாரி சொன்னதைத் தெரிவித்தார். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் அதிகாரியைப் பார்த்து புன்சிரிப்புடன் ''இவ்வியாதி அஸாத்தியம், தீராதது'' என்ருர்கள்.

ஒரு நாள் மாலை ஸ்ரீமத் ஆசார்யார் பக்கத்தில் நான் உட்கார்ந்திருந்த ஸமயம் ஒரு கனவான் உள்ளே வந்தார்.

கனவான்: என் மனைவி சிற்சில ஸமயங்களில் பிரக்ஞையற்று இருந்து விடுகிருள். இது அவளுடைய ஆரோக்கியத்தையே வரவர கெடுத்து விடுகிறது. தாங்கள் அனுக்ரஹித்து அவளுக்கு ஏதேனும் பரிஹாரம் சொல்ல வேண்டுமென்று மிகவும் வணக்கமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மஹா: பிரக்ஞையற்றிருப்பதில் இரண்டு விதமுண்டு. ஒரு விதத்தில் வியாதியஸ்தர் மரக்கட்டை போலவே ஜடமாக கிடப்பார்; இன்னொரு விதத்தில் பேசிக்கொண்டே யிருப்பார். இரண்டாவது விதமாயிருந்தால், பேசுவது அந்த வியாதியஸ்தர் இல்லை. வேறு ஏதோ பிரேதம் பிசாசு முதலியன பேசுகிறதென்று நிச்சயிக்கலாம். அப்படியானால் தனக்கு என்ன வேண்டும் என்றும், இந்த சரீரத்திலிருந்து வெளிப்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்றும் அதுவே அநேகமாய் சொல்லிவிடும். முதல் சொன்ன மாதிரியாய் இருந்தால், அது அவ்வளவு சுலபமான விஷயம் இல்லை; நானே நேரில் பார்த்துத்தான் பரிஹாரம் சொல்ல வேண்டியிருக்கும். உங்கள் மனைவியின் நிலை எந்த விதத்தைச் சேர்ந்தது?

கனவான்: பிரக்ஞை தவறும்போது கட்டையாய்த்தான் கிடக்கிறாள். ஒன்றுமே பேசுவது கிடையாது. ஆகையால், அவளையே இங்கே அழைத்து வருகிறேன்.

மஹா: அப்படியே செய்யுங்கள். என்ன செய்யலாமென்று பார்ப்போம்.

மற்றொரு கனவானும் ஸ்ரீமத் ஆசார்யார் இருக்குமிடம் வந்தார்.

கனவான்: என் மனைவி க்ஷயரோகத்தினால் சிரமப்படுகிறாள். எத்தனையோ விதம் சிகித்ஸை செய்து பார்த்தேன். பிரயோஜனப்படவில்லை. தங்களுடைய ஆசீர்வாதத்தினால் தான் அவள் பிழைத்திருக்க வேண்டும்.

மஹா : (சற்று ஆலோசித்து) ராஜயக்ஷ்மா (க்ஷயரோகம்) வின் அதிதேவதையின் பிரதிமை ஒன்று உங்கள் தட்டானைக் கொண்டு வெள்ளியில் அடித்துக் கொடுக்கச் சொல்லுங்கள். அதை வைத்து நாற்பது நாட்கள் விதிப்படி பூஜை செய்து வாருங்கள். சில்ப சாஸ்திரம் தெரிந்த எந்த தட்டானும் அந்த தேவதைக்கு

ஏற்பட்ட தியான சுலோகப்படி விக்கிரஹம் அடித்துக் கொடுப்பான். விஷயம் தெரிந்த எந்த பண்டிதரும் பூஜை செய்வதற்கு உங்களுக்கு உதவுவார். ஸாதாரணமாக பிரதிமை வைத்து பூஜை செய்வதில் விரத ஸமாப்தியில் அந்த பிரதிமையை விரதம் செய்து வைக்கும் புரோஹிதருக்கு அல்லது வேறு யாருக்காவது தானம் செய்து விடுவது வழக்கம். இந்தப் பூஜையில் மாத்திரம் பிரதிமையை யாருக்கும் கொடுக்கக் கூடாது. ஸமுத்திரக் கரைக்குக் கொண்டுபோய் ஸமுத்திரத்திற்குள் எட்டி வீசி எறிந்துவிட வேண்டும்.

இவ்விதம் ஜனங்கள் தம்மிடம் தெரிவித்துக் கொண்ட பல பிரச்சினைகளுக்கும் உடனுக்குடனே தயங்காமல் பரிஹாரம் சொல்லி வந்த மாதிரியைக் கண்டு மிகவும் வியந்தேன். தம் கவனத்தை பூராவும் இழுக்கக்கூடிய வேதாந்த சாஸ்திர விசாரத்திலும் அப்யாஸத்திலுமே ஈடுபட்டுக் கொண்டிருந்த ஸ்ரீமத் ஆசார்யாருக்கு அவைகளுக்கு மத்தியில் வியாதிகளுக்கு பரிஹாரங்கள் சொல்லும் விஸ்தாரமான மந்திரவிஷயமான கிரந்தங்களை பரிச்சயம் செய்து கொள்வதற்கு எப்படி அவகாசம் கிடைத்தது என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டிருந்தேன். நடுவில் இன்னொரு எண்ணமும் எழுந்தது. வைத்தியர் யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய தங்கள் கவலைகளைப் பற்றியும், கஷ்டங்களைப் பற்றியும், ஸ்வயநலக்காரர்களாக இருந்துகொண்டு, அறிவில்லாமல், ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை தொந்தரவு செய்கிறார்களே என்றும் தோன்றிற்று. ஆனால் ஸ்ரீமத் ஆசார்யாருக்கு என் மாதிரி மனோபாவனையில்லாமல், வந்தவர்களுடைய சிரமங்களை யெல்லாம் நிதானமாய் பொறுமையுடன் அன்போடு கேட்டு பதில் சொல்லி வந்தார்கள். மத்தியில் சிறிது இடைவெளி கிடைத்தபோது என்னை நிமிர்ந்து பார்த்து என் மனதில் தோன்றிய எண்ணத்திற்கு பதில் சொன்னார்கள்.

மஹா: சாஸ்திரங்கள் ஒவ்வொரு வியாதிக்கும் பரிஹாரமாக, வியாதியஸ்தர் அணிந்து வருவதற்கு ஒரு குறிப்பிட்ட மணியையும் (ரத்தினத்தையும்), ஜபித்து வரவேண்டிய மந்திரத்தையும், உட்கொள்வதற்கு ஓர்

ஔஷதத்தையும் (மருந்தையும்) விதித்திருக்கின்றன. முதலில் சொன்ன மணிகள் இக்காலத்தில் நல்லதாக அகப்படுகிறதில்லை. பணத்தையே குறியாயுள்ள வைத்தியர்கள் கையில் மூன்றுவதான ஔஷதம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகையால் யாரேனும் எப்பொழுதாவது தம் வியாதிகளுக்கு பரிஹாரம் தேடிக்கொண்டு என்னிடம் வந்தால், பரிஹாரத்தினுல் நிவிருத்தியாகக்கூடிய வியாதியாய் இருந்தால், மந்திரத்தினுல் ஏற்படக்கூடிய அனுகூலத்தை செய்துகொடுக்க மறுப்பது நியாயமாகாது. ஜனங்கள், பாவம்! என்ன செய்வார்கள்? சரீர ஸம்பந்தமான சிரமங்களினுலேயே மனம் நொந்து கீழ் அழுத்தப்படும் போது, உயர்ந்த நோக்கங்களை அனுஸரித்து நடக்க அவர்களுக்கு அவகாசம் ஏது? அக்கறையுடன் தான் எப்படி ஈடுபட முடியும்? ஆகையாலேயே ஸ்ரீபகவத்பாதாசார்யார் இப்பீடத்தை எதற்காக ஸ்தாபித்தார் என்பதையே மறந்து என்னை வைத்தியனுகவும் மாந்திரிகனுகவும் பாவித்து என் உதவியைத் தேடுகிறுர்கள் என்பதில் ஆச்சர்யமில்லை.

எவனுக்கு ஈசுவரனிடத்தில் திருடமான பக்தியும், அவ்விதமே குருவினிடத்திலும் திருடமான பக்தியும் இருக்கிறதோ, அவனுக்கு குருவினுல் சொல்லிக் கொடுக்கப்பட்டதும், சொல்லிக் கொடுக்கப்படாததுமான எல்லா விஷயங்களும் பிரகாசிக்கும் என்று ஒரு ஸம்ஸ்கிருத சுலோகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனுல் அவ்விதம் பிரகாசிக்கும் விஷயத்தைக் கூட தவறுதல்தானே என்று அந்தரங்க பக்தர்கள்கூட நினைத்து விடலாமென்பதற்கு உதாஹரணமாக ஒரு ஸம்பவம் இங்கு சொல்லப்படுகிறது. அவர்களுக்கும் அவ்விதம் பிரகாசிக்கும் விஷயத்தின் தாத்பர்யத்தையும் மஹிமையையும் ஒரு குரு எடுத்துச் சொன்னுல்தான், அதை அவர்கள் நன்கு தெரிந்து கொள்ள முடியுமென்பதையும் இந்த ஸம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த கல்லிடைக்குறிச்சி என்ற ஊரிலுள்ள 'வைதிக தர்ம ஸம்வர்த்தினி' என்ற ஸம்ஸ்கிருத

கல்லூரியில் அத்யக்ஷகராயிருந்த காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ சங்கர சாஸ்திரிகள் வியாகரணத்திலும், வேதாந்தத்திலும் சிறந்த பண்டிதர். ஆயுர்வேதத்திலும் மிகவும் தேர்ந்தவர். வைத்தியத்தை தொழிலாக வைத்துக் கொள்ளாவிட்டாலும், ஆப்தரான நண்பர்களுக்கு சிகித்ஸை விஷயமாக ஹிதமான அபூர்வமான வைத்திய முறைகளைக் கூறுவதுண்டு. அந்நண்பர்களில் ஒருவர் கொஞ்ச காலமாக உடம்பு அஸௌகர்யமாய் இருந்து வருகையில் ஒரு நாள் இடைவிடாமல் விக்கல் ஏற்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். காலையில் பொழுது விடியுமுன்னரே சாஸ்திரிகளை கூட்டிவரும்படி ஆள் அனுப்பினார். அங்கு சாஸ்திரிகள் வந்து பார்த்ததில், விக்கல் அடிக்கடி உண்டாவதையும் அதன் வேகத்தையும் கண்டு பிரமித்து விட்டார். விடிவதற்குள் யோசனை செய்து சிகித்ஸை சொல்வதாகச் சொல்லிவிட்டு, வழக்கம்போல் நதிக்குச் சென்று ஸ்நாநம் செய்துவிட்டு நதிக்கரையிலுள்ள படிக்கட்டுகளில் உட்கார்ந்துகொண்டு ஸந்தியாவந்தனத்தைச் செய்தார். அப்பொழுதெல்லாம்கூட விக்கலைப்பற்றிய நினைவே மனதில் ஓடிக் கொண்டிருந்தது; பரமாசார்யாரான முந்தின மஹாஸந்நிதானத்தைக் (ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள்) குறித்து ஒரு நிமிஷம் மனதை ஒருமைப்படுத்தி தியானம் செய்துவிட்டு, காயத்ரீ ஜபம் செய்ய ஆரம்பித்தார். ஆனால் உச்சரிக்கும்போது காயத்ரீ மந்திரத்தின் அக்ஷரங்கள் சரியாக வராமல் இருந்ததுடன், வேறு ஏதோ அக்ஷரங்களை தனக்குத் தெரியாமலே தான் உச்சரித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தார். கவனித்துப் பார்க்கையில் அவ்வக்ஷரங்கள் भूमा दध्युपदेशात् ''பூமா தத்யுபதேசாத்'' என்று தெரிந்தன. இவ்வித அக்ஷரங்கள் அடங்கிய மந்திரமே கிடையாது. இந்த சொல்லுக்கும் அர்த்தம் இல்லை. இவ்விதம் உச்சரித்து வரும் அசட்டுத்தனத்தை உணர்ந்து, மிகவும் சிரமப்பட்டு அப்புதிய பயனற்ற சொற்களை வெளியேற்றி, ஒருவாறு காயத்ரீ ஜபத்தை முடித்துக் கொண்டார். ஏன் அத்தகைய அர்த்தமில்லாத சொற்கள் தன் மனதில் தோன்றி வருத்தின என்பதை அவரால் அறிய முடியவில்லை. கடைசியில் ''பூமா'' என்பது வியாஸருடைய பிரஹ்ம ஸூத்திரங்களில் கண்ட விஷயமல்லவா என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டார். ஆனால் அங்குள்ள ஸூத்திரம் தான் உச்சரித்தபடியல்ல என்பதையும் உணர்ந்தார். வாஸ்தவமாயுள்ள ஸூத்திரத்தை ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்றும், அது

அவருக்கு நன்ருய் தெரிந்ததாகவே இருந்தும், இப்பொழுது ஞாபகத்திற்கு வரவில்லை. என்றுமில்லாத இந்த விபரீத மறதி ஏற்பட்டதால் மனம் மிகவும் குழம்பி, வீட்டுக்குத் திரும்பும் வழியில் ஒரு நண்பர் வீட்டில் நுழைந்து பிரஹ்ம ஸூத்திர பாஷ்யத்தை எடுக்கச் சொன்னுர். அந்த ஸூத்திரம் இருக்கக்கூடிய பாகத்தை புரட்டும்போது அங்கேயே ஓர் அடையாளம் வைத்திருக்கக் கண்டு வியந்தார். அந்த ஸூத்திரம் भूमा संप्रसादादध्युपदेशात् ''பூமா ஸம்ப்ரஸாதாதத்யுபதேசாத்'' என்றதைப் பார்த்து संप्रसादा ''ஸம்ப்ரஸாதா'' என்ற நான்கு எழுத்துக்கள்தான் தனக்கு மறைந்திருந்தன என்பதை உணர்ந்தார்.

சாஸ்திரிகள் இவ்வித மனக்குழப்பத்தில் நண்பரின் விக்கலுக்குரிய சிகித்ஸையைக் கண்டுபிடிப்பதில் மனதை செலுத்தாமல், ஸமீபத்தில் சில மைல்களுக்குள் தங்கியிருந்த ஸ்ரீமத் ஆசார்யாரிடமே போவதுதான் உசிதமென்று நினைத்தார். அப்படியே அங்கே போனவுடன்-

மஹா: உங்கள் நண்பரின் தேகஸ்திதி எப்படி இருக்கிறது?

சாஸ்திரிகள்: அதே ஸ்திதியில்தான் இருக்கிருர். ஆனுலும் இன்று விடியற்காலம் முதல் இடைவிடாமல் விக்கல் அவரை தொந்தரவு செய்து கொண்டேயிருக்கிறது. சிரமப்பட்டுக் கொண்டுதான் இருக்கிருர். அது இன்னும் அவரை விட்டபாடில்லை.

மஹா: உங்களுக்குத்தான் ஆயுர்வேத வைத்திய முறை நன்கு தெரியுமே?

சாஸ்: ஒருவித சிகித்ஸையும் எனக்குத் தோன்றவில்லை.

மஹா: நம் ஆசார்யாரவர்களிடம் விசேஷ பக்தியுள்ள வரல்லவா நீங்கள்? ஏதாவது வைத்திய முறை தட்டுப்படாமலிருப்பதற்கு நியாயமில்லையே?

சாஸ்: தட்டுப்படவில்லையென்பது மாத்திரம் இல்லை; இன்று காலையில் காயத்ரீ ஜபத்திலேயே தட்டுக்கிடல் ஏற்பட்டது. அதை சொல்லிக் கொள்ளவே வெட்கமாயிருக்கிறது.

மஹா: என்ன நடந்தது?

சாஸ்திரி: காயத்ரீ ஜபத்தை கிரமமாக ஜபிக்க முடியாமல் அம்மந்திரத்தின் அக்ஷரங்களே நன்கு உச்சரிப்பில் வராமல், அவைகளுக்குப் பதிலாக भूमा दध्युपदेशात् ''பூமா தத்யுபதேசாத்'' என்ற அக்ஷரங்கள் என் மனதில் அர்த்தமின்றி தோன்றிக் கொண்டே இருந்தன. ஆனதால் காயத்ரீ மந்திரத்தின் அக்ஷரங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளவே சிறிது நேரம் வேண்டியிருந்தது. நான் ''பூமா'' ஸூத்திரத்தையும் சரியானபடி சொல்லவில்லை யென்பதை உணர்ந்தேன். ஸூத்திரத்தின் சரியான அக்ஷரங்கள் என்னவென்று ஞாபகப்படுத்திக் கொள்ளவே, புஸ்தகத்தை எடுத்துப் பார்க்க வேண்டிய அவசியம் இருந்தது.

மஹா: (சிறிது புன்னகையுடன்) உண்மையில் தட்டுக்கிடல் ஒன்றுமேயில்லை. எதை உத்தேசித்து நீங்கள் நம் ஆசார்யாரை ஏகாக்ரமாக தியானம் செய்து வேண்டினீர்களோ, அதையே பெற்றீர்கள் என்று தெரிகிறது.

சாஸ்திரி: தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை.

மஹா: ஆர்வத்தோடு விக்கலுக்கு மருந்து தேடிக் கொண்டிருந்தீர்களல்லவா? அதற்கு மருந்து உங்களுக்கு தோன்றின சொற்றொடரில் ''ததி'' (தயிர்) என்று அமைக்கப்பட்டிருக்கிறது.

சாஸ்திரி: விக்கலுக்கு தயிர் மருந்தாகுமோ?

மஹா: நீங்கள் இவ்விஷயத்தில் ஸந்தேகப்படக் கூடாதென்றுதான் ''உபதேசாத்'' (விதிக்கப் பட்டிருப்பதால்) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சாஸ்திரி: அதை எப்படி எவ்வளவு கொடுக்க வேண்டும்?

மஹா: இதற்கும் பதில் ''பூமா'' (ஏராளமாக) என்ற சொல்லிலேயே இருக்கிறது. ஆதலால், உங்கள் ஆழ்ந்த பக்திக்கு இரங்கி உங்கள் குருநாதரே தம்

தெய்வீக அனுக்ரஹத்தின் பிரஸாதமாக, இவ்விதம் இந்த சிகித்ஸையை உங்களுக்கு தோற்றி வைத்திருக்கிறார் என்பதில் ஸந்தேகம் வேண்டாம்.

சாஸ்திரிகளும் ஸ்ரீமத் ஆசார்யாரின் இவ் வியாக்யானத்தையும் உபதேசத்தையும் பக்தி சிரத்தையுடன் ஏற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பியதும் அப்படியே நண்பருக்கு வைத்தியம் செய்து விக்கலின் கொடுமையை தணித்தார். பிறகு ஆயுர்வேத கிரந்தங்களிலும் விக்கலுக்கு தயிர் மருந்தாக விதிக்கப் பட்டிருப்பதைத் தேடி சாஸ்திரிகள் தெரிந்து கொண்டார்.

அர்த்தமற்றவைபோல் தோன்றும் இச்சொற்களுக்கு ஸ்ரீமத் ஆசார்யார் எப்படி இவ்வியாக்யானம் செய்து கொடுத்தார் என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள முடியுமானால் நன்றாயிருக்கும். ஒருவேளை அவர்களே சாஸ்திரிகளுக்கு அச் சொற்களை தோற்று வித்திருக்கலாம்; ஆகையினாலேயே அவைகளுக்குச் சரியானபடி வியாக்யானம செய்து கொடுப்பதில் அவர்களுக்கு சிரமம் இல்லை என்று சொல்லிவிடலாம். ஆனால் இவ்விதம் ஸமாதானம் சொல்வது, ''நம் ஆசார்யார்தான் உங்களுக்கு இவ்விதம் தோற்றுவித்தார்கள்'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் கூறியுள்ள வாக்கியத்திற்கு முரணாகும். நம்மைப் போன்றவர்களுக்கு இது எப்படி நடந்திருக்குமென்று நிச்சயிக்கவே முடியாது. ஆனாலும் ஸ்ரீமத் ஆசார்யாரும் அவர்களுக்கு முந்திய குருநாதரும் அந்தரங்க தத்துவத்தில் வேறில்லையென்பதை இந்த ஸம்பவமும், வேறு அநேக ஸம்பவங்களும் நன்கு காட்டுகின்றனவென்று நிச்சயமாய் சொல்லலாம்.

சிரத்தை என்ற விஷயத்தைப்பற்றி சொல்லிவரும் இடத்தில் நம் தேசத்திலுள்ள பெரியோர்கள் பரம்பரையாய் வந்துள்ள சம்பிரதாயத்திற்கு எவ்வளவு மதிப்பு கொடுத்து வந்தார்கள் என்பதைக் காட்டும் ஓர் உதாஹரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு நாள் ஒரு கிழவர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து வந்தனம் செய்தார்.

மஹா: தங்கள் சொந்த ஊர்?

கிழவர்: .... கிராமம்.

மஹா: அப்படியா? நீங்கள் மிகவும் பாக்கியசாலி. .... கனபாடிகள் ஊர் அல்லவா அது? (இரண்டு பெயர்களையும் மறந்து விட்டதற்கு மிகவும் வருந்துகிறேன் - R.K.)

கிழவர்: அந்தப் பெயர் கொண்ட கனபாடிகளே எங்கள் ஊரில் இல்லை.

மஹா: இப்பொழுது இருக்க முடியாது.நான் சொன்னவர் 600 வருஷங்களுக்கு முன் அங்கு வஸித்தவர்.

கிழவர்: அப்படியா? அவரைப்பற்றி நான் கேள்விப்பட்டதில்லை.

ஸ்ரீமத் ஆசார்யாரின் வார்த்தை ஸமீபத்திலிருந்த என் குதூஹலத்தை எழுப்பியது.பிரஸித்தர்களான கிரந்த கர்த்தாக்களும் ஞானிகளும் பல நூற்றுண்டுகள் சென்றும் ஜனங்களின் ஞாபகத்திலிருந்து வருவது நியாயம்; கனபாடிகள் என்றால் நன்கு வேதங்களைக் கற்றவர் என்றுதானே ஏற்படும்? அவரைப்பற்றி 600 வருஷங்களுக்குப் பின்னும் நினைக்கும்படியாக அவர் என்ன விசேஷ யோக்கியதை பெற்றிருக்கக்கூடும் என்று தெரியவில்லையே என்று யோசித்து ஸ்ரீமத் ஆசார்யாரையே கேட்டேன்.

கிருஷ்ணஸ்வாமி: அந்த கனபாடிகள் யார்? அவர் பிரஸித்தமாய் இருந்திருப்பதாகத் தெரிகிறதே?

மஹா: அவர் பிரஸித்தர்தான். ஸ்ரீ வித்யாரண்யரையே கண்டித்துத் திருத்தியவர் அவர்.

கி: எப்பொழுது அவ்விதம் செய்தார்? ஏன் செய்தார்?

மஹா: ஸ்ரீ வித்யாரண்யர் ஸகல சாஸ்திரங்களிலும் கரைகண்டவர் என்பது பிரஸித்தம். அப்படி இருந்தும் தாம் எழுதிய கிரந்தங்களை வெளியில் பிரசாரத்திற்கு விடுவதற்குமுன், பிரஸித்தி பெற்ற மஹாவித்வான்களைத்

தருவித்து அவர்களை சரிபார்க்கச் சொல்லி அவர்களுடைய சம்மதத்தைப் பெறுவதென்ற விசேஷமான விநயத்தோடு கூடினவர். யஜுர் வேதத்திலுள்ள ஸ்ரீருத்ராத்யாயத்திற்கு பாஷ்யம் எழுதின பிறகு, பிரபலமான வேதவித்துக்களை வரவழைத்து அவர்களிடம் வாசித்துக் காட்டினார். ''நமோ ஹரிகேசாய'' (ஹரிகேசனுக்கு நமஸ்காரம்) என்ற வாக்கியத்திற்கு விளக்கம் கூறும்போது, ''ஹரிகேச'' என்ற பதத்தை ''ஹரி, க, ஈச'' (விஷ்ணு, பிரஹ்மா, பரமேசுவரன்) என்று பிரித்து, ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களோடு சேரும்போது, விஷ்ணு, பிரஹ்மா, சிவன் என்ற ரூபங்களைத் தாங்கும் பரப்ரஹ்ம ஸ்வரூபம் என்று வியாக்யானம் எழுதியிருந்தார். இவ்விடம் வாசிக்கப்பட்டதும் இந்த கனபாடிகள் எழுந்து அதை பலமாகக் கண்டித்து விட்டார்.

கனபாடிகள்: வேதம் என்ன உங்கள் சொந்த சொத்தா? இஷ்டப்படி அர்த்தம் சொல்வதற்கு?

வித்யாரண்யர்: நீங்கள் கண்டிக்கும்படி வேதத்தை நான் என்ன செய்து விட்டேன்?

கனபாடிகள்: ''ஹரிகேச'' என்ற பதத்தை உங்கள் இஷ்டம்போல் பிரிக்க உங்களுக்கு என்ன அதிகாரம்? வேதபாடமானது பரம்பரையாய் வெகு ஜாக்கிரதையாக பதம், க்ரமம், ஜடை, கனம் என்ற முறைப்படிக்குள்ள பாதுகாப்புக்களால் காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது என்ற விஷயம் தங்களுக்குத் தெரிந்ததே. ஸம்பிரதாயமாக ஏற்பட்டிருக்கிற பதவிபாகத்தில் ''ஹரிகேச'' என்ற சொல் ''ஹரி, கேச'' என்று பிரிக்கப்பட்டிருக்கிறதே யொழிய, தாங்கள் சொல்கிறபடி ''ஹரி, க, ஈச'' என்று பிரிக்கப்படவில்லையே?

இதைக் கேட்ட ஸ்ரீ வித்யாரண்யர் உடனே தம் தவறை உணர்ந்து, ஸம்பிரதாயமான பதபாடத்திற்கு இணங்க தம் வியாக்யானத்தைத் திருத்தியமைத்தார், ''விஷ்ணு, பிரஹ்மா, சிவன் ஆகிய த்ரிமூர்த்தி ஸ்வரூபனான பகவானுக்கு நமஸ்காரம்'' என்பதை ''நீலவர்ணமான ஆகாயத்தை தலைமயிராக உடையவனுக்கு நமஸ்காரம்'' என்று மாற்ற வேண்டியிருந்தது. திருத்தியமைக்கப்பட்ட பொருள் முன் சொல்லிய பொருளைவிட கவர்ச்சிகரமாகவாவது அர்த்த புஷ்டியுள்ளதாகவாவது இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் பரம்பரையாய் வந்துள்ள பதவிபாகத்திற்கு பிராமாண்யம் கொடுக்காமல் இருக்க முடியவில்லை. இவ்விதமாக அம்மஹானையும்கூட திருத்தக்கூடிய யோக்கியதை இந்த கனபாடிகளுக்கு இருந்தது.

7. உண்மையான அஹிம்ஸை

ஸாமான்யமாக சில ஆஸ்திகர்களுக்கு நாஸ்திகர்களைக் கண்டால் அருவறுப்பும் கோபமும் ஏற்படுவதுண்டு. ஆனால் ஸ்ரீமத் ஆசார்யார் அவர்களிடம் கருணையையே கைக்கொண்டு, அவர்கள் மனம் நோகாமல், அவர்களை எப்படியேனும் தம்மால் இயன்ற மட்டும் நல்வழிக்குத் திருப்பிவிடவே முயன்று வந்தார்.

அன்னத்தை விலைக்கு விற்பதை சாஸ்திரங்கள் கூசாமல் வியக்தமாக கண்டித்திருப்பது யாவரும் அறிந்த விஷயம். தர்ம சாஸ்திரம், ஸுகாதார நீதிகள் ஆகிய இவ்விரண்டிற்கும் உரிய விதிகளை மீறித்தான் உணவை விற்கும் தொழிலை நடத்த முடியும். அத்தொழில் செய்துவந்த ஒரு சிஷ்யர் சிருங்கேரிக்கு வந்திருந்தார். அப்பொழுது தானும் ஸ்ரீமத் ஆசார்யாரிடமிருந்து சிவ பஞ்சாக்ஷரீ மந்திரத்தை உபதேசம் பெறவேண்டுமென்ற ஆசை அவருக்கு எழுந்தது. வெகுதூரம் தயங்கிய பிறகு மிக்க பணிவுடன் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்துக் கொண்டார்.

சிஷ்யர்: தங்களிடம் உபதேசம் பெற வேண்டுமென்ற பேராவல் எனக்கு இருந்து வருகிறது. ஆனால் நான் சாப்பாட்டு விடுதி வைத்து நடத்திக் கொண்டு வருவதால், உபதேசம் பெறுவதற்குத் தகுதியான பரிசுத்தத்தன்மை என்னிடம் இல்லையென்றும் உணர்கிறேன். வேறு தொழிலுக்கு வேண்டிய படிப்பு எனக்கு இல்லாமையினால், பிழைப்பு நடக்க வேண்டியதற்காக இத்தொழிலில் இறங்கும்படி ஏற்பட்டு விட்டது.

மஹா: இந்தத் தொழிலில் இருந்துவந்தும்கூட, ஆன்மீக முன்னேற்றத்தில் உங்களுக்குள்ள ஆர்வம் அழிந்து போகாமல் இருப்பது மிகவும் நன்மையே. பகவான்

நிச்சயமாய் உங்களுக்கு உதவி செய்வார். உபதேசம் பெற்ருல் ஏதேனும் ஒரு சிறு நியமம் விதித்தால், அதை தவருமல் உங்களால் அனுஷ்டித்து வர முடியுமா?

சிஷ்யர்: ஸந்தேகமில்லாமல் முடியும். தங்கள் ஆக்ஞையின்படி சிறிதும் தவருமல் நடந்து வருவேன்.

மஹா: இவ்விதம் சொல்வதைக் கேட்க மிகவும் ஸந்தோஷம். அந்த நியமம் இவ்வளவுதான். உங்கள் தொழிலை நடத்தி வருவதில், உங்கள் விடுதியில் தயார் செய்யப்படும் அன்னமோ, பக்ஷணமோ, பானமோ, எதுவாயிருந்தாலும் அந்தப் பண்டத்தை நீங்கள் சாப்பிடுவதில்லை யென்ற கட்டுப்பாட்டை வைத்துக் கொள்ளுங்கள்; அதுவே போதும்.

சிஷ்யர்: தங்கள் ஆக்ஞையின்படி அப்படியே அவசியம் நடக்கிறேன்.

மஹா: அப்படியானுல் நாளைக் காலையில் இங்கு வாருங்கள். உபதேசம் பெற்றுக் கொள்ளலாம்.

அந்த சிஷ்யரும் அப்படியே மறுநாள் காலையில் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்று உபதேசம் பெற்றுக்கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தார். பயபக்தியோடு மந்திரத்தை ஜபித்து வந்தார். தன் சாப்பாட்டு விடுதியிலிருந்து எதையும், தீர்த்தம்கூட, அவர் தன் சொந்த உபயோகத்திற்காக எடுத்துக் கொள்வதில்லை. சில வாரங்களுக்குப் பின் தனக்குள் அடியிற் கண்டவாறு நினைக்கலானுர்: ''என் சொந்த விடுதியில், நானே நேரிலேயே என் மேல்பார்வையிலேயே ஆஹாரவகைகளை தயார் செய்து வருகிறேன். ஆஹாரங்கள் பரிசுத்தமாகவும், அசுத்தம் ஒன்றுமே கலவாமலும் இருக்கின்றன என்பது உறுதியாய்த் தெரிகிறது. அப்படியிருந்தும் அது எதையும் சாப்பிட வேண்டாம் என்று ஸ்ரீமத் ஆசார்யார் ஆக்ஞாபித்திருக்கிருர்கள். ஆதலால், விற்பனைக் கென்று செய்யப்படும் சாமான்களுக்கே ஏதோ அசுத்தியோ தோஷமோ உண்டு என்பது நன்கு தெரிகிறது. விற்பனைக்கென்று தயாரான பதார்த்தங்களுக்கே தோஷமுண்டானுல், அவைகளை பணத்திற்கு விற்று விட்டால் இன்னும் அதிகமாகவே அவைகளில் தோஷம் ஏற்படுமல்லவா? அந்த தோஷம் என்ன என்று எனக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனுல் ஸ்ரீமத் ஆசார்யாரின்

ஆக்ஞையிலிருந்தே, தோஷம் உண்டு என்பது தெளிவாய்த் தெரிகிறது. இவ்விதம் விற்கிறவனுக்கும் வாங்கித் தின்பவனுக்கும் அசுத்தியை ஏற்படுத்தக் கூடிய இத்தொழில்தான் எனக்கு எதற்காக?'' என்று. இவ்விதம் ஏற்பட்ட எண்ணம் நாளுக்கு நாள் பலப்பட்டு வரவே, இந்த விடுதியையே மூடிவிடுகிறது என்று தீர்மானித்து விட்டார். நல்ல வேளையாக, அவருடைய அதிர்ஷ்டவசத்தினால், வேறொருவர் வந்து இவ்விடுதியையும் அதிலுள்ள எல்லா சாமான்களையும் தானே எடுத்துக் கொள்வதாகச் சொல்லி, இவருக்குப் பெருந்தொகை கொடுத்து பிரியமாய் வாங்கிக் கொண்டார். அந்த சிஷ்யரும் உடனே தன் கிராமத்துக்குச் சென்று ஸன்மார்க்கத்தில் நின்று ஆன்மீக அபிவிருத்தித் துறைகளில் காலம் கழித்து வந்தார்.

ஒரு நாள் முற்பகலில் காத்துக் கொண்டிருந்த சிஷ்யர்களுக்கு ஸ்ரீமத் ஆசார்யார் அபிஷேக தீர்த்தம் விநியோகம் செய்துவிட்டு ஸ்நானம் செய்கிற வழக்கம்போல் மாத்யாஹ்நிக ஸ்நானம் செய்த பிறகு இரண்டாவது ஸ்நானம் செய்ய தயார் செய்து கொண்டிருந்தார். அன்று அவர்களுக்கு தேகத்தில் கொஞ்சம் ஸௌக்கியக் குறைவு இருந்தது. அப்படியிருந்தும் இரண்டாம் தடவை செய்தால் ஆரோக்கியம் இன்னமும் கெடுமே என்ற பயத்துடன் ஸ்ரீமடத்தைச் சேர்ந்த ஓர் அந்தரங்க அதிகாரி இரண்டாம் ஸ்நானத்தை நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காக ஸ்ரீமத் ஆசார்யார் இருக்குமிடம் விரைந்து சென்றார்.

அதிகாரி: இரண்டாம் ஸ்நானத்திற்கு இப்பொழுது என்ன அவசியமோ?

மஹா: ஸ்நானம் செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது.

அதிகாரி: அவ்விதம் தோன்றக் காரணம் என்ன?

மஹா: (அவர்களுக்குரிய புன்சிரிப்புடன்) ஏன், எனது மனது தான்.

அதிகாரி: மனதில் அவ்விதம் தோன்றக் காரணம் என்ன? ஏதேனும் காரணம் இருக்க வேண்டுமே?

மஹா: இருக்கத்தான் வேண்டும்.

அதிகாரி: அது என்ன என்று நான் தெரிந்து கொள்ளலாமா?

மஹா: அவசியமில்லை. அவ்விதம் எனக்குத் தோன்றுகிறது என்பதே போதும்.

இந்தப் பதிலால் அவ்வதிகாரி மேலே ஸ்ரீமத் ஆசார்யாருடன் வாதாடுவது நியாயமுமில்லை, ஸாத்தியமும் இல்லை என்று உணர்ந்து தடைப்பட்டும்கூட, அவர்களுடைய ஆரோக்கியத்தைக் கருதி இத்துடன் விஷயத்தை விட்டுவிடவும் மனமில்லாமல் திகைத்தார்.தனக்குள்ளேயே ஆலோசித்தார். பிறகு,

அதிகாரி: தீர்த்தம் கொடுக்கும்போது ஏதேனும் விசேஷமான தீட்டு அல்லது வேறு அசுத்தி ஏற்பட்டதா? அதனுல்தான் ஸ்நாநமா?

இவ்விதம் நேரடியான கேள்வி எழுந்ததும்,

மஹா: ஆம்.

அதிகாரி: ஏற்பட்ட ஸம்பவம் என்ன?

மஹா: அதைப்பற்றி என்ன? அது முக்கியமில்லை.

மீண்டும் அதிகாரி தனக்குள் ஆலோசித்தார். பிறகு,

அதிகாரி: தீர்த்தம் வாங்கிக் கொள்வதற்காக இன்னுர் வந்தாரே? அதனுல்தானு?

மீண்டும் இவ்விதம் நேரடியான கேள்வி எழுந்ததும்,

மஹா: ஆம்.

அதிகாரி: இது அசுத்திக்குக் காரணமாயிருக்குமானுல், முன்னமேயே என்னிடம் சொல்லியிருந்தால், தங்களிடம் அவர் வருவதை தடுக்க ஏற்பாடு செய்திருப்பேனே?

மஹா: எதற்காக தடுக்க வேண்டும்? வருகிறவர் எவ்வளவு தோஷத்துடன் கூடியிருந்தாலும், ஸ்ரீ சந்திர மௌலீசுவரரின் அபிஷேக தீர்த்தத்தின் மஹிமையில் நம்பிக்கையுள்ளவராயிருந்தால், அவருக்கு அதை நான் கொடுக்க மறுப்பதற்கு எவ்வித நியாயமும் இல்லை.

அதிகாரி: தங்களிடமிருந்து நேராகப் பெருமல், வேருெரு வரிடமிருந்து தீர்த்தத்தைப் பெறும்படி ஏற்பாடு செய்திருப்பேன்.

மஹா: அந்த தீர்த்தத்தை என் கையிலிருந்து வாங்கிக் கொண்டால் அதற்கு விசேஷ மதிப்பு என்று அவர் நினைக்கும்போது, நீங்கள் சொல்வதுபோல் செய்வது உசிதமாகுமோ?

அதிகாரி: தங்களுடைய தற்கால ஆரோக்கிய நிலைமையில் இரண்டாம்முறை ஸ்நாநம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறதே என்பதற்காகத்தான்.

மஹா: இது மிகவும் அல்ப விஷயம். இதுவும் என்னைப் பொறுத்ததுதானே? மேலும், அபிஷேக தீர்த்தம் ஆத்ம சுத்தியை உண்டாக்கக்கூடிய பொருள் என்று நாம் எல்லோரும் நம்பி வருகிருேமல்லவா? தீர்த்தம் பெறுபவன் செய்துள்ள பாவம் அதிகமாக உயர உயர, தீர்த்தம் வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியமும் அதற்குத் தகுந்தாற்போல் உயரும் என்பது நியாயமாகத் தெரியவில்லையா? அதாவது, ஒருவனிடம் பாபங்கள் அதிகமாக அதிகமாக அவனுக்கு பரிசுத்தியேற்பட வேண்டிய அவசியமும் அதிகமாகத்தானே ஆகும்? இப்படியிருப்பதால், இவரைக் காட்டிலும் குறைந்த தோஷமுள்ளவர் களைவிட இவருக்கே தீர்த்தத்தின் அவசியம் அதிகம். அதை இவருக்குக் கொடுக்க மாட்டேன் என்று எந்த காரணத்தைக் கொண்டு நான் சொல்ல முடியும்?

ஸ்ரீமத் ஆசார்யார் விஜய யாத்திரையின்போது ஒரு கிராமத்தில் தங்கியிருந்த ஸமயம் ஒரு நாள் மாலையில் ராத்திரி பூஜைக்காக சாமான்களை எடுத்துவைக்கையில், பொன் வெள்ளி தாமிரத்திலுள்ள யந்திரத்தகடுகள் வைத்திருந்த பெட்டியொன்று காணப்படவில்லை. இதற்குப் பொறுப்பாளியான உத்தியோகஸ்தர் உடனே பதறிப்போய், பூஜைக்கு நெருங்கி ஸம்பந்தப்பட்ட ஊழியர்களைக் கூப்பிட்டு உரத்த குரலில்

கடுமையாக அவர்களைக் கண்டித்துக் கொண்டிருந்தார். கட்டடத்தின் இன்னொரு பக்கத்திலிருந்த அறையிலிருந்த ஸ்ரீமத் ஆசார்யார் இவ்வதிகாரியை தம்மிடம் வரவழைத்தார்கள்.

மஹா: ஏதாவது விசேஷமுண்டா? தங்கள் குரல் உயர்ந்து இருந்ததே?

அதிகாரி: பூஜாக் கிரஹத்திலிருந்த யந்திரப் பெட்டியை காணவில்லை. இன்று ராத்திரி பூஜைக்கு எடுத்து வைத்துக் கொண்டிருக்கும்போதுதான் தெரிந்தது. அதைப்பற்றி விசாரித்துக் கொண்டிருந்தேன்.

மஹா: கவலைப்பட வேண்டாம். பதட்டமும் வேண்டாம். இப்பொழுது ஒன்றும் செய்ய வேண்டாம். இரவு பூஜையான பிறகு இங்கு வாருங்கள்.

அதிகாரியும் அப்படியே பூஜை முடிந்தபின் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்றார்.

மஹா: இந்தக் கட்டிடத்தைச் சேர்ந்த தோட்டம் ஒன்று இருக்கிறதல்லவா? அதில் இன்ன மூலையில் மாமரம் ஒன்று இருக்கிறது. கையில் விளக்கு எடுத்துக் கொண்டு அங்கே போனால், அம்மரத்திற்கு ஸமீபத்தில் புதிய மண்ணைக் காண்பீர்கள். அதைப் பறித்துப் பாருங்கள். பெட்டி தென்படும். அது இன்னும் திறக்கப்படவில்லை. அதை அப்படியே மேலே மாத்திரம் தீர்த்தம் விட்டுக் கழுவி பூஜையில் வைத்து விடுங்கள்.

அப்படியே ஸ்ரீமத் ஆசார்யாரின் ஆக்ஞையை சிறிதும் தவறாமல் அனுசரித்து அவ்வதிகாரி சென்று, பெட்டியும் திறக்கப்படாமல் உள்ளிருந்த பொருள்கள் வைத்தபடியே இருக்கக் கண்டு, பெட்டியை எடுத்துக் கொண்டு வெகு ஸந்தோஷத்துடன் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து சேர்ந்தார்.

மஹா: பெட்டி அகப்பட்டுவிட்டது. இதோடு விஷயத்தை விட்டுவிடுங்கள். திருடினது யார் என்று கண்டு பிடிக்க சிரமப்பட வேண்டாம். திருடியவன் பொழுது விடிவதற்குள் தானாகவே மடத்தை விட்டுப் போய்விடுவான்.

தோட்டத்திற்குள் காலடிக்கூட வைக்காமலேயே, அத்தோட்டத்தில் பெட்டி புதைக்கப்பட்டுள்ள இடத்தைக் கண்டுபிடித்த ஸ்ரீமத் ஆசார்யாருக்கு திருடினவன் யார் என்று சொல்வது ஸுலபமாகத் தான் இருந்திருக்கும். ஆனாலும் அவன் இன்னான் என்று சொல்லப்படவில்லை. சட்டமூலமாய் ஏற்படக் கூடிய தண்டனையை விட, பச்சாத்தாபத்தினால் ஏற்படும் வேதனையே ஒருவனுக்கு பெரிய தண்டனையாகும்; அதோடு அவன் தன் கெட்ட ஸ்வபாவங்களை மாற்றிக்கொண்டு நல்லவனாக ஆவதற்கும் இது ஒரு சிறந்த வழியாகும்.

ஒரு நாள் மாலை ஸ்ரீமத் ஆசார்யாரிடம் நான் இருக்கும் ஸமயம் சாந்தி நிலவும் மௌன நிலையில் வெகுநேரம் ஆழ்ந்து இருந்து விட்டார்கள். பிற்பாடு அந்நிலை கலைந்ததும் என்னை நிமிர்ந்து பார்த்தார்கள்.

மஹா: உங்கள் பிரதேசத்தில் சி .... என்ற கிராமத்தில் சில நாட்களுக்கு முன், அக்கிரஹாரத்தில் இறந்து கிடக்கும் பசுக்களின் உடல்களை பஞ்சமர்கள் எடுத்துச் செல்ல மறுத்துவிட்டபடியால், பிராஹ்மணர்களே அவைகளை கைவண்டியில் ஏற்றி நதிக்கரைக்குச் சென்று, அங்கு அவைகளை தங்கள் கையாலேயே புதைத்தார்களாமே? அது வாஸ்தவம் தானா?

இந்த ஸமாசாரம் எப்படி ஸ்ரீமத் ஆசார்யாரின் காதிற்கு எட்டியது என்று மிகவும் ஆச்சரியத்துடன் நான் (கிருஷ்ணஸ்வாமி) ''ஆமாம்'' என்றேன்.

மஹா: வெகு நாளாக நடந்துவந்த வழக்கத்தை அப்பஞ்சமர்கள் இவ்விதம் புறக்கணித்ததைப்பற்றி அங்குள்ள பிராஹ்மணர்களுக்கு வருத்தமும் கோபமும் அதிகமாகவே இருக்குமென்று எண்ணுகிறேன்.

கி: மிக்க வருத்தம்தான்.

மஹா: அவர்களைப் பார்க்கும்போது அவர்களிடம் ''நீங்கள் வருந்த வேண்டிய அவசியமில்லை. இந்த ஸம்பவத்தை நன்மையாகவே கருதுங்கள்'' என்று எனக்காகச் சொல்வீரா?

கி: சொல்கிறேன். ஆனல் எப்படி நன்மையோ?

மஹா: தற்காலத்து தாய்மார்களிடம் தம் குழந்தைகளுக்குக்கூட போதிய பால் இருப்பதில்லை. ஆதலால், குழந்தைகள் பசுவின் பாலால்தான் வளர்கின்றன. மேலும், சிறுவர், கிழவர் முதலிய எல்லோருக்கும் ஆஹாரத்தில் முக்கிய அம்சமாக பால் இருந்து வருகிறது. பகவானை பூஜை செய்வதற்கு வேண்டிய பாலையும் பசுவே கொடுக்கிறது. பசுவைப் பற்றி சாஸ்திரங்கள் மிகவும் பரிசுத்தமானதும் பூஜிக்கத்தக்கதுமான பிராணி என்று சொல்கின்றன. உண்மையாகவே, பசு நமக்கெல்லாம் தாய்போலவே ஆகும். இத்தகைய பசுவிற்கு கடைசியில் நம் கையாலேயே ஸம்ஸ்காரம் செய்யும் பாக்கியம் கிடைத்தால், நாம் செய்நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டாமா? இது ஒரு பெரிய புண்ணிய கர்மாவேயாகும். அதை நாம் ஸந்தோஷத்துடன் செய்ய வேண்டுமல்லவா?

கி: இதுவரை அனுஷ்டானத்திலிருந்துவந்த ஒரு வழக்கத்தைக் கைக்கொண்டவர்களுக்கு, அதைவிட்டு வேருெரு புதிய வழக்கத்தை ஆரம்பிக்க மனம் இடம் கொடுப்பது சிரமம் இல்லையா?

மஹா: சிரமமாக இருக்கலாம். ஆனுலும் அவ்விதம் செய்வதால் நிச்சயமாய் விசேஷமாக ஒரு லாபம் கிடைக்கும் என்று தெரியும்போது, அப்படிச் செய்து பார்ப்பதுதானே சிலாக்கியம்? மேலும், பஞ்சமர்கள் பசுவின் உடலை எடுத்துச் செல்லும்போது, அதன் மாம்ஸத்தையெல்லாம் அவர்கள் சாப்பிடுவார்கள் என்று பிராஹ்மணர்களுக்கு நன்ருய் தெரியுமல்லவா?

கி: ஆம், நன்ருய் தெரியும்.

மஹா: பிராஹ்மணர்கள் பஞ்சமர்களைக் கூப்பிட்டு ''பசுவின் உடலை எடுத்துச் செல்லுங்கள்'' என்று சொல்வது ''பசுவின் மாம்ஸத்தைச் சாப்பிடுங்கள்'' என்று சொல்வதற்கு ஸமானமேயாகும். பசுவின் மாம்ஸ பக்ஷணத்தினால் ஏற்படக்கூடிய பாபத்தில் இவ்விதம் சொல்லும் பிராஹ்மணர்களுக்கும் பங்கு இருந்தே தீரும். அதற்கு இடம் கொடுக்காமல் இவர்களே அந்த சரீரத்தை புதைத்துவிடும் பக்ஷத்தில், பிறர் பசு மாம்ஸ பக்ஷணம் செய்வதற்கு இவர்கள் அனுமதிக்க அவகாசமில்லாமல் ஏற்படுமல்லவா? இதுவே ஒரு பெரிய அனுகூலமல்லவா? அந்த கிராம ஜனங்களை ஸந்திக்க நேர்ந்தால், இவ்விரண்டு விதமான நன்மைகளையும் எடுத்துச் சொல்லி, இப்பொழுது ஏற்பட்ட மாறுதல் இறுதியில் அவர்களுக்கு நன்மையையே பயக்கும் என்ற காரணத்தினால் அதைக்குறித்து வருத்தப்பட வேண்டியதில்லை என்று சொல்லவும்.

8. எல்லோரிடத்தும் அன்பு

ஸ்ரீமத் ஆசார்யாரின் அன்பு மிகவும் பரந்தது. எல்லோரிடத்திலும் செல்லக்கூடிய இயல்பு வாய்ந்தது. இவ்வன்பைப் பெறுபவர்கள் தங்கள் தங்கள் யோக்கியதைக்கு தகுந்தபடி அதை அனுபவிக்கக்கூடிய நிலைமையிலேயே எளிதில் அமைந்து உதவும்.

ஒரு ஸமயம் ஒரு சிறுவன் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசிக்க நேர்ந்தது.

மஹா: இப்பொழுது என்ன புஸ்தகம் வாசிக்கிருய்?

சிறுவன்: ஹிதோபதேசம்.

மஹா: உபாயங்கள் எதெல்லாம்?

சிறுவன்: ஸாமம், பேதம், தண்டம்.

மஹா: இன்னென்று உண்டு.

சிறுவன்: ஆம். தானம்.

மஹா: சரியாகிவிட்டது. ஆனல் உபாயங்கள் நான்கு என்று மாத்திரம் தெரிந்து கொண்டிருக்கிருய். அவைகளுக்குள் கிரமமாக ஒரு வரிசையுண்டு. அந்த வரிசைக்கும் தாத்பர்யமுண்டு, என்று தெரிந்துகொள்ளவில்லை யென்று தெரிகிறது. நீ அதையும் தெரிந்து கொண்டிருந்தால் இந்த தயக்கம் ஏற்பட்டிராது.

சிறுவன்: வரிசைக்கு என்ன தாத்பர்யம்?

மஹா: இப்போது ஒரு சிறிய சுலோகம் சொல்கிறேன். அதை ஞாபகத்தில் வைத்துக் கொள்வாயானால், உபாயங்களின் வரிசைக் கிரமம் தவறாது. ஞாபகத்தில் வைத்துக் கொள்வாயா?

சிறுவன்: அப்படியே ஆகட்டும். என்ன சுலோகம்?

மஹா: अधीष्व बालकाधीष्व [வாசி, குழந்தாய், வாசி.]

दास्यामि तव मोदकान् [(வாசித்தால்) உனக்கு கொழுக்கட்டைகள் தருவேன்.]

अस्यस्मै वा प्रदास्यामि [(இல்லையானால்) அவைகளை வேறு யாருக்கேனும் கொடுத்து விடுவேன்.]

कर्णावुत्पाटयामि ते [(அது மாத்திரமல்ல) உன் காதுகள் இரண்டையும் திருகுவேன்.]

இந்நான்கினுள் முதலாவது ஸாமம் (பிரியத்தோடு செய்யும் உபதேசம்), இரண்டாவது தானம் (வெகுமதி பெற ஊக்கமளிப்பது), மூன்றாவது பேதம் (பிளவை உண்டாக்க முயல்தல்), நான்காவது தண்டம் (பலாத்காரம்) என்று தெரிகிறதோ இல்லையோ? இதுதான் இயற்கையாக ஏற்பட்ட வரிசைக் கிரமம். ஆகையால்தான் இவ்வரிசையில் உபாயங்கள் கூறப்படுகின்றன. அவை நான்கு என்பது மாத்திரமின்றி இவ்வரிசையில் அமைந்துள்ள நான்கு என்று அறிந்துகொள்ள வேண்டும். இந்த சுலோகத்தை மறக்காமல் ஞாபகத்தில் நன்கு வைத்துக் கொள்ளவும்.

ஒரு வேதாந்த வித்யார்த்தி தான் எழுதியிருந்த ஒரு வியாஸத்தை (கட்டுரை) ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வாசித்துக் காட்டி அனுமதிபெற நினைத்து அதை வாசித்துக் காட்டிக் கொண்டிருக்கையில், மிருகங்களைப் பற்றி குறிப்பிட வேண்டிய ஸந்தர்ப்பத்தில் गवाश्वमहिषादयः (பசுக்கள், குதிரைகள், எருமைகள் முதலியன) என்ற சொற்றொடர் வந்தது.

மஹா: பசுக்களுக்கும் எருமைகளுக்கும் இடையில் குதிரைகளை விட்டதில் என்ன தாத்பர்யம்? பசுக்களும் எருமைகளும் ஒரே மாட்டு இனத்தைச் சேர்ந்தவைகளல்லவா?

வித்யார்த்தி: அது தவறுதான். ''பசுக்கள், குதிரைகள் முதலியன'' என்பதே போதும்.

மஹா: நீ இப்போது வித்யார்த்தி. சீக்கிரம் வித்வானாக ஆக வேண்டியவன். வித்வானுக்கு முதல் லக்ஷணம், எதையும் எழுதுவதற்கு முன் நன்றாக ஆலோசனை செய்து எழுத வேண்டும் என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு வேளை நன்கு யோசிக்காமல் எழுதிவிட நேர்ந்து விட்டாலும், எழுதினதை ஸமர்த்தனம் செய்ய ஸித்தமாயிருக்க வேண்டும். இது வித்வானுடைய இரண்டாவது லக்ஷணம். இப்போது நீ எழுதியாகிவிட்டது. எழுதினதை ஸமர்த்தனம் செய்வதற்குப் பார்.

வித்: என்னால் ஸாத்தியமில்லை. எருமைகளைச் சேர்த்தது அவசியமில்லை. தவறும் கூடத்தான்.

மஹா: வித்வான் ஆவதற்கு வழி இதல்ல. உனக்காக நான் அதை ஸமர்த்தனம் செய்யட்டுமா?

வித்: அதெப்படி?

மஹா: இதற்கு முன்னுள்ள வாக்கியத்தில் உலகம் முழுவதும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களால் வியாபிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறாய். அந்த நியாயம் மிருகங்கள் விஷயத்திலும் உண்மையாகத் தானே இருக்க வேண்டும்? ஆகையால் ஸத்வ குணத்திற்குப் பசுக்களையும், ரஜோ குணத்திற்கு குதிரைகளையும், தமோ குணத்திற்கு எருமைகளையும் உதாஹரணமாகக் காட்டியிருக்கிறாய். குணங்களின் ஸ்வபாவமான வரிசைக் கிரமத்தை அனுஸரித்து உதாஹரணங்களை அமைத்திருக்கிறாய். ஆகையால் பசுவுக்கும் எருமைக்கும் மத்தியில் குதிரை வர வேண்டியது தானே நியாயம்? இப்பொழுது சரியாகி விட்டதா?

வித்: அந்த சொற்றொடரை எழுதும்போது நான் இவ்விதமாக நினைக்காமல் போனாலும், அது சரிதான் என்று இப்பொழுது தெரிகிறது.

மஹா: ஆகையால் அது மிகவும் சரியாகவே அமைந்திருக்கிற படியால் அது அப்படியே இருக்கலாம், மாற்ற வேண்டிய அவசியமில்லை என்று தெரிந்து கொண்டாயா?

வித்: ஆம், தெரிந்து கொண்டேன்.

மஹா: அப்படியானால், குணங்கள் மூன்றுதானே உண்டு. அவைகளுக்கு உதாஹரணங்களும் மூன்றுதானே தேவை? அப்படியிருக்க ''முதலியன'' என்று போட்டிருப்பதற்கு ஸமாதானம் எப்படி?

வித்: தாங்கள் செய்து கொடுத்த ஸமர்த்தனத்தின்படி ''முதலியன'' என்ற சொல் பொருந்தாது என்று இப்போது தெரிகிறது. அதற்கு ஸமாதானம் சொல்ல முடியாதுதான்.

மஹா: வித்வானாக ஆக வேண்டியவன் இவ்வளவு எளிதாக விட்டுக் கொடுத்து விடக் கூடாது என்பதை மறந்து விட்டாய்.

வித்: ''முதலியன'' என்ற சொல் அவசியம்தான் என்று எப்படி ஸமாதானம் சொல்ல முடியும்?

மஹா: உனக்காக நான் ஸமாதானம் சொல்லிப் பார்க்கட்டுமா?

வித்: அபிப்பிராயப்படி செய்கிறது.

மஹா: ''பசுக்கள் முதலியன'', ''குதிரைகள் முதலியன'', ''எருமைகள் முதலியன'' என்று சொல்ல உத்தேசித்து மூன்றையும் சேர்த்து ஒரே பதமாக அமைக்க நினைத்தால், அப்பதம் எப்படி அமையும்? சொல்லு பார்ப்போம். ''பசுக்கள் முதலியன குதிரைகள் முதலியன எருமைகள் முதலியன'' என்று அப்படி அப்படியே தொடுத்து அனாவசியமாய்

நீண்டு விகாரமாயுள்ள பதத்தைச் சொல்வாயா? அல்லது மூன்றையும் ஒருங்குபடுத்தி சுருக்கமாக ''பசுக்கள், குதிரைகள், எருமைகள் முதலியன'' என்று மாத்திரம் சொல்வாயா?

வித்: அவசியம் பின்னுல் சொன்ன மாதிரி சுருக்கித்தான் சொல்வேன்.

மஹா: இப்போது நன்ருகத் தெரிந்ததா? நீ உபயோகித்திருக்கும் சொற்ருெடர் ஸந்தர்ப்பத்திற்கு உசிதமாகவும் எளிதில் ஸமர்த்தனம் செய்யக் கூடியதாகவே அமைந்திருக்கிறதென்று. இவ்வளவு தூரம் ஏன் உனக்கு சொல்கிறேன் என்ருல், எதையும் எழுதுவதற்கு முன்னுல் நன்கு யோசனை செய்ய வேண்டும். எழுதின பின்னர் ஸமாதானம் தேடிக்கொண்டு தடுமாறக் கூடாது என்பதை வற்புறுத்துவதற்காக.

ஒரு வாலிபர் சிருங்கேரிக்கு வந்திருக்கையில், தன்னுடன் வந்த சிலர் ஒவ்வொருவரும் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ஏதேனும் உபதேசம் செய்து கொள்கிருர்கள் என்று அறிந்து, தனக்கும் உபதேசம் வேண்டுமென்று எண்ணினுர்.

வாலிபர்: எனக்கு ஏதாவது தாங்கள் உபதேசம் செய்து அநுக்ரஹித்தால் மிகவும் பாக்கியவானுவேன்.

மஹா: என்ன உபதேசம் வேண்டும்?

வாலிபர்: இது வேண்டும், அது வேண்டும் என்பது எனக்கு இல்லை. தாங்களாக எனக்கு எது நல்லது என்று அனுக்ரஹிக்கிறீர்களோ, அதைப் பெற்றுக்கொள்ள ஸித்தமாயிருக்கிறேன்.

மஹா: உம் தகப்பனுரிடமிருந்து உமக்கு காயத்ரீ உபதேசம் ஆகியிருக்கிறதோ இல்லையோ?

வாலிபர்: ஆகியிருக்கிறது.

மஹா: உமக்கு வேதாத்யயனமும் அவரே செய்து வைத்திருக்கிருர் அல்லவா?

வாலிபர்: ஆம். சொல்லி வைத்திருக்கிறார்.

மஹா: சிவ பஞ்சாக்ஷரீ மந்திரமும் உமக்கு அவர் உபதேசம் செய்திருக்கிறாரல்லவா?

வாலிபர்: ஆம்.

மஹா: உம் தகப்பனார் உமக்கு தேகத்தைக் கொடுத்திருக்கிறார், காயத்ரீயை கொடுத்திருக்கிறார், வேதத்தை கொடுத்திருக்கிறார், சிவ பஞ்சாக்ஷரீயையும் கொடுத்திருக்கிறார்.

வாலிபர்: ஆம். வாஸ்தவம்.

மஹா: அப்படியிருக்க, வேறு குருவோ வேறு மந்திரமோ எதற்கு உமக்கு? உம் தகப்பனார் உமக்கு குருவுக்கு மேலாகவே இருக்கின்றார். அவருக்கு கீழ்ப்படிந்து அவர் சொல்லும் புத்திமதியையும் உபதேசங்களையும் பின்பற்றி நடந்து வாரும். அதுவே போதும். வேறு உபதேசம் ஒன்றும் உமக்குத் தேவையில்லை.

இவ்விதம் ஸ்ரீமத் ஆசார்யார் உத்தரவிட்டபோது அங்கிருந்த எங்களில் சிலருக்கு இந்த வாலிபர் ஸம்ஸ்கிருத காவியங்களில் கொஞ்சம் பரிச்சயம் செய்துவிட்ட காரணம் கொண்டு சாஸ்திர ஞானமில்லாத வைதிகராயிருந்த தன் தகப்பனாரைவிட தான் உயர்ந்தவன் என்ற எண்ணமுள்ளவர் என்பது தெரியும். ஸ்ரீமத் ஆசார்யார் இப்பொழுது நல்ல பருவத்தில் செய்த இந்த உபதேசமும் இவ்வாலிபரின் மனப்பான்மையையே முற்றிலும் மாற்றி விட்டது. அன்று முதல் தன் தகப்பனாரிடம் மிக்க மரியாதையோடு நடந்து வரும்படியும் செய்தது.

ஒரு நாள் காலையில் ஸ்ரீமத் ஆசார்யார் பிரஹ்மஸூத்திர பாஷ்யத்தை பிரவசனம் செய்ய ஆரம்பிப்பதாக குறிப்பிடப் பட்டிருந்தது. ஆரம்பிக்கும்போது அவர்கள் செய்யக்கூடிய உபதேசத்தை கேட்கத் தவறக்கூடாது என்று எண்ணி, அவர்கள் தங்கியிருந்த கிராமத்திற்கு, முந்தின நாள் மாலையிலேயே சென்றுவிட்டேன்.

என் பழைய கக்ஷிக்காரர் ஒருவர் துரதிருஷ்ட வசமாக அன்றைய தினமே அஸ்தமனத்திற்குப் பின் என்னைத் தேடிக்கொண்டு அந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். ''கச்சேரியில் (நீதிமன்றத்தில்) நாளை அவஸர வியவஹாரம் ஒன்று நடத்த வேண்டியிருக்கிறது. அதை நீங்கள்தான் நடத்திக் கொடுக்க வேண்டும்'' என்று சொன்னார். அதற்கு ''என்னால் வர முடியாது. வேறு வக்கீலை வைத்து நடத்திக் கொள்ளும்'' என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டேன். அவர் அதை ஒப்புக்கொள்ள மறுத்து ''நானும் உங்களுடன் இங்கேயே இருந்து விடுகிறேன். வியவஹாரம் தலையெழுத்துப் போல் ஆகட்டும்'' என்றார். இவர் மனப்பான்மை கொஞ்சமேனும் நியாயமில்லை என்ற எண்ணத்தினால் என் தீர்மானத்தை நான் மாற்றிக் கொள்ளவில்லை.

அன்றிரவு பூஜையாகி வெகு நேரத்திற்குப் பிறகு ஸ்ரீமத் ஆசார்யாரிடம் நான் விடை பெறும்போது அவர்கள் கேட்டார்கள்.

மஹா: நாளைக் காலை பிரவசனத்திற்கு இருப்பதாக உத்தேசமா?

கி: ஆம், அதற்காகவே வந்திருக்கிறேன்.

மஹா: இங்கு தங்குவதற்கு ஏதாவது தடை இருக்கிறதா?

கி: விசேஷமாக ஒன்றுமில்லை. நாளைய தினம் கச்சேரியில் ஒரு வியவஹாரத்தை நடத்திக் கொடுக்கும்படி ஒரு கக்ஷிக்காரர் கேட்டார். என்னால் வரமுடியாது என்று சொல்லிவிட்டேன்.

மஹா: அவர் வேறு ஏற்பாடு செய்துவிடுவதாக சொல்லி விட்டாரா?

கி: இல்லை. ''நானும் இங்கேயே இருந்து விடுகிறேன். வியவஹாரம் எப்படிப் போனாலும் போகட்டும்'' என்கிறார்.

மஹா: ஆனால் நாளைக்கு இங்கே இருந்து பிரவசனத்தைக் கேட்பதினால் ஏற்படக்கூடிய ஸுகத்தை இழக்க நேரிடுமே என்ற பெரிய கவலை உமக்கு இருப்பதாகத் தெரிகிறது.

கி: அப்படியேதான். ஸந்தேஹமில்லை.

மஹா: ஆனால் இங்கே தங்கிவிடுவதினால், உம் கக்ஷிக்காரருக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணுகிறீரல்லவா?

கி: இருக்கலாம். அதை நான் எப்படித் தடுக்க முடியும்? அவர் வேறு யாராவது வக்கீலை நியமித்துக் கொள்ளலாமே? அவர் பிடிவாதம் பிடித்தால், அதற்கு நான் உத்திரவாதமில்லை.

மஹா: வாஸ்தவம். இந்த வியவஹாரத்தை ஏற்று நடத்த அநேகம் வக்கீல்கள் ஸித்தமாகவே இருப்பார்கள் என்ற விவரம் உம் கக்ஷிக்காரருக்கும் தெரிந்திருக்கக்கூடியதே. அப்படியிருந்தும், நீரேதான் அதை நடத்த வேண்டுமென்று வற்புறுத்துகிறுர் போலும்?

கி: ஆம்.

மஹா: அவருக்கு உம்மிடத்தில் அவ்வளவு விசேஷ நம்பிக்கை இருக்கிறுப்போலிருக்கிறது. அதனுல் உம்மையே நம்பியிருக்கிறுர் என்று தெரிகிறது. வரமுடியாது என்று சொல்லி அவருக்கு உதவி செய்ய மறுத்து அவர் மனதைப் புண்படுத்துவது தர்மமாகுமா? வேதாந்தப் பிரவசனத்தைக் கேட்பதினுல் உமக்கு ஏற்படக்கூடிய ஸுகத்திலுள்ள ஆசையினுல், இன்னொருவரை ஸந்தோஷப்படுத்தக் கூடிய ஸந்தர்ப்பத்தையும் கைவிட்டு அவருக்கு அதனுல் ஏற்படக்கூடிய கடுமையான வருத்தத்தை உண்டாக்குவது நியாயமாகுமா?

கி: அவர் வியவஹாரம் மிகவும் சிறிய விஷயம். வேறு எந்த வக்கீலும், அனுபவம் சிறிதுமில்லாத வக்கீலும்கூட, அதை நடத்திக் கொள்ளக்கூடும். நானே போய் நடத்த வேண்டுமென்ற அவசியம் இல்லை.

மஹா: அப்படியா? விஷயம் அவ்வளவு எளிதா? ஆதலால் அது விஷயமாக கவனிக்க வேண்டிய வேலையோ செய்யவேண்டிய ஏற்பாடோ அதனுல் ஏற்படக்கூடிய சிரமமோ இல்லையென்று நினைக்கிறேன்.

கி: ஆமாம். இல்லைதான்.

மஹா: உமக்கு எவ்வித சிரமமும் இல்லாமலே அந்த கக்ஷிக்காரருக்கு திருப்தியளிக்க உமக்கு ஸந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. உமக்குப் பணமும் கொடுப்பாரில்லையா?

கி: எல்லாம் வாஸ்தவம். எனினும் நாளையப் பிரவசனத்தை இழக்க எனக்கு மனமில்லை.

மஹா: தனக்கு வரும் ஒரு லாபத்தை அடையக் கருதி, அதனால் இன்னொருவருக்கு துன்பத்தை உண்டாக்குகிறது நியாயமாகுமா?

கி: அதற்கு நான் என்ன செய்யட்டும்?

மஹா: விடியற்காலை வண்டியில் போய், கார்யத்தை முடித்துக்கொண்டு மாலையிலோ மறுநாள் காலையிலோ வந்து விடலாம்.

கி: அவ்விதம் செய்தேனேயானால், பிரவசனத்தை இழப்பதால் என் மனதைப் புண்படுத்திக் கொள்ள வேண்டி வருமே?

மஹா: அது பாதகமில்லை. தனக்கு இன்பம் பிறனுக்கு துன்பம் என்பதைவிட தனக்கு துன்பம் பிறனுக்கு இன்பம் என்பது எவ்வளவோ சிலாக்கியமானது.

இவ்விதம் ஸ்ரீமத் ஆசார்யார் ஆக்ஞை செய்தபிறகு, சிறிதும் இஷ்டமில்லாமலே, அவ்வாக்ஞைப்படி நடப்பதற்கு இசைந்தேன். அவர்களும் தமக்குரிய பேரன்பினால் ''இதனால் உமக்கு நஷ்டம் ஒன்றும் ஏற்படாது. நாளை ஆரம்பப் பிரவசனத்தில் சொல்வதையெல்லாம் மறு நாளும் சொல்லி விடுகிறேன்'' என்று அனுக்ரஹித்தார்கள். இரண்டாம் நாள் பிரவசனம் ஆரம்பிக்கும்போது ''நேற்று வராதவர்களின் பொருட்டு நேற்று நடந்த ஆரம்ப பிரவசனத்தின் ஸாராம்சத்தை சுருக்கிச் சொல்கிறேன்'' என்று தொடங்கினார்கள். இரண்டு நாட்களிலும் பிரவசனத்தைக் கேட்டவர்கள், முதல் நாள் பிரவசனத்தை விட அதன் சுருக்கமே விஷயங்கள் நிறைந்தும் தெளிவாயும் விளக்கமாயும் மறக்கக் கூடாதவாறும் மனதில் பதியக் கூடியதாகவும் இருந்தது என்று சொன்னார்கள்.

இந்த ஸம்பவத்தின் மூலம், ஒரு மனிதன் ஏதோ ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது அத்தொழிலுக்குரிய கடமைகளை சரிவர நடத்துவதே, வேறு எவ்வித உயர்ந்த ஸுகத்தையும் விட, சிலாக்கியமானது என்பதை ஸ்ரீமத் ஆசார்யார் போதித்தார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசித்து அறிவு பெற்ற பலதிறப்பட்ட மனிதர்களுடைய இது மாதிரியுள்ள வாழ்க்கை ஸம்பவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அவர்களை தரிசித்து சிறிது காலமாவது அம்மஹானின் முன் நின்று சென்ற எவரும், முன்னைவிட அதிகமான அறிவையோ ஸந்தோஷத்தையோ பெறாமல் நான் அறிந்த வரையில் திரும்பிப் போயிருப்பது கிடையாது. வருபவர்களுடன் ஸ்ரீமத் ஆசார்யார் நேரே பேசினாலும் சரி, நேரே பேசாமலிருந்தாலும் சரி, ஒருவரிடமும் பேசாமல் மௌனமாய் இருந்து விட்டாலும் சரி, அவர்களுடைய ஸான்னித்தியமே அருகில் வருகிறவர்களுக்கு புத்துணர்ச்சியையும் ஸத்புத்தியையும் ஊட்ட வல்லமையுள்ளது.

சில வருஷங்களுக்கு முன் பெங்களூர் ஸ்ரீசங்கர மடத்தில் படித்து வந்த மாணவர்களுக்கு படிப்பு பூர்த்தியானபோது செய்ய வேண்டிய பரீக்ஷையை ஸ்ரீமத் ஆசார்யாரே நேரில் செய்து வந்தார். அப்பொழுது சில நேரங்களில் நானும் அங்கே இருக்க நேரிட்டது. ஸ்ரீமத் ஆசார்யார் கேட்கும் கேள்விகளும் மாணவர்கள் அளிக்கும் விடைகளும் சாஸ்திரத்தையொட்டி யிருந்ததால் எனக்கு அநேகமாய் விளங்கவில்லை. என்னுடன் ஓரிரண்டு நாட்கள் ஒரு செட்டியாரும் தொடர்ந்து இருந்து வந்தார். ஒரு நாள் மாலை நாங்கள் இருவரும் வெளியில் வந்துகொண்டிருந்தபோது ஸ்ரீமடம் உத்தியோகஸ்தர் ஒருவர் என்னைக் கண்டு ''எங்கிருந்து வருகிறீர்?'' என்று கேட்டார். ''ஸ்ரீமத் ஆசார்யாருடைய ஸந்நிதியிலிருந்து'' என்று பதில் சொன்னேன். அப்போது அவர் ''செட்டியாரும் அங்கிருந்துதானோ?'' என்றார். ''ஆம்'' என்றேன். அவர் சிறிது ஆச்சர்யத்தோடு ''சாஸ்திர ஸம்பந்தமான வியவஹார மாயிருப்பதால், அங்கு நடக்கும் சர்ச்சையை முழுவதும் உம்மால் அறிந்துகொள்ள முடியாமல் போனாலும், வாதிக்கப்படும் விஷயம் என்னவென்று ஒருவாறு பொதுவாக உம்மால் அறிய முடியலாம். செட்டியாருக்கு அதுகூட முடியாதே? அவர் எதற்காக உம்முடன் அங்கு சென்று உட்கார்ந்து வருகிறார்?'' என்று கேட்டார். அதற்கு நான் பதில் சொல்வதற்கு முன்பு செட்டியாரே, ''தாங்கள் சொல்வது வியப்பாயிருக்கிறது. ஸ்ரீமத் ஆசார்யாரின் முகத்தில் ஜ்வலிக்கும் தேஜஸ்ஸையும், நிலவும் அமைதியையும், ததும்பும் ஆனந்தக்களையையும்,

அனுபவிக்க வல்லவா அங்கு செல்கிறேம்? அங்கு நடக்கும் வாக்கியார்த்தங்களின் பொருள் விளங்கிவிட்டால், அவர்கள் சொல்லும் வார்த்தைகளிலும், அவ்வார்த்தைகளின் பொருளிலும் அல்லவா நம் புத்தி ஈடுபடும்? அப்போது ஸ்ரீமத் ஆசார்யாருடைய ஒளிவீசும் முகத்தின் பொலிவை அனுபவிப்பதிலுள்ள ஸுகம் பெரிதும் குறைந்துவிடும். எனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியாமலிருப்பதையே பெரியதோர் லாபமாகக் கருதுகிறேன். இந்தத் தெரியாத்தன்மைக்கே நான் செய்நன்றியுடையவனுக இருக்கிறேன்; ஏனெனில், ஸ்ரீமத் ஆசார்யாரின் முகாரவிந்தத்தை, இடையூறின்றி, வேறு எதனுலும் ஒரு க்ஷணம் கூட எங்கும் இழுக்கப்படாமல், எப்பொழுதும் கண்டு ஆனந்திக்க இவ்வறிவின்மையல்லவா ஸௌகர்யம் செய்து கொடுத்திருக்கிறது'' என்ருர். அந்த உத்தியோகஸ்தரும் பரமபக்தரான இந்த செட்டியாரின் பக்தியின் பெருக்கை உணர்ந்து அதற்குத் தலை குனிந்து ஸ்ரீமத் ஆசார்யாரின் முகாரவிந்த தேஜஸ்ஸைக் கண்டு களிப்பதற்கு ஸ்ரீமத் ஆசார்யாருடைய வார்த்தைகளே தடையாகக் கூடுமென்று நினைக்கிருரே இவர் என்று வியந்தார்.

சுருங்கச் சொல்லின், ஸ்ரீமத் ஆசார்யாரின் அன்பு எல்லா ஜீவன்களிடத்தும் பரவியிருந்தது. எல்லோர் ஹிருதயத்திலும் அன்பை ஊட்டக்கூடியது. எவ்வித பகைமையையும் ஒழிக்க வல்லமையுள்ளது. கல்வியிலோ, திறமையிலோ, மனப்பான்மையிலோ, மற்ற எந்த அம்சத்திலோ, வேற்றுமை கொண்ட அனைவரையும் தம்மிடம் இழுக்கும் சக்தியுள்ளது. ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்திய உலகில்கூட நிலை வழுவாத ஸ்வபாவ ஸித்தமான அமைதியுடன் கூடினவர் ஸ்ரீமத் ஆசார்யார் என்பதை யாரும் மறுக்க முடியாத விஷயம் என்று உறுதியாய் சொல்லலாம். ஆடம்பரமும் ஜம்பமும் நிறைந்த இவ்வுலகில் சுத்த ஸாத்விகத் தன்மையே அவர்கள். பொய் வேஷம் போட்டுக் குதிக்கும் இவ்வுலகில் அவர்கள் நேர்மையே உருவெடுத்தவர்கள். அர்த்தமில்லா பேரிரைச்சல் மலிந்திருக்கும் இவ்வுலகின் மத்தியிலேயே அவருடைய மௌனநிலை அறிவு ஊட்ட வல்லமையுள்ளது. நம் மத்தியில் அவர்கள்

ஜீவித்திருந்த போதிலும், என்றைக்கும் அவர்கள் தனித்தே இருந்தார்கள். நம்முள் யாரிடமும் சேராது ஒதுங்கியே இருந்து வந்தார்கள். ஆத்ம ஸாக்ஷாத்காரமென்ற அத்வைத நிலை இந்நாளில் அடையக்கூடியதுதானா என்று ஸந்தேஹிக்கும் யாவருக்கும் நன்கு பதில் சொல்லக்கூடிய நிலைமையில் அவர்கள் சரித்திரம் இருந்து வருகிறது. அந்நிலையை அடைய ஆவல் கொண்ட யாவருடைய உள்ளத்திலும் நம்பிக்கையையும் தைர்யத்தையும் அச்சரித்திரம் புகட்டுகிறது.

இம்மஹானான ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய புண்ணிய நாம ஸ்மரணமானது எக்காலத்திலும் நம் ஹிருதயத்தில் குடிகொண்டு வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் நமக்கு வழிகாட்டியாக இருந்து அவ்வுத்தம நிலைக்கு சீக்கிரமாக நம்மை அழைத்துச் செல்லுமாக!

ஸ்ரீ குருராஜ ஸ்மரணம்



ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்

1. பீடாதிபத்யம்

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களை (ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகளை) நான் முதல் முதலில் தரிசிக்கக் கிடைத்தது 1916 ல் ஸ்ரீ சாரதா ஆலயமும் ஸ்ரீ பரமகுரு அதிஷ்டானமும் கட்டி கும்பாபிஷேகம் நடந்த ஸமயம். ஆனால் அதற்கு முன்னமேயே அவர்களுடைய மஹிமையைப் பற்றி என் தகப்பனாரவர்கள் மூலமாக கேட்டறிந்திருக்கிறேன்.

ஸ்ரீமத் ஆசார்யார் பூர்வாசிரமத்தில் நரஸிம்ஹ சாஸ்திரி என்ற பெயருடன் இருந்தார். அவர் சிருங்ககிரியைச் சேர்ந்தவர். பால்யம் முதலே மிக்க சாந்த குணமும் ஸூக்ஷ்ம புத்தியும் பொருந்தியவர். சிருங்ககிரியிலுள்ள இங்கிலீஷ் - கன்னடப் பள்ளிக்கூடத்தில் ஐந்தாறு வருஷங்கள் வாசித்து வந்து சர்க்கார் பரீக்ஷையில் முதல் தரத்தில் தேறினார். இதில் மிகவும் ஸந்தோஷம் கொண்ட அவர் தகப்பனார் கோபால சாஸ்திரிகள் இப்பாலகரை அழைத்துக் கொண்டு அப்பொழுது பீடத்திலிருந்த ஸ்ரீ ஜகத்குரு ஸச்சிதானந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்களிடம் சென்று தம் ஸந்தோஷத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

குருநாதர் : அப்படியா? மிகவும் ஸந்தோஷம். பையன் நல்ல புத்திசாலி. முன்னுக்கு வரவேண்டியவன் என்று தெரிகிறது. அவன் சிரேயஸ்ஸுடன் விளங்க வேண்டுமென்பது தானே உங்கள் எண்ணம்?

சாஸ்திரிகள் : ஆமாம். அதில் என்ன ஸந்தேஹம்?

குருநாதர் : அப்படியானால், இப்பொழுதே இந்த இங்கிலீஷ் பள்ளிக்கூடத்திற்குப் போவதை நிறுத்தி நம் மடம் பாடசாலையில் சேர்த்துவிடுங்கள்.

சாஸ்திரிகள் : அப்படியே செய்கிறேன்.

குருநாதரிடம் சாஸ்திரிகளுக்கு இருந்த விசேஷ பக்தியினுல் அப்படியே பாடசாலேயில் சேர்த்துவிட்டார்கள்.

பாடசாலேயில் சேர்ந்து வாசிக்க ஆரம்பித்த கொஞ்ச நாளுக்குள் 1907 ல் ஸ்ரீ குருநாதர் காலடிக் கும்பாபிஷேக யாத்திரையாக சிருங்ககிரியை விட்டுப் புறப்பட்டுவிட்டார்கள். யாத்திரை மத்தியிலேயே பாடசாலே வித்யார்த்திகளின் பரீக்ஷை பத்திரங்களேத் தருவித்து ஸ்ரீ குருநாதர் நேரில் பார்ப்பது உண்டு. இந்தப் பாலகர் வித்யாப்பியாஸத்தில் மிகவும் ஈடுபட்டிருப்பதைக் கண்டு அவர்கள் ஸந்தோஷித்தார்கள். ஒரு ஸமயம் சிருங்ககிரி வித்யார்த்திகளுக்குப் பாடசாலே அதிகாரிகள் போதுமான வசதிகள் செய்து கொடுக்கிருர்களா என்று கவனித்து வருவதற்காக ஸ்ரீமடம் உத்தியோகஸ்தர் ஒருவரை ஸ்ரீ குருநாதர் சிருங்ககிரிக்கு அனுப்பி விசாரித்து வரச் சொன்ஞர்கள். அவரும் அவ்விதமே போய் விசாரித்துக் கொண்டு ஸ்ரீ குருநாதரிடம் திரும்பி வந்தார்.

உத்தியோகஸ்தர்: பையன்கள் எல்லோரையும் தனித்தனியாகக் கூப்பிட்டு விசாரித்தேன். அவர்கள் உற்சாகமாக வாசித்து வருகிருர்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் சரியாகவே செய்து கொடுக்கப்படுகின்றன. சில பையன்கள் ஏதோ சில கவனக்குறைகளே எடுத்துக் காட்டினுர்கள். அக்குறைகளே நீக்கத் தகுந்த ஏற்பாடு செய்து வந்திருக்கிறேன்.

குருநாதர்: மிகவும் ஸந்தோஷம். வித்யார்த்திகள் ஊக்கத்துடன் வாசித்து வருவதிலும் அவர்களுக்கு வேண்டிய லௌகிக ஸௌகரியங்கள் ஏற்படுத்தியதிலும் ஸந்தோஷம். அவர்கள் சாந்தர்களாக விநயத்துடன் இருக்கிருர்களா?

உத்: அப்படியே, நல்ல ஸ்வபாவத்துடன் எல்லோரும் இருந்து வருகிருர்கள். ஆனுல் நம் சிருங்ககிரி நரஸிம்ஹன் மாத்திரம் கொஞ்சம் அமுத்தலாகவும் அதிகப்ரஸங்கியாகவும் இருப்பானென்று தோன்றுகிறது.

குரு: இது உங்கள் அபிப்பிராயம். வாஸ்தவத்தில் நடந்ததைச் சொல்லுங்கள்.

உத் : ''ஆஹாரம் சுசி ருசியாயிருக்கிறதா? எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்ய வெந்நீர் போட்டுக் கொடுக்கிருர்களா?'' என்றெல்லாம் ஒவ்வொரு பையனுகக் கேட்டேன். அவர்கள் கிரமப்படி பதில் சொன்னுர்கள். நம் நரஸிம்ஹன் ''அது எப்படி இருந்தால் என்ன? பாடம் நன்ருகச் சொல்லிக் கொடுக்கிருர்கள்'' என்று மாத்திரம் சொன்னுன். இதனுல் அவன் மனதில் ஏதோ குறை இருப்பதாகவும் அதை வெளியிட இஷ்டப்படவில்லையென்றும் எனக்குத் தோன்றிற்று. என்னிடத்தில் மற்றப் பையன்களைப்போல் ஸஹஜமாகக் குறைகளைச் சொல்லாமல் இருந்ததிலிருந்து கொஞ்சம் அஹம்பாவ முள்ளவன் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

குரு : அவன் சொன்ன வார்த்தையை அப்படியே ருஜுவாக எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குமேல் நாம் கல்பனை செய்வதற்கு அவசியமில்லை. தனக்குப் படிப்புத்தான் முக்கியமே தவிர, லௌகிக ஸௌகர்யங்களில் தன் மனஸ் செல்லவேயில்லை என்பதைத்தான் தெரிவித்திருக்கிருன். ஆகையால் சுத்தமான ஸாத்விக ஸ்வபாவத்துடன் கூடியவன் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

இவ்விதம் இப்பாலகனின் மனப்பரிபாகத்தையும் வித்யாப்பியாஸத்திலுள்ள ஆர்வத்தையும் கண்டு ஸந்தோஷித்தார் குருநாதர். அவர் யாத்திரை முடிந்து சிருங்ககிரிக்குத் திரும்பினவுடன் பெங்களூரில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் பூர்வ மீமாம்ஸை வாசிக்கும்படி இப்பாலகரைப் பெங்களூருக்கு அனுப்பிக் கொடுத்தார்கள். அங்கே பூர்வ மீமாம்ஸைப் பாடத்தில் சேர்ந்திருந்த போதிலும் அதே ஸமயத்தில் வேதாந்த சாஸ்திரத்தையும் பயின்று வந்தார்.

இதன் மத்தியில் சிருங்ககிரியில் குருநாதர் தமக்குப் பின் பீடாதிபத்தியம் வஹிப்பதற்கு இந்தப் பாலகரையே

குறிப்பிட்டு அங்கிருந்து குனிகல் ராமசாஸ்திரிகளை அனுப்பி அழைத்து வரச் சொன்னார்கள். அவர் இங்கே வந்து சொன்னதற்கு இவர் தகப்பனார் ஒருவாறு சம்மதித்தபோதிலும் தாயார் ஸம்மதிக்கவில்லை. மைஸூர் மஹாராஜா அவர்கள் சொல்லியும் பிரயோஜனப்படாததனால் ராமசாஸ்திரிகள் சிருங்ககிரிக்கு திரும்ப ஸித்தமானார். அந்த ஸமயம் இந்தப் பாலகர் தாயாரிடம் ''நான் ஏதோ கிருஹஸ்தனாக இருந்துகொண்டு குடித்தனம் செய்யப்போகிறேன் என்ற எண்ணத்தில் நீ குருநாதருடைய ஆக்ஞைப்படி நடக்க மறுக்கிறாய். அது ஒருநாளும் நடக்கப் போவதில்லை. நான் என்றைக்கும் ஸந்யாஸம்தான் வாங்கிக் கொள்ளப் போகிறேன். வெறும் ஸந்யாஸியாக இருந்தால் நான் எங்கே இருக்கிறேன், க்ஷேமமாக இருக்கிறேனா என்றுகூட உன்னால் தெரிந்துகொள்ள முடியாது. ஸ்ரீ குருநாதருடைய ஆக்ஞைப்படி நீ அனுமதி கொடுத்தால் ஒரே இடத்தில் நான் ஸ்திரமாக இருக்க முடியும். நீயும் என்னை அடிக்கடி பார்த்துக் கொள்ள முடியும். எல்லாவற்றையும் உத்தேசித்துக் குருநாதரின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிவதே நல்லதென்று தோன்றுகிறது'' என்று விநயத்துடன் சொல்லி நமஸ்கரித்தார். இவ்வார்த்தையை மீறமுடியாதவளாக அவளும் ஸம்மதித்தாள். ஆனால் இங்கே வந்த இடத்தில் தாமதம் ஏற்பட்டுவிட்டபடியால் இவரை அழைத்துக்கொண்டு ராமசாஸ்திரிகள் சிருங்ககிரி போய்ச் சேருவதற்கு முன்னமேயே ஸ்ரீ குருநாதர் விதேஹ முக்தியடைந்து விட்டார்கள். மஹாபூஜை, ஆராதனை எல்லாம் முடிந்த பிறகே இவருக்கு ஸந்யாஸம் கொடுத்துப் பீடத்தில் அபிஷேகம் செய்து வைத்தார்கள்.

சிருங்ககிரி பீடத்தில் அமரும்படியான யோக்கியதை பெற்ற இம்மஹானுக்கு விநய ஸம்பத்தும் தர்மத்தில் பிடிமானமும் எவ்வளவு இருந்தன என்பதற்கு ஒரு சிறு ஸம்பவம் போதுமானது. இவருக்கு ஸந்யாஸம் கொடுப்பதற்கு முந்தினநாள் ஸ்ரீ மடம் அதிகாரிகளும் பக்தர்களும் பிரபுக்களும் மறுநாள் நடக்கவேண்டிய நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயம் அவர்களில் ஒருவர், ''நாம் தீர்மானம் செய்தாலும், நடத்த வேண்டியது நரஸிம்ஹ சாஸ்திரிகளாக இருப்பதால் அவரையும் தருவித்து நம்முடன் வைத்துக்கொண்டு ஆலோசிப்பது நல்லது'' என்றார். உடனே நரஸிம்ஹ சாஸ்திரிகளுக்குச் சொல்லியனுப்பினார்கள். அவரும் உடனே வந்துவிட்டார்.

அங்குள்ளவர்கள் மஹா வித்வான்களாகவும், லௌகிக அந்தஸ்து உள்ளவர்களாகவும், வயது முதிர்ந்தவர்களாகவும் இருந்தபடியால் அங்கே வந்த நரஸிம்ஹ சாஸ்திரிகள் ஒதுங்கி ஒரு மூலையில் நின்றுகொண்டே இருந்தார். மறுநாள் ஆசார்ய ஸ்தானம் வஹிக்கப் போகிறவர் அவ்விதம் நிற்பதை ஸஹிக்காமல் என் தகப்பனுர் அவரைப் பார்த்து, ''உட்காருங்கள்'' என்று சொன்னுர். ''பாதகமில்லை'' என்று சொல்லிவிட்டு நின்றுகொண்டேயிருந்தார்.

என் தகப்பனுர் உட்காரும்படி கேட்டுக்கொண்டும், அதைக் கேளாமல் நரஸிம்ம சாஸ்திரிகள் நின்றுகொண்டிருப்பதைப் பார்த்து ''நாளை அபிஷேகம் ஆகப்போகிறது, இன்று நீங்கள் நிற்பது உசிதமில்லை'' என்ருர். அதற்கு அவர், ''அது நாளைக்கல்லவா?'' என்று பதில் சொல்லிவிட்டார். தான் இன்றைக்கு இருக்கும் நிலையில் வயதில் சிறியவன், பிரம்மச்சாரி, பெரியோர்கள் முன்னிலையில் உட்காருவது உசிதமில்லை என்று நன்கு உணர்ந்தவர் என்பது இந்தப் பதிலால் தெளிவுபட்டது. மறுநாள் ஆசிரமம் கொடுத்துப் பீடத்தில் அமரச்செய்து இந்தப் பெரியோர்களே அவரை நமஸ்காரம் செய்யும் ஸமயத்தில், துடையைக்கூட அசைக்காமல், வெகுநாளாக வயதானவர்களுடைய நமஸ்காரங்களைப் பெற்றுப் பழகினவர்போல, ஆஸனத்தில் வீற்றிருந்த நிலையைக் கண்டவர்கள் இவருக்குத் தர்மத்திலுள்ள ஸ்தைர்யத்தைக் கண்டு களித்தார்கள்.

இவர் பீடத்திற்கு வரும்போது வேதாந்த சாஸ்திர பாடம் பூர்த்தியாகாமல் இருந்தபடியால் மஹாமஹோபாத்யாய விருபாக்ஷ சாஸ்திரிகளைச் சிருங்ககிரியிலேயே தங்கிப் பாடம் சொல்ல வேண்டுமென்று ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் கேட்டுக்கொண்டார். ஆனுல் அவர், ''இனி நான் பாடம் சொல்வது உசிதமல்ல. நான் கிருஹஸ்தன். கிருஹஸ்தன் ஸந்யாஸிக்கு வேதாந்த பாடம் சொல்வது முறையல்ல. ஆசார்யார் நல்ல மேதாவி; நல்ல வ்யுத்பத்தி இருக்கிறது. இனிமேல் அவரே கிரந்தங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டும். பரமாசார்யாருடைய அநுக்ரஹத்தினுல் அவருக்கு எல்லாம் ஸித்திக்கும்'' என்று சொல்லிப் பாடம் சொல்லிவர மறுத்துவிட்டார். இவ்விஷயம் அறிந்த ஸ்ரீமத் ஆசார்யார் அவரைத் தருவித்து, ''இனி, பாடம் சொல்ல முடியாது என்று சொன்னீர்களாமே?'' என்று கேட்டார்.

வி. சாஸ்திரிகள் : ஆம். இனி நான் பாடம் சொல்ல அவசியமும் இல்லை; அது உசிதமும் அல்ல. தாங்களே கிரந்தங்களைப் பார்த்துக் கொள்ளலாம்.

ஆசார்யார் : ஏன்?

வி. சாஸ்திரிகள் : பிரம்மசாரியாக இருக்கும்வரை நான் பாடம் சொன்னது நியாயம். தாங்கள் ஸந்யாஸியாகிவிட்டபடியால் இனி நான் பாடம் சொல்வது நியாயமல்ல.

ஆசார்யார் : ஸந்யாஸம் என்ருல் ஸர்வஸங்க பரித்யாகம் என்பது வாஸ்தவம். ஆனுல் அந்த ஸர்வத்தில் வேதாந்த விசாரமும் சேர்ந்ததோ?

வி. சாஸ்திரிகள்: நான் அப்படிச் சொல்லவில்லை. முன்னைவிட இனி அதிகமாகவேதான் வேதாந்த விசாரம் செய்ய வேண்டும். ஆனுல் அதைத் தாங்களேதான் செய்துகொள்ள வேண்டுமே தவிர ஒரு கிருஹஸ்தரைக் குருவாக வைத்துக் கொண்டு வேதாந்த சாஸ்திரம் கிரஹிப்பது முறையாகாது.

ஆசார்யார் : அதாவது, நான் ஸந்யாஸியாகிவிட்டபடியால் தங்களுக்கு நமஸ்காராதிகள் செய்யவும் சுச்ரூஷை செய்யவும் முடியாது என்றல்லவா?

வி.சாஸ்திரிகள் : ஆம். குருமுகமாகக் கிரஹிக்க அவகாசம் இல்லை என்பதுதான்.

ஆசார்யார் : சிஷ்யமுறையில் நான் கிரஹிக்க அவகாசம் இல்லை என்பதே தங்கள் தாத்பர்யம்?

வி.சாஸ்திரிகள் : ஆம்.

ஆசார்யார் : சுச்ரூஷாதிகள் செய்யாமலே வித்யையைக் கிரஹிக்க வழியிருந்தால் அவ்விதம் கிரஹிக்கலாமல்லவா?

வி.சாஸ்திரிகள் : அதெப்படி?

ஆசார்யார் : தங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். சாஸ்திரத்தில் வித்யையைக் கிரஹிப்பதற்கு

गुरुशुश्रूषया विद्या என்று குரு சுச்ரூஷையை ஒரு ஸாதனமாகச் சொல்லிவிட்டு அதற்கு இடமில்லாத விஷயத்தில் पुष्कलेन धनेन वा ஏராளமான தனத்தை அர்ப்பணம் செய்தும் வித்யையைக் கிரஹிக்கலாமென்று சொல்லப் பட்டிருக்கிறது. நான் ஸந்யாஸியானதனுல் தங்களுக்குக் கொடுப்பதற்கு என்னிடம் தனம் கிடையாது. மடத்தில் தங்களுக்கு ஏதேனும் பிரயோஜனம் செய்வித்தாலும் அது என் பணம் ஆகாது. ஆகையால் இந்த வழியும் உபயோகப்படாது. மூன்ருவதாக अथवा विद्यया विद्या ஒரு வித்யையைக் கொடுத்து இன்னொரு வித்யையைக் கிரஹிக்கலாம் என்று சொல்லப் பட்டிருக்கிறபடியால் அந்த முறையை அனுஷ்டிக்கலாமென்று நினைக்கிறேன்.

வி.சாஸ்திரிகள் : நான் இந்த வயதில் எந்த வித்யையைத் தங்களிடம் வாங்கிக்கொண்டு, தங்களுக்கு வேதாந்த சாஸ்திர பாடம் சொல்ல முடியும்.

ஆசார்யார் : காலையில் தாங்கள் எனக்கு வேதாந்த பாடம் சொல்லுங்கள். மத்தியானத்திற்கு மேல் நான் தங்களுக்குத் தர்க்க பாடம் சொல்கிறேன்.

இவ்விதம் ஆசார்யார் சொன்னதின் தாத்பர்யம் தாம் ஏற்கெனவே கற்றிருந்த தர்க்க சாஸ்திரத்தைச் சாஸ்திரிகளிடம் சொல்லும் வியாஜத்தில் திடப்படுத்திக் கொள்ளலாமென்பதே. இதை அறிந்த சாஸ்திரிகள் மிகவும் ஸந்தோஷத்துடன், ''அப்படியே ஆகட்டும்'' என்று ஏற்றுக்கொண்டார். பின்னுல் ஒரு ஸந்தர்ப்பத்தில் இவ்விஷயத்தைப் பற்றிச் சாஸ்திரிகள் என்னிடம் பிரஸ்தாபிக்கையில் ''வாஸ்தவத்தில் இரண்டு வேளைகளிலும் ஆசார்யார்தான் எனக்குப் பாடம் சொன்னுர். அவருக்குப் பாடம் சொல்வதற்காக நான் சிருங்ககிரியில் தங்கின ஸமயத்தில் வேதாந்தத்தில் அவர் மூலமாக எத்தனையோ புது விஷயங்களை நான் கிரஹித்துக் கொண்டேன். இதற்கு அவகாசம் கிடைத்தது என்னுடைய பாக்கியமே'' என்று வெகு உற்சாகத்துடன் சொன்னுர்.

இவ்விதம் வித்யாப்பியாஸம் முடிந்ததும் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்திலும் குருநாதரின் அதிஷ்டானத்தில் கட்டப்பட்ட ஆலயத்திலும் 1916 ல் கும்பாபிஷேகத்தை வெகுவிமரிசையாக நடத்தினார்கள். அங்கே செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளையும் நடந்த நிகழ்ச்சிகளையும் வர்ணிப்பது ஸாத்தியமல்ல. அனுபவித்தவர்களுக்குத்தான் அந்த மஹிமை தெரியும். இருந்தாலும் இரண்டொரு ஸம்பவங்களைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன்.

மைஸூர் மஹாராஜா ஸ்ரீ கிருஷ்ணராஜ உடையார் நேரில் வந்திருந்தார். அவர் சிருங்ககிரி ஊருக்குள் பிரவேசிக்கிற இடத்தில் ஒரு பக்கம் வைதிகர்கள் பூர்ண கும்பங்களுடன், யோகவேஷ்டி, ஸால்வை போர்த்துக்கொண்டு நின்றார்கள்; மற்றொரு பக்கம் உத்தியோகஸ்தர்கள் சட்டை, தலைப்பாகை அணிந்து அங்கவஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு நின்றார்கள். மஹாராஜா வந்து இறங்கினவுடன் வைதிக கோஷ்டியைப் பார்த்து தலைவணங்கி அஞ்ஜலி செய்து பூர்ண கும்பத்தையும் அவர்களுடைய ஆசீர்வாத அக்ஷதையையும் பெற்றுக்கொண்டார்; பிறகு லௌகிக கோஷ்டிப் பக்கம் திரும்பும்போது அவர்கள் வயதில் பெரியவர்களாக இருந்த போதிலும் பிராஹ்மணர்களாக இருந்தபோதிலும் அவர்களே அஞ்ஜலி செய்து ராஜமரியாதை காட்டினார்கள். மஹாராஜரின் ராஜ்யத்தில் வைதிகர்களிடம் வைத்திருந்த கௌரவம் அப்பொழுது நன்கு தெரிந்தது.

இந்த மஹோத்ஸவத்தில் கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து சுமார் நூறுபேர் வந்திருந்தார்கள். இந்தக் கைங்கர்ய ஸேனையின் தலைவர் மஹாராஜாவினுடைய பேட்டி கிடைக்க பிரயத்தனம் செய்ததில் அங்குள்ள அதிகாரிகள் இடம் கொடுக்கவில்லை. மஹாராஜா குருநாதர் அதிஷ்டானத்திற்குத் தரிசனத்திற்காக போய்விட்டுத் திரும்பும்போது வழியில் இரண்டு வரிசையாக இத்தொண்டர்கள் நின்றுவிட்டார்கள். இவர்கள் யாவரும் பஞ்சகச்சம் விபூதியுடன் தொண்டர் அடையாளமான வில்லைகளையும் தரித்து நின்றுகொண்டிருப்பதைப் பார்த்த மஹாராஜா நின்றுவிட்டார்; இவர்கள் யாரென்று விசாரித்து தெரிந்துகொண்டு இவர்களுடைய ஸேவையைப் பாராட்டி அப்புறம் சென்றார். அவகாசம் இல்லை என்று சொன்ன அதிகாரிகளுக்கு இந்த ஸம்பவம் வியப்பை அளித்தது.

கும்பாபிஷேக தினம் ஸாயங்காலம் அதிஷ்டானத்தில் சிஷ்யர்கள் ஏராளமாகக்கூடி அங்கே நித்ய பூஜை, ஆராதனை முதலியன சாசுவதமாக நடந்து வரவேண்டியதற்குப் போதுமான தனம் சேகரிக்க வேண்டும் என்று தீர்மானித்துத் திருநெல்வேலி சர்க்கார் வக்கீலாயிருந்த A. ஸுந்தர சாஸ்திரிகளைக் காரியதரிசியாக ஏற்படுத்தி ஒரு ஸமிதி நிறுவப்பட்டது. அதன்மூலமாக ஒரு லக்ஷம் ரூபாய் வசூலிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேக தினம் ராத்திரியில் ஸ்ரீ சாரதாம்பாள் ஸந்நிதியில் ஸ்ரீமத் ஆசார்யார் வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் ஸகல ராஜ சின்னங்களுடனும் வீற்றிருந்து தர்பார் நடத்தின வைபவத்தைக் கண்ணுற்றவர் யாரும் மறக்க முடியாது. அங்கு மைஸூர் மஹாராஜா நேரில் வந்திருந்ததுடன் பரத கண்டத்திலுள்ள பல மஹாராஜாக்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்பி விசேஷமாகக் காணிக்கைகள் ஸமர்ப்பித்தார்கள். அங்கே கூடியிருந்த வித்வத் கோஷ்டியும் லௌகிக கோஷ்டியும் யோக்கியதையிலும் எண்ணிக்கையிலும் அளவில் அடங்காமல் பிரகாசித்தன. ஸ்ரீமத் ஆசார்யாருக்கு அப்பொழுது வயது 23. பால்யம் முதல் லௌகிகத்தில் ருசியே இல்லாமல் வளர்ந்தவர் இப்பொழுது இப்பெரிய ஸதஸ்ஸில் எப்படி நடந்து கொள்வாரோ என்ற அச்சம் சிலருக்கு இருந்து வந்தது. ஆனால் அங்கே வாழ்த்துப் பத்திரிகைகள் எல்லாம் வாசித்து முடிந்தவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் கம்பீரமான த்வனியில் லலிதமான ஸம்ஸ்கிருத பாஷையில் ஸ்ரீ சங்கர பகவத்பாதர் ஸ்ரீ சாரதாம்பாள் ஸ்ரீ குருநாதர் இவர்கள் மஹிமையை எடுத்துச் சொல்லி இம்மடமே சிஷ்யர்களுக்கு ஆதீனம் என்பதை வற்புறுத்தியதைக் கண்டு யாவரும் ஸ்தம்பித்துப்போய் விட்டார்கள். பின்னால், கிரமப்படி காணிக்கை கொடுத்த மஹாராஜாக்களுக்கும், கூடியிருந்த வித்வான்களுக்கும் தகுந்தபடி மரியாதைகளும் ஸம்பாவனைகளும் செய்யப்பட்டன. இதில் ஒரு ஸம்பவம் குறிப்பிடத்தக்கது.

வடதேசத்திலிருந்து ஒரு மஹாராஜா அனுப்பிய காணிக்கையில் சிவப்பு ஜரிகைப் பட்டில் ஆயிரம் ரூபாய்க்குமேல் பெறக்கூடிய ஒரு வஸ்திரமும் காஷாய நிறத்தில் அதே மாதிரி எழுநூறு ரூபாய்க்குமேல் மதிப்புள்ள ஒரு வஸ்திரமும் இருந்தன. அந்தச் சிவப்பு வஸ்திரத்தை உடனே அம்பாளுக்குச்

சாத்திவிடும்படி ஆசார்யார் உத்தரவிட்டார்கள். பிற்பாடு ஸம்பாவனை செய்யும் காலத்தில் இன்னொரு வஸ்திரத்தில் மந்திராக்ஷதை வைத்து அம்மஹாராஜாவின் பிரதிநிதியிடம் கொடுத்தார்கள். அப்பிரதிநிதி தான் கொண்டுவந்த பட்டையே ஆசார்யார் திருப்பிக் கொடுக்கிருரே என்று கொஞ்சம் தயங்கினதாகத் தெரிந்தது. உடனே ஆசார்யார் ''இந்த ஸ்தானம் ஸந்யாஸியைச் சேர்ந்தது. மஹாராஜாவின் அந்தஸ்துக்குத் தக்கபடி மரியாதை செய்வதற்கு இவ்விடத்தில் ஸாத்தியமில்லை. ஆலயத்திற்குத் தேங்காய் பழம் கொண்டுபோய் நிவேதனம் செய்தால் எப்படி நிவேதனம் செய்ததையே பிரஸாதமாகப் பெற்றுக் கொள்கிருேமோ, அப்படியே இதையும் ஸ்ரீ சாரதா சந்திரமௌலீசுவரர்களின் பிரஸாதமாக மஹாராஜருக்குக் கொடுங்கள்'' என்ருர்கள்.

கும்பாபிஷேகம் ஆனவுடனேயே ஸர்வாதிகாரி பதத்திலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென்று ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் அபிப்பிராயப்பட்டும்கூட அவரை நிர்ப்பந்தமாக அந்த ஸ்தானத்தை வஹிக்கும்படி ஆசார்யார் செய்தார்கள். லௌகிகப் பொறுப்புப் பூராவையும் சாஸ்திரிகளிடம் ஒப்படைத்துவிட்டு யோகாப்பியாஸம், தியான நிஷ்டை, ஆத்மானுஸந்தானம் இவைகளிலேயே இவர்கள் ஈடுபட ஆரம்பித்தார்கள். குருநாதருடைய அனுக்கிரஹத்திலுைம் இவருடைய தீவிரமான பிரயத்தினத்திலுைம் வெகு சீக்கிரமாக ஞான நிஷ்டையை அடைந்து விட்டார்கள். முப்பது வயதிற்குள் ஜீவன்முக்த நிலையை அடைந்தார் என்றே தெரிகிறது. தியான ஸமாதிகளில் இல்லாத ஸமயத்தில் ஸ்ரீ மடம் பூஜாதி கார்யங்களை யதாக்கிரமமாக நடத்தி வந்தார்கள். சில ஸமயம் பூஜை செய்து வரும்போது ஏகாக்ர சித்தமாக அதிலேயே ஈடுபடும்போது, பாடத்திற்காக வித்யார்த்திகள் காத்துக் கொண்டிருக்கிருர்களே, ஸ்ரீமடம் விஷயமாகத் தெரிவிக்க உத்தியோகஸ்தர்கள் காத்துக் கொண்டிருக்கிருர்களே என்பதெல்லாம் மறந்துவிடும்.

இப்படியிருக்கையிலும் மனப்பூர்வமாகத் தம்மையே சரணமாக அடைந்த சிஷ்யர்களுக்கு அவரவர்கள் யோக்கியதைக்குத் தக்கபடி உபதேசங்கள் செய்துவந்தார். ஸௌகர்யம்போல் பாஷ்யப் பிரவசனமும் செய்து வந்தார். ஆனுல்

சில ஸமயங்களில் காலையில் தியானத்திலேயோ பூஜையிலேயோ ஈடுபட்டுவிட்டாரேயானுல் அன்று பாஷ்ய பாடம் நின்றுவிடும். ஆகையால் நிதானமாகத்தான் பாடம் நடக்கும். அதிலும் வேகமாக நடக்காது. சிலநாள் ஒரு பங்க்தியாகலாம் (வரி), அல்லது ஒரு பதமேதான் ஆகலாம். யாரேனும் அவஸரப்படுவதாய்த் தெரிந்தால் ''விஷயம் தெரியவேண்டுமா? புஸ்தகம் முடிய வேண்டுமா?'' என்று கேட்டுவிடுவார். என் தகப்பஞர் சிருங்ககிரியில் தங்கியிருந்த இரண்டு வருஷத்தில் கீதாபாஷ்யம் ஐந்து அத்யாயங்களே நடந்திருக்கின்றன. ஆனுல் அவர்கள் பிரவசனம் செய்து கொஞ்சம் கேட்டுக் கொண்டிருந்தாலும் அது மனஸில் அழியாத முறையில் நன்ருய்ப் பதிந்துவிடும் என்பதுடன் மற்றப் பங்க்திகளேயும் எவ்விதம் வாசிக்க வேண்டும் என்பது நன்கு பிடிபடும். அவர்களுடைய போதனுமுறை மிகச் சிறந்த முறையில் அபூர்வமாக அமைந்திருந்தது.

2. தனிப் பெருமை

என் தகப்பனுர் ஸந்யாஸம் எடுத்துக்கொள்ள நினைத்து 1921 மத்தியில் சிருங்ககிரி போய்ச் சேர்ந்தார். ஸ்ரீமத் ஆசார்யார் அவருக்கு உடனே ஸந்யாஸம் கொடுக்க ஏற்பாடு செய்யாமல், ஸந்யாஸ விஷயமாயுள்ள கிரந்தங்களையெல்லாம் அவரிடம் எடுத்துக்கொடுத்து ஸந்யாஸ ஆசிரமத்தின் மேன்மையையும் அவ்வாசிரமத்தைப் பரிபாலனம் செய்வதில் உள்ள சிரமத்தையும் நன்கு அறிந்து கொள்ள வேண்டுமென்று வாசிக்கச் சொல்லி சிருங்ககிரியில் தம் ஆசிரமத்திற்குப் பக்கத்தில், ஏகாந்தமாக இருந்துவருவதற்கு ஓர் அறையும் கொடுத்திருந்தார்கள். அவ்விதம் அவர் அங்கே தங்கியிருக்கும் சமயம் நான் சிருங்ககிரிக்குப் போய் தரிசனம் செய்தேன். என்னுடன் சமையலுக்கு ஒரு பரிசாரகனையும் (வேலைக்காரன்) அழைத்துக்கொண்டு போயிருந்தபடியால் என்னுடனேயே போஜனம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் எவ்வளவோ கேட்டும் என் தகப்பனுர் சம்மதிக்கவில்லை. அதில் எனக்குக் கொஞ்சம் வருத்தம் உண்டு. ஆனுலும் வெளியில் யாரிடமும் சொல்வதற்கில்லை. பிற்பாடு என் தகப்பனுரும் நானும் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்யப்போய் வந்தனம் செய்தோம். அப்பொழுது ஸ்ரீமத் ஆசார்யார் என் தகப்பனுரைப் பார்த்து, ''கிருஷ்ணன் இங்கே இருக்கும்வரை அவனுடனேயே சாப்பிடுங்கள்'' என்று சொன்னுர்.

அதைக் கேட்டதும் என் தகப்பனுர், ''அவசியமில்லை. நான் வழக்கம்போல் மடத்திலேயே சாப்பிடுகிறேன்'' என்ருர்.

அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் புன்சிரிப்புடன், ''கிருஷ்ணன் வராதபோது உங்களுக்கு மடத்தில் போஜனம் போடுவது நியாயம். இப்பொழுது அங்கே போஜனம் போடமாட்டார்கள். அவனுடனேயே சாப்பிடுங்கள்'' என்று சொல்லிவிட்டார்கள். அப்படியே நடந்து வந்தது.

ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யார் ‘‘ஸந்யாஸ தர்மங்கள் நன்கு தெரிந்து கொள்ளட்டும் என்று புஸ்தகங்கள் எடுத்துக் கொடுத்திருக்கிறேன். அத்தனையையும் பார்த்த பிறகும் ஆசிரமப் பொறுப்பை நன்ருக நிர்வஹிக்க முடியும் என்ற தைர்யம் உன் தகப்பஞருக்கு இருக்குமேயாஞல் ஸம்மதிக்க வேண்டியதுதான் என் முறை’’ என்ருர்கள்.

கிருஷ்ணன் : அவருக்குத் தைர்யம் உண்டு என்பதில் எனக்கு ஸந்தேஹமில்லை. ஆஞலும், அவர் குடும்பம் பெரியது, இனி வாசிக்க வைக்கவும், கல்யாணங்கள் செய்து வைக்கவும், உத்தியோகம் ஏற்படுத்திக் கொடுக்கவும், மற்றும் பலவிதமாகவும் குடும்பப் பொறுப்பு ஜாஸ்தியாக இருக்கிற ஸமயத்தில் அவர் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஸந்யாஸம் வாங்கிக் கொள்வது தர்மம்தாஞ என்று எனக்கு இன்னும் ஸந்தேஹம் இருந்து வருகிறது.

ஆசார்யார் : குடும்பத்தை இந்த ஸ்திதியில் விட்டுவிடுவது யாருடைய குற்றம்?

கிரு : தாங்கள் கேட்பது எனக்குப் புரியவில்லை. அவருடைய குற்றம்தானே?

ஆசார்யார் : அப்படியல்ல. இப்படி அரைகுறையாகக் குடும்பத்தை விட்டுவிட்டு வந்துவிட்டாலும் கூட அதைச் சரிவரப் பூர்த்தி செய்து குறையின்றி நீ நடத்துவாய் என்ற தைரியம் அவருக்கு இருப்பதஞல்தானே அவர் வெளியில் புறப்பட்டார். அந்தத் தைரியத்தை அவருக்கு உண்டு பண்ணினது நீதானே? அவர் பேரில் எப்படிக் குற்றமாகும்? ஆகையால் எல்லாப் பொறுப்பையும் நீதான் வஹிக்க வேண்டும். பகவானுடைய பரிபூர்ண அநுக்ரஹத்திஞல் உனக்கு இவ்விஷயத்தில் சிரமம் ஏற்படாது.

இப்படிச் சொல்லி அனுக்ரஹித்தார்கள்.

பிறகு சிலநாள் சென்று ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் பெண்ணுக்கு நஞ்சன்கூடில் கல்யாணம் ஏற்பாடாகியிருந்தது. அவர் என் தகப்பனுருக்கு வெகு நாளைய சிநேகிதர் என்ற முறையில் இவரையும் அவசியம் கல்யாணத்திற்கு வரவேண்டும் என்று வற்புறுத்தினர். ஆனல் அதற்கு இவர் கொஞ்சமேனும் இடம் கொடுக்கவில்லை. ஒரு நாள் ஸாயங்காலம் ஸ்ரீமத் ஆசார்யாரைத் தரிசிக்கப் போயிருந்த ஸமயம் என் தகப்பனுரைப் பார்த்து ஸ்ரீமத் ஆசார்யார், 'ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் கிருஹத்தில் கல்யாணம்போல் இருக்கிறதே? நீங்களும் போய்வரப் போகிறீர்கள் அல்லவா?'' என்ருர்கள்.

தகப்பனுர் : போகவில்லை. நான் எதற்காகப் போக வேண்டும்? நான் இங்கே வந்ததும் தாமஸிப்பதும் ஸந்யாஸத்தை உத்தேசித்து. கல்யாணத்தில் எனக்கு என்ன காரியம்?

ஆசார்யார் : காரியம் இல்லையென்பது வாஸ்தவம். போய்விட்டு வருவதில் என்ன பாதகம்? அவரும் திருப்திப்படுவார்.

தகப்பனுர் : இங்கே துங்கையில் ஸ்நானம் செய்து கொண்டு, ஜபாதிகளைச் செய்துகொண்டு, தங்களிடமிருந்து வேதாந்த விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, கூடியமட்டும் மனஸை ஒருமைப்படுத்த அவகாசம் இருக்கும் போது, இதை விட்டுவிட்டு இங்கிருந்து ரயிலில் நஞ்சன்கூடு போய் லௌகிகக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் எனக்கு இஷ்டமில்லை.

ஆசார்யார் : மறுபடியும் லௌகிக வாஸனை இழுத்து விடுமோ என்ற பயமா?

தகப்பனுர் : அந்தப் பயம் இல்லை.

ஆசார்யார் : அப்படியானல், அப்படி இழுக்கிறதா என்று பரீக்ஷை பார்ப்பதற்கு இதை ஒரு ஸந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு போய் வாருங்கள். இழுக்கவில்லையென்று நிச்சயமாகத் தெரிந்தவுடன் ஸந்யாஸத்திற்கு ஏற்பாடு செய்யலாம்.

அப்படியே அந்தக் கல்யாணத்திற்குப் போய்விட்டு வந்தபிறகு ஸ்ரீமத் ஆசார்யார் வெகு திருப்திப்பட்டு இவருக்கு ஆசிரமம் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். அந்தச் சமயம் தம்மிடம் வேதாந்த

சாஸ்திரம் வாசித்துக் கொண்டிருந்த ஸ்ரீ நிலமாவு மடாதிபதிகளான ஸ்ரீ கமலாநந்த நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளை மஹாவாக்யோபதேசம் செய்யும்படிச் சொன்னார்கள். அதற்கு அவர் ''ஏன்? தாங்களே உபதேசம் செய்யலாமே'' என்றார்.

ஆசார்யார் : செய்யலாம். ஆனால் சிருங்ககிரி மடம் ஸம்பிரதாயத்தில் வெகுநாளாக அடுத்த பட்டத்திற்கு வருகிறவர்களுக்கு மாத்திரம்தான் உபதேசம் செய்வது வழக்கம். வேறு யாருக்கும் நேரில் உபதேசம் செய்வதில்லை.

கமலாநந்தர்: அந்த நியாயம் என் மடத்திற்கும் ஸமானந்தானே.

ஆசார்யார்: உங்களிடம் உபதேசம் பெற்றதற்காக இவர் உங்கள் மடத்தின் ஆதிபத்தியத்தை அபேக்ஷிக்க மாட்டார் என்பது நிச்சயம். அதற்காக யோசிக்க வேண்டாம்.

கமலாநந்தர்: அப்படி அபேக்ஷிக்க மாட்டார் என்பது உறுதியானால், தாங்களே உபதேசம் செய்யலாமே?

ஆசார்யார்: தாங்கள் ஸ்வதந்திரர். இஷ்டப்படி செய்யலாம். என் நிலை அப்படி அல்ல. நான் பலபேர்களுக்கு ஸமாதானம் சொல்ல வேண்டிவரும். அதனால்தான் தங்களிடம் சொல்கிறேன்.

பிறகு அவர் ஸம்மதித்து என் தகப்பனாருக்கு மஹாவாக்யோபதேசம் செய்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் பின்னால் நடந்த ஒரு ஸம்பவத்தையும் இங்கேயே குறிப்பிடுவது உசிதம் ஆகும். ஸ்ரீ கமலாநந்த நரஸிம்மபாரதீ ஸ்வாமிகள் தக்ஷிண தேச யாத்திரை செய்து கொண்டிருக்கையில் 1928 டிஸம்பரில் மஹாதானபுரத்தில் எதிர்பாராமல் ஸித்தியடைந்து விட்டார்கள். அவருக்குப்பின் பட்டத்திற்கு ஏற்பாடும் செய்யவில்லை. அப்பொழுது ஸ்ரீ நிலமாவுமடம் சிஷ்யர்கள் ஒரு பையனை அழைத்துக்கொண்டு சிருங்ககிரிக்குப் போய் அவனுக்கு ஆசிரமம் கொடுத்து மடத்தின் அதிபதியாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் ''ஸித்தியான ஸ்வாமிகளிடம் நேரில் ஸந்யாஸம் பெற்ற ஸ்ரீ ராமாநந்தர் தேவர் மலையில் இருக்கிறார். அவரையே மஹாதானபுரம் அழைத்துக்கொண்டுபோய் இப்பையனுக்கு ஸந்யாஸம் கொடுத்து மஹாவாக்யோபதேசம் செய்யச் சொல்லுங்கள். அப்பொழுதுதான்

அவிச்சின்னமான பரம்பரையாகும்'' என்று உத்தரவிட்டார்கள். அப்படியே எல்லாம் நடந்தது. ஸ்ரீ நிலமாவுமடம் ஆதிபத்தியத்தை ஸ்ரீ ராமாநந்தர் அபேக்ஷிக்கவும் இல்லை, வஹிக்கவும் இல்லை. ஆனால் அவிச்சின்ன பரம்பரையாக வேண்டுமானால், இவர் ஆசிரம குருவான ஸ்ரீ கமலாநந்த நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள் ஸித்தியடைந்த தினத்திலிருந்து இவரிடம் ஆசிரமம் பெற்ற ஸ்ரீ போதேந்த்ர நாராயண பாரதீ ஸ்வாமிகளுக்கு அபிஷேகம் ஆகும்வரை மத்தியிலுள்ள இரண்டு வாரம் அம்மடாதிபத்யம் ஸ்ரீ ராமாநந்தரிடமே இருந்ததென்று வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

ஸ்ரீமத் ஆசார்யாரும் ஸ்ரீ ராமாநந்தருக்கு அனுப்பிய ஸ்ரீமுகத்தில் ''ஸ்ரீ நிலமாவுமடம் நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளிடம் தாங்கள் மஹாவாக்யோபதேசம் பெற்ற பேருபகாரத்திற்கு க்ருதக்ஞதைக் காட்ட இப்பொழுது அவகாசம் கிடைத்திருப்பதால் தாங்களே நேரில் மஹாதானபுரம் சென்று அங்கு அந்த மடத்திற்கு அதிபதியாகக் குறிப்பிட்டிருக்கிற பாலகருக்கு விதிப்படி ஸந்யாஸம் கொடுத்து மஹாவாக்யோபதேசம் செய்து அப்பரம்பரையை அவிச்சின்னமாக செய்து கொடுக்கவும்'' என்று எழுதியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ ராமாநந்தருக்கு ஸந்யாஸம் கொடுத்த சில நாட்களில் ஸ்ரீ கமலாநந்த நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் ஸ்ரீமத் ஆசார்யாரின் அனுமதியைப் பெற்று அவர்களுடைய அநுக்ரஹபூர்வமான ஸ்ரீமுகத்துடன் சிருங்ககிரியிலிருந்து யாத்திரையாகப் புறப்பட்டு விட்டார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரின் ஆக்ஞைப்படி ஸ்ரீ ராமாநந்தர் சிருங்ககிரியிலேயே தங்கி தம் ஆசிரம தர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டு ஆத்மானுஸந்தானம் செய்து கொண்டு வந்தார். அவர் இதர ஸந்யாஸிகளைப் போலவே கணைக்கால்வரை தொங்கவிட்டு வஸ்திரம் தரித்து வந்தார். ஒரு நாள் காலையில் அவர் அதே வேஷத்துடன் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசிக்க வந்தார்.

ஆசார்யார் : நீங்கள் வஸ்திரம் சரியாக கட்டிக் கொள்ளலாமே?

ராமாநந்தர் : நான் கட்டிக் கொண்டிருப்பது தவறு?

ஆசார்யார் : ஆம்.

ராமாநந்தர் : எப்படிக் கட்டிக் கொள்ள வேண்டும்?

ஆசார்யார் : முழங்காலுக்குக் கீழே தொங்கவிடக்கூடாது.

உடனே அப்படியே மடித்துக் கட்டிக் கொண்டுவிட்டார்.

ராமாநந்தர் : எல்லோரும் அப்படிக் கட்டிக்கொண்டிருக்கிருர் களேயென்று நானும் கட்டிக்கொண்டேன்.

ஆசார்யார் : தர்மாசரணத்திற்கு மடாதிபதிகளேப் பார்க்காதீர்கள். அவர்களுக்கு ஸம்பிரதாயம், லௌகிகம் எல்லாம் குறுக்கே நிற்கும். உங்களுக்கு அவ்வித நிர்பந்தம் எதுவும் இல்லாததால் நீங்களாவது சாஸ்திரோக்தமாக இருக்கலாமே.

இதிலிருந்து மடாதிபத்யத்தில் அவர்களுக்கு எவ்வளவு விரக்தி இருந்துவந்தது என்பது தெளிவாகிறது. ஸகலவிதமான லௌகிக வாஸனேகளேயும் சாஸ்திர வாஸனேகளேயும் தேஹ வாஸனேகளேயும் விட்டொழித்து எப்பொழுதும் ஆத்மாராமராய் இருக்க வேண்டுமென்ற மனேபாவமே அவர்களுக்குள் விருத்தியடைந்து வந்தது. 1923 ஆரம்பத்தில் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள், தாம் முன்னமேயே ஸர்வாதிகாரி பதவியிலிருந்து விலகிக்கொள்ள நினேத்தும் நடைபெருமல் பத்து வருஷங்களுக்கு மேல் மடத்திலேயே இருந்து பொறுப்பை வஹித்து வந்துவிட்டபடியால் இனியாவது விச்ராந்திக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வற்புறுத்திக் கேட்டார். அதற்கு அவர்கள் சற்று ஆலோசனே செய்துவிட்டு, ''இன்னும் பத்துநாள் வரை பொறுத்திருங்கள். அப்புறம் போகலாம் என்று தோன்றிஞல் போங்கள்'' என்று சொன்ஞர்கள். இவ்விதம் சொன்னதிலிருந்து ஒரு வாரத்தில் ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யார் வஸ்திராதிகளேப் பரித்யாகம் செய்து அவதூத நிலேயை அடைந்து உலகத்தையே மறந்து ஆத்ம நிஷ்டர்களாக நின்றுவிட்டார்கள். அவர் நிலேயே என்னவிதம் என்று புரியாமல் மடத்தில் உள்ளவர்களும் பொதுமக்களும் தவித்தார்கள். இந்த ஸ்திதியில் மடத்தை விட்டுப் போகமுடியாமல் சாஸ்திரிகள் அங்கேயே இருக்கும்படி ஏற்பட்டது. ஸ்ரீமத் ஆசார்யார் சொன்ன வார்த்தைக்கும் தாத்பர்யம் இப்பொழுதுதான் அவருக்குத் துலங்கிற்று. ஸ்ரீமத் ஆசார்யார் இந்நிலேயிலேயே மாஸக்கணக்காக இருந்துவிட்டார்கள். பூஜை, ஆஹ்நிகம் கிடையாது. ஸ்நாநம், பிக்ஷை நியமம் கிடையாது. மத்தியானத்திற்கு மேல் பிக்ஷையைக்

கொண்டுபோய் வைப்பார்கள். அவருடைய நிஷ்டையைக் கலைக்க மாட்டார்கள். ஸ்ரீமத் ஆசார்யாராக பஹிர்முகமாகிப் பிக்ஷை எடுத்துக்கொண்டால் உண்டு; இல்லையானால் ஸாயங்காலம் வேலைக்காரர் அங்கேபோய் பிக்ஷையோடு கூடின பிக்ஷாபாத்திரத்தை எடுத்துக்கொண்டு வந்து, அஸ்தமனத்திற்குப் பிறகு ஒரு கிண்ணம் பால் கொண்டுபோய் வைத்துவிட்டு வருவார்கள். அதையும் அவர் எடுத்துக் கொள்வது நிச்சயமில்லை. காலைவேளையில் போய் உபயோகப்படுத்தாமலிருந்த பாலைத் திரும்பி எடுத்துக்கொண்டு வரவேண்டியும் இருக்கும். இவ்விதம் ஆஹாரமே இல்லாமல் அநேக நாட்கள் கடந்துவிடும். ராத்திரி நித்திரை செய்வதும் கிடையாது. இவ்விதம் ஆஹாரமும் நித்திரையும் இல்லாததினால் சரீரம் மிகவும் இளைத்துவிடும். ஆனால் முகத்தில் மாத்திரம் தேஜஸ்ஜ்வலிக்கும். இவருக்கு சரீரத்தில் ஏதோ வியாதி என்றும் புத்தியில் ஏதோ கோளாறு என்றும் அநேக ஜனங்கள் நினைக்க இந்த நிலை இடம் கொடுத்தது.

இந்தச் சமயம் யாத்திரையிலிருந்த ஸ்ரீ நிலமாவு மடம் ஸ்வாமிகள் இவ்விஷயம் கேள்விப்பட்டு ஸ்ரீமத் ஆசார்யாரைத் தரிசிப்பதற்காக சிருங்ககிரிக்கு வந்தார். துங்காவின் தென் கரையிலுள்ள ஸ்ரீ ஸச்சிதானந்த விலாஸத்திற்குப் போய்ப் பார்க்கையில் வெளியில் பூட்டிக்கொண்டு ஒரு வேலைக்காரர் உட்கார்ந்திருப்பதைக் கண்டு ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசிக்க வேண்டுமென்று சொன்னார். ஸ்ரீமத் ஆசார்யார் வஸ்திரமில்லாமல், சிலவேளை கௌபீனதாரியாக, சிலவேளை அதுவும் இல்லாமல் இருந்துவிடுவதால் யாரையும் உள்ளே விடுவதில்லை. வேண்டுமானால் ஜன்னல் கதவைத் திறக்கிறேன். அதன்வழியே தரிசனம் செய்யுங்கள்'' என்று அவ்வேலைக்காரர் சொன்னார். அவ்விதமே ஜன்னல் கதவைத் திறந்தார். ஜன்னல் வழியாகப் பார்க்கையில் அதிகிருசமான சரீரத்துடன் வபனமும் இல்லாமல் வஸ்திரமும் இல்லாமல் இருந்த ஸ்ரீமத் ஆசார்யாரைப் பார்த்தவுடன் ஸ்ரீ நிலமாவு மடம் ஸ்வாமிகளுக்கு தாங்க முடியாத வருத்தம் ஏற்பட்டது. கொஞ்ச நாட்களுக்கு முன் பீடத்தில் அமர்ந்து தமக்கு பாஷ்ய பாடம் சொன்ன கோலம் எங்கே, இப்பொழுது நிற்கும் அவதூதக் கோலம் எங்கே என்று நினைக்க நினைக்கக் கண்களில் தாரை தாரையாக நீர் பெருக, ஜன்னலுக்கு வெளியிலேயே நமஸ்கரித்தார். நமஸ்கரித்து எழுந்து அஞ்ஜலிபந்தம் செய்து நிற்கையில் ஜன்னலுக்கு ஸமீபத்திலேயே ஸ்ரீமத் ஆசார்யார் நிற்பதைக் கண்டார். மறுபடியும் நமஸ்கரித்துக் கண்ணீர் வடித்துக்

கொண்டு நிற்கும் இவரை ஸ்ரீமத் ஆசார்யார் பார்த்து ''ஸாயங்காலம் நான்கு மணிக்கு வாருங்கள்'' என்றார்கள். இதுவே தமக்குப் பாக்கியம் என்று நினைத்து தம் ஜாகைக்குத் திரும்பிப் போய்விட்டு ஸாயங்காலம் நான்கு மணி சுமாருக்கு ஸ்ரீ ஸச்சிதானந்த விலாஸத்திற்கு அவர் வந்து சேர்ந்தார். கதவுகள் எல்லாம் திறக்கப்பட்டிருந்தன. உள்ளே சென்று பார்க்கையில் பாஷ்யப் பிரவசன ஸமயத்தில் எப்படி இருப்பாரோ அப்படியே வஸ்திரம், விபூதி, ருத்ராக்ஷம் முதலியன தரித்துக்கொண்டு பீடத்தில் அமர்ந்து தரிசனம் அளித்ததைக் கண்டு, ஸ்ரீ நிலமாவு மடம் ஸ்வாமிகளுக்குக் காலையில் கண்டது ஸ்வப்னமா, இது ஸ்வப்னமா என்று தீர்மானிக்க முடியாத நிலை ஏற்பட்டது. உடனே நமஸ்கரித்து ஸ்ரீமத் ஆசார்யாரின் ஆக்ஞையின் பேரில் உட்கார்ந்தார்.

ஆசார்யார் : காலையில் வந்தாற்போல் இருக்கிறது?

நி.ஸ்வாமிகள் : ஆம்.

ஆசார்யார் : நீங்கள் வெகு தொலைவில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருப்பதாக அல்லவா கேள்விப்பட்டேன்?

நி.ஸ்வாமிகள் : ஆம்.

ஆசார்யார் : இப்பொழுது இங்கே வர நிமித்தம்?

நி.ஸ்வாமிகள் : தங்கள் சரீரத்திற்கு ஏதோ அஸ்வஸ்ததை ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உடனே தரிசனம் செய்ய வேண்டுமென்று தோன்றி வந்தேன்.

ஆசார்யார் : அப்படியா? வந்ததைப் பற்றி ஸந்தோஷம். ஆனால் இதற்காக யாத்திரை மத்தியில் இங்கே வந்திருக்க வேண்டாம். சரீரத்திற்கு 'அஸ்வஸ்ததை' என்று கேள்விப்பட்டு வந்ததாகச் சொல்லுகிறீர்கள். சரீரம் ஒரு நாளும் *ஸ்வம்* (ஆத்மா) ஆகாததாலும் '*ஸ்வ*'த்தில் (ஆத்மாவிடத்தில்) சரீரம் இருக்க முடியாததாலும், சரீரத்தின் ஸ்வரூபமே 'அஸ்வஸ்த'' மாயிருக்கும் தன்மைதான் (நிலையின்மை). அது அஸ்வஸ்தமாக இருக்கிறதே என்று நினைப்பதில் அர்த்தமில்லை. அதற்கு ஏற்பட்ட ஸ்வபாவமே அப்படியிருக்க

அந்த ஸ்வபாவத்தை விட்டு அது வேறு எப்படி இருக்க முடியும்? தவிரவும், ஸாமான்ய ரீதியில் கவனித்தாலும் ''சரீரம்'' என்கிற பதம் ''குலேந்து போகிறது'' என்ற அர்த்தத்துடன் கூடிய தாதுவிலிருந்து ஏற்பட்டிருப்பதால், சரீரம் என்பதற்கே குலேந்து போகக்கூடியது என்றே அர்த்தம். அப்படியிருக்க, சரீரமாக இருந்து குலேந்து போகாமல் இருக்க வேண்டுமென்ருல் அது எப்படி ஸாத்தியம்? மேலும், ஜன்மம் எடுத்தது முதல் கொஞ்சநாள் வரை அவயவங்களும் அங்கங்களும் நீண்டு பெருத்துக்கொண்டு வரும்போது உபசயம், விருத்தி அடைதல், என்ற அர்த்தம் கொண்ட தாதுவிலிருந்து ஏற்பட்ட ''தேஹம்'' என்ற பெயரை வகிக்கிறது. அதுவே வளர்தல் நின்று குறைய ஆரம்பிக்கும்போது ''சரீரம்'' என்ற பெயருக்கு உரித்தானதாகிறது.

இந்த வெளிக்கோசம் இப்பொழுது ''தேஹம்'' என்ற பெயருக்கு அர்ஹமில்லாமல், (அருகதையின்றி) ''சரீரம்'' என்ற பெயருக்கே அர்ஹமாயிருப்பதால், அதைப்பற்றிக் கவலேப் படுவதற்கு அவசியமே இல்லே. அது அது அததின் ஸ்வபாவத்தின்படி கர்மானுஸாரமாக நடந்து கொள்ளும். ஆகையால் எனக்கு ஒன்றுமில்லே. நீங்கள் விசாரப்படாமல் உங்கள் யாத்திரையைக் கிரமப்படி நடத்துங்கள்.

இப்படிச் சொல்லி அனுமதி கொடுத்து ஆசார்யார் ஸ்ரீ நிலமாவுமடம் ஸ்வாமிகளே அனுப்பிவிட்டார்கள். அவர் அங்கிருந்து விலகினதுமே ஸ்ரீமத் ஆசார்யார் பழைய நிலேயில் இருந்துவிட்டார்கள்.

இவ்விதம் பல நாட்கள் சென்றும் அவர் நிலேயைப் புரிந்துகொள்ளாத ஜனங்கள் பலவாருகப் பிரஸ்தாபிக்கிற விஷயம் மைஸூரிலுள்ள ஒரு பிரபுவிற்கு எட்டி இந்நிலேயின் தன்மையை நன்கு அறிந்துவரும்படி ஒரு வைத்தியரைச் சிருங்ககிரிக்கு அனுப்பினர். அந்த வைத்தியர் பிரதி தினமும் காலேயிலும்

மாலையிலும் அக்கரைக்குப் போய் ஸ்ரீமத் ஆசார்யாரைத் தரிசித்துவிட்டு வந்து பிரதி தினமும் அப்பிரபுவிற்குக் கடிதம் எழுதிக்கொண்டேயிருந்தார். அந்தச் சமயம் நானும் சிருங்ககிரிக்குப் போய் அவர் இறங்கியிருந்த ஜாகையிலேயே இறங்க ஏற்பட்டது. அவருடன் சில நாள் பரிச்சயம் ஏற்பட்ட பிறகு ஒரு நாள் மத்தியான்னம் அவராக என்னிடம் ''இன்று ஸ்ரீ ஸ்வாமிகளைப் பேசவைக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்று சொன்னார்.

கிருஷ்ணன் : இத்தனை நாளாக உங்களிடமும் பேசவில்லையா?

வைத்தியர் : இல்லை.

கிருஷ்ணன் : பிரதிதினமும் கடிதம் மாத்திரம் தபாலில் போடுகிறீர்களே?

வைத்தியர் : ஆமாம். அப்படியே எனக்கு உத்தரவு.

கிருஷ்ணன் : ஸ்ரீ ஸ்வாமிகள் இதுவரை உங்களுடன் பேசக்கூட வில்லையானால் என்ன எழுதுவீர்கள்?

வைத்தியர் : ஸ்ரீ ஸ்வாமிகள் அதே ஸ்திதியில் இருக்கிறார் என்று பிரதி தினமும் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

கிருஷ்ணன் : அதே ஸ்திதியில் என்றால் முதல் கடிதத்திலாவது அந்த ஸ்திதி இன்னவிதம் என்று எழுதியிருக்க வேண்டுமே?

வைத்தியர் : வாஸ்தவம்; ஆனால் நான் முதல் கடிதத்தில் அவர் ஸ்திதி எனக்குப் புரியவில்லை என்றுதான் எழுதினேன். மறு கடிதங்களில் அதே ஸ்திதியில் இருக்கிறார் என்று எழுதி வருகிறேன்.

கிருஷ்ணன் : இன்றைக்கு அவரைப் பேசச்செய்து அவர் நிலையைக் கண்டுபிடித்துவிட உத்தேசமா?

வைத்தியர் : அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

கிருஷ்ணன் : நானும் தங்களுடன் வருவதில் ஏதேனும் பாதகம் உண்டா?

வைத்தியர் : பாதகம் ஒன்றும் இல்லை. நீங்களும் வாருங்கள். வேறொரு உள்ளூர் வைத்தியரும் வருகிறார்.

அவ்விதமே ஸாயங்காலமாக நாங்கள் மூவரும் அக்கரைக்குப் போய்ச் சேர்ந்தோம். அன்று கதவு திறந்து ஸ்ரீமத் ஆசார்யார் பீடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். ஆனுல் கண் திறந்திருந்த போதிலும் வெளி திருஷ்டி இருந்ததாகத் தெரியவில்லை. நாங்கள் உள்ளே வந்தவுடன் உட்காரும்படி ஸம்க்ஞை செய்துவிட்டு மறுபடியும் நிஷ்டையிலேயே இருந்துவிட்டார்கள். அவர்களுடைய நிஷ்டையைக் கலைக்க வைத்தியருக்கு மனம் வரவில்லை. அப்படியே எல்லோரும் வெகுநேரம் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அஸ்தமன சமயத்தில் இனி தாமதிப்பது நியாயமில்லை என்று உணர்ந்து எழுந்திருந்தோம். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் நிமிர்ந்து பார்த்தார்கள். அந்தச் சமயத்தை உபயோகித்துக் கொண்டார் வைத்தியர்.

வைத்தியர் : நாளை ஊருக்குப் போகலாமென்று நினைக்கிறேன்.

ஆசார்யார் : வந்த காரியம் ஆகிவிட்டதா?

இது மிகச் சிறிய கேள்விதான்; ஆனுல் ''ஆமாம்'' என்று வைத்தியர் சொன்னுல், அது வாஸ்தவமாகாது; அவர் வந்த காரியம் ஒன்றும் நடக்கவில்லை. ''இல்லை'' என்று சொன்னுல், நாளை ஊருக்குப் புறப்படுவதற்கு வேறு காரணம் சொல்ல வேண்டும். இவ்வித ஸங்கடத்தில் இக்கேள்வி வைத்தியரை வைத்தது.

வைத்தியர் : நான் ஊரிலிருந்து வந்து நாளாகிவிட்டது. திரும்பலாமென்று நினைக்கிறேன்.

ஆசார்யார் : அப்படியே செய்யுங்கள்.

பிறகு நமஸ்கரித்துவிட்டு வெளியில் புறப்படும்போது ஸ்ரீமத் ஆசார்யார் வைத்தியரைப் பார்த்து, ''தாயார் ஸௌக்கியமாக இருக்கிருளா?'' என்று கேட்டார்கள். வைத்தியர் ''ஆம்'' என்று பதில் சொன்னதும் ஸ்ரீமத் ஆசார்யார் தலை அசைத்து ஸம்க்ஞை காட்டினபடியால் நாங்கள் எல்லோரும் வெளியில் வந்துவிட்டோம். வைத்தியர் ஸ்ரீமத் ஆசார்யாரைப் பேசவைத்தது வாஸ்தவம் என்றே வைத்துக்கொண்டாலும் அவர் நிலையைப்பற்றி என்ன தெரிந்துகொண்டார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இவ்விதம் நாங்கள் திரும்பினேம்.

வைத்தியர், ''பார்த்தீர்களா? ஸ்ரீ ஸ்வாமிகளின் வம்பை'' என்றார். எனக்கு இந்த வார்த்தை அர்த்தமும் ஆகவில்லை. அனுசிதமாகவும் (தவறாகவும்) தோன்றிற்று. அதிகம் பரிச்சயமில்லாதவரிடம் நான் வியவஹாரம் செய்வது உசிதமில்லையென்று நிறுத்திக்கொண்டு மெதுவாய், ''எனக்கு ஒன்றும் வம்பு தெரியவில்லையே?'' என்றேன்.

வைத்தியர் : எனக்கு ஸம்ஸாரம் இல்லையா, குழந்தைகள் இல்லையா? கூடப்பிறந்தவர்கள் இல்லையா? இதுவரை யாரைப்பற்றியும் யோகக்ஷேமம் கேட்காமல் இன்று தாயாரைப் பற்றி மாத்திரம் கேட்டாரே? அது வம்புதானே?

கிருஷ்ணன்: கிருஹத்தில் வயதானவள் என்று கேட்டு இருக்கலாம். எப்படியும் அதில் வம்பு என்ன இருக்கிறது?

வைத்தியர் : நாலைந்து வருஷங்களுக்கு முன் என் தாயார் வயிற்றுவலியினால் மிகவும் சிரமப்பட்டாள். நானும் வைத்தியம் செய்து பார்த்தேன்; பிரபல வைத்தியர்களைக் கொண்டும் பார்க்கச் சொன்னேன். ஒருவிதத்திலும் குணமாகவில்லை. அந்தச் சமயம் நான் சிருங்ககிரிக்கு வர வேண்டியிருந்தது. அப்பொழுது என் தாயார் ''சிருங்ககிரிக்குப் போகிறாயே? ஆசார்யாரிடம் சொல்லிப் பிரஸாதம் வாங்கிக் கொண்டு வாயேன்'' என்று சொன்னாள். அப்படியே இங்கே வந்து ஆசார்யாரிடம் தெரிவித்தேன். ஒரு சிறிய பொட்டலம் விபூதி கொடுத்து அதை வெந்நீரில் குழைத்து வயிற்றில் தடவும்படி சொன்னார்கள். ஊருக்குத் திரும்பினவுடன் அப்படியே செய்தேன். அதுமுதல் அவளுக்கு வயிற்றுவலி நின்றுவிட்டது.

கிருஷ்ணன்: அதனால்தான் ஸ்ரீமத் ஆசார்யார் உங்கள் தாயாரைப் பற்றி ஞாபகமாய்க் கேட்டிருக்கிறார். இதில் பிசகு என்ன?

வைத்தியர் : பிசகு என்று நான் சொல்லவில்லை. வந்த காரியம் ஆகிவிட்டதா என்று அவர் கேட்டதிலிருந்தே நான்

என்ன காரியமாக இங்கே வந்திருக்கிறேன் என்ற விஷயம் அவருக்கு நன்ருகத் தெரியும் என்று ஏற்படுகிறது. என்ன காரியமாக வந்தாய் என்று அவர் இதுவரை என்னைக் கேட்காததிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். ''உன் தாயாருக்கு வயிற்றுவலி வந்து, நீ வைத்தியராக இருந்தும் குணப்படுத்த முடியாமல், என்னிடம் விபூதி வாங்கிக் கொண்டு போனவன், இப்பொழுது எனக்கு வைத்தியம் பண்ண வந்திருக்கிருயா?'' என்பதல்லவா அவர் கேள்விக்கு அர்த்தம்!

மற்ெருரு ஸமயம் வேெருரு வைத்திய சிஷ்யர் சிருங்ககிரிக்கு வந்து ஸ்ரீமத் ஆசார்யார் நித்திரையற்று இருக்கிருர் என்று தெரிந்து ராத்திரி கொடுக்கும் பாலில் ஏதோ மாத்திரையைக் கரைத்துக் கொடுத்துவிட்டார். அன்று ராத்திரி ஸ்ரீமத் ஆசார்யார் நன்கு நித்திரை செய்துவிட்டு, தாம் அவ்விதம் நித்திரை செய்ததற்குக் காரணம் என்னவென்று யோசித்து அந்த வைத்தியரைத் தருவித்துக் கேட்டார்கள். அவர் தான் செய்ததை ஒப்புக்கொண்டு, அபிமானத்திஞல் செய்ததிஞல் அபசாரமாகப் பாவிக்கக்கூடாதென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீமத் ஆசார்யார் ''இருக்கிற தூக்கம் போதாதென்று, இல்லாத தூக்கத்தையும் வரவழைத்துக் கொள்ள வேண்டுமா? இனி அவ்விதம் செய்யாதீர்கள்'' என்ருர்கள்.

இன்ெனுரு வைத்தியர், ஸ்ரீமத் ஆசார்யார் சரியானபடி பிக்ஷை எடுத்துக் கொள்ளவில்லையே என்று நினைத்து பசி ஏற்படும்படி ஒரு மருந்தைப் பாலில் கலந்து கொடுத்துவிட்டார். மறுநாள் அதிகப் பசி ஏற்படக் கண்டு ஸந்தேஹித்து அவ்வைத்தியரைக் கூப்பிட்டுக் கேட்கையில் விஷயம் தெரிந்தது. ஸ்ரீமத் ஆசார்யார், ''இருக்கிற பசி தாகம் போகவேண்டுமென்று நாம் நினைக்கும்போது அதிகப் பசி ஏற்படும்படி மருந்தா? இனி வேண்டாம்'' என்று சொல்லி விட்டார்கள். இவ்விதமாக ஒருவித வைத்தியத்திற்கும் இடம் கொடுக்கவில்லை. ஆனுல் உடம்பு கிருசமாகப் போனதைத் தவிர வேறு எவ்வித ஆரோக்கியக்

குறைவும் எப்பொழுதும் கிடையாது. ஸ்ரீமத் ஆசார்யார் இவ்விதம் அந்தர்முகமாய் இருக்கும் மத்தியிலேயே ஸௌகர்யம் பார்த்து அவர்களிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு ஸ்ரீ ராமாநந்தர் அகண்ட காவேரி தீரத்திற்கு வந்துவிட்டார்கள். பிறகு கொஞ்சநாள் சென்று பஹிர்முகமாகி முன்போலவே ஸகல கார்யங்களேயும் ஸ்ரீமத் ஆசார்யார் நடத்தி வந்தார்கள்.

சிருங்ககிரியிலேயே பத்து வருஷங்களுக்குமேல் தங்கி விட்டபடியால் வெளியில் யாத்திரையாகப் புறப்பட்டால் ஒருவித மாறுதல் ஏற்படலாமென்று நினைத்து மைஸூர் மஹாராஜர் மைஸூர் வரை விஜயம் செய்து அனுக்ரஹிக்க வேண்டுமென்று ஸ்ரீமத் ஆசார்யாரை வேண்டிக்கொண்டார். அதன்பேரில் 1924 ஆரம்பத்தில் புறப்பட்டு யாத்திராக்கிரமமாக மைஸூர் வந்து சேர்ந்தார்கள். அதிகோலாஹலமாய் மஹாராஜரினுலும் மற்றும் ஜனங்களாலும் விசேஷமாக ஆதரிக்கப்பட்டார்கள். அந்தச் சமயம் நடந்த ஒரு விசித்திர சம்பவத்தையும் குறிப்பிட வேண்டும். ஒரு நாள் ராஜமரியாதையுடன் தங்கப் பல்லக்கில் ஸ்ரீமத் ஆசார்யாருக்கு ஊர்வலம் ஏற்பாடாகியிருந்தது. ராஜ ஸம்ஸ்தான துருப்புகள், யானேகள், குதிரைப்பட்டாளங்கள் முதலான பிருதுகள் எல்லாம் முன்னல் போக, பல்லக்கின் அருகில் மஹாராஜரும் உயர்ந்த ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் செல்ல, வேதபாராயண கோஷ்டிகள் பஜனே கோஷ்டிகள் பின்செல்ல, அரை மைல் நீளம் ஊர்வலம் நடந்தது. ஆரம்பித்து கொஞ்ச தூரம் போய்க் கொண்டிருக்கையில் கொஞ்சம் மழைத் தூறல் ஏற்பட்டதும் சற்றுத் தங்கிப் போவது உசிதமென்று நினைத்து பக்கத்திலுள்ள ஒரு பெரிய கட்டிடத்தின் முன் பக்கத்தில் ஸ்ரீமத் ஆசார்யாருக்குப் பீடம்போட்டு ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் அமர்ந்தவுடன் மஹாராஜர், திவான் முதலிய பெரிய உத்தியோகஸ்தர் உள்பட எல்லாப் பிரமுகர்களும் உட்கார்ந்தார்கள். அப்பொழுது ஸ்ரீமத் ஆசார்யார் ''இது என்ன கட்டிடம்?'' என்று கேட்டார்கள். அங்குள்ள பிரபல உத்தியோகஸ்தர் ஒருவர், ''இது மஹாராஜாவின் ஆஸ்பத்திரி'' என்ருர். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் புன்சிரிப்புடன் ''என்னே இங்கே கொண்டுவர வேண்டுமென்று சிலர் வெகுகாலமாகப் பிரவிருத்தித்தார்கள். அதற்கு இன்றைக்குத்தான் பிராப்தம் என்று தெரிகிறது'' என்ருர்கள். இதைக்கேட்டதும் அவர்களுக்கு வைத்தியம் செய்ய நினேத்த யாவரும் தலே குனியும்படி ஏற்பட்டது.

மைஸூரிலிருந்து கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் ஸஞ்சாரம் செய்துவிட்டுத்திருவனந்தபுரம் ஸம்ஸ்தானத்திற்கு விஜயம் செய்து காலடியில் சில நாள் தங்கிக் கொச்சி ராஜ்யம், பாலக்காடு, கோயமுத்தூர் நஞ்சன்கூடு வழியாகச் சிருங்ககிரிக்குத் திரும்பிவிட்டார்கள். 1924 ல் ஆரம்பித்த யாத்திரை 1927 கடைசியில் முடிந்தது. இவ்விதம் நான்கு வருஷங்கள் அவர்கள் விஜயம் செய்த இடங்களில் உள்ள பக்தர்களுக்கு அவர்கள் செய்திருக்கும் நன்மைகளைக் கணக்கிட முடியாது. அந்த யாத்திரையில் நடந்த சம்பவங்களை வர்ணிப்பதும் ஸாத்தியமில்லை. இருந்தாலும் எனக்குத் தெரிந்த சில விஷயங்களை மட்டும் இங்கு குறிப்பிடலாமென்று நினைக்கிறேன். முதலில், இந்த நான்கு வருஷ யாத்திரையில் அவர்கள் அந்தர்முகமாக ஆகவே இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. சிஷயர்களை அநுக்ரஹிக்க வேண்டிய ஸங்கல்பத்துடன் புறப்பட்டிருக்கிற ஸமயத்தில் அந்தர்முகமாயிருந்துவிட்டால் அந்த ஸங்கல்பத்தை எப்படி நிறைவேற்ற முடியும்? சிஷ்யர்களின் யோக்கியதைகளும் ஸ்வபாவங்களும், பலவிதமான தாரதம்யத்துடன் இருக்குமாதலால் அவரவர்களுக்குத் தக்கபடி ஹிதோபதேசம் செய்ய வேண்டு மானுல், ஆத்ம நிஷ்டையிலிருந்து இறங்கிப் பஹிர்முகமாக இருக்கவேண்டியதே நியாயமென்று தீர்மானித்து உலகத்தில் கலந்து கொண்டார்கள். ஆனுல் உலகத்தில் ஒருவிதப் பற்றும் இல்லாமல், நடப்பதையெல்லாம் மாயாவிலாஸம் என்று வேடிக்கையாக, ஸாக்ஷியாக இருந்து பார்த்துவந்தார்கள் என்றே சொல்ல வேண்டும்.

தங்கப் பல்லக்கில் உத்ஸவம் செய்யும்போது ஸ்ரீமத் ஆசார்யாருக்கு சிரஸில் ரத்ன கிரீடம், மேலே ஜரிகைப் பட்டாடையெல்லாம் சாற்றுவது வழக்கம். ஒரு நாள் உத்ஸவத்தில் ஜரிகைப் பட்டில் ஜரிகைப் பக்கத்தை உள்பக்கம் வைத்து நூல் தெரியக்கூடிய உள்பக்கத்தை வெளியில் தெரியும்படியாக அலங்காரம் செய்துவிட்டார்கள். இதை யாரும் கவனிக்கவில்லை. ஊர்வலம் உத்ஸாஹமாக நடந்து ஜாகைக்கு வந்து அலங்காரத்தைக் கலைக்கும்போது மடத்து அதிகாரி இத்தவறுதலைக் கவனித்தார்.

அதிகாரி : ஜரிகையை உள்ளே வைத்துப் போட்டிருக்கிறேனே? என்ன அசட்டுத்தனம்!

ஆசார்யார் : நீங்கள் போடும்போதே கவனித்தேன்.

அதிகாரி : அப்படியானுல் அப்பொழுதே சொல்லக்கூடாதா? மாற்றிச் சரியாகப் போட்டிருப்பேனே?

ஆசார்யார் : இன்றைக்கு இப்படித்தான் இருக்கட்டுமே என்று இருந்துவிட்டேன்.

இதில் விசேஷம் என்னவென்ருல், ஜரிகைப் பட்டு மாறியிருக்கிறது என்பதை ஆயிரக்கணக்காக இருந்த அந்த ஊர்வலக் கூட்டத்தில் யாரும் கவனிக்கவில்லை. எல்லோரும் ஸ்ரீமத் ஆசார்யாரின் முகாரவிந்த தேஜஸ்ஸில் ஈடுபட்டு இருந்தார்களே தவிர அவர் அணிந்திருந்த வஸ்திரத்திலாவது ஆபரணத்திலாவது யாரும் கவனம் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விதமே எல்லா விஷயங்களிலும் ஸ்ரீமத் ஆசார்யார் பற்றற்று ஸாக்ஷியாக இருந்து வந்திருக்கிருர்கள்.

3. குருவே தெய்வம்

ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளைத் தரிசிக்க எனது தகப்பனுர் சிருங்ககிரிக்குப் போயிருந்த ஸமயம் அவர்கள் இவரைப் பார்த்து, ''கிருஹத்தில் ஏதாவது பூஜை செய்துவருகிருயா?'' என்று கேட்டுக் கொண்டிருக்கையிலேயே, ஒரு பைராகி அவ்விடம் வந்து ஒரு பெரிய பாணலிங்கத்தைக் குருநாதரிடம் ஸமர்ப்பணம் செய்து ''நர்மதையில் கிடைத்தது. இங்கே இருப்பதுதான் உசிதம் என்று நினைத்துக் கொண்டுவந்தேன்'' என்ருர். அவருக்குத் தக்கபடி ஸன்மானம் செய்து அனுப்பும்படி மடத்து அதிகாரிகளுக்கு உத்தரவு செய்துவிட்டு, என் தகப்பனுரைப் பார்த்து, ''நாம் பிரஸ்தாபித்துக் கொண்டிருக்கையிலேயே பகவான் நேரில் வந்துவிட்டார். உனக்காகத்தான் வந்திருக்கிருர். இங்கே நம் பூஜையில் சிலநாள் வைத்துப் பூஜை செய்துவிட்டு, நீ ஊருக்குத் திரும்பும்போது கொடுக்கிறேன்'' என்று சொன்னுர்கள். அப்படியே சிலநாள் சென்று அனுக்ரஹித்துக் கொடுத்தார்கள். அதுமுதல் என் தகப்பனுர் பூஜையிலேயே இருந்து கிரமப்படி ஆராதிக்கப்பட்டு வந்தது. இதற்குச் சுமார் 17 வருஷம் சென்று ஸந்யாஸத்தை உத்தேசித்து என் தகப்பனுர் சிருங்ககிரிக்குப் போனபோது இந்தப் பாணலிங்கத்தைத் தன்னுடன் எடுத்துக்கொண்டு போய் ஸந்யாஸம் வாங்கிக் கொள்ளும்போது மடத்திலேயே ஒப்படைத்துவிட்டார். பிற்பாடு ஸ்ரீமத் ஆசார்யார் பூஜையிலேயே இருந்து வந்தது.

நான் சிருங்ககிரிக்கு 1923-ல் போன ஸமயம் அவர்கள் அந்தர்முகமாக இருந்தபடியால் அந்தப் பாணலிங்கத்தை எனக்கு அநுக்ரஹித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்க அவகாசம் இல்லாமல் போய்விட்டது. 1924-ல் ஈரோடில் அவர்களைத் தரிசனம் செய்தபோது நவராத்திரி பூஜையில் இருந்ததால் அப்பொழுதும்

கேட்க முடியவில்லை. 1925-ல் செட்டிநாடு ஊர்களில் விஜயம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கே போயாவது பாணலிங்கத்தைக் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டுமென்று தோன்றிற்று. அப்படியே போய் அவர்களைத் தரிசனம் செய்து கொண்டேன். அந்தச் சமயம் கூட்டமாக இருந்தபடியால் ஸாயங்காலம் ஏகாந்தமாக இருக்கும்போது கேட்கலாம் என்று நினைத்து ஸாயங்காலம் போய் ஸ்ரீமத் ஆசார்யாரை நமஸ்கரித்தேன். என்னை உட்காரச் சொல்லி உடனே, 'கிருஹத்தில் பூஜைக்கு என்ன வைத்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டார்கள். அதற்கு நான் ''பெரியவாள் பாதுகைதான் இருக்கிறது'' என்றேன். ''பாதுகை *தான்* என்று உனக்கு ஆகிவிட்டதா?'' என்றார்கள். ''நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. பாணலிங்கம், ஸாலக்ராமம் முதலிய பஞ்சாயதனம் இல்லையென்று சொன்னேன்'' என்றேன். அதற்கு அவர்கள், ''உனக்குக் குருபாதுகையே போதும்; வேறு பூஜை தேவையில்லை'' என்று சொல்லிவிட்டார்கள். இப்படி அவர்கள் நான் பிரஸ்தாபிப்பதற்கு முன்பேயே சொல்லும்போது, பாணலிங்கம் வேண்டும் என்று கேட்க எனக்குத் தைரியம் வரவில்லை.

பிறகு திருமங்கலத்தில் அவர்களைத் தரிசிக்கப் போனபோது அவர்கள் பூஜையில் இந்தப் பாண லிங்கத்தைக் காணவில்லை. நான் கேட்கத் தைரியமில்லாமல் விட்டு விட்டதால் வேறு யாரோ ஸ்ரீமத் ஆசார்யாரிடமிருந்து அதை வாங்கிக்கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் தோன்றி, ஒரு பெரிய நிதியை இழந்துவிட்ட மாதிரி மனதில் வருத்தம் ஏற்பட்டது. யார் வாங்கிக்கொண்டு போனது என்று கேட்கவும் தோன்றவில்லை; இன்னார் வாங்கிக்கொண்டார் என்று தெரிந்தால்தான் என்ன செய்ய முடியும்; எனக்கு இல்லையென்பது உறுதிதானே? இவ்வித எண்ணங்கள் மனதில் சுழன்றுகொண்டே ஸ்ரீமத் ஆசார்யார் இருக்கும் இடம் போய் நமஸ்கரித்தேன். அவர்கள் நான் கேட்பதற்கு முன்னமேயே, ''ஸ்ரீ ராமாநந்தருடைய பாணலிங்கம் மதுரைக்குச் சமீபத்தில் முள்ளிப்பள்ளம் என்ற கிராமத்தில் உள்ள சிவன்கோவிலில் பிரதிஷ்டையாகி இருக்கிறது'' என்று சொன்னார்கள். அந்த லிங்கம் எனக்கு இல்லையென்றாலும் வேறு தனி மனுஷ்யாளுக்குப் போகாமல் கோவிலில் பிரதிஷ்டையாகி இருக்கிறது என்பதில் எனக்கு ஒருவாறு ஸமாதானம் ஏற்பட்டது. பிறகு பூஜையை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணமே போய்விட்டது.

ஸ்ரீமத் ஆசார்யாருக்கும் அவர்களுடைய குருநாதருக்கும் வியக்தியில்தான் பேதமே தவிர, ஸ்வரூபத்தில் இல்லை. இந்தத் தத்துவத்தை முந்தின ஆசார்யார்களிடமும் உணர்ந்தோமேயானால் எல்லாரும் ஸ்வரூபத்தில் ஸ்ரீ சங்கரபகவத்பாதரே என்பது விளங்கும். அதற்குமேலும் கவனித்தால் எல்லாருமே ஸ்வரூபத்தில் ஆதி குருவான பகவானிடத்திலிருந்து வேறுபட்டவர்கள் இல்லையென்பது வியக்தமாகும். நாம் லௌகிக திருஷ்டியாக வியக்திக்குப் பிராதான்யம் கொடுத்துக் கொண்டு ஸ்வரூபத்திலுள்ள ஐக்கியத்தை மறந்துவிடுகிறோம். ஞாபகப்படுத்தினாலும் நம்முடைய வாஸனுபலத்தினால் மனஸில் தத்துவம் நிலைநிற்கமாட்டேன் என்கிறது.

வேறு இடத்தில் கல்லிடைக்குறிச்சி ஸ்ரீ சங்கர சாஸ்திரிகளின் மனஸில் குருநாதரின் அநுக்ரஹத்தினால் உதித்த வாக்கியத்திற்கு ஸ்ரீமத் ஆசார்யார் வியாக்கியானம் செய்து கொடுத்தார்கள் என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். என் நண்பர் இன்னொருவர், குருநாதரின் காலடிக் கும்பாபிஷேக யாத்திரையின்போது வெகுவாகக் கைங்கர்யம் செய்து அவரிடம் விசேஷமாக ஈடுபட்டவர். குருநாதர் ஸித்தியடைந்து சுமார் 15 வருஷங்களுக்குப் பின், ஸ்ரீமத் ஆசார்யார் திருநெல்வேலிப் பக்கம் ஸஞ்சாரம் செய்து கொண்டிருக்கையில் ஓர் இரவில் ஸ்வப்னத்தில் குருநாதர் (ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள்) தரிசனம் கொடுத்து ஏதோ மந்திரத்தையும் உபதேசித்ததாக அநுபவம் ஏற்பட்டதைக் கண்டு இவர் மிகவும் சந்தோஷித்தார். ஆனால் காலையில் எழுந்திருந்தவுடன் ஸ்வப்னம் கண்டது மாத்திரம் ஞாபகம் இருக்கிறதே தவிர, மந்திரம் ஞாபகத்திற்கு வரவே இல்லை. மிகவும் வருத்தத்துடன் இவ்விஷயத்தை என்னிடம் தெரிவித்தார். ஸ்ரீமத் ஆசார்யார் அந்தச்சமயம் பக்கத்துக் கிராமத்தில் இருந்தபடியால் அவர்களிடம் இதை அவசியம் தெரிவிக்க வேண்டுமென்று நான் சொன்னதின் பேரில் அவர் அப்படியே போய் அவர்களிடம் தனக்கு ஏற்பட்ட அநுபவத்தையும் மறதியையும் சொன்னதும், மறுநாள் காலையில் வரும்படி ஸ்ரீமத் ஆசார்யார் ஆக்ஞாபித்தார்கள். மறுநாள் காலையில் இவரை உள்ளே வரவழைத்து இவருக்கு மந்திரோபதேசம் செய்து வைத்தார்கள். மந்திரோபதேசம் செய்யும்போது இரவில் ஸ்வப்னத்தில் உபதேசிக்கப்பட்ட மந்திரம்தான் என்பதை உணர்ந்து வெகு ஆச்சரியப்பட்டு இரு ஆசார்யார்களுக்கும் உள்ள

ஸ்வரூப ஐக்கியத்தை ஒருவாறு அறிந்து கொண்டார். முன் ஆசார்யார் காலத்தில் நடந்த ஸம்பவங்களைத் தானே கூடஇருந்து பார்த்தாற்போல் இவர்கள் பிரஸ்தாபிக்கிறதைக் கேட்டால் ஆச்சரியமாகவே இருக்கும்.

நான் ஒரு நாள் இரவில் சிருங்ககிரிக்குப் போனதாக ஸ்வப்னம் கண்டேன். அங்கே நான் போய்ச் சேர்ந்த ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் பூஜை செய்து தீபாராதனை செய்து கொண்டிருந்தார்கள். ஒரு பெரிய உயரமான மேடையில் பூஜை. முன்பக்கம் விஸ்தாரமாகப் போட்டிருந்த இடத்தில் ஏராளமாகப் பக்தர்களின் கூட்டம். அந்தக் கூட்டத்தைத் தாண்டிக்கொண்டு போக இஷ்டப்படாமல் பந்தலுக்கு வெளியில் இருந்தே தீபாராதனையைத் தரிசனம் செய்துகொண்டு நின்றேன். தீபாராதனை முடிந்ததும் வழக்கம்போல் திரை போடப்பட்டது. திரை எடுப்பதற்குள் மெதுவாக முன்னால் போய்விடலாம் என்று நினைத்து ஓர் ஓரமாக ஜனங்களை விலக்கிக் கொண்டு மேடைக்குச் சமீபத்திலேயே போய் நின்று கொண்டேன். அப்பொழுது திரைக்குள்ளிருந்து ஸ்தோத்திரங்கள் சொல்கிற சப்தம் கேட்டது. உடனே ஸ்தோத்திரத்துடன் தாள சப்தமும் நர்த்தன சப்தமும் கேட்டது. நன்கு உற்றுக் கவனிக்கையில் ஸ்ரீமத் ஆசார்யாரின் குரலாகத் தெரியவில்லை. இன்னும் சற்றுக் கவனித்துக் கேட்டதில் முந்தின குருநாதாளுடைய குரலாகத் தோன்றிற்று. தீபாராதனை செய்தது ஸ்ரீமத் ஆசார்யார் என்பது நிச்சயமாயிருக்க, இப்பொழுது திரைக்குள் நர்த்தனம் செய்துகொண்டு ஸ்தோத்திரம் செய்வது முந்தின ஆசார்யாராகத் தெரிகிறதே என்ற ஆச்சர்யம் ஏற்பட்டது. இதற்குத் தெளிவு ஏற்படுவதற்குள் திரையை எடுத்துவிட்டார்கள். அங்கே பார்க்கையில் முந்தின ஆசார்யாரே நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் பக்தர்கள் பக்கம் திரும்பி எல்லாரையும் மந்தஹாஸத்துடன் கடாக்ஷித்துவிட்டு, என்னையும் தனித்துப் புன்சிரிப்பால் அனுக்ரஹித்துவிட்டு, படியிறங்கி ஜாகைக்குள் மறைந்து விட்டார்கள். ஆனால் அவர் முகத்தில் ஏராளமாக ரோமம் வளர்ந்திருந்தது. அவ்விதம் அதற்குமுன் அவர்களை நான் பார்த்ததே இல்லாததனால் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆசார்யார் மறைந்த பிறகு பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஸ்ரீமடம் வித்வான் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளிடம் ''ஆசார்யார் வெகு நாட்களாக வபனம் (சவரம்) செய்து கொள்ளவில்லை போல் தெரிகிறதே? என்ன காரணம்?'' என்று கேட்டேன். ''நீ அவர்களைத் தரிசித்து எத்தனை வருஷங்கள்

ஆகியிருக்கும்?'' என்ருர். ''இருபது வருஷங்களுக்கு மேல் இருக்கும்'' என்றேன். ''இவ்வளவு காலத்திற்கு இவ்வளவு ரோமம் வளர்ந்திருக்காதா?'' என்ருர். ஸ்வப்னதசையில் இந்த சமாதானம் திருப்தியாகத் தோன்றிற்று. ஆனுல் வேறு சந்தேஹம் தோன்றிற்று. ''இந்த இருபது வருஷ காலத்தில் நான் மூன்று நான்கு தடவை சிருங்கேரிக்கு வந்திருக்கிறேனே? இவர்களேப் பார்க்கவில்லேயே?'' என்று கேட்டேன். ''அவர்கள் இங்கேதான் இருக்கிருர்கள். ஆனுல் அவர்கள் இருக்கிறதாக நீ தெரிந்து கொள்ளாததனுல் அவர்களே நீ பார்க்கவில்லே'' என்று சொன்னுர். ஸ்வப்னமும் கலேந்தது.

இந்தச் சம்பாஷணே மனஸில் உறுத்திக்கொண்டே இருந்தது. நான் சிருங்ககிரிக்குப் போன ஸமயங்களில் எல்லாம், ஆசார்யாள் ஸித்தியாகிவிட்டபடியால் இனி, அவர்களேப் பார்க்க முடியாதென்று நினேத்தே இருந்திருக்கிறேன் என்பது வாஸ்தவம். இப்பொழுதும் அவர்களுடைய ஸாந்நித்யம் அங்கே இருப்பதான பாவனே வரவேயில்லே. இந்தப் பாவனே அவசியம் ஏற்பட வேண்டும் என்பதற்காக பகவான் ஸ்வப்ன அநுபவத்தைக் கொடுத்திருக்கிருர் என்ற எண்ணம் தோன்றிற்று. கூடியசீக்கிரம் சிருங்ககிரிக்குப் போய் அவர்களுடைய ஸாந்நித்யத்தை உணர வேண்டுமென்ற வேகம் ஏற்பட்டது. இதையே முக்கியமாகக் கருதி 1932 ல் சிருங்ககிரிக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே ஸ்ரீமத் ஆசார்யார் ''எங்கே எதிர்பாராமல் புறப்பட்டு வந்திருக்கிருய்?'' என்று கேட்டார்கள். என் ஸ்வப்ன விஷயத்தைச் சொல்லிவிட்டு ''இங்கே முன்னுல் வந்தபோதெல்லாம் குருநாதர் இங்கே இல்லேயென்ற மனேபாவத்துடனேயே திரும்பிப்போனது அபசாரம் என்று தெரிந்துகொண்டேன். அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்வதற்காகவே முக்கியமாக வந்தேன்'' என்றேன். ''அநுபவம் நன்ருக இருக்கிறது'' என்று மாத்திரம் ஸ்ரீமத் ஆசார்யார் சொல்லி நிறுத்திவிட்டார்கள்.

நான் என் உத்தேசத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பிரதி தினமும் காலேயிலும் மாலேயிலும் சிறிதுநேரம் குருநாதருடைய ஸமாதி ஸ்தலத்தில் உட்கார்ந்து கண்ணே மூடிக்கொண்டு கூடியமட்டும் ஏகாக்கிரமாய்த் தியானம் செய்து பார்த்தேன். கண்ணேத் திறந்துகொண்டு அங்குள்ள அமிருதசிலா மூர்த்தியில் ஜீவகளே இருப்பதாகப் பாவித்துப் பார்த்தேன். ஸமாதிலிங்கமே அவர்கள்தான் என்று எண்ணிப் பார்த்தேன். அதன் அடியில் ஜீவன்முக்தராக அவர்கள் வீற்றிருப்பதாக நினேத்துப் பார்த்தேன். ஒருவித பாவனேயும் நிலேக்கவில்லே.

அமிருதசிலாமூர்த்தி அமிருதசிலையாகவேதான் தென்பட்டது. மஹாலிங்கம் ஜடமாகத்தான் கண்ணில் பட்டது. எவ்விடத்திலும் குருநாதரின் ஸாந்நித்யம் உணர்ச்சிக்கு விஷயமாகவே இல்லை. மூன்று நான்கு நாட்கள் பிரயத்தனம் செய்தும் பிரயோஜனப்படாததனால் மனஸில் வெகு வருத்தம் ஏற்பட்டது. அந்நிலையில் ''ஸ்வப்னத்தில் முதலில் ஸ்ரீமத் ஆசார்யார் தோன்றிப் பின்பு திரை எடுத்தவுடன் முந்தின ஆசார்யாராகத் தரிசனம் கொடுத்திருப்பதனால் முந்தின ஆசார்யாரைத் தேட வேண்டிய இடம் இப்பொழுது உள்ள ஆசார்யார்தான்'' என்று பளிச்சென்று தோன்றிற்று.

அது முதல் ஸமாதி ஸ்தலத்தில் தியானம் செய்வதை விட்டுவிட்டு, ஸ்ரீமத் ஆசார்யாருடைய முகாரவிந்தத்தையே அநுபவிக்க ஆரம்பித்தேன். கவனிக்கக் கவனிக்க இவர்களிடம் முந்தின ஆசார்யாருடைய முகஜாடை, இங்கிதச் சேஷ்டைகள், பேசும் விதம், முதலானவைகள் அப்படி அப்படியே எனக்குத் தோன்ற ஆரம்பித்தன. அதுமுதல் இவர்களுக்கும் முந்தின ஆசார்யாருக்கும் ஸ்வரூபத்தில் வித்யாஸம் இல்லை என்பதையும் அவர்களைப் பார்க்க நினைத்தால் இவர்களிடத்தில்தான் பார்க்க வேண்டும் என்பதையும் அவர்கள் இவர்களிடத்திலேயே ஸாந்நித்யம் கொண்டு விளங்கிவருகிறார்கள் என்பதையும் நன்கு உணர்ந்து திருப்தியடைந்தேன். ஆனால் இந்தத் தீர்மானம் சரியா இல்லையா என்று யாரையும் கேட்பதற்கில்லை. ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ''பூர்வாசாரியாளும் தாங்களும் ஸ்வரூபத்தில் ஒன்றுதானா?'' என்று கேட்பது உசிதமாகுமா? அவர்கள்தான் ''ஆமாம்'' என்று சொல்வார்களா? இந்த விஷயம் வேறு யாரிடமும் கேட்கக்கூடியதும் அல்ல. மேலும் எனக்குச் சமாதானம் ஆகிவிட்டபடியால் அதற்குமேல் ஸந்தேஹம் ஏற்படவில்லை.

பிறகு சில நாட்கள் சிருங்ககிரியில் இந்தத் தீர்மானத்துடன் தங்கியிருந்துவிட்டு ஒரு நாள் ஸாயங்காலம் ஸ்ரீமத் ஆசார்யாரைத் தரிசிக்கச் சென்றேன்.

கிருஷ்ணன் : அனுமதி கொடுத்தால் நாளைக் காலையில் ஊருக்குப் போகலாமென்று நினைக்கிறேன்.

ஆசார்யார் : அப்படியே செய்கிறது. காலையில் எப்பொழுது புறப்பட வேண்டும்?

கிருஷ்ணன் : ஒன்பது மணி சுமாருக்கு.

ஆசார்யார் : மந்திராக்ஷதை இப்பொழுது வாங்கிக் கொள்கிருயா? காலேயில் வாங்கிக் கொள்கிருயா?

கிருஷ்ணன் : காலேயில் அவகாசம் இருப்பதால் அப்பொழுதே வந்து தரிசனம் செய்துவிட்டு வாங்கிக் கொள்கிறேன்.

ஆசார்யார் : அப்படியே செய்யலாம். பூஜை செய்கிற நரஹரி பட்டர் நாளேக் காலே பூஜைக்கு வரவில்லே. அதனுல் ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் பூஜையையும் நானே செய்ய வேண்டியிருக்கிறது. அதனுல் என்ன? பாலஸ்வாமிகள் (ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்) உனக்கு மந்திராக்ஷதை கொடுத்துவிடுவார்கள்.

கிருஷ்ணன் : அப்படியானுல், இப்பொழுதே மந்திராக்ஷதை வாங்கிக்கொண்டு விடுகிறேன்.

நான் இவ்விதம் சொன்னதும் ஸ்ரீமத் ஆசார்யார் சிரித்துவிட்டார்கள். நான் எவ்வளவோ சிரமப்பட்டு முந்தின ஆசார்யாளுக்கும் இவர்களுக்கும் ஸ்வரூபத்தில் பேதமில்லே என்று தீர்மானமாய்க் கண்டுபிடித்துவிட்டதாக நினேத்துக் கொண்டிருக்கையில், அதே நியாயம் இவர்களுக்கும் பால ஸ்வாமிகளுக்கும் உண்டல்லவா என்பதை உணராமல் இவ்விதம் சொல்லி விட்டோமே என்ற லஜ்ஜை (வெட்கம்) என்னே மிகவும் பாதித்தது. ஒன்றும் சொல்லவொண்ணுமல் தலேயைக் குனிந்துகொண்டு நின்றேன். ஸ்ரீமத் ஆசார்யார் மிகக் கருணேயுடன், ''பாதகமில்லே. நாளேக் காலேயில் மந்திராக்ஷதை நானே கொடுக்கிறேன்'' என்ருர்கள், மறுநாள் காலேயில் ஸ்ரீமத் ஆசார்யாரும் பால ஸ்வாமிகளும் இரு ஆஸனங்களிலமர்ந்து சேர்ந்து காட்சியளித்தார்கள். எனக்கு விடை கொடுக்கும்போது ஸ்ரீமத் ஆசார்யார் மந்திராக்ஷதைக் கிண்ணத்தைப் பால ஸ்வாமிகளிடம் நகர்த்தி, ''இவர் ஊருக்குப் போகிருர். மந்திராக்ஷதை கொடுங்கள்'' என்று சொன்ஞர்கள். அப்படியே அவர்களிடம் மந்திராக்ஷதை பெற்று இருவரிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு ஊருக்குத் திரும்பினேன். இந்தச் சிருங்ககிரி

யாத்திரையில் நான் அறிந்துகொண்ட தத்துவத்தை பூராவும் அநுஷ்டிக்க முடியவில்லையென்றாலும் அதை ஒருநாளும் மறக்கவில்லை என்பதை உறுதியாகச் சொல்லலாம். வியக்தி ஞானம் இருந்துகொண்டிருக்கும் வரையில் அபேத பாவனை வருவது சிரமம்தான் என்று தெரிகிறது. ஆனால் அபேத (வேற்றுமையற்ற) பாவனை நன்கு ஏற்பட்டு அபேத ஸாக்ஷாத்காரம் வந்தாகவேண்டியது அவசியம் என்றும் தெரிகிறது. அதற்கு ஆசார்ய வியக்திகளில் தோன்றும் ஸர்வ வியாபகமான பகவத் தத்துவம்தான் நம்மை அநுக்ரஹிக்க வேண்டும். அவ்வநுக்ரஹத்திற்குப் பாத்திரமாவதற்கு நாமும் தீவிரமான பிரயத்தனம் செய்தே தீரவேண்டும்.

4. வீண் சர்ச்சை வேண்டாம்

ஒரு பக்தர் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசிக்க வந்தபோது ஸ்ரீ ராமானுஜாசார்யாரைப்பற்றி பிரஸ்தாபித்தார்.

பக்தர் : சில உபநிஷத்து வாக்கியங்களுக்கு ஸ்ரீ ராமானுஜாசார்யார் அர்த்தம் சொல்லுகையில் பிரஹ்மம் நிர்க்குணம் என்ருல் ''ஹேயகுணரஹிதர்'' (துஷ்ட குணங்கள் இல்லாதவர்) என்றும், அதனுலேயே ''அனந்த கல்யாணகுண விசிஷ்டர் (எல்லா நல்ல குணங்களும் பொருந்தியவர்)'' என்றும், அர்த்தம் சொல்கிருரே அது பொருந்துமா?

ஆசார்யார் : நல்லது, கெட்டது எல்லாம் நமக்கே தவிர பிரஹ்மத்தில் கிடையாது. அவர் எவ்விதக் குணமும் அற்றவர் என்றுதான் ஸித்தாந்தம். எவ்விதக் கெட்ட குணங்களும் கிடையாது என்று மாத்திரம் இருக்குமேயானுல், 'நிர்த்தோஷர்' (தோஷமற்றவர்) என்ருலே போதும். 'நிர்க்குணர்' என்று சொல்ல அவசியமே இல்லை.

பக்தர் : ஸுவாஸனை, துர்வாஸனை என்பதுபோல் ஸுகுணம், துர்க்குணம் என்று பிரயோகம் இருப்பதால் குணசப்தம் இரண்டிலும் அன்வயிக்கக் கூடியதுதானே?

ஆசார்யார் : வாஸ்தவம். அப்படியிருக்க, நிர்க்குணம் என்ருல் நல்ல குணமோ, கெட்ட குணமோ, இரண்டும் கிடையாது என்றுதானே அர்த்தமாகும்?

பக்தர் : நான் அப்படிச் சொல்லவில்லை. குண சப்தத்தில் கெட்ட குணம் உள்ளடங்கியிருப்பதால் நிர்க்குணர் என்ருல் கெட்டகுணம் அற்றவர் என்று அர்த்தம் செய்வதில் என்ன பிசகு?

ஆசார்யார் : பிசகு ஒன்றும் இல்லை. பொதுவாகக் குணசப்தம் இருக்கும்போது அது கெட்ட குணத்தையே குறிக்கிறதென்று கொள்ள என்ன பிரமாணம்?

பக்தர் : நாற்றம் என்ற பொதுச் சப்தத்தை ஸாதாரணமாகத் துர்நாற்றம் என்ற அர்த்தத்திலேயே பிரயோகம் செய்வதில்லையா?

ஆசார்யார் : வாஸ்தவம். அதேமாதிரி எங்கேயாவது குணம் என்ற சப்தத்தைக் கெட்டகுணம் என்ற அர்த்தத்தில் பிரயோகம் செய்திருக்கிறதா? ஸ்ரீமத் ராமாயணத்தில் गुणवान् कश्च वीर्यवान् (குணவானுகவும், வீர்யவானுகவும் இருப்பது யார்?) என்று வால்மீகி நாரதரிடம் கேட்கும்போது "கெட்ட குணம் உள்ளவன் யார்?" என்ரு கேட்டார்? பிரயோகத்தில் குணம் என்ருல் ஸாமான்யமாக நல்ல குணம் என்றுதான் அர்த்தமாகும்.

பக்தர் : பிரயோகத்தில் இல்லாமல் போனுலும் குண சப்தம் பொதுவாக இருப்பதால் கெட்ட குணத்தையும் குறிக்கும் அல்லவா?

ஆசார்யார் : நல்ல குணத்தையும் குறிக்கும். தவிரவும், பிரயோகத்தை அலக்ஷியம் செய்வது எவ்விதத்திலும் நியாயம் ஆகாது. நாம் இங்கே இருக்கும்போது ஒரு பெரியவர் வருகிருர் என்று வைத்துக் கொள்வோம். அவர் வந்தவுடன் "இவர் அவித்வான்" என்று நான் உங்களிடம் சொன்னேனேயானுல் நீங்கள் திடுக்கிட்டு அர்த்தமாகாமல் திகைப்பீர்கள். அப்பொழுது நான், "இவரை நான் அவித்வான் என்று சொன்னது ஹேயவித்யாரஹிதர் (கெட்ட வித்யை இல்லாதவர்) என்ற அர்த்தத்தில் சொன்னேன். நான் சொன்னதன் தாத்பர்யம் இவர் அனந்த கல்யாண வித்யாவான் (எல்லா நல்ல வித்யைகளையும் கற்றறிந்தவர்) என்பதுதான்" என்று வியாக்யானம் செய்து கொடுத்தாலும் உங்களுக்கு ஸமாதானமாகுமா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

பக்தர் : க்ஷீராப்தியில் பள்ளிகொண்டோ, வைகுண்டத்தில் ரத்ன ஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தோ இருக்கிற நாராயணமூர்த்தி பரதத்துவம் என்று சொல்கிறார்களே. அதை அத்வைதிகள் ஒப்புக் கொள்கிறார்களா?

ஆசார்யார் : ஒப்புக்கொள்வதில் என்ன ஆக்ஷேபம்? ஜகத்தில் உள்ள எல்லாப் பதார்த்தங்களிலும் பரப்ரஹ்மத்தின் வியாப்தி இருக்கிறது என்று சொல்கிற நாம் அந்தத் திவ்ய மூர்த்திகள் பரதத்துவம் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

பக்தர் : அப்படியானால் அவர்களுக்கும் நமக்கும் என்ன வித்யாஸம்?

ஆசார்யார் : வைகுண்டத்தில் விளங்கும் திவ்யமூர்த்திகளே பரதத்துவம் என்று அவர்கள் சொல்கிறார்கள். நாம் அம்மூர்த்திகள் பரதத்துவத்தின் உத்தம விபூதிகள் என்று சொல்லுகிறோம்.

பக்தர் : அம்மூர்த்திகளையே பரதத்துவம் என்று ஒப்புக் கொண்டால் நமக்கு என்ன பாதகம்? ஆகாசத்தில் ஸூர்யன் இருந்தாலும் எப்படித் தன்னுடைய பிரகாசத்தினாலும் உஷ்ணத்தினாலும் ஜகத்தைப் பூராவும் வியாபிக்கிறாரோ, அதேமாதிரி பகவானும் வைகுண்டத்தில் இருந்துகொண்டு தம்முடைய பிரபையினாலும் சக்தியினாலும் ஜகத்பூராவும் வியாபிக்கிறார் என்று வைத்துக்கொள்ளக் கூடாதா?

ஆசார்யார் : வைத்துக்கொள்ளலாம். ஆனால் ஜகத்தை வியாபிக்கிறது சக்தியாகுமே தவிர பகவான் ஆகாது. பகவானையே ஸர்வ வியாபகமாகவும், பிரஹ்மம் (பெரிது) என்றும் வேதம் சொல்லியிருக்க, அவருடைய வியாபகத் தன்மையை அவருடைய சக்திக்குக் கொடுத்து அவரை வைகுண்ட கைலாஸாதிகளில் உள்ள பரிச்சின்ன மூர்த்தியாகச் சிறியதாகச் செய்வது நியாயமாகுமா?

பக்தர் : பகவானுக்கு மூர்த்தி கல்பிப்பதே பிசகு என்று தாத்பர்யம்?

ஆசார்யார் : அப்படியல்ல. உபாஸகனுக்குத் தியான உபாஸனுதிகள் செய்வதற்கு மூர்த்தி அவசியம் வேண்டும். தவிரவும் உபாஸனு பலத்திஞல் லோகாந்தரம் போய் ஸுகம் அநுபவிக்க வேண்டியதற்காக அங்கே அவனுடைய உபாஸனு மூர்த்தி இருந்து அநுக்ரஹம் செய்ய வேண்டும். ஆகையால் எவ்விதத்திலும் மூர்த்தி அவசியமே ஆகும்.

பக்தர் : வைகுண்டம், கைலாசம் வரை போகிற உபாஸகன் ஸகலவிதமான ராகத்வேஷாதிகளையும் ஜெயித்தே இருப்பான். அவனுக்கு ஆசையற்றிருக்கும். ஆதலால் அவன் அந்த உத்தம லோகங்கள் சென்ருல் அங்குள்ள வைஷயிக (விஷய) ஸுகங்களில் ஈடுபடப்போவதில்லை. ஆனந்தமாக அங்குள்ள திவ்ய மூர்த்தியைத் தரிசித்துக்கொண்டு சாசுவதமாக இருந்துவிடுவதைத் தவிர வேறு யாதொன்றையும் அவன் அபேக்ஷிக்கமாட்டான். அதையே மோக்ஷ நிலையென்று வைத்துக் கொள்வதில் என்ன பிசகு? இதற்குமேல் கைவல்யம் என்று ஒன்று உண்டு என்று அத்வைதிகள் சொல்வதற்குக் காரணம் என்ன?

ஆசார்யார் : நீங்கள் சொல்வது மிகவும் நியாயம். ஆனுல் வைகுண்டாதி மூர்த்திகளைச் சாசுவதமாய் ஆனந்தமாக அநுபவித்துக் கொண்டிருப்பதுதான் ஸாத்தியமும் இல்லை, உசிதமும் இல்லை. உபாஸனை என்பது மானஸிக கர்மாவே ஆனதிஞல் அதஞல் ஏற்படக்கூடிய வைகுண்டாதி வாஸமும் புண்ணிய க்ஷயமானவுடன் முடிந்துவிடும். இங்கே திரும்பி வந்துதான் தீரவேண்டும்.

பக்தர் : உசிதம் இல்லையென்பது எப்படி?

ஆசார்யார் : வைகுண்டாதி மூர்த்திகளை உபாஸகன் தரிசனம் செய்துகொண்டு ஆனந்தமாக இருக்கிருன் என்ருல், உபாஸகன் போக்தா (அநுபவிப்பவன்) அம்மூர்த்தி போக்யம் (அநுபவிக்கப்படுவது) என்று ஆகிவிடும். போக்தா என்பது எப்பொழுதும் ஆத்மா, சேதனன்;

போக்யம் என்பது எப்பொழுதும் அநாத்மா, அசேதனம். ஆகையால் அந்தத் திவ்யமூர்த்தியை இவன் பார்த்து ஆனந்தித்துக் கொண்டு இருக்கிருன் என்ருல் அம்மூர்த்தியைப் போக்யமாகச் செய்து அநாத்மாவாகவும் ஜடமாகவும் செய்து விடுகிருன் என்றேயாகும். இது பெரிய அபசாரம். இவ்வபசாரத்திற்கு அத்வைதிகள் இடம் கொடுக்க மாட்டார்கள். போக்தா போக்யம், என்ற பேதமே அற்று ஒன்ருக நிற்பதான கைவல்ய பதவியைத் தான் அவர்கள் மோக்ஷமென்று ஒப்புக் கொள்வார்கள். தவிரவும் மூர்த்தி என்ருலே, அளவிற்கு உட்பட்டதுதான். அதுதான் பரதத்துவம் என்று சொல்வது உசிதமாகாது. உதாஹரணமாக மஹாவிஷ்ணுவை எடுத்துக் கொள்வோம். அவருடைய மூர்த்தியில் வலதுகையில் சக்கரமும் இடதுகையில் சங்கமும் வைத்துக்கொண்டு உயர்த்திப் பிடித்திருப்பதாய்க் காண்கிறது. அவருடைய புஜத்திற்கும் சக்கரம் ஏந்திய கைக்கும் மத்தியில் இடைவெளி இருக்கும் அல்லவா? அந்த இடைவெளியில் பகவான் உண்டா? இல்லையென்ருல் பகவானுக்கு ஸர்வ வியாபகத்வம் போய்விடும். உண்டு என்ருல் அந்த அங்கங்களோடு கூடின மூர்த்தியே பகவான் என்பது போய்விடும்? பகவான் அந்த இடைவெளியை மாத்திரமா வியாபிக்கிருர்? அவர் இருக்கும் இடம், அவர் இருக்கும் வைகுண்டம், பதினுன்கு லோகங்கள் எல்லாவற்றையும் அல்லவா வியாபிக்கிருர்? அவரிடத்தில் அவர் இல்லாத இடைவெளி கல்பிக்காமல் மூர்த்தியை எப்படி கல்பிக்க முடியும்? ஆகையால் மூர்த்தியோடு கூடினதே பகவான் என்று நினைப்பதும் ஸர்வ வியாபகத்துவத்திற்கு ஹானியை உண்டுபண்ணுவதால் அபசாரமேயாகும். ஆகையால் வைகுண்டாதிகளிலுள்ள திவ்ய மூர்த்திகளுக்கும் ஜகத்தில் உள்ள மற்றப் பதார்த்தங்களைப் போல் வியாவஹாரிக ஸத்தியத்வம் சொல்லலாமே தவிர பாரமார்த்திக ஸத்தியத்வம் சொல்வதற்கில்லை. வியாவஹாரிக ஸத்தியத்தில்

உள்ள தாரதம்யத்தை வைத்து அந்த லோகங்களே நித்யம் என்றும் ஸத்தியம் என்றும் சொல்கிறோம். நமக்குப் பேதபுத்தி இருக்கிறவரையில் இவை எல்லாம் ஸத்யமே. நாம் இப்பொழுது இருக்கும் நிலைமையில் சாஸ்திரத்தில் சொல்லியபடி கர்மாவிலேயும் உபாஸனையிலேயும் ஈடுபட வேண்டியவர்களே தவிர, உத்தம ஞான நிலையில் பரதத்துவம் எப்படியிருக்கும் என்று விசாரிக்கவே அனர்ஹர்களாக (அருகதையற்றவர்களாக) இருக்கும்போது அதைப்பற்றி வாதம் செய்வது வீண் என்பதில் ஸந்தேஹமில்லை. அந்நிலையை அடைந்த பிறகு அதுவாகவே தத்துவம் விளங்கும். அப்பொழுதும் வாதத்திற்கு அவகாசமில்லை.

ஸ்ரீமத் ஆசார்யார் சாஸ்திரங்களில் வியவஹாரம் செய்வதில் மிகவும் தேர்ந்தவராயிருந்தும் பிரயோஜனம் இல்லாத வியவகாரங்களுக்குக் கொஞ்சமேனும் இடம் கொடுக்க மாட்டார்கள். தம்மிடம் வந்து சாஸ்திர சம்பந்தமாக சிஷ்யர்கள் ஏதேனும் ஸந்தேஹம் கேட்டாலும், அதைக்கேட்டு பதில் தெரிந்துகொள்வதில் அந்தச் சிஷ்யருக்கு ஏதேனும் பிரயோஜனம் இல்லாத விஷயத்தில் பதிலே சொல்ல மாட்டார்கள். உதாரணமாக, என் ராமாயண புஸ்தகத்தை ஒரு நண்பர் வாங்கிக்கொண்டு போய் நாலைந்து நாட்கள் வைத்துக் கொண்டிருந்து திரும்பக் கொண்டுவந்து கொடுத்தார். அதை பின்னால் நான் பிரித்துப் பார்த்தபோது அதில் ஒரு காகிதத்தில் ராமாயண பாராயணக் கிரமம் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கிரமத்திற்கும் நான் பாராயணம் செய்துவரும் கிரமத்திற்கும் பல அம்சங்களில் வித்தியாஸம் இருந்தது. பின்னால் ஒரு ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசிக்க ஏற்பட்டது. அப்பொழுது,

கிருஷ்ணன் : ஸ்ரீமத் ராமாயண பாராயணத்தில் வெவ்வேறு கிரமங்கள் உண்டா?

ஆசார்யார் : ஏன் கேட்கிறீர்?

கிருஷ்ணன் : ஒரு நண்பர் எழுதிவைத்திருந்த குறிப்பைப் பார்த்தேன். அதில் கண்ட கிரமத்திற்கும் நான் பாராயணம் செய்யும் கிரமத்திற்கும் வித்தியாஸம் இருந்தது. அதனால் கேட்டேன்.

ஆசார்யார் : அக்குறிப்பைப் பார்த்ததும் நீங்கள் செய்யும் பாராயணக் கிரமம் சரிதானு என்று ஸந்தேஹம் வந்து விட்டதா?

கிருஷ்ணன் : இல்லை.

ஆசார்யார் : உங்களுக்கு எப்படி உபதேசமாகியிருக்கிறதோ அப்படியேதான் நீங்கள் பாராயணம் செய்து வருகிறீர் என்பதில் ஸந்தேஹமில்லையே.

கிருஷ்ணன் : இல்லை.

ஆசார்யார் : அப்படியிருக்க, வேறு கிரமங்கள் உண்டா என்று கேட்பதில் என்ன உத்தேசம்?

கிருஷ்ணன் : தெரிந்து கொள்ளலாமென்றுதான் கேட்டேன்.

ஆசார்யார் : தெரிந்து என்ன செய்யப் போகிறீர்? நீங்கள் செய்துவரும் பாராயணக் கிரமத்தை மாற்றிக் கொள்ள உத்தேசமா?

கிருஷ்ணன் : இல்லை.

ஆசார்யார் : இல்லையானுல் இந்தக் கேள்வி அநாவசியம்.

இன்னொரு நாள் நவீன ஆராய்ச்சியில் ருசியுள்ள ஒரு சிஷ்யர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து பேசிக் கொண்டிருந்தார்.

சிஷ்யர் : ஸ்ரீ வித்யாரண்யருக்கு ஸ்ரீ வித்யாதீர்த்தர் குரு என்பது பிரஸித்தமான விஷயமே. அப்படியிருக்கப் பஞ்சதசப் பிரகரண ஆரம்பத்தில் ஸ்ரீ சங்கராநந்தருக்கு நமஸ்காரம் செய்திருக்கிருரே? ஸ்ரீ வித்யாதீர்த்தரும் ஸ்ரீ சங்கராநந்தரும் ஒருவரேதானு? அல்லது வெவ்வேரு? வெவ்வேருனல் ஸ்ரீ சங்கராநந்தர் யார்?

ஆசார்யார் : இது தெரிந்தால்தான் பஞ்சதசி அர்த்தமாகிறதோ? அது எப்படியிருந்தால் என்ன? அது தெரிந்து நமக்கு என்ன பிரயோஜனம்? தெரியாததனுல் என்ன நஷ்டம்?

இன்னொரு சிஷ்யர் தர்மவிஷயமாக ஸந்தேஹம் கேட்டார்.

சிஷ்யர் : ஒருவருக்கு மூத்த ஸம்ஸாரத்தில் புத்திரன் இருக்கிறான். இளைய ஸம்ஸாரத்திற்குப் புத்திரன் இல்லை. ஆனால் புத்திரியும், அவளுக்குப் புத்திரனும் இருக்கிறார்கள். இப்பொழுது இளைய ஸம்ஸாரம் காலமாகிவிட்டாள். அவளுக்கு மூத்தாள் பையன் புத்திரன் என்ற முறையில் கர்மம் செய்ய வேண்டுமா? அல்லது அவளுக்கே நேர் ஸந்தானமாயிருக்கிற தௌஹித்திரன் கர்மம் செய்ய வேண்டுமா? எது சாஸ்திரீயம்?

ஆசார்யார் : நீங்கள் ஸபத்னீ புத்திரனா? அல்லது தௌஹித்திரனா?

சிஷ்யர் : நான் இரண்டும் இல்லை. ஊரில் நடந்த ஒரு ஸம்பவத்தைப் பற்றிக் கேட்டேன்.

ஆசார்யார் : அவர்களில் யாராவது வந்து கேட்கட்டும். அப்பொழுது பதில் சொல்லலாம். நீங்களோ இரண்டிலும் சேராதவர். கேட்டு என்ன செய்யப் போகிறீர்கள்?

சிஷ்யர் : ஊருக்குப் போனால் அவர்களிடம் சொல்லலாம் அல்லவா?

ஆசார்யார் : அவர்கள் உங்களைக் கேட்டுக்கொண்டு வரச் சொன்னார்களா? நீங்கள் கேட்டுக் கொண்டுவந்து சொன்ன பிறகு அதன்படி நடப்பதாகச் சொன்னார்களா?

சிஷ்யர் : இல்லை, நானாகத்தான் கேட்டேன்.

ஆசார்யார் : இது உங்களுக்கு அவசியமில்லாத விஷயம்.

ஸ்ரீமத் ஆசார்யார் அநாவசியமாகப் பேசுவதில்லை என்று அறிந்த சில சிஷ்யர்கள் அவரைப் பேசும்படி செய்ய வேண்டும் என்ற ஸங்கல்பத்துடன் வருவதும் உண்டு. அவர்களில் ஒருவர் இவ்வாறு கேட்டார்.

சிஷ்யர் : விவேகசூடாமணியில் ஒரு சுலோகத்திற்கு நன்கு அர்த்தம் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஆசார்யார் : எந்த சுலோகம்? வாசியுங்கள்.

சிஷ்யர் : (சுலோகத்தை வாசித்தார்.)

ஆசார்யார் : சுலோகத்தில் அர்த்தமாகாத அம்சம் எது?

சிஷ்யர் : சுலோகம் அர்த்தமாகிறது. ஆனாலும் தாங்கள் விவரித்துச் சொல்ல வேண்டுமென்று அபேக்ஷிக்கிறேன்.

ஆசார்யார் : பகவத்பாதாளுடைய திவ்யமான வாக்குடன் நம் வாக்கைக் கலக்க வேண்டாம். அப்படியே ரஸியுங்கள்.

ை•ஐ

இன்னொரு சிஷ்யர் : பிரஹ்ம ஸூத்திரத்தில் ஓர் அதிகரணத்தில் (அத்தியாயத்தில்) ஸந்தேஹம்.

ஆசார்யார் : மூல ஸூத்திரத்திலா? வியாக்யானத்திலா?

சிஷ்யர் : வியாக்யானத்தில்.

ஆசார்யார் : பாஷ்யத்திலா? நியாயரக்ஷாமணியிலா?

சிஷ்யர் : நியாயரக்ஷாமணியில்.

ஆசார்யார் : பூர்வபக்ஷத்திலா? ஸித்தாந்தத்திலா?

சிஷ்யர் : ஸித்தாந்தத்தில்.

ஆசார்யார் : எந்த ஹேதுவில் ஸந்தேஹம்?

சிஷ்யர் : புஸ்தகம் கொண்டு வரவில்லை.

ஆசார்யார் : அதிலுள்ள வாக்கியத்தைச் சொல்ல வேண்டாம். ஸந்தேஹத்தின் விஷயத்தை மாத்திரம் சொல்லுங்கள்.

சிஷ்யர் : புஸ்தகம் இல்லாமல் ஞாபகத்தில் சொல்வதற்கு இல்லை.

ஆசார்யார் : அப்படியா? புஸ்தகத்தை ஸாவகாசமாகப் பார்த்து ஸந்தேஹத்தைத் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். பிறகு ஸமாதானத்தைப் பற்றிக் கவனிக்கலாம்.

ை•ஐ

ஸூத்ரபாஷ்யாதிகளெல்லாம் நன்கு வாசித்திருந்த ஒரு லௌகிக சிஷ்யர் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசிக்க வந்து சேர்ந்தார்.

சிஷ்யர் : ஸூத்ர பாஷ்ய ஆரம்பத்தில் அத (பிறகு) என்ற சப்தத்திற்கு நம் பரமாசார்யாள் ஸாதன சதுஷ்டய ஸம்பத்தி (விவேகம், வைராக்கியம், சமாதி ஷட்கம், முமுக்ஷுத்வம் ஆக நான்கு) ஏற்பட்ட பிறகே வேதாந்த விசாரத்தில் அதிகாரம் என்று எழுதியிருக்கிருர்களே? அது அப்படித்தாஞ?

ஆசார்யார் : பாஷ்யத்தில் அப்படி எழுதியிருக்கிறது என்று சொல்லிவிட்டு அப்புறம், ''அது அப்படித்தாஞ?'' என்று கேட்பதன் தாத்பர்யம் என்ன?

சிஷ்யர் : எங்களைப்போல் லௌகிக விருத்தியில் இருப்பவர்கள் வேதாந்த விசாரத்திற்கு அதிகாரிகள் இல்லையென்ரு அபிப்பிராயம்?

ஆசார்யார் : அப்படித்தானே பாஷ்யத்தில் காணப்படுகிறது?

சிஷ்யர் : அப்படியாஞல் நாங்கள் வாசிப்பது பிசகுதாஞ?

ஆசார்யார் : இதில் எப்படி ஸந்தேஹம் ஏற்பட்டது?

சிஷ்யர் : நாங்கள் சிரமப்பட்டு வாசித்திருக்கிருேமே, அவ்வளவும் வீண ?

ஆசார்யார் : ஒன்றும் வீண்போகாது. புத்திபூர்வமாகச் செய்யப்பட்ட எல்லாக் காரியத்திற்கும் பலன் உண்டு.

சிஷ்யர் : பலன் உண்டென்ருல் எங்களை அனதிகாரி என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

ஆசார்யார் : ஏன்? அனதிகாரி செய்யும் கர்மாவுக்குப் பலன் கிடையாதென்று யார் சொன்ஞர்கள்?

சிஷ்யர் : என்ன பலன் ஏற்படும்?

ஆசார்யார் : தபஸ் செய்ய அதிகாரம் இல்லாத சம்புகன் தபஸ் செய்ததற்கு ஸ்ரீ ராமர் பலன் அளிக்கவில்லையா?

சிஷ்யர் : ஸ்ரீராமர் அவனை நிக்ரஹம் அல்லவா பண்ணிஞர்?

ஆசார்யார் : நிக்ரஹமே பலன்.

சிஷ்யர் : அதாவது, அதிகாரம் இல்லாதவன் கர்மாவைப் பண்ணினுல் அதற்குச் சிக்ஷிக்கப்படுவான் என்ரு அர்த்தம்? இது விபரீத பலன் அல்லவா ஆகும்?

ஆசார்யார் : எப்படியும் பலன்தானே?

சிஷ்யர் : அப்படியானுல் ஸாதன சதுஷ்டய ஸம்பத்தி இல்லாமல் வேதாந்த விசாரம் செய்தால் தோஷம் என்றே அல்லவா ஆகிறது?

ஆசார்யார் : அதில் என்ன ஸந்தேஹம்? அதனுல்தான் संन्यस्य श्रवणं कुर्यात् (ஸந்யாஸம் செய்து கொண்டு வேதாந்த சிரவணம் செய்ய வேண்டும்) என்று சாஸ்திரம் விதிக்கிறது.

சிஷ்யர் : அப்படியானுல் கிருஹஸ்தர்கள் வாசிக்கவே கூடாது என்ரு விதி?

ஆசார்யார் : அப்படியல்ல. பிரஹ்மஜிக்ஞாஸை (பிரஹ்மத்தை அறிய வேண்டுமென்ற இச்சை) உள்ளவனுக்கு ஸாதன சதுஷ்டயம் வேண்டுமென்பது நியமம். உங்களுக்குப பிரஹ்மஜிக்ஞாஸை இல்லை, கிரந்த ஜிக்ஞாஸையே இருக்கிறது. புஸ்தகத்தில் என்ன சொல்லியிருக்கிறதென்று பார்ப்போம் என்ற குதூஹலத்தைத் தவிர வேறு இல்லை. முக்கியமான பிரயோஜனமான பிரஹ்ம ஞானம் ஏற்படாது. புஸ்தகத்தில் உள்ள சில விஷயங்களை ஒருவாறு கிரஹிப்பதற்கு மாத்திரம் பிரயோஜனப்படலாம். வேதாந்தத்தில் அடிபடும் மாயை, ஆத்மா முதலிய பதங்கள் அடிக்கடி காதில் படுவதால் ஒருவித ஸம்ஸ்காரம் ஏற்படலாம். அது சரியான அதிகாரம் ஏற்பட்ட பிறகு காலாந்தரத்தில் கொஞ்சம் உதவலாம். அதற்காக வாசிக்கலாம்.

5. சாந்த நிலை

ஸ்ரீமத் ஆசார்யார் தம்மிடம் வரும் யாரையும் கண்டிப்பதும் கிடையாது. அதைர்யப்படுத்துவதும் கிடையாது. ஆனாலும் அவர்களுடைய கருணைகடாக்ஷத்தினால் திருந்தி ஸாத்விகர்களாகவும் ஆசாரபரர்களாகவும் மாறியிருக்கிறவர்கள் அநேகர்.

''ஸந்தியாவந்தனம் பண்ணுகிறேன்'' என்று ஒருவர் சொன்னால், ''அப்படியா? அதற்கு மேல் புருஷார்த்தஸாதனம் என்ன இருக்கிறது? கர்மா, பக்தி, ஞானம் எல்லாம் அதில் அடங்கியிருக்கிறது. காயத்ரீக்கு மேல் உத்தமமான மந்திரமே கிடையாது. இதைக் கைப்பிடித்திருக்கிறீர்களே ரொம்ப ஸந்தோஷம்'' என்பார்.

ஒருவர் அதிக ஆசார அநுஷ்டானங்கள் இல்லாமலிருந்தாலும் மிக சிரத்தையுடன் அதிதி ஸத்காரம் செய்துவருகிறார் என்று கேட்டவுடன், ''ரொம்ப ஸந்தோஷம். எதைத் தானம் செய்தாலும் வாங்குகிறவன் ''போதும்'' என்று சொல்லுவது கிடையாது. அன்னதானம் ஒன்றில் தான் அதிதியாகவே ''போதும்'' என்று சொல்வார். அதனாலேயே இதை உத்தம தானமாக சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. தவிரவும் பசிக்கு அன்னம் போடுவது சாப்பிடுகிறவருடைய தேஹத்தில் வைசுவாநர மூர்த்தியாக இருக்கிற பரமாத்மாவையே ஆராதனம் செய்வதாகும். அப்பேர்ப்பட்ட உத்தம கார்யத்தை செய்து வருகிறீர்களென்று கேட்க மிகவும் ஸந்தோஷம்'' என்றார்கள்.

இன்னொருவர் என்னுடன் பள்ளிக்கூடத்தில் வாசித்தவர். தம் கிருஹத்தில் ஸ்ரீமத் ஆசார்யாருக்குப் பாத பூஜை செய்து பிரஸாதம் வாங்கிக் கொள்ளும்போது, ''நானும் கிருஷ்ணனும் ஒன்றாக வாசித்தோம். அவன் வக்கீல் உத்தியோகம் செய்கிறான். நான் வெறுமென வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்'' என்று

மிகவும் தீனஸ்வரத்தில் சொன்னார். அதைக் கேட்டு ஸ்ரீமத் ஆசார்யார் ''அப்படியா? கிருஷ்ணனுக்கு ஸம்பாதித்து ஸாதிக்க வேண்டியதாயிருக்கிற பண ஸௌகர்யம் உங்களுக்கு ஸித்தமாயிருக்கிறதென்று தெரிகிறது. ரொம்ப ஸந்தோஷம். ஸம்பாதிக்கிற சிரமம் இல்லாததினால் அத்யாத்ம விஷயத்தில் மனஸைச் செலுத்த உங்களுக்கு அவகாசம் இருக்கும். மிகவும் நல்லது'' என்றார்கள்.

ை•ை

சிருங்ககிரிக்கு வந்த ஒரு சாஸ்திரிகளைப் பார்த்து ஸ்ரீமத் ஆசார்யார் ''நீங்கள் ஏதேனும் சாஸ்திரம் வாசித்திருக்கிறீர்களா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர், ''நான் அப்படி ஒரு சாஸ்திரத்தையும் வாசிக்கவில்லை. ஏதோ வேதாந்த சாஸ்திரம் உபாயமாகத் தெரிந்து கொண்டிருக்கிறேன்'' என்றார். ''அப்படியா? ரொம்ப ஸந்தோஷம். அப்படித்தான் உபாயமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அநேகம் பேர்கள் அபாயமாகத் தெரிந்துகொண்டு விடுகிறார்கள்'' என்றார்கள்.

ை•ை

ஒரு வித்யார்த்தி வியாகரண வாக்கியார்த்தம் சொல்லும்போது நபும்ஸக சப்தமான ''ததி''யைப் பற்றிச் சொல்லுகையில் ''ததிঃ'' என்று புல்லிங்கப் பிரயோகம் செய்துவிட்டான். அங்கே இருந்த அவனுடைய அத்யாபகர் கோபத்துடன் வித்யார்த்தியைப் பார்த்தார். இதை அப்பையன் கவனிக்கவில்லை. ஸ்ரீமத் ஆசார்யார் கவனித்து அத்யாபகரைப் பார்த்து தணிந்த குரலில், ''இரண்டு பதம். ததி ஹி'' என்றார்கள். அத்யாபகருக்கு உடனே கோபம் போய் சிரிப்பு வந்தது. ஸதஸ்ஸில் வித்யார்த்தியைப் பங்கப்படுத்தி அதைர்யப்படுத்தக் கூடாதென்று மிகக் கருணையுடன் ஸ்ரீமத் ஆசார்யார் இவ்விதம் சொன்னார் என்பதை உணர்ந்தார்.

ை•ை

வேறொரு நண்பர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து ''வேதாந்த புஸ்தகங்களை வெகுநேரம் வாசித்தால் தலை வலிக்கிறதே? அதற்கு என்ன செய்வது?'' என்று கேட்டார்.

ஆசார்யார் : ஸ்நேஹிதர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில் எத்தனை நாழிகையானாலும் தலை வலிக்கிறதில்லையே?

நண்பர் : இல்லை.

ஆசார்யார் : கச்சேரிக் (கோர்ட்) கட்டுகளை வாசிப்பதில் தலை வலிக்கிறதா?

நண்பர் : இல்லை.

ஆசார்யார் : தினசரிப் பத்திரிகை, கதைப் புஸ்தகங்கள் வாசிப்பதில் தலை வலிக்கிறதா?

நண்பர் : இல்லை.

ஆசார்யார் : வேதாந்த புஸ்தகம் எடுத்தால்தான் தலை வலிக்கிறதோ?

நண்பர் : ஆம்.

ஆசார்யார் : அப்படியானால் பாதகமில்லையென்று ஸஹித்துக் கொண்டு வாசித்து வாருங்கள். கொஞ்ச நாட்கள் சென்றவுடன் தலைவலி தானாகவே நின்றுவிடும். இதற்காக விசாரப்பட வேண்டாம்; இதற்காக வாசிப்பதை நிறுத்தவும் வேண்டாம்.

இதைக் கேட்டுக்கொண்டு வந்த நண்பர் என்னிடம் ''நீ வேதாந்தம் வாசிக்கிறாயே? உனக்குத் தலை வலிக்கிறதா?'' என்று கேட்டார். நான் ''இல்லையே'' என்றேன். உடனே அவர் ''இப்பொழுதுதான் ஆசார்யார் சொன்னது எனக்கு நன்கு விளங்குகிறது. நீ ஸ்நேஹிதர்களுடன் வம்படிக்கிறது போலவும், கேஸ் கட்டு வாசிக்கிறதுபோலவும், பேப்பர் படிக்கிறதுபோலவும் வேதாந்தம் வாசிக்கிறாய் என்று தெரிய வருகிறது. அதனால்தான் உனக்குத் தலை வலிக்கவில்லை. நன்றாக அக்கறையோடு வாசித்தால் தலை வலிக்கும் என்றே ஆசார்யார் சொன்னார்கள்'' என்று ஆசார்யார் வாக்கியத்திற்குச் சொந்த விளக்கம் கொடுத்தார். தலை வலிக்காதவர்களெல்லாம் ஆழ்ந்து வாசிக்கவில்லையென்றே அவருக்கு எண்ணம் ஏற்பட்டுவிட்டது. தலைவலி ஏற்படுவதே ஸாதன ஸோபானத்தில் (படிகளில்) ஒரு படி என்று நினைத்துக் கொண்டார் போலும்.

ஸ்ரீமத் ஆசார்யார் யாரையும் தடுத்துப் பேசுவது கிடையாது. ஆனாலும் தம் நிலையிலிருந்து விட்டுக் கொடுக்கவும் மாட்டார்கள். அவர்கள் ஒரு சாதுர்மாஸ்யத்தில் ஸூத்திர பாஷ்யம் சொல்லிக் கொண்டு வருகையில் அநேகமாய்ப் பிரதி தினம் வந்து

கொண்டிருந்த ஒரு பிரபுவிற்கு ஒரு நாள் விடுமுறை வேண்டியிருந்தது.

பிரபு: நாளை ஒரு நாள் பாஷ்யபாடம் நிறுத்திக் கொள்ளலாமோ?

ஆசார்யார்: ஏன்?

பிரபு: எனக்குப் பெஞ்சு மாஜிஸ்டிரேட் உத்தியோகம் இருக்கிறது. நாளை அந்தக் கச்சேரி உண்டு. அதற்குப் போய்விட்டு வரவேண்டும்.

ஆசார்யார்: அப்படியே போய்விட்டு வருகிறது.

பிரபு: நாளை பாடம் இருந்தால், விட்டுப்போகுமே என்று நினைக்கிறேன்.

ஆசார்யார்: வாஸ்தவம்.

பிரபு: அதனால் நாளை நிறுத்திக் கொண்டால் நல்லது.

ஆசார்யார்: தங்கள் உத்தியோகத்திற்குச் சம்பளம் உண்டா?

பிரபு: சம்பளம் இல்லை. ஆனாலும் உத்தியோகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு விட்டபடியால், அவசியம் போய்த்தானே தீரவேண்டும்?

ஆசார்யார்: மிகவும் நியாயம். அப்படியே செய்கிறது.

பிரபு: பாடம்?

ஆசார்யார்: அதை நிறுத்துவானேன்?

பிரபு: எனக்கு விட்டுப்போகுமே?

ஆசார்யார்: என்ன செய்கிறது? அவசியமான கார்யமானால் போய்விட்டு வரவேண்டியது தானே?

பிரபு: பாடம் விட்டுப்போகக் கூடாதென்பதற்காகத்தான் கேட்டுக் கொண்டேன்.

ஆசார்யார்: இது உங்கள் சிரத்தையைக் காட்டுகிறது. இங்கே பாடம் நடந்து வருவதில் ஆரம்பம் முதல் முடிவு வரையில் இடைவிடாமல் இருக்கவேண்டிய நியமம் எனக்கு மாத்திரம் தான். கேட்கிறவர்கள் ஸௌகர்யம் போல் வந்து போவார்கள். ஒவ்வொருவருடைய ஸௌகர்யத்தையும் கவனித்துப் பாடம் நடப்பதானால், வெகுநாட்கள் நிறுத்தும்படி ஏற்படும்.

இன்ஞெரு பிரபு ஒரு நாள் பாடம் முடிந்ததும் கேட்டார்.

பிரபு : நாளேக்குப் பாடம் உண்டா?

ஆசார்யார் : ஏன்?

பிரபு : நான் வெகு தூரத்திலிருந்து வண்டி பூட்டிக்கொண்டு வருகிறேன். நாளே, பாடம் இல்லேயாஞல் நான் வந்து வீணுக அலேயவேண்டியிருக்குமே என்று கேட்டேன்.

ஆசார்யார் : வீண் என்ன? ஸ்ரீசந்திரமௌளீசுவரர் தரிசனம் இருக்கிறது.

பிரபு : அது வாஸ்தவம். இருந்தாலும்-

ஆசார்யார் : 'இருந்தாலும்' என்ற பேச்சுக்கு இடம் இல்லே. அதற்குமேல் பெரியது ஒன்றுமில்லே.

இவ்விதம் சொல்லிக்கொண்டு உள்ளே போய்விட்டார்கள். அப்பிரபு பக்கத்திலிருந்த என்னேப் பார்த்து, ''நான் கேட்டதற்குப் பதில் சொல்லவில்லேயே?'' என்ருர். அதற்கு நான், ''உங்களிடம் பயந்துகொண்டே அவர்கள் பதில் சொல்லவில்லே'' என்றேன். ''அதென்ன அப்படிச் சொல்கிறீர்? என்னிடம் ஆசார்யாளுக்கு என்ன பயம்?'' என்ருர். ''நாளே பாடம் உண்டு என்று உங்களிடம் சொல்லிவிட்டு, நாளே ஏதோ காரணத்திஞல் பாடம் நடக்காமல் இருந்துவிட நேரிட்டால், ஊரிலிருந்து வண்டியைப் பூட்டிக்கொண்டு வந்தேனேயென்று நீங்கள் கேட்பீர்கள். நாளே பாடம் இல்லேயென்று சொன்ன பிறகு நாளே யாரேனும் விசேஷ பக்தர் அபேக்ஷித்துப் பாடம் நடந்துவிட்டால், இல்லேயென்று சொன்னீர்களே என்றும் கேட்பீர்கள். ஆகையால் உங்களிடம் மாட்டிக் கொள்ளக் கூடாது என்றே அவர்கள் பதில் சொல்லவில்லே'' என்றேன். ''நான் அப்படியெல்லாம் கேட்பேஞ?'' என்ருர் அவர். ''இன்றைய தினம் நீங்கள் கேட்ட கேள்விக்கு வேறு என்ன அர்த்தம்?'' என்று நான் சொல்லும்படி ஏற்பட்டது.

ஸ்ரீமத் ஆசார்யார் தம்மிடம் வரும் யாரையும் அதைர்யப்படுத்தாமல் உத்ஸாஹப்படுத்தி மேல்நிலேக்குச்

செல்லும்படி அநுக்ரஹிக்கும் விஷயமாக சில ஸம்பவங்களை இந்த அத்யாயத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். மற்றோர் நிகழ்ச்சியை இப்பொழுது குறிப்பிடுகிறோம்.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் 1939-40 ல் காலடியில் தங்கியிருந்த ஸமயம், ஸகல வஸதிகளையும் திருவாங்கூர் ஸம்ஸ்தானத்திலிருந்தே செய்து கொடுத்ததுடன், பந்தோபஸ்துக்காக அநேகம் போலீஸ் அதிகாரிகளை அங்கு அனுப்பியிருந்தார்கள். ஆனால் அவ்வதிகாரிகள் யாவரும் மற்றவர்களைப் போலவே வேஷ்டி அங்கவஸ்திரம் தரித்துக் கொண்டிருந்ததால் அவர்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்களென்றே தெரிவதற்கில்லாமலும், அவர்களும் குரு ஸேவைக்காக வந்திருக்கும் ஸாமான்ய பக்தர்களென்றே நினைக்கும்படிக்கும் இருந்தது. அந்த ஸமயம் அந்த ராஜ்யத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்தவர் ஸ்ரீமான் அப்துல் கரீம் என்பவர். அவர் அதற்குமுன் பஞ்சாபில் வேலை பார்த்து மிகவும் யோக்கியரென்றும், ஸமர்த்தரென்றும், கண்டிப்பானவரென்றும், பிரஸித்தி பெற்றிருந்ததால், அப்பொழுது திருவாங்கூரில் தலைதூக்கின சில கிளர்ச்சிக்காரர்களை அடக்குவதற்காகவே அவர் வரவழைக்கப்பட்டிருந்தார். அவர் ஸந்நிதானத்தின் மஹிமையைப் பற்றிக் கேள்விப்பட்டு, அவர்களை தரிசிக்க வேண்டுமென்ற ஆவலுடன், ஒரு குறிப்பிட்ட தினம் ஸாயங்காலம் வருவதாக ஸ்ரீமடத்திற்குச் சொல்லியனுப்பியிருந்தார். அப்பொழுது ஸ்ரீமடம் முகாமிலிருந்த பிரஹ்மஸ்ரீ ஸ்ரீகண்ட சாஸ்திரிகளுக்கு இங்கிலீஷாவது வடஇந்திய பாஷை ஏதேனுமாவது தெரியாது. வருகிற உத்தியோகஸ்தரோ பஞ்சாபிலிருந்து வந்திருக்கும் முஹமதியர். அவருக்குத் தமிழாவது மலையாளமாவது தெரிந்திருக்கக் கூடியதில்லை. ஆனதினால், தனக்கு அவருடன் ஸம்பாஷணை செய்வது ஸாத்தியமில்லையென்று நினைத்து, அவரை வரவேற்று ஸந்நிதானத்திடம் அழைத்துச் சென்று ஸம்பாஷணைகளை மொழிபெயர்த்துக் கொடுத்து, வந்தவரை திருப்தி செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பை என்னிடம் ஒப்புவித்தார். அப்படியே நான் குறிப்பிட்ட நேரத்தில் அவ்வுத்தியோகஸ்தரை வரவேற்றேன். அவர் தன் மோட்டார் காரிலிருந்து இறங்கினவுடன் என்னிடம் ''இவ்வளவு பெரிய ஸ்தானம் வஹிக்கும் ஆசார்யாரிடம் எவ்வித மரியாதையுடன் நெருங்க வேண்டும் என்ற விஷயம் எனக்குத் தெரியாது. நீங்கள்தான் சொல்ல வேண்டும்'' என்று இங்கிலீஷில் சொன்னார்.

அதற்கு நான் ''இதற்காக விசேஷ நியமம் யாதொன்றும் கிடையாது. தங்கள் மதத்திலேயே தங்கள் மதிப்பிற்குரிய பெரியோரிடம் எப்படிச் செல்வீர்களோ, அப்படியே சென்ருல் போதும்'' என்றேன். ''அப்படியாளுல் பூட்ஸ்களைக் கழற்றிவிட்டு ஸாக்ஸுடன் வருகிறேன்'' என்று சொல்லி அப்படியே வந்தார். ஸ்ரீ மஹாஸந்நிதானத்திடம் வந்தவுடன் முஹமதிய ஸம்பிரதாயப்படி தண்டனிட்டு வணங்கிஞர். ஸ்ரீ மஹாஸந்நிதானம் தமக்கே உரிய அஸாதாரணமான புன்சிரிப்புடன் அவரை வரவேற்ருர்கள்.

பிறகு ஸ்ரீமத் ஆசார்யார் அவரைப் பார்த்து, ''இங்கு நம் பக்கத்தில் கைங்கர்யம் செய்துவரும் போலீஸ் உத்தியோகஸ்தர்களின் நடத்தையை கவனிக்கும்போது அவர்களுடைய மேல் அதிகாரி மிகவும் பெருந்தன்மையுள்ள ஸாத்விகர் என்ற எண்ணம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது'' என்ருர்கள். இதை நான் இங்கிலீஷில் மொழி பெயர்க்க ஆரம்பிப்பதற்கு முன்னமேயே அவர் நல்ல தமிழில் ''அவ்வித எண்ணம் ஏற்பட்டது தங்களுடைய உத்தமமான ஸ்வபாவத்திஞல்தான். வாஸ்தவத்தில் நான் மிகவும் முரடன் என்றே பெயர் வாங்கியிருக்கிறேன்'' என்ருர். இனி மொழிபெயர்க்க அவசியமில்லையென்று தெரிந்துவிட்டதால் நான் அங்கே இருப்பது உசிதமில்லையென்று நினைத்து எழுந்திருக்கையில், ஸ்ரீ மஹாஸந்நிதானம் எழுந்திருக்க வேண்டாமென்று ஸம்ஞை செய்துவிட்டதால் நானும் அங்கே கூடவிருந்து அவர்கள் ஸம்பாஷணையை கவனிக்க அவகாசம் கிடைத்தது.

மஹா : தமிழ் நன்ருகப் பேசுகிறீர்களே, பஞ்சாபிலிருந்து வந்தவரென்றல்லவா கேள்விப்பட்டேன்.

உத் : நான் வெகுகாலம் பஞ்சாபில் வேலை பார்த்தது வாஸ்தவம். ஆனல் என் சொந்த ஊர் திருச்சிராப்பள்ளி ஜில்லா கொடியாலத்திற்கு அடுத்த கிராமம். கொடியாலம் வாசுதேவ அய்யங்காரும் என் தகப்பனரும் மிகவும் நெருங்கின ஸ்நேகிதர்கள். அய்யங்கார் அயலூர்களுக்குப் போகும் ஸமயங்களில் அவருக்கு உட்பட்ட தேவாலயங்களின் மேல்பார்வையைக்கூட என் தகப்பனரிடமே ஒப்படைத்துவிட்டுப் போவார். ஸர்க்கார் உத்தியோக முறையில் நான் வெகுதூரம் போகும்படி ஏற்பட்டாலும் நான் தமிழ் நாட்டையே சேர்ந்தவன்.

மஹா : அப்படியா? இன்னும் எத்தனை வருஷம் வேலை செய்ய வேண்டும்?

உத் : ஒரு வருஷத்திற்கு மேல் இல்லை.

மஹா : உங்கள் மதத்தைப்பற்றி நன்கு அறிந்து கொண்டிருக்கிறீரா?

உத் : இல்லை. அதன் அடிப்படைத் தத்துவங்களைக்கூட அறிந்திருக்கிறேன் என்ருவது அவைகளைச் சரிவர அனுஷ்டிக்கிறேன் என்ருவது சொல்வதற்கில்லை. ஆனுல் பால்யம் முதல் ஆண்டவன் ஒருவர் உண்டென்றும், அவரே பெரியவரென்றும் அவர் அறியாமலோ இஷ்டப்படாமலோ எந்த ஸம்பவமும் நடக்க முடியாதென்றும் திடமான நம்பிக்கை இருந்துகொண்டே வருகிறது. இந்த நம்பிக்கையே என் ஆயுட்காலம் பூராவும் என்னைக் காப்பாற்றிக் கொண்டும், நேர்வழியிலிருந்து விலகாமல் என்னை ரக்ஷித்துக் கொண்டும் வந்திருக்கிறது.

மஹா : இதற்காகத்தான் எல்லா மதங்களும் பாடுபடுகின்றன. மதங்களிலுள்ள நுட்பமான வியவஹாரங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள அவசியமில்லை. ஸர்வவியாபியாய், ஸர்வக்ஞனுய், ஸர்வ சக்தனுய் பகவான் ஒருவர் இருந்து நம்மை எப்பொழுதும் கவனித்துவருகிருர் என்றும் எப்பொழுதும் நமக்கு வழிகாட்டியாக இருந்து நமக்கு உதவ ஸித்தமாயிருக்கிருர் என்றும் நம்பிக்கை மாத்திரம் ஸ்திரமாய் இருந்துவிட்டால் அதற்குமேல் வேண்டியது ஒன்றுமில்லை.

உத் : தங்கள் வார்த்தை எனக்கு மிகவும் தைரியத்தைக் கொடுக்கிறது. மிகவும் தங்களுக்கு கடமைப் பட்டி ருக்கிறேன். ஆனுலும் மதவிஷயமான வாசிப்பில் கொஞ்சமேனும் காலத்தை செலுத்தவில்லையே என்ற எண்ணம் தோன்றிக் கொண்டே இருக்கிறது.

மஹா : வாசிக்க வேண்டுமென்று தோன்றினுல் நீங்கள் ஓய்வு பெற்ற பிறகு ஏராளமாய் அவகாசம் இருக்கும். புதிதாக விஷயங்களை எந்த வயதிலும் கற்றுக்கொள்வது ஸாத்தியமாகவே இருந்தாலும், முதிர்ந்த வயதில் இதுவரை கற்றுக் கொண்டிருப்பதை அனுஷ்டானத்திற்கு கொண்டு

வருவதே, புதிதாக கற்றுக் கொள்வதைவிட சிலாக்கியமாகுமென்று தோன்றுகிறது.

உத் : என் எண்ணமும் அப்படியே இருக்கிறது. என் வாழ்நாளில் பெரும்பாகம் இதுவரை வெளிப்பிரவிருத்தியிலேயே இருந்துவிட்டு இப்பொழுது உட்கார்ந்து புஸ்தகம் வாசிக்க முடியும் என்று தோன்றவில்லை.

மஹா : வெளிப்பிரவிருத்தியிலிருந்து வந்த உங்களைப் போலுள்ளவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டாலும் கூட, ஒருவித வேலையும் செய்யாமல், தனக்காவது மற்றவர்களுக்காவது பிரயோஜனப்படாமல் காலம் கழித்து வருவது ஸாத்தியமில்லை. ஓய்வுபெற்ற பிறகு என்ன செய்வதென்பதைப் பற்றி ஆலோசித்திருப்பீர்களே, என்ன தீர்மானம் செய்திருக்கிறீர்கள்?

உத் : ஒரு நாள் இதுவிஷயமாய் நன்கு ஆலோசனை செய்தேன். என் ஓய்வு நாட்களை பிரயோஜனப்படக் கூடிய வழியில் செலவழிக்க வேண்டுமென்று நினைத்தேன். ஸாமான்ய ரீதியில் இல்லாமல், எவ்விதம் செய்தால் ஆண்டவனுக்கு மிகவும் திருப்திகரமாயிருக்குமென்று யோசித்தேன். உலகத்தில் பொதுவாக தர்மகாரியமென்று நினைக்கப்படும் துறைகளில் இறங்குவதைவிட, தார்மிகரென்று சொல்லிக் கொள்கிறவர்கள்கூட உதவப் பின்வாங்கக் கூடியதாயும், மனுஷ்யர்களுக்குள்ளேயே மிகவும் பரிதவிக்கக் கூடியதாயும், கவனிக்கப்படாமல் வெறுக்கக்கூடியதாயும் இருக்கிற மனுஷ்ய வர்க்கத்திற்கு நம்மால் ஏதேனும் உதவி செய்தால், அதுவே ஆண்டவனுக்கு மிகவும் ஸம்மதமாகவும் பிரீதிகரமாகவும் இருக்குமென்று தோன்றிற்று. இவ்வெண்ணமே என் மனதை மிகவும் கவர்ந்தது. கடைசியாக, குஷ்டரோகிகளுக்காக ஒரு விடுதி ஏற்படுத்தி, அதில் நானே நேரில் அவர்களுக்கு வேண்டிய சிகித்ஸை முதலிய ஸௌகர்யங்களைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். இவ்வுத்தேசத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஆயுளையும் சக்தியையும் ஆண்டவன் அளிக்கிருரா என்று தெரியவேண்டும்.

மஹா : மனுஷ்யர்களுக்குள் சிரமப்படுகிறவர்களுக்குள் மிகவும் கீழ்ப்பட்டிருக்கிறவர்களுடைய ஸேவையே பகவானுக்கு

மிகவும் பிரீதிகரமானதென்று நீங்களே நன்கு அறிந்து தீர்மானித்திருக்கிறீர்கள். உங்கள் உத்தேசம் மிகவும் சிலாக்கியமானது. அதை அவசியம் பகவான் நடத்தியே வைப்பார். நாம் உங்களைப் பற்றி மிகவும் பெருந்தன்மையுள்ள ஸாத்விகர் என்று முதலில் சொன்னபோது நீங்கள் விநயத்தினால் மறுத்தபோதிலும், இவ்வுத்தேசம் நான் உங்களை மதிப்பிட்டதையே உறுதிப்படுத்துகிறது.

உத் : அப்படியே இது ஆண்டவனுக்கு ஒப்புக்கொள்ளக் கூடிய ஸேவையாக இருக்கவேண்டுமென்று தங்கள் ஆசீர்வாதத்தைக் கோருகிறேன். தங்களுடன் பேசுவதனால் தங்களுடைய காலத்தை வீணாக்கி விட்டேனென்று தோன்றுகிறது.

மஹா : அப்படியல்ல. உங்களைப் பார்த்ததில் எனக்கு மிக்க ஸந்தோஷம்.

உத் : பகவத் ஸங்கல்பமிருக்குமானால் இன்னொரு தடவை வந்து தங்களை ஸாவகாசமாய் தரிசிக்கலாமென்று நினைக்கிறேன். நான் ஜாதியில் முஸ்லீம். ஹிந்து மதத்தில் ஆசார்ய ஸ்தானம் வஹிக்கிற தங்களைப் பேட்டி காணுவதிலேயே எனக்கு மிகவும் அதைர்யமிருந்தது. ஆகையால் இங்கே தங்கும் காலத்தை சுருக்கமாக வைத்துக்கொண்டு வேறு இடங்களுக்கு வருவதாக ஏற்றுக் கொண்டு விட்டேன். அடுத்த தடவை இங்கே வரும்போது இன்னும் கொஞ்சம் ஸாவகாசமாய் தரிசிக்க உத்தேசிக்கிறேன். தாங்கள் இவ்வளவு ஸுலபராகவும் கருணையுடையவராகவும் இருந்து வருவதால் தங்களிடம் ஸ்வாதீனம் வஹிக்கத் தோன்றுகிறது.

மஹா : அப்படியே செய்கிறது.

உத் : அடுத்த தடவை வரும்போது, என் வீட்டு பெண்டுகளையும் அழைத்து வரலாமா?

மஹா : அவள் கோஷா இல்லையா?

உத் : கோஷாதான். ஆனால் தங்களுக்கு கோஷா இல்லை.

மஹா : அப்படியே அழைத்து வரலாம். பகவானுடைய அனுக்ரஹம் உங்களுக்கு இருக்குமாக!

அவ்வுத்தியோகஸ்தர் பின்னுல் ஓய்வு பெற்ற பிறகு அவர் உத்தேசப்படி குஷ்டரோகி நிலையம் ஏற்படுத்தி விமரிசையாக நடத்தி வருவதுடன் அவர் தன் மதமூலக்கிரந்தமான குரானை இங்கிலீஷில் மொழி பெயர்த்து அச்சிட்டு இலவசமாக விநியோகம் செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் தம்மிடம் சிரத்தையுடன் வந்து கேட்கும் சிஷ்யர்களுடைய யோக்கியதையை அனுஸரித்து அவரவர்களுக்கு தக்கபடி உபதேசம் செய்து கைதூக்கிவிட்டிருக்கிருர் என்ற விஷயம் யாவரும் அறிந்ததே. சிலர் வெகுதூர தேசத்தில் இருந்து வந்தபடியால் அவர்கள் சுவாமிகளை தரிசித்து அனுக்ரஹம் பெற்றுக் கொள்ள முடியாமல் போனுலும் அவர்களுடைய மஹிமையினுல் இழுக்கப்பட்டு தங்களுக்கும் உதவ வேண்டுமென்று கேட்டுக் கிருதார்த்தர்கள் ஆகியிருக்கிருர்கள். உதாரணமாக பிரான்ஸ்தேசத்தில் பாரீஸ் என்ற பிரதான நகரத்தில் இருந்த 'ஜீன் ரிவியரே' என்பவர் எழுதி அனுக்ரஹம் பெற்றதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தம்மை அண்டின சிஷ்யனுக்குச் செய்யும் உபதேசத்தில் அவனுக்கு மாத்திரம் உபயோகப்படக்கூடிய அம்சத்துடன் பொதுவாக மற்றவர்களுக்கும் உபயோகப்படக்கூடிய அம்சங்களும் கலந்திருக்கும். பின்சொன்ன அம்சங்களே வெளியிடக் கூடியவை ஆகையால் அவைகளை மாத்திரம் இங்கே குறிப்பிடுகிறேன்.

அவர் எழுதியனுப்பியது :

''நான் தங்களுக்கு நேரில் ஸ்வாதீனமாய் எழுதுவதற்குக் காரணம் வேதாந்தத்தின் மேன்மையில் எனக்குள்ள நம்பிக்கைதான். இந்தப் பிரதேசத்தில் பரபரப்பும் அஹங்காரமும், ஸ்வயநலமும் நாஸ்திகமும் ஏராளமாக இருக்கின்றன... மேற்கிலுள்ள சமய உபதேசகர்கள் புத்திசாலிகளே தவிர அத்யாத்மப் பயிற்சியுள்ளவர்கள் அல்ல. நான் தெளிவான ஞானத்தையே தேடுகிறேன்... எனக்குப் பிரகாசம் ஏற்படத் தங்களையே சரணமடைகிறேன். வேதாந்தத்திலும் வேதத்தின் திவ்ய உபதேசங்களிலும் எனக்கு விசுவாஸம் இருக்கிறது. ஸ்ரீ சங்கராச்சார்யார் அவதார புருஷர் என்றே நம்புகிறேன். மாயைக்கும் அவித்யைக்கும் அப்பாற்பட்ட பரமபுருஷனுடைய

ஸாக்ஷாத்காரத்தினுல்தான் ஸத்தியமும் சாந்தியும் ஏற்படும் என்று திடமாக நம்புகிறேன். இந்தக் கடினமான மார்க்கத்தில் எனக்கு வழிகாட்டி யாரும் இல்லை. நான் தனித்திருக்கிறேன். தங்கள் உதவியையே நாடுகிறேன். தங்களுக்கு விசேஷ அனுபவமும் சக்திகளும் உண்டு என்பதை அறிவேன். ஒரு நிலையில் தேசமும் காலமும் தங்களால் பொருட்படுத்தக் கூடியவை அல்ல என்பதையும் அறிவேன். பிரகாசத்தையும் சாந்தியையும் எனக்கு அளிக்கும்படி தங்களை வேண்டிக் கொள்கிறேன்.''

ஸ்ரீ ஸந்நிதானத்தின் உத்தரவுப்படி அவருக்கு அனுப்பின பதில் :

''பாஷை வித்யாஸம், தூரதேசம் என்கிற பெரிய இடைஞ்சல்கள் இருந்தும் நீங்கள் ஸ்ரீ சங்கரரிடம் வைத்திருக்கிற அக்கறையைப் பார்க்க ஸ்ரீ மஹாஸந்நிதானம் மிகவும் சந்தோஷிக்கிருர்கள். அத்யாத்ம விஷயத்தில் உங்களுக்குள்ள ஊக்கத்தை நன்கு உணர்கிருர்கள். உங்களைப்போல் நன்கு பயிற்சியும் பரிபாகமும் அடைந்த மனத்துடன் கூடியவர்களை வேதாந்தம் இழுப்பது ஸஹஜம் என்றே நினைக்கிருர்கள். ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குச் ஸாதனமான வேதாந்த தத்துவ அன்வேஷணம் (தேடுதல்) ஸாதகனிடம் அத்யாத்ம விஷய ஜாகரூகதையையும் (விழிப்புணர்ச்சியையும்) புத்தியின் கூர்மையையும் அபேக்ஷிக்கிறது. இவைகள் முன் ஜன்மத்திலிருந்தே ஸம்பாதிக்கப்பட்டிருக்கும். தவிரவும் இப்பொழுது முன்னேறுவதற்குப் பலவித இடைஞ்சல்கள் ஏற்படலாம். அவைகளைத் தாண்டுவதற்கு ஒரு குருவின் உதவி அவசியம் வேண்டும். ஆகையால் அதிகாரிகள் இருக்கும் தனித்தனி நிலையைக் கவனிக்காமல் எல்லாருக்குமே உசிதமாக ஒரு குறிப்பிட்ட வழியைச் சொல்வது ஸாத்தியமில்லை. ஆனுலும் குருவை அண்டி அடிக்கடி கேட்டுத் தெரிந்து கொள்ளச் சௌகர்யம் இல்லாதவர்களாக இருந்தபோதிலும் சீக்கிரம் முன்னேற வேண்டுமென்ற அவா இருக்கக்கூடிய ஸாதகர்களுக்கு அடியில் கண்ட நியமங்கள் மிகவும் உபயோகப் படக்கூடியவையாக இருக்கும். வேதாந்தத்தின் லக்ஷ்யத்தை அடைய மனதை ஒருமைப்படுத்தி நிறுத்துவது இன்றியமையாத ஸாதனமாகும். இதை மனதில் வைத்துக்கொண்டு அடியிற்கண்ட அப்யாஸங்கள் சொல்லப்படுகின்றன.

1. மதகரமான ஆஹாரம் (தாமஸிக உணவு), பானம் இவைகளை வர்ஜித்தல்(ஒதுக்குதல்); கூடியமட்டில் தான்ய ஸஸ்யாதிகளையே (தானிய வகைகள்) உண்ணுதல்.

2. ஸகல பிராணி வர்க்கங்களிடத்திலும், எவ்வித வித்யாஸமும் அன்னியில், எப்பொழுதும் அன்பு வஹித்தல்; தன் நலம் மறந்து அவர்களுக்கு தன்னால் கூடிய உதவியைச் செய்தல்.

3. அந்தர்முகமாக இருந்துவரும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளல். தன்னுடைய உத்தமமான மதிப்பிற்குரிய ஒரு விஷயத்தில் தன் மனோவிருத்திகளைப் பிரதிதினமும் ஏகாக்கிரமாக ஒருமைப்படுத்துதல். அவ்விஷயம் அத்யாத்மப் பிரகாசத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். இந்தியாவில் ஸ்ரீ கிருஷ்ணர், ஸ்ரீ சங்கரர், ஸரஸ்வதி போன்றவர்களை எடுத்துக் கொள்வார்கள். இந்த ஏகாக்கிரத் தியானத்தை மனம் தெளிவாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறபோது செய்ய வேண்டும். இதைச் சௌகர்யம் போலெல்லாம் அடிக்கடி செய்யலாம்; ஆனால் மனது சோர்வு அடையவிடக் கூடாது. அப்யாஸகாலத்தில் தூக்கத்திலும் கொண்டு விடாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆரம்பத்தில் சில நிமிஷங்கள் செய்துவந்து பின்னால் அதிகப்படுத்திக் கொள்ளலாம்.

4. பிரதிதினமும் தத்துவவிசாரம் மிகவும் அவசியம். தத்துவ விஷயமாக ஏற்படக்கூடிய ஸந்தேஹங்களை நன்கு ஆராய வேண்டும். முதலில் இவ்விசாரம் செய்வதற்கு ஸ்ரீ சங்கர பாஷ்யத்துடன் பகவத்கீதை, திருக்திருச்ய விவேகம், ஆத்ம போதம், பஞ்சதசி இவை போன்ற கிரந்தங்கள் மிகவும் நல்லது. உயர்ந்த கிரந்தங்களைப் பின்னால் வாசிக்கலாம்.

நாஸ்திகம் நிறைந்த சூழ்நிலையில் நீங்கள் இருந்து கொண்டிருப்பதால் உங்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை ஸ்ரீ மஹாஸந்நிதானம் நன்கு அறிவார்கள். ஆனால் ஐரோப்பாவும் கிரமப்படி ஒரு நாள் வேதாந்த வெளிச்சத்தையே தேடும்படி ஏற்படும். ஆனால் லௌகிக விஷயங்களை விட்டுத் தத்துவ அன்வேஷணத்துக்குப் (தேடுதல்) பாடுபட வேண்டும். இப்பொழுது பௌதிக விஷயத்தில் தத்துவத்தைத் தேடுவதில் அவர்கள் ஊக்கம் கொண்டிருக்கிறார்கள். தத்துவத்தை

அறியவேண்டுமென்ற தாகம் உயர்ந்து இருக்குமேயாஞல் இதற்கு மேலுள்ள அத்யாத்ம தத்துவத்தையும் தானே தேட ஆரம்பிப்பார்கள்.''

ஸ்ரீ சிருங்ககிரி ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்களிடமிருந்து கடிதம் மூலம் உபதேசத்தை அடைந்து தன்ஞல் முடிந்தவரை அப்யஸித்து வந்த ஐரோப்பிய ஸாதகர் ''உத்தமமான மதிப்பிற்குரிய விஷயத்தைத் தியானிக்க வேண்டும்'' என்று கண்டிருப்பதால் ஸ்ரீ சங்கரருடைய படத்தையாவது தங்களுடைய படத்தையாவது அனுப்பி அனுக்ரஹிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்குப் பதில் எழுதும்போது ஸ்ரீ மஹாஸந்நிதானம் தம் குருநாதருடைய படத்தையே அனுப்பிக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதிலும் ''பிரதிதினமும் இப்படத்தினிடம் நெருங்கும்போது சரீரம் அத்யந்த பரிசுத்தமாகவும் மனம் மிகவும் தெளிவாகவும் (அதாவது கல்மஷம் அன்னியில்) இருக்க வேண்டும்'' என்று வற்புறுத்தியிருக்கிருர்கள். ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் பரிபூர்ண கருணையால் இந்த ஸாதகர் அதிசீக்கிரம் அத்யாத்ம நிலையை அடைந்திருப்பார் என்பதில் ஸந்தேஹம் இல்லை.

ஸ்ரீ மஹாஸந்நிதானம் திருநெல்வேலி ஜில்லாவில் நீலகண்ட தீக்ஷிதர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பாலாமடை கிராமத்தில் தங்கியிருந்தபோது அங்கிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள தாழையூத்து என்ற இடத்தில் நில ஆவாரை வியாபாரம் செய்து கொண்டிருந்த 'ஸென்னெக்' என்ற ஐரோப்பியரும் அவருடைய நண்பரான ஜெர்மன் தேசத்தவர் ஒருவரும் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தைத் தரிசிக்க விரும்பிஞர்கள். ஸ்ரீமத் ஆசார்யாருடைய ஜாகைக்காகத் தன் கிருஹத்தையே கொடுத்திருந்த ஸ்ரீ P.N. ஸுந்தரமையர் என்று அக்காலத்தில் மிகப் பிரஸித்தராயிருந்தவர் மூலம் கேட்டனுப்பினதில் ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸம்மதித்தார்கள். அப்படியே குறிப்பிட்ட தினம் மாலையில் அவர்கள் பெண்டுகள் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு தரிசனத்திற்கு வந்தார்கள். பூஜைக்காகப் போடப்பட்டிருந்த விஸ்தாரமான பந்தலிலேயே ஸ்ரீ மஹாஸந்நிதானம் அவர்களுக்கு தரிசனம் கொடுத்தார்.

ஸ்ரீ ஸுந்தரமையர் அவர்களை அறிமுகப்படுத்திவிட்டு ஸம்பாஷணையை மொழி பெயர்த்துச் சொல்லி வருகையில் மேலால என்னையே மொழி பெயர்க்கும்படி ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஆக்ஞை செய்தார்கள். அப்பொழுது நடந்த ஸம்பாஷணை என் மனதில் நன்ருகப் பதிந்துவிட்டது. அது மறைந்துவிட இஷ்டமில்லாமல் கூடியவரையில் அப்படியே ''தேன் மொழிகள்'' என்ற பிரசுரத்தின் முதல் அத்யாயத்தில் கண்டிருக்கிறேன். அதை இங்கு விஸ்தரிக்க அவசியமில்லை. ஹிந்து மதத்தின் பெருமையை ஸ்ரீமத் ஆசார்யார் நன்கு வற்புறுத்தின போதிலும் அவர்களைக் கிறிஸ்துவ மாதா பிதாக்களுக்கு ஸந்ததியாக ஏற்படுத்தினதில் பகவானுக்கு விசேஷமான உத்தேசம் இருந்தே தீரவேண்டுமானதால் அந்த மதம்தான் அவர்களுக்குச் சிரேயஸ் ஸாதனமென்றும் அதில் ஏதேனும் ஸந்தேஹம் ஏற்பட்டால் அம்மதத்தை பிரசாரம் செய்கிறவர்களைவிடத் தம் வாழ்க்கையில் அனுஷ்டித்து வரும் பெரியோர்களைத் தேடி நிவிருத்தி செய்துகொள்ள வேண்டுமென்றும் சொன்னுர்கள். கடைசியாக அவர்கள் தங்கள் நன்றியைத் தெரிவிக்கும்போது, முன்னைவிடத் தீவிரமான கிறிஸ்துவர்களாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தாங்கள் இங்கிருந்து திரும்புவதாகவும் இப்பொழுதே ஹிந்து மதத்தின் பெருமையை தாங்கள் நன்கு உணர்ந்ததாகவும் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் உபதேசத்திற்காக உள்ளே போன வைதிகர் ஒருவர் ''இன்று அஷ்டமியல்லவா'' என்ருர். ஆசார்யார் ''ஆமாம். இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டார்கள். அவர் வெளியில் வந்து என்னிடம் ''ஆசார்யாளுக்கு இன்றைய தினம் அஷ்டமி என்பது மறந்துவிட்டது. ஞாபகப்படுத்தினேன். இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள்'' என்று சொல்லிக் கொண்டிருக்கையிலேயே உபதேசத்திற்காக காத்துக் கொண்டிருந்த இன்னொருவரை ஸ்ரீமத் ஆசார்யார் கூப்பிட்டு விட்டார்கள். அதைப் பார்த்த இவர் என்னிடம் ''இப்போதுதானே அஷ்டமி என்று சொல்லிவிட்டு வந்தேன். வேறு ஒருவரைக்

கூப்பிடுகிருர்களே?'' என்ருர். ''உங்களுக்குத்தான் அஷ்டமி'' என்றேன். ''அதென்ன?'' என்று கேட்டார். ''இன்று நல்ல நாள் இல்லையென்று உங்களுக்குத் தோன்றிவிட்டபடியால், இன்று உங்களுக்கு உபதேசம் செய்துவிட்டால் பிறகு என்றைக்காவது தலைகால் வலித்ததேயானுல் அஷ்டமியில் உபதேசம் பண்ணிக் கொண்டதினுல் இருக்குமோ என்ற ஸந்தேஹம் உங்களுக்குத் தோன்றிக் கொண்டேயிருக்கும். அதனுல்தான் ஆசார்யாள் உபதேசம் செய்யவில்லை. ஆசார்யாள் என்றைக்கு உபதேசம் செய்து அநுக்ரஹிக்கிருர்களோ அன்றே நல்லநாள் என்ற விசுவாஸம் உள்ளவர்களுக்கு நாள் பார்க்க வேண்டாம்'' என்றேன்.

செட்டி நாட்டில் யாத்திரை செய்யும்போது தேவகோட்டையில் உள்ளவர்களுக்குச் சில அசௌகர்யங்கள் ஏற்பட்டிருந்தபடியால் அவ்வூருக்கு விஜயம் செய்யாமலே ஸ்ரீமத் ஆசார்யார் இரண்டு மூன்று ஊர்கள் தாண்டிப் போய்விட்டார்கள். பின்னுல் தேவகோட்டை ஜனங்கள் சௌகர்யப்படுத்திக் கொண்டு ஸ்ரீமத் ஆசார்யார் முகாம் செய்திருக்கும் இடத்திற்கு வந்து தங்கள் ஊருக்கு அவசியம் வந்துவிட்டுப் போகவேண்டுமென்று ஸர்வாதிகாரியிடம் வற்புறுத்தியும் பிரயோஜனப்படாமல் ஸ்ரீமத் ஆசார்யாரிடத்திலேயே நேரில் வந்தார்கள்.

செட்டியார் : இப்பொழுது தேவகோட்டையில் ஒருவித சௌகர்யப்படுத்திக் கொண்டுவிட்டோம். எங்கள் ஊரைத் தாண்டிக்கொண்டு தாங்கள் வந்துவிட்டது எங்களுக்கு ஸமாதானமாகவில்லை. ஆகையால் தாங்கள் அவசியம் விஜயம் செய்து எங்களை அனுக்ரஹிக்க வேண்டும்.

ஆசார்யார் : இவ்வளவு சிரத்தையோடு கூப்பிடுகிறபோது வராமல் இருக்க முடியுமா? அவசியம் வருகிறேம். எப்பொழுது என்பதைச் சாஸ்திரிகளிடம் கேட்டுக் கொள்ளுங்கள்.

செட்டியார் : அவர்களைக் கேட்டோம். ஸமீபத்தில் மஹோதயமோ அர்த்தோதயமோ (புண்ணிய காலங்கள்) வருகிறதாம். அன்றைக்கு ஸேதுவில் இருப்பதாக

ஏற்பாடாகியிருக்கிறது. இப்பொழுது வரமுடியாது. திரும்பும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று பிடிவாதமாகச் சொல்கிருர். அதனுல்தான் தங்களிடமே நேரில் தெரிவிக்க வந்தோம். இங்கிருந்து தேவகோட்டைக்குப் போய்விட்டு இங்கே திரும்பிவரும்வரை ஏற்படக்கூடிய எல்லாச் செலவுகளையும்கூட நாங்களே வஹிக்கிரேம். இப்பொழுதே வரவேண்டு மென்று பிரார்த்திக்கிரேம்.

ஆசார்யார் : இப்பொழுதே வந்தாக வேண்டுமென்பது உங்கள் பக்திப் பெருக்கைக் காட்டுகிறது. ரொம்ப ஸந்தோஷம். நீங்கள் இவ்வளவு தூரம் அபேக்ஷிக்கும்போது மறுப்பது நியாயமில்லைதான். ஆனுல் விசேஷமான ஒரு புண்ணிய தினத்தில் ஸேதுக்கரையில் ஸ்ரீ சந்திரமௌலீசுவரருக்கு அபிஷேகம் செய்துவைத்தால் உலகத்திற்கே க்ஷேமம் என்று ஏற்பாடாகியிருக்கையில், தேவகோட்டை செட்டியார்களால் அது தடைப்பட்டது என்ற பெயர் உங்களுக்கு வேண்டுமா? என்று நினைக்கிறேன்.

செட்டியார் : தங்கள் இஷ்டப்படியே செய்கிறது. திரும்பி வரும்போதாவது அவசியம் தேவகோட்டைக்கு விஜயம் செய்து அனுக்ரஹிக்க வேண்டும்.

ஒரு கவி ஸ்ரீமத் ஆசார்யாரைப் பற்றி சில சுலோகங்கள் எழுதிக்கொண்டு வந்து வாசித்தார். அதில் ஒரு சுலோகத்தில் ''தர்மத்தையே அனுஷ்டித்து ஸ்தாபனம் செய்வதற்காக தர்மமே விக்ரஹம் எடுத்து அவதரித்த ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு வாலி வதத்தில் அபவாதம் ஏற்பட்டது. தாங்கள் ஒருவித அபவாதத்திற்கும் இடம் கொடுக்காத சுத்தமான தர்மமூர்த்தி'' என்று எழுதியிருந்ததை வாசித்தார்.

ஆசார்யார் : ''ஸ்ரீ ராமருக்கு வாலி வதத்தில் தோஷம் உண்டா இல்லையா? அவருக்கு அபவாதம் ஏற்பட்டதாகச் சொல்வது நியாயமா இல்லையா? என்கிற

விஷயங்களைப் பற்றி விசாரிப்பது பிரகிருதமில்லை. அவருக்கு ஓர் அபவாதம் இருந்ததாக அனுவாதம் செய்து, அது என்னிடத்தில் இல்லையென்று சொன்னால், நான் திருப்திப்படுவேன் என்று என்னை மதித்துவிட்டீர்களே என்பதில் கொஞ்சம் வருத்தம் ஏற்படுகிறது. உத்பிரேக்ஷையோ (உருவகப்படுத்துதல்) அதிசயோக்தியோ (பெரிதுபடுத்தி) சொல்வதாக இருந்தாலும் ராமகிருஷ்ணாதிகளின் மேன்மைக்குக் குறைவு ஏற்படாமல் சொல்ல வேண்டும்.''

ஒரு நாள் ஒரு சிஷ்யர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து கேட்டார்.

சிஷ்யர் : என் பார்யைக்கு அன்னத்வேஷமாக இருக்கிறது. அதற்கு ஏதேனும் பரிஹாரம் செய்து அனுக்ரஹிக்க வேண்டும்.

ஆசார்யார் : அன்னத்வேஷம் என்றால் என்ன ஆஹாரமே எடுத்துக் கொள்கிறதில்லையா?

சிஷ்யர் : இல்லை. கொஞ்சம் எடுத்துக் கொண்டாலும் வாந்தி செய்து விடுகிறாள்.

ஆசார்யார் : இவ்விதம் எத்தனை நாளாக இருக்கிறது?

சிஷ்யர் : ஆறு மாஸமாக.

ஆசார்யார் : அப்படியா? அன்னமே எடுத்துக் கொள்ளவில்லை என்றால் ஆஹாரம் காப்பிதானே?

சிஷ்யர் : ஆம்.

இதைக் கேட்டவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் மிகவும் மெதுவான குரலில் பக்கத்திலிருந்த என்னைப் பார்த்து, ''அதை விட்டுவிட்டால், அன்னம் ருசிக்கும்'' என்று சொன்னார்கள். இது அந்தச் சிஷ்யரின் காதில் விழாதபோதிலும் மடத்து சாஸ்திரிகள் ஒருவர் கேட்டுவிட்டார். அவர் உடனே அந்த சிஷ்யரைப் பார்த்து, உயர்ந்த

குரலில் ''காப்பியை விட்டுவிட்டால் அன்னம் ருசிக்கும் என்று ஸந்நிதானத்தில்உத்தரவாகிறது. அப்படியே செய்யும்'' என்று சொன்ஞர். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் அந்த சாஸ்திரிகளேப் பார்த்து, ''கீழே அழைத்துக்கொண்டு போய் நீர் சொல்லும்'' என்று உத்தரவிட்டார்கள். அப்படியே அந்தச் சிஷ்யரை சாஸ்திரிகள் கீழே அழைத்துக்கொண்டு போய் விட்டார். அதன் பிறகு ஸ்ரீமத் ஆசார்யார் என்னிடம், ''இது ஸ்வஸ்தமாகக் கூடியதில்லே. ஏதோ பலமான பாபத்திஞல் ஏற்பட்டிருக்கிறது. அப்படியிருக்கிறபோது, அவள் காபி சாப்பிடுவதை நிறுத்தப் போவதில்லே. நான் சொல்லியும் கேட்கவில்லே என்று இன்ஞெரு தோஷமும் சேர வேண்டாமே என்று நினேத்துத்தான் கீழே அனுப்பினேன். இருக்கிற பாபம் போதாதா? இதுவும் சேரவேண்டுமா?'' என்ருர்கள். இதிலிருந்தே அவர்கள் சிஷ்யர்களிடத்தில் எவ்வளவு வாத்ஸல்யம் வைத்திருந்தார்கள் என்பது நன்கு துலங்கும். ஆசார்யாருடைய வாக்கியத்தை உல்லங்கனம் (மீறுதல்) செய்த தோஷம் சிஷ்யர்களுக்கு எவ்வகையிலும் சேரக்கூடாதென்று நினேத்தே அவர்கள் யாரையும் ஆக்ஞை செய்வது கிடையாது. தம்மிடத்தில் வந்து கேட்டுத் தெரிந்துகொண்டு அதன்படியே நடப்பார்கள் என்ற உறுதி ஆசார்யாருக்கு ஏற்பட்டாலொழிய யாரையும் பார்த்து ''இவ்விதம் செய்'' என்று சொல்வது கிடையாது. அதே காரணத்திஞல் மடத்திலுள்ள சிப்பந்திகளேயும் அவர்கள் ஒருநாளும் ஏவினது கிடையாது. ஆஞல் அவர்கள் ஸத்யஸங்கல்பர்களாக இருந்தபடியால் எல்லாம் முறைப்படி குறைவன்னியில் நடந்தே வந்தன.

ஸ்ரீமத் ஆசார்யாரை ஸத்யஸங்கல்பர்கள் என்று சொன்னேன். வாஸ்தவத்தில் எவ்வித ஸங்கல்பமும் அற்றவர்கள் என்றேதான் சொல்ல வேண்டும். துங்கா நதியின் தென்கரையிலுள்ள அவர்களுடைய ஸச்சிதானந்த விலாஸம் என்கிற மாளிகைக்கு ஸமீபத்திலேயே ஒரு ஸமயம் எனக்கு ஜாகை கொடுத்திருந்தார்கள். ஒரு நாள் ஸாயங்காலம் மடத்திலிருந்து சாமான்கள் வெளிப்படுவதைப் பார்த்தேன். அங்கிருந்த வேலேக்காரர்களிடம் ''என்ன விசேஷம்?'' என்று கேட்டேன். ''ஸந்நிதானம் வடகரையிலுள்ள மடத்திற்குப் போகிருர்கள்'' என்று சொன்ஞர்கள். ஸ்ரீமத் ஆசார்யார் அங்கிருந்து புறப்படுவதற்கு

முன்னால் தரிசனம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்களிடம் போய் நமஸ்கரித்தேன்.

கிருஷ்ணன் : அக்கரைக்கு விஜயமாகப் போவதாகக் கேள்விப்பட்டேன்.

ஆசார்யார் : ஆம். இன்று ராத்திரி மழை பெய்யும்போல் தெரிகிறதாம். மழை பெய்தால் நதியில் வெள்ளம் வந்துவிடும். வெள்ளம் வந்துவிட்டால் அக்கரையிலிருந்து பூஜா சாமான்களை உக்கிராணத்திலிருந்து எடுத்து வருவது சிரமமாக இருக்கும். ஆகையால் இப்பொழுதே அக்கரைக்குப் போய் விடலாமென்று சொன்னார்கள். எனக்கு என்ன ஆக்ஷேபம்? எங்கே இருந்தால் என்ன? சரி என்று சொல்லிவிட்டேன். பூஜாஸாமக்ரிகளெல்லாம் அநேகமாய் அக்கரைக்குக் கொண்டுபோய் விட்டார்கள். நானும் கொஞ்ச நாழிகையில் புறப்பட வேண்டியதுதான்.

நான் பதில் சொல்லாமல் நின்றேன்.

ஆசார்யார் : இதற்காக நீ இப்பொழுது அக்கரைக்கு வர வேண்டாம். ராத்திரி மழையும் பெய்யாது. வெள்ளமும் வராது. நீ இங்கேயே வழக்கம்போல் இருக்கலாம்.

இவ்விதம் என்னிடம் சொன்னவர்கள் அக்கரைக்குப் போகவேண்டுமென்று சொன்ன அதிகாரியிடம் சொல்லியிருக்கக் கூடாதா என்று ஒரு க்ஷணம் தோன்றிற்று. அதற்குப் பதில், ''எங்கே இருந்தால் என்ன?'' என்ற அவர்களுடைய வாக்கியத்திலேயே இருப்பதை உணர்ந்தேன். அதிகாரி மழை வரும் என்று சொல்லும்போது இவர்கள் வராது என்று சொன்னால், இக்கரையிலேயே இருக்க வேண்டுமென்ற ஸங்கல்பம் த்வனிக்காதா? தவிரவும், அவ்வதிகாரி மழை வருமா என்று கேட்காமல் வரும் என்று தீர்மானம் செய்து கொண்டிருக்கையில், அதை ஆக்ஷேபித்து ஸ்ரீமத் ஆசார்யாருக்கு என்ன கார்யம் ஸாதிக்க

வேண்டும் என்கிற அம்சத்தை ''எனக்கு என்ன ஆக்ஷேபம்?'' என்ற வார்த்தையில் அடக்கியிருக்கிறார்களென்பதையும் உணர்ந்தேன். இந்நிலையையே ஸ்ரீமத் பகவத் கீதையில் उदासीनवदासीनः ''உதாஸீனன் போல் இருப்பான்'' என்று பகவான் குறிப்பிட்டிருக்கிறார். உலக மத்தியில் இருந்துகொண்டு இவ்விதம் பற்றில்லாமல் நடப்பதையெல்லாம் ஸாக்ஷியாக இருந்து பார்த்துக்கொண்டு இருப்பது மிகவும் சிரமம். ஆனாலும் அந்நிலை இக்கலிகாலத்திலும் அடையக்கூடியதுதான். காப்பாற்றக் கூடியதுதான் என்பதை ஸ்ரீமத் ஆசார்யார் தம் நடத்தையால் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

6. மந்திர ப்ரபாவம்

ஸ்ரீமத் ஆசார்யாரின் மந்திர சக்தியைப் பற்றி வேறிடத்தில் கொஞ்சம் சொல்லியிருக்கிறேன். இங்கேயும் சில ஸம்பவங்களைக் குறிப்பிடலாமென்று நினைக்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு கிராமத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு ஸ்ரீமத் ஆசார்யார் வரவேண்டுமென்று கிராமத்தார்கள் பிரார்த்தித்துக் கேட்கையில், ''அஸ்தமித்து வர வேண்டாம். ஸாயங்காலம் நான்கு மணிக்குள்ளாகவே வர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். அப்படியே ஆசார்யார் தாம் இறங்கியிருந்த இடத்திலிருந்து கோவில் வெகு தூரம் இருந்தபடியால் மேனுப் பல்லக்கில் சென்று கோவில் வாசலில் இறங்கிக் கொண்டார்கள். பிறகு கோவில் வாசற்படி தாண்டி இரண்டு அடி எடுத்து வைத்ததும் சட்டென்று பின்வாங்கிப் ''பல்லக்கிலுள்ள மந்திராக்ஷதையை எடுத்துவா'' என்ருர்கள். மந்திராக்ஷதை வந்தவுடன் அதைக் கையில் எடுத்துக்கொண்டு, கோவில் கர்ப்பகிருஹத்திற்குள் போகாமல், பிராகாரம் பக்கம் திரும்பித் தம் கையாலேயே அம்மந்திராக்ஷதையை முன்னுல் இரைத்துக்கொண்டு நான்கு பிராகாரங்களையும் சுற்றிவந்து, பிறகு கர்ப்பகிருஹத்திற்குள் சென்ருர்கள். அவர்கள் வடக்குப் பிராகாரத்தில் வந்து கொண்டிருக்கையில், அக்ரஹாரத்தில் தெரு வழியாக ஒரு பிராஹ்மணன் அலறிக்கொண்டு அதிவேகமாய் ஓடுவதை வீட்டிலிருந்த சிலர் கண்டார்கள். யார் என்று தெரியவில்லை. அவ்வூர்க்காரர் இல்லையென்பது நிச்சயம். ஏன் அலறினுர் என்றும் தெரியவில்லை. அவரைப் பிடிக்கச் சிலர் தொடர்ந்ததில் அக்ரஹாரம் தாண்டினதும் அவர் எங்கே போனுர் என்று தெரியவில்லை. இந்த விவரத்தை சிலர் வந்து ஆசார்யாரிடம் தெரிவிக்கவே அதற்கு அவர்கள், ''இனிக் கவலைப்பட வேண்டாம்'' என்று சொன்னுர்கள். பிறகே அந்தக் கிராமத்தார்

ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ''இந்தக் கோவிலில் பிரஹ்மராக்ஷஸ் இருப்பதாக வெகுநாளாகப் பிரஸித்தி. அதனால்தான் நாங்கள் அஸ்தமனத்திற்குப் பிறகு இங்கே வருவதில்லை. அதனால் தான் தங்களையும் ஸாயங்காலமே வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். தங்கள் அனுக்ரஹத்தினால் அந்தப் பிரஹ்மராக்ஷஸ் கோவிலைவிட்டு அகன்று அலறிக்கொண்டு ஓடிவிட்டதென்று தெரிகிறது'' என்றார்கள். ஸ்ரீமத் ஆசார்யார் மறுபடியும், ''இனிக் கவலைப்பட வேண்டாம்'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டார்கள். இவ்வளவு தூரம் கிராமத்தார் சொல்லும் போது, ''ஆமாம். அதற்காகத்தான் அக்ஷதை கொண்டுவரச் சொன்னேன். பிரஹ்மராக்ஷஸ்ஸை விரட்டினேன்'' என்று அவர்கள் சொல்லவேயில்லை. இதுவே அவர்களுடைய பெருமை.

ஒரு சிறிய சிவன் கோவிலுக்கு ஆசார்யார் போனார்கள். அங்கே ஒரே மேடையில் கிழக்கே பார்த்து ஈசுவரன் ஸந்நிதியும் தெற்கே பார்த்து அம்பாள் ஸந்நிதியும் இருந்தது. கோவிலுக்குப் போகும்போது இரவு பத்து மணிக்கு மேல் இருக்கும். நல்ல இருட்டு. ஆசார்யார் ஈசுவர தரிசனம் செய்துகொண்டு அம்பாள் ஸந்நிதி உள்ள மண்டபத்தில் நுழைந்ததும் கர்ப்பக்கிருஹத்திற்குள் போகாமல் ''திருஷ்டி பந்தனம் ஆகிறது'' என்றார்கள். அங்குள்ளவர்கள் வெளிச்சம் அதிகம் இல்லாததனால் பார்க்க சிரமப்படுகிறதென்று சொல்கிறதாக நினைத்து விளக்குகளைத் தூண்டிவிடப் போனார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யார் ''எனக்குச் சொல்லவில்லை. அம்பாளுக்கு'' என்றார்கள். அங்குள்ளவர்கள் அர்த்தமாகாமல் திகைத்தார்கள். ஆசார்யாள், ''அம்பாள் ஸந்நிதிக்கு நேரே தெற்கு மதில் சுவரில் ஒரு துவாரம் இருக்கவேண்டியது உண்டு. இங்கே இல்லவே இல்லையா? அடைப்பட்டிருக்கிறதா? என்று பாருங்கள்'' என்று சொன்னார்கள். அங்கே துவாரம் இருந்து விளையாட்டுக் குழந்தைகள் மண்ணை வைத்து அடைத்திருப்பதாகத் தெரிந்து உடனே அதை அப்புறப்படுத்தும்படி செய்துவிட்டு அம்பாள் ஸந்நிதியில் பூஜை செய்தார்கள்.

அவர்களிடத்தில் ஏதேனும் விசேஷ சக்தியிருப்பதாக சிஷ்யர்கள் பாவித்தால், எல்லாம் குருநாதருடைய சக்தி, மந்திரத்தின் சக்தி என்று சொல்வார்களே தவிர, அப்பெருமையைத் தாம் ஏற்றுக் கொள்வதில்லே. மற்றவர்களேயே சிரத்தையுடன் ஜபம் ஹோமம் முதலானதுகளேச் செய்யச் சொல்வார்கள். அப்பொழுதுதான் அவர்கள் மந்திரத்தின் சக்தியை நன்கு அறிய முடியும், அப்பொழுதுதான் அவர்கள் நல்ல ஆஸ்திகர்களாக ஆகிச் சாஸ்திரத்தில் சொல்லிய அனுஷ்டானங்களேக் கைப்பற்றுவார்கள் என்பது ஸ்ரீமத் ஆசார்யாளின் தீர்மானம்.

பாபநாச க்ஷேத்திரத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் சாதுர் மாஸ்யத்திற்காகத் தங்கியிருந்த ஸமயம் ஒரு நாள் ராத்திரி பூஜையின்போது ஏராளமான ஜனங்கள் கூடியிருக்கையில் ஒருவருடைய குழந்தை அணிந்திருந்த தங்கச்சங்கிலியை யாரோ அபஹரித்துக் கொண்டுவிட்டார்கள். பூஜை முடிந்து ஸ்ரீமத் ஆசார்யார் மேடையிலிருந்து கீழே இறங்கும்போது அவர் தனக்கு ஏற்பட்ட வருத்தத்தைத் தெரியப்படுத்திக் கொண்டார். ஸ்ரீஸ்வாமிகள் மறுநாள் காலேயில் எட்டு மணிக்கு அவரை வரச்சொல்லி உத்தரவிட்டார்கள். அப்படியே அவர் மறுநாள் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்று நமஸ்கரித்தார். ஸ்ரீமத் ஆசார்யார் அவரைத் தம் ஸமீபத்தில் உட்காரச் சொல்லி ஒரு மந்திரத்தை உபதேசம் செய்து, ''இதை உங்கள் ஜாகை முன்புறத்தில் உட்கார்ந்துகொண்டு 1008 தடவை ஆவிருத்தி செய்யுங்கள். 1008 வது தடவை மந்திரத்தை உச்சரிக்கும் ஸமயம் உங்கள் பார்வையில் தெருவழியாக யார் போனுலும் அவருடனேயே போங்கள். எவ்வளவு தூரம் போனுலும் கூடவே போங்கள். யோசிக்க வேண்டாம். உங்கள் கார்யம் ஸித்திபெறும்'' என்று சொல்லி அனுக்ரஹித்தார்கள்.

அப்படியே அந்த சிஷ்யர் தன் ஜாகைக்குப் போய்ச் சிரத்தையுடன் ஜபம் செய்துவந்தார். 1008 வது ஆவிருத்தியாகும் தருணத்தில் தெருவில் ஒருவர் போய்க் கொண்டிருந்தார். ஸ்ரீமத் ஆசார்யாரின் ஆக்ஞைப்படி அவருக்குப் பின்னுலேயே இவரும் சென்ருர். அவர் ஊர் எல்லேயைத் தாண்டி வயல் வறப்புகளில் சென்ருர். இவரும் விடாமலே பின்தொடர்ந்தார். இவ்விதம் ஒரு மைல் தூரம் சென்றபிறகு முன்னுல் போய்க் கொண்டிருந்தவர், ஒரு வயலில் இறங்கி அங்கே குனிந்து ஏதோ ஒரு சாமானே எடுப்பதை இவர் பார்த்தபோது, தாம் பறிகொடுத்த

சங்கிலியாக இருக்கக் கண்டு அவரைப் பிடிக்க, உடனே அவர் திடுக்கிட்டுச் சாமானைக் கீழே போட்டுவிட்டுத் திமிறிக் கொண்டு ஓடிப்போய்விட்டார். இவர் தம் சாமானை எடுத்துக்கொண்டு ஸந்தோஷமாகத் திரும்பிவந்து ஸ்ரீமத் ஆசார்யாரை நமஸ்கரித்துத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இவ்வளவு தூரம் இவர் பின்தொடர்ந்தும் முன்னால் போனவன் திரும்பிப் பார்க்காமலும், இவரைக் கவனிக்காமலும் போய்க் கொண்டே இருந்தான் என்றால் மந்திரத்தின் பிரபாவத்தினால் அவன் பிரக்ஞையற்றுப் பரவசமாகவேதான் நடந்திருக்கிறான் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது. நம் தேசத்தில் ஸர்ப்பம் தீண்டினவர்களைப் பிழைப்பிக்கச் சில மாந்திரிகர்கள் மந்திர சக்தியினால் தீண்டின ஸர்ப்பத்தையே வரவழைத்து அதைக் கொண்டே விஷத்தை எடுக்கச் சொல்வார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியே திருடினவனைக் கொண்டே திருடின சொத்து திரும்பக் கிடைக்கும்படி செய்யக்கூடிய சக்தி மந்திரத்திற்கு இருக்கிறது என்பது இந்த ஸம்பவத்தால் தெரிகிறது. ஆனாலும் மந்திரத்தின் சக்தி வெளிப்பட வேண்டுமானால், ஸ்ரீமத் ஆசார்யாரைப் போல சக்தி வாய்ந்தவர்களால் அநுக்ரஹ புரஸ்ஸரமாக உபதேசம் செய்யப்பட்டால்தான் ஸாத்தியமாகும். மந்திரம் என்பது அக்ஷரங்களின் ஸமுதாயம்தானே என்று அச்சிட்ட புஸ்தகத்திலிருந்து கற்றுக் கொண்டுவிட்டதால் மட்டும் பலன் ஏற்படாது.

ൽ • ൾ

ஒரு பெரிய லௌகிக ஸ்தானம் வஹித்த உத்தியோகஸ்தருடைய பையனுக்கு வெகுநாளாக அபஸ்மார ரோகம் (வலிப்பு) இருந்து வந்தது. எவ்வளவோ விதமாக வைத்தியமும் மாந்திரிகமும் செய்து பார்த்தும் பிரயோஜனப் படவில்லை. ஸ்ரீமத் ஆசார்யார் காலடியில் இருக்கும்போது அவர் தம் பையனை அழைத்துக்கொண்டு வந்து அவர்களிடம் தெரிவித்தார். ஸ்ரீமத் ஆசார்யார் சற்று ஆலோசித்துவிட்டு, ''பிராரப்தம் பலமாயிருக்கிறது. இருந்தாலும் பகவான் அனுக்ரஹம் செய்வார். சில ஜபங்கள் ஹோமங்கள் செய்ய வேண்டியிருக்கும். அதற்குத் தகுந்த மனுஷ்யர்களைத் தருவித்துச் செய்யலாம்'' என்று அனுக்ரஹித்தார்கள். அப்படியே அம்மனுஷ்யர்களைத் தருவித்துப் பின்னால் ஒரு நாள் ஸ்ரீமத்

ஆசார்யாருடைய ஆக்ஞையின்படி ஜபஹோமங்கள் கிரமப்படி நடந்தன. அன்று ஸாயங்காலமே அந்தப் பையனுக்கு அபஸ்மாரம் ஏற்பட்டது. இதைக்கண்டு மிகவும் துக்கத்துடன் அவன் தகப்பனுர் ஆசார்யாரிடம் சென்று தெரிவித்தார். அதற்கு ஆசார்யார் ''பாதகமில்லே. நாளைக் காலேயில் ஒன்றும் இராது'' என்று சொன்னுர்கள். இவர் இங்கே வந்து தெரிவித்துவிட்டுப் போவதற்குள் பையன் எழுந்திருந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். இதைக் கண்டு தகப்பனுர் ஸந்தோஷப்பட்டார். ஆனுல் மறுபடியும் ஒரு மணி சென்று வலிப்பு வந்துவிட்டது. மறுபடியும் ஆசார்யாரிடம் சென்று தெரிவித்தார். ''பாதகமில்லே. காலேயில் ஒன்றும் இராது'' என்றே பதில் அளித்தார்கள். பிறகு அந்தப் பையனுக்கு அரைமணிக்கு ஒருதரம், பத்து நிமிஷத்திற்கு ஒருதரம் வலிப்பு வர ஆரம்பித்தது. ''ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்துப் பிரயோஜனம் என்ன? நம் பாபத்தை நாமே அனுபவிக்கத்தான் வேண்டும்'' என்று ஸமாதானப்படுத்திக் கொண்டார். அன்று இரவில் 20 தடவை வலிப்பு வந்திருக்கும். ஸஹிக்க முடியாத அனுபவம். பிறகு காலே நான்கு மணி சுமாருக்கு பையன் அயர்ந்து தூங்கிவிட்டான். ஸூர்ய உதயத்தில் எழுந்தான். முகத்தில் களேயே மாறியிருந்தது. சுறுசுறுப்பாக நதியில் ஸ்நானம் செய்து தகப்பனுருடன் ஸ்ரீமத் ஆசார்யாரைத் தரிசிக்க வந்துவிட்டான். அப்பொழுதும் ஸ்ரீமத் ஆசார்யார், ''இனி ஒன்றும் இராது'' என்று சொல்லி அனுக்ரஹித்தார்கள். அப்படியே அந்த வியாதி அன்று முதல் அவனேவிட்டு விலகி ஸௌக்கியமாயிருந்து வந்தான்.

''பிராரப்தம் பலமாயிருக்கிறது''என்று ஆசார்யார் சொன்னதன் தாத்பர்யம் அநுபவித்தே தீரவேண்டியதுதான் என்றும் ஆனுல் பல ஸமயங்களில் வெகுநாளாக அநுபவிக்க வேண்டிய துக்கத்தைச் சில உசிதமான கர்மாக்களால் முன்னுல் ஆகர்ஷணம் செய்து ஒரே நாளில் அநுபவித்து விடலாம் என்றும் தெரிகிறது.

ஒரு பிரபு, நீர் ரோகத்தினுல் அடிக்கடி பிளவைகள் ஏற்பட்டு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தவர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து பிரார்த்தித்துக் கொண்டார். அவருக்கு மடத்திலேயே வேண்டிய பரிஹாரங்கள் செய்யலாமென்று ஸ்ரீமத் ஆசார்யார் உத்தரவு செய்ததன்பேரில் ஒரு நாள் விசேஷமாக ஹோமங்கள் நடந்தன.

பூர்ணாஹுதி ஸமயத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் யக்ஞசாலைக்கு வந்து கூட இருந்து ஆஹுதியான பிறகு அக்னியை பிரதக்ஷிணம் செய்துவிட்டு அஞ்ஜலி செய்துகொண்டு ''இந்த ஆஹுதியைப் பகவான் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதற்கு அடையாளமாக மழை பெய்யும் என்று பெரியோர்கள் சொல்வார்கள்'' என்று சொன்னார்கள். இது நடந்தது பங்குனி, சித்திரையில். நல்ல வெயில் அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் ஆசார்யார் இவ்விதம் சொன்னவுடன் எங்கிருந்தோ இடி சப்தம் கேட்டது. திடீரென்று மேகங்கள் சூழ்ந்துகொண்டு உறுமின. க்ஷணத்திற்குள் தாரை தாரையாக மழைபெய்ய ஆரம்பித்து விட்டது. யக்ஞகுண்டத்திற்குள் மழை ஜலம் போய்விடாமல் மண் வரப்பு போடும்படி ஏற்பட்டது. ஸ்ரீமத் ஆசார்யாரும் அங்கேயே நின்றுவிட்டார்கள். மடத்திற்குப் போக வொட்டாமல் அவ்வளவு பலத்த மழை. இவ்விதம் கொஞ்ச நேரம் மழை பெய்து நின்றுவிட்டது. அதன் பிறகுதான் அவர்கள் மடத்திற்குச் சென்றார்கள். இந்தப் பிரபுவானவர் இந்த ஹோமம் நடந்து சில தினங்களுக்குள் மறுபடியும் பிளவை ஏற்பட்டு மிகவும் சிரமப்பட்டார். ஆனால் அதோடு வியாதி நிவிருத்தியாகிப் பிறகு வெகுநாள் ஸௌக்கியமாக இருந்தார்.

இதிலிருந்தும் பிராரப்தத்தைக் கட்டுப்படுத்தலாமே தவிர பூராவும் விலக்கிவிடுவது ஸாத்தியமில்லை என்று தெரிகிறது. இவ்விதம் பிராரப்தம் பிரபலமாக இல்லாமல், பிராயச்சித்த கர்மானுஷ்டானத்தினால் விலகக்கூடிய சில பூர்வ பாபங்களும் உண்டு. அவைகளுக்குக் கர்மவிபாகாதி கிரந்தங்களில் கண்ட பரிஹாரங்களைச் செய்தால் அப்பாபங்கள் நசித்துப் பலனைக் கொடுக்காமல் இருந்துவிடலாம். அப்படியும் அநேகர்களுக்கு ஸ்ரீமத் ஆசார்யார் பரிஹாரம் சொல்லி ஸௌக்கியம் ஏற்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு அறிகிறோம்.

ஒரு பிரபு, ஸ்ரீமத் ஆசார்யாரிடம் விசேஷமான பக்தியுள்ளவர், தம்முடைய சொந்த மோட்டார்காரில் தம் மனைவி, குழந்தைகள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு சிருங்ககிரிக்குப் போய் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்துகொண்டு சில நாள் தங்கியிருந்தார். பிறகு ஊருக்குத் திரும்ப நினைத்து ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்தார்.

பிரபு : நாளை ஊருக்குப் போகலாமென்று நினைக்கிறேன்.

ஆசார்யார் : நாளைக்கே போகவேண்டுமா? என்ன அவஸரம்?

பிரபு : ஊரிலிருந்து அவஸரமாகக் கடிதம் வந்திருக்கிறது. அங்கே போய்க் கவனிக்கவேண்டிய அவசியமான விஷயங்கள் இருக்கின்றன.

ஆசார்யார் : (சற்று ஆலோசித்துவிட்டு) அவசியம் போக வேண்டியதாகத்தான் தெரிகிறது. ஆனால் கார்யம் ஊரில் இல்லை.

பிரபு : இல்லை. ஊரில்தான் கார்யம்.

ஆசார்யார் : எப்படியும் போய்விட்டு வாருங்கள். எல்லாம் க்ஷேமமாக நடக்கும். கவலைப்பட வேண்டாம்.

இவ்விதம் உத்தரவு வாங்கிக்கொண்டு குடும்பத்தாருடன் அவர் சிருங்ககிரியிலிருந்து புறப்பட்டு மைஸூருக்கு ஸமீபத்தில் போய்க் கொண்டிருக்கையில் , எதிர்ப்பாராமல் இவர் கார் மரத்தில் மோதி சுக்குத்தூளாகப் போய்விட்டது. எல்லாருக்கும் பலத்த காயம். மைஸூர் ஆஸ்பத்திரியில் சில வாரங்கள் இருந்துவிட்டே போகும்படி ஏற்பட்டது. ஆறு மாஸமுள்ள கைக்குழந்தைக்கு மாத்திரம் எவ்விதக் காயமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆசார்யாருடைய அநுக்ரஹத்தினலேயே உயிர் தப்பி காயத்தோடு விட்டது என்பதை உணர்ந்தார்கள்.

இன்னொரு பிரபுவுக்கு ஸந்தானம் இல்லை. அவருடைய ஸஹோதரர்களுக்கெல்லாம் ஸந்தானம் இருந்தபோதிலும் குடும்பத்தில் ஜ்யேஷ்டரான இவருக்கு இல்லையே என்று பந்துக்கள் வருந்தினர்கள். அவருடைய கிருஹத்திற்கு ஸ்ரீமத் ஆசார்யார் விஜயம் செய்திருந்த ஸமயம் இவ்விஷயத்தை அவர்களிடம் தெரியப்படுத்தினர்கள். உடனே ஆசார்யார் அந்த பிரபுவைப் பார்த்து, ''அம்பிகை மோக்ஷ ஸாம்ராஜ்யம் வரை கொடுக்க ஸித்தமாயிருக்கும்போது இதை ஒரு புருஷார்த்தமாக நினைத்து அவளிடம் கேட்க வேண்டுமா?'' என்ருர்கள். அதற்கு அவர் ''வேண்டாம்'' என்று சொல்லிவிட்டார். பந்துக்களுக்கு அவரிடம் வெகு கோபம் வந்தது. அவருக்காகவே இவர்கள்

கேட்டிருக்கையில் அவர் வாயால் வேண்டாம் என்றல் என்ன செய்ய முடியும்? அவ்விதம் அவர் வாயில் வந்தது அவருக்கு இந்த ஜன்மாவில் ஸந்தான பாக்கியம் இல்லை என்பதையே ருசுப்படுத்திற்று.

ஒரு பக்தர் தம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்திருந்தார். ஆனல் அப்பெண் பர்த்தாவின் கிருஹத்திற்குப் போனல் அவள் உடம்பில் ஏதோ நடுக்கம் வந்துவிடுகிற படியால் அங்கே போக மறுத்துவிட்டாள். இருதரத்தார்களும் பலவிதமாக வைத்தியம், பிரார்த்தனை முதலானது செய்து பார்த்தும் பிரயோஜனப்படவில்லை. அதன்பேரில் மாப்பிள்ளைப் பையனின் பெற்றோர்கள் அவனுக்கு வேறு விவாஹம் செய்துவிட்டார்கள். இந்த நிலையில் மிகவும் வருத்தமடைந்த அந்தப் பக்தர் தம் பெண்ணையும் அழைத்துக்கொண்டு சிருங்ககிரிக்குப் போய் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்தார். பிறகு ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யார் அப்பெண்ணை கூப்பிட்டு ஒரு சுலோகத்தை உபதேசித்தார்கள். ''இதை நாள் தவருமல் ஜபித்து வரட்டும். மேலும் இந்தச் சுலோகத்தை பூர்ஜபத்திரத்தில் எழுதி ரக்ஷையாகத் தரித்துக்கொண்டு வரவேண்டும். தொண்ணூறு நாளில் அநுகூலம் தெரியும்'' என்று அநுக்ரஹித்தார்கள். மறுநாள் ஊருக்குப் புறப்படுவதற்கு அனுமதி வாங்கிக் கொள்வதற்காகத் தகப்பனர் புத்திரியுடன் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் போய் நமஸ்கரித்தார். அப்பொழுது அவர்கள், ''பூர்ஜபத்திரம் என்றல் எது என்று தெரியுமா?'' என்று கேட்டார்கள். அதற்கு அவர், ''தெரியாது. எங்கள் ஊரில் ஆயுர்வேத பண்டிதர் இருக்கிறர். அவரிடம் கேட்டுக்கொள்ளலாம் என்று இருந்தேன்'' என்றர். ''அவ்வளவு சிரமப்பட வேண்டாம். நானே பூர்ஜபத்திரத்தில் சுலோகத்தை எழுதிவிட்டேன். இதை வாங்கிக்கொண்டு, தங்கத்திலாவது வெள்ளியிலாவது செய்த சிறு குழலில் போட்டு ரக்ஷையாகக் கட்டிக் கொள்ளட்டும். இவ்வூரிலேயே தகுந்த குழல் அகப்படலாம்'' என்று மிகக் கருணையுடன் சொல்லி அநுக்ரஹம் செய்து கொடுத்தார்கள்.

பிறகு அதைத் தரித்துக்கொள்ள ஆரம்பித்த சில நாட்களுக்குள் அந்தப் பெண் தானகவே, ''புக்ககத்திற்குப் போக வேண்டும்'' என்று வற்புறுத்த ஆரம்பித்தாள். அவளுடைய மாமியாருக்கு ஜ்வரம் கண்டு புலம்புகையில், ''ஒரு பெண்ணைக் கல்யாணம்

செய்திருக்க இன்னொருத்தியையும் கல்யாணம் செய்து வைத்தேனே! இந்தப் பாபத்திற்கு என்ன செய்கிறது? எப்படியாவது மூத்தாளை இங்கே அழைத்துவர வேண்டும்'' என்று பிடிவாதம் பிடித்தாள். சில நண்பர்களின் ஏற்பாட்டினால் இப்பெண்ணும் அங்கே போய் இளையாளுடன் ஒற்றுமையாகப் பர்த்தாவிற்குப் பிரீதிபாத்திரமாயிருந்து குடித்தனம் செய்து வந்தாள்.

ஒரு பிரபு தன் குழந்தை வயதாகியும் சரியானபடி பேசவில்லையென்று ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்துப் பரிஹாரம் கேட்டுக்கொண்டு அவ்விதமே நடத்தி அனுகூலம் அடைந்தார். பரிஹாரம் சொல்லும்போது கர்மவிபாகரீதியாய்ப் பேசாததற்குக் காரணம் எடுத்து உரைத்தது விசேஷமாக இருந்தது.

''முந்தின ஜன்மாவில் நல்ல வித்வானாக இருந்தும் தன்னை அண்டிவந்து கேட்டுக்கொண்ட யோக்கியதையுள்ள ஒரு சிஷ்யனுக்குச் சொல்லிக்கொடுக்க மறுத்திருந்தால், இந்த ஜன்மாவில் புத்தியும் காதும் சரியாக இருந்தாலும்கூட, நாக்கு உச்சரிக்க உதவாது. முந்தின ஜன்மாவில் சில குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கிறபோது ஒரு குழந்தை தவறிக் கிணற்றிலோ குட்டையிலோ விழுந்துவிடுகிறதென்று வைத்துக் கொள்வோம். இதைப் பார்த்துத் திடுக்கிட்டு ஒன்றும் தோன்றாமல் மற்றக் குழந்தைகள் அநேகமாய் நாலா பக்கங்களிலும் ஓடிப்போய்ப் பெரியோர்களிடம் தெரிவிக்கும். அதில் ஒரு குழந்தை பெரியோர்களிடம் சொல்ல வேண்டும் என்று மனதில் தோன்றியும்கூட, சொன்னால் ''நீதான் தள்ளிவிட்டாய்'' என்று தன்பேரில் குற்றம் சாற்றுவார்கள் என்று நினைத்துத் தானும் சொல்லாமல் மற்றவர்களையும் சொல்லவிடாமல் தடுத்ததேயானால், பேசும் திறமையிருந்தும் அதை அவசியமான ஸமயத்தில் உபயோகப்படுத்தாமல் ஜலத்தில் விழுந்த குழந்தையைக் காப்பாற்ற வழியில்லாமல் செய்ததால், இந்த ஜன்மத்தில் பேசும் திறமையில்லாமல் போய்விடலாம். இவ்விதமாகப் பல காரணங்கள் இருக்கலாம். எப்படியும் வாக்கு இருந்தும் அதை வேண்டியபோது உபயோகப்படுத்தாததே இப்பொழுது வாக்கில் குறை இருப்பதற்குக் காரணம். அப்படியேதான் மற்ற இந்திரியங்கள் விஷயத்திலும்.''

ஜபாதிகளை அவைகளின் அர்த்தமோ தத்துவமோ தெரியாமல் செய்தால் பலன் உண்டா? என்று ஒரு சிஷ்யர் கேட்டபோது ஸ்ரீமத் ஆசார்யார் சொன்னதாவது :

சாஸ்திரத்தில் எந்தக் கர்மா விதிக்கப்பட்டாலும் அததற்குள்ள பலனையும் சொல்வது வழக்கம். ஒருவனுக்கு ஒருவித கர்மாவில் பிரவிருத்தி வரவேண்டுமானுல் அதில், ''இஷ்ட ஸாதனதா ஞானம்'' வேண்டுமென்று சொல்வார்கள். அதாவது ''இதைச் செய்தால் இஷ்டமான ஒரு பலன் கிடைக்கும்'' என்ற அறிவு முன்ஞல் ஏற்பட்டால்தான் அதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றும். அந்த இஷ்டத்தின் ஸ்வரூப விஷயமான ஞானம், அதற்கு ஸாதனமான கர்மாவின் ஸ்வரூப விஷயமான ஞானம், இவைகள் நன்ருக இருந்தால் அனுஷ்டானமும் நன்ருக இருக்கும், அதன் பலஞன இஷ்டப்பிராப்தியும் நன்ருக இருக்கும்.

ஆஞலும் இந்த ஞானம் இல்லாமலே கர்மாவைச் செய்து விட்டாலும் அந்தக் கர்மா வீண் போகாது. கர்மாவிற்குப் பலனைக் கொடுக்கும் ஸ்வபாவம் எப்பொழுதும் இருந்தே வருவதால், கர்மா, செய்கின்றவனுடைய ஞானத்தை அபேக்ஷிக்கிறதில்லை.

ஆஞலும் பலனில் தாரதம்யம் உண்டு. கர்மஸ்வரூபம் தெரிந்து செய்கிறவனுக்கும் தெரியாமல் செய்கிறவனுக்கும் உள்ள வித்தியாஸத்தை உபநிஷத்தில் சொல்லும்போது, ''எது ஞானத்தோடு, சிரத்தையோடு ஸூக்ஷ்மங்களை அறிந்து செய்யப்படுகிறதோ அது வீர்யவத்தரம் (அதிக வீர்யமுள்ளது) ஆகும்'' என்று கண்டிருப்பதஞல் ஞானமில்லாமல் செய்வதற்கும் வீர்யம் உண்டு என்று ஸித்தமாகிறது.

நம் பரமாசார்யாள் பாஷ்யத்தில், ''ஒருவன் பேதிமருந்தை இது என்னது, இது என்ன செய்யும், என்ற ஞானத்துடன் சாப்பிட்டாலும் சரி, ஞானமில்லாமல் சாப்பிட்டாலும் சரி, மலப்பிரவிருத்தி ஏற்பட்டே தீரும்'' என்று எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். அப்படியாஞல் ஞானம் வேண்டாமே என்ற ஸந்தேஹம் ஏற்படுகையில், ''ஒரு வேடன் காட்டில் கிடந்த ஒரு நாகமணியைக் கண்டு ஏதோ மதிப்புள்ள ஸாமான் என்று மாத்திரம் தெரிந்துகொண்டு அதை ஒரு ரத்தின வியாபாரியிடம் கொடுத்து ஸ்வல்பத் தொகை வாங்கிக்கொண்டு ஸந்தோஷத்தை அடைகிருன். அதே நாகமணியை அந்த ரத்தின வியாபாரி அதன் மதிப்பைத் தெரிந்தவஞதலால் ஏராளமான தொகைக்கு

விற்றுவிடுகிருன். இரண்டு இடத்திலும் விற்கப்படும் ஸாமான் ஒன்ருக இருந்தும், வேடனுக்கு ஸ்வல்பமே கிடைக்கிறது, வியாபாரிக்கு ஏராளமாய்க் கிடைக்கிறது. இந்த வித்தியாஸத்திற்குக் காரணம் மணியல்ல, அதைக் கையாளுகிற மனுஷ்யர்களிடமுள்ள ஞானத்தின் தாரதம்யம்தான். அவ்விதமே ஞானமில்லாமல் செய்யும் கர்மாவிற்கும், ஞானத்துடன் செய்யும் கர்மாவிற்கும், ஸ்வரூபத்தில் வித்தியாஸம் இல்லாமல் போனுலும் பலனில் தாரதம்யம் உண்டு'' என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள்.

முதலில் பேதி மருந்து திருஷ்டாந்தத்தைச் சொல்லிவிட்டு பிற்பாடு வேறு திருஷ்டாந்தத்தைச் சொல்லி ஸமாதானம் சொல்லியிருக்கிறபடியால், முதல் சொன்ன திருஷ்டாந்தம் நேர் ஸமாதானமாகாது என்று சிலருக்குத் தோன்றலாம். நன்கு நமக்கு மனஸில் பதிய வேண்டும் என்பதற்காகவே இரண்டாவது திருஷ்டாந்தத்தை ஆசார்யாள் சொன்ஞர்களே தவிர, முதல் திருஷ்டாந்தத்திலேயே பிரகிருதமான விஷயத்தை ஸமர்த்தனம் செய்ய முடியாது என்கிற தாத்பர்யத்திலில்லை.

ஒருவன் இது இன்னது என்று தெரியாமல் ஒரு மாத்திரையைச் சாப்பிட்டுவிட்டு மலப் பிரவிருத்தி ஏற்பட்டுவிட்டால், அவன் அந்த மாத்திரை விஷமோ என்று பயப்படுவான். தனக்கு ஏதோ பாதகம் ஏற்பட்டுவிட்டதாக நினைப்பதால் துக்கமே மேலிடும். இது பேதி மருந்து என்று தெரிந்து அதைச் சாப்பிடுகிறவன், மலப் பிரவிருத்தியாகும்போது பயப்படவே மாட்டான். நல்லதென்றே நினைப்பான். சரீரத்திலுள்ள தோஷங்களெல்லாம் போய்விட்டதாகத் தெரிந்து கொள்வான், ஸுகத்தையே அடைவான். மருந்து உட்கொள்வது என்பது ஏகரூபமாய் இருந்தாலும் ஒருவனுக்குத் துக்கத்தையும் மற்ருெருவனுக்கு ஸுகத்தையும் கொடுக்கிறது என்பது நன்ருகத் தெரிகிறது. இவ்விருவர்களுக்கும் உள்ள வித்தியாஸம் மருந்து சாப்பிடுவது என்ற கர்மாவில் இல்லை; அந்தக் கர்மாவின் ஸ்வரூப விஷயமாயுள்ள இவர்களுடைய ஞானத்திலுள்ள வித்தியாஸத்திஞல்தான். ஆகையால் அறிந்து செய்வதே சிலாக்கியம்.

7. நன்மொழிகள்

ஸ்ரீமத் ஆசார்யாருக்குத் தாய் பாஷை தெலுங்கு, தேச பாஷை கன்னடம், பயின்ற பாஷை ஸம்ஸ்கிருதம், சிஷ்யர்களுக்காகப் பரிச்சயம் செய்துகொண்ட பாஷை தமிழ். தமிழில் தமக்கு நன்ருகப் பரிச்சயம் ஏற்படவில்லை என்று அடிக்கடி சொல்வார்கள். ஆனுலும் சில ஸமயங்களில் தமிழர்களைவிட அவர்களுக்கே அந்தப் பாஷையில் அதிக ஞானமிருந்ததாகத் தெரியவரும்.

ஆசார்யார் : தமிழில் ''பிறவி'' என்பதற்கும் ''பிறப்பு'' என்பதற்கும் என்ன வித்தியாஸம்?

சிஷ்யர் : இரண்டும் ஒன்றுதான்.

ஆசார்யார் : ஒன்ருயிருந்தால் இரண்டு வார்த்தைகள் எதற்கு?

சிஷ்யர் : ஒரே அர்த்தத்தில் பல வார்த்தைகள் இருப்பது உண்டு.

ஆசார்யார் : ஒரு பாஷையிலும் இருக்க நியாயமில்லை. ஒரு வார்த்தை ஒரு பதார்த்தத்தை குறிக்க வேண்டுமானுல், அப் பதார்த்தத்தின் ஒரு விசேஷ அம்சத்தை அவலம்பித்துக் கொண்டு தான் பிரவிருத்திக்கும். இதை ஸம்ஸ்கிருதத்தில் ''பிரவிருத்தி நிமித்தம்'' என்பார்கள். ''அக்னி'' என்பதும் ''வஹ்நி'' என்பதும் நெருப்பையே குறிக்கலாம். ஆனுலும் ''முன்னுல் கொண்டு போகிருர்'' என்ற நிமித்தத்தை வைத்து ''அக்னி'' என்ற பெயரையும், ''தேவதைகளுக்கு ஹவிர்பாகங்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கிருர்'' என்ற நிமித்தத்தை வைத்து ''வஹ்நி'' என்ற பெயரையும்அடைகிருர். அப்படியே எல்லாவற்றையும் எரிப்பதால் ''தஹந'' என்றும், எவ்வளவு

கொடுத்தாலும் போதாதென்று விழுங்கி விடுகிறபடியால் ''அநல'' என்றும், அவ்வக்னியே பெயர் வஹிக்கிருர். அதேமாதிரி பழக்கத்தில் ''பிறவி'' என்பதையும் ''பிறப்பு'' என்பதையும் வித்தியாஸமில்லாமல் நாம் ஸாதாரணமாக உபயோகித்து வந்தாலும், அவ்விரண்டு பதங்களுக்கும் உள் கருத்துத் தனியாகவே இருக்க வேண்டும். அது என்ன என்று கேட்டேன்.

சிஷ்யர் : எனக்குத் தெரியவில்லை.

ஆசார்யார் : இப்படியிருக்கலாமோ! ''ஜனனம்'' என்பது ''பிறக்கிறது'' என்கிற கிரியையைக் குறிக்கும்; ''ஜன்ம'' என்பது அந்தக் கிரியை (காரியம்) முடிந்து அதன் பலஞக இருக்கிற ஸ்திதியைக் குறிக்கும். அதாவது ஒன்று கிரியை, மற்ருென்று கிரியா ஜன்யபலன் (காரியத்திலிருந்து உண்டான பலன்). அதேமாதிரி தமிழில் ''பிறப்பு என்பது ஜனனக்கிரியையையும், ''பிறவி'' என்பது ஜனனக்கிரியா ஜன்யமான ஜன்மரூப பலனையும் குறிக்கிறதென்று வைத்துக் கொள்ளலாமா?

சிஷ்யர் : அப்படித்தான் என்று தோன்றுகிறது.

ஆசார்யார் : அநேகமாய் எல்லாப் பாஷைகளிலும் அந்த அந்த லிபி (எழுத்துக்கள்) பரிச்சயமிருந்தால் அப்படியே வாசித்து விடலாம். ஆனுல் பாஷாஞானம் இருந்தால்தான் அர்த்தம் தெரியும். அதாவது, சப்தஞானம் முதலில் ஏற்படும், பிறகு அர்த்தம் என்னவென்று தேடும்படி இருக்கும். தமிழில் மாத்திரம் இந்தக் கிரமம் மாறுபடுகிறதாகத் தெரிகிறது. இதில் அர்த்தம் முதலில் தெரிந்தால்தான், அக்ஷரங்களைச் சரியானபடி உச்சரித்து வாசிக்க முடியும் என்று தெரிகிறது. உதாரணமாக, ''பலம்'' என்று எழுதியிருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். அது நிறையளவைக் குறிக்கும் पलं என்று வாசிக்கிறதா? பழத்தைக் குறிக்கும் फलं என்று வாசிக்கிறதா? சரீரசக்தியைக் குறிக்கும் बलं என்று வாசிக்கிறதா? இந்த வார்த்தை உபயோகப்

பட்டிருக்கும் பிரகரணத்திற்குத் தக்கபடி அர்த்தம் தெரிந்துகொண்டு தானே இதைச் சரியானபடி உச்சரிக்க முடியும்? இது தமிழுக்கு ஏற்பட்ட தனித்த விசேஷம் என்று தெரிகிறது.

சிஷ்யர் : நான்கு சப்தங்களைக் குறிக்க ஒரே அக்ஷரத்தை வைத்துக் கொண்டிருப்பதால், இவ்விதம் ஏற்படுகிறது. क, ख, ग, घ எல்லாவற்றிற்கும் ''க'' என்கிற ஒரே எழுத்துத்தான்.

ஆசார்யார் : அதோடு ह வையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

சிஷ்யர் : வாஸ்தவம். ஐந்து சப்தங்களுக்கு ஒரு எழுத்து.

ஆசார்யார் : ஏன்? ஏழு சப்தங்களுக்கும் ஒரே எழுத்து இல்லையா? च, छ, ज, झ, श, ष, स எல்லாவற்றிற்கும் ''ச''தானே?

சிஷ்யர் : ஆம்.

ஆசார்யார் : இப்படிப் பல சப்தங்களுக்கு ஒரே எழுத்து இருப்பதனால், ஒரே வார்த்தைக்குப் பல அர்த்தங்களும் இருக்கக்கூடியதனால் சிலேஷைக்குத் தமிழில் நல்ல அவகாசம் இருக்குமே?

சிஷ்யர் : இருக்கிறது.

ஆசார்யார் : உச்சரிப்பு வித்தியாஸத்தினால் ஏற்படுகிற சிலேஷை அவ்வளவு சுத்த சிலேஷை ஆகாது. உச்சரிப்பில் வித்தியாஸம் இல்லாமலே சிலேஷை இருப்பதுதான் சிலாக்கியம். அப்படியும் தமிழில் இருக்கலாமே? ஒரு உதாரணம் சொல்லுங்கள்.

சிஷ்யர் : எனக்கு இப்பொழுது ஒன்றும் தோன்றவில்லை.

ஆசார்யார் : (சற்று ஆலோசித்து புன்சிரிப்புடன்)நம் தர்ம சாஸ்திரங்களில், வீதி வழியாகப் போகையில் ஒரு பிராஹ்மணர் தென்பட்டால் அவருக்கு இடது பக்கத்தைக் காட்டாமல் வலமாகவே போகவேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கிறது. அந்த நியமத்தைத் தமிழ்ப்படுத்திச் சொன்னால் இக்காலத்தில் உள்ள சிலருக்கு திருப்தியாகக்கூட இருக்கும். ''பார்ப்பானுக்கு இடம் கொடேல்'' என்றால் நல்ல தமிழ் தானே!

ஆசார்யார் : தமிழ்த் தேசத்தில் ஒருவரை, ''என்ன செய்து கொண்டிருக்கிறீர்?'' என்று கேட்டால், ''வெறுமென இருக்கிறேன்'' என்கிருர். இன்னெருவர், ''தேமேனு இருக்கிறேன்'' என்கிருர். மற்றெருவர், ''சும்மா இருக்கிறேன்'' என்கிருர். இந்த மூன்றுக்கும் என்ன வித்தியாஸம்?

சிஷ்யர் : ஒரு வித்தியாஸமும் இல்லே. எல்லாம் ''கார்யம் ஒன்றும் செய்யாமல் இருக்கிறேன்'' என்ற அர்த்தத்தில்தான் உபயோகப்படுகின்றன.

ஆசார்யார் : அர்த்தம் ஒன்ருக இருக்கலாம். தாத்பர்யத்தில் சப்தம் வேறுபட்டதற்குக் காரணம் என்ன?

சிஷ்யர் : அவரவர்கள் பழக்கம்தான் காரணம்.

ஆசார்யார் : இந்தக் காரணம் போதாது. பழக்கம் வித்தியாஸப் பட்டதற்கு என்ன காரணம் என்று மறுபடியும் கேட்கும்படி ஏற்படும்.

சிஷ்யர் : எனக்குத் தெியவில்லே.

ஆசார்யார் : இப்படி இருக்கலாமா? வெறுமென இருக்கிறேன் என்ருல் ''வெறும் என இருக்கிறேன். அதாவது மனஸில் ஒருவித ஸங்கல்பமும் இல்லாமல் மனஸைக்காலியாக வைத்துக்கொண்டிருக்கிறேன்'' என்ற அர்த்தம் த்வனிக்கிருப்போல் தோன்றுகிறது.

சிஷ்யர் : இருக்கலாம்.

ஆசார்யார் : ''தேமேனு'' என்று சொல்கிருர்களே அது ''தெய்வமே என'' என்பதின் மருவாகத்தோன்றுகிறது. அதாவது, ''நாஞக ஒருவித ஸங்கல்பமோ பிரவிருத்தியோ செய்யாமல் எல்லாம் தெய்வாதீனம் என்று விட்டுவிட்டு இருக்கிறேன்'' என்ருகலாம். சிலர் ''சிவனேனு இருக்கிறேன்'' என்று சொல்லியும் கேட்டிருக்கிறேன். அவர்களும் ''சிவனே என்று'' என்று இதே தாத்பர்யத்தில் சொல்கிருர்கள் போலும்.

சிஷ்யர் : அப்படியே இருக்கலாம்.

ஆசார்யார் : ''சும்மா இருக்கிறேன்'' என்பவர்கள் ''ஸ்வம் ஆக இருக்கிறேன், அதாவது தன் நிலேயறிந்து, தனக்கு ஆக வேண்டிய கார்யம் ஒன்றுமில்லே என்ற நிச்சய புத்தியுடன் தாளுக இருக்கிறேன்'' என்ற எண்ணத்தில் சொல்லலாம் என்று நினேக்கிறேன்.

சிஷ்யர் : ஒருவராவது இவ்வளவு தூரம் தாத்பர்யம் அறிந்து சொல்வதாகத் தெரியவில்லே.

ஆசார்யார் : அறிந்து சொல்லவேண்டும் என்பதில்லே. இருந்தாலும் இந்த அறிவு அடிப்படையாக ஜனங்களின் மனஸில் ஸம்ஸ்கார ரூபமாகப் பதிந்திருக்கிறதென்றே தெரிகிறது. ஏதேனும் விசேஷ ஸுகத்தை அநுபவிக்கும்போது ''பிரஹ்மானந்தம்'' என்று சொல்கிறவர்கள் பிரஹ்மானந்தத்தை அநுபவித்துவிட்டா சொல்கிருர்கள்? பரம்பரையாக ஸுகங்களுக்குள் உத்தமமான ஸுகம் பிரஹ்மானந்தம் என்கிற ஸம்ஸ்காரம் மனஸில் பதிந்திருக்கிறது. அப்படியே சித்தவிருத்திகளே நிரோதம் செய்து யோக நிஷ்டையில் நிற்பவனுக்கும் தன்னுடைய ஸகலவிதமான அம்சங்களேயும் பகவானிடமே அர்ப்பணம் செய்து சரணுகதியடைந்து தனக்கென்று ஒருவிதப் பிரவிருத்தியும் வைத்துக் கொள்ளாமல் பக்தி நிஷ்டையில் இருப்பவனுக்கும் தேஹேந்திரிய மனேபுத்தி முதலிய யாவும் நான் அல்லவென்று ஒதுக்கிக் கேவல அகண்ட சைதன்ய ரூபமாய் ஞான நிஷ்டையில் லயித்திருப்பவனுக்கும் செய்ய வேண்டிய கார்யம் ஒன்றும் இல்லே என்று நம் சாஸ்திரங்கள் கோஷிக்கின்றன. இதைப் பெரியோர்கள் சொல்லிச்சொல்லிக் கேட்டுத் தனக்கு வேலேயில்லாத ஸ்திதியை யோகிபோல், ''வெறுமென'' என்றும், பக்தன் போல் ''தெய்வமே என'' என்றும், ஞானிபோல் ''ஸ்வம் ஆக'' என்றும் சொல்லும்படிக்கான ஸம்ஸ்காரம் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதென்று தோன்றுகிறது.

ஆசார்யார்: பணக்காரர்களுக்கு பணம் இருப்பதால் இந்த லோகத்திலுள்ள ஸுகத்தை அநுபவித்து விடலாம் என்ற தீர்மானத்துடன் நடந்து வருகிறுர்கள். அவர்களிடம் பரலோகத்திலோ ஐந்மாந்தரத்திலோ இதைவிட ஸுகம் அதிகமாக கிடைக்க வேண்டுமானுல் இப்பொழுது கைவசமுள்ள பணத்தை நல்ல விஷயங்களில் செலவழிக்க வேண்டுமென்று சொன்னுல், ''பரலோகமோ ஐந்மாந்தரமோ இப்பொழுது கண்ணுக்குத் தெரியவில்லை. சாஸ்திரங்களில் சொல்லியிருப்பது வாஸ்தவமோ இல்லையோ, அவைகளை நம்பிக் கொண்டு கையிலுள்ள போக ஸாதனங்களை இழந்துவிட்டுப் பின்னுலும் ஒன்றும் கிடைக்காமல் போய்விட்டால் இரண்டும் அல்லவா நஷ்டம்?'' என்றெல்லாம் ஆலோசனை செய்துகொண்டு இப்பொழுது கிடைத்துள்ள ஸுகஸாதனங்களை நாமே வைத்துக்கொண்டு ஸுகத்தை அநுபவிப்பது தான் புத்திசாலித்தனம் என்று தீர்மானித்துத் தர்மத்திற்காகச் செலவழிக்க மனம் வராமல் இருப்பது ஒருவிதத்தில் நியாயம் என்றே சொல்லலாம்.

பணத்தில்மிகவும் பற்றுள்ள சில ஆஸ்திகர்கள், ''பகவானுகப் பார்த்து ஸுகத்தை அநுபவிக்கும்படி நமக்கு ஸாதனங்களைக் கொடுத்திருக்கையில் அவைகளை உபயோகிக்க மாட்டேன் என்று சொல்வது நன்றியின்மையே ஆகும். அவருடைய ஸங்கல்பத்திற்கு விரோதமாக நடந்ததும் ஆகும். தவிரவும், பகவானுகப் பார்த்து ஒருவனை தரித்திரனுக ஸ்ருஷ்டி செய்திருக்கையில் நாம் அவனுக்குப் பணம் கொடுத்து அவனுடைய வறுமையை நீக்கப் பிரயத்தினப்படுவதே பகவத் ஸங்கல்பத்திற்கு விரோதமாகும். ஆகையால் தானம், தர்மம் செய்வதெல்லாம் பகவத் அபசாரம்'' என்றுகூட நினைக்கலாம். அவர்கள் எப்படி வேண்டுமானுலும் இருக்கட்டும். தரித்திரர்களாகப்

பிறந்திருக்கிறார்கள் சிலர்; சிலர் அதிர்ஷ்டக் குறைவால் தரித்திரர்களாக ஆகியிருக்கிறார்கள். இவர்களுக்கோ இனி இந்த லோகத்தில் ஸுகம் கிடையாது என்ற எண்ணம் இருந்துவருகிறதே? ''ஏதோ பூர்வஜன்மங்களில் செய்த பாபத்தினால் இந்த ஜன்மத்தில் தாரித்ரியத்தை அநுபவிக்கிறோம். இனிமேலாவது பாபம் செய்யக்கூடாது'' என்ற எண்ணம் இவர்களுக்காவது வருகிறதா? ''நமக்கோ இனி இந்த ஜன்மத்தில் ஸுகம் கிடையாது. இனி நமக்கு ஸுகம் உண்டு என்றால் பரலோகத்திலாவது மறு ஜன்மத்திலாவதுதான் பார்க்க வேண்டும். அதுவாவது நமக்கு ஸித்திக்கும்படி இப்பொழுதே நம் சக்திக்குத் தக்கபடி தர்மாநுஷ்டானம் செய்ய வேண்டும். பகவானை ஆராதனம் செய்ய வேண்டும்'' என்ற எண்ணம் ஏற்பட வேண்டாமா? இவர்களும் வைதிக கார்யங்களில் சிரத்தை இல்லாமல் இருக்கிறார்களே? ஜீவனத்திற்காக எவ்வளவு அலையவேண்டியிருந்தாலும் ஸந்த்யாவந்தனாதி கர்மாக்களுக்கு அவகாசம் இல்லாமலா போய்விட்டது? இவர்கள் அலைவதினாலேயா ஜீவனம் நடக்கிறது? இவர்கள் பிறக்கிறபோதே இவர்களுடைய ஆயுஸ் அளவும், இவர்கள் அனுபவிக்க வேண்டிய போகங்களும் தீர்மானமாகிவிட்டதென்பதை மறந்துவிடுகிறார்கள். தனக்கு எது சிரேயஸ் என்பதை மறந்து விடுகிறார்கள். பிரதிதினம் ஸகலவிதமான ஐஹிக (இவ்வுலக) ஆமுஷ்மிக (பரலோக) ஸுகங்களையும் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடிய காயத்ரீயை ஜபியுங்கள் என்றால் அதில் மனஸ் கொஞ்சமேனும் செல்லமாட்டேன் என்கிறது. இஹலோகத்தில் ஸம்பாதிக்கிற எந்தப் பதார்த்தமும் நம்முடன் வருவதில்லை. தர்மம், அதர்மம் இவைகள்தாம் கூடவரும். அவைகளைக் கவனிக்காமல் இருப்பது புத்திசாலித்தனமே ஆகாது.

ஆசார்யார் : ஆத்மதத்துவம் ஸந்தேஹமற அறிய வேண்டுமானுல் இந்தப் பூலோகத்தில் அறியலாம், அல்லது பிரஹ்மலோகத்தில் அறியலாம். மத்தியிலுள்ள கந்தர்வலோகம், பித்ருலோகம், தேவலோகம் இவைகளில் தெளிவாக அறிய முடியாதென்று உபநிஷத் முறையிடுகிறது. பிரஹ்ம லோகத்திற்குப் போகவேண்டுமானுல் உத்தமமான உபாஸனேயுடன் கர்மாவைச் செய்தாக வேண்டும். அதைச் செய்வதிலுள்ள சிரமத்தை ஆலோசிக்கையில் பிரஹ்மலோகமே வேண்டாமென்று தோன்றிவிடும். அவ்வளவு சிரமப்பட்டுப் பிரஹ்ம லோகம் போனுலும், அங்கே பிரஹ்ம விசாரம் செய்து கல்பாந்தம் வரை இருந்து பிரஹ்மா முக்தியடைகிற காலத்தில்தான் இந்த ஸாதகனுக்கும் விதேஹமுக்தி ஏற்படும். அதுவரை காத்துக்கொண்டிருக்க வேண்டும். பூலோகத்தில் வேதாந்த விசாரம் செய்து ஞானம் அடைகிறவர்களுக்கு வேறு எந்த லோகமும் போக அவசியமன்னியில் இங்கேயே உடனே முக்தி. ஆகையால் புத்திமானுயிருப்பவன் இப்பொழுதே இங்கேயே, முக்திக்கு ஸாதனமான ஞானத்தை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

சிஷ்யர் : தேவாதி லோகங்கள் இப்பூலோகத்தை விடப் புண்ணிய பூமிகள் அல்லவா! அவைகளில் ஞானம் நன்கு ஏற்படாதென்று சொல்ல என்ன காரணம்?

ஆசார்யார் : புண்ணிய பூமி என்பதே காரணம். அவைகள் கர்ம பூமி அல்ல. அங்கே ஒருவிதமான கர்மானுஷ்டானமும் செய்ய முடியாது. அவைகள் போகபூமியேயாகும். அங்கே போய்விட்டால் அங்குள்ள போகங்களே அநுபவிப்பதிலேயே மனஸ் ஈடுபடுமே தவிர வேறு விஷயங்களில் செல்லாது. தவிரவும், ஞானத்திற்கு அந்தரங்க ஸாதனமாயிருக்கிற வைராக்யம் அங்கே ஏற்பட நியாயமே இல்லே. இங்கே இருக்கிறமாதிரி, ஜனனம், விருத்தி (வளர்ச்சி), பரிணமம் (மாற்றம்), ஜரை (கிழத்தன்மை), மரணம் ஒன்றும் அங்கே கிடையாது. அங்கே தோன்றினது முதல் மறையும்

வரை மாறுதலில்லாமல் போகத்திற்குரிய ஒரே வயதுதான். வியாதி, பசி, தாஹம் முதலிய மற்ற துக்க ஹேதுக்களும் அங்கே கிடையா. இவைகள் இருந்தால்தான் இவைகளைப் பார்த்தும் அநுபவித்தும் வைராக்யம் ஏற்பட நிமித்தம் உண்டு. இவைகள் ஒன்றும் அங்கே இல்லாததனுல் விஷய ஸுகத்திலேயே ஈடுபட்டிருப்பார்களே தவிர அதற்கு மேலுள்ள ஆத்ம ஸுகத்தைத் தேடவேண்டும் என்ற எண்ணமே தோன்ருது. தவிரவும் பிரஹ்மஞானத்தைப் போதிக்கக்கூடிய பிரஹ்மநிஷ்டர்கள் ஸ்வர்க்கத்தில் இருக்க மாட்டார்கள். ஏனென்ருல், அவர்கள் பூலோகத்தில் ஆத்ம ஞானிகளாகி விட்டால் அவர்கள் ஸ்வர்க்க லோகத்திற்குப் போக அவசியமில்லே. அங்கே போனபிறகு ஞானியாவதும் ஸாத்தியமில்லே.

சிஷ்யர் : தேவாதி லோகத்திலுள்ளவர்களுக்கு ஏதேனும் புண்ணியவசத்தால் ஆத்மஞானம் அடைய வேண்டும் என்ற இச்சை ஏற்பட்டால், அவர்களுக்கு உதவக் குருவே கிடையாதா?

ஆசார்யார் : பிரஹ்மலோகத்திற்குப் போக சக்தியிருந்தால் பிரஹ்மாவைக் குருவாக அடையலாம்; அல்லது அவருடன் கல்பாந்தத்தை எதிர்ப்பார்த்துக் கொண்டு ஆதிகாரிக ஸ்தானம் வஹித்துவருகிற ஜீவன்முக்தர்களேக் குருவாக அடையலாம். இரண்டும் ஸாத்தியமில்லேயென்ருல், அவர்களும் பூமிக்கு வரவேண்டியதுதான். எப்படியும் தேவாதி லோகங்களில் வழியில்லே. தவிரவும், இன்னெரு காரணம் நாம் ஊஹித்துத் தெரிந்து கொள்ளலாம். அத்வைத பிரஹ்மஞானம் ஏற்பட வேண்டுமானுல், த்வைதப் பிரபஞ்சம் மித்யை என்று தெரிந்தாலொழிய வழியில்லே. மித்யை என்பது அத்யந்த அஸத் என்பது இல்லே, ஸத் என்பதும் இல்லே என்றே சொல்கிருேம். ஜகத் தோன்றுகிறபடியால் அஸத் இல்லே, ஞானதசையில் இல்லாமல் போவதால் ஸத் இல்லே என்கிருேம். அப்படி ஸத்தும் இல்லாமல் அஸத்தும் இல்லாமல்

ஒரு பதார்த்தம் இருக்க முடியுமா என்ற ஸந்தேஹம் ஏற்படும்போது ரஜ்ஜு ஸர்ப்பம் (கயிற்றில் தோன்றும் பாம்பு), ஸ்தாணு புருஷன் (தூணில் தோன்றும் மனுஷ்யன்), மருமரீசிகா (கானலில் தோன்றும் ஜலம்), சுக்திரஜதம் (கிளிஞ்சலில் தோன்றும் வெள்ளி) முதலிய திருஷ்டாந்தங்களைச் சொல்லி இவைகளெல்லாம் தோன்றினபோதிலும் எப்படி ஸத்தியமில்லையோ அதேமாதிரி ஜகத்தும் ஸத்தியம் இல்லை என்று போதிக்க முடிகிறது. இவைகள் நல்ல இருட்டிலும் தோன்ரு, நல்ல வெளிச்சத்திலும் தோன்ரு; இரண்டும் கலந்த மந்தாந்தகாரம் முதலிய நிமித்தங்கள் வேண்டும். இங்கே இரவு, பகல், வெயில், நிழல் முதலானவை இருப்பதனுல் இவ்விதப் பிரமங்கள் ஏற்பட முடிகிறது. ஸ்வர்க்காதி லோகங்களில் எப்பொழுதும் வெளிச்சமே. நிழல், இருட்டு கிடையாது. அப்படியிருக்க மந்தாந்தகாரத்திற்குப் பிரஸக்தியே (ஸந்தர்ப்பமே) இல்லை. அதனுல் இவ்விதப் பிரமரூபமான அநுபவங்களுக்கு நிமித்தமே இல்லை. ஆகையினுல் ஸ்வர்க்காதி லோகங்களில் யாரேனும் வேதாந்த பாடம் சொல்வதாக இருந்தாலும் அதைச் சிஷ்யன் கிரஹிக்கும்படி செய்வதற்கு வேண்டிய திருஷ்டாந்தம் அங்கே அகப்படாது. இவ்வளவு பெரிய ஜகத்தை மித்யை என்று சொல்கிறீர்களே என்று பிரமிக்கும் சிஷ்யனுக்கு, ''உன் நித்திரையின்போது ஸ்வப்னத்தில் எவ்வளவோ பெரிதான ஊர்களையும் அரண்மனைகளையும் ஜனங்களையும் நீ பார்ப்பதில்லையா? அவைகளில் ஏதேனும் ஸத்தியமா? உனக்கே இவ்வளவுதூரம் ஸ்ருஷ்டி செய்ய சக்தி இருக்கும்போது ஸர்வசக்தரான பகவானுக்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்க ஏன் முடியாது? உன் ஸ்வப்னப் பிரபஞ்சம் எப்படி மித்யைதான் என்று நீயே உணருகிருயோ, அப்படியே இந்த ஜாக்கிரத் (வெளி) பிரபஞ்சமும் ஸத்தியமாகத் தோன்றிய போதிலும் மித்யையென்றே தீர்மானித்துக் கொள்'' என்று குரு உபதேசிக்கிருர். ஸ்வர்க்காதி

லோகத்திலுள்ளவர்களுக்கு நித்திரை கிடையாது. கண்ணைக் கொட்டுவது கூடக் கிடையாது. அவர்களுக்கு ஸ்வப்னத்திற்கு இடமே இல்லை. ஆகையால் ஸ்வப்ன திருஷ்டாந்தத்தைச் சொல்லி அவர்களுக்குப் போதிக்கவும் வழியில்லை. மனம், இந்திரியங்கள் இவைகளுக்கு விஷயமாகாத ஸுகம் இருக்கலாம் என்பதற்கு நமக்கு ஸுஷுப்தியை (தூக்கத்தை) திருஷ்டாந்தமாகக் கூறலாம். அவர்களுக்கு ஸுஷுப்தியே கிடையாது. ஒருவிதப் பிரமாணத்திற்கும் எட்டாத பிரஹ்மத்தைப் பற்றிப் போதிக்க வேண்டுமானால் நமக்குத் தெரிந்த ஏதேனும் திருஷ்டாந்தத்தை எடுத்துக் காட்டினால்தான் நம்மால் ஒருவாறு கிரஹித்துக் கொள்ளமுடியும். இவ்விதமாக அத்வைத போதத்திற்கு வேண்டிய எவ்விதத் திருஷ்டாந்தமும் அகப்படாத தேவாதி லோகங்களில் பிரஹ்ம தத்துவத்தை எப்படி போதிக்க முடியும்? இந்தக் காரணத்தினாலும் அந்த லோகங்களில் ஞானம் ஸம்பாதிப்பது ஸாத்தியமில்லை என்று தெரிந்து கொள்ளலாம். நமக்கு ஏதோ பூர்வபுண்ணியத்தினால் ஞான ஸம்பாதனத்திற்கு அர்ஹமான இப்பூலோகத்தில், அதிலும் கர்ம பூமியான பாரத தேசத்தில், உத்தமமான மஹரிஷிகளின் குலத்தில் ஜன்மா கிடைத்திருக்கிறது. அதை வீணாக்காமல் நன்கு உபயோகப்படுத்திக்கொண்டு சாஸ்திரத்தில் சொல்லிய ஸோபானக்கிரமப்படி அநுஷ்டித்து வந்து பரமபுருஷார்த்தத்தை அடைவதற்கு வேண்டிய பிரயத்தினத்தைத் தாமஸ மன்னியில் செய்துவர வேண்டியது நமது கடமை.

8. சில உபதேசங்கள்

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசார்யார் விவேகசூடாமணியில் பக்தியின் ஸ்வரூபத்தைப் பற்றி स्वस्वरूपानुसंधानं भक्तिरित्यभिधीयते । *(ஸ்வஸ்வரூபாநுஸந்தானம் பக்திரித்யபிதீயதே)* (சு.33) ''தன்னுடைய ஸ்வரூபத்தை அநுஸந்தானம் செய்வது பக்தி என்று சொல்லப் படுகிறது'' என்று சொல்லிவிட்டு, स्वात्मतत्त्वानुसंधानं भक्तिरित्यपरे जगुः। *(ஸ்வாத்மதத்த்வாநு ஸந்தானம் பக்திரித்யபரே ஜகு:।)* ''தன் ஆத்மாவின் தத்துவத்தை அநுஸந்தானம் செய்வது பக்தி என்று வேறு சிலர் சொல்லியிருக்கிறுர்கள்'' என்று சொல்லியிருக்கிறுர்.

மேல்பார்வைக்கு இவ்விரண்டு லக்ஷணங்களும் ஒரே மாதிரியாகத்தான் தெரிகிறது, வித்தியாஸம் தெரியவில்லை. ஸ்ரீமத் ஆசார்யார் இதற்கு வியாக்யானம் செய்கையில் முதல் வாக்கியத்திற்கு, ''தன் ஸ்வரூபமான பிரஹ்மத்தைத் தானென்று அறிந்து நிதித்யாஸனம் செய்வது, இடைவிடாமல் அனுஸந்தானம் செய்வது பக்தி'' என்றும், இரண்டாவது வாக்கியத்திற்கு ''ஜீவனுன தான் பிரஹ்மமே என்று அஹம்க்ரஹோபாஸனம், தன்னைவிட ப்ரஹ்மம் வேறுபட்டிருந்த போதிலும் இரண்டும் வேறில்லை யென்று பாவிக்கிறது பக்தி'' என்றும் அர்த்தம் சொல்லிப் பேதபுத்தி யற்றிருப்பதால் முந்தினதே ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு நெருங்கின ஸாதனமானதினுல் முக்கியமான பக்தி என்றும், பேதபுத்தியோடு கூடியிருப்பதால் பிராந்திரூபமாயிருக்கிற இரண்டாவது முக்கிய பக்தி ஆகாது என்றும் தெளிவு படுத்தியிருக்கிறுர்கள்.

இதே வாக்கியங்களுக்கு வேறுவிதமாகவும் அர்த்தம் செய்யலாமென்பதை ஒரு நாள் எடுத்துக் காட்டினுர்கள். முதல் வாக்கியத்தில் ''சொல்லப்படுகிறது'' என்று மாத்திரம் சொல்லி யாரால் என்று சொல்லப்படாததனுலும் நிகழ்காலம் குறிப்பிட்டிருப்பதாலும், ''எல்லோராலும், இப்பொழுதும்'' என்று

பொருள் கிடைக்கிறது. அதாவது ''ஸாமான்யமாக எல்லா ஜனங்களாலும் இப்பொழுதும் கூட'' என்று ஏற்படுவதால், பொதுஜன அபிப்பிராயத்தைக் குறிக்கிறது. இரண்டாவது வாக்கியத்தில் ''வேறு சிலர் சொல்லியிருக்கிருர்கள்'' என்று சொல்வதினுல் ''சொன்னவர்கள் தனிப்பட்டவர்கள், சொன்னதும் முன் காலத்தில்'' என்று ஏற்படுவதால், ''இவ்விஷயம் சொன்னவர்கள் யாரோ சில ஞானிகள், அவர்கள் இக்காலத்தில் தென்படமாட்டார்கள்'' என்ற அர்த்தம் கிடைப்பதால், இதுவே உத்தமமான ஆத்மஸாக்ஷாத்காரமடைந்த மஹான்களுடைய தீர்மானம் என்று தெரிகிறது. இவ்விதம் கவனித்துப் பார்த்தால் ''ஸ்வ-ஸ்வரூப-அனுஸந்தானம் என்பது ஜீவனுடைய ஸ்வரூபத்தை மறைத்துக் கொண்டிருக்கிற அன்னமயாதி பஞ்சகோசங்களேயும் நான் அல்லவென்று விலக்கி, உள்ளே பிரகாசிக்கும் பிரத்யகாத்மாவே நான் என்று அறிந்துகொண்டு அதையே இடைவிடாமல் அனுஸந்தானம் செய்வது, அதாவது (त्वं) 'த்வம்' பதார்த்த சோதனே செய்து அதிலேயே நிலேப்பது'' என்ருகும். ''ஸ்வ-ஆத்ம-தத்வ-அனுஸந்தானம்'' என்பது ''இவ்விதம் சோதித்து நன்கு அறியப்பட்ட ஸ்வ (தன்னுடைய) ஆத்மாவின் தத்-த்வம் (பிரஹ்மத்தன்மை), அதாவது பிரத்யகாத்மாவிற்கும் பிரஹ்மத்திற்கும் வேற்றுமை கிடையாது என்று உணர்ந்து அந்நிலேயிலேயே நிற்பது'' என்ருகும். இந்த ரீதியில் முதலில் சொன்னது கீழ்ப்படியாகவும் பின்னுல் சொன்னது மேல்படியாகவும் ஆகும். எவ்விதத்திலும் இந்த இரண்டு படிகளிலும் ஏறினுல் ஒழிய மோக்ஷத்திற்குக் காரணமாகிய ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்பட முடியாததனுல் இவ்விரண்டுமே ஞானத்திற்கு நெருங்கின ஸாதனமான பக்தி என்ற பெயரால் வியவஹரிக்கப்படுகிறது என்பதை நமது பரமாசார்யாள் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிருர்கள்.

ஓ•ஐ

''ஒருவன் தரித்திரனுக இருந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கையில் இவனுக்குச் சம்பந்தமே இல்லாத மற்ருெருவன் பணக்காரனுக இருக்கிருன் என்று இவன் தெரிந்து கொள்வதில் என்ன பிரயோஜனம்? மேலும் அவ்விதம் தெரிந்துகொண்டால் இவனுடைய தாரித்திரியத்தை முன்னேவிட அழுத்தமாக

உணர்ந்து துக்கப்படுவான். அப்படியே வியாதிக்ரஸ்தன் ஒருவன் ஒரு கவளம்கூடச் சாப்பிட்டு ஜரிக்கச் சக்தியற்று இருக்கையில் மற்ருெருவன் நன்ருகச் சாப்பிடக் கூடியவன் என்று தெரிந்தால் இவனுடைய துக்கம்தான் அதிகமாகும். பொதுவாகவே துக்கியாக இருப்பவனுக்குத் தன்னைப்போல் துக்கியாக இருப்பவனைக் கண்டால் ஒருவித ஆறுதல் ஏற்பட்டுத் தன் துக்கத்தை ஸஹித்துக்கொள்ள முடியும்; தன்னைவிட அதிகமாக துக்கமுற்றவர்களைப் பார்க்கும்போது தன் துக்கத்தை துக்கமாகப் பாராட்டக்கூடத் தோன்ருது. இவ்விதமாகத் துக்கியாயிருப்பவன் ஸுகியைப் பார்த்து ஆறுதல் அடைவது கிடையாது. ஆகையால் ஜீவனுயிருக்கிற நாம் மிகவும் அல்பக்ஞனுகவும் அல்ப சக்தியுள்ளவனுகவும், பரிச்சின்னனுகவும் துக்கியாகவும் இருக்கையில் இன்னொருவர் ஸர்வக்ஞராகவும், ஸர்வ சக்தராகவும், ஸர்வ வ்யாபகராகவும், ஆனந்தரூபியாகவும் இருக்கிருர் என்று தெரிந்து கொள்வதில் நமக்கு என்ன பிரயோஜனம்? அவ்விதம் தெரிந்து கொள்வதனுல் நம்முடைய சிறுமையையே அழுத்தித் தெரிந்து கொண்டதாகுமானதனுல் நமக்குத் துக்கம்தான் அதிகமாகும். இவ்விதம் கவனிக்கையில் பகவான் ஒருவர் உண்டு என்று தெரியாமலிருந்து விடுவதே நல்லது என்றுகூடத் தோன்ற நியாயம் உண்டு''.

''ஆனுல் லோகத்தில் ஒருவன் தரித்திரனுயிருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும், தன்னுடைய புத்திரன், தன்னுடைய பந்து, தன்னுடைய சிநேகிதர், யாரோ ஒருவர் நல்ல பதவியில் இருந்து பணத்துடன் புகழுடன் இருக்கிருர் என்று தெரிந்துவிட்டால், இவனுக்கு அதிலேயே ஒரு ஸந்தோஷம் ஏற்படுகிறது என்பதைப் பார்க்கிருேம். அந்த அந்தஸ்துள்ளவன் இவனை வெறுத்தாலும் இவன் விஷயத்தில் உதாஸீனமாக இருந்தாலும், ''இன்னுர் என்னைச் சேர்ந்தவர்'' என்று சொல்லிக் கொள்வதில் ஒரு ஸந்தோஷம் இருக்கிறது. அப்படியிருக்க அவர் இவனிடத்தில் பிரீதியுடன் நடந்து கொள்ள ஆரம்பித்து விட்டால் ஸந்தோஷத்திற்குக் கேட்பானேன்? இதிலிருந்து துக்கியாக இருப்பவன் தன் துக்கத்திற்கு ஆறுதல் ஏற்பட வேண்டுமானுல், ஆறுதலுடன் ஸந்தோஷமும் ஏற்பட வேண்டுமானுல் ஸுகியாக இருப்பவனைத் தன்னைச் சேர்ந்தவன் என்று நினைப்பதே நல்ல

வழியென்று தெரிகிறது. அப்படியே பகவான் என்பவர் எங்கேயோ, நமக்கு எவ்வித ஸம்பந்தமுமன்னியில் எல்லையற்ற ஸுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறுர் என்று நினைப்பதில் நமக்கு எவ்வித பிரயோஜனமும் கிடையாது. ஆதலால் அவரை எப்பொழுதும் நம் கூடவே இருந்து பிரீதியுடன் ஸஹாயம் செய்யக்கூடிய ஸுஹ்ருத் (அன்புள்ள, கருணையுள்ள இரக்கமுள்ள நல்ல நண்பன்) என்றபடி பாவிப்பதுதான் நல்லதென்று சாஸ்திரம் முறையிடுகிறது''.

''அந்தப் பகவானுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பலவிதமாகத் தெரிந்து கொள்ளலாம்.ஒரு தரித்திர குடும்பத்தில் பிறந்த ஒரு பையனுக்கு அவ்வூரிலுள்ள ஒரு பிரபுவிடம் ஸம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டு மென்று தோன்றினுல் அவர் வீட்டில் வேலைக்கு அமர்ந்து அவர் சொன்னபடி கேட்டுக்கொண்டு அவருக்குத் திருப்திகரமாக நடந்துகொண்டு வந்தால் அவர் இவனிடம் வாத்ஸல்யத்துடன் இவனுக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுப்பார்; தன் கிருஹத்தில் உள்ள பாத்யம் முதலானதுகளையும் கொடுப்பார். அவசியம் போல் வஸ்திராதிகள் வாங்கிக் கொடுப்பார். இவனுக்கு உடம்பு சரியில்லையானுல் தன்னுடைய வைத்தியரைக் கொண்டே இவனுக்கு வைத்தியம் செய்யச் சொல்வார். இவ்விதம் இவனுடைய பூரா யோகக்ஷேமத்தையும் அவரே வஹிப்பார். இவன் பிரீதியுடன் வேலை செய்யவில்லை, சம்பளத்திற்காகவே வேலை செய்கிறுன் என்று இருந்தால், இவர் சம்பளத்திற்கு மேல் எவ்வித உபகாரமும் செய்ய மாட்டார். இவ்விதமாக ஒருவித அபேக்ஷையும் இல்லாமல் அந்தப் பிரபுவின் கிருஹத்தில் கைங்கர்யம் செய்து வருகையில், அந்தப் பிரபுவிற்கு ஸந்தானம் இல்லாமல் இருக்கும்போது யாரையாவது ஒரு பையனை ஸ்வீகாரம் செய்ய வேண்டுமென்று தோன்றும் காலத்தில் ''பால்யம் முதற்கொண்டு நம்முடனேயேயிருந்து கைங்கர்யம் செய்துகொண்டு பிரீதிக்குப் பாத்திரனுக இருக்கிற இவனையே ஏன் ஸ்வீகாரம் செய்துகொள்ளக் கூடாது'' என்று தோன்றி இவனையே தம் புத்திரனுக எடுத்துக்கொண்டு விடலாம். அவ்விதம் எடுத்துக்கொண்டு விட்டால் அக்குடும்பத்தில் இவனுக்கு நெருங்கின ஸம்பந்தம் ஏற்பட்டுவிட்டபடியால்,

இனி வேலைக்காரன் என்ற முறை போய்ப் புத்திரன் என்ற ஸ்தானம் கிடைத்திருக்கையில் இனிச் செய்யும் கார்யம் ''யஜமான''னுடைய கார்யமாகாது, ''நம் குடும்ப'' கார்யம் ஆகிவிடும். இனி இவனைப் பார்த்து ''இதைச் செய், இதைச் செய்யாதே'' என்று பிரபு ஆக்ஞை செய்வதற்கு அவசியம் இல்லாமல் இவனே எல்லாக் காரியங்களையும் நன்கு கவனித்து செய்து வருவான். இவன் அப்படிச் செய்து வருகிறானென்று பிரபுவிற்கு நன்றாகத் தெரிந்தபிறகு எந்தக் குடும்ப காரியத்திலும் தான் அதிகமாகத் தலையிடாமல், இவனே எல்லாவற்றையும் நடத்திக் கொள்ளட்டுமென்று இருந்து விடுவதுடன், தாம் நடந்து கொள்ள வேண்டியதற்குக் கூட அவனையே கேட்க ஆரம்பித்து விடுவார். யாரேனும் குடும்ப விஷயமாக அவரிடம் கேட்க வந்தால் ''பையனைக் கேட்டுக்கொள்ளுங்கள்'' என்று சொல்லிவிடுவார். பையன் சொல்கிறபடியே அப்பிரபு கேட்கிறார் என்ற பிரஸித்தி ஏற்பட்டுவிடும். ஆனாலும் நிலங்களுக்குப் பட்டா மாத்திரம் அப்பிரபுவின் பேரிலேயே இருந்துவரும். அந்தப் பையனிடம் அவருக்கு ஏற்பட்ட பிரீதி முற்றி, அந்தப் பையனும் தனக்கென்று தனியாக ஒருவிதப் பிரயோஜனத்தையும் எதிர்ப்பாராமல் அப்பிரபுவின் க்ஷேமத்திலேயே மனத்தைச் செலுத்தி ஈடுபட்டுத் தன்னை மறந்து நடந்துகொள்ளும் ஸ்திதி ஏற்பட, அப்பிரபு தமக்கு இருந்த பட்டா பாத்தியதையையும் அப்பையன் பேருக்கே மாற்றிக் கொடுத்துவிட்டு, தாம் ஒருவிதக் குடும்பப் பற்றும் இல்லாமல் ஆத்மாராமராய் இருந்துவிடலாம் என்று தீர்மானித்து அப்படியே இருந்துவிடுவார். அப்பொழுது அப்பையனே ''யஜமானன்'' ஆகிவிடுவான். இவ்விதம் ஸம்பந்தம் மூன்று வகையென்று சொல்லலாம். யஜமானனுக்குச் சொன்னபடி கேட்டுக்கொண்டு வேற்று மனுஷ்யனாகஇருக்கிறது, புத்திர ஸ்தானம் அடைந்து பிரபுவிற்கு அங்கமாக இருந்து வருவது, தானே யஜமான ஸ்தானத்தை அடைந்துவிடுவது என்று''.

''இதேமாதிரி பகவானிடமும் நாம் ஸம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டுமென்று சாஸ்திரம் சொல்கிறது. முதலில் பகவானை நமக்கு யஜமானராகப் பாவித்து அவர் சொன்னபடி கேட்டுக்கொண்டு ஒருவித அபேக்ஷையும் இல்லாமல் அவரை ஸேவித்து வருவது ''கர்மா'' எனப்படும். அவருடன் நெருங்கி பிரீதிக்குப் பாத்திரமாய் அவருடைய அம்சமாகவே தன்னைப்

பாவித்து நடந்து கொள்வது ''பக்தி''யாகும். இவ்வேற்றுமையையும் விட்டு அவருடன் ஒன்ருகவே ஆகிவிடுவதை ''ஞானம்'' என்பார்கள்'.''

ஓ•ஐ

ஆசார்யார் : சரீரத்தில் நான், என்னுடையது, என்கிற எண்ணத்தையே விட்டுச் சரீரம், இந்திரியங்கள், மனஸ், புத்தி இவைகளுக்கெல்லாம் அதீதமாயிருக்கிற ஆத்ம தத்துவத்தை அறிந்தவனே ஸம்ஸாரத்திலிருந்து விடுதலேயடைகிருன் என்று சாஸ்திரங்கள் சொல்லியிருக்கிறபோது, இந்தச் சரீரத்தில் விசேஷமான அபிமானத்தை வைத்துக்கொண்டு அதைப் போஷணம் செய்வதற்கு ஒருவன் பிரயத்தினம் செய்து கொண்டிருப்பானேயாஞல் அவனுக்கு ஒருநாளும் அவ்வித விடுதலே ஏற்படாது. முதலேயைக் கட்டையென்று நினைத்துக் கொண்டு அதன் பேரில் ஏறிக்கொண்டு நதியைத் தாண்டலாம் என்று நினைக்கிறவனுடைய கதிதான் அவனுக்கு ஏற்படும் என்று பரமாச்சார்யாள் விவேகசூடாமணியில் சொல்லியிருக்கிருர்கள்.

சிஷ்யர் : ஆனலும் எல்லாவித நல்ல பிரயத்தினங்களுக்கும் சரீரம் திடமாயிருந்தால்தானே முடியும்?

ஆசார்யார் : வாஸ்தவம். திடமாயிருக்க வேண்டியதுதான். புஷ்டமாக இருக்க வேண்டியது கிடையாது. தவிரவும் திடமாக இருக்கிறதும் நம் கையில் இல்லே. பூர்வஜன்ம புண்ணியத்திஞல்தான் ரோகமன்னியில் திடமாக இருக்க முடியும். இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கும் சரீரத்தை நிஷித்தமான ஆஹாரங்களே உட்கொள்வதஞலேயும் நிஷித்தமான ஆசாரங்களேக் கைக்கொள்வதஞலேயும் கெடுத்துக் கொள்ளாமல் இருப்பதுதான் நமக்கு ஸாத்தியம். பிராரப்த கர்மத்திஞல் ஏற்படக்கூடிய வியாதியையோ மற்றும் ஆத்யாத்மிகாதி தாபங்களேயோ நம்மால் தடுக்க முடியாது. அவைகளே ஸஹித்துத்தான் தீரவேண்டும். சிரமங்கள் ஏற்படும்போது முன்செய்த பாபங்கள் இந்த அனுபவத்திஞல் நசித்துப் போகின்றன என்ற

பாவனையுடன் இருந்தால் சிரமங்கள் சிரமங்களாகத் தோன்ரு.

சிஷ்யர் : உலகத்தில் இருப்பவர்களுக்குச் சில ஸமயம் ஸஹிக்கமுடியாத துக்கங்கள் ஏற்படுகின்றனவே! அப்போது என்ன செய்ய முடியும்?

ஆசார்யார் : அவஸ்தைப்படும்போது சிரமம் தாங்காமல் ''ஸஹிக்க முடியவில்லையே, ஸஹிக்க முடியவில்லையே'' என்று கதறுகிருர்கள் அல்லவா?

சிஷ்யர் : ஆம்.

ஆசார்யார் : ஸஹிக்க முடிகிறதிஞலேதானே ''ஸஹிக்க முடியவில்லையே'' என்று சொல்கிருர்கள்? ஸஹிக்க முடியாமலே இருந்தால் எப்படிச் சொல்ல முடியும்? ஆகையால் பாபத்திற்குப் பலஞக துக்கத்தை நமக்குப் பகவான் கொடுக்கும்போது அதைத் தாங்குவதற்கு வேண்டிய சக்தியையும் கொடுக்கிருர் என்பதில் ஸந்தேஹம் இல்லை. ஆகையால் இதுவும் பகவத் ஸங்கல்பம் என்று பொறுமையுடன் இருக்க வேண்டியதுதான் நம் கடமை.

சிஷ்யர் : தர்மானுஷ்டானம் செய்வதற்கு முக்கியமான ஸாதனம் சரீரம் என்று பெரியோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். அப்படியிருக்க அதை உதாஸீனம் செய்வது எப்படி?

ஆசார்யார் : உதாஸீனம் செய்யச் சொல்லவே இல்லை. தர்மானுஷ்டானத்திற்கு ஸாதனமாயிருப்பதற்கு வேண்டிய ஸம்ரக்ஷணம் செய்தே ஆகவேண்டும். தவிரவும், சாஸ்திரத்தில் சொல்லிய ஸம்ஸ்காரங்கள் சரீரத்திற்கே அநேகமாக ஏற்பட்டிருக்கின்றன. சரீரத்தைச் சாஸ்திரத்தில் சொல்லியபடி சுத்தமாக வைத்துக் கொண்டால்தான் தர்மானுஷ்டானத்திற்கு உபயோகப்படும். சரீரம் தர்ம ஸாதனம் என்பதை மறந்து சரீரத்தைப் போஷிப்பதே புருஷார்த்தம் என்று வைத்துக் கொண்டுவிடக் கூடாது.

சிஷ்யர் : முன்காலத்தில் பெரியோர்கள் எத்தனையோ விரதாதிகளை அனுஷ்டிப்பதற்காக உபவாஸம்

இருந்திருக்கிருர்கள். இக்காலத்தில் அவ்விதம் இருக்க முடியவில்லையே?

ஆசார்யார் : முடியாமல் ஒன்றுமில்லை. சிரத்தையோடும் ஆசாரத்தோடும் இருக்கிறவர்கள் இன்றும் உபவாஸாதிகளை அனுஷ்டித்தே வருகிருர்கள். அதனுல் அவர்களுக்குச் சரீர பலம் குறையவும் இல்லை. பார்க்கப் போனுல் அவர்களுக்கு இருக்கிற சரீர பலம் மற்றவர்களுக்கு இல்லையென்றுகூடச் சொல்லலாம்.

சிஷ்யர் : அது ஏன் அப்படி? இவர்கள் ஆஹாரம் அதிகம் சாப்பிடுகிருர்களே தவிர முன்னோர்களுடைய பலம் இவர்களுக்கு இல்லைதான்.

ஆசார்யார் : கைக் கடிகாரம் சாவி கொடுத்தால்தானே ஓடும்?

சிஷ்யர் : ஆம்.

ஆசார்யார் : சாவி கொடுத்தால்தான் ஓடும் என்ருல் ஒரு நாளைக்கு ஒருவேளை கொடுக்கிறதா? அல்லது தோன்றிய போதெல்லாம் சாவி கொடுத்துக் கொண்டேயிருக்கிறதா?

சிஷ்யர் : ஒருவேளைதான் கொடுப்பார்கள். தோன்றின போதெல்லாம் சாவி கொடுத்துக் கொண்டிருந்தால் கடிகாரம் கெட்டுவிடும்.

ஆசார்யார் : அப்படியேதான் இந்த சரீரத்திற்கும் நியமங்கள் உண்டு. இரண்டு வேளை சாப்பிடு என்று சாஸ்திரம் சொல்கிறது. சில ஸமயத்தில் ஒருவேளை போஜனமென்றும் சில நிமித்தங்களில் உபவாஸ மென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் காலவிஷயமான நியமங்களுடன் என்ன என்ன பதார்த்தங்களைப் புஜிக்கலாம், யாரிடமிருந்து கிரஹிக்கலாம், எவ்விதம் புஜிக்க வேண்டும் என்பதற்கெல்லாம் நியமங்கள் இருக்கின்றன. இவைகளை அனுஸரித்தால்தான் இந்தச் சரீரம் தர்ம ஸாதனமாக ஆகும். இதைவிட்டு ஒரு

நியமமும் இல்லாமல் அகப்பட்ட இடத்திலெல்லாம் அகப்பட்டதை யெல்லாம் தோன்றின போதெல்லாம் ஆஹாரமாக எடுத்துக் கொள்வதென்ருல், கடிகாரத்திற்கு நியமமில்லாமல் சாவி கொடுத்துக் கொண்டேயிருப்பது போலத்தான் ஆகும். கடிகாரம் கெட்டுப் போவது போல் இந்தச் சரீரமும் தர்மானுஷ்டானத்திற்கு உதவாமல் போவதுடன் ஆரோக்கியமும் கெடும்.

சிஷ்யர் : இக்காலத்தில் தன் ஊரை விட்டு வெளியில் புறப்பட்டால் இந்த நியமங்களைக் காப்பாற்ற முடிகிறதில்லை. உதாஹரணமாக, தென்தேசத்திலிருந்து இங்கே சிருங்ககிரிக்கு நேரே வர வேண்டுமானுல் மத்தியில் ஜோலார்பேட்டை, பெங்களூர், சிவமொக்கா முதலான இடங்களில் கிடைக்கக் கூடிய அவகாசத்தில் ஸ்நான ஸந்த்யாவந்தனுதிகளைச் செய்து கொண்டு அல்பமாகவாவது ஆஹாரம் செய்து கொண்டு தான் வரவேண்டியிருக்கிறது. அதற்கு ரயில்வே ஸ்டேஷன்களில் உள்ள கேன்டீன் கடைகளில் தான் ஏதேனும் வாங்கிச் சாப்பிடும்படி ஏற்படுகிறது. ஆசாரம் எதிர்ப்பார்க்க முடியாதென்ற போதிலும் இது ஸௌகர்யமாகவே இருக்கிறது.

ஆசார்யார் : ஸௌகர்யம்தான். ஆனுல் நீங்கள் நினைக்கிற அர்த்தத்தில் இல்லை (सुकरस्य भावः). ஒரு நாள் உபவாஸம் இருந்துவிட்டால் ஒன்றும் பாதகம் ஏற்படாது. தவிரவும், எங்கேயும் பழங்கள் அகப்படலாம். அகப்படாதென்று தெரிந்தால் கையிலேயே எடுத்துக்கொண்டு வரலாம், கேன்டீனுக்குப் போயாகவேண்டுமென்று என்ன நிர்ப்பந்தம் என்று தெரியவில்லை. சிரத்தைக் குறைவைத் தவிர வேறு காரணம் சொல்வதற்கில்லை. ஆஹாரம் சுத்தமாயிருந்தால்தான் மனம் சுத்தமாயிருக்கும் என்கிற நியாயத்தை மறந்து மனஸ் சுத்தியைக் கொஞ்சமேனும் கவனிக்காமல் சரீரத்தைப் போஷிப்பதற்காக ஆஹார நியமங்களைக் கைவிடுவது

உசிதமேயில்லே. இந்தச் சரீரம் தர்ம ஸாதனம் என்ற நம்பிக்கை நன்ருக இருக்குமேயானுல், அதர்ம ரீதியில் இதைப் போஷிக்கத் தோன்ருது. ஆனுலும் சரீரத்தைப் போஷிக்கிறவர்களெல்லாரும் அதற்கு, ''சுவரை வைத்துக் கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும்?'' என்ற நியாயத்தையும் கூடச் சொல்லக் கேட்டிருக்கிறேன். இப்படிச் சொல்கிறவர்கள் எப்பொழுதும் சித்திரம் எழுதுவதில் நோக்கமே இல்லாமல் சுவர் வைப்பதிலேயே ஈடுபட்டவர்கள். சுவர் வைத்து முடிந்த பிறகல்லவா இவர்கள் சித்திரம் எழுதப் பார்க்க வேண்டும்? சுவர் வைத்து முடிகிற காலம் ஒருநாளும் ஏற்படப் போவதில்லே. ஏனென்ருல், சுவர் மண்சுவராகவும் இருந்து மேல்மேல் மழையும் பெய்து கொண்டிருந்தால் எப்பொழுதுதான் சுவர் வைத்து முடிவடையும்? நம் சரீரம் பிரதி க்ஷணமும் மாறுதலடைந்து கொண்டேயிருப்பதுடன் வெளிப் பிரபஞ்சத்திலுள்ள பஞ்ச பூதங்களாலும் முன் செய்த வினேகளாலும் தாக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறபடியால் இதை ஒரு நிலேயில் கொண்டு நிறுத்துவது ஒருநாளும் ஸாத்தியப்படாது. சரீரமே பலவிதமான மலங்கள் நிறைந்த மலபாண்டம். பிரதி க்ஷணமும் புதிது புதிதாக மலங்கள் உற்பத்தியாகிக் கொண்டே யிருக்கின்றன. நதியில் இறங்கி உடம்பை நன்ருகத் தேய்த்து அழுக்குப் போக ஸ்நானம் செய்துவிட்டு சுத்தமாக வருகிரேமென்று நினேத்துக்கொண்டு படிக்கட்டில் ஏறிவரும்போதே வியர்க்க ஆரம்பித்து விடுகிறது. அப்படியிருக்க இந்தச் சரீரத்தை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்வது எப்படி? ஆகையால் சாஸ்திரத்தில் சொல்லிய நியமங்களின்படி இந்தச் சரீரத்தை வைத்துக்கொண்டு தர்ம விஷயத்தில் ஈடுபடச் செய்ய வேண்டியதுதான் நியாயமாகும்.

9. பக்த பராதீனர்

ஸ்ரீமடம் ஸர்வாதிகாரியாக இருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் ஸ்ரீமடத்திற்குத் தம் 19 வது வயதில் வந்து 62 வது வயது வரையில் ஸ்ரீமடம் நிர்வாஹப் பொறுப்பை வஹித்திருக்கிறார். வைதிக முறையையும் எல்லாப் பூஜாவிதானங்களையும் அறிந்து அவசியம்போல் ஸ்ரீமத் ஆசார்யாளுக்கோ பூஜகர்களுக்கோ ஸௌகர்யப்படாத ஸமயங்களில், அந்தப் பூஜைகளையும் செய்துவருவார். இது தவிர அவருடைய சொந்தப் பூஜையும் மிகவும் விஸ்தாரமானது. இவர் லௌகிகத்தில் பால்யத்திலேயே ஈடுபட்டுவிட்டபடியால் அதிகமாக சாஸ்திராப்பியாஸம் செய்வதற்கு அவகாசம் இல்லாமல் போனாலும், எல்லா சாஸ்திரங்களிலும் பரிச்சயம் ஏற்பட்டு, ஸ்ரீமடத்திற்கு வரும் வித்வான்களின் யோக்கியதைகளை நன்கு தீர்மானிக்க வல்லமை உள்ளவர்.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் கவிதா ஸாமர்த்தியம், அவர் எழுதிய ஸ்தோத்திரங்களைத் திரட்டி அச்சடித்திருக்கும் ''குருப்ரஸாத மஹிமாதர்சம்'' என்ற புத்தகத்தில் நன்கு விளங்கும். முந்தின ஆசார்யாள் காலத்தில் சுமார் 24 வருஷங்களும் அடுத்த ஆசார்யாள் காலத்தில் சுமார் 19 வருஷங்களும் ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி ஸ்தானம் வஹித்து எவ்வளவோ விதங்களில் கைங்கர்யம் செய்து, ஸ்ரீமடத்தை விருத்திக்குக் கொண்டு வந்திருக்கிறார்.

1931 ல் ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளுக்கு ஆசிரமம் கொடுத்த பிறகு ஸ்ரீமத் ஆசார்யாரின் அனுமதி பெற்று ஓய்வு எடுத்துக் கொள்வதற்காக ஸர்வாதிகாரி பதவியிலிருந்து விலகிக் கொண்டார். ஆனாலும் அவர் 1949 ல் ஆபத் ஸந்யாஸம் பெற்று 1950 ல் ஸித்தியாகும் வரையில் ஸ்ரீமடத்தின் பிராசீன

ஸம்பிரதாயங்களைப் பற்றியோ முன் வரலாறுகளைப் பற்றியோ ஏதேனும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், ஸ்ரீமடத்திலிருந்து இவரையே கேட்பது வழக்கமாக இருந்தது. ஆகையால் இவர் ஆயுட்காலம் பூராவுமே ஸ்ரீ மடம் கைங்கர்யத்திலேயே சென்றது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் அவர்கள் பால்யத்தில் அநேகமாக ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் ஸம்ரக்ஷணையிலேயே இருந்து இவர் கிருஹத்திலேயே வளர்ந்தபடியால் அவர்களுக்கு இவரிடத்தில் விசேஷமான பித்ருபக்தியே இருந்து வந்தது. அப்படியே இவருக்கும் அவரிடத்தில் புத்திர வாத்ஸல்யம் இருந்து வந்தது. தவிரவும் ஆசிரம ஸ்வீகாரத்திற்கு முந்தி ஸ்ரீமடம் பூஜைக்கு வேண்டிய எல்லா மந்திரங்களையும் இவரே அவர்களுக்கு உபதேசிக்கும்படி ஏற்பட்டதால் இவரிடம் குரு என்ற பாவனையும் ஏற்பட்டது. இப்படிப் பலவிதமாகச் சாஸ்திரிகளிடம் கௌரவ புத்தி ஏற்பட்டதுடன் ஸ்ரீமடம் நிர்வாஹத்தை இவரே நன்கு செய்து வருவதால்தான் தமக்கு அத்யாத்மநிஷ்டை, வேதாந்த விசாரம் முதலானதுகளில் பூராவும் ஈடுபட முடிகிறது என்பதனால் கிருதக்ஞதையும் ஏற்பட்டது. ஆகையினால் லௌகிகம், வைதிகம் எந்த விஷயமானாலும் சாஸ்திரிகளுக்குத் தகவல் இல்லாமல் ஸ்ரீமடத்தில் நடக்காது என்று ஏற்பட்டுவிட்டதிலிருந்து வாஸ்தவ ஸ்திதியை அறியாத ஜனங்கள், சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆசார்யாரையே உதாஸீனம் செய்து ஏகாதிபத்தியம் செய்து வருவதாக நினைத்தார்கள். அவர் ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் எவ்வளவு கௌரவபுத்தியும் அபிமானமும் வைத்திருந்தார் என்பதை நன்கு பழகினவர்கள் தான் அறிய முடியும். சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆசார்யாரை நமஸ்காரம்கூடச் செய்வதில்லை என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். வாஸ்தவத்தில் பிரதிதினமும் சாஸ்திரிகள் தம் நித்திய ஆஹ்நிகங்களை முடித்துக்கொண்டு முதல் கார்யமாக ஸ்ரீமத் ஆசார்யாரை வந்தனம் செய்த பிறகுதான் உத்தியோக முறையைக் கவனிப்பார். ஸ்ரீமடத்திலேயே இருப்பதால் ஒரு நாளில் அடிக்கடி ஸ்ரீமத் ஆசார்யாரைப் பார்க்க நேரிடுமானதினால் முதல் தடவை தரிசிக்கும்போது ஸாஷ்டாங்கமாக வந்தனம் செய்வார். மற்ற ஸமயங்களில் வந்தனம் செய்யாததை மாத்திரம் பார்த்த ஜனங்கள் அவர் நமஸ்காரமே செய்வது கிடையாதென்று நினைக்க

இடம் கொடுத்திருக்கலாம். ஸ்ரீமத் ஆசார்யாருக்கு ஸந்யாஸம் கொடுத்த தினத்திலேயே முதல் வந்தனம் சாஸ்திரிகளுடையது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஸ்ரீமத் ஆசார்யார் அடிக்கடி அந்தர்முகமாய் இருந்து உலகத்தை மறந்திருக்கும் ஸமயங்களில் அவர்களுடைய சரீர போஷணத்திற்கும் பந்தோபஸ்திற்கும் இவர் செய்திருந்த ஏற்பாடுகளே இவருடைய பக்தியை நன்கு எடுத்துக் காட்டும். விஷயம் தெரியாத சில சிஷ்யர்கள் இதையும் நிர்ப்பந்தமாகப் பாவித்துப் பிரசாரம் செய்யப் பார்த்தார்கள் என்பதும் இவ்வுலகத்தில் ஸஹஜமே. எவ்வித லௌகிக கார்யமானாலும் ஸ்ரீமத் ஆசார்யார் சாஸ்திரிகளிடமே பொறுப்பைத் தள்ளிவிட்ட படியால் சாஸ்திரிகளின் பொறுப்பு மிகவும் அதிகமாக இருந்தது. இந்தக் காரணத்தினாலேயே அவரிடம் சிலருக்கு அதிருப்தி உண்டு.

ஒரு நாள் ஒருவர் சாஸ்திரிகளைப் பற்றி என்னிடம் குற்றம் சொன்னார். அது நியாயமில்லை என்று தெரிந்தபோதிலும், நான் அதைப்பற்றிப் பின்னால் சாஸ்திரிகளிடம் பிரஸ்தாபித்தேன்.

கிருஷ்ணன் : இவ்விதம் ஜனங்கள் நினைப்பது தவறென்று இருந்தபோதிலும், அவ்விதம் நினைப்பதற்கு நீங்கள் ஏன் இடம் கொடுக்க வேண்டும்? அநாவசியமாக உங்கள் பேரில் குற்றம் சொல்கிறார்களே?

சாஸ்திரிகள் : நான் இந்த அபவாதத்தை ஏற்றுக் கொள்ளாமல், நான் செய்தபடி ஸ்ரீமத் ஆசார்யாரே நேரில் செய்திருந்தால் ஜனங்கள் அவர்களிடத்திலேயே அதிருப்தி அடைவார்கள் அல்லவா?

கிருஷ்ணன் : ஆம். அடைவார்கள்.

சாஸ்திரிகள் : இப்பொழுது அவர்களிடம் அதிருப்தி ஏற்படாமல் என்னிடத்தில்தானே அதிருப்தி ஏற்படுகிறது?

கிருஷ்ணன் : ஆம்.

சாஸ்திரிகள் : ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் அதிருப்தி ஏற்பட வழியில்லாமல் அந்த அதிருப்தியை நானே தாங்கிக் கொண்டு விடுகிறபடியால் இதையே ஒரு கைங்கர்யமாகப் பாவிக்கிறேன். என்னை ஜனங்கள் வையட்டும். ஆசார்யார் வரை அந்த வசவு

போகாமல் தடுத்துக் கொண்டிருக்கிறேனே, அந்த ஸேவையே எனக்குப் போதும்.

கிருஷ்ணன்: வாஸ்தவம். ஆனால் ஸ்ரீமத் ஆசார்யார் நேரில் ஏதேனும் செய்தால் நீங்கள் செய்கிறபடியே செய்வார்கள் என்று வைத்துக் கொண்டால்தானே அவர்களிடம் அதிருப்தி ஏற்படும்? அவர்கள் அதிருப்திக்கு இடம் இல்லாமலே செய்யலாம் அல்லவா?

சாஸ்திரிகள்: நான் செய்வதை ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ஆலோசிக்காமல் செய்கிறேன் என்று நினைப்பதே தவறு. நான் அவர்களைக் கேட்காமல் ஒன்றும் செய்வதில்லை. ஆனால் ஒவ்வொரு ஸமயமும் நான் ஏதேனும் செய்யும் போதெல்லாம் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் கேட்டுத்தான் செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியுமா? அப்படிச் சொன்னேனேயானால், ஸ்ரீமத் ஆசார்யாரையே தூஷிக்க இடம் கொடுத்ததாக ஆகாதா? இப்பொழுது திருப்திகரமாக இருப்பதெல்லாம் ஸ்ரீமத் ஆசார்யார் கார்யம், அதிருப்திகரமாக இருப்பதெல்லாம் என்னுடையது என்று இருக்கிறபடி இருக்கட்டும். ஸ்ரீமடத்தின் கௌரவத்திற்கும் ஸௌகர்யத்திற்கும் தகுந்தபடி நடந்து கொண்டுதான் வருகிறேன் என்ற திருப்தி எனக்கு இருக்கிறது. எனக்கு இது போதும்.

லௌகிக நிர்வாஹத்திற்குச் சுத்த ஸத்வகுணம் போதாது. கொஞ்சம் ராஜஸமும் அவசியம் வேண்டும். அதிகார தோரணையையும் செலுத்தத் தெரிய வேண்டும். இந்த அம்சங்கள் எல்லாம் சாஸ்திரிகளிடம் அமைந்திருந்ததுடன் சரீர அமைப்பும் இதற்கு அனுகூலமாக இருந்தது. யாரும் இவருடன் நெருங்கி ஸ்வாதீனமாகப் பழக அஞ்சுவார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் யாரேனும் ஏதேனும் உலக வியவஹாரங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் ஆசார்யாள் ''லௌகிக விஷயம் சாஸ்திரிகளிடத்தில் சொல்லிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லித் தடுத்து நிறுத்திவிடுவார்கள். அவர் சாஸ்திரிகளிடத்தில் சொல்வதற்கே அஞ்சி அநேகமாகச் சொல்லாமலே போய்விடுவார்.

சாஸ்திரிகள் பேசும் விஷயம் எவ்வளவு ஸாத்விகமாக இருந்தாலும், பேசும் தோரணையில் ராஜஸம் த்வனிக்கும். இதைக்கண்டு அவருடைய ஸ்வபாவத்தையே அநேகர் விபரீதமாக நினைத்துக்கொள்ள இடம் உண்டு.

யாத்திரை சமயத்தில் ஓர் ஊரில் ஒரு நாள் இரவில் அர்த்த ராத்திரிக்கு மேல் ஸ்ரீமத் ஆசார்யார் ஜாகையில் வெளிச்சம் தெரிந்தது. கொஞ்ச தூரத்தில் ஜாகை வைத்துக்கொண்டு இருந்த சாஸ்திரிகள் அகஸ்மாத்தாக இதைக் கவனிக்கும்படி ஏற்பட்டது. உடனே அவர் ஆசார்யார் ஜாகைக்குப் போய்ப் பார்க்கையில் அவர்கள் புஸ்தகம் பார்த்துக்கொண்டு இருப்பதைக் கண்டார்.

சாஸ்திரிகள் : இப்பொழுது அர்த்த ராத்திரியில் என்ன வாசிப்பு?

ஆசார்யார் : யாத்திரையில் வேறு எப்பொழுது வாசிப்பதற்கு அவகாசம்?

சாஸ்திரிகள் : இதுவரை வாசித்தது போதும்.

ஆசார்யார் : அது எனக்கல்லவா தோன்ற வேண்டும்?

சாஸ்திரிகள் : போதாதென்று தோன்றினால் சிருங்ககிரிக்குத் திரும்பப் போன பிறகு வாசிக்கலாம்.

ஆசார்யார் : அதுவரை நாம் இருக்கிறோம் என்பது என்ன நிச்சயம்?

சாஸ்திரிகள் : இப்படியெல்லாம் கேட்கக் கூடாது. தாங்கள் வெறும் ஸந்யாஸியாக இருந்தால் நான் சொல்லப் போவதில்லை. சிருங்ககிரி பீடத்தில் ஆசார்யஸ்தானம் வஹிக்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஆசார்யார் : அதனால் என்ன?

சாஸ்திரிகள் : என்னவா? இந்த ஸ்தானம் வஹிக்கிற வரைக்கும் இந்தச் சரீரம் சிஷ்யர்களுக்குப் பாத்தியப்பட்டதே தவிர, தங்கள் இஷ்டப்படி அதைச் சிரமப்படுத்தக் கூடாது.

ஆசார்யார் : அப்படியா?

சாஸ்திரிகள் : ஆம்.

ஆசார்யார் : (புன்சிரிப்புடன்) சிஷ்யருடைய இஷ்டம் இப்பொழுது எப்படியோ?

சாஸ்திரிகள் : இப்பொழுது விசிராந்தி செய்து கொள்ள வேண்டும்.

ஆசார்யார் : அப்படியே ஆகட்டும்.

என்று சொல்லி வாசிப்பை நிறுத்தி விட்டார்கள். இதுமாதிரியுள்ள ஸம்பவங்களில் சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆசார்யாரிடமும் அதிகாரம் செலுத்துவதாகப் பாமர ஜனங்கள் நினைப்பார்களே தவிர அதிலுள்ள அபிமானப் பெருக்கை உணர்கிறவர்கள் வெகு சிலரேயாவர்.

சாஸ்திரிகளுக்கு முந்தின ஆசார்யாளிடம் விசேஷமான பக்தி இருந்து வந்தது. அவர்களிடம் ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யம் ஆத்யந்த சாந்தியாவது செய்து உபதேசிக்க வேண்டுமென்று இரண்டு மூன்று தடவை கேட்டும், அவர்கள், ''உனக்கு இப்பொழுது என்ன அவஸரம்? பின்னுல் ஆகலாம்'' என்றே சொல்லி விட்டார்கள். அவர்கள் ஸித்தியான பிறகு ''அந்த மஹானுடன் இத்தனை வருஷம் பழகிக் கைங்கர்யம் செய்தும் பாஷ்யம் உபதேசம் ஆகவில்லை. அதனுல் பிராப்தமில்லை என்பதே நிச்சயம். அவர்களைக் குருவாய் அடைந்திருந்த காலத்தில் கிடைக்காத உபதேசத்தை இன்னொரு குருவிடம் கேட்பது நியாயமே இல்லை'' என்ற தீர்மானத்துடன் இருந்து விட்டார். ஆனுல் அநேகப் பிரஸித்த பண்டிதர்களும் லௌகிகர்களும் ஸ்ரீமத் ஆசார்யாருடைய உபந்யாஸத்தைப் பற்றியும் வாக்கியார்த்த சைலியைப் பற்றியும் புகழ்வதை இவர் அடிக்கடி கேட்பதுண்டு; இருந்தாலும் முந்தின ஆசார்யாளுக்கு ஈடாவாரா? என்றே எண்ணிக் கொண்டு இருந்து விட்டார். பின்னுல் உத்தியோகத்திலிருந்து விலகி ஊருக்குப் போய் இருந்து வரும்போது ஒரு நாள் ''முந்தின ஆசார்யாளிடத்தில் உபதேசம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினுல் உபதேசமே வேண்டாமென்று இருக்கிறேனே? இதனுல் யாருக்கு நஷ்டம்? இந்த ஜன்மம் வியர்த்தமாகவல்லவா போகிறது? வித்வான்களெல்லோரும் சிலாகிக்கிருர்களே இப்பொழுதுள்ள ஆசார்யாரை? அவரை முந்தின ஆசார்யாராகப் பாவித்துக்கொண்டு அவர் மூலமாக உபதேசம் பெற்ருல் என்ன?'' என்ற எண்ணம் தோன்றி, பலப்பட்டு வந்தது. உறுதிப்படுத்திக் கொண்டு

சிருங்ககிரிக்கு புறப்பட்டுப் போய் ஆசார்யாரிடம் தனக்கு இருந்து வந்த மனோபாவத்தை மறைக்காமல் அப்படியே எல்லாவற்றையும் சொல்லி விட்டார்.

சாஸ்திரிகள் : இந்த ஸ்திதியில் என்னைக் கிருதார்த்தனாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசார்யார் : நான் உங்களுக்குப் பாடம் சொல்வதில் ஆக்ஷேபம் இல்லை. ஆனால் இரண்டு நியமங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.

சாஸ்திரிகள் : எந்த நியமமாக இருந்தாலும் கட்டுப்படுகிறேன்.

ஆசார்யார் : முதல் நியமம், நான் உங்களுக்குப் பாடம் சொல்லும்போது வேறு ஒருவரும் இருக்கக் கூடாது.

சாஸ்திரிகள் : எனக்கும் ரொம்ப ஸம்மதமே.

ஆசார்யார் : மற்றொரு நியமம், நான் பாடம் சொல்லும் போது உங்களுக்கு ஏதேனும் ஸந்தேஹம் தோன்றினாலும், நான் சொல்வது சரியானபடி புரியாமல் இருந்தாலும், ஸங்கோசமன்னியில் உடனுக்குடன் என்னிடம் கேட்க வேண்டும். இத்தனைதான் நியமங்கள்.

சாஸ்திரிகள் : மிகவும் கிருதார்த்தனானேன். இவை நியமங்களே அல்ல. என்னுடைய ராஜஸ ஸ்வபாவத்தை நன்கு அறிந்து என்னுடைய நன்மையை உத்தேசித்தே இவ்விதம் சொல்கிறீர்கள். என்னுடன்கூட யாராவது இருந்தால் நான் ஒருநாளும் ஸந்தேஹமும் கேட்க மாட்டேன், புரியவில்லை என்றும் சொல்லமாட்டேன். பக்கத்திலுள்ளவர் ''இவன் பெரியவாளிடம் இத்தனை வருஷம் பழகிவிட்டு இதுகூடத் தெரியவில்லையா'' என்று என்னைப்பற்றி நினைத்து விடுவாரோ என்ற பயம் இருந்து கொண்டே இருக்கும். வாய் திறந்து கேட்கவொட்டாமல் என் அஹம்பாவம் தடுக்கும். தங்களுடன் தனியாக

இருந்தால் வேறொருவரும் இல்லையென்றிருந்த போதிலும், தாங்களே அவ்விதம் நினைத்து விடுவீர்களோ என்ற பயத்தினால் கேள்விகளே கேட்க மாட்டேன். என்னுடைய ராஜஸத் தன்மையினால் சரியானபடி ஞானம் கிரஹிப்பதற்கு வழியில்லாமல் போய்விடுமென்று மிகக் கருணையுடன் தாங்கள் இவ்வித நியமங்களை ஏற்படுத்தியது என் பாக்கியமேயாகும். என்னுடைய அறிவின்மையை ஸங்கோசமன்னியில் அவ்வப்போது தெரிவித்துக் கொள்கிறேன்,

என்று சொல்லி நமஸ்கரித்தார். அப்படியே ஸ்ரீமத் ஆசார்யார் பிரஹ்மஸூத்ர பாஷ்யத்தில் அவருக்கு மாத்திரம் முதல் அத்யாயமும் இரண்டாவது அத்யாயத்தில் கொஞ்ச தூரமும் பாடம் சொன்னார்கள். பின்னால் அவர்கள் அடிக்கடி அந்தர்முக நிலையில் இருந்துவிட்டதால் அதற்குமேல் பாடம் நடக்கவில்லை. இப்பாடம் நடக்கும்போதுதான் ஸ்ரீமத் ஆசார்யாருடைய பாண்டித்யத்தையும் தெளிவான அறிவையும் நிகரற்ற போதனா சக்தியையும் நேரில் அனுபவிக்க சாஸ்திரிகளுக்கு அவகாசம் கிடைத்தது. அதுமுதல் அவர்களிடம் அவருக்கு ஏற்பட்ட கௌரவ புத்திக்கு எல்லையேயில்லை.

ௐ•ௐ

ஸ்ரீமடத்தில் ஸ்ரீ நரஸிம்ஹ ஜயந்தி தினத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் மாத்யாஹ்நிக ஸ்நானம் செய்துவிட்டுப் பூஜைக்கு உட்கார்ந்தால் ஏகாக்ரமாக ஸாயங்காலம் வரை நடக்கும். ஒரு வருஷம் அந்த தினத்தில் ஸ்ரீமத் ஆசார்யாருக்குச் சரீரத்தில் கொஞ்சம் அசௌகர்யம் ஏற்பட்டிருந்தபடியால், அவர்களுடைய அனுமதியைப் பெற்று ஸ்ரீகண்ட சாஸ்திரிகளே செய்வதாக ஏற்பாடாகி இருந்தது. அவரும் அப்படியே மாத்யாஹ்நிக ஸ்நானம் செய்து பூஜைக்கு உட்கார்ந்து கொண்டு நிதானமாக ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹரை அர்ச்சித்து வந்தார். அவர் தீபாராதனை செய்து எழுந்திருக்கும்போது ஸாயங்காலம் சுமார் ஐந்து மணி இருக்கும். அவர் பூஜா கிருஹத்திலிருந்து வெளியில் வரும்போது அங்கு நின்று கொண்டிருந்த நான் அவரைப் பார்த்து ''வெகுசிரமம்'' என்றேன். உடனே சாஸ்திரிகள் ''என்ன? என்னைப் பரிஹாஸமா

செய்கிருய்?'' என்ருர். ''இல்லேயே? அநுதாபத்தையும் ஆச்சர்யத்தையும் அல்லவா காட்டினேன்?'' என்றேன். அதற்கு அவர், ''இன்றைய தினம் ஆசார்யாருக்கு உடம்பு அஸௌகர்யமாக இருக்கிறதே என்று அவர்களுக்குப் பதிலாக நான் பூஜை செய்யட்டுமா என்று கேட்டு அனுமதி வாங்கிக் கொண்டு அவர்கள் மாதிரியே பூஜை செய்ய வேண்டுமென்ற தீர்மானத்துடன் உட்கார்ந்தேன். அநேகமாகப் பூஜையைக் குறைவன்னியில் அப்படியே செய்துவிட்டேன். ஆனுல் அவர்களுடைய அமைதியும் ஐகாக்ர்யமும் (ஒரு நிலேத்தன்மை) எனக்கு வரவில்லே. அவர்களுடைய சரீரத்தில் லாகவம் உண்டு. எனக்கு அப்படியில்லே. ஆகையால் பாதி பூஜை நடந்து வருகையிலேயே சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று என் சரீரம் என்னேத் தூண்ட ஆரம்பித்தது. அதை லக்ஷ்யம் செய்யாமல் இதுவரை நடத்திவிட்டேன். இனிமேல் இருப்பது ஸாத்தியமில்லேயென்று தோன்றிற்று. ஆசார்யாள் பூஜை செய்தால் ஸ்ரீ நரஸிம்ஹ மூர்த்தி அவதாரம் செய்த ஸந்த்யா காலத்திலல்லவா தீபாராதனே செய்வார்கள்! என்ற ஞாபகம் ஒரு பக்கம். ஆனுல் சரீரம் இடம் கொடுக்காதபடியால் இப்பொழுதே தீபாராதனே செய்துவிட்டு எழுந்திருந்து வெளியில் வந்துவிட்டேன். ஆசார்யாருக்குப் பதிலாகப் பூஜை செய்கிறேன் என்று ஏற்றுக் கொண்டு அந்தப்படி அவர்கள் செய்கிற முறையில் செய்ய முடியவில்லேயே என்று என்னிடத்திலேயே இளப்ப புத்தியுடன் நான் வெளியில் வரும்போது நீ ''ரொம்ப சிரமம்'' என்ருல் என்னேப் பரிஹாசம் செய்கிறதுபோல் ஆகாதா? அவர்கள் மாதிரி நம்மால் இருக்க முடிகிறதா ? '' என்ருர்.

10. குருஸேவா ப்ரவீணர்

ஒரு ஸமயம் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் ''ஆசார்யார் தமிழில் நன்ருக உபந்யாஸம் செய்கிருராமே?'' என்று என்னிடம் கேட்டார். ''ஆமாம்'' என்றேன். ''நாலுவது பெரியவாள் காலம் முதல் தமிழர்களுடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். ஆசார்யார் சிருங்ககிரியிலிருந்து யாத்திரையாகப் புறப்படும் வரை அவர்களுக்குத் தமிழ் தெரியாது. சிருங்ககிரிக்கு வருகிற தமிழர்களுடன் பேசிச் சில வார்த்தைகள்தான் தெரியும். மைஸூர் ராஜ்யம் தாண்டி ஸத்தியமங்கலம் வந்தவுடனேயே அவர்கள் தமிழில் உபந்யாஸம் செய்வதைக் கேட்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அதெப்படிக் கற்றுக் கொண்டார் என்று தெரியவில்லை'' என்ருர். அன்று ஸாயங்காலம் ஒரு ஜமீந்தாருக்கு ஒரு பட்டம் அளிப்பதற்காகக் கூடியிருந்த தர்பார் ஸமயத்தில் அந்த ஜமீந்தாரின் அதிகாரிகள், ஸ்ரீமடம் அதிகாரிகள், மற்றும் வைதிக லௌகிகப் பிரமுகர்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீமத் ஆசார்யாரின் ஸ்ரீமுகம் ஸம்ஸ்கிருதத்தில் இருந்தபடியால் சாஸ்திரிகளேயே வாசிக்கச் சொல்லி ஸ்ரீமத் ஆசார்யார் ஆக்ஞையிட்டார்கள். அப்படியே அவரும் வாசித்து முடித்தார். பிறகு ஆசார்யார் சாஸ்திரிகளேப் பார்த்து ''ஸ்ரீமுகம் ஸம்ஸ்கிருதத்தில் இருப்பதால் ஜமீந்தாரவர்களுக்கும் மற்றும் அநேகர்களுக்கும் அர்த்தமாயிராது. நீங்கள் தமிழ் தேசத்தில் வெகுநாள் பழக்கமுள்ளவர்களானதனுல் அதன் அர்த்தத்தைத் தமிழில் எடுத்துச் சொல்லுங்கள்'' என்ருர்கள். சாஸ்திரிகள் தமிழ்ப்படுத்தி சில வார்த்தைகள் சொன்னுர். மேலே சொல்ல ஓடவில்லே. சொன்னதும் ஸபையில் உள்ளவர்களுக்குப் புரியவில்லே. இதையறிந்த ஆசார்யாள் ''நானே வேண்டுமானுல் சொல்லட்டுமா? தமிழ் நன்ருக வராதே என்று யோசித்தேன்'' என்ருர்கள். சாஸ்திரிகள் ''அப்படித்தான் செய்ய வேண்டும்''

என்று சொல்லி ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ஸ்ரீமுகத்தை வைத்துவிட்டு உடனே உட்கார்ந்து விட்டார். பிறகு அந்த ஸ்ரீமுகத்தில் உள்ள விஷயங்களை விஸ்தரித்துத் தமிழில் அரை மணிக்கு மேல் வெகு அழகாக எல்லோருடைய மனதிலும் தர்மத்தில் சிரத்தை வேரூன்றும்படி எடுத்துச் சொன்னார்கள். சாஸ்திரிகள் இப்பொழுதே முதல் தடவையாக ஸ்ரீமத் ஆசார்யாரின் பிரவசனத்தைக் கேட்டதால் மிகவும் ஆச்சர்யப்பட்டார் என்பது மாத்திரமல்ல, அங்கு கூடியிருந்த தமிழ்ப் புலவர்களுமே இவர்களுடைய தெள்ளிய சுத்த நடையைக் கண்டு வியந்தார்கள். பின்னால் சாஸ்திரிகள் என்னிடம் சொல்லும்பொழுது, ''ஆசார்யாள் தமிழ் பேசுவது தமிழர்களிடம் பழகினதால் ஏற்பட்டதல்ல. பெரியவாளுடைய அனுக்ரஹமும், ஸ்ரீ சாரதாம்பாள் அனுக்ரஹமுமே தான் காரணம் என்று சொல்ல வேண்டும்'' என்றார்.

1949 ல் ஸ்ரீ சாஸ்திரிகள் மைஸூரில் இருக்கும் ஸமயம் ஒரு நாள் திடீரென்று இனி ஜீவித்திருக்க மாட்டேன் என்கிற எண்ணம் தோன்றி, ஒருவித முன் ஏற்பாடும் இல்லாமல், ப்ரைஷோச்சாரணம் (யாகத்தில் உரக்க உரைக்கும் கூற்று) செய்து ஆதுரவிதானப்படி ஸந்யாஸம் எடுத்துக்கொண்டு விட்டார். இவ்விஷயம் தெரிந்து திருச்சியிலிருந்து அயலூர் குப்புஸ்வாமி அய்யரும் நானும் மைஸூர் போய் நடந்த விஷயங்களைத் தெரிந்து கொண்டோம். பின்னால் கிரமப்படி மஹாவாக்யோபதேசத்திற்கு ஏற்பாடு எப்படி என்று கேட்டோம்.

சாஸ்திரிகள் : முந்தின ஆசார்யாள் காலத்திலேயே ஸ்ரீ மடத்தில் சேர்ந்து என் ஆயுட் காலத்தைச் செலவழித்திருப்பதனாலும் அவர்களிடம் ஸந்யாஸம் வேண்டுமென்று ஒருமுறை கேட்டபோது பின்னால் நடக்கும் என்று அனுக்ரஹித்திருப்பதினாலும், சிருங்ககிரிக்கே போய் அவர்கள் அதிஷ்டானத்தில் இப்பொழுதுள்ள ஆசார்யார் உபதேசித்தாலும் சரி, அவர்கள் சொல்லி வேறு யார் உபதேசித்தாலும் சரி, முந்தின ஆசார்யாளே இவர்கள் மூலமாக உபதேசிப்பதாக பாவித்துக் கொண்டு ஸந்யாஸம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருந்து வருகிறது.

இதைக் கண்டு சிருங்ககிரிக்கும் கடிதம் எழுதி இருக்கிறேன். பதிலே எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கிருஷ்ணன் : தங்கள் உடம்பு ஸ்திதியில் சிருங்ககிரி வரையில் போய் வர முடியுமா?

சாஸ்திரிகள் : அந்த அதிஷ்டானத்தில் உபதேசம் பெற வேண்டுமென்று தோன்றிக் கொண்டிருப்பதால், இங்கிருந்து தகுந்த துணேயுடன் நேரே மோட்டார் காரில் போய் விடலாமென்று நினேக்கிறேன்.

கிருஷ்ணன் : அது தாமதமாகுமேயாளுல், ஸமீபத்திலுள்ள வேறு யதிகளிடம் உபதேசம் பெற்றுக் கொள்வது நல்லதில்லேயா?

சாஸ்திரிகள் : நல்லதுதான். ஆனுல் என் ஸ்வபாவம் உனக்கு நன்ருகத் தெரியுமே? எனக்கு வயது 80 ஆகிறது; நான் மனப்பூர்வமாகக் குருவென்று பாவித்து நமஸ்கரிக்க வேண்டுமாளுல் என்னேவிட வயதில் பெரியவராகவும், நல்ல வித்வாளுகவும், நம் மடத்தில் திடமான விசுவாஸத்துடன் பெரியவாளிடம் நன்கு பழகினவராகவும் இருக்க வேண்டுமென்று எதிர்ப்பார்ப்பேன்.

கிருஷ்ணன் : அப்படியாளுல் தங்களுக்குத் தகுந்த குரு அகப்படுவது சிரமம் தான்.

சாஸ்திரிகள் : சிரமம் இல்லே; கிருஷ்ணராயபுரத்தில் ஸ்ரீ சங்கராநந்தர் இருக்கிருர்; அவரையே மனதில் வைத்துக் கொண்டுதான் சொன்னேன்.

கிருஷ்ணன் : அப்படியாளுல் நானே போய் அவர்களே இங்கே காரில் அழைத்துக் கொண்டு வருகிறேன்.

சாஸ்திரிகள் : அவசரப்படாதே! சிருங்ககிரியிலிருந்து பதில் வரட்டும். அனுகூலமாகப் பதில் வராத விஷயத்தில் இதைப் பற்றி யோசிப்போம். மேலும், எனக்கு மஹாவாக்யோபதேசம் செய்ய வேண்டுமென்று அவர்களே இங்கே அழைத்து வருவது உசிதமில்லே;

நானே தான் அவர்களிடம் போய்ப் பிரார்த்திக்க வேண்டும். அவசியமானுல், கொஞ்சம் உடம்பு இடம் கொடுத்தவுடன் நானே ஒரு கார் எடுத்துக் கொண்டு அங்கே வந்து உபதேசம் பெற்றுக் கொள்கிறேன்.

பின்னுல் இவர் சிருங்ககிரிக்குப் போக முடியாத முறையில் சரீரம் தளர்ச்சி கொடுத்து வெகு சிரமமாகி விட்டது. வெளியில் எங்கும் போவதற்கு இல்லாமல் மைசூரிலேயே 1950 ல் ஸித்தியடைந்து விட்டார். நஞ்சன்கூட்டுக்கு ஸமீபத்திலுள்ள கல்ஹள்ளி என்ற கிராமத்திலுள்ள இவர் பங்களா முன்புறத்திலேயே இவருக்கு ஸமாதி ஏற்பட்டிருக்கிறது.

காலடி கும்பாபிஷேக தினத்திற்கு முந்தின நாள் (20-2-1910) ஸாயங்காலம் அஸ்தமன ஸமயத்தில் ஸ்ரீமடத்திற்குப் பின்புறமுள்ள நதிப் படித்துறைக்குப் போக நினேத்து ஸ்ரீ சாஸ்திரிகள் அங்குள்ள குறுகிய நடைபாதையில் போய்க் கொண்டிருக்கையில் இருட்டில் ஸர்ப்பத்தின் மேல் காலே வைத்துவிட்டார். அது உடனே வாலால் இவர் காலேச் சுற்றிக் கொண்டது; இவர் நடுநடுங்கி வேகமாய்க் காலே உதறினுர்; அந்த ஸர்ப்பம் வெகு தூரம் போய் விழுந்தது. இனிப் போக வேண்டாம் என்று மடத்திற்குத் திரும்பி விட்டார். உடம்பில் படபடப்பும் நெஞ்சில் அச்சமும் இருந்து வந்தது. நேரே ஸ்ரீ குருநாதர் (ஸ்ரீமத் ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள்) ஆஹ்நிகம் செய்ய உட்கார்ந்திருக்கும் இடம் சென்று நமஸ்கரித்து நடந்ததைத் தெரிவித்தார்.

சாஸ்திரிகள் : நதிக்குப் போகையில் ஒரு ஸர்ப்பம் காலேச் சுற்றிக் கொண்டது; உடனே உதறினேன்; தங்கள் ஆசீர்வாதத்திஞல் உயிர் தப்பி வந்திருக்கிறேன். நாளேக் கும்பாபிஷேகம் தங்களுடைய ஸங்கல்பத்திஞல் நடக்கிறதென்று இருந்த போதிலும், லௌகிகப் பொறுப்பு என்னிடம் இருக்கிற முறையில், இன்றைய தினம் ஸர்ப்பம் என் காலேச் சுற்றிக் கொண்டதென்ருல் மனஸுக்கு மிகவும் கவலேயைக் கொடுக்கிறது. ஏதோ தோஷம் குறுக்கிடுவதாகத் தெரிகிறது; அதை

நிவிருத்தி செய்வதற்காக என்ன சாந்தி கர்மா செய்ய வேண்டுமோ அதை இப்பொழுதே செய்யும்படி உத்தரவாக வேண்டும். அதைச் செய்யாமல் நாளைக்குக் கும்பாபிஷேகம் நடத்துவது எனக்கு ஸமாதானமாகவில்லை. இவ்வளவு பெரிய அபசகுனம் ஏற்பட்டிருக்கையில் அதை எப்படிக் கவனிக்காமல் இருக்க முடியும்?

ஸ்ரீ குருநாதர்: இதில் அபசகுனம் என்ன இருக்கிறது?

சாஸ்திரிகள் : காலை ஸர்ப்பம் சுற்றிக் கொள்வது அபசகுனமில்லையா?

ஸ்ரீ குருநாதர்: அபசகுனம் இல்லை; நல்ல சகுனமே ஆகும். மரணத்தைக் கொடுக்கக்கூடிய ஆபத்து வந்தாலும் உதறித்தள்ளிவிடக்கூடியவன் ஸ்ரீகண்டன், நல்ல தீரன், என்றல்லவா அறிவிக்க இந்த ஸம்பவம் ஏற்பட்டிருக்கிறது? ஆகையால் சாந்தியொன்றும் வேண்டாம்; நிர்விசாரமாக மேல் காரியங்கள் நடக்கட்டும்.

இவ்விதம் தைர்யம் சொல்லி சாஸ்திரிகளுடைய கவலையைப் போக்கினார்கள்.

ஸ்ரீ குருநாதர் விதேஹகைவல்யமடைவதற்கு முந்தின நாள் (19-3-1912) அவர்களுடைய தேஹ ஸ்திதியைக் கண்டு மிகவும் கவலையுற்ற சாஸ்திரிகள் தம் கவலையை ஸ்ரீ சாரதாம்பாள் தான் தீர்த்து வைக்க வேண்டுமென்று அம்பாள் ஸன்னிதிக்குப் போய் யாருக்கும் தெரியாமல் ''பிராண பயம் இல்லை'' , ''பிராண பயம் உண்டு'' என்று இரண்டு சீட்டுகளில் எழுதி அம்பாள் முன்னால் போட்டு அங்கிருந்த ஒரு சிறு கன்யகையை, அவைகளில் ஒரு சீட்டை எடுக்கச் சொன்னார். அதில் ''பிராண பயம் இல்லை'' என்று கண்டிருக்கக் கண்டு வெகு ஸந்தோஷப்பட்டு ஸ்ரீ குருநாதர் இருக்கும் இடம் சென்றார்.

சாஸ்திரிகள் : இன்றைக்கு என்னவோ எனக்கு மிகவும் கவலையாக இருந்தது. அம்பாளிடம் சீட்டுப் போட்டு உத்தரவு கேட்டேன். ''பிராண பயம் இல்லை'', என்று கிடைத்தது. பிறகுதான் எனக்கு ஸமாதானம் ஏற்பட்டது.

ஸ்ரீ குருநாதர் : அம்பாள் வாக்கியம் எப்பொழுதும் ஸத்தியமே; ஒரு நாளும் தவருது. பிராண பயம் இல்லேதான்.

சாஸ்திரிகள் : இந்த உறுதி தங்களிடமிருந்தும் கிடைத்திருப்பது எனக்கு வெகு ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது.

ஸ்ரீ குருநாதர் : பிராணன் என்பது வாயு விகாரமாயிருப்பதால் ஜடமேயாகும். அதற்குப் பயம் ஏது? ஆகையால் பிராணனுக்குப் பயம் கிடையாது என்பது நியாயமே. प्राणस्य भयं नास्ति । ஒரு ஸமயம் லோகாந்தரம் போகும்படி ஏற்பட்டால், எங்கே போனுலும் பிராணன் கூடவே வருவதால் பிராணன் நம்மை விட்டு விலகிப் போய் விடுமே என்ற பயத்திற்கு நிமித்தமே இல்லே. தவிரவும், எல்லாருக்கும் பிராணனில் விசேஷ அபிமானமே இருப்பதால் பிராணனேக் கண்டு பயப்படுவதும் கிடையாது. ஆகையால் எவ்வகையிலும் பிராண நிமித்தமாக, பிராணனிடத்திலிருந்து பயம் யாருக்கும் கிடையாது. प्राणात् भयं नास्ति । ஒருக்கால் லோகாந்தரம் போகாமல் இங்கேயே கைவல்யம் ஸித்திக்கிறதாக இருந்தால் இங்கேயே பிராணுதிகள் அததுகளின் காரணமான பூத ஸூக்ஷ்மங்களுடன் கலந்துப் போய்விடுவதால், அப்பொழுதும் பயத்திற்கு இடமில்லே. இவ்விதம் எந்த ரீதியாய்ப் பார்த்தாலும் அம்பாளுடைய வாக்கியம் ஸத்தியமே.

இவ்விதம் ஸ்ரீ குருநாதர் வியாக்யானம் செய்து கொடுத்தது சாஸ்திரிகளுக்குத் திருப்தியளிக்கவில்லே. ஆனுல் அதுதான் சரியான வியாக்யானம் என்பதை மறுநாள் அவர்கள் யோகாஸனத்தில் அமர்ந்தபடியே ஸித்தியடைந்தவுடன் உணர்ந்தார். தாம் விதேஹ கைவல்யம் அடைந்துவிடப் போகிருேம் என்ற நிச்சயம் இருந்தபடியால், சாஸ்திரிகள் அம்பாள் உத்தரவைத் தவறு என்று நினேத்துவிடக் கூடாது என்பதற்காகவே இந்த வியாக்யானம் செய்து கொடுத்தார்கள் என்று தெரிகிறது.

🙞•🙜

பின்னுல் வந்த ஸ்ரீமத் ஆசார்யாரிடமும் (ஸ்ரீ மத் சந்திரசேகர பாரதீ மஹா ஸ்வாமிகள்) சாஸ்திரிகள் வெகு அபிமானத்துடன் ஸ்வாதீனமாகப் பழகி வந்தார் என்பதைப் பற்றி முன்னுல் சொன்னேன். இன்னெரு ஸம்பவத்தையும் குறிப்பிட நினைக்கிறேன். சாஸ்திரிகள் ஓய்வு எடுத்துக் கொண்டு தம் ஊருக்குத் திரும்பிப் போனபிறகு சில வருஷங்கள் சென்று ஸ்ரீமடம் நிர்வாஹத்தையே மைசூர் ஸர்க்காரில் எடுத்துக்கொண்டு நடத்தி வந்தார்கள். ஸர்க்காரிலிருந்தே வரவு செலவுத் திட்டம் போட்டபோதிலும், அதில் ஏதேனும் ஓர் அம்சத்தை மாற்ற வேண்டுமென்று ஸ்ரீமத் ஆசார்யாருக்குத் தோன்றினுல் அப்படியே இஷ்டப்படி மாற்றிக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். ஒரு ஸமயம் சாஸ்திரிகள் ஸ்ரீ சிருங்ககிரிக்குப் போயிருந்தபோது மைஸூர் ஸர்க்கார் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வைத்திருக்கும் கௌரவ புத்தியைக் கண்டு ஸந்தோஷித்தார். அப்பொழுதுள்ள அதிகாரியை விசாரித்தார்.

சாஸ்திரிகள் : ஸர்க்கார் திட்டத்தில் எந்த அம்சத்தை வேண்டுமானுலும் ஆசார்யார் இஷ்டப்படி மாற்றிக் கொள்ளலாம் என்று போட்டிருக்கிறதே? எப்பொழுதாவது ஆசார்யார் மாற்றினது உண்டா?

அதிகாரி : இல்லை.

சாஸ்திரிகள் : ஸர்க்கார் திட்டத்தில் இப்படிப் போட்டிருக்கிறது என்ற விஷயத்தை அவர்களிடம் தெரியப்படுத்தி இருக்கிறீரா?

அதிகாரி : ஆம். பலதடவை தெரியப்படுத்தியிருக்கிறேன்.

சாஸ்திரிகள் : அவர்கள் என்ன சொன்னுர்கள்?

அதிகாரி : ஒன்றும் சொல்வதில்லை. பொதுவாக ‘‘எப்படி உசிதமோ அப்படியே செய்யுங்கள்’’ என்று மாத்திரம் சில வேளைகளில் சொல்வார்கள்.

சாஸ்திரிகள் : எப்படிச் செய்வது உசிதம் என்று நீங்கள் கேட்க வேண்டாமா?

அதிகாரி : கேட்பதுண்டு. அதற்கும் அதே பதில்தான். சிலவேளைகளில் நெருக்கிக் கேட்டால் ‘‘திட்டப்படியே செய்யுங்களேன். அதுவே சரியாக

இருக்கிறதே'' என்று சொல்லி விடுவார்கள். அதனால் அவர்களைக் கேட்பதில் பிரயோஜனம் இல்லையென்று கொஞ்ச நாளாகக் கேட்பதையே நிறுத்தி விட்டோம்.

அன்று ஸாயங்காலம் சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசித்தார்.

சாஸ்திரிகள் : ஸர்க்கார் திட்டத்தில் எந்த அம்சத்தை வேண்டுமானாலும் தங்கள் இஷ்டப்படி மாற்றிக் கொள்ளலாமென்று போட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு ஸந்தோஷித்தேன். அப்படி எப்பொழுதாவது மாற்றும்படி தோன்றிற்றா?

ஆசார்யார் : ஏன்? எல்லாம் சரியாக நடக்கிறதே? நான் மாற்றுவதற்கு என்ன அவசியம்?

சாஸ்திரிகள் : நான் அதைக் கேட்கவில்லை. திட்டத்தில் இல்லாத ஏதேனும் ஒருவிதச் செலவு செய்தால் நல்லது என்று தோன்றியிருக்கலாமே என்று கேட்டேன்.

ஆசார்யார் : புதிதாக ஒரு செலவு செய்ய வேண்டுமென்று நான் சொல்வதற்கு என்ன அவசியம்?

சாஸ்திரிகள் : நான் அதையும் கேட்கவில்லை. இத்தனை நாளாக ஸ்ரீமடத்தில் ஸர்க்கார் திட்டப்படி நடந்துவரும் செலவுகள் தவிர வேறு ஏதேனும் செய்தால் நன்றாயிருக்கும் என்று தங்களுக்குத் தோன்றவேயில்லையா?

ஆசார்யார் : நீங்கள் இவ்வளவு தூரம் கேட்பதனால் சொல்கிறேன். ஆறு மாஸங்களுக்கு முன் ஸ்ரீ சந்திரமௌலீசுவரருக்கு ஏகாதசவாரம் (11 தடவை) ருத்ராபிஷேகம் செய்து நூறு பேர்களுக்குக் குறையாமல் பிராஹ்மண ஸந்தர்ப்பணம் செய்ய வேண்டுமென்று தோன்றிற்று.

சாஸ்திரிகள் : இதை அதிகாரியிடம் சொன்னீர்களா?

ஆசார்யார் : எதற்காகச் சொல்ல வேண்டும்?

சாஸ்திரிகள் : சொன்னால் அப்படியே நடத்தியிருப்பாரே!

ஆசார்யார் : அதனால்தான் சொல்லவில்லை.

சாஸ்திரிகள் : இந்தக் காரணம் எனக்குப் புரியவில்லை. ஒரு நல்ல காரியம் செய்ய வேண்டுமென்று மனதில் தோன்றும்போது அதை நிறைவேற்றும்படி அதிகாரியிடம் சொல்வதில் என்ன பிசகு?

ஆசார்யார் : சொல்வதில் பிசகு இல்லை. மனதில் தோன்றுகிறதே அதுவே பிசகு.

சாஸ்திரிகள் : அதெப்படி?

ஆசார்யார் : பாஹ்யப் பிரவிருத்திக்குக் காரணமாயிருக்கிற எவ்வித மானஸிக விருத்தியும் பிசகுதான்.

சாஸ்திரிகள் : நல்ல கார்யம் செய்ய வேண்டுமென்று மனஸில் தோன்றுவதா பிசகு?

ஆசார்யார் : ஆம்.

சாஸ்திரிகள் : விஷயம் நல்ல கார்யம்தானே, அதில் என்ன பிசகு?

ஆசார்யார் : கார்யத்தில் பிசகில்லை. தோன்றினது பிசகு.

சாஸ்திரிகள் : பிரவிருத்தி நல்லதாயிருந்தால் கூடவா?

ஆசார்யார் : ஆமாம். விருத்தி என்பதே பிசகு. தவிரவும், விருத்திகளைக் குறைத்துக்கொண்டுவர உத்தேசம் இருக்கையில் புதிது புதிதான விருத்திகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. இந்தக் கார்யத்தைச் செய் என்று அதிகாரியிடம் சொல்லியிருந்தால் அவர் செய்தேயிருப்பார். பிற்பாடு இன்னொரு கார்யம் செய்ய வேண்டுமென்ற வேறு விருத்தி ஏற்படும். அப்படியே ஒவ்வொரு கார்யமாக விருத்திகளும் ஸங்கல்பங்களும் ஏற்பட்டு பாஹ்யபிரவிருத்தி வெகு அதிகமாகிவிடும். அதனால் முதல் விருத்திக்கே இடம் கொடுக்காமல் நிரோதம் செய்துவிட்டால் மேல் விருத்திகளுக்கு அவகாசமிராது. அதனாலேயே எனக்கு ஏற்பட்ட விருத்திக்கு இடம் கொடுக்காமல் அப்படியே நிறுத்திக் கொண்டு விட்டேன்.

இதைக் கேட்ட சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆசார்யாரின் மனநிலையைக் கண்டு ஆச்சர்யப்பட்டார். இருந்தாலும், ஆசார்யாருக்கு மனத்தில் தோன்றின கார்யத்தைச் செய்துவிட வேண்டுமென்ற எண்ணமும் தோன்றிற்று. அதிகாரியிடம் விவரம் கேட்டதில் திட்டப்படி ஓர் அம்சத்திற்கு ஏற்படுத்தியபடி செலவாகாமல் அதில் பணம் இருப்பதாகத் தெரிந்து கொண்டார்.

சாஸ்திரிகள் : இந்தக் கணக்கில் இத்தனை ரூபாய் செலவாகாமல் இருக்கிறதே? அதை என்ன செய்யப் போகிறீர்கள்?

அதிகாரி : என்ன செய்ய முடியும்? செலவாகவில்லை!

சாஸ்திரிகள் : ''இந்த வகையில் இத்தனை ரூபாய் செலவாகாமல் மிச்சம் இருக்கிறது. என்ன செய்ய வேண்டும்?'' என்று ஆசார்யாரிடம் கேளுங்கள்!

அதிகாரி : கேட்டு என்ன பிரயோஜனம்? அவர்கள் ஒன்றுமே சொல்வதில்லை.

சாஸ்திரிகள் : அவர்கள் சொன்னாலும் சரி, சொல்லாமல் இருந்தாலும் சரி, தெரிவிக்க வேண்டியது, கேட்க வேண்டியது உங்கள் கடமையல்லவா?

அதிகாரி : அப்படியே கேட்டுப் பார்க்கிறேன்!

அவ்வதிகாரி ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்றார்.

அதிகாரி : இன்ன வகைக்காக சர்க்கார் திட்டத்தில் இத்தனை ரூபாய் வரை செலவு செய்யலாம் என்று கண்டிருக்கிறது. ஆனால் இவ்வளவுதான் செலவாகியிருக்கிறது. மீதம் இவ்வளவு இருக்கிறது. அதை எப்படி விநியோகம் செய்ய வேண்டுமென்று உத்தரவாக வேண்டும்.

ஆசார்யார் : உசிதம்போல் செய்கிறது.

அதிகாரி : எப்படி என்று தெரியாததினால் கேட்கிறேன்.

ஆசார்யார் : யோசித்து உசிதம்போல் செய்யுங்களேன்.

அதிகாரி : யோசித்துப் பார்த்ததில் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. வேறு யாரையும் இவ்விஷயத்தைப் பற்றிக் கேட்பதற்கும் இல்லை.

ஆசார்யார் : மீதத்தைச் செலவழிக்காமலே இருக்கலாமே?

அதிகாரி : இருக்கலாம். ஆனாலும் ஏதேனும் நல்ல விஷயத்தில் உபயோகிக்கலாமென்று ஸந்நிதானம் உத்தரவு செய்தால் நல்லது.

ஆசார்யார் : எந்த நல்ல விஷயத்தில் செலவழிக்கலாம்?

அதிகாரி : எனக்குத் தெரியாததினால் தான் கேட்கிறேன்.

ஆசார்யார் : ஸ்ரீ சாஸ்திரிகள் வந்திருக்கிறார். அவருக்கு மடத்தின்அனுபவம் அதிகம். வேண்டுமானால் அவரைக் கேட்டுக் கொண்டு, அவர் சொல்கிறபடி செய்யுங்கள்.

அப்படியே அவர் சாஸ்திரிகளிடமே வந்து கேட்க, ஸ்ரீமத் ஆசார்யார் முன் நினைத்தபடி ஸ்ரீ சந்திரமௌலீசுவரருக்கு ஏகாதச வாரம் ருத்திராபிஷேகமும் பிராஹ்மண போஜனமும் செய்யும்படி சொன்னார். அவ்விதமே அதிவிமரிசையாக அதிகாரி நடத்திவிட்டு, ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்தார். பிற்பாடு சாஸ்திரிகளை ஸ்ரீமத் ஆசார்யார் பார்த்தபோது, "நீங்கள் இவ்வளவு அபிமானத்துடன் என்றைக்கோ என் மனஸில் தோன்றின விருத்திப்படி கார்யத்தில் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறீர்கள். இவ்விதம் நடந்ததில் என்னை அறியாமல் மனஸில் ஸந்தோஷ விருத்தி ஏற்பட்டது. அதனால் எனக்கு மனஸ் இன்னும் பரிபாகம் அடையவில்லை என்பதையே உணர்ந்தேன். உதாஸீனத் தன்மை இன்னும் ஏற்படவில்லை" என்று சொன்னதைக் கேட்டு சாஸ்திரிகள் மிகவும் வியந்தார்.

11. பிரயத்தினம் அவசியம்

உலகத்தை முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கொள்கையுடன் இருந்த ஒரு நண்பர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து தமக்குத் தோன்றின பலவித வழிகளைச் சொன்னார். அவர்களும் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஆசார்யார் : இவ்வளவெல்லாம் சொல்கிறீரே? இவைகளை யெல்லாம் கார்யத்தில் காட்டுவதற்கு மிகவும் சிரமப்படுமே? பணச் செலவு இருக்கட்டும். மனுஷ்யர்கள் வேண்டும். அவர்கள் தர்ம சிரத்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும். படிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆசாரபரர்களாக இருக்க வேண்டும். மற்றவர்களின் மனத்தில் பதியும்படி சொல்லக்கூடிய திறமை வேண்டும்.

நண்பர் : நானே முதலில் புறப்படத் தயாராக இருக்கிறேன்.

ஆசார்யார் : அப்படியா? மிகவும் ஸந்தோஷம். உங்களுக்கு இந்தக் கார்யங்களில் ஈடுபடுவதற்கு அவகாசம் இருக்கிறதா?

நண்பர் : ஏதோ பகவான் அன்ன வஸ்திரத்திற்குக் கொடுத்திருக்கிறார். இருக்கிற சொத்தைப் பையனே மேல்பார்த்துக் கொள்வான். என் வாழ்நாள் பூராவையும் இந்தக் கைங்கர்யத்திலேயே செலவழிக்கத் தயாராக இருக்கிறேன்.

ஆசார்யார் : நீங்கள் ஸம்ஸ்கிருதம் வாசித்திருக்கிறீர்களா?

நண்பர் : ஆம்.

ஆசார்யார் : எவ்வளவு வாசித்திருக்கிறீர்கள்?

நண்பர் : ரகுவம்சம், குமாரஸம்பவம், மாகம் முதலான காவ்யங்கள் வாசித்திருக்கிறேன்.

ஆசார்யார் : ஏதேனும் தர்க்கம் வியாகரணம் வாசித்திருக்கிறீர்களா?

நண்பர் : இல்லை.

ஆசார்யார் : வேதாந்தப் பிரகரணங்கள் வாசித்திருக்கிறீர்களா?

நண்பர் : வாஸுதேவ மனனம், விவேகசூடாமணி கொஞ்சம் பார்த்திருக்கிறேன்.

ஆசார்யார் : உங்களுக்கோ குடும்ப விஷயமான கவலையில்லை என்கிறீர்கள். அவகாசம் நிறைய இருப்பதாகவும் சொல்கிறீர்கள். நம் மதத்தில் தீவிரமான சிரத்தை இருக்கிறதென்று நன்ருகத் தெரிகிறது. இந்த ஸௌகர்யத்தையும் அவகாசத்தையும் உபயோகித்துக் கொண்டு நீங்கள் மேல்மேல் வாசித்துக்கொண்டு வரலாமே? எவ்வளவோ விதமான கர்மானுஷ்டானங்களைச் செய்து சிரேயஸ்ஸை அடையலாமே? தன்னை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு அவசியமும் ஸந்தர்ப்பமும் இருக்கிறபோது அதில் அக்கறை செலுத்தாமல் ஊர்க்காரர் விஷயமாகப் பிரவிருத்தி செய்வதில் என்ன அர்த்தம்?

தவிரவும், நீங்கள் இதுமாதிரிப் பிரவிருத்தியில் இறங்கி மற்றவர்களுக்கு ஊக்கம் ஏற்படுத்த நினைத்தால், நீங்கள் எவ்வளவு தூரம் தர்ம விஷயமான அனுஷ்டானங்கள் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்களே கவனிக்க மாட்டார்களா? அப்பொழுது உங்கள் உபதேசம் அவர்கள் மனத்தில் பதியுமா? நம்மைத் திருத்திக் கொண்டாலல்லவா மற்றவர்களைத் திருத்தப் பிரயத்தினம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்? நீந்தி நதியைத் தாண்டிப் போக சக்தியில்லாதவன் மற்றவர்களை எப்படித் தாண்டி வைக்க முடியும் என்று ஒரு நியாயம் உண்டு. ஆகையால் இருக்கிற ஸௌகர்யத்தை உபயோகித்துக் கொண்டு

முதலில் உங்கள் க்ஷேமத்தைத் தேடிக்கொள்ள வேண்டிய பிரயத்தினங்களைச் செய்யுங்கள். அப்படியே ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆத்யாத்மிக சிரேயஸ்ஸைத் தேடிக் கொள்வது தான் உசிதமாகும்.

ஜன ஸமுதாயம் என்பது தனித் தனி ஜனங்களின் சேர்க்கையைத் தவிர வேறில்லை. ஒவ்வொரு மனுஷ்யனும் தனக்கு ஏற்பட்ட ஸ்வதர்மத்தை அனுஷ்டித்துத் தனக்கிருக்கிற அக்ஞானத்தைப் போக்கடிக்க பிரயத்தனப்பட்டானேயானால் அதுவே ஸமுதாயத்தின் உன்னதிக்குக் காரணமாகும். இதைவிட்டு ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு உபதேசம் செய்யத் தலைப்பட்டால் அவைகள் பிரயோஜனப்படாததுடன் வீண் வியவஹாரங்களும் மனஸ்தாபங்களுமே ஏற்படும். ஸமுதாயத்தின் அமைதி கெடும். ''தன் சொந்தக் கார்யத்திலேயே எவன் பிசகுகிறானோ இவனைவிட மூடன் யார்'' என்று நம் பரமாச்சார்யாள் (ஸ்ரீ சங்கரர்) கேட்கிறார்கள். நமக்கு இருக்கும் ஆயுஸ் ஸ்வல்பம். நம்மை உத்தாரணம் செய்து கொள்வதற்கே எத்தனையோ ஜன்மங்கள் தேவையாக இருக்கின்றன. அப்படியிருக்க, மற்றவர்களை உத்தாரணம் செய்ய நினைப்பது கொஞ்சமேனும் நியாயமும் இல்லை, ஸாத்தியமும் இல்லை. நம் சொந்தக் காரியத்தைக் கெடுத்துக் கொண்டது தான் மிச்சமாகும்.

தவிரவும், நாம் சொல்லி மற்றவர்கள் கேட்கப் போகிறார்கள் என்ற எண்ணமே தவறு. அவரவர்களுக்குப் பூர்வ ஜன்ம வாஸனைகள் தனித்தனியாக இருக்கும். நாம் நடந்து கொள்கிற மாதிரியில் நம்மைப் பார்த்து வேண்டுமானால் அவர்களாகவே திருந்தலாம். நாம் நேர்வழியில் செல்லாமல் போனால், நம்மைப் பார்த்து மற்றவர்கள் கெட்டுப் போகவும் அவகாசம் இருப்பதால் நாம்தான் வெகு ஜாக்கிரதையாக

நடந்துகொள்ள வேண்டும். அதிலும் ஒரு குடும்பத்திலோ, ஊரிலோ, தேசத்திலோ பெரியவன் என்று பெயர் பெற்றுவிட்டால் அவனுக்கு இந்தப் பொறுப்பு மிகவும் அதிகம். ராஜகீயம் முதலான விஷயங்களில் பொதுக் கூட்டங்கள் போட்டு ஜனங்களின் மனோபாவத்தை மாற்றப் பிரயத்தினப்படலாம். அத்யாத்ம விஷயத்தில் அவ்விதப் பிரயத்தினம் பிரயோஜனப் படாது. தேர் இழுக்க வேண்டுமானால் நூறு பேரைச் சேர்த்துக் கொண்டு இழுக்கலாம். பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமானால் ஆள் கூட்டம் போடுவதில் பிரயோஜனமில்லை. கூட்டம் போட்டாலும் பசிக்கிறவர்களே சேருவார்கள். சேர்ந்தாலும் அவரவர்கள்தான் தனித் தனியாகச் சாப்பிட்டாக வேண்டும். அதேமாதிரி அத்யாத்ம விஷயத்தில் பசியுள்ளவர்கள் பசியைத் தீர்த்துக்கொள்ள என்ன வழி என்று தெரிந்து கொள்வதற்கு இன்னொருவருடைய ஸஹாயத்தை அபேக்ஷிக்கலாம்; ஆனாலும் வழி தெரிந்த பிறகு தானே தான் அதன்படி நடக்க வேண்டும். அத்யாத்மப் பசி இருக்கிறவர்கள் தாங்களாகவே வழிசொல்லக் கூடியவர்களைத் தேடியடைந்து கேட்பார்கள். பசி இல்லாதவர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு வழி சொல்வது வீண் சிரமமேயாகும். ஆகையால்தான் नापृष्टः कस्यचिद् ब्रूयात् *(நாப்ருஷ்டஃ கஸ்யசித் ப்ரூயாத்)* ''கேட்காமல் இருக்கும்போது யாருக்கும் சொல்லாதே'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. கேட்கிற விதமும் வெறும் குதூகலத்தினால் இல்லாமல் பசியினால் இருந்தால் தானாகத் தெரியும். கேட்க வேண்டிய முறையானது तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया *(தத்வித்தி ப்ணிபாதேன பரிப்ரச்னேன ஸேவயா)* ''நன்கு நமஸ்கரித்து ஸேவை செய்து திரும்பத் திரும்பக் கேட்டு அதைத் தெரிந்து கொள்ளவும்'' என்று கீதையில் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் அவரவர்கள் பசிக்குத்

தகுந்தபடி அவரவர்கள் யோக்கியதைக்குத் தக்கபடி அவரவர்களேதான் ஸாதனத்தை அறிந்து அனுஷ்டிக்க வேண்டியது நியாயமாகும்.

஌•ஐ

வேதாந்த பரிச்சயமுள்ள ஒரு லௌகிக சிஷ்யர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து சேர்ந்தார்.

சிஷ்யர் : அத்வைத ஸித்தாந்தத்தில் பந்தம், முக்தி இரண்டுமே கல்பிதமென்றும், நாம் எப்பொழுதுமே பிரஹ்ம ஸ்வரூபம்தான் என்றும் சொல்லப் படுகிறதே? அப்படியானல் இப்பொழுது அந்தப் பிரஹ்ம ஸ்வரூபம் ஏன் தெரியவில்லை?

ஆசார்யார் : கயிற்றில் பாம்பு தோன்றும்போது கயிறு ஏன் தோன்றவில்லை? கயிற்றைப் பார்த்துக் கொண்டிருக்கையில் தானே கயிறு தோன்ருமல் பாம்பு தோன்றுகிறது. அப்படியே ஆத்மஸ்வரூபம் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஸமயத்தில்தான் அதை மறைத்து சரீராதிகளான அநாத்ம பதார்த்தங்கள் தோன்றுகின்றன. இப்பதார்த்தங்கள் தோன்றுவதற்குக் காரணம் கயிறு ஸ்தானத்திலிருக்கிற ஆத்மாவை நன்கு தெரிந்து கொள்ளாமல் இருப்பதுதான். இந்தத் தெரிந்து கொள்ளாத் தன்மையைத்தான் அக்ஞானம், அவித்யை என்கிருர்கள்.

சிஷ்யர் : அவித்யை, மாயை எல்லாம் ஒன்றுதான் என்று சொல்வதுடன் அதன் ஸ்வரூபத்தை நிர்வசனம் செய்ய முடியாதென்றும் சொல்லுகிருர்களே? அதை எப்படித்தான் அறிந்து கொள்கிறது?

ஆசார்யார் : ஓர் அறைக்குள் ஒரு சாமான் இருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு வா, என்று ஒருவனிடம் சொன்னல் இருட்டு வேளையில் அவன் ஒரு விளக்கைக் கையில் எடுத்துக் கொண்டு போய் அதன் வெளிச்சத்தை அந்த அறைக்குள் விட்டு அந்தச் சாமானை வெளிச்சம் வியாபிக்கும்படி

செய்து அந்த வெளிச்சத்தினுல் காட்டப்பட்ட சாமானை அவன் எடுத்துக்கொண்டு வருகிருன் என்பதைப் பார்த்திருக்கிறேம். ஒருவனுக்கு ''இருட்டு'' என்பது என்னவென்று தெரியாது என்று வைத்துக் கொள்வோம். அவன் நம்மிடம் வந்து ''இருட்டு என்ருல் என்ன?'' என்று கேட்டால் அவனை வெளிச்சமே இல்லாத ஒரு குகைக்குள் அழைத்துக்கொண்டு போய், ''இதற்குள் இருக்கிறதே, அதுதான் இருட்டு'' என்று சொன்னுல் ''ஒன்றுமே தெரியவில்லையே?'' என்பான். ''அதுதான் இருட்டு'' என்ருல் அவனுக்கு அர்த்தமாகாது. தெரியாத சாமான்களைத் தெரியப்படுத்தக் கைவிளக்கு எடுத்துக் கொண்டு போய்ப் பழக்கப்பட்டிருக்கிற அவன், ''இந்தத் தெரியாமலிருக்கிற இருட்டு என்பதைப் பார்ப்பதற்கும் ஏன் விளக்கு எடுத்துக் கொண்டு போகக்கூடாது?'' என்று நினைக்கக் கூடியது ஸஹஜமே. அவனை ''விளக்கையே எடுத்துக்கொண்டு வா'' என்று சொல்வதுதான் நியாயமாகும். அவன் அந்த விளக்கை எடுத்துக்கொண்டு வந்து அந்த விளக்கின் பிரகாசத்தைக் குகைக்குள் விட்டவுடன் அங்கே இருட்டு இருக்கவே இருக்காது. அப்பொழுதும் அவனுக்கு இருட்டைக் காட்ட முடியாது. முன்னுல் இருட்டாக இருந்தபடியால் இருட்டைக் காட்ட முடியவில்லை. இப்பொழுது இருட்டு இல்லாததினுல் இருட்டைக் காட்ட முடியவில்லை. ஆனுல் ''எது இருக்கையில் குகையிலுள்ள பதார்த்தங்கள் மறைபட்டுத் தெரியாமலிருந்தனவோ, எது வெளிச்சம் வந்தவுடன் போய் விட்டதோ அதுதான் இருட்டு'' என்று ஒருவாறு போதிக்கலாம். அதேமாதிரி ''எது இருப்பதனுல் நித்ய ஸித்தமான ஆத்மா தெரியவில்லையோ, எது ஞானம் ஏற்பட்டவுடன் நசித்து விடுகிறதோ அது அவித்யை'' என்று சொல்லலாம்.

சிஷ்யர் : இருட்டு மாதிரி அவித்யை இருப்பதால் அதன் தத்துவம் பிடிபடாமல் இருக்கலாம். அதனுல் மறைக்கப்படுகிறதாகச் சொல்கிற ஆத்மா ஸ்வயம்பிரகாச வஸ்துவல்லவா, அது மறைபடுவதற்குக் காரணம் என்ன?

ஆசார்யார் : கயிற்றில் தோன்றும் பாம்பு கயிற்றை மறைத்துக் கொண்டா இருக்கிறது? பாம்பு தோன்றும்போதும் கயிறு முன்போல பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது. கயிற்றை இந்தத் தோற்றம் (பாம்பு) எவ்விதமாகவும் பாதிக்காது. மேகம் ஸூர்யனை மறைத்ததாகத் தோன்றும் ஸமயத்திலும் மேக மண்டலத்திற்கு அப்பால், இந்த மேகத்தினுல் ஒருவித அழுக்கும் அடையாமல், ஸ்வயம்பிரகாசமாய்த்தான் ஸூர்யன் இருந்து வருகிறுர். அவருக்கு மறைவு கிடையாது. மறைவு இருப்பதுபோல் நாம் நினைத்துக் கொள்கிறோம். இது நம்முடைய பிசகு.

சிஷ்யர் : ஆத்மா நித்திய ஸித்தமாகவும், ஸ்வயம் பிரகாசமாகவும் இருக்கையில் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குப் பிரயத்தினம் எதற்காக?

ஆசார்யார் : வேண்டாம்தான்.

சிஷ்யர் : வேண்டாம்தான் என்ருல், இப்பொழுது ஆத்மா தெரியவில்லையே!

ஆசார்யார் : தெரியவில்லையாளுல், அந்தத் ''தெரியவில்லை''யைப் போக்கடித்துக் கொள்ளப் பிரயத்தினம் அவசியம் வேண்டும். ஆத்மா தெரிவதற்குப் பிரயத்தினம் வேண்டாம். ''தெரியவில்லை'' என்பதைப் போக்கடிக்க அவசியம் பிரயத்தினம் செய்தே தீர வேண்டும்.

சிஷ்யர் : எப்படியும் ஆத்மஞானம் பிரயத்தின ஸாத்தியம் என்று ஆகவில்லையா!

ஆசார்யார் : ஆகாது. அக்ஞான நிவிருத்திதான் பிரயத்தின ஸாத்தியம் என்று ஆகும். வேதங்களில்

சொல்லியிருக்கிற ஸாதனங்கள் எல்லாம் இந்த அக்ஞான நிவிருத்திக்காகவே தவிர ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு ஸாதனங்கள் ஆகாது.

சிஷ்யர் : ''பிரஹ்மத்தை அறிகிறவன் பரத்தை அடைகிருன்'' என்பது போலுள்ள வாக்கியங்கள் மோக்ஷத்தை, அடைய வேண்டிய ஒரு ஸ்தானமாகச் சொல்கின்றனவே தவிர, இப்பொழுதே இருக்கிற ஸ்திதியாகச் சொல்லவில்லே போல் த்வனிக்கிறதே!

ஆசார்யார் : வாஸ்தவம். வாக்கு, மனஸ் எல்லாம் த்வைத பிரபஞ்சத்தில் அடங்கியவை. அவைகள் மூலமாகப் பரதத்துவத்தைப்பற்றி வியவஹரிக்க முடியாது. அதைப்பற்றி இவைகள் வியவஹரிக்க ஆரம்பித்தால் தங்கள் ரீதியில்தானே வியவஹரிக்க முடியும்! வேறு விதமாய்ச் சொல்ல முடியாது. ஆகையினுல், ''அடையப்படுகிறது'' முதலான வார்த்தைகளே உபயோகப்படுத்த வேண்டியிருக்கிறது. அவைகளே அப்படியே எடுத்துக் கொள்ளக் கூடாது. திருஷ்டாந்தமாக, ஒரு வியாபாரி அன்றைய வியாபாரம் முடிந்தவுடன் கணக்குகளே எல்லாம் எழுதிவிட்டுத் தன் பையனிடம் கொடுத்து ''குறிப்பும் பேரேடும் கையிருப்புத் தொகையும் ஒத்துப் போகிறதா என்று பார்'' என்று சொல்கிருன்.

அப்பையன் அப்படியே கணக்குகளே எடுத்து வைத்துக்கொண்டு சரிபார்த்துக் கூட்டல் கழித்தல் போட்டுப் பார்க்கிருன். எவ்வளவு பார்த்தும் குறிப்புப்படி இருக்க வேண்டிய கையிருப்புத் தொகை சரியாயிருந்தும் பேரேடுப்படி எடுத்தெழுதிய ஐந்தொகைப்படி வித்தியாஸப் படுகிறது. அவன் உடனே தகப்பஞரிடம் வந்து, ''இரண்டு அணுவைக் காணவில்லே'' என்று சொல்கிருன். அதற்குத் தகப்பஞர் ''எங்கே போய்விடும்? அங்கேதான் இருக்கும். நன்ருகப் பார்'' என்று சொல்கிருர்.

உடனே அந்தப் பையன் மறுபடியும் கணக்கை எடுத்து ஜாக்கிரதையாகப் பார்க்கும்போது ஓர் இடத்தில் கூட்டும்போது பிசகு ஏற்பட்டிருக்கிறதென்று தெரிந்து அதைத் திருத்திக்கொண்டு தகப்பனாரிடம் வந்து ஸந்தோஷத்துடன், ''இரண்டு அணு அகப்பட்டு விட்டது'' என்று உத்ஸாகமாகச் சொல்கிறான். அவன் ''காணவில்லை'' என்று சொன்னபோது இந்த இரண்டணு எங்கே போயிருந்தது? ''அகப்பட்டு விட்டது'' என்று சொன்னபோது எங்கே இருந்து வந்தது? அறையில் கீழே கிடந்து அகப்படவில்லை. புதிதாக வந்து சேரவுமில்லை. புதிதாக வந்து சேர்ந்தால் கையிருப்புத் தொகை வித்தியாஸப்படும். மறுபடியும் கணக்கு ஒத்துப்போகாது. ஆகையால் தகப்பனார் சொன்னபடி ''அங்கேதான் இருக்கும். நன்றாகப் பார்'' என்பதே வாஸ்தவம். வாஸ்தவமாகக் காணாமல் போகாமல், வாஸ்தவமாக அகப்படாமல் இருந்த இரண்டணுவில் எப்படி, ''காணவில்லை'' என்ற வியவஹாரமும், ''அகப்பட்டு விட்டது'' என்ற வியவஹாரமும் இருந்து வருகிறதோ, அதே ரீதியில்தான் ''ஆத்மா தெரியவில்லை'' என்பதும் ''ஆத்மா தெரிந்து விட்டது'' என்பதும் வியவஹார விஷயமாகிறது. கெட்டுப் போகாமல் இருந்தாலும் தென்படாமல் இருந்த இரண்டு அணுவைத் தேடுவதற்கு, தென்படாமலிருந்ததற்குக் காரணமான பிசகைக் கண்டுபிடித்துக் கொள்ள வேண்டியிருக்கிறதோ, அப்படியே நித்திய ஸித்தமாயிருந்தும் தென்படாமல் இருக்கிற ஆத்மாவை அறிவதற்கு, அதைத் தென்படாமல் செய்து கொண்டிருக்கிற அவித்யை என்ற மறைவை நீக்க வேண்டியிருக்கிறது. வியாபாரி, ''நன்றாகப் பார்'' என்று சொன்னது, ''இரண்டணுவைப் பார்'' என்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. ''இரண்டணு காணவில்லையென்று தோன்றும்படி செய்த

பிசகைக் கண்டுபிடித்துத் திருத்து'' என்றுதான் அர்த்தம். ''புதிதாக இரண்டணுவை ஸம்பாதித்துக் கொண்டு வா'' என்ற அர்த்தம் ஏற்படாது. அவ்விதமே, ''ஆத்மாவை, பிரஹ்மத்தை, தெரிந்துகொள்'' என்று உபநிஷத்தில் சொல்லிய வாக்கியங்களுக்கு ''பிரஹ்மம் நம் ஞானத்திற்கு விஷயம்'' என்று அர்த்தம் இல்லே. அதைத் தெரிந்து கொள்வதற்கில்லாமல் குறுக்கே நிற்கிற அவித்யையையும் அதன் கார்யங்களேயும் பிரயத்தனத்திஞல் போக்கடித்துக் கொண்டால், பிரஹ்மம் ஸ்வயம் பிரகாசமாயிருப்பதால் தானே விளங்கும் என்றுதான் தாத்பர்யம்.

ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுவதற்கு ''ஞானம் தானே வேண்டும். கர்மா எதற்காக?'' என்ற ஸந்தேஹத்தை நீக்க ஸ்ரீமத் ஆசார்யார் ஒரு நாள் பின்வருமாறு உபதேசித்தார்கள்.

கலெக்டர் உத்தியோகம் செய்து ஓய்வு பெற்ற ஒரு பிரபுவிற்கு ஒரு பையன் இருந்தான். அவன் பள்ளிக்கூடத்திற்குச் சரியாகப் போவதில்லே, பாடங்களேச் சரியாகப் படிப்பதும் இல்லே. இவர் மிகவும் ஸாத்விகரானதஞல் அவனேச் சிக்ஷிக்காமல் ஸமாதானமாகவே சொல்லிப் பார்ப்பார். அவ்விதம் ஒரு நாள் சொல்லிக் கொண்டிருக்கையில் அந்தப் பையன் கேள்வி கேட்க ஆரம்பித்தான்.

பையன் : எதற்காகப் படிக்க வேண்டும்?

பிரபு : படித்தால்தானே மார்க்கு வாங்கலாம்.

பையன் : எதற்காக மார்க்கு வாங்க வேண்டும்?

பிரபு : மார்க்கு வாங்கிஞல்தானே மேல் வகுப்புக்குப் போகலாம்?

பையன் : மேல் வகுப்புக்குப் போயாச்சு, அப்புறம்?

பிரபு : அங்கே சரியானபடி வாசித்தால் அதற்கு மேல் வகுப்புக்குப் போகலாம்.

பையன் : அதற்கு அப்புறம்?

பிரபு : அதற்கு மேல் வகுப்புக்குப் போகலாம்.

பையன் : அதற்கு அப்புறம்?

பிரபு : அப்படியே மேலே மேலே போய்க்கொண்டிருக்கலாம்.

பையன் : கடைசி வகுப்புக்கும் போயாச்சு, அப்புறம்?

பிரபு : அப்புறம் வேலைக்குப் பிரயத்தனம் செய்யலாம்.

பையன் : அப்புறம்?

பிரபு : வேலை கிடைக்கும். வேலைக்குப் போகலாம்.

பையன் : அப்புறம்?

பிரபு : அங்கே வேலையை ஒழுங்காய்ச் செய்தால் சம்பளம் மேலே மேலே உயரும்.

பையன் : அப்புறம்?

பிரபு : அப்புறம் என்றால் என்னடா அர்த்தம்? வேலையை ஒழுங்காய்ச் செய்து ஸர்க்காருக்கு திருப்தியாய் நடந்து கொண்டால் கௌரவமாய் ஓய்வு பெற்றுக் கொள்ளலாம்.

பையன் : அப்புறம்?

பிரபு : அப்புறம் என்னடா உண்டு? என்னைப்போல் வீட்டில் ஸ்வஸ்தமாய் இருந்து விடலாம்.

பையன் : இதற்கு இவ்வளவு சிரமப்படுவானேன் அப்பா? நான் இப்பொழுதேதான் வீட்டில் ஸ்வஸ்தமாய் இருந்து வருகிறேனே? அப்படியே இருந்து விடுகிறேன்.

ஞானிக்குச் செய்ய வேண்டிய காரியம் ஒன்றும் இல்லை என்று சொல்லியிருப்பதால் இப்பொழுதே செய்ய வேண்டிய கர்மாக்களைச் செய்யாமல் இருந்துவிடுகிறேன் என்று சொல்கிறவர்கள் இந்தப் பையனுடைய மனோபாவத்தை சேர்ந்தவர்கள். மாடிப்படி ஏறிவிட்டவனுக்கு இனிப் படியேற வேண்டியதில்லை என்று சொன்னால், பூமியில் நிற்பவருக்குக் கூடவா அந்த நியாயம்?

ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யார் பிரஹ்மத்தைப் பற்றிச் சொல்லி வந்தார்கள். பிரஹ்மம் வாக்குக்கு எட்டாது, மனத்துக்கும் எட்டாது. இவ்விரண்டும் பிரயத்தனம் செய்தாலும் பிரஹ்மத்தை எட்ட முடியாமல் திரும்பிவிடும்.

'यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह'

(யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ)

என்று சொல்லியிருப்பதால், ஸாத்தியமில்லாத கார்யத்தில் பிரவிருத்திப்பானேன்? பிரஹ்மத்தைப்பற்றிச் சொல்லவோ, எண்ணவோ, பிரயத்தனம் செய்யவோ வேண்டாம் என்றுகூட ஏற்படும். வாஸ்தவத்தில் அப்படி அர்த்தம் இல்லை. ஒருவனைப் பார்த்து ''இவன் காசிக்குப் போய்ச் சேராமல் திரும்பி வந்தான்'' என்று சொல்ல வேண்டுமானால், அவன் காசிக்குப் போவதற்காகப் புறப்பட்டிருக்க வேண்டும். காசி போகிற மார்க்கத்தில் போயிருக்க வேண்டும். அநேகமாய்க் காசி வரையிலும் போயிருக்க வேண்டும். அவ்வளவு தூரம் போயும் ஏதோ காரணத்தினால் காசியில் பிரவேசிக்க முடியாமல் திரும்பியிருக்க வேண்டும். ஊரைவிட்டுப் புறப்பட உத்தேசம் இல்லாதவன் விஷயத்திலும், ஊரைவிட்டுப் புறப்படாதவன் விஷயத்திலும், ''இவன் காசி போய்ச் சேராமல் திரும்பிவிட்டான்'' என்று சொல்வது ஒருவிதத்திலும் நியாயமாகாது. அதேமாதிரி பிரஹ்மம் வாக்குக்கும் மனஸுக்கும் எட்டாதது என்பது யாருக்கு? எட்டிப் பார்த்தவர்களுக்கு. அந்த வழியில் கொஞ்சமேனும் இறங்காதவர்களுக்குச் சொன்ன வாக்கியம் இல்லை இது. எவ்வளவு தூரம் வாக்கு எட்டுமோ, எவ்வளவு தூரம் மனஸ் எட்டுமோ அதுவரை எட்டிப்பார்த்துத்தான் ஆகவேண்டும். அப்படி எட்டிப் பார்த்தும் எட்டாமல் இருப்பது பிரஹ்மம் என்று அப்பொழுதுதான் வாஸ்தவமாகத் தெரியவரும். அந்த நிலையை அடையும்வரை வாக்ரூபமான வேதமும் குருவின் உபதேசமும் அவசியமே; மனஸின் கார்யமான மனனாதிகளும் அவசியமே. இவைகளையெல்லாம் அப்யஸித்த பிறகுதான் அந்நிலை ஏற்படும். இவ்வித அப்யாஸத்தினால் வெகு கூர்மையாக வெகு பரிசுத்தமாகச் செய்யப்பட்டிருக்கிற மனஸே ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் கருவியாகும். அந்த மனஸ் எப்படிப் பிரஹ்மத்தைக் கிரஹிக்கும் என்கிற விஷயம் வேறு.

ஸ்ருஷ்டிக் கிரமத்தில் பகவானுடைய மாயாசக்தியான அவ்யக்தத்திலிருந்து கிரமமாய் ஸூக்ஷ்ம பூதங்கள் உண்டாகின்றன. அந்த ஸூக்ஷ்ம பூதங்களின் ஸாத்விகாம்ச ஸமஷ்டியாக மனஸும், அந்த ஸூக்ஷ்ம பூதங்களின் ஸாத்விகாம்சத்திலிருந்து தனித்தனியே சுரோத்திராதி ஞானேந்திரியங்களும், ராஜஸாம்சத்திலிருந்து வாக் முதலிய கர்மேந்திரியங்களும் உண்டாகின்றன. ஆகையால் இந்திரியங்களுக்கும் மனஸுக்கும் உபாதான காரணம் மாயையே யாகும். மாயா கார்யமாக இருக்கிற இவைகள் தங்களுக்குக் காரணமாக இருக்கிற மாயையையே கிரஹிக்கச் சக்தியற்றவைகள். அப்படியிருக்க, மாயைக்கு அதீதமாயிருக்கிற பிரஹ்மத்தைக் கிரஹிக்க இவைகளுக்கு சக்தி எப்படி இருக்க முடியும்? ஆகையால் இவைகள் பிரஹ்மத்தை ஸாக்ஷாத்தாக காட்ட முடியாது. ஆனாலும் இவைகள் மூலமாகத்தான் பிரஹ்மத்தை அறிய வேண்டும்.

12. சாந்த ஸ்வபாவம்

ஸ்ரீ சிருங்கேரி பீடாதிபத்யம் வஹித்துக்கொண்டு ஜீவன்முக்தராய் விளங்கிய ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள் பால்யம் முதலே வெகு சாந்தமான ஸ்வபாவமுள்ளவர்கள். அவர் யாரிடமும் அதிகமாகப் பேசுவதில்லை. யாரிடமும் வியவஹாரத்திற்குப் போவதில்லை. யாருக்கும் அதிருப்தி உண்டு பண்ணினது கிடையாது. யாருக்கும் கோபம் மூட்டினதும் கிடையாது. அப்படியே மற்றொருவர் தம்மிடம் அனாவசியப் பேச்சுக்கோ வியவஹாரத்திற்கோ வரும்படி இடம் கொடுப்பதில்லை. எவரிடத்திலும் தாமும் மனஸ்தாபமோ கோபமோ அடைந்தது கிடையாது. இந்த நிலை பால்யத்திலேயே இருக்க வேண்டுமானால் பூர்வ ஜன்ம புண்ணிய பரிபாகம் நன்கு ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதில் ஸந்தேஹமில்லை.

௸•௸

அவர் சிருங்கேரியிலுள்ள பள்ளிக்கூடத்தில் கீழ் வகுப்புகளில் வாசித்துக் கொண்டிருந்தபோது அவர் வகுப்பிலேயே ஒரு பையன் இருந்தான். இவருடைய குடும்பத்தார்களைவிட அந்தப் பையனின் குடும்பத்தார் கொஞ்சம் லௌகிக ஸௌகர்யம் அதிகமாயுள்ளவர்கள். அந்தப் பையனுடைய தகப்பனாருக்கு இவரிடம் விசேஷ அபிமானம் ஏற்பட்டிருந்தது. தன் பையனுக்கு புஸ்தகம் சிலேட் வாங்கிக் கொடுக்கும்போது சில ஸமயங்களில் இவருக்கும் வாங்கிக்கொடுப்பார். மற்றும் பலவிதத்திலும் தன் அபிமானத்தைக் காட்டி வருவார். இப்படி இருக்கையில் வருஷக் கடைசியில் நடந்த பரீக்ஷையில் அந்தப் பையன் தேறவில்லை. இவர் மாத்திரம் முதலாவதாகத் தேறிவிட்டார். அந்தப் பையனின் தகப்பனார் வருத்தத்துடன் தன் பையனைக் கண்டிக்கையில், ''நரஸிம்ஹனைப்

பார், அவன் அக்கறையுடன் வாசித்துப் பரீக்ஷையில் தேறியிருக்கிருன். நீ சோம்பேறியாக இருந்திருக்கிருய்''என்று சொன்னதுடன் பையனே இரண்டு அடியும் அடித்து விட்டார். அவன் கொஞ்சம் அழுதுவிட்டு இவர் வீட்டுக்கு வந்து வெகு கோபத்துடன் இவரை அடித்தான். எதிர்ப்பாராமல் அடி விழுந்தவுடன் இவர் ''எதற்காக என்னே அடித்தாய்?'' என்று கேட்டார். அதற்கு அவன் ''நான் பரீக்ஷையில் தேருமல் இருக்கும்போது நீ தேறினதிஞல்தானே என் அப்பா என்னே அடித்தார்'' என்ருன். தன்னேயடிப்பதற்கு இது போதுமான காரணமில்லேயாஞலும் அவன் அடி வாங்கினதற்கு தாம்தானே நிமித்தம் என்று நினேத்துக் கொண்டு பதில் பேசாமலே இருந்துவிட்டார். ''இவன் வெறும் ஜடம், இவனே அடித்துப் பிரயோஜனமில்லே'' என்று அந்தப் பையன் போய்விட்டான். பின்ஞல் அவனும் வித்வாஞகி இவரும் பீடாதிபத்யம் வஹிக்கும்போது பால்யத்தில் இந்த மஹானுக்குத் தான் செய்த அபசாரத்தை நினேத்து நினேத்து வருந்துவார்.

பாடசாலேயில் இவர் வித்யார்த்தியாக இருந்த ஸமயம் இவரை விட வயதிலும் ஆகிருதியிலும் (உருவத்திலும்) பெரியவஞக ஒரு வித்யார்த்தி இருந்தான். அவனுக்கு மூக்குப்பொடி உபயோகிக்கும் பழக்கம் ஏற்பட்டிருந்தது. இவருக்கோ அதைக் கண்டாலே வெறுப்பு. அவன் இவரைக் கண்டபோதெல்லாம் விளேயாட்டாக தன் வலது கையை இவர் மூக்கின் ஸமீபம் கொண்டுபோவான். இவர் உடனே முகத்தை அந்தப்பக்கம் திருப்பிக் கொள்வாரே தவிர கோபித்துக் கொள்வதும் கிடையாது, ஒன்றும் சொல்வதும் கிடையாது. ஒரு நாள் ''இவருக்கு என்ன இவ்வளவு வெறுப்பு?'' என்று உத்ஸாஹத்துடன் அந்த வித்யார்த்தி தன் விரல்களில் பொடியை வைத்துக்கொண்டு இவர் வேறு ஞாபகமாயிருந்தபோது இவரைப் பின்பக்கமாக வந்து கட்டிப் பிடித்துக்கொண்டு தன் கையை இவருடைய முகப்பக்கம் கொண்டு வந்தான். இவர் அவனுக்கு இடம் கொடுக்காமல் அப்படியே குப்புற குனிந்து படுத்துவிட்டார். இவரை எவ்வளவு கட்டிப்புரட்டிப் பார்த்தும் அவர் முகத்தை நிமிர்த்த முடியவில்லே. அப்பொழுதே அவரிடம் பிராணுயாம பலம் வெகு அதிகமானதிஞல் அவனுடைய பிரயத்தனம் யாதொன்றும் பலிக்கவில்லே. கடைசியாக அவனுக்கே அலுத்துப்போய் ''போ, இந்த ஸுகம் உனக்கு பிராப்தமில்லே''

என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். அதன் பிறகு அவன் இவரிடத்தில் இவ்விதம் விளையாடுவதை நிறுத்திக் கொண்டான்.

சிலகாலம் சென்று இவர் சிருங்கேரி பீடாதிபத்யம் ஏற்ருர். அந்த வித்யார்த்தியும் பண்டிதராகி வேறு ஊரில் இருந்து வந்தார். ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசிக்க வேண்டுமென்று ஆவல் எவ்வளவு இருந்தும் இந்த ஸம்பவம் ஞாபகத்திலிருந்துகொண்டே இருந்ததால் ஸங்கோசப்படும்படிச் செய்தது. பின்ஞல் ஒரு ஸந்தர்ப்பத்தில் ஒரு நண்பரின் வேண்டுகோளுக்கு இசைந்து அவருடன் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்வதற்காக இவர் வந்து சேர்ந்தார். ஸ்ரீமத் ஆசார்யார் பொதுவாக யோகக்ஷேமங்களைப்பற்றிக் கேட்டுவிட்டு அவரைப் பார்த்து ''நஸ்யத்தில் (பொடியில்) முன்னிருந்த வேகம் இன்னமும் இருக்கிறதா?'' என்று புன்சிரிப்புடன் கேட்டார். அவர் பதில் சொல்லாமல் தலையை குனிந்து கொண்டார். ஆனுல் அந்த நண்பர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ''அவருக்கு என்ன அப்படி வேகம் இருந்ததா?'' என்று கேட்டார். அதற்கு ஆசார்யார் ''அதன் ஸ்வாரஸ்யத்தை அவர் நன்கு அறிந்தவர். நல்ல பதார்த்தத்தைத் தனித்து ரஸிக்கக் கூடாது என்ற நியாயப்படி அந்த ஸுகம் தன்னுடன் இருப்பவர்களுக்கும் ஏற்பட வேண்டுமென்ற உதாரமான ஸ்வபாவமுள்ளவர். ஆனுல் சிலர்களுக்கு அந்த ஸுகத்தையனுபவிக்க பிராப்தமில்லாமல் போய்விடுகிறது'' என்ருர். இவ்விதமாக ஸ்ரீமத் ஆசார்யார் வாய்விட்டுச் சொல்லி ஸங்கோசத்தை நிவிருத்தி செய்துவிட்டபடியால் அந்தப் பண்டிதர் பிறகு தரிசனம் செய்வதில் ஸங்கோசமில்லாமல் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தார்.

ஸ்ரீமத் ஆசார்யார் சிருங்கேரியாகிய பெரிய தர்ம ஸ்தாபனத்திற்கு அதிபதியாயிருக்கையில் ஸ்ரீமடம் லௌகிக வைதிக நிர்வாகத்தில் எத்தனையோ பேர்கள் வேலை பார்த்து வந்தபோதிலும் யாரையும் பார்த்து அவர் கடினமாகப் பேசினதாவது யாரையேனும் ஆக்ஞை செய்ததாவது கிடையாது. ஆனுலும் அவர்கள் யாவருக்கும் அவரிடம் இருந்த பக்திக்கும் பயத்திற்கும் அளவேயில்லை. அதேமாதிரி சிஷ்யர்களும் பலவித பதவியிலுள்ளவர்கள், பலவித ஸ்வபாவமுள்ளவர்கள், பலவித அபேக்ஷையுள்ளவர்கள் தரிசனத்திற்கு வருவார்கள்.

பலவித யோக்கியதையுள்ள வித்வான்களும் வருவார்கள். எல்லாரிடத்திலும் ஒரேமாதிரி அபிமானத்துடன் நடந்துகொண்டு எல்லாரையும் திருப்தியடையும்படி செய்வது என்பது ஸாதாரணமாக முடியாது. எந்த ஸந்தர்ப்பத்திலும் தம் நிலேயிலிருந்துகொண்டு எப்பொழுதுமே உபசாந்தி மூர்த்தியாக விளங்கினவர் ஸ்ரீமத் ஆசார்யார் என்பதில் ஸந்தேஹமில்லே. துராசாரத்தோடு யாரேனும் தம்மிடம் வந்தாலும் அவரிடமுள்ள நல்ல அம்சத்தையே கிரஹித்து உத்ஸாகப்படுத்துவார். துராசாரத்தைக் குறிப்பிடவே மாட்டார். ஆனுலும் கிரமமாகத்தானே துராசாரத்தை ஜனங்கள் மாற்றிக் கொள்வார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யார் யாரையும் கண்டிப்பதில்லே யென்பதினுல் எதற்கும் இடம் கொடுப்பார் என்று தாத்பர்யமில்லே. நம் சாஸ்திரங்களில் அவர்களுக்கு இருந்த பிடிமானம் ஸாமான்யமாய் யாருக்கும் ஏற்படக்கூடியதில்லே யென்று நிச்சயமாய் சொல்லலாம். அதிலும் அவர் ஸந்யாஸாசிரமத்திற்கு மிகவும் விசேஷமாக மதிப்பு வைத்திருந்தார். அதற்கு வேண்டிய அதிகார ஸம்பத்து இல்லாதவர்கள் அவ்வாசிரமத்தை ஸ்வீகரிப்பது அவருக்கு ஸம்மதமாகாது.

பெரிய உத்தியோகத்திலிருந்த ஒருவர் ஸந்யாஸம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் சிருங்கேரிக்கு வந்தார். அவர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ''குடும்ப விஷயமான பொறுப்புக்களே என் பையனிடம் ஒப்படைத்து விட்டேன். என் பார்யை காலமாகி வெகு நாளாகிவிட்டது. எங்கேயாவது ஏகாந்தமாயிருந்து கொண்டு வேதாந்த கிரந்தங்களேப் பார்த்துக் கொண்டு தியானுதிகளேச் செய்துகொண்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இனி குடும்ப ஸம்பந்தமேயில்லாமலிருப்பது நல்லதென்று தோன்றுவதால் ஸந்யாஸம் பெற அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்ருர். இதைக் கேட்டவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் நிமிர்ந்து அவரைப் பார்த்துவிட்டு ''இன்னமும் உங்களுக்குப் பணத்தில் கொஞ்சம் ஆசையிருப்பதாகத் தெரிகிறதே'' என்ருர். இதற்கு அவர் பதில் சொல்லாமலே இருந்துவிட்டார். பின்னுல் விசாரிக்கையில், ஸந்யாஸம் பெற்று குடும்பத்தை விட்டுத் தனியாக இருக்க வேண்டுமென்று சொல்லும்போதே தன் மனதிற்குள் பிக்ஷையைப்பற்றி ஆலோசனே ஏற்பட்டதற்கு பென்ஷன் இருப்பதினுல் விசாரப்பட வேண்டியதில்லே என்று தனக்குள்ளேயே தான் ஸமாதானம் செய்து கொண்டதாயும்

இதையே ஸ்ரீமத் ஆசார்யார் பணத்தில் பற்று என்று குறிப்பிட்டதாகவும் தனக்குத் தோன்றினபடியால் அவருக்குப் பதில் சொல்ல முடியவில்லையென்று தெரிந்தது.

ஓர் ஆபீஸில் குமாஸ்தாவாக இருந்தவர் ஆசிரமம் பெற்று சிருங்கேரிக்கு வந்தார். ஸ்ரீமத் ஆசார்யார் ஸ்ரீ வித்யாசங்கரர் ஆலயத்திலிருந்து ஸ்ரீ சாரதாம்பாள் ஸன்னிதிக்குப் போகும் வழியில் இவர் வந்தனம் செய்தார். ஸ்ரீமத் ஆசார்யார் ஒரு க்ஷணம் தயங்கிவிட்டு அவரிடம் ஒன்றுமே பேசாமலே நகர்ந்து விட்டார்கள். ஏன் இவ்வளவு உதாஸீனமாயிருந்தாரென்று புலப்படவில்லை. இவருக்கு ஆசிரமம் வாங்கிக் கொள்வதற்கு வேண்டிய எவ்வித யோக்கியதையும் கிடையாதென்று தெரிந்த ஒரு நண்பர் இவரை நமஸ்கரித்துவிட்டு, ''ஆசிரமம் பெற்று எத்தனை நாளாகிறது?'' என்று கேட்டார். ''இரண்டு மாஸமாகிறது'' என்று பதில் சொன்னார். ''தாங்கள் ஆசிரமம் வாங்கிக் கொள்வீர்களென்று நான் எதிர்ப்பார்க்கவில்லை'' என்றார் நண்பர். அதற்கு அவர் ''நானும்தான் எதிர்ப்பார்க்கவில்லை. ஒரு வருஷத்தில் என் தாயார் தகப்பனார் சிரார்த்தங்கள் இரண்டு, என் மாதாமஹி மாதாமஹர் சிரார்த்தங்கள் இரண்டு, என் இரண்டு பார்யைகளின் சிரார்த்தங்கள் இரண்டு, ஆக ஆறு சிரார்த்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு ஸமயமும் யாரையேனும் உதவி செய்யும்படிக் கேட்க வேண்டியிருக்கிறது. மிகவும் சிரமமாக இருந்தது. நான் என் ஊர் பக்கம் போயிருக்கும்போது என் சிரமத்தைப் பற்றி ஒரு நண்பரிடம் சொன்னேன். அவர் ஸந்யாஸம் வாங்கிக் கொண்டுவிட்டால் இந்த சிரார்த்தப் பொறுப்பு நீங்கிவிடுமென்று யுக்தி சொல்லிக் கொடுத்தார். அது மிகவும் நியாயமாயிருந்தபடியால் அப்படியே ஸந்யாஸம் பெற்றுக்கொண்டேன்'' என்றார். ஸ்ரீமத் ஆசார்யார் இவர் விஷயத்தில் உதாஸீனமாயிருந்தது மிகவும் நியாயம்தான் என்று தெரிந்தது.

ஸ்ரீமத் ஆசார்யார் ஓர் ஊரில் தங்கிக் கொண்டிருந்த கட்டிடத்திற்கு ஸமீபத்திலுள்ள வேறு ஒரு கட்டிடத்தில் சில ஸந்யாஸிகள் இருந்து வந்தார்கள். ஒரு நாள் காலையில் அவர்களில் ஒருவர் உரக்க தைத்திரீய உபநிஷத் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அவ்வளவும் அபஸ்வரம். ஸ்ரீமத்

ஆசார்யாரின் காதுகளில் இது விழுந்து கொண்டிருந்தபடியால் ஆஹ்நிக அனுஷ்டானத்திற்குக்கூட இடைஞ்சலாக இருந்தது. ஒரு வேலைக்காரனைக் கூப்பிட்டு ''அடுத்த கட்டிடத்தில் ஒரு பெரியவர் உபநிஷத் பாராயணம் செய்வதாகத் தெரிகிறது. அவரை ஸ்ரீ ராமநாம ஸ்மரணம் செய்யச் சொல்லு'' என்று சொல்லியனுப்பினார். அப்படியே அவன் போய் அந்த ஸந்யாஸியிடம் சொன்னதில் ''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லி ''ஸ்ரீ ராம, ராம,ராம'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஸாயங்காலமாக அவர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வந்து நமஸ்கரித்து ''ஸ்ரீ ராம நாம ஸ்மரணம் செய்யும்படி உத்தரவானதாக வந்து சொன்னான். அவ்விதமே செய்து வருகிறேன்'' என்றார். ''மிகவும் ஸந்தோஷம்'' என்றார் ஆசார்யார். ''ராமநாம ஜபம் செய்வதற்கு ஒரு ஜபமாலை உத்தரவாக வேண்டும்'' என்று அவர் கேட்டுக் கொண்டார்.அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் ''ஜபமாக வைத்துக் கொள்ள வேண்டாம். கணக்கில்லாமல் அகண்டமாகவே இருக்கட்டும்'' என்று சொல்லிவிட்டார். ஜபம் என்றால் முடிந்துவிட்ட தென்று மறுபடியும் அபஸ்வரத்தில் உபநிஷத் பாராயணம் ஆரம்பித்துவிடுவாரோவென்று பயந்து ஸ்ரீமத் ஆசார்யார் இவ்விதம் சொன்னாரோவென்று ஸாமான்ய ஜனங்கள் நினைக்கலாம். வாஸ்தவத்தில், ''இந்த ஸந்யாஸி இனிமேல் சரியான ஸ்வரத்துடன் அத்யயனம் செய்து கற்றுக் கொள்வது ஸாத்தியமில்லை. வீணாக அபஸ்வரமாக சொல்லி தோஷத்தை ஸம்பாதிக்க வேண்டாம். பகவந்நாம ஸ்மரணத்திலேயே காலத்தைக் கழிக்கட்டும்'' என்ற பரம கருணையினாலேயேதான் அவ்விதம் ஸ்ரீமத் ஆசார்யார் உத்தரவிட்டார்.

13. திவ்ய திருஷ்டி

ஸ்ரீமத் ஆசார்யார் திருநெல்வேலிக்கு விஜயம் செய்யும்போது அர்ப்பணம் செய்ய உத்தேசித்த ஸம்ஸ்கிருத ஸ்வாகதப் பத்திரிகையை எழுதும் பொறுப்பு அங்கே வக்கீலாயும் விசேஷ பாண்டித்யமுள்ளவராயுமிருந்த P.S. ஸுப்ரஹ்மண்ய அய்யர் என்பவரிடம் விடப்பட்டு அவர் அழகாகத் தயாரித்திருந்தார். அதை யார் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் வாசித்து அர்ப்பணம் செய்வது என்ற கேள்வி வரும்போது அந்த ஸமயம் திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீமடம் தர்மாதிகாரியாயிருந்த A.K. ஸுந்தரமய்யர், அவருடைய ஸ்தானத்தை உத்தேசித்து வாசிப்பது உசிதமென்று தீர்மானிக்கப்பட்டது. ஸுப்ரஹ்மண்ய அய்யரும் இதற்கு ஸம்மதித்தபோதிலும், தான் வாசிப்பதற்கில்லேயே என்ற வருத்தம் ஸுப்ரஹ்மண்ய அய்யர் மனதில் இருந்து வந்தது. பிறகு ஸ்ரீமத் ஆசார்யார் வந்து இறங்கியான பிறகு கிரமமாக ஸுந்தரம் அய்யரே ஸ்வாகதப் பத்திரிகையை வாசித்தார். அவ்விதம் அவர் வாசித்து வருகையில் ஒரு பதத்தைக் குறிப்பிட்டு ''இதன் ஸ்வாரஸ்யம் என்ன?'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் ஸுப்ரஹ்மண்ய அய்யரைப் பார்த்துக் கேட்டார். உடனே அவர் தாத்பர்யம் சொன்னுர். தான் வாசித்துக் கொண்டிருந்த போதிலும் தன்னைக் கேட்காமல் ஸுப்ரஹ்மண்ய அய்யரை கேட்டதிலிருந்து இப்பத்திரிகையை எழுதினது ஸுப்ரஹ்மண்ய அய்யர்தான் என்பதை ஸ்ரீமத் ஆசார்யார் தெரிந்து கொண்டிருக்கிருரே, அது எப்படி என்று ஸுந்தரம் அய்யர் வியந்தார். ஸுப்ரஹ்மண்ய அய்யருக்கு இருந்த மனக்குறையும் நிவிருத்தியாகி விட்டது.

ஞ•ஐ

ஸ்ரீமத் ஆசார்யார் திருநெல்வேலியில் மூன்று வாரங்களுக்கு மேல் தங்கியிருந்தார். அந்த ஸமயம் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர்

மிகவும் பக்தியுடன் பிரதிதினம் காலேயிலும் மாலேயிலும் தவருமல் தரிசனம் செய்து வந்ததுடன் பலவித கைங்கர்யங்களேயும் செய்துவந்தார். கடைசியில் ஸ்ரீமத் ஆசார்யார் ஊரைவிட்டுப் புறப்பட்டு வேறு கிராமத்திற்கு விஜயம் செய்யும்போது அவரை விட்டுப்பிரிய மனமில்லாமல் பல்லக்கைப் பிடித்துக்கொண்டே வெகு தூரம் நடந்து வந்துவிட்டார். நிற்கலாமென்று ஸ்ரீமத் ஆசார்யார் எத்தனே தடவை சொல்லியும் இவர் கூடவே வந்து கொண்டிருந்தார். ஸ்ரீமத் ஆசார்யார் பல்லக்கை நிறுத்திக்கொண்டு ''வெது தூரம் வந்துவிட்டீர்கள், நில்லுங்கள்'' என்று சொன்ஞர். ''திரும்பிப் போக வேண்டியிருக்கிறதேயென்று வெகு வருத்தமாயிருக்கிறது'' என்று இவர் சொன்னவுடன் ஸ்ரீமத் ஆசார்யார் ''நீங்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர். ஸர்க்கார் எந்த ஸமயம் வேண்டுமாஞலும் உங்களே வேறு இடத்திற்கு மாற்றியிருக்கலாம். இதுவரை மாற்ருமல் ஸ்ரீ சந்திரமௌலீசுவர தரிசனம் கிடைத்ததில் திருப்தி அடையுங்கள்'' என்று ஸமாதானப்படுத்தி இவரை நிறுத்திவிட்டுப் புறப்பட்டு விட்டார். பிறகு பல்லக்கு மறையும்வரையில் அவர் அங்கேயே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டுப் பிறகு மனமில்லாமலே தன் வீடு வந்து சேர்ந்தார். அங்கு வந்தவுடன் தன் மேஜையின் மேல் ஒரு கடிதம் இருக்கக் கண்டார். சில நாட்களுக்கு முன்னமேயே இவரை வேறு ஊருக்கு மாற்ற உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் தாமதமாகவே அனுப்பப்பட்டு வந்திருக்கும் ஸர்க்கார் உத்தரவு அது என்று கண்டார்.

ஸ்ரீமத் ஆசார்யார் அந்தர்முகமாயிருக்கும்போது அவருடைய நிலே எவ்விதம் என்று யாரும் அறியமுடியாது. அவருடைய பேச்சும் நடத்தையும் விலக்ஷணமாகவும் இருக்கும். ஆகையால் அவரை தரிசிப்பதே துர்லபமாயிருக்கும். ஒரு நாள் ஒரு பெரிய ஸர்க்கார் உத்தியோகஸ்தர் எப்படியாவது தரிசனம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அங்குள்ள அதிகாரிகளிடம் கேட்டுக் கொண்டார். அவர்கள் ''ஸாதாரணமாக யாரையும் தரிசனம் செய்ய அனுமதிப்பது கிடையாது. தாங்கள் இவ்வளவு கேட்டுக் கொள்கிறபடியால் தங்களே உள்ளே அனுப்புகிரேம். தூரவிருந்தே ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்துவிட்டு நமஸ்கரித்தவுடன் திரும்பிவிடுங்கள். நீங்களாகப் பேச்சுக் கொடுக்காதீர்கள். அவர் ஏதேனும் சொன்ஞலும் பதில் சொல்லாமல் திரும்பிவிடுங்கள்''

என்று எச்சரித்துவிட்டு இவரை உள்ளே அனுப்பினுர்கள். இவர் உள்ளே நுழைந்து ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கிருக்கிருரென்று தெரிந்து கொள்வதற்கு முன்னமேயே ''போ, போ சீக்கிரம் போ'' என்ற சப்தம் கேட்டது. உடனே அந்தப் பக்கம் திரும்பி வெகு தூரத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளிருப்பதைக் கண்டு நமஸ்கரிக்கக் குனிந்தார். உடனே ''வேண்டாம், போ போ'' என்றே ஸ்ரீமத் ஆசார்யார் சொல்லிவிட்டார். மேல் என்ன செய்வதென்று தெரியாமல் அஞ்ஜலிபந்தம் செய்துவிட்டு மிகவும் வருத்தத்துடன் வெளியில் வந்துவிட்டார். தனக்கு எதிர்ப்பாராமல் ஏற்பட்ட இந்த பரிபவத்தை நினைத்து நினைத்து வருந்தினுர். பிறகு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார். அங்கே போய்ப் பார்க்கையில் தன் பார்யை இறந்துவிட்டதாகத் தந்தி வந்திருக்கக் கண்டார். அப்பொழுதுதான் ஸ்ரீ ஸ்வாமிகள் சொன்னதின் தாத்பர்யம் தெரிந்தது.

ஸ்ரீமடம் பௌரோஹித்யம் வஹித்துவந்த ஒரு பெரியவர் தனக்கு வயதான பிறகு அப்பொறுப்பைத் தன் புத்திரரிடம் ஒப்படைத்துவிட்டுத் தன் சொந்தமான அத்யாத்ம காரியங்களை மாத்திரம் கவனித்துக் கொண்டிருக்கையில், ஒரு நாள் தன் பௌத்திரனை அழைத்து ''ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சென்று நான் ஸந்யாஸாசிரம ஸ்வீகாரம் செய்துகொள்ள உத்தேசிக்கிறேன் என்பதைத் தெரியப்படுத்தி அவர்களுடைய பரிபூர்ண ஸம்மதத்தையும் அனுக்ரஹத்தையும் நான் பிரார்த்திப்பதாகச் சொல்லி அவர்கள் ஆக்ஞையைத் தெரிந்துகொண்டு வா. எனக்கு நதியைத் தாண்டி அக்கரைக்குப் போய்வருவதற்கு சக்தி இல்லாமல் இருக்கிறது'' என்று சொல்லியனுப்பினுர். அப்படியே அவன் போய் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் விக்ஞாபனம் செய்தான். உடனே அவர் ''இரண்டு மாஸங்களுக்கு முன்னமேயே அவர் ஸந்யாஸியாகி விட்டார். இப்பொழுது அதைக் கிரமப்படி செய்ய உத்தேசிக்கிருர் போலும். தகுந்த அதிகாரி; அப்படியே செய்யட்டும்'' என்று சொன்னுர். இதன் தாத்பர்யம் அந்தப் பையனுக்கு விளங்கவில்லை. அவன் வீட்டுக்குத் திரும்பி வந்து தன் பிதாமஹரிடம் ஸ்ரீ ஸ்வாமிகள் உத்தரவிட்ட வார்த்தைகளை அப்படியே சொல்லிவிட்டான்.

இதைக் கேட்டதும் அவருக்கு வந்த ஆச்சரியத்திற்கும் ஸந்தோஷத்திற்கும் அளவேயில்லை. ''இரண்டு மாஸங்களுக்கு முன்னமேயே இந்த ஸந்யாஸ ஸங்கல்பம் மனதில் செய்து

கொண்டேன். அதுமுதல் பொடி போடுவதையும் குழந்தைகளை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு லாலனம் (கொஞ்சுவது) செய்வதையும் நிறுத்திவிட்டேன். வெகு நாள் பழக்கமாயிருந்த இந்த இரண்டு காரியங்களையும் நான் விட்டொழித்து விட்டபடியால் அன்றைக்கே ஸந்யாஸியாகி விட்டதாக ஸ்ரீமத் ஆசார்யார் அபிப்பிராயப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. நான் இங்கே வீட்டில் செய்த காரியத்தை அவர் எப்படியறிந்தாரோ தெரியவில்லை'' என்றார். பிறகு கிரமமாக ஸந்யாஸம் பெற்று ஸித்தியடைந்தார்.

இவருடைய பிதா விஷயமாக நடந்திருந்த ஒரு ஸம்பவத்தையும் இங்கு குறிப்பிட நினைக்கிறேன். அவரும் ஸ்ரீமடம் புரோகிதராயிருந்து வருகையில் வயதாகிவிட்டபடியால் ஸந்யாஸம் வாங்கிக் கொள்ள எண்ணம் கொண்டு அப்பொழுது பீடாதிபத்யம் வஹித்துவந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளிடம் ஒரு நாள் அனுமதி கேட்டார். அதற்கு அவர், ''உங்களுக்கு என்ன அவசரம்? எனக்குப் பிறகல்லவா பார்க்க வேண்டும்?'' என்று சொல்லிவிட்டு உள்ளே போய் ஒரு சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டு வந்து ''உங்கள் நித்ய பூஜையுடன் இவரையும் ஆராதித்து வாருங்கள். ஒன்றும் அவசரப்பட வேண்டாம்'' என்று சொல்லி அந்த லிங்கத்தை அவரிடம் கொடுத்தார். அவரும் பதில் சொல்ல முடியாதவராக வீட்டுக்குத் திரும்பி வந்து பார்க்கையில் அந்த லிங்கம் மிருத்யுஞ்ஜய மூர்த்தியாகவிருக்கக் கண்டார். ஸ்ரீமத் ஆசார்யாரின் ஆக்ஞைப்படி அதையும் ஆராதித்து வந்தார். பிறகு சிலகாலம் சென்று ஸ்ரீமத் ஆசார்யார் (ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவ அபிநவ நரஸிம்ம பாரதீ மஹாஸ்வாமிகள்) சித்தியடைந்து விட்டார். அது விஷயமாய் செய்ய வேண்டிய மஹாபூஜை, ஆராதனை முதலான ஸகல காரியங்களையும் இவரே புரோஹிதராயிருந்து நடத்தி வைத்தார். இதற்குச் சில மாஸங்கள் சென்ற பிறகுதான் இவர் ஸந்யாஸம் பெற்று ஸித்தியடைந்தார்.

வடதேசத்திலிருந்து அவதூதராக ஒரு வைராகி சிருங்கேரிக்கு வந்தார். அப்பொழுது நதியில் பூர்ணப் பிரவாஹமிருந்த படியால் ஸ்ரீமத் ஆசார்யார் இருந்துவந்த தென்கரைக்குப்

போகவேண்டுமானுல் தோணியில்தான் போகவேண்டும். இந்த வைராகியை தோணியில் ஏற்றிக்கொள்ள மற்றவர்களுக்கு இஷ்டமில்லை. அவர் முறண்டிக்கொண்டு ஏறுவதற்குப் பிரயத்தனம் செய்ததை அங்குள்ளவர்கள் பலாத்காரமாக தடுத்துவிட்டார்கள். அன்று ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்வதற்காக மைசூர் ஸர்க்காரைச் சேர்ந்த இரண்டு பெரிய உத்தியோகஸ்தர்கள் தென்கரைக்கு வந்து பூர்வாசார்யாரின் அதிஷ்டானத்தில் காத்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரிடம் தெரிவித்தவுடன் இவர்களுக்கு தரிசனம் கொடுப்பதற்காக அவரும் மடத்திலிருந்து வெளியே வந்து அதிஷ்டானத்துக்குப் போகும் நடைபாதையில் பாதிதூரம் வந்து கொண்டிருக்கையில் வடபக்கத்திலிருந்து ஒரு சங்கம் ஊதும் சப்தம் கேட்டது. உடனே ஸ்ரீ ஸ்வாமிகள் அதிஷ்டானம் போகாமலே வடபக்கம் திரும்பி நேரே நதியை உத்தேசித்து வேகமாய்ச் சென்றுர். கொஞ்ச தூரம் சென்றதும், கையில் சங்கை வைத்துக்கொண்டு மேலெல்லாம் ஜலம் கொட்டிக்கொண்டு ஜடாதாரியாய் அவதூதராய் ஒரு வைராகி ஓடி வருவதைக் கண்டார். அவர் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸமீபத்திற்கு வந்தவுடன் நமஸ்கரித்து நின்றுர். அவர் நதியை நீந்தியே இக்கரைக்கு வந்திருப்பதாகத் தெரிந்தது. பிறகு இருவரும் சில நிமிஷங்கள் ஸம்ஸ்கிருதத்திலேயே பேசிக் கொண்டிருந்தார்கள். கூடவிருந்த வேலைக்காரருக்கு விஷயம் தெரியவில்லை. பொதுவாக ஹிமயமலைப் பிரதேசத்திலுள்ள தன் குருநாதர் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்துவிட்டு வரச் சொன்னதன் பேரில் அவர் வந்ததாகச் சொன்னது மாத்திரம் தெரிந்தது.

பிறகு அவரை தோணியில் ஏற்றி அக்கரைக்கு அழைத்துப் போய் ஆஹாரம் செய்துவைத்து மரியாதையாய் அனுப்பும்படி ஸ்ரீமத் ஆசார்யார் உத்தரவிட்டார். அதன் பிறகே அதிஷ்டானம் வந்து அங்கு எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த உத்தியோகஸ்தர்களுக்கு அனுக்ரஹம் செய்தார். அந்த வைராகியை அப்படியே தோணியில் ஏற்றி அக்கரைக்குச் சென்று ஆஹாரம் கொடுத்ததில், தான் இந்த ஆஹாரத்திற்காக வரவில்லையென்றும் தான் உத்தேசித்து வந்த கார்யம் நன்கு நிறைவேறிவிட்டபடியால் திருப்தியுடனேயே தான் திரும்புவதாகவும் சொல்லிவிட்டுப் புறப்பட்டுவிட்டார்.

இன்னொரு ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் அந்தர்முகமாய் இருக்கும்போது வேறொரு அவதூத வைராகி தரிசனத்திற்காக வந்தார். தர்மசாலை முன் பக்கத்தில் அவர் தங்கிக் கொண்டார். ஸ்நாநாதிகள் ஒன்றுமே கிடையாது. நின்றபடியே மூத்திர விஸர்ஜனம் செய்வார். டீக்கடையில் போய் கைநீட்டி டீயை வாங்கி நின்றப்படியே குடிப்பார். ஸ்ரீ ஸ்வாமிகள் அந்தர்முகமாயிருக்கும் போது ஸாதாரணமாகவே யாரையும் தரிசனத்திற்கு அனுமதிப்பது கிடையாது. அப்படியிருக்க இவரை எப்படி தரிசனம் செய்ய ஸம்மதிக்க முடியும்? அவர் எப்படியாவது தரிசனம் செய்து விட்டுத்தான் போகிறது என்ற தீர்மானத்தில் இருந்துவிட்டார். மூன்று நாட்களான பிறகு ஸ்ரீமடத்தில் உட்புறத்திலிருந்த ஸ்ரீமத் ஆசார்யார் தாமாகவே அங்குள்ள வேலைக்காரரிடம் ''தர்மசாலை வாசலில் ஒரு பெரியவர் இருக்கிறார். அவரை அழைத்து வா'' என்று உத்தரவிட்டார். வேறு பதில் ஒன்றும் சொல்ல முடியாததினால் அவ்வேலைக்காரர் தர்மசாலைக்கு வந்து அந்த வைராகியை அழைத்துச் சென்றார். அந்த வைராகி வந்ததும் ஸ்ரீமத் ஆசார்யாரை நமஸ்கரித்தார். உடனே ஸ்ரீமத் ஆசார்யார் அவரை அழைத்துக்கொண்டு இன்னும் உள்ளேயிருந்த ஓரறைக்குள் சென்றார். அங்கே இருவரும் ஏகாந்தமாய் இரண்டு மணி நேரம் இருந்துவிட்டு பிறகு அந்த வைராகி வெளியில் வந்தார். உள்ளே நடந்த ஸம்பாஷணமோ வேறு விஷயமோ யாரும் அறிவதற்கில்லை. அந்த வைராகி வெகு ஸந்தோஷமாக வெளியில் வந்தவர் தாமஸமன்னியில் சிருங்கேரியை விட்டே புறப்பட்டு விட்டார்.

இவ்விதமாக விலக்ஷணமான ஆசாரத்தோடு கூடியவர் அநேகர் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்ய அடிக்கடி வருவதுண்டு. ஆனால் மற்றவர்களுக்கு அவர்களுடைய மஹிமையைத் தெரிந்து கொள்வதற்கோ, அவர்கள் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்யும்போது நடந்திருக்கக்கூடிய ஸம்பவங்களை அறிந்து கொள்வதற்கோ அவகாசம் ஏற்படுவதில்லை. வருகிறவர்களுடைய யோக்கியதையை ஸ்ரீமத் ஆசார்யார் மாத்திரம் எப்படியோ அறிந்துகொண்டு அவர்களைத் திருப்தி செய்து அனுப்பி வைத்துக் கொண்டிருந்தார் என்பது மாத்திரம் யாவரும் அறிந்த விஷயம்.

14. தைவ பக்தி

சென்னையிலிருந்து கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் தன் பார்யையுடன் சிருங்கேரிக்கு வந்திருந்தார். ஒரு நாள் காலையில் அந்த அம்மாள் துங்கா நதியில் ஸ்நானம் செய்யும்போது என்ன காரணத்தினலோ கழுத்திலிருந்த திருமாங்கல்யச் சரடு நழுவி பிரவாஹத்தில் போய்விட்டது. ஸமீபத்தில் தேடிப் பார்த்தும் அகப்படவில்லை. அந்த அம்மாளுக்கு வந்த துக்கத்திற்கு அளவேயில்லை. ஒன்றும் தோன்ருதவளாக கண்ணீர் சொரிந்துகொண்டு ஈர வஸ்திரத்துடன் படித்துறையிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுடைய அதிர்ஷ்டவசமாக அந்த ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் தென்கரையிலிருந்து புறப்பட்டு ஸ்ரீ சாரதாம்பாள் தரிசனத்திற்காக மரப்பாலம் வழியாக வடகரைக்கு வந்தவுடன் இந்த அம்மாளைப் பார்த்து ''என்ன விசேஷம்?'' என்று கேட்டார். அவள் நடந்த விஷயத்தைச் சொன்னுள். அவளை அப்படியே தன்னுடன் வரும்படி சொல்லிவிட்டு நேரே ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயம் சென்ருர். அங்கே கர்ப்பகிருஹத்திற்குள் போய் அம்பாள் கழுத்திலிருந்த அநேகம் திருமாங்கல்யங்களிலிருந்து ஒன்றை எடுத்துக்கொண்டு வெளியில் வந்து இந்த அம்மாளிடம் கொடுத்து ''உடனே நீங்கள் இறங்கியிருக்கிற இடம் போய் பார்த்தாவைக் கொண்டு கட்டச் சொல்லிக் கட்டிக் கொள்ளுங்கள்'' என்ருர். அந்த அம்மாள் ஸ்ரீமத் ஆசார்யார் ஸ்ரீ சாரதாம்பாள் இருவருடைய அனுக்ரஹமும் சேர்ந்து கிடைத்திருக்கிறதென்று வெகு ஸந்தோஷத்துடன் அதைப் பெற்றுக்கொண்டு நமஸ்கரித்துவிட்டு தன் இருப்பிடம் சென்று ஸ்ரீமத் ஆசார்யாரின் உத்தரவுப்படி பார்த்தாவைக் கொண்டு அந்த திருமாங்கல்யத்தைக் கட்டிக் கொண்டாள். (பின்னல் அந்த அம்மாள் ஸுமங்கலியாகவே காலமானுள் என்பது குறிப்பிடத்தக்கது.)

இந்த ஸம்பவத்தைக் கவனித்த ஸ்ரீமடம் அதிகாரிகள் சிலர் ஸ்ரீ ஸ்வாமிகள் மடத்திற்கு வருமானம் செய்யவேண்டியிருக்க இவ்விதமாக ஸ்ரீ சாரதாம்பாள் ஆபரணங்களையே விநியோகம் செய்துவிடுகிருரேயென்று நினைத்ததுண்டு.

இதற்குக் கொஞ்சநாள் சென்ற பிறகு மதுரை ஜில்லா சோழவந்தானிலிருந்து M.ராமகிருஷ்ணய்யர் என்ற ஒரு பக்தர் சிருங்கேரிக்கு வந்திருந்தார். அவர் ஒரு நாள் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ''ஸ்ரீ சாரதாம்பாளுக்கு ஏதேனும் கைங்கர்யம் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். எவ்விதம் செய்யலாமென்று உத்தரவானுல் அவ்விதம் செய்கிறேன்'' என்ருர். அதற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் ''உங்கள் குடும்பத்தின் ஞாபகம் எப்பொழுதும் அம்பாள் ஹிருதயத்தில் இருக்க வேண்டுமென்று நமக்குத் தோன்றுகிறது. அடுத்த நவராத்திரி ஸமயத்தில் அம்பாளுக்குப் புதிய திருமாங்கல்யம் செய்து குடும்பத்துடன் இங்கு வந்து சாற்றுங்கள்'' என்ருர்கள். அப்படியே செய்வதாக அவர் ஏற்றுக்கொண்டுத் தன் ஊருக்குப் போனுர். அங்கே திருமாங்கல்யத்திற்கு ஏற்பாடு செய்ய நினைத்தவர் ''வெறும் தங்கத்தில் மட்டும் செய்தால் போதாது, ரத்தினங்களும் பதித்திருக்க வேண்டும்'' என்று தீர்மானித்து அப்படியே தயார் செய்தார்.

இந்த உத்தமமான ஆபரணத்தைத் தபாலில் சிருங்கேரிக்கு அனுப்புவது உசிதமாகாது, ஸ்ரீமத் ஆசார்யார் உத்தரவுப்படி குடும்ப ஸஹிதம் நேரில் போய் அர்ப்பணம் செய்துவிட்டுவரத்தான் வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். வெறும் திருமாங்கல்யத்தை அர்ப்பணம் செய்வது உசிதமில்லையென்று அதற்கு ஒரு தங்கச் சங்கிலியும் தயாரித்துக் கொண்டு நல்ல விலையுயர்ந்த ஜரிகைப் பட்டுச் சேலையையும் வாங்கிக்கொண்டு சிருங்கேரிக்குப் போனுர். அங்கே போன பிற்பாடு இவைகளை ஸமர்ப்பணம் செய்வதற்கு விசேஷ பூஜையும் அம்பாளுக்குச் செய்து வைக்க வேண்டுமென்று தோன்றி அவ்விதமே நடத்தினுர். இவ்விதமாக இந்தத் திருமாங்கல்ய ஸமர்ப்பணமே பெரிய உத்ஸவமாக நடந்துவிட்டது. ஸ்ரீமத் ஆசார்யாரும் இவருடைய சிரத்தை, பக்தி, ஔதார்யம் (பரந்த மனப்பான்மை) இவைகளைக் கண்டு மிகவும் ஸந்தோஷித்து அனுக்ரஹம் செய்தார். (இவருடைய பத்தினியும் வெகுநாள் சென்று ஸுமங்கலியாகவே காலஞ் சென்ருள்.) இந்த ஸம்பவம் நடக்கும்போதுதான் அந்த அதிகாரிகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள்

கொடுப்பதுபோல் வாங்கவும் செய்கிருரென்று ஸமாதானம் ஏற்பட்டது. வாஸ்தவத்தில் அவர் இரண்டையுமே பொருட்படுத்தாத மஹான் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை.

இதேமாதிரி திருமாங்கல்ய ஸமர்ப்பணம் நடந்த மற்ருெரு ஸம்பவத்தையும் இங்கு குறிப்பிட நினைக்கிறேன். திண்டுக்கல்லில் ஸுந்தரமய்யர் என்ற பக்தர் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் மிகவும் ஈடுபட்டு பிரதி வருஷம் காலடியில் நடக்கும் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவத்தில் விசேஷ அக்கறை எடுத்துக்கொண்டு நேரில்போய் கூடவிருந்து நடத்துவார். பிராஹ்மண போஜனத்திற்கு வேண்டிய பக்ஷணங்களை தன் கிருஹத்திலேயே தயாரித்து அசுத்தப்படாமல் திண்டுக்கல்லிலிருந்து தன்னுடைய மோட்டார் காரிலேயே காலடிக்குக் கொண்டுவந்து சேர்ப்பார்.

இவர் ஒரு வருஷம் சிருங்கேரிக்கு வந்திருந்தார். அந்த ஸமயம் ஊர் மத்தியிலுள்ள ஸ்ரீ மலஹானிகரேசுவரருக்கு திருக்கல்யாண மஹோத்ஸவம் வந்தது. அவ்வுத்ஸவத்தில் தானும் ஏதேனும் கைங்கர்யம் செய்ய வேண்டுமென்று நினைத்து ஸ்ரீமத் ஆசார்யாரிடம் சொன்னுர். அதற்கு அவர் ''கல்யாணத்திற்குத் திருமாங்கல்யம்தான் முக்கியம்'' என்ருர். உடனே ஸுந்தரமய்யர் சிருங்கேரியிலேயே வேண்டிய ஏற்பாடு செய்து திருமாங்கல்யம் தயாரித்தார்.

திருக்கல்யாணத்திற்கு முந்தின நாள் சாயங்காலம் அம்பாளுக்கு புதிய பட்டு வஸ்திரங்கள் வாங்கிக் கொண்டு அவைகளுடன் திருமாங்கல்யத்தையும் எடுத்துக்கொண்டு போய் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ஸமர்ப்பணம் செய்தார். ஸ்ரீமத் ஆசார்யார் அவைகளைப் பார்த்துவிட்டு ''வெகு ஸந்தோஷம். இவைகள் உங்களிடமேயிருக்கட்டும். நாளை கோவிலிலிருந்து மனுஷ்யர்கள் உங்களிடம் வந்து வாங்கிச் செல்வார்கள்'' என்று உத்தரவிட்டார்.

மறுநாள் வெகு நாழிகையாகியும் யாரும் வராததைக் கண்டு ஸுந்தரமய்யர் என்ன செய்வதென்று தெரியாமல் வெளியில் வந்தார். அந்த ஸமயம் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்திலிருந்து உத்ஸவத்திற்கு வேண்டிய பதார்த்தங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அர்ச்சகர்கள் பட்டாடையும் பட்டுத் தலைப்பாகையும் தரித்து யானை முதலான பிருதாவளிகளுடன் புறப்படுவதைப்

பார்த்தார். அந்த கோஷ்டியாருடன் சேர்ந்து கொள்ளலாமென்று இவர் நினைத்திருக்கையில் அந்த ஊர்வலம் மேளதாளத்துடன் இவர் ஜாகை வாசலில் நின்றது. உடனே பிரதான அர்ச்சகர்கள் ஜாகைக்குள் வந்து ''இங்கே ஸுந்தரமய்யர் யார்?'' என்று கேட்டார்கள். ''நான்தான்'' என்று இவர் சொன்னவுடன் இவரிடம் வெகு மரியாதையாக வந்து கந்தம் (சந்தனம்), அக்ஷதை, புஷ்பாதிகள் கொடுத்து திருக்கல்யாண உத்ஸவத்திற்கு இவரை அழைத்துவிட்டு திருமாங்கல்யத்தை எடுத்துவரச் சொன்னார்கள். இவர் கொண்டுவந்து கொடுத்தவுடன் ஓர் அகலமான வெள்ளித்தாம்பாளத்தில் வஸ்திரங்கள் மஞ்சள் புஷ்பம் தேங்காய் பழங்களுடன் திருமாங்கல்யத்தை வைத்து இவரையே கையில்எடுத்துக் கொள்ளச் சொன்னார்கள். உடனே இவருக்கு சந்தனம் பூசிவிட்டு கழுத்தில் ஹாரமிட்டு அந்தத் தாம்பாளத்துடன் தங்கள் மத்தியில் வரும்படியாகச் செய்து நான்கு வீதிகளிலும் பிரதக்ஷிணமாய் மேளதாளத்துடன் ஆலயம் அழைத்துச் சென்றார்கள். ஸுந்தரமய்யருக்கு இருந்த ஸங்கோசத்திற்கு அளவேயில்லை. ஆனால் என்ன செய்ய முடியும்? அப்படியே ஆலயம் போய் கல்யாணோத்ஸவம் நடக்கும்போது கூடவிருந்து தரிசனம் செய்தார். பிறகு நலங்கு ஸமயத்தில் ஸ்ரீமத் ஆசார்யாரே நேரில் ஆலயத்திற்கு விஜயமாகி விஸ்தாரமான பிராகார மேடையில் பகவானும் அம்பிகையும் கிழக்கேயும் மேற்கேயுமாகப் பார்த்து வீற்றிருக்கையில் மத்தியில் வடக்கே பார்த்து ஸ்ரீமத் ஆசார்யார் எல்லாருக்கும் தரிசனம் கொடுத்த காக்ஷி வெகு அத்புதமாகவிருந்தது. ஹரித்ரார்ப்பண சுலோகங்களைச் சொல்லிக்கொண்டு அர்ச்சகர்கள் அந்தந்த நலங்கு உபசாரங்களைச் செய்தது மிகவும் மனோஹரமாயிருந்தது. அப்பொழுது ஸுந்தரமய்யரிடம் ஸ்ரீமத் ஆசார்யார் அவர் செய்த ஸேவையை சிலாகித்துப் பேசினார். அதற்கு அவர் ''நேற்று தாங்களே இந்த திருமாங்கல்யத்தை வாங்கி வைத்துக்கொண்டு இன்று ஆலயத்திற்கு அனுப்பியிருக்கலாம். இன்று என்னைத் தலைநிமிர முடியாமல் நான்கு வீதிகளிலும் மேள தாளத்துடன் அழைத்துச் சென்று என்னை லஜ்ஜைப்படுத்தி விட்டார்கள்'' என்றார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் ''ஸர்வமங்களைக்கு மாங்கல்யம் கொடுக்கும் உங்களுக்கு இந்த மரியாதை எப்படிப் போதும்?'' என்றார். பிறகு வெகு ஸந்தோஷமாக அவரை ஆசீர்வதித்து பிரஸாதம் கொடுத்து அனுக்ரஹித்தார்.

ஒருவர், ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாருக்கு ஓர் உத்ஸவ மூர்த்தி தயாரிக்க வேண்டுமென்று நினைத்துச் செய்து பார்த்ததில் மூர்த்தி லக்ஷணமாக அமையாதபடியினால் அதை அப்படியே காலடியில் கொண்டுபோய் வைத்துவிட்டார். லக்ஷணம் தெரிந்தவர்கள் பார்த்துவிட்டு இதை உருக்கி வேறு மூர்த்திதான் வார்க்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். அப்படியே வேறு மூர்த்தி தயாரிக்கப்பட்டது. பிறகு இம்மூர்த்திக்கு பிராண பிரதிஷ்டை செய்ய வேண்டிய விஷயமாக ஒரு பக்தர் சிருங்கேரிக்குப் போய் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் விக்ஞாபனம் செய்து கொண்டார். அதைக் கேட்டதும் ஸ்ரீமத் ஆசார்யார் ''நம் குருநாதர் (ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள்) காலடியில் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்திருப்பது போதாது என்று உங்களுக்குத் தோன்றிவிட்டதோ?'' என்றார். ''அப்படியல்ல, ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவ ஸமயத்தில் மேளதாளங்களுடன் ஸ்ரீமடம் அக்கிரஹாரத்தில் ஊர்வலம் செய்தால் நன்றாகவிருக்குமென்று சில பக்தர்கள் நினைத்து இவ்விதம் ஏற்பாடு செய்யப்பட்டது'' என்றார் பக்தர். ஸ்ரீமத் ஆசார்யார் ''அதாவது, சிஷ்யர்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்கு மூலஸ்தான மூர்த்தி போதாது. உத்ஸவ மூர்த்தியாகத் தெருவில் வந்து அனுக்ரஹிக்க வேண்டும் என்பதுதானே?'' என்றார். ''நாங்கள் மூலமூர்த்தி போதாது என்று நினைக்கவில்லை. இதுவும் இருந்தால் ஜனங்கள் கொஞ்சம் உத்ஸாஹமாக உத்ஸவத்தில் கலந்து கொள்வார்கள்'' என்று இவர் சொன்னவுடன் ''அதாவது கொஞ்சம் தமாஷா வேண்டியிருக்கிறது என்றுதானே அர்த்தம்?'' என்றார் ஸ்ரீமத் ஆசார்யார். பதில் சொல்ல முடியாமல் பக்தர் தலை குனிந்திருக்கும் ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் ''பிராணப் பிரதிஷ்டைக்கு இங்கிருந்து தகுந்த மனுஷ்யரை அனுப்புகிறோம். அதற்காக கவலைப்பட வேண்டாம். பகவானிடம் பக்தி காட்டுவதை உத்ஸவப் பிரதானமாக செய்து வெளி ஆடம்பரங்களிலேயே வைத்துக் கொண்டுவிட்டால், அந்தரங்கத்தில் இருக்க வேண்டிய பக்தி குறைந்துவிடும். அதற்கு இடம் கொடுத்துவிடக் கூடாதென்பதற்காகச் சொன்னேனே தவிர, நீங்கள் உத்ஸவம் செய்ய வேண்டாமென்ற தாத்பர்யத்தில் சொல்லவில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் விஸ்தாரம் செய்யுங்கள். முக்கியமான அம்சத்தை மறந்துவிடாதீர்கள்'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் மிகக்

கருணையுடன் எச்சரித்துவிட்டு சிருங்கேரியிலிருந்து ஒரு பிரஸித்தரை காலடிக்கு அனுப்பி உத்ஸவ மூர்த்திக்கு பிராணப் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

௸

சுமார் 1940 ல் கல்கத்தாவில் சிலர்கள் ஹனுமார் கோவில் ஒன்று கட்டவாரம்பிக்கையில் மஹாகாளி உபாஸகர்கள் சிலர் இந்தப் பிரதேசம் காளியின் கட்டமாயிருப்பதினால் இங்கே வேறு தேவதைக்கு ஆலயம் கட்டக் கூடாதென்று தடுத்தார்கள். அதன் பேரில் கலகமும் வியவஹாரமும் பெரியதாக ஏற்பட்டுவிட்டது. நீதி மன்றத்தில் வியவஹாரம் நடந்து கொண்டிருக்கையில் அங்குள்ள நியாயாதிபதி இருதரத்தார்களையும் பார்த்து ''இது மத ஸம்பந்தமான விஷயமாயிருப்பதால், உங்கள் மதத்தில் உள்ள யாரேனும் பெரியவர் தீர்மானம் செய்வதுதான் உசிதமாயிருக்கும். நீங்கள் இருவரும் ஏகோபித்து ஒருவரை குறிப்பிட்டால் நான் அவருக்கே ரிகார்டுகளை அனுப்பி இவ்வியவஹாரத்தை முடிவு செய்யச் சொல்லலாமென்று நினைக்கிறேன்'' என்றார். இருவர்களும் தங்களுக்குள் ஆலோசனை செய்துகொண்டு ''சிருங்கேரி ஸ்ரீமத் ஆசார்யாருக்கு அனுப்பிவிட்டால் அவர் எப்படிச் சொன்னாலும் கேட்டுக்கொள்கிறோம்'' என்று ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுத்தார்கள். அப்படியே வியவஹார ஸம்பந்தமான ஸகல ரிகார்டுகளும் ஸ்ரீமத் ஆசார்யாருக்கு அனுப்பப்பட்டன. அந்த ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யார் காலடியில் இருந்தார். வியவஹாரத்தின் ஸாராம்சத்தைக் கேட்டுக்கொண்டு அதிக தாமஸமன்னியில் ஸ்ரீமத் ஆசார்யார் தம்முடைய தீர்மானத்தை எழுதி அனுப்பிவிட்டார்.

''காசீ க்ஷேத்திரம் ஸ்ரீ விசுவேசுவரருடைய க்ஷேத்திரம் என்று இருந்தபோதிலும், அங்கே மாதவர், துர்க்கை, ஹனுமார் இவர்களுக்கு ஆலயங்கள் இருக்கின்றன. இவைகளிருப்பதால் விசுவேசுவரருக்கு அபசாரம் செய்ததாக ஆகாது. ஆகையால் காளிகட்டத்தில் ஹனுமாருக்கு ஆலயம் கட்டுவது மஹாகாளிக்கு அபசாரமாகாது. தவிரவும், நம் ஸம்பிரதாயத்தில் எந்த மூர்த்திக்கு ஆலயம் ஏற்படுத்தினாலும் அந்த மூர்த்தி ஜகத் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களைச் செய்யும் ஸர்வேசுவரன் என்ற பாவனையுடனேயே செய்கிறோம். மூர்த்திகள் வேறுபட்டாலும் அந்த ஸர்வேசுவரன்

ஒன்றுதான் என்பது யாரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆகையால் எந்த மூர்த்தியையும் ஸர்வேசுவரன் என்கிற பாவனேயுடன் பிரதிஷ்டை செய்யும்போது அவரே ஸர்வ வியாபகராயிருப்பதால் இதர மூர்த்திகள் எல்லாம் அவருக்குள் அடங்கி அங்கமானவர்கள் என்றுதான் பாவனேயிருப்பது நியாயம். அங்கியாயிருக்கிற ஒரு மூர்த்தியை உபாஸிக்கும்போது அவருடைய அங்கமாயுள்ள மற்ருெரு மூர்த்தியை துவேஷித்தாலோ (வெறுத்தல்) உதாஸீனம் (ஒதுக்கிவிடுதல்) செய்தாலோ அங்கியாயிருக்கிறவருக்கு திருப்தியளிக்காது. ஆகையால் தாம் உபாஸிக்கிற தேவதை ஸர்வ வியாபகரென்று நினைக்கும் எவரும் இதர தேவதைகளிடத்தில் அபசார எண்ணம் வைத்துக்கொள்ள எவ்வித நியாயமுமில்லே. இதர தேவதைகளும் தன் உபாஸ்ய தேவதையின் அங்கமாயிருப்பதால் அவர்களிடத்திலும் கௌரவ புத்தி இருக்க வேண்டும். அப்படியிருந்தால் மூர்த்திகளின் வேற்றுமையைக் கொண்டு வியவஹாரம் செய்ய எவ்வித நியாயமும் இராது. ஆகையால் துர்க்கையிடத்தில் ஈடுபட்ட பக்தர்கள் ஹனுமாரும் ஸர்வ வியாபகியான மஹாகாளியின் அங்கம்தான் என்ற பாவனேயுடன் ஹனுமாரிடம் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். மஹாகாளியின் அங்க தேவதையான ஹனுமாரை பிரதிஷ்டை செய்வது மஹாகாளிக்கே கௌரவம்தான் என்று பாவிக்க வேண்டும்.''

இந்த தீர்மானத்தையனுஸரித்தே எல்லா வியவஹாரங்களும் முடிவடைந்தன.

சாஸ்திரத்தின்படியும் ஸம்பிரதாயத்தின்படியும் ஆலயங்களில் போகாதிருந்தவர்களேயும் உள்ளே விடவேண்டுமென்று ராஜகீய சாஸனம் ஏற்பட்டபோது ஸ்ரீமத் ஆசார்யார் ''இது விஷயமாக பிராஹ்மணர்கள் கவலேப்பட வேண்டியதில்லே. அவர்களுக்கு முக்கியமாக ஏற்பட்டது காயத்ரீ. அதன் தேவதையான ஆதித்ய பகவானே யாரும் தொட்டு அசுத்தப்படுத்த முடியாது'' என்று சொன்ஞர்கள். சில பக்தர்கள் தாங்கள் இந்த ஸந்தர்ப்பத்தில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்று கேட்டதற்கு ''ஆலய தரிசனம் பிராஹ்மணர்களுக்கு அவசியமில்லே.

வீட்டிலிருந்தபடியே காயத்ரீ ஜபத்தை ஒழுங்காய்ச் செய்து கொண்டு வீட்டிலுள்ள தேவதா பூஜையைச் செய்து வாருங்கள். இவைகளினுலேயே ஸகலவிதமான சிரேயஸ்ஸும் ஏற்படும்'' என்று ஸ்ரீமுகம் பிறப்பித்தார்கள். இவ்விதமாக காலத்தை யனுஸரித்து ஆனுல் சாஸ்திர ஸம்பிரதாயத்துக்கு விரோதமன்னியிலேயே ஸ்ரீமத் ஆசார்யார் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்வார்கள்.

15. கருணைநிதி

நவராத்திரி உத்ஸவத்தில் பிரதி தினம் காலையில் ஸுவாஸினீ பூஜை விசேஷமாக நடக்கும். மஹாநவமி தினத்தன்று ஒரு பெண்மணி தன்னையும் ஸுவாஸினியாக வரித்தால் ஒரு புடவை கிடைக்குமென்ற தீர்மானத்தில் வந்து சேர்ந்தாள். ஆனால் அவள் வருவதற்கு முன்னாலேயே அன்று வரிக்க வேண்டிய ஸுவாஸினிகள் இன்னார்களென்று தீர்மானமாகி விட்டபடியால் இவளுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. மிகவும் வருத்தப்பட்டாள். வந்தமட்டில் ஸ்ரீ சந்திரமௌளீசுவர தீர்த்தம் வாங்கிக்கொண்டு போஜனம் செய்துவிட்டுப் போகலாமென்று தங்கினாள்.

ஸ்ரீமத் ஆசார்யார் அன்று தீர்த்தம் கொடுக்கும் ஸமயத்தில் இந்த அம்மாளும் கையை நீட்டினாள். முகத்தில் சோகக்களையைப் பார்த்து ஸ்ரீமத் ஆசார்யார் "என்ன விசேஷம்?" என்று கேட்டார். அவள் தான் வந்த நோக்கத்தையும் அதற்கு இடமில்லாமல் போய்விட்டதையும் தெரிவித்துக் கொண்டாள். ஸ்ரீமத் ஆசார்யார் அவளைக் கொஞ்சம் ஒதுங்கி நிற்கச் சொல்லிவிட்டு மற்றவர்களுக்குத் தீர்த்தம் கொடுத்துக் கொண்டிருந்தார். அநேகமாய் எல்லாருக்கும் கொடுத்து முடியும் ஸமயம் ஒரு பிராஹ்மணர் வெகு அவஸரமாக ஓடி வந்து தீர்த்தத்திற்குக் கையை நீட்டினார். அவருடைய பரபரப்பைப் பார்த்து "எங்கிருந்து வருகிறீர்?" என்று கேட்டார். "இன்று நவராத்திரி பூர்த்தி தினம். இன்று விசேஷமாக ஸுவாஸினீ பூஜை நடக்கும். அதில் ஒரு ஸுவாஸினிக்காவது நான் வஸ்திரம் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று ஸமீபத்திலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போனேன். அங்கே ஜவுளிக்கடையில் புடவையை வாங்கிக் கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்து பார்க்கையில் அடுத்த பஸ் புறப்படுவதற்கு இன்னும் இரண்டு மணியாகுமென்று தெரிந்தது. இங்கே ஸுவாஸினீ பூஜைக்கு முன்னால் வந்து சேர முடியாதே

என்று மிகவும் வருத்தப்பட்டேன். இங்கேயும் வந்து பார்க்கையில் அப்பொழுதே ஸுவாஸினீ பூஜை ஆகிவிட்டதாகவும் தீர்த்தம் கொடுக்கிற ஸமயமென்றும் தெரிந்து ஓடிவந்தேன். ஸுவாஸினீ பூஜையில் அன்வயித்துக் கொள்வதற்குப் பிராப்தமில்லாமல் போய்விட்டாலும் ஸுவாஸினிக்கு என்று வாங்கின புடவையைத் திரும்பக் கொண்டுபோக எனக்கு இஷ்டமில்லை. இவ்விடத்தில் ஸமர்ப்பணம் செய்து விடுகிறேன்'' என்று சொல்லி அந்தச் சேலையை ஸ்ரீமத் ஆசார்யாள் முன்பு வைத்துவிட்டு நமஸ்கரித்தார். உடனே ஸ்ரீமத் ஆசார்யாள் ''நீங்கள் வருத்தப்பட வேண்டாம். உங்களுக்காக அம்பாளே காத்துக் கொண்டிருக்கிருள்'' என்று சொல்லி அந்த அம்மாளைக் கூப்பிட்டு அந்தச் சேலையை எடுத்துக்கொள்ளச் சொன்னார். அந்த பிராஹ்மணருக்கும் அந்த அம்மாளுக்கும் ஏற்பட்ட ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. பிறகு இருவர்களுக்கும் தீர்த்தம் கொடுத்து அனுக்ரஹித்தார்.

ஒரு ஸமயம் என் நண்பர் ஒருவர் என்னுடன் சிருங்கேரிக்கு வருவதாகச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். நாங்கள் புறப்படும் விஷயத்தைக் கண்டு ஸ்ரீமடம் அதிகாரிக்கு எழுதியிருந்தேன். அவர் ஸ்ரீமத் ஆசார்யாளிடம் தெரிவித்தவுடன் ''இப்பொழுது ஏன் வருகிறார்கள்?'' என்று கேட்டார். ''விசேஷமாகக் காரணம் தெரியவில்லை. ஸாதாரணமாக தரிசனத்திற்காகத்தான் என்று நினைக்கிறேன்'' என்று அதிகாரி பதில் சொல்லிவிட்டார். நாங்கள் சிருங்கேரிக்குப் போய்ச் சேருவதற்குள் ஸ்ரீமத் ஆசார்யாள் அந்தர்முகமாகிவிட்டார். எங்களுக்கு தரிசனம் கிடைக்கவில்லை. ஸ்ரீமத் ஆசார்யாள் கேட்ட கேள்வியின் தாத்பர்யம் அந்த ஸமயம் தனக்குத் தெரியவில்லையென்று அதிகாரி என்னிடம் சொன்னார். இப்பொழுது வந்தால் தரிசனம் கிடைக்காதே என்ற தாத்பர்யத்தில் ஆசார்யாள் சொல்லியிருப்பதாகத் தோன்றுகிறது. எப்படியும் சிருங்கேரிக்குப் போய்விட்டு உடனே திரும்பிவர மனமில்லாமல் அங்குள்ள மற்ற வைபவங்களை தரிசித்துக் கொண்டு சிலநாட்கள் தங்கியிருந்தோம்.

ஒரு நாள் என் நண்பர் என்னிடம் பேசிக்கொண்டு இருக்கையில் ''ஸ்ரீமத் ஆசார்யாளிடம் ஏதேனும் தேவீ மந்திரம் உபதேசம் பெற வேண்டுமென்ற ஆவலுடனேயே இங்கே நான்

வந்தேன். அவர் அந்தர்முகமாயிருக்கிறார். எனக்குப் பிராப்தமில்லை'' என்று வெகு வருத்தத்துடன் சொன்னார். அதற்கு நான் ''மனதில் ஓர் உத்தேசத்துடன் சிருங்கேரிக்கு வந்துவிட்டு அந்த உத்தேசம் நிறைவேறாமல் ஊருக்குத் திரும்பிப்போனால் ஸமாதானமாகாது. இப்பொழுதும் ஒன்றும் தவறிவிடவில்லை. ஸ்ரீமத் ஆசார்யாரின் பிரதிநிதியாக சிஷ்ய சுவாமிகள் (ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்) இருக்கிறார். அவரிடம் உபதேசம் வாங்கிக் கொள்வது நல்லது'' என்று வற்புறுத்தினேன். பெரியவரிடத்தில் நேரில் உபதேசம் பெறுவதற்கில்லையேயென்ற வருத்தம் நீங்காமலே அரை மனதுடன் நான் சொன்னபடி செய்ய ஸம்மதித்தார். உடனே சிஷ்ய ஸ்வாமிகளிடம் தெரியப் படுத்தினதில் அவர் மறுநாள் காலையில் வரும்படி உத்தரவிட்டார்.

அன்று ஸாயங்காலம் வழக்கம்போல் அக்கரைக்குப் போய் பூர்வாசார்யாரின் அதிஷ்டானத்தில் தரிசனம் செய்துவிட்டு அதற்குக் கொஞ்ச தூரத்திலுள்ள ஒரு மரத்தடியில் கட்டப்பட்டிருந்த திண்ணையில் உட்கார்ந்துகொண்டு நாங்கள் இருவரும் பேசிக்கொண்டிருந்தோம். அவர் பெரியவரின் உபதேசம் தனக்கு நேரில் கிடைப்பதற்கு இல்லாமல் போய்விட்டதே என்பதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்பொழுது வெகு தூரத்திலிருந்த ஓர் அறையிலிருந்து ஒரு சப்தம் கேட்டது. ஸ்ரீமத் ஆசார்யாரின் குரலாகத் தோன்றினபடியால் கவனித்துக் கேட்டேன். என் நண்பரையும் கவனிக்கச் சொன்னேன். சில அக்ஷரங்கள்தான் காதில் பட்டது. அர்த்தம் புரியவில்லை. அதே சப்தம் நாலைந்து தடவை வந்தது. பிறகு சப்தமேயில்லை.

மறுநாள் காலையில் என் நண்பர் கிரமப்படி சிஷ்ய ஸ்வாமிகளிடம்போய் உபதேசம் பெற்றுக்கொண்டு வெளியில் வந்தார். அவர் வெளியில் வரும்போதே அவர் சரீரத்தில் ஒரு பதட்டம் தெரிந்தது. எனக்குக் காரணம் தெரியவில்லை. அவரும் ஒன்றும் பேசாமலிருக்கையில் ''ஏதேனும் விசேஷமுண்டா?'' என்று நான் கேட்டேன். அவர் கொஞ்சம் ஆசுவாஸனம் செய்துகொண்டு சொல்ல ஆரம்பித்தார். ''உள்ளே போனவுடன் என்னை உட்காரச் சொல்லி பூர்வாங்கங்கள் ஆனபிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் மூலமந்திரத்தை உபதேசித்தார்கள். அந்த மந்திரமேதான் நேற்று ஸாயங்காலம் பெரியவாள் நாலைந்து தடவை உரக்க உச்சரித்தது என்று உணர்ந்தேன். எனக்கு திடுக்கிட்டது. மயிர் கூச்சல் ஏற்பட்டது. அவர்கள் எனக்கு நேரில் உபதேசம்

செய்வதற்கில்லேயே என்று நான் வருத்தப்பட்டதற்காக நேற்று அவர்களே என் காதில் படும்படி உபதேசித்திருக்கிருர். சிஷ்ய ஸ்வாமிகளிடமும் அந்தர்யாமியாக இருந்து அதே மந்திரத்தை உபதேசிக்கும்படி தூண்டிவிட்டிருக்கிருர். எல்லாம் அவர்களுடைய பரம கருணே. இனி எனக்கு வருத்தத்திற்கு இடமேயில்லே. நான் மிகவும் தன்யனுனேன்'' என்று சொன்னுர். தனக்கு ஏற்பட்ட விசேஷ அனுக்ரஹத்தை நினேத்து நினேத்து மனமுருகி விட்டார்.

ஞ • ஐ

மதுரையிலிருந்து ஒரு வக்கீல் தன் குடும்பத்தார்களேயும் சில நண்பர்களேயும் ஒரு பரிசாரகனேயும் அழைத்துக்கொண்டு சிருங்கேரிக்கு வந்து சேர்ந்தார். ஒரு நாள் ஸாயங்காலம் ஸ்ரீமத் ஆசார்யார் அவரைப் பார்த்து ''துர்க்கா தேவஸ்தானம் போய் தரிசனம் செய்தீர்களா?'' என்று கேட்டார். அவர் ''இல்லே'' என்றதும் ''நாளேக் காலேயில் போய்வாருங்கள்'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் ஆக்ஞை செய்தார். அப்படியே செய்வதென்ற தீர்மானத்துடன் ஜாகைக்குத் திரும்பி வந்தார். அந்த ஆலயம் அங்கிருந்து இரண்டு மைலுக்கு மேல் தூரத்திலிருப்பதால் எல்லாரையும் அழைத்துக்கொண்டு நடந்தே போய்விட்டுவர வெகு நேரமாகுமாதலால், பரிசாரகனே போஜனம் தயாரித்து வைக்கும்படி சொல்லிவிட்டு மற்றவர்களெல்லாரும் போய்வருவதாக நிச்சயித்தார்கள். அன்றிரவு பூஜைக்குப் போயிருந்த ஸமயத்தில் ஸ்ரீமத் ஆசார்யார் ''நாளேக் காலேயில் துர்க்கா தேவஸ்தானம் போகிறீர்களா?'' என்று கேட்டார். இவர் ''ஆமாம்'' என்ருர். ''எல்லோருமா?'' என்று மறுபடியும் ஸ்ரீமத் ஆசார்யார் கேட்டார். இவர் பரிசாரகன் ஞாபகமே இல்லாமல் ''ஆமாம்'' என்று சொன்னுர். மறுநாள் காலேயில் உத்தேசித்தபடி பரிசாரகனேத் தவிர மற்றவர்கள் எல்லாரும் புறப்பட்டுப்போய் துர்க்கா தரிசனம் செய்துவிட்டு வந்தார்கள்.

ஸாயங்காலம் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்யப்போன ஸமயம் ''துர்க்கா தரிசனம் கிடைத்ததா?'' என்று கேட்டார். இவர் ''ஆமாம்'' என்ருர். ''எல்லாரும்?'' என்று அழுத்திக் கேட்டார். அதன் பேரில் இவர், ''சமையல் செய்து வைப்பதற்காக பரிசாரகனே மாத்திரம் நிறுத்திவிட்டு மற்றவர்களெல்லாரும் போய்விட்டு வந்தோம்'' என்ருர். ''தகுந்த துணேயுடன் அவரையும் அனுப்பி தரிசனம் செய்துவிட்டு வர ஏற்பாடு செய்யுங்கள்'' என்று ஸ்ரீமத்

ஆசார்யார் உத்தரவிட்டார். அப்படியே அந்தப் பரிசாரகனும் போய் தரிசனம் செய்துவிட்டு வந்தான். அவனை விட்டுவிட்டு மற்றவர்கள் மாத்திரம் போய் வருவதாக முந்தின நாள் தீர்மானம் செய்கையிலேயே அவன் மிகவும் வருத்தப்பட்டதாகவும் ஆனால் தன் நிலைமையை உத்தேசித்துத் தன் வருத்தத்தை வெளியிட முடியாமலிருந்ததாகவும் தெரிந்தது. இவன் மனதில் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது அக்கரையிலிருந்த ஸ்ரீமத் ஆசார்யாரின் நிர்மலமான மனதில் பிரதிபலித்ததின்பேரில்தான் அவர் ராத்திரியிலேயே ''எல்லாரும்?'' என்று கேட்டதாக இப்பொழுது தெரிந்தது. அந்தக் கேள்வியின் தாத்பர்யம் அப்பொழுது புலப்படவில்லை.

ஸ்ரீமத் ஆசார்யார் யாத்திராக்கிரமத்தில் ஒரு கிராமத்தில் நாலைந்து நாட்கள் தங்கிவிட்டுப் புறப்பட்டார். அப்பொழுது அந்த ஊரில் போஸ்ட்மாஸ்டராயிருந்தவர் ஸ்ரீமத் ஆசார்யாரை விட்டுப் பிரிவதில் தனக்குள்ள வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். ''தாங்கள் குன்னக்குடியில் சாதுர்மாஸ்யத்திற்குத் தங்கப்போவதாகத் தெரிந்து கொண்டேன். அந்த ஸமயம் நானும் இரண்டு மாஸம் ஓய்வு எடுத்துக்கொண்டு தங்களுடனேயே இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அனுக்ரஹிக்க வேண்டும்'' என்று சொன்னார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யார் ''தபாலாபீசில் நினைத்தபோது ஓய்வு எடுத்துக்கொள்வது ஸாத்தியமில்லை யென்று கேள்விப் பட்டிருக்கிறேன். அவஸரப்பட வேண்டாம்'' என்று சொல்லி விட்டார்கள். இப்படிச் சொல்லியிருக்கும்போது லீவு கேட்க தைரியமில்லாமலும் ஆனால் ஸ்ரீமத் ஆசார்யார் தரிசனம் கிடைக்காமல் போகிறதே என்ற துக்கத்தினாலும் கொஞ்சம் சிரமப்பட்டார். ஸ்ரீமத் ஆசார்யார் புறப்பட்டுப்போய் சில நாட்கள் கழித்து இவரை குன்னக்குடிக்கே மாற்றியிருப்பதாக உத்தரவு கிடைத்தது. வெகு ஸந்தோஷப்பட்டார். எல்லாம் ஸ்ரீமத் ஆசார்யாரின் கருணையென்று உணர்ந்தார்.

வெகு அழகாக ஹரிகதா காலக்ஷேபங்கள் செய்து வரும் பெங்களூர் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர் என்பவர் ஒரு நாள் காலையில் பெங்களூரில் தன் கிருஹத்தில் தன் வஸ்திரங்களை எடுத்துப்

பார்க்கையில் ஸ்ரீமத் ஆசார்யார் தனக்கு வெகுநாள் முன்னதாக அனுக்ரஹித்துக் கொடுத்திருந்த சால்வை வெகு ஜீர்ணமாய் இனி உபயோகிக்க முடியாமலிருப்பதைக் கண்டார். உடனே மனதில் ''இதேமாதிரி இன்னெரு சால்வை கிடைத்தால் நன்ருக இருக்கும். இதற்காக யாரையேனும் கேட்க முடியுமா?'' என்று நினைத்துக் கொண்டார். அன்றைய தினம் ஸாயங்காலம் அவர் நண்பர் ஒருவர், தான் தன் காரிலேயே மறுநாள் காலையில் சிருங்கேரிக்குப் போய்வர உத்தேசித்திருப்பதாகவும் பாகவதரும் தன்னுடன் அவசியம் வரவேண்டுமென்றும் சொல்லி அனுப்பினுர். வந்தவரிடம் ''காரில் எத்தனை பேர்கள் போகிருர்கள்?'' என்று இவர் கேட்டதற்கு ''உங்களைச் சேர்த்து ஏழு பேர்கள்'' என்று அவர் பதில் சொன்னுர். ''அப்படியானுல் நான் வருவதற்கில்லை. இங்கிருந்து இருநூறு மைல்களுக்கு மேல் போக வேண்டும். மிகவும் சிரமமாயிருக்கும்'' என்று சொல்லியனுப்பி விட்டார். ஆனுல் அந்த நண்பர் இவரை விட்டுவிட்டுப் போக பிரியமில்லாமல் வேறு இரண்டு பேர்களை நிறுத்திவிட்டு மறுபடியும் இவருக்குச் சொல்லியனுப்பினுர். அதன்பேரில் இவரும் வருவதாக ஸம்மதித்தார். மறுநாள் காலையில் உத்தேசித்தபடி புறப்பட்டு சிருங்கேரிக்கு ஸாயங்காலமாய் போய்ச் சேர்ந்தார்கள். அன்று ஸ்ரீ சாரதாம்பாளையும் ஸ்ரீமத் ஆசார்யாரையும் தரிசனம் செய்து கொண்டார்கள். மறுநாள் காலையிலும் தரிசனம் செய்து விட்டு மத்தியானம் அங்கிருந்து புறப்பட நினைத்தார்கள். அப்படியே மறுநாள் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் உத்தரவு பெற்றுக் கொள்ளும் ஸமயத்தில் மந்திராக்ஷதை கொடுக்கும்போது பாகவதருக்கு ஒரு சால்வை கொடுத்தார். அதைப் பார்த்தவுடனேயே பாகவதருக்கு ஸந்தோஷமும் ஆச்சர்யமும் ஏற்பட்டன. தனக்கு முன் கொடுத்த சால்வையைப் போலவே இதுவும் பச்சை நிறம், அதேமாதிரி ஜரிகையில்லாமல், அதேமாதிரி கரையில், அதேமாதிரி அகல நீளமும் இருந்தது. தான் பெங்களூரில் தன் வீட்டில் நினைத்தது ஸ்ரீமத் ஆசார்யாரின் மனதில் பட்டு அவருடைய ஸங்கல்பத்தினுலேயே தான் சிருங்கேரிக்கு இழுக்கப்பட்டு வந்ததாக உணர்ந்தார். அவருடைய மஹிமையையும் கருணையையும் நினைத்து பக்தி பரவசமானுர்.

16. அனுக்ரஹமூர்த்தி

நல்ல லௌகிக ஸௌகர்யங்களிருந்த ஒரு பிரபுவிற்கு ஒரே புத்திரர். அந்தப் புத்திரருக்கு பால்யம்முதல் அபஸ்மார ரோகம் ஏற்பட்டு எப்பொழுது வலிப்பு வந்து சிரமப்படுத்துமென்று சொல்வதற்கில்லாமல் மிகவும் வருத்தத்தையுண்டு பண்ணிற்று. அவருக்கு விவாஹம் செய்திருந்தபோதிலும், குடித்தனம் செய்வதற்குத் தகுதியானவராக இல்லை. எத்தனையோவித வைத்தியமுறைகளையும் மாந்திரிக முறைகளையும் அனுஷ்டித்துப் பார்த்தும் எவ்வித குணமும் ஏற்படவில்லை. இவ்விதமாகக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கையில் சிருங்கேரிக்குப் போய் ஸ்ரீமத் ஆசார்யாரின் அனுக்ரஹம் பெறவேண்டுமென்ற எண்ணம் தோன்றிற்று. தன் பார்யையுடன் மாத்திரம் போவதாகத் தீர்மானித்தார். தன் குமாரரை ரயிலிலும் மோட்டார் பஸ்ஸிலும் அழைத்துப் போவது ஸாத்தியமில்லையென்று நினைத்தார். ஆனால் அந்தக் குமாரனுக்கு மாத்திரம் தானும் போய்வர வேண்டுமென்ற வேகம் இருந்து வந்தது. இதைப் பார்த்த ஒரு நண்பர் அந்தப் பிரபுவிடம் ''ஸ்ரீமத் ஆசார்யாரிடத்திலேயே இந்தப் பாரத்தையும் போட்டு விட்டு தைர்யமாய் அவனையும் அழைத்துக்கொண்டு போய் விடுங்கள்'' என்று சொன்னார். அப்படியே அவர்கள் எல்லோரும் எவ்வித அஸௌகரியமும் அன்னியில் சிருங்கேரி போய்ச் சேர்ந்தார்கள். பிறகு தன் புத்திரர் விஷயமாயுள்ள சிரமத்தை ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் அந்தப் பிரபு விக்ஞாபனம் செய்து கொண்டார். பிற்பாடு ஒரு நாள் காலையில் அப்புத்திரரை மாத்திரம் தம்மிடம் வரச்சொல்லி அவருக்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்து அதை பிரதிதினம் மூன்று வேளை ஆவிருத்தி செய்ய வேண்டுமென்று ஆக்ஞை செய்தார். அப்படியே அவர் வெகு சிரத்தையுடன் மந்திராவிருத்தி செய்யவாரம்பித்த பிறகு எவ்விதத் தொந்தரவும் ஏற்படவில்லை. அவரும் கிரமமாக குடித்தனம் செய்துவந்து ஸந்ததிகளும் ஏற்பட்டன. அந்த ஸந்ததிகளுக்கும்

உசிதமான காலங்களில் விவாஹம் செய்துவைத்து அவர்களுக்கும் ஸந்தானம் ஏற்பட்டிருக்கிறது. எல்லாம் ஸ்ரீமத் ஆசார்யாருடைய பரமானுக்ரஹத்தினுல்தான் என்பதை நன்கு உணர்ந்து மிக்க நன்றியுடனும் பக்தியுடனும் இருந்து வருவதுடன் தன்னுலியன்ற கைங்கர்யங்களையும் செய்து வருகிருர்.

ஸ்ரீமத் ஆசார்யார் ஒரு சமயம் அந்தர்முகமாயிருக்கும்போது ஒரு வைஷ்ணவ உத்தியோகஸ்தர் தரிசனத்திற்காக வந்தார். அவர் இதற்குமுன் சிருங்கேரிக்கு வந்தது இல்லை. இப்பொழுது வந்தும் ஸ்ரீமத் ஆசார்யாரின் தரிசனம் கிடைக்காதென்று தெரிந்தவுடன் மிகவும் வருந்தினர். அவர்கள் நிஷ்டையில் இருக்கும்போது ஜன்னல் வழியாகவாவது தரிசனம் செய்து நமஸ்கரிக்க வேண்டுமென்று மிகவும் வற்புறுத்தியதன் பேரில் அங்குள்ள அதிகாரிகள் அதற்கு ஸம்மதித்தார்கள். ஸ்ரீமடம் உள்பக்கம் சென்று ஸ்ரீ ஸ்வாமிகள் இருந்துவந்த அறைக்குள் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். இவருடைய பாக்கியம் ஸ்ரீ ஸ்வாமிகள் உடனே எழுந்திருந்து இவரிருந்த ஜன்னலுக்கு ஸமீபத்தில் வந்து நின்றுர். உடனே இவர் நமஸ்கரித்துவிட்டுக் கைகூப்பி நின்றுர். ஸ்ரீ ஸ்வாமிகள் ''வைஷ்ணவரா!'' என்று கேட்டார். இவர் ''ஆம்'' என்றுர். ''சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பேதம் கிடையாது. சிவ ஸஹஸ்ர நாமத்தால் விஷ்ணுவுக்கு அர்ச்சனை செய்யலாம். விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தால் சிவனுக்கு அர்ச்சனை செய்யலாம். 'शिवाय विष्णुरूपाय, शिवरूपाय विष्णवे' (ஶிவாய விஷ்ணுரூபாய ஶிவரூபாய விஷ்ணவே) என்று தெரிந்து கொள்ளும்'' என்று ஸ்ரீமத் ஆசார்யார் சொல்லிவிட்டு சற்றுநேரம் பேசாமல் நின்றுவிட்டுப் பிறகு இவரைப் பார்த்து ''தென் கரையில் கோசாலை இருக்கிறது. உடனே அங்கேபோய் அதை மூன்று தடவை பிரதக்ஷிணம் செய்துவிட்டு உள்ளே போய் அங்குள்ளவனிடம் மூன்றே முக்கால் ரூபாய் கொடுத்துவிட்டு அவன் கறந்து கொடுக்கும் பாலை சாப்பிட்டுவிட்டு ஊருக்குப்போம்'' என்று சொன்னுர். ''அப்படியே செய்கிறேன்'' என்று சொல்லி நமஸ்கரித்துவிட்டு அவர் வெளியில் வந்துவிட்டார்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி அக்கரைக்குப் போய் வரவேண்டுமென்று அங்குள்ளவர்களிடம் இவர் சொன்னதில் அவர்கள் ''ஸ்ரீ ஸ்வாமிகள் அந்தர்முகமாயிருக்கும்போது

என்னவெல்லாமோ சொல்கிறுர். அதன் தாத்பர்யம் எங்களுக்குத் தெரிவதில்லே. ஏதோ அவர் மனதில் தோன்றுவதைச் சொல்கிறுர் என்று நாங்கள் அதைப் பொருட்படுத்துவதில்லே. அதேமாதிரித்தான் உங்களிடம் சொன்னதும். அக்கரையில் என்ன இருக்கிறது? கோசாலேயை எதற்காக பிரதக்ஷிணம் செய்ய வேண்டும்?மூன்றே முக்கால் ரூபாய் என்ன கணக்கு? இதற்கெல்லாம் அர்த்தம் கிடையாது. இதற்காக நீங்கள் அக்கரைக்குப் போக அவசியமில்லே'' என்று சொன்னுர்கள். இவர் ''எனக்கு இந்த விஷயங்களெல்லாம் தெரியாது. ஏன் இவ்விதம் சொன்னுரென்று கேட்க எனக்கு அதிகாரமில்லே. அவர் சொல்லியபடி செய்ய வேண்டியதுதான் என் கடமை. அவர் சொன்ன கார்யமும் சிரமமான கார்யமில்லே'' என்று சொல்லிவிட்டு நதிப்பக்கம் போனுர். நதியில் நல்ல பிரவாஹம். தோணிக்காரன் இவர் ஒருவருக்காக தோணியை விட மறுத்தான். மழையும் பெய்யவாரம்பித்தது. எப்படியோ அந்தத் தோணிக்காரனே ஸமாதானப்படுத்தி தோணியேறி நதியைத் தாண்டி அக்கரை போய்ச் சேர்ந்தார். அங்கே பார்க்கையில் கோசாலேக்கு நான்கு பக்கங்களிலும் ஏராளமாக முள்ளுச்செடிகள் வளர்ந்து கோசாலே பிரதக்ஷிணம் செய்யக்கூடிய நிலேயில் இல்லே. எப்படியும் ஸ்ரீ ஆசார்யாருடைய கட்டளேப்படி நடத்திவிட வேண்டுமென்ற வேகத்தினுல் முள்ளுகள் குத்துவதைப் பொருட்படுத்தாமல் இவர் சிரமப்பட்டு மூன்று பிரதக்ஷிணங்களேயும் செய்துவிட்டார். பிறகு கோசாலேக்குள் நுழைந்து அங்குள்ளவனிடம் மூன்றே முக்கால் ரூபாய்களேக் கொடுத்து தனக்குக் கொஞ்சம் பால் கொடுக்கும்படி கேட்டார். அதற்கு அவன் ''இது மடத்தின் உபயோகத்திற்காக ஏற்பட்ட கோசாலே. இங்கே விலேக்குப் பால் கிடையாது. தவிரவும் இந்தத் தொகை என்ன கணக்கு?'' என்று கேட்டான். ''எனக்கு ஒன்றும் தெரியாது. பெரியவாள் தரிசனத்திற்காக உள்ளே போனேன். அவர்கள் ஆக்ஞைப்படி செய்கிறேன்'' என்ருர். அதற்குமேல் அவன் பதில் சொல்லாமல் கறந்த பாலில் கால்படி பால் கொடுத்தான். அதை அங்கேயே சாப்பிட்டுவிட்டு இக்கரைக்கு வந்து தன்னூர் போய்ச் சேர்ந்தார்.

இந்த ஸம்பவத்திற்கு இரண்டு மூன்று மாதங்கள் சென்று அந்த வைஷ்ணவர் மறுபடியும் சிருங்கேரிக்கு வந்தார். அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமிகள் பஹிர்முகமாகவே யிருந்தபடியால் சிரமமன்னியில் ஸ்ரீமடத்திற்குள் சென்று கண்களில் நீர் சொறிய நமஸ்கரித்து

எழுந்து கைகூப்பி யாதும் பேசாமல் நின்ருர். ஸ்ரீ ஸ்வாமிகள் அவரைப் பார்த்து, ''இப்பொழுது உடம்பு குணமாயிருக்கிறதா?'' என்று கேட்டார். இவர் ''ஆமாம்'' என்று மாத்திரம் சொல்லிவிட்டு மேலால் ஏதேனும் சொல்வதற்கு நா எழாமல் நின்ருர். ஸ்ரீ ஸ்வாமிகள் அவருடைய நிலையைப் பார்த்து விட்டு ''வெகு ஸந்தோஷம். பகவானுடைய அனுக்ரஹம் தங்களுக்கு நன்ருயிருக்கிறது'' என்று சொல்லி விடை கொடுத்துவிட்டார். இவரும் வெளியில் வந்துவிட்டார்.

கொஞ்ச நாழிகை ஆசுவாஸனம் செய்துகொண்ட பிறகு அங்குள்ளவர்களிடம் தான் முன்ஞல் தரிசனத்திற்கு வந்தபோது நடந்த ஸம்பவங்களைச் சொல்லிவிட்டு மேலால் சொல்லவாரம்பித்தார். ''அந்த ஸமயம் எனக்கு சரீரம் பூராவும் ஒருவித சர்மரோகமாயிருந்தது. ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்து அநுக்ரஹம் பெற்ருல் குணம் கிடைக்குமென்று சில நண்பர்கள் சொன்ஞர்கள். எவ்வளவோ வைத்திய முறையில் சிகித்ஸை செய்து பார்த்தும் குணமாகாமல் வருஷக்கணக்காக சிரமப்படுத்திக் கொண்டிருந்த வியாதி எப்படியேனும் போகாதா என்ற தீவிர ஆவலுடன் இங்கே வந்தேன். ஸ்ரீமத் ஆசார்யார் அந்தர்முகமாயிருந்து விட்டபடியால் என் சிரமத்தை அவர்களிடம் தெரிவித்துக்கொள்ள அவகாசமில்லை. தரிசனம் கிடைத்ததில் மாத்திரம் திருப்திப் பட்டுக்கொண்டேன். எப்படியும் அவர் வாக்கிலிருந்து வரும் ஆக்ஞைப்படி நடக்க வேண்டுமென்ற வேகம் ஏற்பட்டது. கோசாலையை பிரதக்ஷிணம் செய்து பால் வாங்கிச் சாப்பிட்டேன். ஊருக்குத் திரும்பிப்போய் சில தினங்களுக்குள் சரீரத்திலிருந்து பொறுக்குப் பொறுக்காக உதிரவாரம்பித்து வியாதியே பூராவும் நிவிருத்தியாகிவிட்டது. தழும்புகள் கூடக் கிடையாது., ஸ்ரீமத் ஆசார்யார் பஹிர்முகமாயிருப்பதாகத் தெரிந்து கொண்டேன். என் நன்றியை நேரில் தெரிவிப்பதற்காக வந்தேன். ஆசார்யாளுக்கு என்னை ஞாபகமிருக்குமென்றே நான் எதிர்ப்பார்க்கவில்லை. நான் நமஸ்கரித்தவுடன் ''உடம்பு இப்பொழுது தேவலையா ?'' என்று கேட்டுவிட்டார்கள். உலகத்தை மறந்து அந்தர்முகமாயிருக்கையில் நான் சொல்வதற்கு அவசியமில்லாமலேயே என் சிரமத்தைத் தெரிந்து பரிஹாரம் செய்து கொடுத்த அவர் அவ்யாஜ கருணுமூர்த்தி, ஸர்வக்ஞர் என்பதில் என்ன ஸந்தேஹம்? நான் வந்ததும் அவர்கள் கேட்டதிலிருந்தும் ஸர்வக்ஞர் என்பது நன்கு தெரிகிறது. நான்

அவர்களிடம் தெரிவித்துக் கொள்ள வேண்டியது ஒன்றுமில்லை யென்பதை உணர்ந்தேன். வந்தனம் மாத்திரம் செய்துவிட்டு சற்று அவர்களுடைய முகாரவிந்தத்தை தரிசனம் செய்துவிட்டுத் திரும்பிவிட்டேன். இந்த மஹானுடைய நித்திய ஸேவை கிடைத்திருக்கிற நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள்'' என்று சொல்லி முடித்தார்.

இவ்விதமாக பலபேர்களுக்குப் பல ஸமயங்களில் பலவிதமாக அனுக்ரஹம் செய்துவந்த ஸ்ரீமத் ஆசார்யாரின் அனுக்ரஹத்தைப் பெற்ற ஒவ்வொருவரும் தம் தம் அனுபவங்களைக் குறித்துச் சொன்னால் மிகவும் நன்றாகவும் உபகாரமாகவுமிருக்கும். பளபளவென்று ஒரு கல் அகப்பட்டால் வெறும் பாமரனுக்கு கண்ணாடியென்று தோன்றும். கொஞ்சம் விவரம் தெரிந்தவன் பளிங்குக்கல் என்பான். இன்னும் அறிந்தவன் ஸ்படிகம் என்று நினைப்பான். ரத்தினங்களில் பழகினவன் ''வைரமல்லவா இது'' என்று சொல்வான். நீரோட்டம் பார்க்கத் தெரிந்தவன் இது உத்தமமான வைரம் என்று தீர்மானிப்பான். கல் ஒரே மாதிரி இருந்தபோதிலும் பார்க்கிறவர்களுக்குள் இருக்கும் தாரதம்யத்தின்படி கல்லுக்கு மதிப்பு ஏற்படுகிறது. அப்படியே ஸ்ரீ ஸ்வாமிகளும் ஸாமான்ய ஜனங்களுக்கு உலகமேயறியாத ஒரு ஸாது புருஷர் என்று தோன்றினார். வித்வான்களுக்கு வித்வானாகத் தோன்றினார். கவிகளுக்குக் கவியாகத் தோன்றினார். உபாஸகர்களுக்கு உபாஸகராகத் தோன்றினார். ஞானிகளுக்கு ஞானியாகத் தோன்றினார். ஸித்த புருஷர்களுக்கு ஸித்த புருஷராகத் தோன்றினார்.

ஒரு பெரிய உத்தியோகத்திலிருந்த ஒருவர் சிருங்கேரிக்கு வந்து பத்து நாட்கள் தங்கி பிரதிதினம் காலையிலும் மாலையிலும் ஸ்ரீமத் ஆசார்யாரை தரிசனம் செய்து பேசிக் கொண்டிருந்தார். கடைசியில் அவர் அங்கிருந்து புறப்படும் போது அங்குள்ளவர்களிடம் ''சிருங்கேரி வாஸம் வெகு ஆனந்தமாயிருந்தது. ஸ்ரீ ஸ்வாமிகளும் இவ்வளவு ஸுலபராய் ரஸிகராய் இருப்பாரென்று நான் எதிர்ப்பார்க்கவில்லை. உங்களுக்கெல்லாம் அவரிடம் ஆசார்யார் என்ற எண்ணத்துடன் பயமும் பக்தியும் இருக்கலாம். நான் பழகினமட்டில் அவரை நான் ஒரு கிட்டின நண்பர் (Comrade) என்றே பாவிக்கிறேன். எனக்கு

அவரிடம் பயமுமில்லை. பக்தியுமில்லை. அன்புதான் மேலிட்டு நிற்கிறது. அவர் என்னிடம் காட்டி வந்த அன்பு அபரிமிதமானது. அப்படியே எனக்கும் அவரிடம் ஏற்பட்டிருக்கும் அன்பும் ஒருநாளும் மங்காது'' என்று சொன்னார். அதேமாதிரி சிலர்களுக்கு அவரிடம் விசேஷமாக நன்றி யேற்பட்டிருக்கும். சிலருக்கு அவருடைய வைராக்கிய நிஷ்டையைக் கண்டு ஆச்சர்யமேற்பட்டிருக்கும். சிலர்களுக்கு அவர்களுடைய வைதுஷ்யத்தைக் (பாண்டித்யம்) கண்டு விசேஷ கௌரவ புத்தி ஏற்பட்டிருக்கும். சிலர் அவர் காட்டும் வாத்ஸல்யத்தையே நினைத்து உருகுவார்கள். சிலர் அவருடைய அஸாதாரணமான புன்சிரிப்பை நினைத்து ஆனந்திப்பார்கள். மனதில் தோஷமுள்ளவர் ஸமீபத்தில் நெருங்க அஞ்சுவார். எவ்வளவு பெரிய லௌகிக பதவி வஹிக்கிறவராயிருந்தாலும் அவர் முன்னால் அதை மறந்தேயிருப்பார்கள். அப்படியே அவரை நன்கு அறிந்த பிரபல வித்வான்கள் தங்கள் வித்யையை அவரிடம் பிரகடனம் செய்துகொள்ளப் பின்வாங்குவார்கள். ஸ்ரீ ஸ்வாமிகள் இவர்களை பராபவப்படுத்துவார்களென்றுவது (அவமதித்தல்) தாத்பர்யமில்லை. காலையில் ஸூர்யன் உதயமானால் நக்ஷத்திரங்கள் தானே மங்குகின்றன. ஸூர்யன் அவைகளை பராபவப்படுத்துவது கிடையாது. ஸ்வயம் ஜ்யோதிஸ் ஸ்வரூபரான ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்து ஆத்மநிஷ்டராயிருப்பவரிடம் இருக்கும் ஒளியே தனி. அதன்முன் எந்தப் பிரகாசமும் மங்க வேண்டியதேயாகும். அவ்விதம் மங்குவதினால் இவர்களுடைய யோக்கியதை குறைந்துவிட்டதென்ற தாத்பர்யமில்லை. இவர்களுக்கு ஏதோ கௌரவக்குறைவு என்றும் அர்த்தமில்லை. க்ஷத்திரிய கண்டகராயிருந்த பரசுராமர் ஸ்ரீ ராமரிடத்தில்,

न चेयं मम काकुत्स्थ व्रीडा भवितुमर्हति ।
त्वया त्रैलोक्यनाथेन यदहं विमुखीकृतः ॥

ந சேயம் மம காகுத்ஸ்த்த வ்ரீடா பவிதுமர்ஹதி ।
த்வயா த்ரைலோக்யநாதேன யதஹம் விமுகீக்ருதః ॥

''ஹே ராமா! நீ என்னை ஜெயித்துவிட்டாய். நான் உன்னிடம் தோல்வியடைந்துவிட்டேன். இதனால் எனக்கு லஜ்ஜை ஏற்பட வேண்டிய அவசியமில்லை. மூவுலகங்களுக்கும் நாதனான உன்னை யார்தான் ஜெயிக்க முடியும்? உன்னிடம் உலகிலுள்ள யாவரும்

தோல்வியடைய வேண்டியவர்களே. நான் தோல்வியடைந்தது ஆச்சர்யமில்லை'' என்கிறார்.

ஸ்ரீ ராமர் க்ஷத்திரியராயிருந்தபடியால் க்ஷத்திரிய ரீதியில் தம் பராக்ரமத்தைக் காட்டிக்கொள்ள அவசியமிருந்தது. ஸ்ரீமத் ஆசார்யார் உத்தம ஜாதியான பிராஹ்மணராகவும் உத்தம ஆச்ரமியான ஸந்யாஸியாகவும் இருந்தபடியால் அவருடைய உபசாந்தியும் ஆத்மஞானமுமே அவரை உயர்த்திக்காட்டப் போதுமானது. அவரை பிரதி தினம் ஸ்மரித்து நமஸ்கரித்தாலே மஹத்தான புண்ணியமுண்டு. எவர் பெயரைச் சொன்னாலே புண்ணியமுண்டோ அவரைப் புண்ய சுலோகர் என்பார்கள். ஸ்ரீமத் ஆசார்யாரும் அவ்வித புண்ய சுலோகர் என்பதில் ஸந்தேஹமில்லை.

प्रातः स्मराम्यनुदिनं गुरुराजमूर्तिं
भस्माङ्गरागलसितं स्मितपूर्वभाषम् ।
काषायवस्त्रपरिवेष्टितसर्वगात्रं
कारुण्यवीक्षमनघं परमात्मनिष्ठम् ॥

ப்ராதః ஸ்மராம்யநுதினம் குருராஜமூர்த்திம்
பஸ்மாங்கராகலஸிதம் ஸ்மித பூர்வபாஷம் ।
காஷாய வஸ்த்ர பரிவேஷ்டித ஸர்வகாத்ரம்
காருண்ய வீக்ஷமநகம் பரமாத்மநிஷ்டம் ॥

''உடம்பில் விபூதி பூசிக் கொண்டிருப்பவரும், மந்தஹாஸத்துடன் பேசுகின்றவரும், உடம்பு முழுவதும் காஷாய வஸ்திரத்தை தரித்துக் கொண்டிருப்பவரும், கருணையுடன் கூடிய பார்வையுள்ளவரும், தோஷமற்றவரும், பரமாத்ம ஸ்வரூபத்தில் மனம் நிலைத்திருப்பவருமான குருராஜமூர்த்தியை (ஸ்ரீ ஜகத்குரு சிருங்ககிரி ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளவர்களை) தினந்தோறும் காலையில் மனதில் தியானிக்கிறேன்.''

ஸ்ரீமத் ஆசார்யாரவர்களுடைய ஆத்மநிஷ்டை, மந்திர சக்தி, வைதுஷ்யம் முதலிய உத்தம அம்சங்களைப்பற்றி சொல்ல வேண்டுமானால் அவ்விஷயங்களில் கொஞ்சமேனும் பரிச்சயமுள்ளவர்கள்தான் ஏதேனும் சொல்வதற்கு யோக்கியதை யுள்ளவர்களாவார்கள். ஸாமான்ய ஜனங்கள் அம்மஹானுடைய

கருணையையும் ஸௌலப்யத்தையும் தாங்கள் அனுபவித்த மட்டில் ஒருவாறு சொல்லலாம்.

பூர்வாசிரமத்தில் ஒரு ஸமயம் ஒரு பெரிய வியவஹாரம் விஷயமாய் நீதிமன்றத்தில் நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும்போது மத்தியில் வழக்கம்போல் ஒரு நாள் நியாயாதிபதி தன் அறைக்குப் போயிருக்கையில் என் மனதில் ஒரு எண்ணம் தோன்றியது. ''ஸ்ரீ மஹாஸந்நிதானம் செட்டிநாட்டுக்கு விஜயம் செய்திருக்கிறார்கள். அவர்களை எப்படியாவது தரிசனம் செய்ய வேண்டும். ஆனால் இந்த வியவஹாரம் முடிய இன்னும் இரண்டு வாரங்களாவது ஆகும் போலிருக்கிறதே! என்ன செய்வது?'' என்று யோசித்துக் கொண்டிருக்கையில் நியாயாதிபதி திரும்பி வந்துவிட்டார். வந்தவுடன் அவர் என்னைப் பார்த்து ''இது முடிய இன்னும் எத்தனை நாள் ஆகும்?'' என்று கேட்டார். ''குறைந்தது இரண்டு வாரம் ஆகும்'' என்றேன். ''பாக்கி சில்லரை வியவஹாரங்களை முடிவு செய்வதற்கு இல்லாமல் இது குறுக்கே நிற்கிறது. ஆகையால் இதை இங்கேயே நிறுத்திக்கொண்டு பாக்கி காரியங்களை கவனிக்கிறேன். இதை அடுத்த மாஸம் தொடர்ந்து நடத்துவோம்'' என்று சொன்னார். எனக்கு ஏற்பட்ட ஆச்சர்யத்திற்கும் ஸந்தோஷத்திற்கும் அளவேயில்லை. எல்லாம் ஸ்ரீமத் ஆசார்யாரின் கருணையென்று உணர்ந்து ''அப்படியே செய்கிறது'' என்று சொல்லிவிட்டு உடனே வீடு திரும்பி விட்டேன்.

அன்று ஸாயங்கால ரயிலிலேயே மதுரைக்குப் புறப்பட வேண்டுமென்று பார்த்ததில் செலவுக்குக்கூட கையில் பணமில்லை யென்று தெரிந்தது. பக்கத்தில் அநேக நண்பர்கள் இருந்தபோதிலும் இதற்காக அவர்களிடம் கைமாற்று கேட்பது உசிதமில்லையென்று நினைத்துக் கொண்டிருக்கையில், ஒருவர் வந்து ''நாளை கோவில்பட்டியில் ஒரு கேஸுக்கு அவசியம் வர வேண்டும்'' என்று சொன்னார். ''நான் நாளை மதுரை போகிறபடியால் வருவது ஸாத்தியமில்லை'' என்று சொன்னேன். ''கேஸ் சின்னதுதான், அதை முடித்துக்கொண்டு அப்படியே மதுரை போகலாம்'' என்று அவர் சொன்னார். இதுவும் பகவத் ஸங்கல்பம்தான் என்று தீர்மானித்துக் கொண்டு ஸம்மதித்தேன். அப்படியே மறுநாள் காலையில் கோவில்பட்டிக்குப் போய்விட்டு கேஸை நடத்திவிட்டு மதுரைக்குப் புறப்பட்டேன். அந்தக் கக்ஷிக்காரர் எனக்கு பீஸ் பணம் கொடுத்ததுடன் திருநெல்வேலியிலிருந்து

கோவில்பட்டி வரை ரயில் சார்ஜும் கொடுத்திருந்தார். இப்பொழுது திருநெல்வேலிக்குத் திரும்புவதற்கு ரயில் சார்ஜ் கொடுப்பதை மதுரைக்கு டிக்கெட் வாங்கிவிடட்டுமாவென்று கேட்டு அப்படியே வாங்கிக் கொடுத்தார். இவ்விதமாக அன்று ஸாயங்காலத்திற்குள் ரயில் சார்ஜும் நான் செலவழிக்காமல் கையில் பணத்துடன் மதுரை போய்ச்சேர்ந்தேன்.

அன்று இரவும் மறுநாள் காலையிலும் அங்கே தங்கிவிட்டு மறுநாள் மத்தியானத்திற்கு மேல் செட்டிநாடு போகலாமென்று நினைத்து ஒரு பந்துவின் கிருஹத்திற்குப் போவதற்காக குதிரை வண்டி பார்த்ததில் அந்த வண்டிக்காரன் எட்டு அணு கேட்டான். அவ்வளவு கொடுக்க இஷ்டமில்லாமல் ஒரு சின்னப் பையனிடம் என் பையைக் கொடுத்து எடுத்துவரச் சொல்லி நான் கால்நடையாகவே வீடு போய்ச்சேர்ந்து அந்தப் பையனுக்கு பேசினபடி இரண்டணு கொடுத்துவிட்டேன். ஆறு அணு லாபம் என்கிற ஸந்தோஷவிருத்தி ஏற்பட்டது. திருநெல்வேலியிலிருந்து வந்ததெல்லாம் ஸ்ரீமத் ஆசார்யார் கருணை. இந்த ஆறு அணு லாபம் பிடித்தது என் சொந்த பிரவிருத்தியல்லவா? மறுநாள் மத்தியானத்திற்கு மேல் பஸ் ஸ்டாண்டுக்குப் போய் பஸ்ஸில் ஏறிக்கொண்டு ஸ்ரீமத் ஆசார்யார் முகாம் செய்துகொண்டிருந்த கோட்டையூர் போய்ச் சேர்ந்தேன். மதுரைக்கும் கோட்டையூருக்கும் அக்காலத்தில் பஸ் சார்ஜ் பத்து அணு. சில்லரையில்லாததினுல் பஸ் கண்டக்டரிடம் முழு ரூபாயாகக் கொடுத்திருந்தேன். கோட்டையூரில் இறங்கும் போது ஆறு அணுவை வாங்கிக்கொள்ள மறந்துவிட்டேன். கண்டக்டரும் மறந்துவிட்டார். மதுரையில் குதிரை வண்டியில் ஏற்பட்ட லாபத்திற்கு இது ஈடு என்றும் அந்த லாபத்தில் ஸந்தோஷப்பட்டது அசட்டுத்தனம் என்றும் நன்கு உணர்ந்தேன்.

கோட்டையூர் போய்ச்சேரும்போது ஸாயங்காலம் சுமார் ஆறு மணியாகிவிட்டபடியால் உடனே ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனத்தை முடித்துக்கொண்டு ஸ்ரீ ஸந்நிதானம் முகாம் செய்திருந்த சத்திரத்திற்குப் போனேன். அன்று ஸாயங்காலம் அவர்கள் உபந்யாஸம் செய்ததாகக் கேள்விப்பட்டதும், முன்னுலேயே வந்திருந்தால் உபந்யாஸத்தையும் கேட்டிருக்கலாமே, தவறிவிட்டதே என்று வருத்தம் ஏற்பட்டது. அன்று ஸ்ரீ ஸந்நிதானம் ஆஹ்நிகங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீ சந்திரமௌளீசுவரர் பூஜைக்காக வெளியில் வரும்போது

தரிசித்து வந்தனம் செய்தேன். ''இப்பொழுதுதான் வந்தாயா?'' என்று கேட்டார்கள். ''ஆம்'' என்று பதில் சொல்லும்போதே ஸாயங்காலம் உபந்யாஸம் கேட்பதற்கில்லாமல் போய்விட்டதே யென்கிற எண்ணம் உள்ளூர என் மனதில் இருந்தது. ஸ்ரீமத் ஆசார்யாள் ''இன்று ஸாயங்காலம் உபந்யாஸம் நடந்தது. ஆஸ்திக்யம் என்ருல் ஈசுவரன் உண்டு, ஜன்மாந்தரம் உண்டு, லோகாந்தரம் உண்டு என்ற விசுவாஸத்துடனிருப்பது என்ற விஷயமாகச் சொன்னேன். கடைசியில் ஒரு செட்டியார், விஷயம் மிகவும் கடினமாயிருந்தபடியால் இதை விஸ்தாரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்விதமே ஆகட்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஒவ்வொன்ருக எடுத்துக் கொண்டு மூன்று நாட்கள் சொல்வதாக உத்தேசம். அதனுல் இன்றைய உபந்யாஸத்திற்கு நீ வராததினுல் நஷ்டம் ஒன்றுமில்லை'' என்று சொன்னுர்கள்.

அப்படியே மூன்று நாட்கள் மிகத் தெளிவாக உபந்யாஸம் செய்தார்கள். அவ்வுபந்யாஸங்களின் ஸாரத்தை சுருக்கமாக ''அமிருத மொழிகள்'' என்ற வெளியீட்டில் தொகுத்திருக்கிறேன். ஒரு நாள் உபந்யாஸத்தில் கர்மாவைப் பற்றி சொல்லிவரும்போது ''புண்ணியம் செய்தால் ஸுகம் ஏற்படும். பாபம் செய்தால் துக்கம் ஏற்படும். அந்தந்த கர்மாவிற்குத் தக்கபடி பலன் ஏற்படுமே தவிர மாறியேற்படாது. மாங்கொட்டையை நட்டால் மாமரம் முளைக்கும். தேங்காய்க்கொட்டையை நட்டால் தேங்காய் மரம் முளைக்கும். மாறியேற்படாது'' என்று எடுத்துச் சொன்னுர்கள். அன்றிரவு ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் பூஜையான பிறகு அவர்கள் என்னிடம் ''இன்னும் தமிழ் நன்ருகப் பேசவரவில்லையே'' என்ருர்கள். அதற்கு நான் ''அப்படியொன்றும் தெரியவில்லையே'' என்றேன். ''தமிழ் பேசவரவில்லையென்பது வாஸ்தவம், வரவில்லையென்பது தெரியவில்லையென்றுதானே சொல்கிருய்?'' என்ருர்கள். ''தாங்கள் சொல்லிக்கொண்டு வந்த பிரகரணத்தில் தேங்காய் மரம் என்பது உசிதமாகவே தோன்றிற்று'' என்று நான் சொன்னதற்கு ''அப்படியானுல் மாங்காய் கொட்டை, மாங்காய் மரம் என்றும் சொல்லியிருக்க வேண்டும். அங்கு மாங்கொட்டை மாமரம் என்று சொல்லிவிட்டு தேங்காய் கொட்டை தேங்காய் மரம் என்று சொன்னது சரியில்லைதான். தென்னை என்று சொல்லியிருக்க வேண்டும். அப்பொழுது தோன்றவில்லை'' என்ருர்கள். ''இதை ஒரு பிசகாக நினைக்க வேண்டாம்'' என்று நான் சொன்னதற்கு ''உங்கள்

திருநெல்வேலியில் பெண்டுகளை பெண்ணும் பிறந்தவர்களென்று சொல்வது வழக்கமாயிருப்பதால் தென்னை மரத்தை தேங்காய் மரம் என்று சொல்வது உனக்குப் பிசகாகத் தோன்றவில்லை போலும்'' என்ருர்கள். (இதற்கு சில மாஸங்கள் சென்றே அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் விஜயம் செய்தார்களென்பது குறிப்பிடத்தக்கது.)

1926 ல் ஸ்ரீ ஸந்நிதானம் தென் தேசத்தில் விஜயம் செய்து கொண்டிருக்கையில் ஸ்ரீரங்கம் T.K. பாலஸுப்ரஹ்மண்ய அய்யருக்கு ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் ஒரு மாதப் பத்திரிகை பிரசுரிக்க வேண்டுமென்ற எண்ணமேற்பட்டு ஸந்நிதானத்தினிடத்தில் விக்ஞாபனம் செய்து கொண்டார். அந்தப் பத்திரிகையில் முதல் ஸஞ்சிகையில் (இதழில்) அவர்களுடைய வியாஸம் (கட்டுரை) ஒன்று ஆரம்பத்தில் இருக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஸ்ரீமத் ஆசார்யாள் ''பத்திரிகையில் நாங்கள் வியாஸம் எழுதுவது உசிதமில்லை'' என்று சொன்னபோதிலும் இவர் மிகவும் வற்புறுத்திக் கேட்டதின்பேரில் ''உங்களுக்காக எழுதிக் கொடுக்கிறேன். ஆனுல் பத்திரிகையில் என் பெயரைப் போடக்கூடாது'' என்று சொல்லி விட்டார். இவ்விதமாகவாவது ஆசார்யாள் ஸம்மதித்ததில் இவர் திருப்தியடைந்து பத்திரிகை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து பத்திரிகை அச்சிட்டு 1927ல் ஸ்ரீ சங்கர ஜயந்தி உத்ஸவ ஸமயம் காலடியில் ஸ்ரீமத் ஆசார்யாளின் பாதங்களில் ஸமர்ப்பணம் செய்தார். அப்பத்திரிகையில் பிரசுரமான விஷயங்களையும் அச்சிட்டிருக்கும் அழகையும் கண்டு ஆசார்யாள் மிகவும் ஸந்தோஷப்பட்டார்கள்.

காலடியிலிருக்கும்போது திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீ A.K. ஸுந்தரமய்யர் ஸ்ரீ பாலஸுப்ரஹ்மண்ய அய்யரிடம் ''தங்கள் பத்திரிகையில் வெகு தெளிவாக முதலில் ஒரு வியாஸம் போட்டிருக்கிறீர்களே! பெயர் போடவில்லையே? அது எழுதினது யார்?'' என்று கேட்டார். ''ஸ்ரீமத் ஆசார்யாள் என்னுடைய வேண்டுதலின் பேரில் எழுதிக் கொடுத்தார்கள். பெயர் போட வேண்டாமென்று சொல்லிவிட்டார்கள். அதனுல் பெயர் போடவில்லை'' என்று பதில் சொன்னுர். அன்று ஸாயங்காலம் ஸ்ரீ ஸுந்தரமய்யர் ஸ்ரீமத் ஆசார்யாளை தரிசித்துப்

பேசிக்கொண்டிருக்கையில் ''பத்திரிகையில் தங்கள் வியாஸத்தை வாசித்தேன். மிகவும் அத்புதமாயிருக்கிறது'' என்று சொன்னார்கள். ஆசார்யாள் ''நான் எழுதினதாகக் கண்டிருக்கிறதா?'' என்று கேட்டார்கள். ''இல்லை, பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் சொன்னார்'' என்றார். அன்று இரவு ஸ்ரீ பாலஸுப்ரஹ்மண்ய அய்யரை ஸ்ரீமத் ஆசார்யாள் தருவித்து ''வியாஸம் நான் எழுதிக் கொடுத்ததாக ஸுந்தரமய்யரிடம் சொன்னீர்களாமே? பத்திரிகையில் பெயர் போடவேண்டாமென்றால் கேட்கிறவர்களிடமெல்லாம் சொல்லலாமென்றா அர்த்தம்?'' என்று கேட்டார்கள். ''ஸுந்தரமய்யர் இவ்விடத்தில் மிகவும் வேண்டியவர்தானே, சொல்லலாமென்று சொன்னேன்'' என்று இவர் சொன்னதும், ''எனக்கு வேண்டாதவர் யார்? தாக்ஷிண்யத்திற்கு இடம் கொடுத்திருக்கக் கூடாது'' என்று சொன்னார்கள். தான் செய்த தவறுதலை மன்னிக்கும்படிக்கு மிகவும் தாழ்மையாய் பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் கேட்டுக்கொண்டார். அப்பத்திரிகைதான் ஆஸ்திக ''மதோஜ்ஜீவினி'' என்ற பெயருடன் நடந்து வந்தது.

1947 ல் நான் கோர்ட்டுக்குப் போவதை அநேகமாய் நிறுத்திக்கொண்ட ஸமயம் சிருங்கேரிக்குப் போகவேண்டுமென்று புறப்பட்டு வழியில் ஸ்ரீரங்கம் வந்தபோது ஸ்ரீ பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் என்னிடம் ''ஸந்யாஸ ஆசிரமம் பெற வேண்டுமென்ற ஆஸ்தை (இச்சை) இருந்து வருகிறது. நீ சிருங்கேரிக்குப் போவதால் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தினிடத்தில் விக்ஞாபனம் செய்து எனக்கு அவர்களுடைய அனுமதியை வாங்கி வந்தால் நல்லது. எனக்கு இப்பொழுதிருக்கும் தள்ளாமையில் ஆசிரமம் வாங்கிக்கொண்டு வெளியிலே போவது ஸாத்தியமில்லை. இங்கேயே இருக்கலாமென்றால்தான் ஆசிரமம் வாங்கிக் கொள்ளலாம். அவ்விதம் இருப்பது உசிதமாவென்பதையும் கேட்டுக்கொண்டு வா'' என்று சொன்னார். அப்படியே நான் சிருங்கேரிக்குப் போய் ஸ்ரீமத் ஆசார்யாளிடம் விக்ஞாபனம் செய்ததில் அவர்கள் ''பாலஸுப்ரஹ்மண்ய அய்யர்தான் தோட்டத்தில் ஆலயம் கட்டி ஆசார்யாளுக்கு அர்ப்பணம் செய்துவிட்டாரே. இனிமேல் அவர் அதில் இருந்தால் சொந்த வீடு ஆகாதே. கொஞ்சமேனும் ஸந்தேகப்பட வேண்டாம். ஆசிரமம் வாங்கிக்கொண்டு அங்கேயே இருக்கலாம். வேறு எங்கேயும் போக

அவசியமில்லையென்று சொல்'' என்று உத்தரவிட்டார்கள். பிறகு நான் சிருங்கேரியிலிருந்து புறப்படும்போது மந்திராக்ஷதையுடன் இரண்டு கடிதங்கள் கொடுத்தார்கள். ''பாலஸுப்ரஹ்மண்ய அய்யரைவிட வயதிலும் வைதுஷ்யத்திலும் (பாண்டித்யத்திலும்) பெரியவராயிருப்பவர்தான் அவருக்கு உபதேசம் செய்வது உசிதமாயிருக்கும். ஆகையால் போகும் வழியில் கிருஷ்ணராஜபுரத்தில் இறங்கி ஸ்ரீ சங்கரானந்தரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து அவரையே உபதேசத்திற்கு வரும்படி கேட்டுக்கொண்டு விட்டு பிறகே ஸ்ரீரங்கம் போகலாம். ஸ்ரீ சங்கரானந்தரிடம் உபதேசம் பெற்றுக்கொள்ளும்படி பாலஸுப்ரஹ்மண்ய அய்யருக்கு மற்ருெரு கடிதம்'' என்று சொன்ஞர்கள். ஸ்ரீ சங்கரானந்தர் தனக்கு வயதாகிவிட்டபடியால் வரமுடியாதென்று சொல்லிவிடக் கூடாதென்ற எண்ணத்துடன் ஸ்ரீ ஸந்நிதானமே அவருக்கு ஸ்ரீமுகம் கொடுக்க வேண்டுமாஞல் எவ்வளவு கருணையிருந்திருக்க வேண்டும்!

அப்படியே நான் திரும்பி வரும்போது ஸ்ரீ சங்கரானந்தரிடம் ஸ்ரீமுகத்தைக் கொடுத்து அவர் ஸம்மதத்தையும் தெரிந்து கொண்டு ஸ்ரீரங்கம் வந்து பாலஸுப்ரஹ்மண்ய அய்யரிடம் தெரிவித்து அவருக்குக் கொடுத்த ஸ்ரீமுகத்தையும் கொடுத்தேன். அதை அவர் வாசித்துப் பார்க்கையிலே ஆசார்யாளுடைய பரம கருணையை நினைத்து உருகிஞர். அதில் இவர் ஆசிரமம் பெற்று ஸ்ரீ விக்ஞாஞனந்த ஸரஸ்வதீ என்ற யோகப்பட்டம் பெற வேண்டுமென்று கண்டிருப்பதைப் பார்த்து ''குருநாதர் ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் என்று நீளமாய் பெயர் வைத்துக் கொண்டிருந்தும் அதில் ஓர் அம்சம்கூட எனக்கு ஏற்படும் யோகப்பட்டத்தில் காணவில்லையேயென்று தோன்றுகிறது'' என்ருர். அதற்கு நான் ''குருவின் நாமத்தை அப்படியே உச்சரிப்பது உசிதமில்லையென்று சாஸ்திரம் சொல்வதால் அப்பெயரில் அடங்கிய சிதானந்த என்பதற்குப் பதிலாக 'விக்ஞான ஆனந்த' என்றும் பாரதீ என்பதற்குப் பதிலாக 'ஸரஸ்வதீ' என்றும் போட்டிருக்கிருர்களே? இது போதாதென்று தோன்றிஞல் தங்கள் அபிப்பிராயத்தைக் கண்டு சிருங்கேரிக்கே எழுதி வேறு யோகப்பட்டம் கேட்டுப் பார்ப்போம்'' என்றேன். உடனே அவர் அதற்கு ''ஆசார்யார் தீர்மானித்து எழுதியிருக்கும்போது வேறு யோகப்பட்டம் என்று

கேட்பதே மிகவும் அபசாரமாகும். நீ சொல்கிறபடியே ஸமாதானம் செய்துகொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டார். நான் அப்படியே திருநெல்வேலி போய் சில நாட்கள் சென்று ஸ்ரீரங்கம் வந்தபொழுது கிரமமாகவே பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் ஸந்யாஸம் பெற்று ஸ்ரீ சங்கராநந்தரிடம் உபதேசம் பெற்று மறுநாள் இரண்டுவேளை ஆஹ்நிகங்களையும் செய்துவிட்டு அன்று ஸாயங்காலமே (ஸ்ரீ விக்ஞானனந்த ஸரஸ்வதீ) ஸித்தியடைந்து ஸமாதி யேற்படும்வரை நான் கூடவே இருக்கும்படி ஏற்பட்டது. குருராஜஸ்மரணம் இல்லாமல் ஒரு க்ஷணம் கூட இல்லாமலிருந்த அந்த குருபக்த சிகாமணியைப் பற்றி நினைக்க நினைக்க குருபக்தியின் மஹிமையையும் அவரிடம் குருநாதருக்கு இருந்துவந்த வாத்ஸல்யத்தையும் நாம் ஒருவாறு அறிந்து கொள்ள முடியும்.

❧•❧

1926 கடைசியில் ஸ்ரீமத் ஆசார்யாள் திருநெல்வேலியில் நான் இருந்துவந்த வீரராகவபுரம் தெருவுக்கு ஒரு நாள் விஜயம் செய்து தங்குவதாக ஏற்பாடு செய்திருந்தது. ஆனல் என்னுடைய துரதிருஷ்டத்தினுல் அதற்கு முந்தின நாள் எனக்கு கடும் ஜ்வரம் ஏற்பட்டு படுக்கையிலிருக்கும்படி ஸம்பவித்தது. அன்று ராத்திரி தூக்கமும் வரவில்லை. ஸமீபத்தில் வந்தும் அவர்களை தரிசிக்க முடியவில்லையே என்ற வருத்தம் இருந்து வந்தது. அப்பொழுது மானஸிகமாகவே அவர்களுக்கு ஸ்வாகதம் சொல்வதுபோல சில சுலோகங்கள் தோன்றின. அவைகளையே திருப்பித் திருப்பி மனதிற்குள் சொல்லிக் கொண்டிருக்கையில் ஸூர்யோதயமாகி விட்டது. எங்கள் குடும்பத்தில் மிகவும் அபிமானத்துடன் உபாத்யாயமும் வஹித்துவந்த ஸ்ரீ வேங்கடேசுவர சாஸ்திரிகள் என்ற ஸ்வாமி கனபாடிகள் அப்பொழுது வந்தார். அவரிடம் அந்த சுலோகங்களை சொன்னேன். அவர் நல்ல வியாகரண ஞானத்துடன் கவிதா சக்தியும் உள்ளவர். அவர் உடனே அந்த சுலோகங்களைக் குறித்துக் கொண்டு ஸ்ரீமத் ஆசார்யார் தங்கும் ஜாகைக்குப் போய் வாசித்து விடுவதாகச் சொல்லி அப்படியே எழுதிக்கொண்டார். அன்று காலை 9 மணி சுமாருக்கு அந்த ஜாகைக்குப் போவதற்கு வேறு சௌகர்யமான வழியிருந்தும் ஏதோ காரணத்தினுல் ஸ்ரீமத் ஆசார்யாரின் மேனுப் பல்லக்கு என் வீட்டுப்பக்கம் வந்தது. நான் உடனே சுவரைப்

பிடித்துக்கொண்டு வாசற்படி வரையில் வந்துவிட்டேன். நான் எதிர்ப்பாராமல் பல்லக்கு அந்த வாசலில் நின்றது. உடனே சிரமத்துடன் வந்தனம் செய்தேன். அவர்கள் மந்திராக்ஷதை கொடுத்தார்கள். பல்லக்கு நகர்ந்தது. அந்தத் தெருவில் அன்று ராத்திரி நடக்கும் பூஜையை தரிசிக்கும்படியான மட்டில் எனக்கு ஆரோக்கியம் ஏற்பட்டுவிட்டது. எல்லாம் அவர்கள் கருணை. அப்பொழுது எழுதின சுலோகங்கள் இவை:-

चन्द्रचूडभारतीन्द्रदेशिकस्य योगिनः
स्वागतेन ते समस्तवाञ्छितार्थदायिनः।
अद्य वीरराघवाग्रहारवासिनो वयं
धन्यभावमापिता अनेकजन्मभाग्यतः ॥

ग्राह्यं तवाङ्घ्रिकमलार्पितपत्रमेतत्
भक्त्या हि दत्तमखिलैरपि पत्रमात्रम् ।
अङ्गीकरोमि दयया प्रमुदेति पूर्वं
कुन्त्यात्मजाय भगवान् कृतवान् प्रतिज्ञाम् ॥

विद्यासु नीचसहजास्वधुनातनीषु
बाल्यात् सुतीव्रमभिवर्धितवासनौघाः ।
शान्त्यादिभूषयतिसेव्यपदाम्बुजात
सेवाविधौ तव कथं नु वयं समर्थाः ॥

दोषाञ्चिता इति वयं समुपेक्षिताश्चेत्
आचार्य ते समुचिता न हि भात्युपेक्षा ।
दोषाकरं स्वशिरसा बहतः पुरारेः
नामाङ्कितोऽसि पदपङ्कजतत्परोसि ॥

काषायवस्त्रपरिवेष्टनशोभिताङ्ग
रुद्राक्षहारपरिमण्डितकण्ठदेश ।

भस्मानुलेपपरिशोभितफालपट्टरूपं
तवेदमनिशं हृदये विभातु ॥

तापापहस्मितवशीकृतसर्वलोक
श्रद्धाविधायिकरुणार्द्रकटाक्षवीक्ष ।
आस्तिक्यबुद्धिमधुना सुदृढां विधेहि
सर्वार्थदानचतुरांघ्रिसरोजयुग्म ॥

नूनं क्रमेण भवतः कृपयाऽतिशीघ्रं
ज्ञानं परं श्रुतिशिरोवचनैकलभ्यम् ।
लब्ध्वा भवाब्धितरणिं कृतिनो भवेम
किं वा न साध्यमिह ते करुणा यदि स्यात् ॥

नूनं त्वं शशिशेखरोऽसि विबुधैः संप्रार्थ्यमानः पुनः
संसाराम्बुधिमध्यमग्नजनतासंरक्षणायागतः ।
नैजं चिन्हमुपावृणोषि हि वृथा वस्त्रावगुण्ठं वहन्
नाम्नैव प्रकटीकृतोऽसि विशदं सर्वज्ञभावेन च ॥

जयतु जयतु भूमा सच्चिदानंदरूपो
जयतु जयतु देवश्चन्द्रमौलिर्महेशः ।
जयतु जयतु देवी शारदाऽभीष्टदात्री
जयतु जयतु नित्यं चन्द्रचूडो गुरुर्नः ॥

இந்த ஸம்பவத்திற்குப் பின் சுமார் 20 வருஷங்கள் சென்று ஸ்ரீமத் ஆசார்யாளுடைய குருநாதர் ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள், பரமகுரு ஸ்ரீ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் இவர்களுடைய சரித்திரங்களை சுருக்கமாய் தமிழில் அச்சிடும்போது ஆசார்யாளின் சரித்திரத்தையும் மிகச் சுருக்கமாக எழுதி சிறு புஸ்தகமாக வெளியிடப்பட்டது. அப்பொழுது அப்புஸ்தகத்தின கடைசியில் மேலே கண்ட கடைசி சுலோகத்தைக் கொஞ்சம் மாற்றி

जयतु जयतु नित्यं शारदाऽभीष्टदात्री
जयतु जयतु नित्यं चन्द्रमौलिर्महेशः।
जयतु जयतु नित्यं शंकरो देशिकेन्द्रः
जयतु जयतु नित्यं चन्द्रचूडो गुरुर्नः ॥

என்று அச்சிட்டிருந்தேன்.

இதற்கு ஏழெட்டு வருஷங்கள் சென்று ஸ்ரீமத் ஆசார்யாள் விதேஹ கைவல்யமடைந்தார்கள். அதற்கு ஏழெட்டு வருஷங்கள் சென்று அவர்களுடைய ஸமாதி ஸ்தலத்தில் மிக அழகாக அதிஷ்டானம் நிர்மாணம் செய்து அதில் அமிருத சிலையில் அவர்கள் பிரதிகிருதி ஸ்தாபனம் செய்யப்பட்டது. அவ்வதிஷ்டான கும்பாபிஷேக ஸமயத்தில் நானும் சிருங்கேரிக்குப் போயிருந்த போதிலும் சரீரத்தில் பலவித ரோகமேற்பட்டபடியால் அவ்வைபவங்களை சமீபத்தில் இருந்து நன்கு அனுபவிக்கும் பாக்கியமில்லாமல் வெகு தூரத்திலேயே நின்று ஸ்தூபி அபிஷேகத்தைத்தான் தரிசிக்க முடிந்தது. உத்ஸவம் முடிந்து ஏராளமாய்க் கூடியிருந்த ஜனங்கள் எல்லாரும் ஊருக்குப் புறப்பட்டுப்போன பிற்பாடு எனக்கும் கொஞ்சம் ஆரோக்கியமேற்பட்ட பிறகு, அதாவது கும்பாபிஷேகத்திற்குப் பின் சுமார் இரண்டு மூன்று வாரங்கள் சென்று அவ்வதிஷ்டான தரிசனத்திற்குப் போனேன். அந்த ஸமயம் ஆலயத்தில் யாருமில்லை. கர்ப்பகிருஹம்வரை ஸமீபத்தில் போய் மூர்த்தியை தரிசிக்க முடிந்தது. அப்பொழுது அங்கே கவனிக்கையில் மூர்த்திக்கு அடியிலுள்ள பீடக்கல்லில் ஒரு சுலோகம் இருக்கக் கண்டேன். அது மேலே கண்ட சுலோகமாயிருந்தது தெரிந்தவுடன் என்னை அறியாமல் சரீரத்தில் பதட்டம் ஏற்பட்டு அங்கேயே பிரமித்து உட்கார்ந்துவிட்டேன். ''நான் என்றைக்கோ எழுதின சுலோகம் ஸ்ரீமத் ஆசார்யாளுடைய பாதாரவிந்தத்தில் ஸ்தாயியான (நிரந்தரமான) ஸ்தானத்தை அடைந்துவிட்டது. நானோ நெருங்குவதற்குக்கூட யோக்கியதையற்று இருந்து வருகிறேனே'' என்ற பாவனை ஏற்பட்டு மிகவும் வருந்திக் கொண்டிருந்தேன். அந்த ஸமயம் பெங்களூர் நண்பர் ஸ்ரீ ஸுப்பராம அய்யர் அங்கு வந்தவர் நான் உட்கார்ந்திருந்த நிலையைப் பார்த்து என்னவென்று கேட்டதின் பேரில் விஷயத்தைச் சொன்னேன். அவர் அதைப் பின்னால் இப்போதைய ஸந்நிதானத்தினிடத்தில் (ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர்) சொல்லியிருப்பாரென்று தெரிகிறது.

அன்றிரவு ஸ்ரீ சந்திரமௌளீசுவரர் பூஜையை முடித்துவிட்டு ஸ்ரீமத் ஆசார்யாள் (ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர்) வழக்கம்போல் அதிஷ்டான தரிசனத்திற்கு வந்து தரிசனம் செய்தான பிறகு என்னைத் தனியாகக் கூப்பிட்டு ''அங்கே எழுதியிருப்பது உன் சுலோகமாமே?'' என்று கேட்டார்கள். ''ஆமாம். ஆனால அது அங்கே எப்படி வந்தது என்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது'' என்றேன். ''இதைவிட ஆச்சர்யம் நான் சொல்கிறேன், கேள்'' என்று சொல்லி மேலால் சொல்லவாரம்பித்தார்கள். ''கும்பாபிஷேகத்திற்கு சில நாட்களுக்கு முன்தான் பம்பாயிலிருந்து அமிருத சிலா மூர்த்தி கொண்டு வரப்பட்டது. உடனே வேண்டிய அளவுகளெல்லாம் எடுத்து ஒரு பீடம் தயார் செய்யப்பட்டது. கும்பாபிஷேகத்திற்கு இரண்டு நாள் முன்பு அது தயாரானவுடன் சரியாயிருக்கிறதாவென்று பார்ப்பதற்காக அதில் மூர்த்தியை வைத்துப் பார்க்கும்போது சரியானபடி சேராமல் மிகவும் ஆட்டம் கொடுத்தது. எவ்வளவு மருந்து சாற்றினாலும் கெட்டியாக இருக்காது என்று தெரிந்தது. வேறு பீடம் செய்வதற்கும் அவகாசமில்லை. கும்பாபிஷேகத்தை நிறுத்திப் பின்னால் செய்வதும் ஸாத்தியமில்லை. என்ன செய்வதென்று எனக்கு ஒன்றும் தோன்றாமல் ஸ்ரீ ஸச்சிதானந்த விலாஸத்தில் மிகக் கவலையுடன் நடந்துகொண்டே ஓர் அறைக்குள் நுழைந்தேன். அங்கே மேடாக ஓர் இடம் தென்பட்டது. அதில் உட்காரலாமென்று ஸமீபத்தில் போய் பார்த்ததில் மேலே சாக்குப் போட்டு தைத்திருந்தது. அங்குள்ளவர்களை இது என்னவென்று கேட்டதற்கு யாராலும் பதில் சொல்ல முடியவில்லை. நானே கூடவிருந்து அந்த சாக்கை பிரிக்கச் சொன்னேன். பிரித்தவுடன் பார்க்கையில் இப்பொழுது அதிஷ்டானத்தில் வைத்திருக்கும் பீடமாக இருந்தது. உடனே மூர்த்தியை அதில் வைத்துப் பார்த்ததில் வெகு துல்யமாகச் சேர்ந்தது. எனக்கே இது மிக ஆச்சர்யமாக இருந்தது. அளவு எடுத்துச் செய்த பீடம் சரியில்லை. இது எப்படி சரியாயிருக்கிறதென்று தெரியவில்லை. இந்தப் பீடம் எங்கிருந்து வந்தது, யார் செய்தது, யார் கொண்டு வந்தது, என்று நான் எவ்வளவு விசாரித்துப் பார்த்தும் ஒருவித விவரமும் தெரியவில்லை. அன்று அது கிடைத்ததே ஸ்ரீ குருநாதரின் ஸங்கல்பம் என்று தீர்மானித்து அதையே பிரதிஷ்டை செய்தோம். அந்தப் பீடத்தில் இந்த சுலோகமும் இப்படியே இருந்தது. பீடம்

வந்த வரலாறு தெரிந்தால் சுலோகம் அங்கே வந்த வரலாறும் தெரியலாம். எல்லாம் அவருடைய கருணை'' என்று சொல்லி முடித்தார்கள்.

இது விஷயமாய் உண்மை தெரியவேண்டுமென்று எனக்கு ஆவல் ஏற்பட்டது. அதிஷ்டானக் கட்டிடத்திற்கு வேண்டிய கற்களை தயாரித்து அனுப்பின திருச்சி ஜில்லா பிக்ஷாண்டார் கோவிலிலிருந்த ஸ்ரீ ராஜகோபால் பிள்ளையைக் கேட்கலாமென்றால் அவர் முன்னமே காலமாகிவிட்டார். அவர் பையன்களுக்கும் விவரம் தெரியாதென்று தெரிந்து கொண்டேன். சில வருஷங்களுக்கு முன் அந்த ராஜகோபால் பிள்ளை ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்ஸுக்கு வந்து அங்குள்ள பண்டிதர் ஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகள் மூலமாய் இந்த சுலோகத்தை நாகர லிபியில் எழுதிக்கொண்டு போனதாகக் கேள்விப்பட்டேன். இதை உடனே ஸ்ரீஸந்நிதானத்தினிடம் விக்ஞாபித்தேன். அதற்கு அவர்கள் ''அப்படியா? இருக்கலாம். நாம் யாத்திரையிலிருக்கும் ஸமயம் அவர் இங்கே அனுப்பி யாரோ வாங்கி வைத்திருக்கலாம். இந்த சுலோகம் எழுதினதாகச் சொல்வதற்கு நீயாவது இருக்கிறாய். இந்தப் பீடம் செய்து அனுப்பினது நான்தான் என்று சொல்வதற்கு ராஜகோபால் பிள்ளை இப்பொழுது இல்லை. அவர் இல்லாமலிருந்தும் அவர் செய்த பீடமே உபயோகப்படும்படி ஏற்பட்டதால், அவருடைய விசேஷ குருபக்தியும், அது இந்த ஸமயத்தில் அகப்படும்படி செய்த குருநாதருக்கு அவரிடத்திலிருந்த வாத்ஸல்யமும், எங்கள் கவலையை நீக்கி ஸமயத்தில் பீடத்தைக் காட்டிக் கொடுத்த அவர்களுடைய அபார கருணையும், எல்லாம் ஆச்சர்யப்பட வேண்டியதாயிருக்கிறது'' என்றார்கள்.

ஞ • ஐ

ஸ்ரீமத் ஆசார்யாள் 1926 ல் திருநெல்வேலியில் ஸஞ்சாரம் செய்த ஸமயம் தாம்ரபர்ணீ பாணதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து வருவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் சிங்கம்பட்டி ஜமீந்தார் செய்து கொடுத்ததுடன் சிங்கம்பட்டிக்கும் அழைத்துச் சென்றார். அப்பொழுது நல்வரவு கூறும்போது ''நான் ஜாதியில் மறவன். ஆசிரமத்தில் கிருஹஸ்தன். படிப்பற்றவன். சுத்த லௌகிகன். பலவித துர்வாஸனைகளுடன் கூடினவன். எல்லா

விஷயத்திலும் உத்தமமான நிலையை அடைந்திருக்கும் தங்களுடைய பரிபூர்ண கிருபை எனக்கு இருந்து வருவது என் முன்னோர்கள் செய்த புண்ணியம். தாங்கள் வரும் ஸமயம் என் மனஸிலுள்ள துர்வாஸனைகளெல்லாம் கொஞ்சம் விலகி நிற்கின்றன. பாசி படிந்த குளத்தில் கொஞ்சம் பாசியைத் தள்ளினால் சுத்த ஜலம் தெரிகிறதுபோல் மனது தெளிவடைகிறது. ஆனால் தாங்கள் புறப்பட்டுவிட்டால் மறுபடியும் பாசி போல் வந்து மூடிக் கொள்கிறது. ஆகையால் அடிக்கடி தங்களுடைய தரிசனம் கிடைக்கும்படி அனுக்ரஹிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தங்களுக்கு யாத்திரையே ஐந்தாறு வருஷங்களாகிறபடியால் வருஷத்திற்கொரு தடவை இங்கே விஜயம் செய்ய வேண்டுமென்று நான் கேட்பதற்கில்லை. ஐந்து வருஷங்களுக்கொரு தடவையாவது வரவேண்டு மென்றாலும் சிருங்கேரி போய்ச் சேர்ந்தவுடனேயே புறப்படும்படி ஏற்படும். அதுவும் உசிதமில்லை. ஆகையால் ஐந்து வருஷம் யாத்திரை ஐந்து வருஷம் சிருங்கேரி வாஸம் என்று வைத்துக் கொண்டு பத்து வருஷத்துக்கொரு தடவையாவது இங்கே வந்து எங்களை அனுக்ரஹிக்க வேண்டுமென்று எனக்காகவும் எல்லா சிஷ்யர்களுக்காகவும் சேர்த்துப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்'' என்று சொன்னார். அதற்கு ஸ்ரீமத் ஆசார்யாள் பதில் சொல்லும்போது ''ஸ்ரீ சந்திரமௌலீசுவரர் தரிசனம் மனதை சுத்தப்படுத்துமென்பதில் ஸந்தேஹமில்லை. அதற்கு அவகாசம் அடிக்கடி ஏற்பட வேண்டுமென்று நினைப்பதும் மிகவும் நியாயம். வருஷத்திற்கொரு தடவை முடியாததினால் ஐந்து வருஷத்திற்கொரு தடவையென்று கேட்போமானால் அதுவும் ஸாத்தியமில்லாததனால் பத்து வருஷத்திற்கொரு தடவையாவது ஏற்பட வேண்டுமென்று சொன்னீர்கள். முதல் பக்ஷமே ஸாத்தியமானதினால் மூன்றாவது பக்ஷத்திற்கு அவசியமேயில்லை. மனது சுத்தமாக வேண்டுமென்ற தீவிரமான எண்ணமுள்ள பக்தர்கள் எப்படியாவது ஸௌகரியப்படுத்திக் கொண்டு வருஷத்திற்கொரு தடவை சிருங்கேரிக்கு வந்து தரிசனம் செய்வதென்று நியமம் ஏற்படுத்திக் கொண்டு விடலாம்'' என்றார்கள்.

பிறகு ஜமீந்தாரின் சொந்தக் கோவிலான ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் ஆலயத்திற்கு ஸ்ரீமத் ஆசார்யாரை பல்லக்கில் அழைத்துப் போகும்போது அந்த ஜமீந்தார் காவலுக்கு வருவதுபோல் உடை

தரித்து உறுவின கத்தியுடன் பல்லக்கின் கூடவே நடந்து வந்தார். ஆலயத்தில் தரிசனம் செய்து திரும்பும்போது ஜமீந்தார் ஸ்ரீமத் ஆசார்யாரை நமஸ்கரித்து ''நான் ஓர் அபசாரம் செய்துவிட்டேன். முன் ஆசார்யாரவர்கள் இதே கோவிலுக்கு சுமார் 20 வருஷங்களுக்கு முன் விஜயம் செய்தபோது பல்லக்கின் முன் கொம்பை நானே வஹித்து வந்தேன். இப்பொழுது அவ்விதம் சுமக்க மறந்துவிட்டேன். அதை மன்னிப்பதுடன் திரும்பிப்போகும்போது முன் கொம்பை நானும் பின் கொம்பை என் மகனும் சுமந்துவர அனுமதிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ஸ்ரீமத் ஆசார்யார் ''தாங்கள் பக்தியின் மேலீட்டினுல் இவ்விதம் சொல்கிறீர்கள். அதுவே போதும், கார்யத்தில் காட்டவேண்டிய அவசியமில்லை'' என்று சொல்லிவிட்டார்கள். அப்படியிருந்தும் அவர் மிகவும் மன்ருடிக் கேட்டதின்பேரில் தாம் இறங்கியிருந்த பங்களா வெளிகேட்டிலிருந்து கட்டிடம் வரை கொஞ்சதூரம் அவரிஷ்டப்படி சுமந்துவர அனுமதிக்கும்படி ஏற்பட்டது. இவர் மாதிரி பல்லக்கையே சுமக்காத போதிலும் சுமக்கிற பாவனையாக பல்லக்கைத் தொட்டுக் கொண்டு கொஞ்சதூரம் வரும் ஸம்பிரதாயம் மைசூர் திருவாங்கூர் முதலான ஸம்ஸ்தானங்களிலும் வெகு காலமாக இருந்து வருகிறது.

ஸ்ரீமத் ஆசார்யார் பல ஸமயங்களில் எழுதியிருந்த சில சுலோகங்களை மாத்திரம் ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்ஸில் அச்சிட்டிருக்கிருர்கள். இன்னும் அதிகம் இருக்க வேண்டுமே, அவைகளையும் வெளியிடலாமே என்று நினைத்து ஒரு தடவை ஸ்ரீ சிருங்கேரிக்குப் போயிருந்த ஸமயம் பால ஸ்வாமிகளிடம் தெரியப்படுத்தினபோது அவர்கள் ''பெரியவாள் இப்பொழுது அந்தர்முகமாயிருப்பதால் அவர்களிடம் கேட்க முடியாது. அவர்களைக் கேட்காமல் நான் எடுத்துக் கொடுப்பதும் உசிதமாகாது. அவர்கள் பஹிர்முகமாக இருக்கும்போது அவர்களிடம் கேட்டாலும் கொடுக்கமாட்டார்கள். என்ன செய்வது?'' என்று சொல்லிவிட்டார்கள். ஸ்ரீமத் ஆசார்யாளுக்கு ஏதேனும் மனேவிருத்தியேற்பட்டபோது தோன்றும் சுலோகத்தைச் சொல்லவோ குறித்து வைக்கவோ செய்வார்களே தவிர அதை பிரகடனம் செய்வதில் உத்தேசமே என்றைக்கும் கிடையாது. இவ்விஷயத்தை ஒரு ஸமயம் நான் அனுபவித்ததைக் குறிப்பிட நினைக்கிறேன்.

ஸ்ரீ சிருங்கேரியில் ஸ்ரீ மலஹானிகரேசுவரர் ஆலயத்தில் திருக்கல்யாண உத்ஸவம். இரவு நேரத்தில் ஆலயம் தென்பக்கம் பிராகாரம் தாழ்வாரத்தில் மேலோரத்திலும் கீழோரத்திலும் பகவானும் அம்பிகையுமாக கல்யாணக் கோலத்துடன் அமர்ந்திருந்து நலங்கு உத்ஸவம் நடக்கும் தருணம். இரண்டு மூர்த்திகளுக்கும் நடுவில் இரண்டு மூர்த்திகளேயும் தரிசனம் செய்துகொண்டு வடக்கே பார்த்து ஸ்ரீமத் ஆசார்யாள் வீற்றிருந்தார்கள். இரவு பத்துமணிக்கு மேலிருக்கும். ஏராளமான கூட்டம். அப்பொழுது ஸ்ரீமத் ஆசார்யாளின் ஸமீபத்தில் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். பகவானுடைய மூர்த்தியைப் பார்த்தவண்ணமாய் ஸ்ரீமத் ஆசார்யார் ஏதோ மிருதுவாகச் சொன்னதாகத் தெரிந்தது. நான் கவனித்துக் கேட்டேன். நன்கு புலப்படவில்லே. நான் கவனிக்கிறேன் என்பதைப் பார்த்து ஸ்ரீமத் ஆசார்யாள் ''சொல்லட்டுமா?'' என்று ஆரம்பித்து ஒரு சுலோகம் சொன்னுர்கள். ''குறித்துக் கொள்கிறேன்'' என்று சொன்னேன். அதற்கு அவர்கள் இடம் கொடுக்கவில்லே. அந்த சுலோகத்தைத் திருப்பிச் சொல்லவும் எனக்கு ஸாத்தியமில்லே. அவர்கள் ஸித்தியான பிறகு அகப்பட்ட குறிப்புகளில் அந்த சுலோகம் காணவில்லே. ஆனுலும் அதன் தாத்பர்யம் மாத்திரம் என் மனதில் பதிந்துவிட்டபடியால் அவ்விஷயத்தை இங்கு குறிப்பிடுகிறேன்.

சந்திரனுக்கு ''மிருகாங்கன்'' மான் அடையாளமுள்ளவன் என்று பெயர். அந்த மான் பிரகாசமாய் குளிர்ந்ததாய் ஆஹ்லாதகரமாயுள்ள (மனேகரமான) ஓர் ஆசிரயத்தை (இருப்பிடத்தை) அடைய வேண்டுமென்று கருதி சந்திரனிடம் போய்ச் சேர்ந்தது. ஆனல் சந்திரனுக்கு விருத்தி க்ஷயங்களுண்டென்று தெரிந்தவுடன் நித்தியமாய் க்ஷய மில்லாமல் சுத்த ஸ்படிக ஸங்காசமான தேவதையை அடைவதே நல்லது என்று நினேத்து பரமேசுவரனே சரணம் அடைந்தது. அதை அவர் ஏற்றுக்கொண்டு கையில் ஏந்திக் கொண்டார். இதைப்பார்த்த சந்திரனும் தன்னே ஆச்ரயித்திருந்த மான் ஸர்வேசுவரனுக்கு சின்னமாக அமைந்துவிட்டதே, தானும் அவரையே சரணமடைய வேண்டாமா, என்று . நினேத்து அப்படியே பரமசிவனிடம் சென்றபோது பகவான் சந்திரனேயும் ஏற்றுக்கொண்டு தன் சிரஸில் வைத்துக்கொண்டார். சந்திரன் தாமஸித்துப் போனபடியால் அதற்குள் க்ஷயித்துப்போய் கலாவசேஷமாக ஆகிவிட்டார். அப்படியிருந்தும் பகவான் கிரஹித்துக் கொண்டார். மானுக்குத் தோன்றின யோசனே

சந்திரனுக்கு முன்னமேயே தோன்றியிருக்கக் கூடாதா என்று கேட்டால், அவர் த்விஜராஜர் (பிராஹ்மணர்களுக்கு ராஜன், நக்ஷத்திரங்களுக்கு ராஜன்) - பிராஹ்மணர்களுக்குப் பின்புத்தியென்ற பிரஸித்தமான பழமொழியை யனுசரித்து அவருக்குப் பின்னுல்தான் தோன்றினது போலும் என்ற அர்த்தாந்தர நியாஸத்துடன் சுலோகம் முடிந்தது. அதிலலிதமான (எளிதான) சைலியில் (நடையில்) ஏற்பட்டபோதிலும் எனக்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள சக்தியில்லாததினுல் அதை நாம் இழக்கும்படி ஏற்பட்டுவிட்டது. தாத்பர்யமாவது ஞாபகத்தில் இருக்கிறதேயென்று திருப்திப்பட வேண்டியிருக்கிறது.

ஜ•ஜ

இப்பொழுது ஸ்ரீ சிருங்கேரி பீடாதிபத்யம் வஹித்து வருகிற ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் அபிநவவித்யாதீர்த்த ஸ்வாமிகளவர்களே இங்கு பால ஸ்வாமிகள் என்று குறிப்பிட்டிருப்பதால் அவர்கள் பால ஸ்வாமிகளாக ஏற்பட்ட வரலாற்றை கொஞ்சம் சொல்லலாமென்று தோன்றுகிறது. ஸ்ரீமத் ஆசார்யாள் அடிக்கடி அந்தர்முகமாய் இருந்து வருவதுடன் பஹிர்முகமாயிருக்கும் போதுகூட ஸ்ரீமடத்தின் லௌகிக கார்யங்களில் கொஞ்சமேனும் அக்கறை இல்லாதவர்போலவே இருந்து வந்ததால் சிஷ்யபரிக்கிரஹம் செய்து கொள்வது நல்லதென்று மைசூர் மஹாராஜா உட்பட அநேக பக்தர்களுக்கு எண்ணமிருந்து வந்தது. ஆனுல் ஸ்ரீமத் ஆசார்யாளோ இது விஷயமாகவும் கவனித்ததாகத் தெரியவில்லை. ஸ்ரீமடத்தில் ஸ்வாதீனமாகப் பழகும் சில பக்தர்கள் தங்கள் ஊர்களில் நல்ல வம்சத்தில் உதித்து புத்திசாலியாய் தேஜஸ்வியாய் பையன்கள் இருப்பதாக அவர்களாகவே ஸ்ரீமத் ஆசார்யாரிடத்தில் பிரஸ்தாபிப்பார்கள். ''அனுப்புங்களேன்'' என்று அவர்கள் உத்தரவு செய்வதை வைத்துக்கொண்டு பையன்களை அனுப்புவார்கள். அப்பையன்கள் ஒரு மாஸம் இரண்டு மாஸம் பாடசாலையில் இருந்துவிட்டு பிறகு தாங்களாகவே ஊருக்குப் போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டு புறப்பட்டு விடுவார்கள். இவ்விதம் 7, 8 பையன்கள் வந்து வந்து போய்விட்டார்கள். ஒரு பையன் மாத்திரம் வெகுநாள் தாமஸித்து வந்ததைக் கவனித்த ஸ்ரீமடம் ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் ஸ்ரீமத் ஆசார்யாரிடம் ''இவன் நிலைத்து நிற்கிருன் போலிருக்கிறது'' என்று சொன்னுர். ''அவனை அழைத்துவரச்

சொல்லுங்கள்'' என்று ஆசார்யாள் உத்தரவிட்டதின் பேரில் பையன் வந்து சேர்ந்தான். ஸ்ரீமத் ஆசார்யாள் அவனைப் பார்த்து ''நேற்று ராத்திரி ஸ்வப்னத்தில் யார் வந்தார்கள்?'' என்று கேட்டார்கள். ''என் தாயாரும் தகப்பனாரும்'' என்று அவன் பதில் சொன்னான். உடனே ஆசார்யாள் ஸர்வாதிகாரியிடம் ''பையன் தாயார் தகப்பனாரைப் பார்க்காமல் ஏங்கிவிடுவான். அவனை ஊருக்கு அனுப்பி விடுங்கள்'' என்று சொல்லிவிட்டார்.

அப்படியே அந்தப் பையனும் புறப்பட்டுப்போன பிறகு சில நாட்கள் சென்று ஸர்வாதிகாரி ஸ்ரீமத் ஆசார்யாளிடம் ''எல்லாப் பையன்களையும் அனுப்பிக் கொண்டிருந்தால் என்ன உத்தேசம் என்று தெரியவில்லையே?'' என்று சொன்னார். ''அம்பாள் காரியம் தானே நடக்கும். கவலைக்கு அவசியமேயில்லை. இருந்தாலும் நீங்கள் கேட்பதற்காகச் சொல்லுகிறேன். எந்தப் பையனுடைய ஜாதகத்தில் கிரஹஸ்திதி இவ்விதம் (விவரம் சொல்லி) இருக்கிறதோ அந்தப் பையன்தான் இந்த ஸ்தானத்திற்கு ஏற்பட்டவன்'' என்று சொன்னார்கள். சில நாட்கள் சென்று அகஸ்மாத்தாய் பெங்களூரிலிருந்து ஒரு ஜ்யோதிஷர் சிருங்கேரிக்கு வந்தார். அவரிடம் இந்த கிரஹஸ்திதியுள்ள ஜாதகம் தென்பட்டால் அனுப்ப வேண்டுமென்று ஸர்வாதிகாரி சொல்லியனுப்பினதின்பேரில் அவர் ஊருக்குத் திரும்பிப் போனவுடன் ஸ்ரீநிவாஸன் என்ற ஒரு பையன் ஜாதகத்தை அனுப்பி அந்தப் பையனின் தகப்பனார் விலாஸத்தைக் குறித்தனுப்பியதுடன் அவனுக்கு இன்னும் உபநயனமாகவில்லை யென்பதையும் தெரிவித்தார். இவ்விஷயத்தை ஸ்ரீ சாஸ்திரிகள் ஸ்ரீ ஸந்நிதானத்தினிடத்தில் தெரியப்படுத்தினவுடன் ''நீங்களே நேரில் பெங்களூர் போய், பையனுக்கு இங்கேயே உபநயனம் செய்விக்க தகப்பனார் ஸம்மதித்தால் அவர்களையெல்லாம் இங்கே அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார். அப்படியே ஸ்ரீ சாஸ்திரிகள் பெங்களூர் போய் பையனுடைய தகப்பனார் ஸ்ரீ கைப்பு ராமசாஸ்திரிகளைக் கண்டு கேட்டதில் அவர் சிருங்கேரியிலேயே உபநயனம் செய்வதில் தனக்கு ஸர்வ ஸம்மதம் என்றும் சொன்னார். எல்லாருமே சிருங்கேரிக்குப் போய்ச் சேர்ந்து ஸமீபத்திலேயே நாள் பார்த்து உபநயனம் செய்விக்கப்பட்டது.

உபநயனமான பிறகு ஸ்ரீ ராம சாஸ்திரிகள் பெங்களூருக்குத் திரும்புவதற்காக அனுமதி கேட்க ஸ்ரீமத் ஆசார்யாளிடம் போய் நமஸ்கரித்தபோது அவர் பையனைப் பார்த்து ''நீயும்

ஊருக்குத்தானு ? '' என்று கேட்டார்கள். அதற்கு அவன் ''இல்லை, நான் இங்கே பாடசாலையில் சேரப்போகிறேன்'' என்ருன். ஆசார்யாள் ''பாடசாலையில் சேர்ந்தால் இங்கிலீஷ் படிப்பு கிடையாது. உத்தியோகத்திற்கும் வழி கிடையாது. உத்தியோகத்திற்குப் போனுல் அல்லவா பணம் கிடைக்கும்?'' என்று சொன்னுர்கள். ''எனக்கு அந்தப் படிப்பும் வேண்டாம், அந்தப் பணமும் வேண்டாம்'' என்ருன் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன். ''உன் தகப்பனுரைக் கேட்டுக்கொள்'' என்று சொல்லிவிட்டார்கள். பிற்பாடு பெற்ருேர்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பாடசாலையில் சேருவதாகவே சொல்லி அவர்களுடன் பெங்களூருக்குப் போக மறுத்துவிட்டான். அவனிஷ்டப்படி பாடசாலையிலே சேர்ந்து இரண்டு வருஷங்களான பிறகு ஸ்ரீமத் ஆசார்யாள் அவனுக்கு கிரமப்படி ஆசிரமஸ்வீகாரம் செய்வித்து அவரையே தனக்குப்பின் பட்டத்திற் கென்று சிஷ்யனுக ஏற்படுத்தி அவருடைய ஸம்ரக்ஷணைக்கும் வித்யாப்பியாஸத்திற்கும் வேண்டிய ஸௌகர்யங்களை ஏற்படுத்திக் கொடுத்து வெகு வாத்ஸல்யத்துடன் குரு ஸ்தானத்துடன் பிதா ஸ்தானத்தையும் வஹித்து கவனித்து வந்தார்கள்.

ஸ்ரீமத் ஆசார்யாள் மூலமாகவே உபநயனம் செய்விக்கப்பட்டு, அவருடைய பாடசாலையிலேயே வாசித்து, அவர் ஸம்ரக்ஷணையிலேயே இருந்து, அவரிடமே ஸாக்ஷாத்தாக ஸந்யாஸம் பெற்று, அவருடைய பார்வையிலேயே வித்யாப்பியாஸம் செய்து, அவர் கூடவே 23 வருஷ காலம் இருந்து சுசுரூஷை செய்துகொண்டு ஸ்ரீமடம் காரியங்களையும் கவனித்துக்கொண்டுவந்து, பின்னுல் குருநாதர் விதேஹ கைவல்யமடைந்த பிறகு, பட்டாபிஷேகமாகி, கொஞ்சநாள் சென்று யாத்திரையாகப் புறப்பட்டு கன்யாகுமரி முதல் நேபாளம் வரை ஸஞ்சரித்து அங்கங்குள்ள மஹாராஜாக்கள் முதல் எளிய ஜனங்கள் வரை யாவரையும் அனுக்ரஹம் செய்துகொண்டு பரத கண்டம் பூராவும் தர்மம் செழிக்கும்படி தம் அனுஷ்டானத்திலுலும் உபதேச மொழிகளாலும் செய்து வருகிருர் இவர் என்ருல் இதைவிட குருகிருபா விலாஸத்திற்கு அத்தாக்ஷி வேறு என்ன வேண்டும்?

ஓ•ஐ

ஸ்ரீமத் ஆசார்யாள் அதி பால்யத்தில் சிருங்கேரியிலுள்ள இங்கிலீஷ்-கன்னட பாடசாலையில் சேர்ந்து கீழ் வகுப்புகளில் வாசித்து வந்ததும் அதிலும் எல்லாரையும்விட புத்திசாலி யென்று பெயர் பெற்றுக்கொண்டிருக்கையில் முன் ஆசார்யாரவர்களுடைய விசேஷ கருணைக்குப் பாத்திரராகி ஸ்ரீமடம் பாடசாலையிலேயே சேர்ந்து வித்யாப்பியாஸம் செய்தாரென்பதும் அவர்களுடைய சரித்திரத்திலிருந்து தெரிகிறது. இவ்விதம் கொஞ்சம் இங்கிலீஷிலும் பரிச்சயமேற்பட்டிருந்த போதிலும் அவர்கள் பேசும்போது அப்பாஷையை கொஞ்சமேனும் கலப்பதே கிடையாது. பின்னுல் ஒரு சமயம் அவர்கள் பக்தர்கள் கோஷ்டியில் மனுஷ்யனுக்கு மேன்மை அவனுடைய புத்தி சக்தியினுல்தானே தவிர சரீர பலத்தினுல் இல்லையென்று சொல்லி வரும் போது யானை, கரடி, புலி, ஸிம்ஹம் இவைகளைக்கூட தன்னிஷ்டப்படி ஆட்டிவைக்கும் சக்தி அவனிடமிருக்கிறது என்று உதாஹரணம் சொன்னுர்கள். கேட்கிறவர்களுக்கு நன்கு அர்த்தமாக வேண்டுமென்று கருதி அங்குள்ளவர்களைப் பார்த்து, ''ஊர் ஊராக இவ்வித மிருகங்களைக் கொண்டுபோய் வேடிக்கை காட்டுகிருர்களே? அதற்குப் பெயர் என்ன?'' என்ருர்கள். ஒருவர் ''ஸர்க்கஸ்'' என்ருர். ''அப்படித்தான் சொல்வார்கள் போலிருக்கிறது'' என்று மாத்திரம் சொன்னுர்களே தவிர அந்த இங்கிலீஷ் பதத்தை தாம் உபயோகிக்கவில்லை.

ஒரு ஸமயம் என்னுடன் ஒரு பந்துவை அழைத்துக் கொண்டு ஸ்ரீமத் ஆசார்யாளை தரிசிக்கச் சென்று இருவரும் நமஸ்கரித்தோம். ''இவர் என் பந்து. இன்ன ஊரில் ஸால்ட் இன்ஸ்பெக்டராக இருக்கிருர்'' என்று சொன்னேன். மறுநாள் தரிசனத்திற்குப் போகும்போது என்னுடன் அவர் வரவில்லை. ஸ்ரீமத் ஆசார்யார் ''லவண (உப்பு) பரீக்ஷகர் வரவில்லையோ?'' என்று கேட்டார்கள். நான் கொஞ்சம் திகைத்தேன். ''நேற்று வந்தாரே, உன் பந்து'' என்ருர்கள். பிறகுதான் எனக்குப் புரிந்தது.

இன்னெரு ஸமயம் ஒரு வித்வான் ஸ்ரீமத் ஆசார்யாளை தரிசிக்க வந்தார். அவர் தன்னைப் பற்றித் தானே அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது. ''நான் க. ஹைஸ்கூலில்

ஸான்ஸ்க்ரிட் பண்டிட்டாக இருந்தேன். இப்பொழுது *ச. ஹைஸ்கூலுக்கு டிரான்ஸ்பர்* செய்துவிட்டார்கள் *டிஸ்ட்ரிக்ட் போர்ட் ஸர்வீஸ்*. அங்கே போய் சேருவதற்கு *ஜாயினிங் டைம் ஒன் வீக்* உண்டு. அதை *எவைல்* பண்ணிக்கொண்டு இங்கே தரிசனத்திற்கு வந்தேன்'' என்ருர். இதைக் கேட்டவுடன் ஸ்ரீமத் ஆசார்யாளின் முகம் மிகவும் வாடிற்று. பக்கத்திலிருந்த என்னிடம் ''ஸம்ஸ்கிருதம் வாசித்த வித்வான்கள் இங்கிலீஷ் தெரிந்து கொண்டிருக்கிருர்களென்பதில் வருத்தப்படுவதற் கொன்றுமில்லே. ஆனுல் இங்கிலீஷ் பதங்களேக் கலந்து பேசுகிருேமென்ற பிரக்ஞையே இல்லாமல் பேசுகிருர்களேயென்று நினேக்கும்போது மிகவும் வருத்தமாகத்தான் இருக்கிறது. என்ன செய்யலாம்?'' என்ருர்கள்.

௸•௵

திருநெல்வேலி ஜில்லாவில் திருமலேக்கொழுந்துபுரம் என்றும், கொட்டாரம் என்றும் சொல்லப்படும் கிராமத்தில் சிவாச்சாரியார்களின் குடும்பத்தில் உதித்தவராக ஸ்ரீ ஸ்வாமிநாத சாஸ்திரிகள் என்ற பெரியவர் இருந்துவந்தார். அவர் சிவாச்சார்ய விருத்தியை அவலம்பிக்காமல் சுத்த வைதிக நிஷ்டராகவே இருந்து வந்தார். நல்ல தனிகர். நல்ல ஆசாரபரர். நல்ல சாஸ்திரக்ஞரும்கூட. ஸ்ரீமத் ஆசார்யாள் 1926 கடைசியில் அந்தப் பக்கம் யாத்திரையாக வந்த ஸமயம் இவர் அவர்களே தன் கிருஹத்திலேயே இரண்டு நாட்கள் வைத்துக்கொண்டு பாதபூஜை பிக்ஷை முதலிய ஸத்காரங்களே மிக பக்தியுடன் வெகு விமரிசையாக செய்து ஸ்ரீமத் ஆசார்யாளின் விசேஷ அனுக்ரஹத்திற்குப் பாத்திரரானுர். அவர் கிருஹத்தில் இருக்கும் ஸமயத்தில் ஸ்ரீமத் ஆசார்யாள் ''லௌகிக ஸம்பத்துடன் வைதிக ஸம்பத்தும் சேர்ந்திருப்பது மிகவும் ஸந்தோஷமாயிருக்கிறது'' என்ருர்கள். அப்பொழுது அங்கிருந்தவர்களில் ஒருவர் ''அது மாத்திரமல்ல. ஸங்கீதத்திலும் நல்ல பாண்டித்யம். ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீமத் பாகவதம் எல்லாம் அழகாக பிரவசனம் செய்வார். அத்துடன் ஸங்கீதத்துடன் கதாகாலக்ஷேபமும் செய்வார்'' என்று சொன்னுர். இதைக்கேட்டு ஸ்ரீமத் ஆசார்யார் ''அப்படியானுல் இன்று ஸாயங்காலம் கொஞ்சம் ருக்மிணீ கல்யாணம் சொல்லலாமே'' என்று ஆக்ஞையிட்டார்கள். அப்படியே அன்று ஸாயங்காலம் ஸ்ரீ சாஸ்திரிகள் ஸ்ரீ ஸந்நிதானமவர்களின் முன்பு ருக்மிணீ கல்யாணம்

வெகு ரஸமாகப் பிரவசனம் செய்தார். ஸ்ரீமத் ஆசார்யாள் தர்க்கம், வேதாந்தம் முதலிய சாஸ்திரங்களில் நன்கு பரிச்சயமுள்ளவர்களாயிருக்கலாமே தவிர புராணங்களில் அவ்வளவு பரிச்சயமிருக்க நியாயமில்லையென்று ஸ்ரீ சாஸ்திரிகள் தனக்குள் நினைத்திருந்ததாக பின்னால் அவர் சொன்னதிலிருந்து தெரியவந்தது. ''ருக்மிணியின் ஸந்தேசத்தைக் (செய்தியை) கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் உடனே புறப்படுவதற்காக தன் ஸாரதியான தாருகனை ரதத்தைத் தயாரிக்கச் சொன்னதும் அவன் அப்படியே *சைப்யம், பலாஹகம்* முதலான நான்கு குதிரைகளை ரதத்தில் பூட்டினான்'' என்று சொல்லிவரும்போது பாக்கி இரண்டு குதிரைகளின் பெயர்கள் ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு தோன்றாமல் ''முதலான'' என்று சொல்லிவிட்டார். ஸ்ரீமத் ஆசார்யார் *''ஸுக்ரீவம், மேகபுஷ்பம்''* என்று எடுத்துக் கொடுத்தார்கள். அவர்கள் பாகவதத்தில் வரும் குதிரைகளின் பெயர்களை முதல் கொண்டு ஞாபகமாய்ச் சொல்வதிலிருந்து அவர்களுக்கு பரிச்சயம் அதிகமாயிராதென்று நினைத்தது பிசகு என்று உணர்ந்தார்.

''அந்தக் குதிரைகள் வெகு உயர்ந்த ஜாதிக் குதிரைகள். அதிவேகமாய்ப் போகக்கூடியவைகள். உலகத்தில் ஸாமான்யமாய் வேகத்திற்கு திருஷ்டாந்தம் சொல்வதானால், வாயுவேகம், கருடவேகம், மனோவேகம் என்பார்கள். ஆக மூன்று திருஷ்டாந்தங்கள்தான் கிடைக்கின்றன. இங்கேயோ நான்கு குதிரைகள் இருக்கின்றன. நான்காவது குதிரைக்கு உபமானமாக சொல்ல வேண்டுமானால் இக்காலத்தில் சிலர் பண்ணுகிற ஸந்தியாவந்தன வேகத்தை எடுத்துக் கொள்ளலாம்'' என்று ஸ்ரீ சாஸ்திரிகள் சொன்னவுடன் அங்கிருந்த சிலர் சிரித்துவிட்டார்கள். உடனே ஸ்ரீமத் ஆசார்யாள் அவர்கள் பக்கம் திரும்பி ''நீங்கள் பண்ணும் ஸந்தியாவந்தனத்தை சாஸ்திரிகள் கேலி செய்கிறார். இதைக்கேட்டு வெட்கித் தலைகுனிய வேண்டியதைவிட்டு சிரிப்பு எப்படி வரும்?'' என்று கொஞ்சம் கடுமையான பார்வையுடன் சொன்னார்கள். உடனே எல்லோரும் ஸ்தம்பித்து விட்டார்கள். பிறகு ஸ்ரீமத் ஆசார்யாள் ஸ்ரீ சாஸ்திரிகளைப் பார்த்து ''இக்காலத்திலுள்ளவர்கள் கிரமமாக சிரத்தையுடன் கர்மாக்களைச் செய்ய வேண்டுமென்பதே உங்களுடைய உத்தேசம். அதைச் சொல்லும் ரீதியில் விளையாட்டாகச் சொன்னால்

கேட்கிறவர்களும் சமத்காரத்தை ரஸித்து சிரித்துவிட்டதுடன் நின்றுவிடுவார்கள். அப்படியில்லாமல் மனஸில் உறுத்தி அவர்களை திருந்தும்படிச் செய்யத்தக்க மாதிரியில் சொன்னால்தான் உங்கள் உத்தேசம் நிறைவேறும். இது ஹாஸ்யத்திற்கு விஷயமேயில்லை. மிகவும் சோசனீயமென்று (வருத்தப்படவேண்டியது) அவர்கள் உணரும்படி சொல்ல வேண்டும்'' என்றார்கள்.

பெண் குழந்தைகளுக்காக ஏற்பட்ட ஒரு ஸம்ஸ்கிருத பாடசாலையில் உபாத்யாயராயிருந்த ஒரு பண்டிதர் என்னுடன் சிருங்கேரிக்கு வந்தார். அவர் குழந்தைகளுக்கு ஸம்ஸ்கிருதத்திலேயே அநேக ஸ்தோத்திரங்கள் கோலாட்டப் பாட்டுக்களெல்லாம் உத்ஸாஹமாகச் சொல்லிக் கொடுப்பவர். ஸங்கீதத்திலும் நல்ல பயிற்சியுள்ள அவர் சிருங்கேரியிலிருக்கும் போது ஸ்ரீமத் ஆசார்யாள் ஸந்நிதியில் சில பாட்டுக்கள் பாட வேண்டுமென்று ஆசைப்பட்டார். ஆனால் எப்பொழுதும் ஆத்மாராமராய் தத்வானுஸந்தானத்திலேயே ஈடுபட்டிருக்கிற ஆசார்யாளுக்கு ஸங்கீதத்தில் ருசியுண்டா? கொஞ்சமேனும் ரஸிக்கும்படி ஸங்கீத ஞானமுண்டா? என்ற ஸந்தேஹம் அவருக்கு இருந்தபடியால் அவர்களிடம் கேட்பதற்கு ஸங்கோசப்பட்டுக் கொண்டிருந்தார். ஒரு நாள் தைரியப்படுத்திக் கொண்டு அவர்களிடமே நேரில் அனுமதி கோரினார். மிகக் கருணையுடன் ஸ்ரீமத் ஆசார்யாளும் அனுமதி கொடுத்தார்கள். பிறகு இவர் ஒரு கீர்த்தனம் அதிகமாய் விஸ்தரிக்காமல் அழகாகப் பாடினார். அது முடிந்தவுடன் ''இதுதான் கேதார கௌளம் என்பார்களோ?'' என்று ஆசார்யாள் கேட்டார்கள். ''ஆமாம்'' என்று சொல்லிவிட்டு அவர்களின் உத்தரவின் பேரில் இன்னொரு கீர்த்தனம் பாடினார். அது முடிந்தவுடன் ''தேவ காந்தாரமோ?'' என்றார்கள். மூன்றாவது கீர்த்தனம் வேறு அபூர்வமான ராகத்தில் பாடினார். அதுவும் முடிந்தவுடன் ''............ராகமோ?'' என்று கேட்டு விட்டார்கள். (எனக்கு அந்த ராகத்தின் பெயர் மறந்துவிட்டது.) ''ஆம்'' என்று இவர் சொன்னதும் ''வெகு நன்றாயிருக்கிறது. இப்படியே குழந்தைகளுக்கு பக்தி யேற்படும்படி ஸங்கீதம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு வாருங்கள்'' என்று ஆசார்யாள் அனுக்ரஹித்து பின்னால் அவருக்கு தகுந்தபடி ஸன்மானமும்

செய்து வைத்தார்கள். தன்னுடைய பாட்டில் ஆசார்யாள் ரஸித்து கேட்டதில் அவருக்கு வெகு ஸந்தோஷம். அவர்களுக்கு ஸங்கீதத்தில் இவ்வளவு பரிச்சயமா வென்று ஆச்சரியப்பட்டார். அவர்கள் ஸங்கீதத்திற்கே அதிதேவதையான ஸ்ரீ சாரதாம்பிகையின் பீடத்திலுள்ளவரென்பதை அவர் மறந்து விட்டார் போலும்!

ஒரு ஸமயம் அநேக யாகங்களைச் செய்த பிரஸித்தரான ஒரு தீக்ஷிதர் ஸ்ரீமத் ஆசார்யாளை தரிசிக்க வந்தார். அவருக்கு ''ஆசார்யாள் பிரஹ்மசர்யத்திலிருந்தே ஸந்யாஸம் வாங்கிக் கொண்டவர். யாகங்களைப் பார்க்கவோ யாகங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளவோ அவர்களுக்கு அவகாசம் கிடையாது'' என்ற எண்ணம் இருந்து வந்தது. அவரிடத்தில் ஸ்ரீமத் ஆசார்யாள் பொதுவாக யோக க்ஷேமங்களை விசாரித்து விட்டு ஒரு குறிப்பிட்ட யாகத்தில் ஒரு குறிப்பிட்ட பிரயோகத்திற்குப் பிறகு மேல் பிரயோகம் எப்படி என்று கேட்டார்கள். அவர் உடனே 'இன்ன விதமாக' என்று பதில் சொன்னார். (எனக்கு விஷயம் தெரியாததினால் விவரமாகச் சொல்ல முடியவில்லை.) ஸ்ரீமத் ஆசார்யாள் ''அதற்கு சிரௌதஸூத்திரம்?'' என்று கேட்டார்கள். ''இதற்கு ஸூத்திரம் இல்லை. ஸம்பிரதாயம் தான்'' என்றார். ஆசார்யாள் ''இந்தப் பிரயோகத்திற்கு ஆதாரமாக ஸூத்திரம் இல்லை என்பதுடன் இதற்கு விபரீதமாகக்கூட ஸூத்திரமிருப்பதாகத் தெரிகிறதே'' என்றார்கள். அதன் பேரில் அவர் ஞாபகப்படுத்திக் கொண்டு ''ஆம், ஸூத்திரம் அப்படித்தான் இருக்கிறது. ஆனால் அனுஷ்டானம் நான் சொன்னபடி தான் நடந்து வருகிறது'' என்றார். ''நீங்கள் எப்படிச் செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்கள். ''நான் ஸம்பிரதாயப்படிதான் செய்கிறேன்'' என்றார். ''ஸூத்திரம் அறியாதவர்கள் ஸம்பிரதாய சரணர்களாக இருக்கலாம். ஸூத்திரம் தெரிந்தவர்களும் அப்படியிருப்பது நியாயமா? ஸூத்திரத்திற்கு விரோதமாயுள்ள ஸம்பிரதாயத்திற்கு பிராமாண்யமுண்டா?'' என்று மறுபடியும் கேட்டார்கள். ''என்னமோ அப்படியே தான் பண்ணிக் கொண்டு வருகிறோம். திருத்திக் கொள்ள வேண்டியதுதான்'' என்றார். அதன் பேரில் ''அனுஷ்டானத்தில் இப்படித்தான் நடக்கிறதென்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் அந்த அனுஷ்டானத்திற்கும் எங்கேயாவது பிரமாணமிருக்கலாமோ, தங்களுக்கோ யாக விஷயத்தில் நல்ல

அனுபவமுண்டே, தங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தேன்'' என்று ஸ்ரீமத் ஆசார்யாள் சொல்லிவிட்டு பின்னால் அவருடைய வைதுஷ்யத்திலும் அனுஷ்டானத்திலும் வெகு திருப்தியுடன் ஸன்மானம் செய்வித்து அனுப்பினார்கள்.

உயர்ந்த உத்தியோகத்தில் இருந்த ஒரு பிரபு ஸம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்யம் ஸம்பாதித்துக் கொண்டிருந்தார். அவருக்கு காவியம் நாடகம் ஸ்தோத்திரங்கள் வேதாந்தப் பிரகரணங்கள் இவைகளிலிருந்து அநேக சுலோகங்கள் மனப்பாடமாயிருந்தன. அவர் பேசும்போதே ஏதாவது சுலோகங்கள் வராமல் இருக்காது. அவர் ஒரு ஸமயம் ஸ்ரீமத் ஆசார்யாளை தரிசனம் செய்வதற்காக வந்து ஒரு வாரம் தங்கியிருந்தார். பிரதிதினம் ஸாயங்காலம் ஸ்ரீமத் ஆசார்யாளிடம் போய் ஏதாவது சாஸ்திர விஷயமாகப் பேசிக் கொண்டிருப்பார். அப்பொழுதெல்லாம் இவர் ஏதாவது சுலோகம் சொன்னால் ஆசார்யாள் ''உத்தரராமசரிதமா? மாளவிகாக்னிமித்ரமா? ஸ்ரீ ஹர்ஷனா? வேதாந்த தேசிகரா? பாரவியா?'' என்று கேட்டு விடுவார். எந்த சுலோகம் சொன்னாலும் கிரந்தத்தின் பெயரையாவது கிரந்தகர்த்தாவின் பெயரையாவது ஆசார்யாள் சொல்லிவிடுகிறார்களே, வேதாந்த தர்க்காதி சாஸ்திரங்களில் பரிச்சயமிருக்கட்டும், காவிய நாடகங்களில்கூட சொல்லிவிடுகிறார்களே என்று இவருக்குத் தோன்றிற்று. ஆசார்யாளுக்குத் தெரியாததாக ஒரு சுலோகமாவது சொல்ல வேண்டுமென்று நினைத்தார். இரண்டு மூன்று நாட்கள் பார்த்தார். தான் எது சொன்னாலும் அது அவர்களுக்குத் தெரிந்த சுலோகமாகவே யிருக்கிறதென்று வருத்தப்பட ஆரம்பித்தார்.

ஒரு நாள் அங்கிருந்த புஸ்தக கோசத்தில் (நூல் நிலையம்) ஓர் அப்ரஸித்தமான கிரந்தத்திலிருந்து ஒரு சுலோகத்தை மனப்பாடம் செய்துகொண்டு அன்று ஸாயங்காலம் பேசிக்கொண்டிருக்கையில் அதைச் சொன்னார். உடனே ஆசார்யாள் ''அது எங்கே இருக்கிறது?'' என்று கேட்டு விட்டார்கள். அதற்கு இவர் பதில் சொல்லிவிட்டு ஸ்ரீமத் ஆசார்யாளுக்குத் தெரியாத ஒரு சுலோகத்தைச் சொல்லிவிட்டோமென்று மிகவும் ஸந்தோஷத்தையடைந்தார். வெளியில் வந்த பிற்பாடு என்னிடம்

''இன்றைக்குப் பார்த்தாயா? அந்த சுலோகம் எங்கிருந்து என்று கேட்கும்படி செய்துவிட்டேன்'' என்றார். அவருடைய தாத்பர்யம் ஆசார்யாள் ஸர்வக்ஞராயிருந்தாலும் அவருக்குத் தெரியாத ஒரு சுலோகம் தான் சொல்லிவிட்டதால் ஸர்வக்ஞருக்கும் மேலான படியில் தான் இருப்பதாக இருக்கலாம். ஸ்ரீமத் ஆசார்யாளிடம் விசேஷ பக்தியுடன் இருப்பவருக்கு இதுமாதிரி எண்ணம் இருப்பது உசிதமில்லையென்று எனக்குத் தோன்றிற்று. அந்த எண்ணத்தை மாற்றிவிட நினைத்து அவரிடம் ''சுலோகம் எங்கிருந்து என்று ஆசார்யாள் கேட்டதைக் கொண்டு நீங்கள் இம்மாதிரி எண்ணுவது சரியல்ல'' என்றேன். ''அதென்ன? அவர்கள் தமக்குத் தெரியாததினால்தானே கேட்டார்?'' என்றார். ''தெரியாமல் கேட்கவில்லை, அவருக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் இரண்டு மூன்று நாட்களாக நீங்கள் படும் அவஸ்தையைக் கண்டு மிகக் கருணையுடன் உங்கள் வருத்தத்தை நிவிருத்தி செய்யவேண்டிய எண்ணத்துடனேயே இன்றைக்கு தமக்குத் தெரியாததுபோல் கேட்போமென்று கேட்டிருக்கிறார்கள்'' என்றேன். ''அப்படியா? அப்படியா?'' என்று அவர் மறுபடியும் என்னைக் கேட்டார். ''அதில் என்ன ஸந்தேகம்?'' என்று சொல்லிவிட்டேன். பிறகுதான் அவருக்கு தன்னிடமிருந்த அஹம்பாவம் கொஞ்சம் குறைந்ததாகத் தெரிந்தது. நான் சொன்ன ஸமாதானம் வாஸ்தவமாகவேயிருக்கலாம். ஆனால் அதை சரிபார்க்க ஸ்ரீமத் ஆசார்யாளிடம் கேட்க முடியுமா? தம்மிடம் வரும் யாவரிடமும் ஒரேமாதிரியான வாத்ஸல்யத்தை உடையவராக இருந்து வந்தார்கள் ஸ்ரீமத் ஆசார்யாள். கருணையே மூர்த்தீகரித்த அனுக்ரஹமூர்த்தி.



ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 34வது பீடாதிபதியாக
(1912-1954) விளங்கியவர். பிறவியிலேயே
பரம தெய்வ பக்தர்; பற்றற்றவர். காலக்ரமத்தில்
எல்லா சாஸ்திரங்களையும் மந்திர ரஹஸ்யங்களையும்
முற்றும் அறிந்தவராகவும், சிஷ்யர்களின் பக்குவத்திற்கு
ஏற்ப அவர்களுக்கு ஞான உபதேசங்களைச் செய்து
கடைத்தேற்றிய ஜகத்குருவாகவும் உயர்ந்த பீடாதிபதியாகவும்
விளங்கி அருள் புரிந்தார். அதே சமயத்தில் பரம
வைராக்ய புருஷராகவும், எவ்வித ஸங்கல்பமும்
அற்று ஸதா ஆத்மானுபவத்தில் திளைத்துக்கொண்டு
ஞானியாகவும், அவதூத புருஷராகவும் முக்த புருஷராகவும்
இருந்து கொண்டிருந்தார். குருவாகவும், ஈச்வரராகவும்,
பரமாத்மாவாகவும் இருந்தார்.

இம்மஹானைப்பற்றி ஸ்ரீ ஞானாநந்த பாரதீ ஸ்வாமிகள்
(முந்நாள் திருநெல்வேலி ஸ்ரீ ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யர்)
எழுதிய நூல்கள் அனைத்தும் அடங்கிய முழு தொகுதியே
இந்தப் புத்தகம். இதனைப் படித்தால் ஸ்ரீமத் ஆசார்யார்
அவர்களின் மஹிமையின் ஒரு திவலையையாவது அறிந்து
கொள்ளும் பேறு பெற்றவர்களாக ஆவோம்.

Rs. 60/-